# மௌன மொழி



பாகம் -1

“ஓம் சாய் நமோ நமாஹ்,
ஶ்ரீ சாய் நமோ நமாஹ்,
ஜெய் ஜெய் சாய் நமோ நமாஹ்,
சத்குரு சாய் நமோ நமாஹ்”

சாய்பாபாவின் நாமாவளி பின்னணியில் ஓடிக் கொண்டிருக்க, கோயம்புத்தூரின் முக்கியமான இடங்களுள் ஒன்றான ராமநாதபுரத்தில் அமைந்திருக்கும் புகழ் பெற்ற தனியார் மருத்துவமனை ஒன்றின் பல் மருத்துவப்பரிவில், ஏற்கனவே சுத்தம் செய்யப்பட்ட தன் உபகரணங்களை அன்றைய தினத்தின் வேலைக்காக மீண்டும் சுத்தம் செய்து கொண்டிருந்தான் வளர்ந்து வரும் இளம் பல் மருத்துவன் விஜய்ஆனந்த்.

பின்னணியில் ஒலித்த நாமாவளி எப்போதையும் போல மனதின் அலைப்புருதலை குறைத்து அன்றைக்கும் பெரும் நிம்மதியைக் கொடுத்தது. இரண்டு மாதங்களாக இந்த அலைப்புருதல் சற்றே மட்டுப்பட்டிருந்தாலும் நெஞ்சிலிருந்து மறையவே மாட்டேன் என்கிறதே என்ற எண்ணம் தோன்றியது விஜய்க்கு.

இந்த யோசனைகள், தடுமாற்றங்கள் அனைத்தையும் தற்சமயத்திற்கு ஒத்தி வைக்கும் பொருட்டு கதவு தட்டப்பட்டது. அவனது அனுமதியின் பெயரில் உள்ளே நுழைந்த நர்ஸ், அவனைப் பார்க்க வந்திருக்கும் நோயாளிகளின் பெயர்களைக் கொண்ட குறிப்பைக் கொடுத்த கையோடு முதலாமனவரை வரச் சொல்லலாம் என்ற அனுமதியோடு விடைப்பெற்று சென்றாள்.

ஐந்தாவது நிமிடம் உள்ளே நுழைந்த மேன்மை பெற்ற நோயாளி ஆறுவயது மதிக்கத் தக்க ஒரு குழந்தை.

தன் தாயின் கால்களுக்குள் ஒட்டி ஒட்டி ஒளிந்து கொண்டு வந்த குழந்தையையும், அதன் தாயையும் ஒரு மென் புன்னகையோடு வரவேற்றவன் தன் எதிரே இருந்த இருக்கைகளில் அவர்களை அமரச் சொன்னான்.

பொறுமையாக அதே சமயம் தெளிவான கேள்விகளைத் தொடுத்து, அவர்களிடமிருந்து என்ன பிரச்னை என்பதைக் கிரகித்துக் கொண்டவன் குழந்தைக்குச் அதிகச் சளியால் பல் வலி ஏற்பட்டு இருப்பதையும், அதன் விளைவாக காதிலும் வலி ஏற்பட்டு இருப்பதையும் அறிந்து கொண்டதும் மெல்ல மெல்ல அந்தக் குழந்தையைத் தன்பால் திருப்பி பல் மருத்துவம் செய்வதற்கென்று வடிவமைக்கப்பட்ட இருக்கைக்கு அழைத்துச் சென்றான்

“குட்டி பேர் என்ன?” என்று அவர்கள் வந்ததிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கும் அதே கேள்வியை திரும்பவும் கேட்டவாறே அவளை இருக்கையில் சாய்த்து தமர்த்திவிட்டு, இருக்கையின் மகுடம் போலிருந்த விளக்கை அவள் முகத்தில் அடிக்கச் செய்தான்.

“ம்மா” என்று கண்ணீரும் கம்பலையுமாக துடித்த அந்த சிறு குழந்தைக்கு விளையாடவென ஒரு மேஜிக் பிளாக்கை கொடுத்தவன் அவளிடம் பேசுவதையும் நிறுத்தவில்லை.

“சரண்யா” என்று தன் அழுகையின் ஊடே அறிமுகப்படுத்திக் கொண்ட அந்தக் குழந்தையின் பிடித்த விளையாட்டு, உணவு, கார்ட்டூன் என்று எல்லாவற்றையும் அவன் அறிந்து கொண்ட விதத்தில் அவனை நம்பித் தன் வாயைக் கொடுத்த அந்தக் குழந்தை “பூச்சாண்டி” என்ற நாமத்திலிருந்து அவனை விடுவித்து “டாக்டர் அங்கிள்” என்ற நாமத்தை மனமுவந்து சூட்டினாள்!

குழந்தைக்கான சிகிச்சையை அவன் முடித்தப்போது “ரொம்பப் பொறுமை சார் உங்களுக்கு” என்று சிலாகித்த அதன் தாயார் வந்தபோது முகத்தில் தேக்கி வைத்திருந்த கவலையை இப்போது தொலைத்திருந்தார்.

ஒரு புன்னகையோடு அந்தப் பாராட்டைப் பெற்று கொண்ட விஜய் இன்று இரவும், அடுத்த நாளும் கொடுக்க வேண்டிய மாத்திரைகளை எழுதிக் கொடுத்துவிட்டு அடுத்த நாள் ஏழு மணிக்கு மீண்டும் வருமாறு கூறினான்.

கர்ம சிரத்தையாக அதைக் கேட்டுக் கொண்ட தாயார் அவன் பீஸ் என்று சொன்னத் தொகையைவிட பத்து மடங்கு மேல் கூட கொடுத்திருப்பார். அந்த அளவிற்கு குழந்தையின் அழுகையும், அனத்தலும் குறைந்திருந்தது.

போகும் போது “உங்களுக்கு குழந்தைங்க இருக்காங்களா சார்?” என்று தொடங்கிவிட்டு அவன் முகத்தில் சிரிப்புமில்லாத கவலையுமில்லாத துடைத்தெடுக்கப்பட்ட பாவனையைக் கண்டதும், “தப்பா நினைக்காதீங்க. நீங்க சரண்யா கிட்ட பேசினதை வச்சுக் கேட்கிறேன்” என்றார் ஆர்வத்தை அடக்கமுடியாமல்.

“ஹ்ம்ம்....” என்ற ஒரு நிமிட பலத்த யோசனைக்குப் பின்னர் “இருக்காங்க” என்றவனை விநோதமாகப் பார்த்துவிட்டுச் சென்றார் அந்தப் பெண்மணி.

அவர் கொடுத்த பணத்தை வாங்கி வலது கை உள்ளே வைக்க, இடது கை அடுத்த நோயாளிக்கான வரவை உறுதி செய்யும் பொருட்டு மணியை அடித்தது. அலுப்பு சலிப்பின்றி அவனது பணி தொடர்ந்து கொண்டிருக்க, அன்றைய தினத்தின் பத்தாவது நோயாளிக்கு பல் சுத்தம் செய்து கொண்டிருக்கும் போது பாக்கெட்டின் உள்ளிருந்த கைப்பேசி துடித்தது.

“ஒரு நிமிஷம்” என்று இருக்கையில் அமர்ந்திருந்த நோயாளியிடம் அனுமதி பெற்றுவிட்டு அதில் மிளிர்ந்த எண்ணைப் பார்த்தவனின் கண்கள் சந்தோஷத்தையும் அதே சமயம் லேசான கவலையையும் காட்டியது.

“என்னடா” என்றவன் அந்தப் பக்கம் என்ன சொன்னார்களோ

“நான் வர லேட் ஆகும் கண்ணா. இட்லியும் உனக்குப் பிடித்த புதினாச்சட்னியும் செஞ்சு வச்சிருக்கேன். சீக்கிரம் சாப்பிட்டுட்டு சீக்கிரம் தூங்கிடு ஓகேடா?” என்ற வாக்கியத்தை முடித்தப் பின்னரும் அந்தப் பக்கமிருந்து சத்தமே வரவில்லை.

அந்தப் பக்கமிருக்கும் நபருக்கு கோபமோ என்று மனம் குதூகலித்து வருந்தினாலும் இருக்கையில் அமர்ந்திருந்த நோயாளியும் அவரது வலியுமே முற்று முதலாகப்பட “நான் கேஸ் முடுச்சதும் கூப்புடுறேன்” என்று மனமின்றி அழைப்பைத் துண்டித்தான்.

நோயாளிகளின் வருகை ஒன்பதரை மணிக்கு மேல் தான் முடிந்தது என்றால் விஜய்க்கு அதற்கு மேலும் சில வேலைகள் இருந்தன. ஒரு முதியவருக்குப் பல் செட் கட்டுவதற்காக எடுத்து வைத்திருந்த அளவை, டென்டல் லேபிற்கு கொடுக்கும் நிலைக்குக் கொண்டுவர வேலை செய்து கொண்டிருந்தவனின் கைப்பேசி மீண்டும் சிணுங்கியது.

பல் செட்டின் மாடல் செய்யும் போது பத்து வினாடிகள் கூட கவனம் சிதறினாலும் எடுத்த அளவு வீணாகிவிடும் என்பதால் சிணுங்கிய கைப்பேசியை அவன் சமாதானப்படுத்தவே இல்லை. முழு கவனத்தையும் செலுத்தி வேலையை முடித்தவன் முன்னர் சிணுங்கிய கைப்பேசி கோபித்துக் கொள்ளாவிட்டாலும் அதற்கு அழைப்பு விடுத்த தந்தை இந்நேரம் கொம்பேறி மூக்கனாய் மாறியிருப்பார் என்பதை உணர்ந்தவன் குன்னூரில் இருக்கும் தன் வீட்டிற்கு அழைத்தான்.

இரண்டே நிமிடத்தில் தொலைப்பேசியின் “ட்ரிங் ட்ரிங்” என்ற சத்தம் நின்று “ஹலோ” என்ற தன் தாய் துளசியின் சற்றே உள்ளே போன குரல் கேட்டதும் “அம்மா, எப்படி இருக்கீங்க?” என்றான் மகன்.

அதன் பின்னர் கேள்விகள் வரிசையாய் அங்கிருந்து வர, முதல் கேள்விக்கு “நாங்க நல்லா இருக்கோம்” என்ற பதில் வந்தது,

அடுத்ததற்கு “ஹ்ம்ம்... இன்னும் கிளினிக்ல தான் இருக்கேன்” என்ற பதில் சென்ற வேகத்தில் அடுத்த கேள்வி வந்ததோ என்னவோ, “இல்ல இல்ல, இதோ கிளம்பிட்டேன். சாப்பாடு செஞ்சு வச்சுட்டுத் தான் வந்திருக்கேன்” என்ற பதில் அவசர அவசரமாக போனது. அடுத்த கேள்வியின் நீளம் அதிகமாய் இருந்ததோ இல்லை சொல்லப் போகும் பதிலை அம்மா எப்படி எடுத்துக் கொள்வாளோ என்ற யோசனையில் தோய்ந்ததோ “இந்த வாரம் நான் மட்டும் ஊருக்கு வரேன்” என்றான் விஜய்.

அதன் பின்னர் அங்கே கேள்விக்குப் பஞ்சமாய் போய் விட ஒரு கனத்த மௌனம் நிலவியது.

அமைதியை விஜய்யே கலைத்து “அம்மா, கொஞ்சம் புரிஞ்சுக்கோங்க” என்றான் இறைஞ்சுதலாக. அவன் அந்த வாக்கியத்தை முடித்த அந்த நொடி தொலைப்பேசி வேகமாய் கைமாறியது விஜய்க்கு புரிந்தது. “என்னடா, இங்க எப்ப வருகிறாய்?” என்று தந்தை வீரராகவன் கர்ஜித்தது அடுத்த அறையில் இருந்த தலைமை மருத்துவருக்கே கேட்டது என்றால் விஜயின் காதுகளைப் பிளந்தது.

“சனிக்கிழமை காலையில ஏழு மணி வாக்கில கிளம்பிறேன்பா. ஒன்பது மணிக்கு முன்னாடி அங்க இருப்பேன்” என்று அவன் பயண விபரம் தெரிவித்ததும்

“ஏன் வெள்ளிக்கிழமை ராத்திரியே வர வேண்டியது தானே? அங்க என்ன வெட்டி முறிக்கிறாய்? கிளினிக் முடிந்த கையோடு ராமநாதபுறத்திலேயே பஸ் ஏறுவது தானே?” என்றார் வீரராகவன்.

“மாமா சனிக்காலையில சேரன்ல தான் வருவாங்க. அவங்க வீட்டுக்கு வந்ததும் தான் கிளம்ப முடியும்” என்றதும் தாயிடம் தான் மட்டும் வருகிறேன் என்ற விஷயத்தைக் கூறிய போது நிலவிய அமைதிக்கு சற்றும் பொருந்தாத வகையில் இப்போது தந்தை அவனை வார்த்தைகளால் கடித்துக் குதறினார். அந்த வார்த்தைகள் குத்தீட்டிகளாய் மாறி அவன் நெஞ்சத்தில் இருந்த புண்ணைக் கிளறிவிட்டு ரத்தம் வடிய செய்தது.

ஒரு நிலைக்கு மேல் அவரது வார்த்தைகள் ஏற்படுத்திய வலியை பொறுக்கமுடியாமல் “ப்ளீஸ் பா” என்று அவன் கெஞ்ச, அவனது பெரும் தொல்லையாய் இருந்த தொலைப்பேசி கைமாறி “அம்மா நாளைக்குப் பேசுறேன் விஜய். இப்போ வீட்டுக்குக் கிளம்பு. ஏற்கனவே ரொம்ப லேட் ஆகிடுச்சு. வைக்கிறேன்” என்று கத்தரித்தாற்போல் பேசிவிட்டு வைத்தார் அவனின் தாயார் துளசி.

துளசி என்ற பெயருக்கு ஏற்ப மனதில் தூய எண்ணங்களும், சொல்லிலும் செயலும் மற்றவரை புண்படுத்தாத பண்பும் நிறைந்த தாயை எண்ணியதும் அவர் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் கட்டுகடங்காமல் பெருகியது.

சனிக் கிழமை கிளினிக் வேலை முடித்துவிட்டு வந்ததும் அம்மா கையால் உணவைப் பிசைந்து சாப்பிட்டுவிட்டு அப்படியே அவள் மடியில் படுத்து உறங்கிவிடவேண்டும் என்று நடக்காமல் போகப் போகும் ஒன்றை மனதில் குறித்துக் கொண்டே தன் அறையை விட்டு வெளியே வந்தான்.

அந்த தனியார் மருத்துவமனையின் வரவேற்பில் இருந்த நர்ஸிடம் அறையை சுத்தம் செய்து வைக்குமாறு கூறியவன் மேலும் சில வேலைகளை அவர்களுக்குப் பணித்துவிட்டு, அடுத்த நாளின் சிகிச்சைக்காக முன் பதிவு செய்திருந்தோர் பட்டியலை வாங்கிக் கொண்டு மருத்துவர்களுக்கான பார்கிங்கில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த தன் ஹீரோ ஹோண்டா பாஷனை நோக்கிச் சென்றான்.

அதில் சாவியை நுழைத்து, சாலையில் அதை கோயம்புத்தூரின் சாலைகளில் செலுத்திய போது, மனம் குன்னூரின் சாலைகளில் பயணித்து அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்றது.

தாயிடம் சென்ற எண்ணங்கள் முறையே தந்தையிடம் போய் முட்டி நின்றன. இரண்டு மாதங்கள் முன்பு வரை அவனை அவர் கடுமையாக திட்டியதே இல்லை.

குன்னூர் அருகே உள்ள ஒரு மலைவாழ் கிராமத்தை சொந்த ஊராக கொண்ட வீரராகவன்-துளசி தம்பதியருக்கு ஒற்றை பிள்ளையாய் பிறந்த விஜய்ஆனந்த் தாயின் செல்லமாய் இருந்தான் என்றால் தந்தையை தன் படிப்பின் மூலமாக பெருமைப்படுத்தினான்.

அதிகப் படிப்பறிவில்லாத அந்த கிராமத்தில் மருத்துவப்படிப்பு (பல் மருத்துவமே என்றாலும் வீரரகாவனுக்கு அதில் பெருமை தான்!) முடித்த தன் மகன் அவருக்குப் பெரிய ஹீரோவாகத் தான் தெரிந்தான்.

அதிலும் படிப்பிற்காகவும் வீட்டிற்காகவும் வாங்கிய கடனை அடைப்பதற்காக வார நாட்களில் வேலைக்குச் செல்வதோடு நிறுத்திவிடாமல் வார இறுதியில் தங்கள் கிராமத்திற்கு வந்து இலவசமாய் மருத்துவம் செய்வதில் அவருக்கு நெஞ்சம் கொள்ளா பெருமை தான்!

இலவச சிகிச்சையோடு நிறுத்திக் கொள்ளாமல் தனக்குத் தெரிந்த மற்ற மருத்துவர்களையும் மாதம் ஒரு முறை அழைத்து வந்து மகன் நடத்தும் மருத்துவ முகாம்களிலும், விழிப்புணர்வு மையங்களிலும் அவரே நிறைய முறை பங்கு கொண்டு, மகன் சொல்லும் கருத்துக்களை எளியோருக்கு விளங்கும் படி அவர்கள் பாஷையில் எடுத்துரைத்திருக்கிறார்

எல்லாவற்றையும் விட அவனது அமைதி அவரை வியக்க வைத்திருக்கிறது. தாட்பூட் என்றிருக்கும் தன்னுக்கு எதிர்மாறாய் எந்தவொரு செயலிலும் நிதானம் பொறுமை என்றிருப்பவன் தாயின் நேர் வாரிசு என்று அதற்கும் பெருமைபட்டவர் தான் ராகவன்.

படபடப்பை வெளிக்காட்டி, மனம் நோகடிக்கும் வார்த்தைகளை யோசனையின்றி வெளியிடாமல் ஒரு அழுத்தமான பார்வையோடோ அல்லது ஒற்றையாய் இருந்தாலும் கூர்மையாய் வெளியேறி எதிராளியின் கோபத்தைத் தூண்டாமல் குன்றலை அதிகப்படுத்தும் சாமர்த்தியத்தை வாய் விட்டே வியந்திருக்கிறார்.

அந்த வியப்பின் விளைவாய் “இப்படி அமைதியாவே இருக்கியேடா. உன்கிட்ட வைத்தியம் பார்க்க வர ஆளுங்க கிட்டயாவது பேசுவியா? பேசினா தானே அவங்களுக்கு என்ன பிரச்னைன்னு புரியும்?” என்று தனக்கு எழுந்த சந்தேகத்தை அவன் முதுகலை பல் மருத்துவம் படிக்கும் போது கேட்டவருக்கு அப்போது ஒரு புன்சிரிப்பே பதிலாக வந்தது.

அந்த புன்சிரிப்பின் பின்னால் ஒளிந்திருக்கும் ரகசியத்தை அவர் அவனது வேலையைக் கண்கொண்டு பார்த்தபோது வார்த்தையின்றியே புரிந்துகொண்டார். தனக்குத் தேவையான விவரங்களை எந்தவிதமான முரட்டு நோயாளியிடமிருந்து கூட வாங்கிவிடும் தன்மை அவனுக்கு இருந்தது என்பதை உணர்ந்தவர் மனைவியிடம் சென்று “உன் பிள்ளை லேசா சிரிச்சு, மிதமா நாலு வார்த்தை பேசினா காட்டுக் கத்தலா கத்துற ஆள் கூட அடங்கிடுறான். அதே நான் பெருசா சிரிச்சு அவனை என்ன தான் தாஜா பண்ணலும் ம்ஹூம்ம்ம்....” என்று அலுத்துக் கொள்வது போல சிரித்ததையும், அதற்குத் தான் “நீங்க செஞ்ச தாஜாவோட லட்சணம் அப்படி இருந்திருக்கும். என் பையன்கிட்ட பாடம் படிங்க”

என்று அவரை வாரியதையும் முகம் ஜொலிக்க துளசி சொன்னதை இன்னும் அவன் மறக்கவே இல்லை.

தன்னிடம் இல்லாவிட்டாலும் பிறரிடம் வெளிப்படையாய் அவனைக் கொண்டாடிய தந்தைக்கு எதிர்மாறாய் தாய் அவனது வெற்றிகளை முகர்ந்தாலும் அப்போதைக்கு ஓரிரு வார்த்தைகளை சொல்லிவிட்டு இன்னும் அவன் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது என்ற அறிவுரையோடு நிறுத்திக் கொண்டுவிடுவார்.

அதுவும் கடந்த மூன்று ஆண்டுகளாய் மகனின் வேதனையை தனதாய் எடுத்துக் கொண்ட அந்தத் தாய் அவனுக்கு மேலாய் துடித்துப் போய் இருக்கிறார் என்று கூறினால் மிகையாகாது.

ஆனால் அவன் மனதை அரித்த வேதனையின் சாயலைக் கூட உணராத வீரராகவன் இரண்டு மாதத்திற்கு முன்னர் அதற்கு அவன் ஒரு தீர்வு கண்ட போது வெகுண்டெழுந்துவிட்டார். அந்த நாளிலிருந்து விஜய் என்ன செய்தாலும் குற்றம் என்றவர் அவனை வார்த்தைகளால் சுட ஆரம்பித்தார். அவனைச் சொன்னால் கூட பரவாயில்லை... ஆனால் அவரோ.....

இன்றைக்கு அவர் பேசிய பேச்சுகளை மனம் திரும்ப சுவைக்க எத்தனித்த போது வெகுவாக முயன்று அதிலிருந்து வெளி வந்தவன் ஏதோ நியாபகம் வந்தவனாக வழியில் இருக்கும் ATM ஒன்றில் இறங்கி வேண்டிய பணம் எடுத்துக் கொண்டு வீட்டின் திசையில் உடல் மட்டுமல்லாது மனதின் பயணத்தையும் துவக்கினான்.

இனிய நினைவுகள் பாதியும் துக்கங்கள் மீதியுமாய், விஜய் துடியலூரில் இருக்கும் தன் வீட்டிற்கு வந்தடைய அரை மணி நேரம் பிடித்தது.

வீட்டை அடைந்ததும் வெளிக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தவன் என்ன வேகத்தில் பைக்கை ஒட்டிக்கொண்டு வந்தானோ அதே வேகத்தில் அதை விட்டு இறங்கி, அந்த அவசரத்திலும் அதை ஒழுங்காக பூட்டிவிட்டு திறந்த வெளிக்கதவை கவனமாக சாற்றி, பூட்டு போட்டான்.

வீட்டின் கதவுகளைத் தன் சாவியைக் கொண்டு திறந்தவன் உள்ளே நுழைந்த போது பளிசென்ற வெளிச்சம் வெளியில் தவழ்ந்த இரவை உள்ளே பகலாக்கிக் கொண்டிருந்தன. விளக்குகளின் வெளிச்சம் போதாது என்று தொலைக்காட்சியும் தன் பங்கு வெளிச்சத்தைக் கொடுத்து, கூட பாடல் ஒன்றையும் பரிசாக கொடுத்தது. இவையெல்லாம் கண்ணில் பட்டாலும் மனதில் பதியாமல் போக மெல்ல சோபாவில் சுருண்டு படுத்திருந்த ஜீவனிடம் சென்றான்.

உள்ளம் உருக அவனது கைகளின் தொடுகையில் "ஆஆஆ" என்ற அலறல் கேட்டது!

****************************************

பாகம்-2

"ஆஆஆ" என்று வந்த அலறல் தன்னை பாதிக்கவே இல்லை என்பது போல, "கண்ணம்மா, விஜய்டா குட்டு" என்று கெஞ்சிக் கொஞ்சி படுத்திருந்த வினயாவின் கன்னங்களைத் தட்டியவன், இன்னமும் அவள் முகத்தில் அரண்ட பாவனையைக் கண்டதும் "நான் தான்டா, மாடில ரூம்ல போய் படுத்துக்கலாம். எழுந்திரு" என்று அவள் கைப் பற்றி எழுப்ப முயன்றான்.

மொட்டாய் இருந்த விழிகளை மலர்த்தி விஜய் தான் என்று கண்டுகொண்டவள் "ம்ம்ம். தூக்கம்" என்ற சிறு முனங்களுடன் மீண்டும் சோபாவிற்குள் முடங்கினாள்.

"ச்சு, சொன்னாக் கேட்கணும். மேல போய் பெட்ல படுத்துக்கலாம்" என்று தன் முயற்சியை விஜய் தொடரவும் சற்று நேரத்தில் தன் வழிக்கு வந்தவளை இடுப்பில் கை போட்டவாறே தோளில் சாய்த்துக் கொண்டு, மாடிப்படி ஏறியவனின் கழுத்தை அவளது கைகள் லேசாக வளைக்கவும், ஒரு நொடிக்கும் குறைவாக நெஞ்சம் தடுமாறியவன், சட்டென நிதானித்து "ரொம்பத் தூக்கமா? சாப்பிட்டீங்க தானே வினு மேடம்?" என்றான் சிறு சிரிப்புடன்.

தூக்கத்தின் ஊடேயே "ம்ம்ம் சாப்பிட்டேன்" என்றவள் சட்டென "ம்ஹூம்ம்ம், சாப்பிடல" என்றாள் தலையை மறுப்பாக அசைத்து.

"என்னமா, சாப்பிடுன்னு சொல்லிட்டுத் தானே போனேன். ப்ச்... சரி இரு... நான் போய் தட்டுல போட்டு எடுத்துட்டு வரேன்" என்று வருந்தியவாறே அவளோடு மீண்டும் கீழிறங்கினான்.

"உங்களுக்கும் சேர்த்து எடுத்துட்டு வாங்க விஜி" என்று அந்தத் தூக்கக் கலக்கத்திலும் அவள் கூற, அதற்கு ஒரு சிறு தலை அசைப்பையே விஜய் பதிலாகக் கொடுத்ததும், சமையலறையை ஒட்டி இருந்த சாப்பாட்டு அறை வரை சென்றவள் "ஹ்ம்ம், நாம சோபால உட்கார்ந்து சாப்பிடாலாம் விஜி" என்றுவிட்டு அவன் கைகளிலிருந்து நழுவி தொலைக்காட்சி முன்னர் அமர்ந்தாள்.

ஒரு புன்னகையுடனே தான் மாலை கிளினிக் செல்வதற்கு முன்னர் செய்து வைத்துவிட்டுப் போன உணவையும் தண்ணீரையும் தட்டு மற்றும் டம்பளரின் துணையோடு எடுத்துக் கொண்டு சென்றான் விஜய்ஆனந்த்.

அவன் அருகே அமர்ந்ததும் அவனை ஒட்டி அமர்ந்து கொண்டவள் அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள். "ஏன்டா சாப்பிடாம இருந்தீங்க?" என்ற கேள்வியோடு முதல் வாய் உணவை ஊட்ட, "ப்ச், எனக்குத் தனியா சாப்பிட ஒரு மாதிரி இருந்துச்சு" என்றவளின் கன்னங்களில் ஒரு மெல்லிய வருடல் நடத்தினான் விஜய். மயிலிறகு போன்ற அந்த வருடல் காதலிலா? பாசத்திலா?

அத்தனை நேரம் உயிருடன் இருந்த தொலைக்காட்சிக்குத் தற்காலிக மரணம் நிகழ்ந்திருப்பதைக் கண்ட விஜய், "டிவி பார்க்கலையா வினு? நான் கூட நீ டிவி பார்க்கத்தான் சோபாவுக்கு வந்தேன்னு நினைச்சேன்" என்றான் இடது கையால் தொலைக்காட்சியை உயிர் பெற செய்து கொண்டே.

"நீங்க தான் இருக்கீங்களே" என்ற மூன்று வார்த்தைகளில் பலவிதமான அர்த்தங்கள் பொதிந்திருந்தாலும் அன்னப்பறவைப் போல வினயா அவனை மிஸ் பண்ணி இருக்கிறாள் என்ற அர்த்தத்தை மட்டுமே விஜய் எடுத்துக் கொண்டான்.

இரண்டு இட்லிகளை மறு பேச்சின்றி அவன் கொடுக்க கொடுக்க உண்டவள் அதன் பின்னர் "எனக்கே கொடுத்துட்டு இருக்கீங்க? நீங்களும் நடு நடுல சாப்பிடுங்க" என்று அவனுக்கு அறிவுறுத்தினாள். ஒருவழியாக மூன்று இட்லிகளை அவளைக் கெஞ்சிக் கொஞ்சி (மிஞ்சி, மிரட்டவெல்லாம் நம்ம ஹீரோக்குத் தெரியாததால் அந்த ஆயுதங்களை அவர் பயன்படுத்தவில்லை) அவளது வயிற்றுக்குள் அடைத்தவன் "மேல போய் படு வினு. நான் பால் கலந்து எடுத்துட்டு வரேன்" என்றுவிட்டு சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்துக் கொண்டு சமையலறை நோக்கிச் சென்றான்.

கீழே ஒரு வரவேற்பறை, சமையலறை, அதை ஒட்டியே சாப்பாட்டு அறை என்றிருந்த இருதள (duplex) வீட்டில் மாடியில் ஒரு கூடமும், இரு அறைகளும், அவற்றுள் ஒன்றில் பால்கனியும் இருந்தன.

அவனது சொற்படி சோபாவில் இருந்து எழுந்தவள் தொலைக்காட்சிக்கு சிறு ஓய்வைக் கொடுத்ததோடு நில்லாமல் பிரகாசமாய் மின்னிக் கொண்டிருந்த விளக்குகளை வெளியே கனிந்திருந்த இரவிற்கு ஏதுவாக அணைத்துவிட்டு, "கதவு பூட்டிடீங்களா விஜி?" என்று கேட்டு அவனது பதிலில் திருப்தி பெற்ற பின்னரே மாடியேறிச் சென்றாள்.

அவளுக்கு "ஹான் பூட்டிட்டேன் வினுமா" என்ற பதிலைக் கொடுக்கும் போதே தான் வருவதற்கு முன்னர் அவளிருந்த நிலை மனதில் ஓடி மறைந்தது. "பொறுப்பு இருக்கத் தான் செய்கிறது, இருந்தாலும் ஓரிரு சமயம் அவளது சோம்பேறித் தனம் அதை மிஞ்சி விடுகிறதோ? சோம்பேறித் தனமா? வினுவிற்கா? ஹ்ம்ம்... ஒருவேளை அவள் சொல்லாமல் விட்டது போல தனியாக இருட்டில் இருக்க பயமாக இருந்ததோ? இந்த பயம் எப்போது போகுமோ? " என்று ஒரு பெருமூச்சை அவன் வெளியேற்றி முடித்தப்போது, அந்த மூச்சின் சூட்டிற்கேற்ப பாலும் சூடாகி இருந்தது.

அவன் அறைக்குள் நுழைந்தபோது கட்டிலில் போர்வைக்குள் முடங்கி இருந்தாள் வினயா. "வினு, இந்தா" என்று அவளிடம் ஒரு கண்ணாடி டம்ப்ளரை கொடுத்தவன் அவள் சொட்டுவிடாமல் அதைக் குடிப்பதை ஒரு கனிவோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

பாலை அருந்தி முடித்ததும் இடது புறங்கையால் வாயைத் துடைத்தவள் படுக்க எத்தனிக்கவே, வேகமாக அவளைப் படுக்க விடாமல் தடுத்தவன் "முதல போய் நைட் டிரஸ் போட்டுக்கோ. அதுக்கு அப்புறமா பல் விளக்கிட்டுத் தான் படுக்கணும்" என்று அவளை நிமிர்த்தினான்.

"ம்ம், நீங்க தானே போய் படுத்துக்கோன்னு சொன்னீங்க, இப்போ பேச்சை மாத்துறீங்க" என்று சிணுங்கலோடு கட்டிலை விட்டு இறங்கியவள், கால்களை சிறு பிள்ளை போல் உதைத்ததோடு நில்லாமல் அவனை ஒரு அடி வைக்கவும் செய்தாள்.

அடித்தாலும் உதைத்தாலும் என் காரியம் தான் எனக்கு முக்கியம் என்பது போல் வினயாவிற்கு இரவு உடை ஒன்றை அவளது அலமாரியில் இருந்து எடுத்துக் கொடுத்தவன், அவள் மாற்றியதும் பிரஷில் பேஸ்ட் வைத்து நீட்டி, அவள் பல் துலக்கியதுமே அவள் தலை அந்தப் பஞ்சு மெத்தையில் சாய அனுமதித்தான்.

தனது போர்வைக்குள் சென்றவள், விஜய் அறையை விட்டு வெளியேற முற்படவும் "விஜி, என் கூடவே படுத்துகோங்களேன் ப்ளீஸ். நேத்திக்கு நைட் திடீர்னு முழிப்பு வந்து உங்களைத் தேடி வந்தப்ப ஊஞ்சல முட்டிக்கிட்டேன். ப்ளீஸ்" என்று காரண காரியம் விளக்கி கோரிக்கையை முன்வைக்கவும் சற்று தயங்கியவன், "சரி வினுமா, நான் போய் குளிச்சு, டிரஸ் மாத்திட்டு படுக்க வரேன்" என்று விட்டு தன் அறைக்குள் சென்றான்.

இந்த இரண்டு மாதங்களில் வினயா இப்படி கேட்பது இது தான் முதல் முறை என்பதற்காக சந்தோஷப்படுவதா? தாங்கள் இருவரையும் எந்த நிலைமையில் வைத்ததற்கு இறைவனைப் பழிப்பதா? இதற்கு மேல் வாழ்க்கை எந்த திசையில் செல்லுமோ என்று யோசிப்பதா? என்று விஜய்க்குப் புரியவில்லை.

வாழும் இந்த நொடியே நிஜம்! நிகழ்ந்து முடிந்த பிற்காலத்தையும், நிகழப் போகும் முற்காலத்தையும் எண்ணி மனம் நோவதைவிட, நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த நொடியை நன்றாக, மனதிற்கு நிறைவாக வாழலாம் என்ற முடிவோடு உடை மாற்றி அவன் வினயா உறங்கிக் கொண்டிருந்த அறைக்குள் சென்றபோது, முகத்தில் எந்த ஒரு களங்கமுமின்றி ஒரு குழந்தை போல் படுத்திருந்தவளை நெஞ்சோடு அணைத்துத் தாலாட்ட வேண்டும் என்ற ஆவல் ஊற்றாய் பெருகியது. எழுந்த ஆசையை அவன் அடக்க, ஆண்டவனோ அன்றே அந்த ஆசையை நிறைவேற்றி வைத்தான்!!

அவள் அருகில் படுத்தவன் மெல்ல மெல்ல தன்னிடம் ஒண்டியவளின் முதுகை வருடிக் கொடுத்தவாறே சற்று எழுந்து சாய்ந்தமர்ந்திருந்தான். தன் மேல் பட்ட அவளது மேனி கொடுத்த நிம்மதியோ அவன் கண்களில் என்றைக்குமில்லா திருநாளாய் இன்று சீக்கிரமே தூக்கம் குடிகொண்ட போது வினு அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

நெஞ்சத்தின் ஆசையை நிறைவேற்றும் வகையில் அந்த சந்தர்ப்பம் அமைய அவள் நெஞ்சோடு அணைத்து நெற்றியில் முத்தமிட்டவன் சற்று நேரத்தில் மீண்டும் தூங்கிப் போனான்!

வழக்கமான ஐந்தரை மணி துயில் எழுதல் மாறி, முதல் நாள் கிடைத்த சிறு நிம்மதியில் அடுத்த நாள் காலை ஆறு மணிக்கு விழித்த விஜய்ஆனந்த் எப்பொழுதும் போல வினயாவின் நெற்றியில் இதழ் ஒற்றிவிட்டே அந்த நாளைத் துவக்கினான்.

காலை நேர ஜாக்கிங் முடித்துவிட்டு கோயம்புத்தூரின் அதிகாலை குளிருக்கு ஏற்றபடி கடுங்காப்பி ஒன்றைக் கலந்து குடித்தவன் அன்றைய நாளிதழை அலசியபின்னர் மதிய உணவிற்கென ரைஸ் குக்கரில் சாதம் வைத்த கையோடு, வினுவிற்குப் பிடித்த உருளைக்கிழங்கு வறுவலை செய்துவிட்டு மேலே சென்றான்.

வினயா படுத்திருந்த அறைக்குள் அதாவது அவன் அறையாக முன்பிருந்து, இரண்டு மாதங்களாக வினயாவின் அறையாகயிருந்து, நேற்றிரவு இருவரது அறையாக மாறிய அந்த அறைக்குள் நுழைந்து "வினு எழுந்திரு, காலேஜ் கிளம்ப லேட் ஆகிடும்" என்று ஆரம்பித்து "நீ இப்ப எழுந்து வரல, நான் காலேஜ்ல ட்ராப் பண்ண மாட்டேன். நீ தான் பஸ் பிடிச்சுப் போகணும்" என்ற அறிவிப்பை சத்தமின்றி கோபமின்றி நிறுத்தி நிதானமாக அவன் கூறியதும் வாரிச் சுருட்டி எழுந்து கொண்டாள் வினயா.

எழுந்தவளுக்கு காலை வணக்கம் சொல்லி, அவளைக் குளிக்க ஏறகட்டிய பின்னர், அவன் வேலைக்குக் கிளம்பச் சென்றபோது புத்தம்புது மலரைப் போல வெளியே வந்த வினயாவைக் கண்டவனுக்கு உள்ளம் தடம் புரண்டது. தடம் புரண்ட நெஞ்சம் எந்த விதமான சேதாரத்தையும் ஏற்படுத்தும் முன்னர் சுதாரித்து அப்போதைக்கு ஏதுவான தண்டவாளத்தில் நெஞ்சமெனும் ரயிலை பயணிக்க விட்டான் விஜய்ஆனந்த்.

அவனைத் தடுமாற வைத்த அதே மலர் அவனை வருந்தவும் வைத்தது. வெளித்தோற்றத்தில் புது மலராய் காட்சியளித்தாலும் மனதால் இந்தப் புது மலர் இன்னும் தன்னகுள்ளேயே ஒடுங்கிக் கொண்டு

மொட்டகாவே இருக்கப் பார்க்கிறதே? விரிந்து மனம் வீசினால் சந்தோஷப் படும் நெஞ்சங்கள் நிறைய இருக்கும் போது... அந்தக் காலம் கனிய காத்திருப்பதைக் காட்டிலும் அதற்கான முயற்சிகளை மறைமுகவேனும் எடுக்க வேண்டும் என்ற அவனது குறிக்கோளை இப்போது ஒரு முறை நினைவு கூர்ந்தான் விஜய்ஆனந்த்.

காதில் ஒற்றை கல் வைத்த சின்னத் தோடு, கழுத்தில் ஒரு செயின், இடது கையில் கடிகாரம், வலது கையில் மந்திரித்து கட்டிய ஒரு கருப்பு கயிறு என்று இவற்றைத் தவிர மிதமான நீல வண்ணத்தில் ஒரு காட்டன் சல்வார் என்று வானுலக தேவதை போல் கிளம்பிய வினயாவின் வசீகரத்தில் ஒன்றும் குறையிருக்கவில்லை. என்ன தான் முகம் கலையாக இருந்தாலும் அதை மின்னச் செய்வது கண்களில் இருக்கும் ஒளியல்லவா? அதற்குப் பதிலாக அங்கே வலியிருந்தது தான் விஜயை இப்படி நினைக்க வைத்ததோ? யாமறியேன் பராபரமே!

இருவரும் உணவு மேடைக்கு ஒன்றாக சென்று காலை உணவாக பிரட்டையும் முட்டை ஆம்லேட்டையும் சாப்பிட்டபோது மௌனமே அங்கே மொழியானது. ஒவ்வொரு வாய் பிரட்டுக்கும் வினயா ஒரு வாய் தண்ணி குடிக்கவே "என்னடா, பிரட் ஓவர் டோஸ்ட் ஆகிடுச்சா? வேற போட்டுத் தரட்டுமா?" என்று வினவினான் விஜய்.

"இல்ல இல்ல வேண்டாம்" என்று அவசரமாக மறுத்தவள் ஒன்றும் சொல்லாமல் வைத்திருந்த இரண்டு பிரட் துண்டுகளை அரை மணி நேரம் உண்டாள்.

அவள் முதல் துண்டின் பாதியை முடித்தப் போதே தனது உணவை முடித்திருந்த விஜய் இருவருக்கும் மதிய உணவை பாக் செய்ய ஆரம்பித்தான்.

தனக்கு தயிர் சாதமும், வினு தயிர் உண்ணமாட்டாள் என்பதால் தாய் செய்து வைத்துவிட்டுப் போன தக்காளி தொக்கை கலந்து தக்காளி சாதமும் கிளறிய விஜய் சமையலில் புலி என்று நீங்கள் நினைத்தால் மிகவும் தவறு.

வினு இந்த வீட்டுக்கு வரும் வரை காலை, மதிய உணவுகளை, தான் வேலை செய்யும் P.S.G Institute of Medical Sciences and Research வளாகத்தில் அமைந்திருக்கும் காண்டீனில் முடித்துக் கொள்பவன், இரவு உணவை ஏதாவது ஹோட்டலிலோ அல்லது மெஸ்ஸிலோ முடித்துக் கொள்வான்.

ஆனால் இப்போதோ வெளி உணவுகளை விரும்பும் வினுவிற்காக தான் அவன் சமைப்பதே! குழப்பமாக இருக்கிறதா? வெளி உணவுகளை விரும்பினாலும் யாரது துணையுமில்லாமல் அவள் தனியாக சென்று வாங்கவே மாட்டாள் எனும் போது எங்கே சாப்பிடுவது? இந்த காரணத்திற்காக தான் தன்னால் முடிந்த அளவு அவளுக்குப் பிடித்ததை செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறான்.

துளசி சொல்லி வைத்துவிட்டுப் போனதன் விளைவாக அருகிலிருக்கும் ஒரு மெஸ்ஸில் ஒரு வாரத்திற்குத் தேவையான இட்லி மாவு அரைத்துக் கொடுத்தனர் என்பதால் விஜய்க்கு இரவு சமையல் கடினமாக இருந்ததில்லை.

தனக்குத் தெரிந்த வகையில் ஆம்லெட்டும், மதியத்திற்கு ஒரு காயும் செய்வதற்குள்ளே தாயை பத்து முறையேனும் வியந்து தள்ளும் விஜய் சமையல் செய்வதற்காக அலுத்துக் கொண்டதோ வருந்தியதோ இல்லை. வினுவின் நலனுக்காக செய்யும் ஒரு செயலுக்கு அவன் எப்படி வருந்துவான்? அதுவும் அவளது சந்தோஷமே தன் வாழ்க்கை இன்றிருக்கும் அவனா? உலகம் மாற்றி சுற்ற தொடங்கிவிடாது?!

தன் வேலையை அவன் முடித்த போது கூட வினயா அவளது உணவை முடித்திருக்கவில்லை. "கஷ்டமா இருந்தா வச்சிடு கண்ணம்மா, வழியில ஏதாவது ஹோட்டல் சாப்பிட்டு போகலாம்" என்று அறிவுறுத்தியதும் "ம்ஹூம், தட்டில வைச்சதை சாப்பிடாம கெடுத்தா அண்ணி திட்டுவாங்க. இதோ முடிச்சுட்டேன்" என்றவள் வேகவேகமாக பிரட்டை வாய்க்குள் அ டை த்துக் கொண்டாள்.

"நாளைக்கு மெஸ்ல இருந்து சாப்பாடு வந்துடும்டா வினு, திங்கட்கிழமைல இருந்து உனக்கு வேற டிபன் பண்ணித் தரேன். அப்படி இல்லைனா கொஞ்சம் சீக்கிரம் கிளம்பி இரண்டு பேரும் வெளியே சாப்பிட்டுப் போகலாம். ஓகே?" என்றான் அவள் மனமறிந்தவன் போல.

"வேணாம் விஜி, இதுவே போதும். இதுக்கே உங்களை ரொம்ப கஷ்டப்படுத்துறேனோன்னு கில்டியா இருக்கு" என்று சொன்னபோது அவளது கண்களில் இருந்த வலி மறைந்து அங்கே கண்ணீர் நிரம்பி வழிந்தது.

“ச்சே ச்சே, என்னடா வினு இது?” என்று செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு அவளருகில் விஜய் வரவும், கைகளை அவன் இடுப்பைச் சுற்றி படரவிட்டு அவனது வயிற்றில் முகம் புதைத்தவள் அவனது சட்டையை ஈரமாக்கினாள். கண்கள் அதுபாடு கண்ணீரை சுரக்க, உதடுகள் தன் பங்காக “தேங்க்ஸ் விஜி” என்ற வார்த்தைகளை சுரந்துகொண்டே இருந்தன.

“அழக்கூடாதுடா வினு, ப்ளீஸ் விஜய்க்காக. நீ அழுதா எனக்கு ரொம்ப ரொம்ப கஷ்டமா இருக்குடா”, “நான் தான் கண்ணம்மா உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்” என்று அவளது முதுகை வருடிக் கொடுத்தவாறே அவன் சமாதானப்படுத்தியபோதும் அவளது அழுகை குறைய பத்து நிமிடமானது.

ஒருவாராக அவளது அழுகை குறைந்ததும் ஒரு டம்பளர் தண்ணீரைக் கொடுத்து அவளை ஒரு நிலைக்குக் கொண்டு வந்தவன் “கிளம்பலாமா வினு? காலேஜ் லேட் ஆகிடுச்சே” என்று அவளை துரிதப்படுத்தி வீட்டிலிருந்து கிளம்பினான்.

அவளை “PSGR Krishnammal College for Women” வளாகத்தில் இறக்கிவிட்டவன் ஐந்தே நிமிட தூரத்தில் இருக்கும் தன் வேலை இடத்திற்குச் சென்றான்.

வினு படிக்கும் B.Sc Bio-Technology கோர்ஸ் ஒன்றும் குறைவில்லை என்றாலும் என்ன மாதிரி நிலையில் இருக்கவேண்டியவள், அவளது மனநிலையின் விளைவாக இந்தப் படிப்பை படிக்கிறாள் என்று எப்போதும் போல் இன்றைக்கும் எண்ணாமல் இருக்கவில்லை விஜய்!

அதன் பிறகு அன்றைய நாள் ஒரு சாதாரண நாளாக கழிய, மாலை வினுவை வீட்டில் விட்டுவிட்டு கிளினிக் சென்றான் விஜய் ஆனந்த்.

மறுநாள் காலை சேரனில் வந்திறங்கிய வினுவின் தந்தை வைரவனை ரயில் நிலையம் சென்று அழைத்து வந்தவன், தந்தையும் மகளும் நடத்திய பாச மழையில் நனைந்து விட்டு குன்னூர் கிளம்பிச் சென்றான்.

“துளசிம்மாவைக் கேட்டதா சொல்லுங்க. என்கிட்டே போன்ல பேசச் சொல்றீங்களா?” என்று கேட்ட வினயாவின் கண்களில் வாட்டமிருந்ததை கண்ட விஜய்க்கு வாழ்வு மலரும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பது மட்டும் மிகத் தெளிவாக புரிந்தது.

இந்த இரண்டு மாதங்களாக எல்லா வாரமும் தன்னுடனே அழைத்துச் சென்ற வினுவை இந்த வாரம் பிரிந்து செல்வது என்பது விஜய்க்கும் கஷ்டமாகவே இருந்தது. ஆனால் தந்தை கூறும் சுடு சொற்களில் தான் வெந்தாலும் பரவாயில்லை, வினு நோகக் கூடாது என்ற எண்ணத்தில் விஜய் தனியாகக் கிளம்ப, அவனை ஒரே நாளில் வரவைத்தது வைரவன் செய்த கைப்பேசி அழைப்பு.

நள்ளிரவை தாண்டி ஒரு மணி அளவில் விஜயின் கைப்பேசிக்கு அழைத்த வைரவன் “விஜய், நான் மாமா பேசுறேன். வினு எழுந்து உட்கார்ந்து எதையோ வெறிச்சுப் பார்த்துட்டே இருக்கா? கேட்டா ஒண்ணுமே சொல்லமாட்டேன்றா. உன்னால வரமுடியுமா? உனக்கு முக்கியமான வேலை இருந்தா உமாக்கு ஃபோன் பண்ணி அடுத்த பிளைட்ல வரச்சொல்றேன். எனக்கு ரொம்பவே பயமா இருக்கு” என்றார் பதட்டமாக.

“இல்ல மாமா. உமாவைத் தொந்தரவு செய்யவேண்டாம். நானே வரேன். இன்னும் இரண்டு மணி நேரத்தில் வரப்பார்க்கிறேன்.” என்ற விஜய் தாயை மட்டும் எழுப்பி விஷயத்தைக் கூறிவிட்டு கோயம்புத்தூர் விரைந்தான்!

*************************************************************

பாகம்-3

அதிகாலை மூன்று மூன்றரை மணியளவில் கோயம்புத்தூரை அடைந்த விஜய் ஆனந்த், வெளிக் கேட்டைத் திறக்கும் முன்னரே வீட்டின் கதவைத் திறந்து கொண்டு வைரவன் வெளியே வந்துவிட்டார்.

அவரது பதற்றத்தின் அளவு அவரது கலங்கிய கண்களில் தெரிய “என்னாச்சு மாமா? இவ்வளவு பதட்டப்படாதீங்க. உங்க உடம்புக்கு நல்லதில்ல” என்று ஆதரவாக அவரது கைகளைப் பிடித்து

தைரியம் அளித்தவாறே உள்ளே நடந்தவனின் தோளில் சாய்ந்து கொண்டு சிறு பிள்ளை போல் மறுகினார் வைரவன்.

"பேசவே மாட்டேங்கறாளே விஜய்" என அவரது வேதனையை அவன் மேல் ஏற்றி வைத்ததோடு இல்லாமல் உள்ளுக்குள் உடைந்து கொண்டிருந்தவனை மேலும் கலவரப்படுத்தினார்.

வைரவனோடு ஏற வேண்டியிருந்ததால் மெதுவாக படியேறிய விஜய்ஆனந்த் தன்னால் மட்டும் முடிந்திருந்தால் பறந்தேனும் வினுவை அடைந்திருப்பான். மாடியை அடைந்ததும் அங்கிருந்த ஊஞ்சலில் வினயாவைத் தேடிய விஜயின் கண்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தி, மென்மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் பொருட்டு ஹாலின் ஒரு மூலையில் முடங்கி இருந்தாள் வினயா.

"வினுமா" என்ற அழைப்புடன் நெருங்கியவனை "விஜி" என்ற கூவலுடன் ஒரே தாவலில் அணைத்துக் கொண்டவள் அவன் மேல் சரிந்து கதறத் தொடங்கினாள்.

"என்னம்மா, என்னடா" என்ற கேள்விகளோ "வினு ப்ளீஸ்டா அழக்கூடாது", "வினு இங்க பாரு, விஜி பாரு", "என் கண்ணம்மா இல்ல, குட்டு ப்ளீஸ்டா" என்ற விதவிதமான தேற்றலோ அவளது கதறலை நிறுத்தவே இல்லை.

அம்பு பட்ட மானாய் அவளது தவிப்பும், வற்றாத நதி போல் பொழிந்த கண்ணீரும் நிற்கப் போவதில்லை என்று ஒரு மணிநேரம் தாண்டிய பின்னரே உணர்ந்த விஜயும் வைரவனும் கஷ்டப்பட்டு ஒரு தூக்க மாத்திரை ஒன்றை புகட்டி, வலுக்கட்டாயமாக அவளை உறக்கத்தில் ஆழ்த்தினர்

விஜயின் மடியிலேயே படுத்து உறங்கியவளின் தலையை வருடிக் கொடுத்த வைரவன் "அவளை உள்ளே படுக்க வச்சுட்டு நீயும் கொஞ்ச நேரம் தூங்கு விஜய்" என்றார் கண்ணீர் வழிய

"அவ தான் சின்னக் குழந்தை மாதிரி புரியாம அழறான்னா நீங்களும் என்ன மாமா?" என்று அவரைத் தேற்றியவன் வினுவைக் கைகளில் ஏந்திக் கொண்டு உள்ளே சென்றான்.

பத்து நிமிடத்தில் வெளியே வந்தவன் விடியலை வெறித்துக் கொண்டு வைரவன் நிற்கவும் "திடீர்னு என்னாச்சு மாமா? நான் காலையில கிளம்பும்போது கூட நல்லாத் தானே இருந்தா" என்றான் கவலையுடன்.

"தெரியல விஜய், நைட் டிபன் சாப்பிட்டு ரூம்க்குப் படுக்க போனவ தான். ஒரு அரை நேரம் கழிச்சு "அப்பா"ன்னு கதறிட்டு வந்தவ அந்த வார்த்தைக்கு அப்புறம் பேசினது நீ வந்தப்ப தான்" என்றார் வைரவன் அவனுக்கிருந்த கவலையில் ஒரு சதவீதம் கூட குறையாமல்.

"ஹோ" என்ற ஒற்றை வார்த்தையில் அவர் கூறியதை உள்வாங்கியவனுக்கு வினு அப்படி எதைக் கண்டு அரண்டு போய் இருக்கிறாள் என்று தெள்ளத்தெளிவாகப் புரிந்தது. அதை கண்களால் பார்த்து உறுதி செய்து கொண்டு, தன்னைத் தானே திட்டிக் கொள்ளலாம் என்று முடிவு செய்தவனாய் தனது அறை நோக்கிச் சென்றான்.

அன்று அவனுக்குத் தன்னைத் தானே திட்டும் யோகம் இருப்பதை உறுதி செய்வதுபோல தரையில் சிதறிக் கிடந்தது பவித்ராவின் புகைப்படம்!!

சென்னை, மந்தவெளி ஏரியாவில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் காலை நேரப் பரபரப்பில் மிதந்து கொண்டிருந்தாள் உமா.

கணவன் தனசேகரனுக்குப் பிடித்த உணவான பூரி மற்றும் உருளைக்கிழங்கை தயார் செய்து கொண்டிருந்தவளின் மனம் சற்று படபடப்புடனே இருந்தது. இன்றைக்கு ஏதோ விபரீதமாக நடக்கப் போகிறது என்ற அபாயமணி மனதின் மூளையின் அடித்துக் கொண்டே இருந்தது.

ஆனால் இன்னும் நடக்கவே இல்லாத ஒன்றிற்கு வருத்தப்படுவதற்கு பதிலாக இப்போதைக்கு இருக்கும் வேலையை ஒழுங்காக செய்யலாம் என்று எண்ணியவள் பூரி மாவை ஒழுங்காக பிசைவது தான் அந்த நொடியின் முக்கிய வேலை போல் அதில் மூழ்கினாள்.

அதன் பின்னர் மதிய உணவைத் தயாரிப்பது, அதை வேலைக்குச் செல்லும் கணவனுக்குக் கட்டிக் வைப்பது என்று நேரம் கழிந்தது.

தனா குளித்து, உடைமாற்றி உணவு மேசைக்கு வர எப்படியும் அரை மணி நேரமாகும் என்று கணக்கிட்டவள், பூரியை இப்போதே போடலாமா? இல்ல சாப்பிடும் போது சூடாக போட்டுக் கொள்ளலாமா? என்ற எண்ணியவாறே, பூரி மாவை உருண்டைகளாக உருட்டிக் கொண்டிருக்க, தன்னியல்பாய் வினயாவின் நியாபகம் நெஞ்சை நிறைத்தது.

அவளுக்கும் பூரி என்றால் மிகவும் பிடித்தம். ஆனால் பிடித்த அந்த உணவையே அவள் விரும்பிச் சாப்பிட்டாள் என்றால் இல்லை என்று தான் சொல்லவேண்டும் என்று அவளைச் சுற்றி சுற்றியே வந்த எண்ணங்களின் முடிவில் அவளிடம் பேசவேண்டும் என்ற ஆசை வந்து நின்றது.

"ஹ்ம்ம்... இப்போ காலேஜ் கிளம்பி இருப்பாளே... சாயங்காலம் கிளினிக் கிளம்பிறதுக்கு முன்னாடி அவகிட்ட பேசணும்" என்ற எண்ணத்தின் முடிவில் கூட வினயாவின் முகம் கண்ணைவிட்டு மறையவில்லை உமாவிற்கு. அவளது இன்றைய வாழ்வின் ஆரம்பமே வினயா அல்லவா!!

அந்த மூன்று படுக்கையறை கொண்ட வீட்டில் தனக்கென்று இருந்த அறையினுள் நுழைந்து காலை நேர வேலையால் உடம்பில் ஒட்டிக் கொண்டிருந்த வியர்வையை குளித்து அகற்றிய கையோடு, அன்றைக்கு அணிய வேண்டிய உடையைத் தேர்வு செய்யும் பொருட்டு துணி அலமாரியை திறந்தவளின் கண்கள் தனாவிற்குப் பிடித்த கத்திரிப்பூ வண்ணத்திலிருந்த சேலையைக் கையில் எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

இன்றாவது கணவன் தன்னிடம் இயல்பாக பேசுவானா? பேசவேண்டாம் கண்கொண்டு தன்னைப் பார்த்தால் கூட போதுமே... அதையேனும் செய்வானா? என்று மனம் ஏங்கியது.

அந்த ஏக்கம் இரு பெரிய நீர் மணிகளை கன்னங்களில் உருட்டிவிட, ஒரு முறை கூட அனுபவிக்காமல் இருந்திருந்தால் கூட பெரிதாக பாதிப்பென்று ஒன்று இருந்திருக்காதோ? அவனது பார்வை, அன்பு, காதல், நேசம் எல்லாவற்றையும் ஒரு காலத்தில் தனதாய் அனுபவித்தவள் என்பதால் தான் இந்த ஏக்கம் வந்ததோ? என்று மனம் நொந்த மறு நொடி, அவளது அந்த செயல் அவளுக்கே நியாயமற்றதாகபட்டத்தின் காரணத்தால் கண்ணைத் துடைத்துக் கொண்டு சேலையை அணிந்து வெளியே வந்தாள்.

அவள் வெளியே வந்த சமயம் உமாவின் கணவன் தனசேகரன் சோபாவில் அமர்ந்து ஷூ அணிந்து கொண்டிருந்தான். அந்த வீட்டில் ஷூ அணிந்து கொண்டு பூஜையறைக்குச் செல்லக் கூடாது என்பது போல உணவு மேசைக்கோ, சமையலறைக்கோ செல்லக் கூடாது என்பது ஏட்டில் எழுதப்படாத சட்டம் என்பதால் அவன் அன்றைய காலை உணவைத் தவிர்க்கிறானோ என்ற எண்ணம் வலுப்பெற "தனா, டிபன் ரெடியா இருக்கு. சாப்பிட வாங்க" என்று கடமை மனைவியாய் அழைப்பு விடுத்தாள்.

"வேண்டாம்", "எனக்குப் பசியில்லை", "இன்னைக்கு நான் ஆபீஸ்ல சாப்பிட்டுக்கிறேன்" என்று ஏதாவது ஒன்றை தனா சொல்லியிருந்தால் கூட உமா மனம் குளிர்ந்திருப்பாள். அவனோ அங்கு அவள் ஒரு உயிருள்ள ஜீவனாய் நின்றிருக்கிறாள் என்பதைக் கூட மதிக்கவில்லை என்ற போது அவள் பேசியதை காதிலேயே போட்டுக் கொள்ளாதவன் போல தன் லேப்டாப் பாக்கில் எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

உமாவிற்கும் அவன் அழைத்தவுடன் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையில்லை என்றாலும் சற்று நிமிர்ந்தேனும் தன்னைப் பார்ப்பான் என்று எண்ணியவளின் நினைப்பில் இன்றைக்கும் மண் விழுந்தது. பயின்றிருந்த தியானத்தின் உதவியோடு சுரந்த கண்ணீரையும், துடித்த உதடுகளையும் மட்டுமில்லாமல் அரற்றிய மனதையும் அடக்கியவள் "சாப்பிட வாங்க தனா" என்றாள் மீண்டும் ஒருமுறை.

அப்போதும் அவனிடமிருந்து எந்த ஒரு பதிலும் வராமல் போகவே "வேண்டாம்ன்னு ஆவது வாயைத் திறந்து சொல்லுங்க " என்று அவளையும் மீறி குரல் மன்றாடியது.

ஒரு காலத்தில் அவள் முகம் வாடினாலே உள்ளம் பதறியவன் இப்போது அவளைத் திரும்பிக் கூட பாராமல் வாசல் நோக்கி விரையவும் அவனிடம் ஓடியவள் அவனது வழியை மறித்துக் கொண்டு நின்றதுமில்லாமல் "ஏன் தனா? ஏன் தனா இப்படி செய்றீங்க? என்னை உங்க மனைவியா ஏத்துக்க வேண்டாம் ஒரு சக மனுஷியா மதிக்கக் கூடாதா?" என்று அவனது சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

"என்னை ஏன் தனா இப்படி கொல்லாம கொல்றீங்க? என்னை உயிர் போற வரை அடிச்சாலாவது உங்க கோபம் கொஞ்சமாவது குறையும்ன்னா அதையாவது செய்ங்க தனா, இப்படி பேசாம இருந்து

என்னை அணு அணுவா கொல்றதை விட அது எவ்வளவோ மேல்" என்று சட்டையைப் பிடித்தக் கையோடு அவன் மேலே விழுந்து அவள் அழவும், நிதானமாக அவளைத் தன்னிடமிருந்து பிரித்த தனசேகரன், சட்டையை சரி செய்து கொண்டு வெளியேறினான்.

தன் கதறல் கூட அவனை அசைக்காமல் போனதில் இத்தனை ஆண்டுகளாக தான் கொண்டிருந்த நம்பிக்கை சற்றே ஆட்டம் கண்டது போல் உணர்ந்தாள் உமா. எப்போதும் நடக்கும் விஷயம் தான் என்றாலும் இன்றைக்கு விலகல் சற்றே தூக்கலாக இருந்ததோ என்ற எண்ணம் எழுந்தது. இன்று அவர்கள் மட்டும் தானே வீட்டில் இருக்கிறார்கள்? அவனை தட்டிக் கேட்க ஆளில்லாமல் ஆட்டம் ஓவராக போய் விலகல் தூக்கலாக போய்விட்டதோ? என்று தோன்றி, அது தான் காரணம் என்ற முடிவுக்கு உமாவை வரவைத்தது.

வீட்டினுள் இருந்த உமாவின் மனநிலைக்கு சமமான மனநிலையுடனே இருந்தான் வீட்டை விட்டு வெளியேறிய தனசேகரன். பைக்கில் தன் பயணத்தின் அவன் தொடர்ந்த போதும் "அவலை நினைத்து உரலை இடித்த கதையாக யாரோ செய்த தப்பிற்காக உமாவை வேதனைப் படுத்துக்கிறோமோ?" என்ற உறுத்தல் தொடர்ந்து அவன் நெஞ்சை அரித்துக் கொண்டே இருந்தது.

வீட்டிலோ தனாவின் அலட்சியம் தன்னை மிகவும் பாதித்தாலும் எல்லா நாளையும் போல இன்றும் அதை ஒதுக்கியவள் காலை உணவையும் அதனுடனே ஒதுக்கிவிட்டு தான் வேலை செய்யும் "சீதாபதி மருத்துவமனை"யை அடைந்தாள். ஆறு மாதங்களுக்கு முன்னர் அந்த மருத்துவமனையின் தலைமை மகப்பேறு மருத்துவரின் கீழ் துணை மருத்துவராக சேர்ந்து தன் மருத்துவ சேவையை இனிதே செய்து கொண்டிருக்கும் இளம் மகப்பேறு மருத்துவர் தான் உமாதேவி தனசேகரன்!

தாயாகப் போகும் பெண்களும், தாயாகத் துடிக்கும் பெண்களுமாய் அங்கே குழுமி இருக்க தலைமை மருத்துவரை சந்திக்கும் முன்னர் முதற்கட்ட பரிசோதனைகளை செய்யும் பொறுப்பிலிருந்த உமாவிற்கு நேரம் இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்தது.

அவளின் வேலை நேரத்தின் ஊடே வந்த பத்துக்கும் மேற்பட்ட கைப்பேசி அழைப்புகளை எடுக்க முடியாமல் போனதின் விளைவாக காலையில் அடித்த அபாய மணி "நங் நங்" என்று பலமாக அடிக்க ஆரம்பித்தது.

சரியாக ஒரு மணிக்கு வெளிநோயாளிகள் அனைவரும் சென்று விட, அன்றைய தினத்தின் ஆரம்பத்தில் அடித்த அபாய மணியை அடக்க பரபரப்புடன் கைப்பேசியை பையிலிருந்து எடுத்தவள் அழைப்பு விடுத்திருந்த விஜயின் எண்ணிற்கு அழைத்தாள்.

முதல் ரிங்கேலேயே அழைப்பை உயிர் பெற செய்த விஜய் ஆனந்த் "வேலையா இருக்கியா உமா? சாரிம்மா" என்றான் முதல் வார்த்தையாக.

"இல்ல இல்ல. இப்ப தான் முடிஞ்சது. என்ன விஷயம் விஜய்? வினுக்கு என்ன?" என்று உடனடியாக விஷயத்திற்கு வந்தாள்.

அவளது நேரடியான கேள்விக்கு சுற்றி வளைத்துக் கூட பதில் சொல்ல முடியாமல் தவித்த விஜய் "அது… அது வந்து… பவித்ராவோட ஃபோட்டோவை வினு பார்த்துட்டா… அதனால" என்ற வாக்கியத்தில் பவித்ராவிற்கு வந்த வார்த்தைகள் எதையும் உமா காதிலேயே வாங்கவில்லை.

"ஹய்யோ என்ன விஜய்? எத்தனை தடவை… ஹய்யோ எத்தனை தடவை உங்ககிட்ட படுச்சு படுச்சு சொன்னேன்" என்று அவளது நிதானத்தையும் மீறி குரல் உயர்ந்து, உடனே தாழ்ந்தும் போய் உடைப்பில் முடிந்தது.

**************************************************

பாகம் 4

முப்பது நாட்களுக்குப் பின்னர்… (உமா-விஜய் தொலைப்பேசி பேச்சு வார்த்தை நடந்த நாளுக்கும் இன்றைக்கும் இடையில் என்ன நடந்தது என்பது பகுதி, பகுதியாக உங்களின் வாசிப்பிற்கு வைக்கப்படும்)

சேரன் விரைவு ரயிலில் சென்னைக்குப் பயணமானான் விஜய்ஆனந்த். சென்ற மாதத்தின் இரு வார இறுதிகளை சென்னையிலும், மற்ற இரண்டை குன்னூரிலும் கழித்தவன் இந்த முறை வார நாட்களிலேயே சென்னை செல்கிறான். இந்த வார நாள் பயணத்தின் தூண்டுகோல் சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா டென்டல் காலேஜ் வளாகத்தில் நடக்கும் இந்திய அளவிலான பல் மருத்துவர்கள் மாநாடு. அது வெறும் தூண்டுகோல் மட்டும் தான்.

அங்கு சென்றால் வேண்டாத பல பழைய நினைவுகள் அவனை நிலைகுலைய செய்யும் தான் என்றாலும் வினுவைப் பார்ப்பது அவனுக்கு மிக அத்தியாவசியமாக பட்டதால் இந்தப் பயணம் இப்போது நிகழ்கிறது.

அந்த மாதத்தின் முதல் இரு வாரஇறுதிகளை வினயாவை காணும் ஆவலில் சென்னைக்குப் பயணமானவன், உடன் வேலை பார்க்கும் நண்பர் ஒருவரை குன்னூருக்கு அனுப்பிவைத்தான். மூன்றாவது வாரம் அவனது வருகையை தடுத்த பெருமை உமாவிற்குப் போய் சேர்ந்தது என்றால் அதற்கு அடுத்த வாரமும் தனக்குக் கிடைத்த பெருமையை உரிய முறையில் உமாவே தக்க வைத்துக் கொண்டாள்.

விஜயின் சமாதானமோ, வாதாடலோ அவளை இம்மியும் அசைக்கவில்லை என்ற போதிலும் "என்னால் வினுவைப் பார்க்காம இருக்கமுடியல உமா. ஒரு நாள் மட்டும் வந்துட்டுப் போயடுரேனே?" என்று வெட்கத்தை விட்டு விஜய் கெஞ்சிய போது கூட தன் பிடியிலிருந்து அவள் இறங்கவில்லை.

"இரண்டு வாரம் கூட பார்க்காம இருக்கமுடியதாக்கும்? ரொம்பத் தான். நான் சொல்ற வரைக்கும் நீ இங்க வரக் கூடாது. மீறி வந்தே மகனே என் கையால சாப்பாடு போட்டுத் தான் உன்னை அனுப்புவேன்" என்று செல்லமாக மிரட்டி அவன் வரவிற்குத் தடைப் போட்டவள்,

இரண்டு நாட்கள் முன்னதாக விஜய் ஃபோன் செய்து மாநாட்டிற்கு வருவதாக கூறிய போது ஒரு நமட்டுச் சிரிப்பை உதிர்த்த கையோடு "நானே எல்லார்கிட்டயும் சொல்லிக்கிறேன். நீ எப்ப வர? எத்தனை நாள் இருப்ப? குன்னூர் போக ஆள் ஏற்பாடு பண்ணிட்டியா?" என்று பேச்சையும் மாற்றிவிட்டாள்.

அதிகாலை ஐந்தரை மணிக்குச் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இறங்கியவன் ஆட்டோ பிடித்து மந்தவெளிக்குச் சென்றான்.

தனசேகரனின் வீடு அமைந்திருக்கும் வளாகத்தினுள் நுழைந்த விஜய் ஆட்டோவை விட்டு இறங்கும் போதே கண்கள் மூன்றாவது மாடி பால்கனிக்குச் சென்றது. கைகள் தாமாக பாக்கெட்டிலிருந்த பணத்தை எடுத்துக் கொடுக்க, கண்கள் அங்கேயே நிலைத்திருந்தது. அவன் கண்ணுக்கு விருந்து மேலேறி வந்தால் தான் கிடைக்கும் என்பது போல பால்கனியில் நேற்று துவைத்துப் போட்ட துணி கூட காயவில்லை.

தான் வருகிறேன் என்று தெரிந்த இருவாரங்களின் சனிக்கிழமையிலும் வினுவின் தரிசனம் பெற்று, அவளைக் கண்களால் வருடி அவள் நலத்தை அறிந்து, மௌனத்தை மொழியாக்கி அவளிடம் பேசிய பின்னர், இத்தனை நாட்கள் பார்க்காத ஏக்கத்தை இரண்டு இரண்டு படிகளாக தாவி ஏறி வீட்டை அடையும் போது வினு மீண்டும் அவளது போய் இருப்பாள்.

கூட்டிற்குள் சென்றபோதிலும் அந்த அன்னப்பறவைத் தன்னிடம் சரணடையும் என்ற நம்பிக்கையை விஜய் வளர்த்தான் என்றால் அதற்கு காரணம் வினுவின் கண்கள் பேசிய மௌனமொழி தான்!

ஐந்து நாட்கள் பார்க்காமல் இருந்ததே யுகம் யுகமாகத் தெரிய, வீட்டின் ஒவ்வொரு இடத்திலும் வினுவை நிறுத்திவைத்து பார்ப்பதும், உட்கொண்ட ஒவ்வொரு பருக்கையிலும் வினுவின் முகம் வடிவாக ஒளிர, உணவிற்கு வலிக்காமல் உணவை உட்கொள்ளும் வினுவை அழகை நெஞ்சத்தில் நிரப்புவதுமாக இருந்த விஜய்க்கு இரண்டு வார பிரிவு உயிரை உருக்கி அதற்குள் அவனது உயிரைத் தேடியது.

பத்து நாள் பிரிவைக் கூட தாங்கமுடியாத நிலையிலா தான் இருக்கிறோம்? அவளுக்கும் இப்படி இருக்குமா? கண்டிப்பாக இருக்கும். சோகம் என்றாலும், சிரிப்பு என்றாலும் அதை வெள்ளந்தியாக முகத்தில் காட்டிவிடும் வினு, இந்தப் பிரிவையும் அவள் முகத்தில் ஏக்கமாய் முன்னரே காட்டியவள் இப்போதும் கண்களின் வழியாக தனக்கு உணர்த்துவாள், வாய் விட்டுச் சொல்லத் தான் முடியவில்லை.

அவள் சொல்லாவிட்டாலும் அவளது அன்பைத் தான் புரிந்து கொண்டோம் என்பதை அந்த குழந்தை உள்ள குமரிக்குப் புரிய வைத்துவிட வேண்டும் என்று குழப்பங்கள் தெளிந்த மனநிலையில், நெஞ்சின் சந்தோசம் முகத்தில் பிரதிப்பலிக்க மாடியேறி சென்றான் விஜய்.

அழைப்பு மணியை அடித்து விட்டு கதவு திறப்பதற்காக காத்திருந்த விஜயின் நெஞ்சம் காத்திருத்தல் முடியும் சந்தோஷத்தில் ஒரு இருபது வயது இளைஞனின் பரபரப்போடு நின்றிருந்தான்.

அவனது பரபரப்பை இனிதே முடித்து வைக்கும் பொருட்டு கதவு திறந்தது. அதன் பின்னே நின்றிருந்த தனசேகரன் "வா விஜய்" என்று முகம் வசிகிக்க வரவேற்றபோது அந்த நாளின் முதல் இன்ப அதிர்ச்சியை விஜய் சந்தித்தான்.

இத்தனை தினத்தில் தன்னிடம் தனா முகம் கொடுத்து பேசியதே இல்ல எனும்போது "வா விஜய்" என்று வாயார அழைத்தது மட்டுமில்லாமல் அதை மனதால் உணர்ந்தும் வரவேற்றான் என்று எண்ணிய தருணம் என்ன மாயம் நிகழ்ந்திருக்கும் என்ற யோசனையின் விளைவால் ஆச்சிரியம் மாறாத முகத்தோடு விஜய் நின்றிருக்க,

அவனுக்கு எதனால் ஆச்சிரியம் என்று புரிந்து கொண்டு தனசேகரன் "என்ன விஜய்? உள்ள வா. நான் தான்... நானே தான் உன்னை வரவேற்கிறேன்" என்று என்றுமில்லா புன்னகையுடன் அவன் தோளில் கைப்போட்டு அழைத்துச் சென்றான்.

சமையலறையிலிருந்து வெளிப்பட்ட உமாவிற்குமே இது அதிசயமாய் இருந்தபோதும், "வா விஜய். ஜெர்னி எப்படி இருந்தது? முகம் கழுவிட்டு வா. காபி போட்டுத் தரேன்" என்று வீட்டரசியாய் உபசரித்தாள்.

"ஹ்ம்ம் தேங்க்ஸ் உமா" என்றவனின் கண்கள் வீட்டைச் சுற்றி சுற்றி வரவும் "உங்க தேவதை அவங்க அப்பா கூட யோகா கிளாஸ் போய் இருக்காங்க சார். முதல முகத்தைக் கழுவிட்டு வா மேன்" என்று தனா உல்லாசமாக கூறவும் ஏற்கனவே அதிர்ச்சியில் இருந்த விஜய் அங்கேயே மயக்கம் போட்டு விழுந்திருப்பான். ஆனால் யோகா செய்துவிட்டு வர தேவதையை காண வேண்டி மயக்கத்தைக் கட்டுப்படுத்தி காத்திருத்தலை நீட்டித்தான்.

"நான் ஜாக்கிங் போயிட்டு வரேன். வந்ததும் பேசலாம்" என்று அவன் மயக்கத்திலிருந்து காதலுக்கு இடம் மாறிய தருணத்தில் சொல்லிவிட்டு தனா செல்லவும், சமையலறைக்கு விரைந்தான் விஜய்.

"ஹே என்ன உமா? தனாக்கு என்ன ஆச்சு? ரெண்டு வாரம் முன்னாடிக் கூட நல்லாத் தானே இருந்தான்" என்று நெஞ்சின் படபடப்பை குரலின் பரபரப்பை மாற்றி அவன் கேட்கவும்

"ரொம்ப கொழுப்புடா உனக்கு. உன்னைப் போய் எல்லாரும் பொறுமை, வாய் பேசத் தெரியாதுன்னு சொல்றாங்களே, ஊமை குசும்பன்டா நீ. என் புருஷனைக் குறை சொல்ற??" என்று குரல் உயர்த்தி அவனை உமா அடக்கியபோது அதில் கோபத்தை விட துள்ளலும் நிறைவுமே நிறைந்திருந்தது.

"நிஜமாவா உமா? உன்கிட்ட நல்லாப் பேசுறானா? எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்குத் தெரியுமா?.......ஹே இல்லையா ஏன்? என்கிட்ட நல்லாத் தானே பேசினான்?....... ஹே என்னடா" என்று குதூகலத்தில் ஆரம்பித்து, உமாவின் தோள் குலுக்கலிலும், உதட்டுப் பிதுக்கலிலும் கவலையுற்று, தன்னை மீறி அவள் கண்களில் கண்ணீர் சுரக்கவே முடிக்கும் போது பதற்றமுற்றான் விஜய் ஆனந்த்.

"இன்னும் என் மேல இருக்க வெறுப்பு போகல போல விஜய். எப்பத் தான் போகுமோ தெரியல? ப்ச்.... இப்படியெல்லாம் இருக்கும் தெரிஞ்சு தானே கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அப்புறம் வருத்தப்பட்டு, அழுது என்ன பிரயோஜனம் சொல்லு? உன்மேல இருந்த கோபம், ஒதுக்கம் எல்லாம் குறைஞ்சு உன்கிட்ட சகஜமா பேசுற தனாவை பார்க்க எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்குத் தெரியுமா? போற்றி பாதுக்காக வேண்டிய ஒரு உறவை இப்படி அவமானப்படுத்துறாரேன்னு நான் ரொம்ப கவலைப்பட்டேன். இப்போ மனசு நிறைவா இருக்கு" என்று தன் மனதில் உள்ளதை தங்கு தடையின்றி தன் நண்பனிடம் கொட்டினாள் உமா.

அவளது வேதனையைப் போக்கும் வழி தெரியாமல் அவளைத் தோளோடு அணைத்து, "உன்னோட பொறுமைக்கும், பாசத்துக்கும், காதலுக்கும் கண்டிப்பா எதிரொலி இருக்கும் உமா. அதை வெட்கத்தை விட்டு வெளிய சொல்லத் தான் தனாவால முடியல" என்று தோழமை அணைப்பை இறுக்கி, ஆறுதல் அளித்தான் விஜய்.

"ஹ்ம்ம் சொல்லும் போது சொல்லட்டும். அதுக்காக கவலைப் பட்டு இருக்க சந்தோஷமான சூழலையும் கெடுக்கவேண்டாம்" என்று தன் பிரச்சனையை ஒரு பொருட்டாய் கூட மதிக்காமல் நண்பனுக்காக சந்தோஷப்பட்ட அந்த நல்ல உள்ளத்திற்கு வாழ்வு இனிக்க வேண்டுமே என்று விஜய் இறைவனை வேண்டினான்.

"என்மேல இருந்த கோபம் மட்டும் எப்படி போச்சு?" என்று தன் நீண்ட நேர சந்தேகத்தை மீண்டும் விஜய் முன்வைக்கவும் "முதல போய் முகம் கழுவிட்டு வா. சொல்றேன்" என்று அவனை சமையலறையை விட்டுக் கிளப்பினாள் உமா.

"ஒன்பது மணிக்கு நான் SRMCல இருக்கணும் உமா. சோ ஒரேடியா குளிச்சுட்டு வந்துடுறேன்" என்றவனை நிறுத்தி,

"வினுகிட்ட SRMC போறேன்னு சொல்லாதே விஜய்" என்றாள் உமா சிறு கலக்கத்துடன். அவள் கையைப் பிடித்து அழுத்திக் கொடுத்தவன் "எனக்குத் தெரியாதா உமா? நான் பார்த்துக்கிறேன். ஒரு ஃபிரிண்ட்டை பார்க்கப் போறேன்னு சொல்றேன்" என்று விட்டு வினுவின் அறைக்குள் நுழையப் போனவன் "இங்க குளிச்சு ரெடி ஆகிட்டுமா உமா?" என்று அனுமதி கேட்டான்.

"என்ன கேள்வி இது? இந்த வீட்டில எனக்கு எவ்வளவு உரிமை இருக்கோ அதுக்கு சமமா, ஏன் ஜாஸ்தியாவே உனக்கு இருக்கு. என்னைப் போய் எல்லாத்தையும் கேட்டுக்கிட்டு?" என்ற எதிர் கேள்வியை முன்வைத்தாள் உமா.

"ஒரு கேள்வி கேட்டா அதுக்குப் பதில் சொல்லு. அதை சொல்லாம எதிர் கேள்வி கேட்கிற? இதுக்குப் பயந்து தான் தனா உன்கிட்ட பேசுறதில்லன்னு நினைக்கிறன்" என்று மெதுவான குரலில் ஏற்ற இரக்கமில்லாமல், அடக்கிய சிரிப்புடன் விஜய் தன் கேலியை முன்வைக்கவும், இடுப்பில் கை வைத்து அவனை முறைத்தாள் உமா. ஐந்து விநாடி நீடித்த இந்த நட்பார்ந்த முறைப்பு சட்டென கலந்த இருவரின் சிரிப்புடன் முடிந்தது!

குளித்து, கருப்பு நிற பான்ட்டுடன் வான் நீலத்தில் வெள்ளை நிற கட்டங்கள் நிறைந்த முழுக்கை சட்டை அணிந்து வெளியே வந்தவனைக் கையில் காபியுடன் எதிர்கொண்டாள் உமா.

"ஹே, எனக்குத் தலையே வெடிச்சிடும் போலிருக்கு. சொல்லு உமா, இந்த இரண்டு வாரத்தில என்ன நடந்தது?" என்று அவளைத் துருவினான் விஜய்.

"என்ன நடந்துச்சா?" என்று அவள் யோசிக்கையிலேயே, ஏதோ விஷமம் இருப்பதை உணர்ந்து, "ஆடு நடந்துச்சு, மாடு நடந்துச்சு, ஏன் நான் கூட தான் நடந்தேன், நீயும் தான் நடந்திருப்பே? அப்படின்னு கடிச்ச இன்னைக்கு நைட் என் கையால தான் உனக்கு சாப்பாடு" என்று நண்பர்களுடன் சேர்ந்தால் இயல்பாகவே வரும் துள்ளல் குரலில் தொனிக்க உமாவை எச்சரித்தான் விஜய்.

அதற்கும் ஒரு சிரிப்பலை எழுந்து அடங்கியதும், "நீ இந்த கடி ஜோக் சொல்லலைனாலும் நான் உன்னை இன்னைக்கு நைட் சமைக்கத் தான் சொல்லி இருப்பேன்" என்று புதிர் போட்டவள்,

"தனா செய்றது தப்பு தான், அதுக்காக அவனுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? அவனுக்கே தண்டனை என்றாலும் என் வினு என்ன பாவம் பண்ணா? கொஞ்ச நாள் அட்லீஸ்ட் நல்ல சாப்பாடு சாப்பிடட்டுமே?" என்று சிரிப்பை வெளிக்காட்டாமல் அவன் வருத்தப்படவும்

நண்பனின் கேலியில் வியப்புற்று, "ஹே விஜய், உன்னை ரொம்ப நாளா ஒன்னு கேட்கணும்ன்னு நினைச்சேன்? உன் வேலை இடத்தில, ஊர்-ல எல்லாம் உன்னைப் பத்தி விசாரிச்சா "விஜய்யா? ரொம்ப பொறுமை. அதிர்ந்து பேசவே மாட்டார். ஒரு வார்த்தை அவர் கிட்ட இருந்து வாங்க நாம பத்து வார்த்தை பேசணும்"ன்னு சொல்றாங்க, வெளி ஆளுங்க கிட்ட ரொம்ப பேசமாட்டியா விஜய்?" என்று தனது நெடுநாள் கேள்விக்கு இன்றைக்காவது பதில் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் அதை முன்வைத்தாள் உமா.

ஆனால் அவளது எதிர்பார்ப்பை பொய்யாக்கி, எப்போதும் போல ஒரு புன்னகையையே உதிர்த்தான் விஜய். அவள் தன் ஏமாற்றத்தை வெளிப்படையாக காட்டவும், "என்னோட அலைவரிசைல இருக்கவங்க கிட்ட நானும் நல்லா பேசுவேன் உமா" என்றான் அதே புன்னகையுடன்.

“ஓகே, ஓகே, எதுவா இருந்தாலும் இன்னைக்கு நீ தான் சமைக்கிற. அதுல எந்த மாற்றமுமில்ல” என்று அறிவித்தாள் உமா.

“என்னாச்சு உனக்கு? நிஜமாவா?” என்று அவன் புரியாமல் பார்க்கவும்,

“பின்னே, வினு அந்த புகழ் புகழ்றா உன் சமையலைப் பத்தி” என்று ஆரம்பித்தவள்

“”விஜி அன்னைக்கு எனக்கு உருளைக் கிழங்கு ஃப்ரை பண்ணிக் கொடுத்தாங்க, சூப்பர்ரா இருந்துச்சு. இதுல காரமே இல்ல” அப்படின்னு போன வாரம் நான் பண்ண உருளைக்கிழங்கு வறுவல்ல ஆரம்பிச்சு, “விஜிகிட்ட கேட்டு புதினா துவையல் பண்ணுங்க அண்ணி” என்று என்னை நச்சரிச்சு, பிரட் போட கூட எனக்குத் தெரியலன்னு முத்திரை குத்திட்டாங்க மேடம்” என்று உமா சொல்ல சொல்ல “நம்மளோட ஓட்டை சமையலையா இந்தப் புகழ் புகழ்ந்திருக்கா?” என்ற வியப்பு விஜய்க்கு மேலோங்கியது.

“சாப்பிட்டில மட்டுமில்ல, எல்லாத்திலையும் விஜி, விஜி, ஒரே விஜி புராணம் தான்” என்று அவள் கூறக் கூற தன் காதுகளையே விஜயால் நம்ப முடியவில்லை.

“மேடத்துக்கு ஒரு வாரம் கூட உன்னைப் பார்க்காம இருக்க முடியல, ஆனா பாரு அதை எங்ககிட்ட வெளிப்படையா காட்டவும் தயக்கம்” என்று அவள் கூற ஆரம்பித்த போது, அவள் சொல்லாமல் இவர்களுக்கு எப்படி விஷயம் தெரிந்தது என்று பரபரப்பாக இருந்தது விஜய்க்கு.

“அவளே வந்து சொன்னாளா உமா?” என்று முகம் பிரகாசிக்க அவன் கேட்கவும்

“ஹ்ம்ம், எங்க எல்லாருக்கும் அவ முகத்தில இருந்த எதிர்பார்ப்பு, ஏமாற்றம் எல்லாம் புரிஞ்சு தான் இருந்தது. ஆனா நாங்களா போய் கேட்டா திரும்ப பழைய பல்லவியை பாடி தன்னோட கூட்டுக்குள்ள போய்டுவா, அவளா சொல்ற வரைக்கும் ஒன்னும் பேசவேண்டாம்ன்னு நிர்மலாவும் சொன்னாங்க. சோ பேசாம இருந்தோம். மேடம் நாளே நாள்ல என்கிட்ட வந்து ஒட்டி ஒட்டி உட்கார்ந்துகிட்டு, “விஜி எப்ப வருவாங்க அண்ணி?” என்று பரிதாபமா கேட்டா பார்க்கணும், நீ இருந்திருந்தா அப்படியே சக்கரைப் பாகா உருகிப் போய் இருப்படா விஜய்” என்றாள் உமா சிரிப்புடன்

“ச்சு கிண்டல் பண்ணாதே உமா, நீ என்ன சொன்னே? அதுக்கு அவ என்ன சொன்னா? என்னோட மொபைல்க்கு அவளைக் கூப்பிட சொல்லி இருக்கலாம் இல்ல? என்னையும் அதையும் இதையும் சொல்லி பேசக் கூடாதுன்னு சொல்லிட்டே” என்று அவனது நிதானத்தையும் மீறி அவன் படபடக்கவும் மெல்லிய சிரிப்புடன் அமர்ந்திருந்தாள் உமா.

“ப்ச், என்ன சிரிப்பு? என்ன நடந்துச்சு சொல்லு உமா?” என்றவனை மேலும் சோதிக்க விரும்பாமல்

” நானும் அதுக்கு “எனக்குத் தெரியாதே வினுமா? நீ வேணும்ன்னா விஜய்க்கு ஃபோன் பண்ணி கேட்கிறியா?”ன்னு கேட்கத் தான் செஞ்சேன். டபக்குன்னு உள்ள போய்ட்டாங்க மேடம். அப்புறம் ரெண்டு நாள் யார்கிட்டயும் பேசாம இருந்தாங்க. அடுத்து தனாகிட்ட போய் “அண்ணா, நான் கோயம்புத்தூர் போகட்டுமா?” ன்னு கேள்வி” என்று அங்கு வந்தும் ஒரு தடை போட்டாள் உமா.

“நிஜமா உமா? ஹய்யோ என்னால நம்பவே முடியல” என்று வியப்பின் உச்சிக்கே சென்றான் விஜய்.

“ரொம்ப பறக்காதடா” என்று அவனை அடக்கிவிட்டு, “தனா ஏன்னு கேட்டதுக்கு காலேஜ் போகணும், கிளாஸ் மிஸ் ஆகிடும்ன்னு ஒரே மழுப்பல். இதெல்லாம் தெரிஞ்சு தானே அங்க இருந்து வந்தா?” என்று உமா அங்கலாய்க்கவும் விஜய் பறந்தான்.

“கடைசியா தனா ஒரு பெரிய குண்டை போட்டதும் தான் மேடம் அரண்டு, மிரண்டு போய் வெளிய வந்தாங்க” என்று அவன் எதிர்பார்ப்பைத் தூண்டிவிட்டவள்

“”உனக்கு விஜய் கூட இருக்க கஷ்டமா இருந்துச்சுன்னா, அங்க டிசி வாங்கிடலாம் வினு. சென்னைல இருக்க ஏதாவது ஒரு காலேஜ்ல அண்ணா சேர்த்து விடுறேன்ன்னு சொன்ன நிமிஷம் வினு முகத்தைப் பார்க்கணுமே” என்று உமா விவரிக்கவும் வினுவின் முகத்தை உடனே காண வேண்டும் போல தோன்றியது விஜய்க்கு.

ஏக்கமும், எதிர்பார்ப்பும் பன்மடங்காய் பெருக, உமாவின் விவரிப்பிற்காக அவன் அமர்ந்திருக்கவும் உமா எழுந்துவிட்டாள். எழுந்தவள் அவன் அருந்தி முடித்த காபி கப்பை எடுத்துக் கொண்டு சமையலறை நோக்கிச் செல்லவும்

"ஹே மிச்சத்தையும் சொல்லிட்டு போ உமா, வினு என்ன சொன்னா?" என்று அவன் அவள் பின்னோடு சென்ற தருணம் கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

*******************************************************

பாகம் 5

திறந்த கதவின் வழியே உள்ளே நுழைந்த வைரவனைப் பின்தொடர்ந்த வினயாவைக் கண்டதும் விஜயின் நடை சட்டென நின்று அவனது மூச்சையும் பல வினாடிகள் நிறுத்தி, அவனை விழிகளை விரிக்க வைத்தது.

இதே செயல்கள் அச்சுப் பிசகாமல் வினயாவும் செய்யவே கண்கள் கனிந்து, மனதில் தேக்கி வைத்திருந்த காதலை வார்த்தையின்றி கண்கள் வழியாக வழிய விட்டான் விஜய் ஆனந்த்.

காதல் மொழி பேசிய கண்களுக்கு விருந்தாகிய வினயா, நெடுநாட்களாக முடிந்தவரைத் தனக்குள்ளும், கொஞ்சமாய் வெளியேயும் வெளிக்காட்டியிருந்த ஏக்கத்தை விரிந்த கண்களாலும், சிவந்த கன்னங்களாலும், சட்டென மலர்ந்த உதடுகளாலும் அழகாகவே வெளியிட்டாள்.

சுழன்று கொண்டிருந்த உலகத்தினுள் இருக்கப் பிடிக்காமல், தங்களுக்கென ஒரு தனி உலகம் அமைத்து, அங்கே தங்கள் இருவரை மட்டுமே உயிர் உள்ள ஜீவன்களாய் படைத்து, மௌனத்தின் மூலமாக உறவைப் பலபடுத்தி, கண்களாலேயே காதல் காவியம் தீட்டிக் கொண்டிருந்த விஜய் மற்றும் வினயாவை "அந்த உலகத்திலே ரொம்ப நேரம் இருந்தா மூச்சு முட்டிடும். இறங்கி வாங்க மக்களா?" என்று உள்ளுக்குள் நினைத்தாலும் அதை வார்த்தையால் வெளியிடாமல் "வினுமா, வீட்டுக்கு வந்தவங்களை வாங்கன்னு சொல்லணும்ன்னு சொல்லி இருக்கேனா இல்லையா?" என்று வினயாவை அதட்டும் சாக்கில் விஜயை நினைவுக்கு இழுத்து வந்தாள் உமா.

அதே சமயம், வைரவனும் "வா விஜய், இப்படி இருக்க?" என்று அவனை வரவேற்று, நலம் விசாரித்தார்.

"நல்லா இருக்கேன் மாமா, நீங்க எப்படி இருக்கீங்க? யோகா கிளாஸ் எப்படிப் போச்சு?" என்று அவருடன் உறவாடிய விஜயை "வாங்க விஜய்.... விஜி" என இரு பெரும் வார்த்தைகளைக் கூறி வரவேற்க வினயாவிற்கு முழுதாக ஐந்து நிமிடங்கள் பிடித்தது.

ஹால் சோபாவில் அமர்ந்து வைரவனுடன் பேச ஆரம்பித்த விஜயை கண்களால் பின்தொடர்ந்த வினயா, சிறிது தயக்கத்திற்குப் பின்னர் அவன் அருகில் சென்று அமர்ந்தாள்.

ஊரில் அவனது பெற்றோர் பற்றிய விசாரணையைத் தொடர்ந்து "உடம்பு கச கசன்னு இருக்கு, நான் போய் குளிச்சுட்டு வந்துடுறேன்" என்று விட்டு வைரவன் எழவும், உமா கையில் பானத்துடன் வரவும் சரியாக இருந்தது.

விஜயை ஒட்டி ஒட்டி அமர்ந்திருந்தவளை கண்ணில் சிரிப்புடன் பார்த்துவிட்டு கண்ணாலேயே நண்பனைக் கேலிசெய்து, அவன் முகத்தில் குடிகொண்டிருந்த பெருமையைப் பார்த்து மெலிதாய் சிறிது, வார்த்தையற்ற அவனது செல்லக் கண்டிப்பைப் பெற்று கொண்டபின்னர் "வினு, பூஸ்ட் எடுத்துக்கோ" என்று அவளிடம் நீட்டியவள், "இன்னொரு காபி வேணுமாடா விஜய்? இல்லை பூஸ்ட் குடிக்கிறியா?" என்று அவனிடம் பவ்யமாக கேட்டவளை ஒரு விரல் காட்டி மிரட்டினான் விஜய் ஆனந்த்.

"தேங்க்ஸ் அண்ணி, நீங்க காபி குடுச்சுடீங்களா விஜி? விஜிக்கு பூஸ்ட் எல்லாம் பிடிக்காது. ப்ளாக் காபி தான் பிடிக்கும்" என்று வினுவின் அறிவிப்பில் உமாவின் புருவங்கள் உயர்ந்து தலை குளித்ததால் ஆடிக் கொண்டிருந்த கூந்தல் சுருள்களை தொட்டுவந்தன.

“அப்படிங்களா மேடம், கொடுத்துட்டா போச்சு. நீங்க போடுறீங்களா?” என்று உமா வினவியதும், “எனக்குப் போடத் தெரியாதே!” என்று பரிதாபமாய் பார்த்த வினயாவை விட்டுக் கண்ணை அகற்ற முடியவில்லை விஜயால்.

“எனக்கு வேண்டாம்டா” என்று அவளுக்கு சமாதனம் சொன்னவனைப் பார்த்து உமா சிரித்துக் கொண்டிருக்க, தன்னையே பார்த்தபடி வாயிலில் நின்றிருந்த தனசேகரன் பாவம் கவனிக்காமல் விட்டுவிட்டாள்.

வினயா, விஜயை ஒட்டி அமர்ந்திருந்த விதத்தைக் கண்டதில் மனதிலிருந்த ஒரு சதவீதம் சந்தேகமும் விம் போடாமலேயே காணாமல் போய் விட, நிம்மதியும் நிறைவும் மகிழ்வுமே நெஞ்சில் நிறைந்திருக்க அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தவன் உமாவின் சிரிப்பில் சற்று தடுமாறி போனான். ஆனால் அந்தத் தடுமாற்றம் தன் மனமற்றதைப் பிறருக்குக் காட்டும் கண்ணாடியாய் அமைந்துவிடக் கூடாதே என்று அதை தூக்கில் போட்டு இறுக மூடினான்.

உள்ளுணர்வு உறுத்த நிமிர்ந்து வாயிலைப் பார்த்த உமாவின் கண்களில் அவனது உணர்ச்சி துடைத்த முகமே பட்டு அவளை வாட வைத்தது. வாடிய முகம் மலர்ந்த இரு உள்ளங்களை வாடவைத்து விடுமோ என்று எண்ணத்தில் சட்டென முகத்தை சரி செய்துகொண்டாள் உமா.

காலை உணவைத் தயாரிக்கவென்று உமா சமையலறைக்குள் சென்றுவிட, தனாவும் சத்தமின்றி தன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

மௌனமாய் கழிந்த பத்து நிமிடங்களில் வினுவின் தலை விஜயின் தோளில் பாந்தமாய் சாய்ந்திருந்தது என்றால், விஜயின் கரங்கள் அவளைத் தோளோடு சேர்த்தணைத்திருக்க, கன்னங்களோ அவளது உச்சியில் பொருந்தி இருந்தது.

“வெளிய போறீங்களா விஜி?” என்று தன் கேள்வியை, இல்லை இல்லை ஏமாற்றத்தை கேள்வியாய் வெளியிட்டாள் வினயா.

“ஆமா கண்ணம்மா, ஒரு ஃபிரிண்ட்டை பார்க்கப் போறேண்டா” என்ற விஜயின் பதிலில் அவள் தன் ஏமாற்றத்தைக் கூட்டினாள் என்றால் அது தான் இல்லை.

மாறாக “நானும் வரட்டுமா?” என்று கேட்டு அவனைத் திணறடித்தாள்.

“ஹ்ம்ம், நான் முதல அவரைப் போய் பார்த்துட்டு வந்துடுறேன். அப்புறமா உன்னை வெளிய கூட்டிட்டுப் போகட்டுமா?” என்றதும் உடனே எழுந்துவிட்டாள் வினயா

எழுந்தவளின் கையைப் பிடித்து “டேய் என்னடா” என உருகியவனின் கைகளைத் தன் கையிலிருந்து தள்ளியவள் தன் அறைக்குள் சென்றாள். பின்னோடு சென்றவன் “சென்னை தண்ணி நிறைய மாயம் செஞ்சிருக்கு போலவே, வினுக்குக் கோபமெல்லாம் வருது” என்று வியந்தவாறே ஜன்னல் அருகில் நின்றிருந்த வினுவை நெருங்கி நின்றான்.

“என்ன கண்ணம்மா? கோபமா? நான் வெளிய போயிட்டு சீக்கிரமே வந்துடுறேன். ஈவினிங் பீச் போயிட்டு ஹோட்டல்ல சாப்பிட்டு வரலாம் ஓகே வினு?” என்று அவளைத் தாஜா செய்ய முயன்றான்.

அப்போதும் பதிலின்றி போகவே குனிந்திருந்த அவளது முகத்தை நிமிர்த்தியவன், அவளது கண்களின் பளபளப்பில் பதறிப் போய் “ச்சு என்னடா இப்ப எதுக்கு அழுகை? எல்லாத்துக்கும் அழக்கூடாது. உனக்குக் கோபமா இருந்தா “உங்களுக்கு என்னைவிட உங்க ஃபிரிண்ட் தான் முக்கியமா” அப்படின்னு சண்டை போடு. அதை விட்டுட்டு எதுக்கு எடுத்தாலும் இது என்ன அழுகை?” என்று லேசாக தன் கண்டிப்பை அவன் புகட்டவும் “எனக்குக் கோபமில்ல” என்றாள் வினு மெதுவாக.

பெருகி வழிந்த கண்ணீரை துடைத்தவாறே “பின்ன என்னடா?” என்று அவன் உருகிக் கரையவும் மௌனமாய் நின்றிருந்தாள் வினயா.

சற்று நேரம் சென்ற பின்னர் “நீங்க... நீங்க... நீங்க என்னை மிஸ் பண்ணவே இல்லையா?” என்று அந்தோப் பரிதாபமாய் கேட்டவளிடம் காணும் இடமெல்லாம் நீயே நிறைந்திருந்தாய் என் சஹியே! அதவும் பத்தாது என்று கனவிலும் வந்து என் தூக்கத்தைக் கொள்ளை கொண்டாய் என்று காதல் வசனம் பேசத் தோணாமல் “வினு என்னை மிஸ் பண்ணீங்களா?” என்று எதிர் கேள்வி கேட்டான் விஜய்ஆனந்த்.

பதிலின்றி, அவன் மார்பில் தலை சாய்த்தவளை இறுக அணைத்துக்கொண்டு தன் ஏக்கத்தை அரவணைப்பால் வெளியிட்டான் விஜய்.

அவனுக்குள் நுழைந்து அவனுள்ளே இருந்து கொள்ள விரும்பியவள் போல தன் முகத்தை அவன் மார்பினுள் ரோஜாவாய் புதைத்துக் கொண்டாள். அந்த முள்ளில்லா ரோஜாவின் விதைகள் தன் மனதில் ஏற்கனவே ஆழ புதைந்திருப்பதை உணர்த்துபவன் போல, வினுவின் ரோஜா முகத்தில் தன் இதழ்களை முதன்முறையாக வலம்வர விட்டான்.

அவன் முத்தமிடவென்று தன் மார்பிலிருந்து அவளது முகத்தைப் பிரித்த அரை வினாடி நேரத்தைக் கூட தாங்க முடியாதவள் போல முகத்தை மீண்டும் அவன் மார்பிற்குள் புதைத்துக் கொண்டாள் வினயா.

எத்தனை நேரம் இந்தப் புதையைலும், நிமிர்த்தலும், உளாவலும் தொடர்ந்ததோ இருவருமே அறியர்! உமாவின் காலை உணவிற்கான அறிவிப்பும், கதவு தட்டப்பட்ட ஒலியும் இருவரையும் நினைவுக்கு இழுத்துவந்து வெளியே நடக்க வைத்தது.

தன் கைக்குள் அவளது கைகளை அடக்கி, வாயில் நோக்கி நடந்த விஜயின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்ற வினயா அவனது பிடியின் அழுத்தத்தைக் கண்டு கைகளால் அதை விடுவிப்பது கடினம் என்று உணர்ந்து, "விஜி, நான் குளிக்கணும்" என்றாள் மெதுவாக.

"வீட்டில தானே இருக்கப் போற? சாப்பிட்டு அப்புறம் குளி கண்ணம்மா" என்றவனை விநோதமாய் பார்த்தவள் "நானும் உங்க கூட வருவேன்" என்றாள் அறிவுப்பு போல.

அவளது அந்த அறிவிப்பில் விஜயின் நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது. "வினுவை SRMC க்கா? கடவுளே? இப்போ தான் கொஞ்சம் சரியாகி இருக்கிறாள். மறுபடியும் அவளை அங்கே அழைத்துச் சென்று புதிவிதமாக வேதனையை கிளப்பிவிட்டு அவளையும் நோகடித்து, தன்னையும் வருத்திக் கொள்வதா?" என்று விஜய் தயங்கிக் கொண்டிருக்கும் போதே

"ஏன் கூட்டிட்டு போக மாட்டீங்க?" என்று அவனை நேராய் பார்த்துக் கேட்டவளுக்கு என்ன பதில் சொல்வது என்று யோசித்தவன் "சரிடா, நான் யாரையும் பார்க்க வெளிய போகல. உன்னை மட்டும் கூட்டிட்டு போறேன். ஓகே?" என்றான் சமாதானமாக.

"அப்போ நீங்க பார்க்கப் போற ஆள் கோபப்பட மாட்டாரா?? அவருக்கு என்ன பதில் சொல்வீங்க? உங்களை ரொம்பத் திட்டுவாரா?" என்று தன் சிறு மூளையை கசக்கி அவள் கேள்வி கேட்கவும் விஜய்க்கு சிரிப்புத் தான் வந்தது.

"ஹ்ம்ம் திட்டத் தான் செய்வார்? என்ன செய்யலாம்? என் வினுமா அவளோட இருக்கணும்ன்னு அடம் பண்றாளே? அவளோட அடத்தை ரசிக்கிறதை விட எனக்கு வேறென்ன வேலை இருக்கமுடியும்? அதனால அவர் திட்டுறதை கேட்டுக்க வேண்டியது தான்" என்று சிறு சிரிப்புடன் விஜய் உரைக்கவும் முகத்தில் வெட்கம், பெருமிதம், சிரிப்பு எல்லாவற்றையும் சேர்த்துக் காண்பித்தாள் வினயா.

"சரி போய் குளிச்சுட்டு வாடா, யோகா செஞ்சது பசி வேற வந்திருக்கும். சீக்கிரம் போ" என்று அவளைக் குளியலறை பக்கம் அவன் திருப்பவும்

"இல்ல, நான் அப்புறமே குளிக்கிறேன். நீங்க உங்க ஃபிரிண்ட்டை பார்த்துட்டு வாங்க. அப்புறமா நாம வெளிய போகலாம். இல்லைனா? இல்லைனா?...." என்று அவள் இழுக்கவும்

"ஹ்ம்ம் இல்லைனா? நானும் வரட்டுமா விஜின்னு திரும்ப ஆரம்பிக்கக் கூடாது?" என்று விஜய் ஒரு விரல் கொண்டு அவள் கன்னத்தை வருடவும்

"இல்ல, அது... நாம எப்போ கோயம்புத்தூர் போறோம்?" என்றாள் வினயா.

அவன் வந்து சென்ற இரண்டு வாரங்களிலும் அவனைக் கண்கொண்டு நேராய் பார்ப்பதே அரிதென்றிருந்த வினயா, இன்றைக்கு அவளாகவே தன் மனதை திறந்து காட்டியதில் உலகத்தை விலையின்றி வென்றிருந்த விஜய் ஆனந்த், அவள் ஊருக்குச் செல்லலாமா என்று கேட்டதும் விலை பேசாமல் தன் வசமாகி இருந்த உலகத்தின் சக்கரவர்த்தியைப் போல் உணர்ந்தான்!

“எப்போ போகலாம்? நாளைக்குப் போகலாமா?” என்று விஜய் கேட்க, “இன்னைக்கே போகலாமா?” என்று கேட்டு அவனை மூச்சுத் திணற வைத்தாள் வினயா.

தலையை ஒரு புறமாக சரித்து, கண்ணை சுருக்கி, கெஞ்சுவது போல பார்த்த வினயாவை இழுத்துத் தன் மேல் போட்டவன் மறு கையால் கதவை அடைத்தான்.

“என்னாச்சு வினுக்கு? திடீர்ன்னு விஜய் மேல் கருணை பார்வையெல்லாம் வீசுறீங்க?” என்று அவன் வினவவும்

“கருணைப் பார்வையில்ல” என்றாள் வினயா குரலில் கொஞ்சல் துள்ளி விளையாட.

“அப்புறம் காதல் பார்வைன்னு சொல்றீங்களா?” என்று அவன் கேட்ட வினாடி

“அப்படித் தான் போல!” என்று சிட்டுக் குருவியாய் தலை சரித்துக் கூறிவிட்டு, குருவியின் லாவகத்தோடு அவன் கையிலிருந்து நழுவி அறையை விட்டு வெளியேறினாள் வினு.

முகம் கொள்ளாச்சிரிப்புடன் வெளியே வந்தவனைப் பார்த்து தனாவிற்கு சிரிப்பாக இருந்தது. “சாப்பிடலாமா விஜய்? இல்ல மனசு நிறைஞ்சதில் வயிறு பசிக்கலையா?” என்றான் விரிந்த புன்னகையுடன்.

“ஹ்ம்ம் சாப்பிடலாம். மனசுக்கு இதமா இருக்கத் தான் செய்யுது. ஆனா முழு சந்தோஷம்ன்னு சொல்ல முடியாது” என்றான் விஜய், உமாவின் பார்வையை செலுத்தி மீட்டப்பின்னர்.

“ம்ம்ம்” என்ற ஒற்றை வார்த்தை, இல்லை இல்லை, ஒற்றை முனங்களோடு அதை உள்வாங்கிக் கொண்டவன் உணவு மேடைக்குச் சென்றான்.

வினுவின் அருகே விஜய் அமர, வைரவனின் அருகே தனசேகரன் அமர்ந்தான். உமா தன் கையால் இனிப்பை அனைவருக்கும் பரிமாறிக் கொண்டே வர, அவள் தனாவின் அருகே வருவதற்குள் தன் தட்டில் இட்லியை அவனாகவே எடுத்துப் போட்டுக் கொண்டு உண்ண ஆரம்பித்தான் தனசேகரன்.

உமாவின் முகம் சட்டென கூம்பிவிட, அதைப் பொறுக்காத இரு ஜீவன்களில் ஒன்றான வைரவன் சார் “அவ தான் பரிமாறிட்டு வர்றா இல்ல. அப்புறம் என்ன அவசரம்? நிதானமா, பரிமாறும் நபரை மதிச்சு சாப்பிடப் பழகுன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது?” என்று கடிந்து கொள்ள, உமாவின் முகம் வெளுத்து விட்டது.

அவள் வெளுத்த முகத்தைக் கண்ட விஜய் மேலும் பேசாமல் வாயை மூடிக் கொள்ள, இவர்கள் எதிர்பார்த்தது போலில்லாமல் தனா கோபமாக கத்தவில்லை என்பதே அதிசயம் என்றால், அவன் “சரி இப்ப வைக்கச் சொல்லுங்க. அதுக்கு எதுக்கு கத்துறீங்க?” என்று அமைதியாக பேசியதே அந்த நாளின் எட்டாவதுஅதிசயமானது.

“அண்ணா சொல்றாங்க இல்ல, வைங்க அண்ணி” என்று வினுவும் இத்தனை நேரம் குலாப் ஜாமுன் மேல் காட்டிய பிரியத்தை அண்ணன் மேல் காட்டினாள்.

குளிர்ந்த மனதுடன் தனாவிற்கும் தன் கையால் பரிமாறியவள், “எப்படி இருக்கு வினுமா? விஜி...” என்று ஆரம்பித்தவள் வினுவின் முகம் போன போக்கைப் பார்த்து “ஹய்யோ தெரியாம சொல்லிட்டேன் விஜய்... விஜய்... விஜய். போதுமா?” என்று சமாதானப்படுத்திவிட்டு “விஜய் செய்றதுக்கு கொஞ்சமாவது நிகரா இருக்கா? இல்ல ரொம்ப மோசமா? பக்கத்தில கூட நிக்க முடியாதாக்கும்?” என்று கேலியாக வினவினாள்.

“விஜி இதெல்லாம் வீட்டில செய்ய மாட்டாங்க. கடையிலேயே கிடைக்கும் போது எதுக்கு வீட்டில செய்யணும்? கிருஷ்ணா ஸ்வீட்ஸ்ல கிடைக்கும். நாங்க அடுத்த டைம் வரும்போது வாங்கிட்டு வரோம். என்ன விஜி? ஓகேவா அண்ணி?” என்று நீண்ட வாக்கியத்தை வினயா பேசி முடித்தப் போது, அங்கிருந்த நால்வரும் வெவ்வேறு மனநிலையில் இருந்தபோதிலும் அதில் சந்தோசம் கண்டிப்பாக இருந்தது.

விஜயிடமும், உமாவிடமும் கேட்கப் பட்ட கேள்விக்கு “கிருஷ்ணா ஸ்வீட்ஸ் எங்க ஊர்ல கூட இருக்கு மேடம்” என்று தனா பதில் அளிக்கவும்,

“அப்போ, நீயே அண்ணிக்கு வாங்கிக் கொடு” என்று தீர்ப்பு கூறினாள் வினயா.

“கொடுத்துட்டா போச்சு” என்று அவனையும் அறியாமல் வாயிலிருந்து வார்த்தையை வெளியேற்றிய தனசேகரனை அனைவருமே வியப்புடன் பார்த்தனர். (வினு தவிர) உமாவிற்கு கண்களில் கண்ணீரே நிறைந்துவிட்டது!

காலை முதல் நிறைய இன்ப அதிர்ச்சிகளையும், இன்ப அதிர்வுகளையும் சந்தித்திருந்த அந்தக் குடும்பத்திற்கு தனாவின் இந்த வார்த்தைகள் அழகிய பூ வானமாய் வெடித்து, வாழ்க்கையை வண்ணமயமாய் மாற்றியதோடு நில்லாமல் ஒளிமிக்க எதிர்காலத்தைக் கண் முன்னால் காட்டியது!!

விஜய் அவர்கள் ஊருக்குச் செல்வதை அறிவிப்பதற்குள் “நான் விஜி கூட ஊருக்குப் போறேன் அப்பா” என்று அதை வெளியிட்டாள் வினயா.

“ஹோ” என்று நிறைய கூக்குரல்கள் கேட்க, “என்னடா திடீர்னு” என்றான் தனா வேண்டுமென்றே,

“பாவமில்ல விஜி, கல்யாணம் பண்ணின பிறகும் எத்தனை நாள் தான் தனியா இருப்பார்?” என்றவளின் அந்த செய்தி, வாயிலிருந்த குலாப் ஜாமுனை விட பன்மடங்கு இனிப்பாய் இருந்தது.

************************************************************

பாகம் 6

காலை உணவு முடிந்ததும் வெளியே செல்லத் தயாரான விஜயிடம் “இப்ப வருவீங்க?”, “ரொம்ப நேரம் ஆகுமா?”, “மதியம் சாப்பிட வரீங்களா?”, “நாம எப்ப கிளம்புறோம்?” என்று விதவிதமாய் கேள்விகளை வீசி அவனது ஒரே பதிலான “சீக்கிரம் வந்துடுறேன் கண்ணம்மா”வை வாங்கிக் கொண்டிருந்தவளைக் கைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றவன்,

“இப்போ நான் போகட்டுமா வேண்டாமா? என்ன சொல்ல வர?” எனச் சின்னச் சிரிப்புடன் வினவவும்

“இல்ல இல்ல போயிட்டு வாங்க. அப்புறம் உங்க ஃபரிண்ட் கோவிச்சுப்பார் இல்லையா?” என்று என்னவோ தனக்கு அவன் போவதில் ஒன்றுமில்லை என்பது போல் விட்டேறியாக காண்பித்துக் கொண்டவளை அணைத்து விடுவித்த விஜய்ஆனந்த், SRMC க்குக் கிளம்பியபோது தனசேகரன் அவனது வண்டியில் விஜயை அங்கே இறக்கி விடுவதாகக் கூறினான்.

இருவருமாக கீழே இறங்கி, வாகனங்கள் நிறுத்தி வைக்கும் இடத்திற்குச் சென்றபோதும், தனாவின் பைக்கில் பயணமானபோதும் மனதில் ஒரு சிறு சஞ்சலம் இருந்து கொண்டே இருந்தது.

கிண்டி ரயில்வே ஸ்டேஷனை நெருங்கியபோது, சுற்றுப்புற வாகன இரைச்சலுக்கு நடுவிலும் இருவருக்கும் இடையே நிலவிய அமைதியை முதலில் விஜய்ஆனந்தே களைத்தான்.

“உங்களுக்கு ஆபீஸ்ல கார் கொடுத்திருக்கிறதா மாமா சொன்னாங்களே தனா? வினு வந்ததால அதை எடுக்கிறதில்லையா?” என்று கேள்வியையும் அவனே கேட்டு, பதிலுக்காக தனா சிரமப்படுவதை விரும்பாவதவன் போல ஒரு ஆப்ஷனையும் கொடுத்தான்!

“ஹ்ம்ம் ஆமா விஜய், அவ கோயம்புத்தூர்ல இருந்து வந்த நிலைக்கு ரூமை விட்டு வெளிய வருவாளான்னே எனக்குப் பயமாகிடுச்சு. அப்படி இருக்கும் போது காரை வேற நிறுத்தி வைச்சு அவளை இன்னும் உள்ள உள்ள போக வைக்கவேண்டாம்ன்னு தோனுச்சு” என்று உள்ளே போன குரலில் தனா பதில் சொல்லவும்,

“நானும் ரொம்பவே பயந்து போயிட்டேன். அந்த போடோவைப் பார்த்துட்டு அவ கதறுன கதறல் இருக்கே... எனக்கு உயிரே போய்டுச்சு” என்று கூறியவனின் குரல் இந்த நேரத்திலையும் உடைந்து போய் இருந்தது.

“ஹ்ம்ம்... வினு இவ்வளவு சீக்கிரம் அதை விட்டு வெளியே வந்திருக்கா அப்படின்னா அது உன் மேல வச்ச காதலால தான். உன்னை விட்டுட்டு அவளால இருக்க முடியல. அந்தப் பிரிவு தான் அவளைத் தெளிய வச்சிருக்குன்னு நினைக்கிறன்” என்றவன் ஒரு சிறு இடைவெளிக்குப் பிறகு,

"மூணு வருஷமா வாழ்க்கையில பட்ட அடிகள் என்னை யாரையும் லேசுல நம்ப விடல விஜய். உன்கிட்ட இதுவரைக்கும் நான் முகம் கொடுத்துக் கூட பேசினதில்ல. எல்லாத்துக்குமே வினு மேல நான் வச்சிருந்த பாசம் தான் காரணம். அவ வாழ்க்கை எப்படி இருக்குமோ? இனிமேலாவது அவ நல்லா இருக்கணுமே என்ற கவலை தான். ஆனா, ஒரு அண்ணனா எனக்கு இருந்த கவலையை நீ புரிஞ்சுப்பேன்னு நினைக்கிறன்" என்று தான் இத்தனை நாட்கள் வினுவின் வாழ்வை எண்ணி விஜயிடம் பேசாமல் இருந்ததை சுட்டிக் காட்டி தனா வருத்தப்படவும், அவன் தோளை அழுத்திக் கொடுத்து தான் அவனது நிலையைப் புரிந்து கொண்டதை விஜய் தெரிவித்தான்.

"நீங்க வினுவைப் பத்திக் கவலைப்படவேண்டாம். உங்க மனத்திருப்திக்காக வெளிப்படையாகவே சொல்றேன், வினுவை நான் மனப் பூர்மவமா விரும்புறேன், அவளைப் பற்றின கவலையை விட்டுவிட்டு உங்களையும் கொஞ்சம் பாருங்க தனா" என்றான் விஜய்.

"ஹ்ம்ம்" என்று அப்போதும் ஒற்றை வார்த்தையோடு அவன் முடிக்கவும் "uma is a gem of a person தனா, என்னை விட உங்களுக்கு அவளைப் பத்தி நல்லாவே தெரியும். நீங்களும் அவளும் எவ்வளவு சந்தோஷமா இருந்தீங்கன்னு கண் கூட பார்த்தவன் நான். அப்படி இருந்தவங்க இப்படி விரோதி மாதிரி இருக்கிறதை பார்த்தா மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு தனா... வினுவோட வாழ்கையை மனசில வச்சுக்கிட்டு நீங்க இப்படி இருக்கீங்கன்னா, நான் முன்னாடியே சொன்ன மாதிரி வினுவைப் பத்தின கவலையை விட்டுடுங்க ப்ளீஸ்" என்றான் வாகன இரைச்சலையும் மீறி, காது வழியாக தனாவின் மனதிற்குள் நுழைய முயன்று.

"சரி விஜய்" என்று அரைகுறையாக வேணும் அவனது சம்மதத்தை வாங்கிய திருப்தியை விஜய் அடைந்த போது, தனாவின் வண்டி சென்னை வணிக வளாகத்தை அருகில் சென்று கொண்டிருந்தது.

மியாட் மருத்துவமனை பாலத்தைக் கடந்த தனசேகரன் என்ன நினைத்தானோ? அங்கிருந்த பெட்ரோல் பங்கில் வண்டியை நிறுத்தி "நீ... இங்க இருந்து ஆட்டோல போய்டுறியா? எனக்கு... எனக்கு... ஒரு மாதிரி இருக்கு" என்று சட்டென கலங்கிய விழிகளுடன் அவன் முறையிடவும், "என்ன தனா இது? நீங்களே மறக்கலைன்னா வினு எப்படி மாறுவா?" என்று விஜயும் தன் பங்கிற்கு வருத்தப்பட்டான்.

தனசேகரனைத் திருப்பி அனுப்பிவிட்டு ஆட்டோ ஏறி போரூர் சென்றபோது "சொல்லப் போனா தனாவை விட எனக்குத் தான் அந்த காலேஜ்குள்ள போறது ரண வேதனை. அப்படியிருக்கும் போது இந்தப் பயணம் தேவை தானா" என்று ஆயிரத்தி எட்டாவது முறையாக விஜய் ஆனந்தை யோசிக்க வைத்தது.

ஆனால் வேலை பார்க்கும் இடத்தில் மாநாட்டிற்குச் செல்வதாகக் கூறிவிட்டு அங்கே செல்லவில்லை என்றால் அங்கு வந்திருக்கும் தன் துறையில் தலைவரிடம் வசமாக மாட்டிக் கொள்வோமே என்ற சிந்தனையும், தன் நண்பனுடன் சேர்ந்து "osseointegration" என்ற தலைப்பில் தான் செய்திருந்த ஆய்வு பொது கலந்தாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதும் இரு பெரும் காரணங்களாய் அமைந்து அவனை SRMC க்குக் கொண்டு சேர்த்தது.

கல்லூரிக்குள் காலடி எடுத்து வைத்தவனை அவன் கால்கள் தானாகவே அங்கிருந்த வைத்தீஸ்வரன் கோவிலுக்கு இழுத்துச் சென்றது.

அங்கு சென்று வைத்தீஸ்வரன் என்ற நாமத்தைச் சூடி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் உலகாளும் சிவனை கை கூப்பி வணங்கி, வாய் தானாக "தென்னாடுடைய சிவனே போற்றி, என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற ஸ்லோகத்தை முணுமுணுத்தப் போதும், முதன்முதலாக பவித்ராவை அதே இடத்தில் கண்டது தான் மனதை நிறைத்தது.

தான் முதன்முதலாக பவித்ராவைக் கண்ட நொடி அவன் மனதில் அழியாத சித்திரமாய் பதிந்து, அவளது நினைவுகளும் அசைவுகளும் மனதிலிருந்து விஸ்வரூபம் எடுத்துக் கிளம்பின.

அன்றொரு நாள் தான் இதே இடத்தில் நின்று இறைவனை வேண்டி முடித்துக் கண்ணைத் திறந்தபோது, எதிரில் ஒரு கண்ணை இறுக முடி, மறு கண்ணை பாதி திறந்து பக்கத்தில் நின்றிருந்த வைரவனின் கையிலிருந்த அர்ச்சனைத் தட்டு மேல் தன் பார்வையை ஓடவிட்டக் கணமும், அந்தக் கண்களில் டன் கணக்கில் வழிந்த குறும்பும், அதில் தெரிந்த ஆர்வமும் இன்றும் விஜயின் உதடுகளில் புன்னகையை வரவழைத்தது.

அடுத்த அரை நிமிடத்தில் "பாப்பா, ஆரத்தியை எடுத்துக் கண்ணுல ஒத்திக்கோ" என்று வைரவனின் அதட்டலில் அவர் சொற்படி செய்தவளின் முகத்தில் சட்டென குடிகொண்ட எரிச்சலும் இப்போது விஜய்க்கு நினைவு வந்தது.

விபூதி பிரசாதம் வாங்கிக் கொண்டு இருவரும் கிளம்பியபோது "அப்பா, என்னைப் பாப்பான்னு கூப்பிடாதீங்கன்னு எத்தனை தடவை சொல்றது. நான் என்ன விரல் சூப்புற பாப்பாவா? சரி, சரி அர்ச்சனை பண்ண கல்கண்டைத் தாங்க. நாம வச்சதையெல்லாம் அப்படியே திரும்பக் கொடுத்துட்டார் ஐயர். ரொம்ப நல்லவரா இருக்கார் இல்லப்பா?. நம்ம வீட்டுப் பக்கத்தில இருக்க பிள்ளையார் கோவில் ஐயர்ன்னா கொஞ்சமாத் தான் தருவார். அதுவும் நான் போனா வேணும்னே தரமாட்டார்ப்பா" என்று அவர் கைக்குள் கையை நுழைத்துக் கொண்டு செல்லம் கொஞ்சி சென்றவளை இன்னும் மனதிலிருந்து அகற்ற முடியவில்லை விஜயால்.

"உனக்குப் பாப்பா பிறந்தா கூட நீ எனக்குப் பாப்பா தான்டா பவிக்குட்டி" என்று வைரவன் கொஞ்சியதும்,

அதற்குப் பதிலாய், பொது இடம் என்று கூட பாராமல் பவித்ரா அவர் கன்னத்தில் பதித்த முத்தமும் "ஆமாப்பா, எதுக்கு படுச்சுக்கிட்டு? பேசாம ஒரு நல்லவனா பார்த்து எனக்குக் கல்யாணம் செஞ்சு வச்சுடுங்க. என் பாப்பாவையும் கொஞ்சிக்கிட்டு அதே சமயம் என்னையும் கொஞ்சலாம்" என்று கண் சிமிட்டிக் கூறியவளை அவர் தலையில் அடித்ததும்,

"நீங்களும் இந்த தச்சு மூலமா ஒரு பேரன் பேத்தியைப் பார்க்கலாம்ன்னு எத்தனை நாள் தான் காத்திருப்பீங்க? நானா ஒரு வழி சொன்னா அதுக்குப் போய் என்னைக் கொட்டுறீங்க?" என்று பவித்ரா அவரிடம் வம்பு வளர்த்ததும் நினைவில் அச்சரம் பிசகாமல் நின்றது.

அந்த முதல் பார்வையிலும், குறும்பிலும், அவளுக்கும் அவள் தந்தைக்கும் நடுவில் நிலவிய பாசத்திலும் பவித்ரா அழுத்தமாய் தன் மனதில் பதிந்துவிட்டாலோ என்று நான்கு வருடங்கள் கழித்து விஜய்க்கு சந்தேகம் வந்தது.

அவளிடமிருந்த ஏதோ ஒன்றில் ஈர்க்கப்பட்டு, வெள்ளிக் கிழமையில் மட்டும் கோவிலுக்குச் செல்லும் பழக்கம் கொண்ட தான் தினமும் சென்று சாமி தரிசனத்தோடு அவளது குறும்பையும் தரிசித்துவிட்டு வந்தோமே... அப்போதெல்லாம் வராத சந்தேகம் இப்போது என்ன? என்று தலையை உலுக்கிக் கொண்டு மாநாடு நடந்த இடத்திற்குச் சென்றான்.

போகும் வழியாவும் பொது கலந்தாய்வில் பேச வேண்டிய விஷயங்கள் நினைவில் நின்றதோ இல்லையோ பவித்ராவிடம் தான் பேசத் துடித்தக் காலங்களும், ஒரு வழியாகவோ, இல்லை இரு வழியாகவோ தங்களுக்குள் வளர்ந்த காதலும் மனதில் கபடி விளையாடிக் கொண்டிருந்தன.

அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் பவித்ரா நிறைந்திருக்க, பைக் ஸ்டாண்டில், காண்டீனில், லைப்ரரியில், ஆடிட்டோரியத்தில் என்று அவள் வலம் வந்த இடங்களைத் தானும் கால்களால் கடந்து, கண்களால் வலம் வந்து, மனதிலிருந்த காதலைப் புதுப்பித்துக் கொண்டிருந்த விஜயை அவன் நண்பன் ராகுலின் குரல் கலைத்தது "டேய் விஜய், என்னடா பகல் கனவா? சீக்கிரம் வா... presentation ஐ ஒரு டைம் என்னோட லேப்டாப்ல ஓட்டிப் பார்த்துடலாம்" என்று அவன் கைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றான்.

"பகல் கனவா? ஹ்ம்ம்... அப்படித் தான் போல... நினைவாவதற்குள்ளே களைந்து போக இருந்த கனவல்லவா? களைந்து போனது நினைவாகுமா? இல்லை கனவின் சித்திரமாகவே இருக்குமா?" என்று மனதிற்குள் ஒரு பெரும் போராட்டத்தை நடத்தி, அதில் எப்போதும் போல் தோல்வியைத் தழுவியதும், ஒரு நெடிய மூச்சை வெளியேற்றிவிட்டு மாநாடு நடந்த அரங்கிற்குச் சென்றான் விஜய்.

வந்திருப்போருக்கான பதிவேட்டில் தன் பெயரைப் பதிவு செய்து கொண்டு, அவர்கள் கொடுத்த அனுமதி அட்டையை பெற்றவன், நேரே தான் வேலை பார்க்கும் கல்லூரியில் இருந்து வந்திருந்த தனது துறைத்தலைவரைப் போய் பார்த்துவிட்டு, தான் படித்தத் துறையான பல் கட்டும் பிரிவின் தலைவரையும் போய் பார்த்து விட்டு அவரிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்தான்.

அவரிடம் பேசும் போது கூட, அவர் மேல் தான் வைத்திருந்த பயம் கலந்த மரியாதையை பவியும் உமாவும் சேர்ந்து செய்யும் கிண்டல்களே பெருமளவு அவன் நெஞ்சில் நிலைத்திருந்தது.

பத்பநாபன் என்ற பெயர் கொண்ட அவரைக் கண்டால் அவர்களது துறையில் எல்லாருக்குமே குலை நடுங்கிவிடும்.

விஜய் செய்யும் பல்செட்டுகளின் நேர்த்தியிலும், படிப்பின் மேல் அவன் காட்டிய ஆர்வத்திலும், அவனது சேவை மனப்பான்மையிலும் கவரப்பட்டு அவரது செல்லப் பிள்ளையாய் இருந்தபோதும் விஜய்க்கு பத்பநாபன் சார் என்றால் இன்னமும் மரியாதை தான் என்றால்,

படிக்கும் காலத்தில் பவி சொல்வது போல "தூக்கத்தில கூட "பத்து சார் வராங்க விஜய்" அப்படின்னு சொன்னா... எஸ் பாஸ் அப்படின்னு வாரி சுருட்டி எழுந்துடுவீங்க போல" என்ற நிலை தான்.

பவியின் நினைவுகளில் சஞ்சரித்துக் கொண்டே, பொது கலந்தாய்வில் கலந்து கொண்ட போதும் அவர்களது பேப்பர் அன்றைய தினத்தின் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

பரிசு அறிவித்தப் பிறகு, விஜயை உலுக்கிய ராகுல் "என்னடா ஆச்சு உனக்கு? அவங்க கேட்ட கடைசி கேள்விக்கு இன்னும் கன்வின்சிங்கா பதில் சொல்லியிருந்தா நமக்குத் தான் ஃபிரஸ்ட் பிளேஸ் கிடைச்சிருக்கும். எனக்குத் தான் சட்டுன்னு நியாபகம் வரலைன்னா, எல்லா விவரத்தையும் விரல் நுனில வச்சிருக்க உனக்கு என்ன வந்துச்சு?" என்று எரிந்து விழுந்தான்.

"ஹான்... ஒன்னுமில்லடா... அது வந்து... சாரிடா ராகுல்" என்று நெடுங்கனவில் இருந்து விழித்தவன் போல விஜய் தடுமாறவும்

" ஹே விஜய், ஆர் யு ஆல் ரைட்? என்கிட்டே போய் எதுக்குடா சாரி எல்லாம் சொல்ற?... ஜஸ்ட் இன்னும் நல்லாப் பண்ணி இருக்கலாமேன்னு ஒரு ஆதங்கத்தில சொல்லிட்டேன். சரி அதை விடு. எதாவது பிரச்சனையா? வினயாவுக்கு உடம்பு ஏதும் சரியில்லையா? உடம்பு முடியல. அவங்க அண்ணா வீட்டில இருக்காங்கன்னு சொன்னியே. இப்போ உடம்பு எப்படி இருக்கு? " என்று அக்கறையாய் விசாரித்தான் ராகுல்.

"ச்சே ச்சே, அதெல்லாமில்ல. அவ நல்லா இருக்கா. இன்னைக்கே அவளைக் கூட்டிட்டு ஊருக்குப் போகலாம்ன்னு பார்க்கிறேன். ஆனா டிக்கெட் இன்னும் எடுக்கலை. அது தான் என்ன செய்யலாம்ன்னு யோசனையா இருக்கு" என்று முறையாக பேச்சை மாற்றினான் விஜய்ஆனந்த்.

"ஹே, வீக் எண்டுல தானே போறேன்னு சொன்னே? இப்போ என்ன திடீர்ன்னு இன்னைக்கே போறேன்னு சொல்ற?" என்று வினவியவனிடம்

"இன்னைக்கே போனா வினு ரெண்டு நாள் காலேஜ் போவா. அதனால தான்" என்று பாதி உண்மையும், பாதி பொய்யுமாய் வினுவின் அடத்தை மறைத்துக் கூறினான் விஜய்.

"வாரநாள் தானேடா, கண்டிப்பா கிடைக்கும். அப்படி இல்லைனா தட்கல்ல புக் பண்ணிடு" என்று அறிவுறுத்திவிட்டு அவனைச் சாப்பிட அழைத்துச் சென்றான் ராகுல்.

உணவு முடிந்ததும் நடந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட விஜய் அதையும் முடித்துக் கொண்டு நேராக சென்ட்ரல் ரயில் நிலையம் சென்று அன்றைய பயணத்திற்கான பயணச் சீட்டுகளை வாங்கினான்.

சாதாரண முறையில் பயணச் சீட்டுகள் அனைத்தும் நிரம்பிவிட்டிருந்தமையால் தட்கல் முறையில், அப்போதும் குளிர் சாதனப்பெட்டியில் கிடைத்த பயணச் சீட்டை வாங்கிக் கொண்டு வீடு சென்றான் விஜய்.

வீடு வந்து சேர்ந்து, வினயாவின் பெட்டியை அடுக்கி, உமா வினுவிற்கென வாங்கி வைத்திருந்த பரிசுகளையும், சல்வார்களையும் தனி பெட்டியில் அடுக்கி, இரவு உணவை முடித்துக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பும் வரை எந்தப் பிரச்னையும் வரவில்லை.

"நம்மள விட்டுட்டுப் போறோம்ன்ற வருத்தம் துளி கூட இல்லாம ஒரே குஜால்ஸா கிளம்பிட்டா பாருங்கப்பா" என்று தனாவின் வியப்பை வினு சட்டம் செய்தது போல கூட தெரியவில்லை என்ற போதில்,

"இன்னைக்கு விஜயை சமையல் செய்ய வைக்கலாம்ன்னு பார்த்தா முடியலையே" என்ற உமாவின் ஐம்பது சதவீதம் வருத்தத்தையும் வினு சட்டம் செய்யாமல் இருந்தாள் என்றால் அது தான் இல்லை.

மாறாக, "ஹான்... விஜி பாவம். நாளைக்கு வேலைக்கு வேற போகணும். இன்னைக்கு எல்லாருக்கும் சமைச்சுட்டு, அதோட ட்ராவல் வேற பண்ணினா ரொம்ப அசதி ஆகிடும்" என்று வரிந்து கட்டிக் கொண்டு வந்துவிட்டாள்.

"அடேங்கப்பா" என்ற வியப்பின் ஊடேயே அவர்களை வழி அனுப்பிவைத்த மற்ற மூவருக்கும் இந்த வழி அனுப்புதலும், சந்தோஷமும் குறுகிய காலத்திலேயே களைந்து போய் விடும் என்று தெரியவில்லை!

கூட வருகிறேன் என்று கூறிய தனாவை நிறுத்திவிட்டு, வினுவை அழைத்துக் கொண்டு ஆட்டோவில் சென்ட்ரல் ரயில் நிலையம் பயணமான விஜயை பயணத்தின் ஆரம்பித்தில் இடது கையை அவனது தொடையில் பட்டும் படாமல் வைத்திருந்த வினயா, ராயப்பேட்டை சிக்னலை அடையும் நேரத்தில் அவனை மிகவும் ஒட்டி அமர்ந்து தன் ஒரு கையை அவனது கைகளுக்குள் நுழைத்துக் கொண்டாள் என்றால், சென்ட்ரல் ரயில் நிலையத்தை அவர்கள் அடைந்த போது விஜயின் சட்டையை அவளது கைகள் இறுக இறுக பற்றி இருக்க, அவளது தலை அவனது தோளில் மிக மிக அழுத்தமாய் புதைந்திருந்தது.

அவளது நிலை புரிந்தவன் போல, ஆட்டோவிற்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு ஒரு கையில் அவளையும் மறுகையில் பொருள்களையும் பற்றிக் கொண்டு சேரன் விரைவு ரயில் நோக்கிச் சென்றான்.

இருக்கைப் பார்த்து அவளை அமர வைத்தவன், அவளுக்குப் பால் வாங்கவென கிளம்பினான்.

"வேணாம் விஜி. நீங்க என்னை விட்டுப் போகாதீங்க" என்று சட்டை கையைப் பிடித்து தடுத்தவளை,

"சீக்கிரம் வந்துடுறேன் வினுமா, உனக்குப் பால் குடிக்கலைன்னா தூக்கம் வராது. நைட் தூங்காம இருந்தா நாளைக்கு கிளாஸ் கவனிக்க முடியாதுடா கண்ணம்மா" என்று கெஞ்சி சமாதானப்படுத்திவிட்டு கீழிறங்கி சென்றான்.

விஜய் ஆனந்த் பால் வாங்கிக் கொண்டு அவர்கள் இருக்கை இருக்கும் பெட்டியை நோக்கி விரைந்த போது, வினு கண்களில் மிரட்சியுடனும், தேடுதலுடனும் வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள்!

**************************************************

பாகம் 7

வினயாவின் கண்களில் தெரிந்த பீதியைக் கண்டு உள்ளம் பதறி அவளை மின்னல் வேகத்தில் நெருங்கினான் விஜய்.

அவன் தன் அருகில் வந்ததைக் கூட கவனிக்காமல் வெறி கொண்டவள் போல் அவனை விட்டுத் திமிறிய வினயாவைத் தடுத்து "வினுமா என்னடா? எங்க போற?" என்று அவளைத் தன் புறம் திருப்ப முயன்றான்.

"நான் அண்ணி கிட்ட போறேன். நீங்க வேண்டாம். உங்களுக்கு நான் வேண்டாம். எனக்கு வேண்டாம். வேண்டாம்" என்று சம்பந்தம் சம்பந்தமில்லாமல் அவள் பேத்தவும் கதி கலங்கி போன விஜய்க்கு அவளது புலம்பலும், திமிறலும் வேதனையைக் கொடுத்தது என்றால், சுற்றியிருந்தோர் பார்த்த பார்வை சங்கடத்தை ஏற்றியது.

"ஷ் வினயா, என்னாச்சு?" என்று கையிலிருந்த பால் கப்பை குப்பைக் கூடையில் தூக்கியெரிந்தவன், அவளை இரு கைகளாலும் உலுக்கினான்.

"நான் போறேன். என்னை விடுங்க" என்று கத்தியவளை

சுற்றி நின்றோரின் ஆர்வமிக்க விழிகளையும், சிலர் அவர்களை நெருங்குவதையும் கண்டவன் "ஷ் கத்தாதே! ரயில்வே ஸ்டேஷன்ல இருந்துட்டு என்ன இது?" என்று குரலை அவனையும் அறியாமல் உயர்த்தி அவளை கட்டுக்குள் கொண்டு வர முயன்றான்.

"ஹான்... என்னை விடுங்க... என்னை விடுங்க... " என்று அவள் மீண்டும் கண்களில் கண்ணீருடனும், அதே அளவு குரலில் பிடிவாதத்துடனும் கெஞ்சவே அவளை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு ரயிலுக்குள் ஏறினான்.

அவன் கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வினயா பிரம்ம பிரயத்தனப் பட்ட போதும், உள்ளத்தால் அவளிடம் நெக்குருகி போயிருந்தவனின் பிடி இரும்பாய் தான் இருந்தது.

"நான் வரமாட்டேன். நான் அங்க வரமாட்டேன். ஐயோ வேணாம், வேணாமே ப்ளீஸ்.. என்னை விடுங்க... " என்று அவள் கதறிய கதறலை மதிக்காமல் இருக்கமுடியவில்லை விஜயால்.

உள்ளம் உருக, "என்னடா கண்ணம்மா? ஏன் இப்படி பண்ற? எல்லாரும் பார்க்கிறாங்கடா. கொஞ்சம் அமைதியா இரேன்டா" என்று அவளைத் தன் வசம் இழுத்து தோளில் சாய்த்துக்கொள்ள முயன்றான்.

"இல்ல நான் அங்க வரமாட்டேன்", "ஹய்யோ வேணாம் விஜி, வேணாமே... ஹய்யோ" என்று பின்னால் அவள் நகர, விஜயின் முன்னால் வந்து நின்றவனைக் கண்டதும் அவளது கதறலுக்கான காரணத்தை வெகு துல்லியமாக உணர்ந்தான் விஜய்.

"இவனா? கடவுளே! என்னை ஏன் இப்படி சோதிக்கிறாய்? இப்போது தான் கொஞ்சம் கொஞ்சம் என் மேலிருக்கும் காதலை உணர்ந்து கொண்டிருக்கிறாள் என்று எண்ணினால்... ஹய்யோ இப்போது என்ன செய்வது?" என்று மனம் படபடவென அடித்துக் கொண்டது.

"ஹே விஜய் நீயா?" என்று எதிரிலிருந்தவன் பேச ஆரம்பித்தப் போதே வினயா துடிக்க ஆரம்பித்திருந்தாள்.

"வினுமா, வினு, வினு" என்று விஜய் பதற பதற அவள் மயங்கிச் சரிந்தாள்.

"உன் மனைவியா? என்னாச்சு?" என்று அவன் புருவம் உயர்த்திய போது "தேவ்" என்று உள்ளிருந்து ஒரு குரல் வர, விஜயும் வினுவும் அவனுக்கு முக்கியமற்றவர்களாக மாறிப் போயினர்.

விஜய்க்கும் அவனது தரிசனம் உலகத்தின் மிக மட்டமான ஒன்றாக தோன்ற வினுவின் நலனே பெரிதாகப் பட்டது. அதற்குள் இரண்டு பேர் வினயாவின் நிலையைக் கண்டு உதவிக்கு வந்திருந்தனர்.

துரிதமாக செயல்பட்டு, அவளை அருகிலிருந்து காத்திருப்போர் இருக்கையில் அமர்த்தியவன் தனாவின் கைப்பேசியை அழைத்தான் "தனா, விஜய் பேசுறேன். வினு மயக்கமாகிட்டா. நான் அவளைக் கூட்டிட்டு நிர்மலாவோட ஹாஸ்பிடல்லுக்குப் போறேன். நீங்க உமாவைக் கூட்டிட்டு அங்கே வந்துடுங்க. உமாவைத் தான் தேடுறா" என்று தனாவின் "ஹய்யோ என்னாச்சு?" என்று பதறலை சட்டை செய்யாமல், தந்தி மொழியில் அவனுக்கு வேகமாக அறிவுரை பிறப்பித்தவன் ஒரு கால் டாக்ஸி வரவழைத்து வினுவை அதில் ஏற்றி நிர்மலாவின் மருத்துவமனை அமைத்திருக்கும் ஆழ்வார்பேட்டை பகுதிக்குச் சென்றான்.

கால் டாக்ஸியில் செல்லும் வழியாவும், தன் தோள் மீது சாய்ந்திருந்தவளை வருடிக் கொண்டே வந்தவனின் கண்களில் சொல்லொண்ணா வேதனை குடிகொண்டது. என்ன மாதிரி ஆரம்பித்தப் பயணம் எப்படி முடிந்து விட்டது? இதுவரை தன்னிடம் அவள் காட்டிய நெருக்கம் கானல் நீராய் மாறிவிடும் ஆபாயம் அவனுக்குப் புரிந்தது!

நடுவில் லேசாக கண் விழித்த வினயா, சுற்றும் முற்றும் ஒரு முறை கண்ணைச் சுழற்றியவள் விஜயை அருகில் கண்டதும் முகத்தில் வலி பரவ, "நான் வேண்டாம் விஜி உங்களுக்கு, இங்க இருந்து போய்டுங்க. என்னால முடியல... ஹய்யோ வேணாம் விஜி... போய்டுங்க... போய்டுங்க" என்று மீண்டும் கதறத் தொடங்கினாள்.

"வினுமா, நான் எங்கேயும் போகப் போறதில. உன் கூட தான், வாழ்க்கை முழுசும் உன் கூட தான் இருக்கப் போறேன். அதனால இப்படி உளறுவதை நிறுத்திட்டு அமைதியா வா!" என்று குரலில் என்றைக்குமில்லாத அழுத்தத்தைக் கொண்டு வந்தவன் அவளைத் தீர்க்கமாய் ஒரு பார்வை பார்த்தான்.

அதில் வினயா என்ன கண்டாளோ அரண்ட பார்வையும், வேதனையில் சுருண்ட முகமும் சற்றே தெளிய, ஆனால் உடனே அதுவும் கசங்க அவன் தோளிலிருந்து விலகி டாக்ஸி சீட்டில் தலை சாய்த்துக்கொண்டாள்.

அவளது அந்த செயல் விஜயை நன்றாகவே பாதித்தது என்பதை அவனது முகத்தை ஒரு வினாடிக்கும் மேல் கூர்ந்து பார்த்திருந்தால் வினயாவிற்குப் புரிந்திருக்கும். அவள் புரிந்து கொண்டு தான் காரியம் ஆகவேண்டும் என்று காத்திருந்தால் வேலைக்கு ஆகாது என்று எண்ணியவன் போல அவளை இழுத்துத் தோள் மீது சாய்த்துக் கொண்டவன் அவள் திமிறியதை தன் பலத்தைக் கூட்டித்தடுத்தான்.

மனதில் நடந்த போராட்டங்கள் அவளையும் மீறி உடலை சோர்வடைய செய்ததோ என்னவோ வினுவை மீண்டும் மயக்கமெனும் மௌனம் ஆட்கொண்டது.

"என்னடா கண்ணம்மா, மாசம் ஒரு முறை என்னை இப்படி பயமுருத்துறியே... ஹ்ம்ம்... போன மாசமும் இதே மாதிரி தான் கதறித் துடுச்சு, என்னைப் பார்த்து விலகி விலகிப் போய் உமா கிட்ட போகணும்ன்னு அடம் பண்ணி இங்க வந்த. இப்ப ஏதோ ஒரு மாதிரி சரியாகிட்டன்னு நினைச்சா, திரும்ப இப்படி விலகிப் போறியே? நீ விலகிப் போறதில் ஏற்படுற வலியை விட, நீ துடிக்கிறதை என்னால பார்க்க முடியலையே வினுமா? இதுக்கு என்ன தான் தீர்வு?" என்று மனதில் ஆயிரம் ஆயிரம் கேள்விகளும், அவற்றுக்கு பதில் சொல்ல முடியாமல் போன வருத்தமும் விஜயை ஆழ்ந்த மௌனதிற்குத் தள்ளியது.

விடை தெரியவில்லை என்பதற்காக கேள்விகளை ஒதுக்கவும் முடியவில்லை.

என்ன விதமான பிரச்னை என்றாலும் அதை ஒதுக்கி வைப்பதால் அது தீர்ந்து விடாது, மனதில் திடத்தோடும், நம்பிக்கையோடும் அதை எதிர்கொண்டால் பிரச்சனைக்கான தீர்வு தானாகவே வரும் என்று முழுமையாக நம்பும் விஜயால் பிரச்சனையை தனா மற்றும் உமாவின் பொறுப்பில் விட்டுவிட்டு, தான் தனியாக உருகி மருகுவதை மட்டும் செய்துகொண்டு பிரச்சனையைத் தீர்க்காமல் ஒரு கையாலாகதனத்துடன் இருக்க மனம் இடம் கொடுக்கவில்லை.

என்ன பிரச்னை என்றாலும் அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்ற உறுதியை அவன் எடுத்து முடித்தப் போது, அவர்களது கல்லூரி தோழி நிர்மலாவின் மருத்துவமனை வந்திருந்தது.

விஜய் கதவைத் திறந்த போதே கலங்கிய முகத்துடன் தனசேகரனும், கலங்கிய விழிகளுடன் உமாவும் அவர்களை நோக்கி ஓடி வந்தனர்.

விஜய் வினுவைக் கைகளில் ஏந்திக் கொள்ள, உமா "என்ன விஜய்? போகும் போது சந்தோஷமா தானே போனீங்க? நமக்கு மட்டும் ஏன் தான் இந்த வேதனையோ" என்று தன் நிதானத்தையும் மீறி புலம்பிக் கொண்டே அவனுடன் உள்ளே நடந்தாள்.
நோயாளிகளை பார்க்கும் நேரம் முடிந்திருந்தாலும் வினயாவின் உடல் நிலை காரணமாக வீட்டிலிருந்து அடித்துப் பிடித்து வந்திருந்த நிர்மலா, என்றைக்கும் மில்லாமல் இன்று உமாவின் முகம் மிகவும் கலவரம் அடைந்திருப்பதைக் கண்டு "என்ன உமா? நீயே இப்படி இருந்தா அங்கிள், தனா எல்லாரும் என்ன செய்வாங்க?" என்று தன் பங்கிற்கு அவளை அடக்கிவிட்டு வினயாவின் சிகிச்சையைத் தொடங்கினாள்.

அதுவரை ஒன்றும் பேசாமல் இருந்த விஜயை மட்டும் அறையில் இருக்கச் சொல்லிவிட்டு உமாவை வெளியேற்றினாள் நிர்மலா.

விஜயிடம் நடந்த அனைத்தையும் கேட்டு, பிரச்சனையின் மூலக் காரணத்தை உள்வாங்கிய நிர்மலா ஒரு மனநல மருத்துவர்.

"she is so fragile விஜய். கண்ணாடி பாத்திரத்தைக் கையாள்வது மாதிரி ரொம்பப் பக்குவமா கையாளனும்" என்று அறிவிறுத்தியவளிடம் பதில் ஏதும் சொல்லாமல் வினுவையே தீவிரமான சிந்தனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் விஜய்.

"அவளுக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லை இல்ல?" என்று கேட்டவனை விநோதமாய் பார்த்த நிர்மலா, "உடம்புக்கு ஒன்னும்மில்ல. ஆனா அவளோட மனசு..." என்று அவள் மேலே தொடரும் முன்னர்

"மனசை நான் பார்த்துக்கிறேன். அவ இப்ப ட்ராவல் செய்யலாமில்ல? அதுல ஒன்னும் பிரச்னை இல்லையே" என்றான் இன்னமும் வினுவின் மேல் பதித்திருந்த பார்வையை திருப்பாமல்.

"ஹே, எங்க கூட்டிட்டு போகப் போற? her condition is not that convincing vijay. she might turn violent sometimes" என்று நிர்மலா பதற.

"அதெல்லாம் மாட்டா. அவ யார்கிட்ட ஒழுங்கா இருப்பாளோ அவங்களை வச்சு நான் பார்த்துக்கிறேன்" என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே கதவைத் தட்டிக் கொண்டு உமா உள்ளே நுழைந்துவிட்டாள்.

"என்ன பிரச்னை? யாராவது ஏதாவது சொல்லுகளேன்? எனக்கு மனசு கிடந்து அடிச்சுக்குது" என்று வினுவின் அருகில் சென்று அவளை வருடிக் கொடுத்தவாறே உமா வினவவும்,

"ட்ரெயின்ல தேவேந்திரனை பார்த்துட்டா" என்ற மூன்றே வார்த்தைகளில் உமாவின் முகத்தில் மூவாயிரம் வாட்ஸ்க்கும் அதிகமான மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது. ரத்தமென சிவந்த முகம் அவளது கோபத்தின் அளவை வார்த்தையின்றி வெளிக்காட்டியது.

"அந்த நாயா? அவன் என்ன செய்றான் சென்னைல?" என்று கண்ணியம் குறைந்த வார்த்தைகளை உதிர்கிறோம் என்ற வருத்தம் துளி கூட இல்லாமல் உமா பேசிய போது தனாவும், வைரவனும் உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர்.

உமா உதிர்த்த வார்த்தைகளிலிருந்து யாரென்று கண்டு கொண்டவன் போல "யாரு தேவ்வா?" என தனசேகரன் வினவியதும் தளர்ந்திருந்த வைரவன் அதிர்ந்து போக, உமா மிரண்டு போனாள்.

வெண்ணை மெதுமெதுவாகத் திரண்டு வரும்போது, யாரோ ஒரு பெரிய தடியைக் கொண்டு பானையை சுக்கு நூறாக உடைத்து போலிருந்தது உமாவிற்கு.

அப்போது வினு லேசாக அசையவே, அவள் மீது திரும்பிய கவனம் தன்னை பெரும் சுயநலவாதியாக காட்ட உமா சட்டென கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டாள். அப்படித் துடைத்ததில் விழிகளில் திரண்ட கண்ணீர் விழியை விட்டு மட்டும் சென்றதே தவிர, நெஞ்சில் சூழ்ந்த கோபமோ, வருத்தமோ, பயமோ ஒரு சதவீதம் கூட குறையவில்லை எனும்போது அவை செல்ல வாய்ப்பே இல்லாமல் போனது!

"ஆமா, தேவ் தான். இந்தியா வந்திருக்கான் போல" என்று தனாவிற்குப் பதிலளித்த விஜய், மற்றவர்களை அறையில் விட்டுவிட்டு வெளியே சென்று, தன் கைப்பேசியை எடுத்து தாயிடம் பேசிவிட்டு பத்து நிமிடத்தில் உள்ளே வந்தான்.

அப்போது, "தூக்கத்திற்கு ஊசி போட்டிருக்கேன். காலையில வரைக்கும் என்னோட கவனிப்பிலேயே இருக்கட்டும். மார்னிங் வீட்டுக்குக் கூட்டிட்டு போகலாம்." என்று அறையிலிருந்தவர்களிடம் தெரிவித்த நிர்மலா, வினயாவின் அருகில் சென்று அமர்ந்தாள்.

"நான் அவளுக்கு நைட் துணைக்கு இருக்கேன். ட்ரக்ஸ் கொடுத்துட்ட தானே? நீ கிளம்பு நிர்மலா" என்று அவளிடம் கூறிய விஜய், "அம்மா வராங்க மாமா, நாங்க ரெண்டு பெரும் வினுவை நாளைக்கு ஊருக்குக் கூட்டிட்டுப் போறோம். அங்க வச்சு என்னானாலும் நான் face பண்ணிக்கிறேன்" என்றான் அழுத்தமாக.

"உனக்குப் பைத்தியம் தான் பிடிச்சிருக்கு" என்று தனா எரிச்சலுடன் அறிவிக்க,

"அந்த படத்தைப் பார்த்துட்டு அவ அழுத அழுகையை பார்த்துட்டுமா விஜய் இப்படி பேசுற?" என்று வைரவன் வியக்க,

"வேண்டாம் விஜய். அவ ரொம்ப சென்சிடிவ். பயப்படுவா விஜய்" என்று உமா மன்றாடினாள்.

"அவளை இப்படிப் பொத்தி பொத்தி வச்சுத் தான், பார்த்ததுக்கெல்லாம் மனசை வருத்திக்கிறா. எதையும் ஒரு தைரியத்தோடு பார்க்கவே மாட்டேன்றா. அதுக்கு ஒரே தீர்வு நான் அவளைக் கூட்டிட்டுப் போறது தான்னு நான் நினைக்கிறன். இதுல எந்த விதமான மாற்றமுமில்லை" என்று தனாவின் முகத்தை நேராக பார்த்து, நிதானமாக பேசியவனை

"ஹே, நீ என்னை நினைச்சிட்டு இருக்கே? நீ பாட்டுக்குப் பேசிட்டே போற? அவ ஓரளவுக்கு சுயமா சிந்திச்சு, தன்னோட வேலைகளை செஞ்சுக்கிறான்னா அது உமாவால தான். அதை முதல தெரிஞ்சுக்கோ" என்று மருத்துவமனை என்றும் பாராமல் குரலெடுத்துக் கத்தினான்.

"தனா ப்ளீஸ்" என்று உமா கெஞ்ச,

"சேகர், வாயை மூடு" என்று வைரவன் தன் தளர்ந்த குரலை நிமிர்த்தி மகனைக் கண்டித்தார்.

"நான் வையை மூடணுமா? என்னப்பா பேசுறீங்க நீங்க? அவன் என்னமோ நமக்கெல்லாம் வினு மேல அக்கறை இல்லாத மாதிரி பேசுறான். ரெண்டு மாசமா தானே இப்படி உருகிக் கரையுறான். அதுக்கு முன்னாடி எங்க இருந்தார் இந்த சார்? பெருசா பேச வந்துட்டான்" என்று தனா தன் ஆதங்கத்தைக் கோபமாக வெளியிட்டான்.

"நான் அவளை என் கூட அழைச்சுட்டுப் போறேன்னு தான் சொன்னேன். நீங்க அவளை நல்லாப் பார்த்துக்கலை என்றோ அவ மேல உங்களுக்கு அக்கறை இல்லையென்றோ நான் சொல்லல" என்று மெது குரலில் என்றாலும் தன் கருத்தைத் தெளிவாகவே முன் வைத்தான்.

"அவளை நீ கூட்டிட்டுப் போக நான் விடமாட்டேன்." என்று தனாவும் அழுத்தம் திருத்தமாகக் கூற,

"அவளைக் கூட்டிட்டுப் போக எனக்கு எல்லாவிதமான உரிமையுமிருக்கு தனா" என்று விஜயின் பொறுமையில் தன் வாய் வரை நீண்டிருந்த கோபம் கைகளுக்குத் தாவ விஜயின் சட்டையைப் பிடித்தவன் "என்னடா உரிமை, அவளோட இந்த நிலைமைக்கு நீயும் ஒரு காரணம், அது நியாபகம் இருக்கா இல்லையா?" என்று அடிக்கக் கை ஓங்கிய வினாடி, வைரவன் அவன் கைகளைப் பிடித்து விலக்க

"ஸ்டாப் இட் தனா" என்ற குரல் ஓங்கி ஒலித்தது.

**************************************************

பாகம் 8

"எத்தனை நாள் தான் இந்த வார்த்தையை சொல்லி எல்லாரையும் வாட்டுவீங்க? நாங்க பண்ணினது மன்னிக்க முடியாத தப்பா தனா? எங்களுக்கே தெரியாம நடந்த ஒன்னு. அதுக்காக நாங்க ரெண்டு பெரும் வருத்தப்படாத நாளே இல்லை தெரியுமா?. வேற என்ன பண்ணனும்ன்னு சொல்றீங்க?" என்று உயர்ந்த குரலில் ஆரம்பித்து, கைகளை ஏந்தினார் போல் வைத்துக் கெஞ்சியது உமாவே தான்!

"தப்பா? அது மன்னிக்க முடியாத பாவம்! இன்னும் அது உங்களுக்குப் புரியலையா?" என்று ஈனப் பிறவியைப் பார்ப்பது போல தனசேகரன் பார்க்கவும் உமா கூனிக் குறுகிப் போனாள்.

"பாம்பு மாதிரி அவளைக் கொத்திப் பிடுங்குவதை நிறுத்து தனா. வினுவுக்காக வீட்டைத் தூக்கி எறிஞ்சுட்டு வந்தவடா அவ. இன்னும் அவ என்ன செய்யணும்ன்னு நினைக்கிற நீ? சை" என்று தன் ஆத்திரத்தை மகன் மேல் காட்டியவருக்கு, அவன் அவனது தங்கையின் மீது வைத்திருக்கும் பாசமும் புரிந்தது.

அவள் மீதிருக்கும் அளவு கடந்த பாசம் தானே தான் காதலித்தப் பெண்ணைக் கூட ஒதுக்கி வைக்க வைத்திருக்கிறது. அப்படியிருக்கும் போது அந்தப் பாசத்திற்குப் பரிசாக அவனை வாட்டுவதாகவே பட்டது இந்தப் பேச்சு.

அதனால் சில நொடிகள் கண் மூடி அந்தக் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்தவர், "நடந்து முடிந்ததை நடக்க இருப்பதோடு கலக்கமா தெளிவான ஒரு முடிவுக்கு வரலாம்" என்று எப்போதும் போல் சமாதானத்திற்கு வந்தார் வைரவன்.

விஜயின் புறம் திரும்பி, "நீ கூட்டிட்டுப் போக வேண்டாம்ன்னு நாங்க சொல்லல விஜய். எங்களை விட உனக்குத் தான் அவ மேல நிறைய உரிமை இருக்கு. ஆனா அவ இருக்கிற மன நிலை தான்..." என்று வைரவன்இழுக்கவும்

"எனக்கு இருக்கும் உரிமையை நிலை நாட்டுறதுக்காக நான் அவளைக் கூட்டிட்டுப் போகலை மாமா. சொல்லப்போனா, இன்னும் அவ எனக்கு சட்டப்படி மனைவி ஆகலை. தனா சொல்ற மாதிரி எனக்கு உரிமை இல்லைதான். ஆனா..." என்று அவன் தொடங்கும்போதே

"சாலாவின் தாலிச் சங்கிலி எப்போ உன் கையால் அவள் கழுத்தில் போடப்பட்டதோ, அந்த நிமிஷமே எங்க எல்லாரையும்விட நீ அவளை நெருங்கிட்ட விஜய். அதனால உரிமை பத்தி நாம

பேசவேண்டாம்…" என்று வைரவன் தன் வலது கையை உயர்த்தி அவனை அந்தப் பேச்சை விடுமாறு அறிவுறுத்தினார்.

"சரி மாமா, அவ சில விஷயங்களை எதிர்கொண்டா உடைஞ்சு போய்டுறா என்பதற்காக அதை நாம தவிர்த்துட்டே இருக்க முடியாதில்லையா? நம்மையும் மீறி அது நடக்கும் போது ரொம்பத் துடிச்சுப் போறா… கொஞ்சம் கொஞ்சமா நிதர்சனத்தை நிஜமாக எதிர்கொள்ளும் தைரியத்தை அவளுக்குக் கொடுக்கணும் மாமா. சும்மா பயப்படுறா, அழறான்னு நினைச்சுட்டு அவளைப் பொத்திப் பொத்திப் பாதுகாத்து ரொம்ப உள்ள போய்ட்டா மாமா. அதனால தான் என்னோட அவளைக் கூட்டிட்டுப் போறேன்னு சொல்றேன். வினுவைக் கொஞ்சம் கொஞ்சமா இந்த நிலைமையில இருந்து மாற்றி பழைய துள்ளலை அவகிட்ட கொண்டு வரவேண்டியது என் பொறுப்பு மாமா. நம்புங்க" என்று அவர் கையைப் பிடித்து அவன் உறுதியான குரலில் பேசவும் வைரவனின் கண்களில் ஏக்கம் படர்ந்து கண்ணீர் சூழ்ந்தது.

ஆனால் தனாவோ, தந்தையின் உடலசைவிளிருந்தே அவர் வினயாவை விஜயுடன் அனுப்ப முடிவு செய்துவிட்டார் என்று தோன்றிய நிமிடத்தில் "அவளை ஒரேடியா உருக்குலைக்கணும்ன்னு முடிவு பண்ணிட்டீங்க. நடத்துங்க. அவளுக்கு மட்டும் எதாவது ஆச்சு, மகனே உன்னைக் கொல்லாம விடமாட்டேன் தெரிஞ்சுக்கோ. அவனுக்கு சப்போர்ட் பண்ற எல்லாருக்கும் சேர்த்துத் தான் சொல்றேன்" என வார்த்தைகளை அள்ளிக் கொட்டியதோடு நில்லாமல் உமாவை மட்டுமில்லாமல் தன் தந்தையையும் உறுதி விழித்தவன், தங்கையின் அருகில் சென்று அவள் கூந்தலை ஒதுக்கிவிட்டு, "அம்மு, அம்முக்குட்டி" என்ற பாசம் கலந்த அழைப்பை உதடுகள் பாட்டுக்கு உதிர்க்க, அவள் நெற்றியில் இதழ் பதித்தப் போது, அந்த எரிமலையின் மனதிலிருந்த ஈரம் கண்ணீராய் அவள் கன்னத்தில் விழுந்தது.

தங்கையின் கன்னத்தில் பதித்த உதடுகளால் சுடு சொற்களை உதிர்க்கவேண்டாம் என்றெண்ணினானோ என்னவோ அந்த அறையில் கூடியிருந்த யாரையும் கண்கொண்டு பார்க்காமல் விடுவிடுவென வெளியே சென்றுவிட்டான் தனசேகரன்.

"நீங்க அவரோட கிளம்புங்க மாமா, நான் வினு கூட இருக்கேன். மறக்காம மாத்திரை சாப்பிட்டுப் படுங்க." என்று உமா தன் மாமனாரை வீட்டிற்குக் கிளப்ப, விஜய் அவளையே வீட்டிற்குத் துரத்தினான்.

"நீயும் கிளம்பு உமா, நான் அவளைப் பார்த்துக்கிறேன். அம்மா நாளைக்குக் காலையில, ஒரு பத்து மணி வாக்கில வருவாங்கன்னு நினைக்கிறேன் உமா. உன்னால வர முடியுமா?" என்று அவளைப் போகச் சொல்லி, வரச்சொன்னான்.

"இல்ல விஜய் நான் இருக்கேன். அங்க போனாலும் வினுவை நினைச்சுத் தூக்கம் வரப் போறதில. அவளைப் பார்த்துக்கிட்டு இங்கயாவது இருக்கேன். ப்ளீஸ். திரும்பத் திரும்ப என்னைத் துரத்தாதே" என்று சலித்தக் குரலில் மொழிந்துவிட்டு வினுவின் அருகிலிருந்த இருக்கையில் சென்று அமர்ந்துகொண்டாள்.

தயங்கி நின்ற வைரவனை "நாங்க பார்த்துக்கிறோம் மாமா. ராத்திரி கண் முழிச்சா உங்க உடம்புக்கு ஆகாது. நீங்க வீட்டுக்குக் கிளம்புங்க. நான் உங்களை வீட்டில விட்டுட்டு திரும்ப வரேன்" என்று அவரை வெளியே அழைத்து வந்தவன் தனாவைக் கண்டதும் சற்றே அதிசயித்தான்.

இருந்த கோபத்தில் கண் மண் தெரியாமல் வண்டியை எடுத்துக் கொண்டு பறந்திருப்பான் என்றெண்ணினால் இவன் இங்கு கையைக் கட்டிக் கொண்டு வெளியே வெறித்தவாறு நிற்கிறானே! என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கும் போதே "நான் அவனோட வீட்டுக்குப் போறேன் விஜய், நீ உள்ள போ" என்றுவிட்டு மகனை நாடி சென்றார் வைரவன்.

வைரவனை அனுப்பி வைத்துவிட்டு விஜய் உள்ளே நுழைந்த சமயம், உறங்கிக் கொண்டிருந்த வினயாவின் விரல்களை மென்மையாக வருடிக் கொண்டிருந்த உமாவைக் கண்டு உள்ளம் உருகியது.

அந்த அறையிலிருந்த மற்றொரு நாற்காலியில் அவன் அமர, அங்கு சற்று நேரம் அசாத்திய அமைதி நிலவியது. அந்த சற்று நேரம் ஒரு மணி நேரமாக நீடித்தப்போது கூட அவர்கள் அமர்ந்திருந்த நிலையிலோ, எண்ணிக்கொண்டிருந்த விஷயத்திலோ மாற்றமேதும் நிகழ்ந்திருக்கவில்லை.

சட்டென அமைதியைக் கலைத்த உமா "ஏன் விஜய்? என்மேல உனக்கு நம்பிக்கையில்லையா? நான் வினுவை நல்லாப் பார்த்துக்க மாட்டேன்னு நினைக்கிறியா?" என்று வலிக்க அடி வாங்கிய குழந்தையைப் போல் கேட்கவும்

"ச்சே ச்சே, உன்னை நம்பலைனா கிட்டத்தட்ட பத்து வருஷமா நமக்கு நடுல இருக்க நட்புக்கே அசிங்கம் உமா. மூணு வருஷமா உன் வாழ்க்கையைப் பத்தி நினைக்காம அவளுக்காகவே வாழ்ந்துட்டே. இனிமேலாவாது உன்னையும் நீ பார்க்கணும்கறதும் நான் எடுத்து இந்த முடிவுக்கு காரணம். என்னைக் கொஞ்சம் புரிஞ்சுக்கோ உமா. அம்மாக்கு அப்புறம் நீ தான் என்னை நல்லாத் தெரிஞ்சுவச்சிருக்கேன்னு நான் நினைச்சிட்டு இருக்கேன். நீ என்னடா என்றால் உன்னை நான் நம்பல அப்படி இப்படின்னு என்னைக் குற்றவாளி ஆக்கிற?" என்று விஜய் நொந்து கொள்ள,

"என் வாழ்க்கையைப் பார்க்கிறதா? ஹ்ம்ம்... வினுவும், நீயும் நல்லா இருந்தா எனக்குப் போதும் விஜய். மாமாவோட வார்த்தைக்காகவும், வினுவோட நிலைமைக்காகவும் தான் இங்க இருக்கேன். வினுவோட வாழ்க்கை ஒரு சீரா போக ஆரம்பிச்சதும் மாமாகிட்ட பேசி, ஏதாவது வெளியூர் போய்டலாமான்னு இருக்கேன் விஜய். இன்னைக்குப் பேசின மாதிரி சுடு சொற்கள் கூட பரவாயில்லை விஜய். தனாவோட அமைதி என்னைக் கொல்லுது. மரத்துப் போன மனசு தான் என்றாலும் வலிக்குதே!" என்று தாயாய் இருந்து ஒரு குழந்தையை பார்த்துக் கொண்டவள் குழந்தையாய் மாறி மருகினாள்.

அவளை என்ன சொல்லித் தேற்றுவது என்று தெரியாமல் "எல்லாம் சரியாகிடும் உமா. எதுவா இருந்தாலும் என்கிட்டே சொல்லாம எந்த முடிவும் எடுக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொடு" என்று அவளுக்கு நண்பனாய் ஆறுதலளித்ததோடு நிற்காமல் அவள் நலம் விரும்பியாய் அவளிடம் ஒரு உறுதியை வேண்டினான்.

"ஹ்ம்ம்" என்று தன் கையை அவன் கையினுள் வைத்து சுரத்தே இல்லாமல் சத்யம் என்ற பெயரில் தன் சம்மதத்தைக் கூறினாள்.

நண்பர்கள் இருவரும் தங்கள் குழந்தையாய் மாறிப் போன வினயாவைப் பற்றிய கவலையில் அதன் பின்னர் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. உமா கண்ணசந்த போதும் சரி, அவள் கண் விழித்திருந்த போதும் சரி கண்களில் தூக்கத்திற்கு இடம் கொடுக்காமல் வினயாவின் அசைவிற்காகவும், விழிப்பிற்காகவும் காத்திருந்தான் விஜய்ஆனந்த்.

விடிகாலையில் கண்விழித்த வினயா மீண்டும் தன் அரண்ட தோற்றத்தையே பூசிக் கொள்ள உமாவின் தரிசனம் அங்கே மிகமுக்கியமான ஒன்றாகப் பட்டது.

"அண்ணி, அண்ணி" என்று உமாவின் நெருக்கத்தை துணையாகக் கொண்டிருந்தவளை விஜயின் கரங்களின் தீண்டுதல் கூட பெரும் கலக்கத்தை உண்டு பண்ணி, "நீங்க போய்டுங்க....நீங்க போய்டுங்க...." என்று உளற வைத்தது.

ஆனால் இந்த சலுகைகள் அனைத்தும் துளசி அம்மா வரும்வரை தான் நீடித்தது என்பது அப்போதைக்கு வினயாவின் கெட்டக்காலமாகப் பட்டாலும், தொலை நோக்குப் பார்வையில் பார்த்தப்போது பெரும் நன்மையைத் தாங்கி இருந்தது.
ஆனால் தூரத்திலிருக்கும் பச்சையை விட அருகே இருக்கும் சிவப்பிற்கு ஈர்ப்பு அதிகம் என்பது போல வினயாவிற்குத் தன் சலுகைகளை யாரோ பிடிங்கிக் கொண்டது போல முகம் வாடிப் போனது.

சலுகை அளிக்க மறுக்கப் பட்டதில் உமாவிற்கும் வருத்தம் தான் என்றாலும் அவளுக்கு சிவப்பை விட பச்சையின் மேல் பிடித்தம் அதிகம் இருந்ததால் அன்றைய நிஜம் முகத்தை வாடாமல் பார்த்துக் கொண்டாள்.

அப்படியென்ன நடந்தது என்றால், துளசி அம்மா குன்னூரில் இருந்து காரில் வந்திறங்கிய பத்து மணிக்கு, வினயாவின் முகம் உமாவின் வயிற்றுக்குள் புதைந்திருக்க, வந்த வேகத்தில் மருமகளை நிமிர்த்தியவர் "வினயா, துளசிம்மா வந்திருக்கேன், வந்தவளை வாங்கன்னு கூட கேட்காம உங்க அண்ணி வயித்துக்குள்ள என்ன புதையல் இருக்குன்னு அதைத் தேடிக்கிட்டு இருக்க?" என்று கேட்டதிலேயே அவரது குரல் ஓங்கியிருந்தது.

"ஹான்" என்று திறந்த வாய் மூடாமல் உமாவின் முகத்தையும் துளசி அம்மாவின் முகத்தையும் பார்த்தவள் மீண்டும் உமாவின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

“என்னைப் பார்த்து என்ன பயம் உனக்கு? உமாவை முதல விடு. அவ வேலைக்குப் போகவேண்டாமா? ம்ம்?” என்ற கேள்வியை முன் வைத்தவாறே அவளை உமாவிடமிருந்து விடுவித்து “ம்ம், எழுந்திரு. போய் முகம் கழுவிட்டு வா” என்று வினயாவைக் கட்டிலை விட்டும் கிளப்பினார்.

அவர் விரட்டிய விரட்டலில் விஜயே “அம்மா, அவளுக்கு உடம்பு கொஞ்சம் முடியலமா, நிர்மலா வந்து ஒரு தடவைப் பார்த்துடட்டும். அப்புறமா...” என இழுக்கவும்

“அதெல்லாம் அவ செய்வா, இல்ல வினு? போடா போய் முகம் கழுவிட்டு வா.” என்று அவளை அனுப்பியவர் பின்னோடு சென்ற உமாவை “என்னமா வேலைக்கு நேரமாகுதில்ல? வினு அப்பாக்கு டிபன், சாப்பாடு எல்லாம் செய்யணும் தானே, நீ கிளம்பு. நானும் விஜயும் நான் வந்த காரிலேயே வினுவை கோயம்புத்தூர் கூட்டிட்டுப் போகப் போறோம்” என்று அடுத்து செய்யப் போகும் வேலைகளை சொன்னதோடு நிற்காமல் உமாவையும் வீட்டிற்குப் போகச் சொன்னார்.

“அதும்மா, மாமா காலையிலேயே வந்துட்டு கொஞ்ச நேரம் முன்ன தான் வீட்டுக்குப் போனாங்க. இன்னைக்கு வெளிய சாப்பிட்டுக்கிறேன்னு...” என்று அவளது வாக்கியம் முடிவதற்குள்ளாகவே பழக்கூடையுடன் உள்ளே நுழைந்த வைரவன் “வாங்க சம்மந்தி அம்மா” என்று துளசியை வரவேற்றார்.

“எப்படி இருக்கீங்க அண்ணா? ரொம்ப ஓய்ஞ்சு போயிருக்கீங்களே!” என்று அவரது வரவேற்பை ஏற்றுக் கொண்டு அவரது நலத்தை விசாரித்தார் துளசி.

“ஹ்ம்ம், இருக்கேன்மா” என்றவர் “சம்மந்தி எப்படி இருக்கார்? அவர் வரலையா?” என்று வீரராகவன் வந்திருக்க மாட்டார் என்று தெரிந்திருந்தும் ஒரு எதிர்பார்ப்பில் கேட்டவர் துளசியின் முகம் போன போக்கைப் பார்த்து நிராசையில் வாடியிருந்த முகத்தை மேலும் வாட்டத்திற்கு உள்ளாக்கினார்.

“அவரை விடுங்க. அவரை இப்போதைக்கு மாத்த முடியாது. அவர் மாறுவதால பெருசா நன்மை ஒண்ணுமே இல்லை. வினு நல்லாகி விஜயும் அவளும் விஜயும் சந்தோஷமா இருக்கிறது தான் இப்போதைக்கு முக்கியமான விஷயம். அதை முதல பார்க்கலாம்” என்று தன் கணவர் வராததை ஒரு பெரிய விஷயமாகவே நினைக்காமல் மகனின் நல்வாழ்வை முன்வைத்து அதை ஒதுக்கியவர் மற்றவர்களும் அதைப் பெரிய விஷயமாக எண்ணி மனம் வாடாமல் பார்த்துக் கொண்டார்.

மருமகளைத் தன் ஆணைகளின் பெயரால் வேறு எதையும் யோசிக்கவிடாமல் செய்தவர் அவள் தன் மகனைக் கண்டு ஒடுங்குவதைக் கண்டாலும், அந்த ஒதுக்கத்தை இப்போதைக்கு வெறும் வார்த்தைகளால் போக்க முடியாது என்றறிந்தவர் போல அந்த விஷயத்தை மேற்கொண்டு கிளறாமல் விட்டார்.

நிர்மலா வந்து ஒரு முறை வினயாவைப் பரிசோதித்தப் பின்னர், முதல் நாள் விஜயும் வினயாவும் எடுத்துச் செல்லவிருந்த பொருட்களை, தாயார் வந்த காரில் ஏற்றிக் கொண்டிருந்தான் விஜய் ஆனந்த்.

உமாவும், வைரவனும் துளசி அம்மாவை வீட்டிற்கு அழைக்க, அவரோ இப்போது வீட்டிற்கு வந்தால் வினயாவை அங்கிருந்து கிளப்புவது பெரும்பாடாக போய்விடும் என்பதோடு இப்போது கிளம்பினால் தான் இரவேனும் கோயம்புத்தூர் செல்லமுடியும் என்று கூறி அவர்களது அழைப்பை அடுத்த முறைக்கு ஒத்தி வைத்தார்.

வினயா அனுமதிக்கப் பட்டிருந்த அறையிலிருந்து நிர்மலா வெளிப்பட்டு, வினயாவின் உடல்நிலையில் எந்தவிதமான பிரச்சனையுமில்லை. ஆனால் மனதில் நேற்று இரவு குடிக் கொண்ட கலக்கமும், கோபமும், பயமும் அவளை ஒரு நிலையில் இருக்கவைக்காது என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, அதைக் கேட்க விஜயையும் உமாவையும் விட்டுவிட்டு வினயாவை நாடிச் சென்ற துளசி, “நம்ம வீட்டுக்குப் போகலாமா வினு? கார் ரெடியா இருக்கு. கிளம்பு” என்று சிறு குழந்தையை ஊருக்குக் கிளம்பச் செய்வது போல அவளிடம் பேசினார்.

“வேணாம் துளசிம்மா, நான்... நான்... நேத்திக்கு அந்த தேவ்.... வேணாமே... நீங்க விஜியை மட்டும் கூட்டிட்டுப் போங்க... நான் வேணாம்... நான் அண்ணி கூடவே இருக்கேன்... எனக்குப் பயமா இருக்கு... எனக்குப் பிடிக்கல” என்று உதிர்த்த ஒவ்வொரு வார்த்தைக்கும் சம்பந்தில்லாமல் பேசியவள் (ஒருவேளை அவளுக்கு அதில் சம்பந்தம் தெரிந்ததோ?) கட்டிலை விட்டு இறங்க ஒரு சிறு முயற்சி கூட எடுக்காமல், மேலும் மேலும் பின்னடைந்தாள்.

“யாரைக் கூட்டிட்டுப் போகணும், யாரை விட்டுட்டுப் போகணும்ன்னு எனக்குத் தெரியும். நீ பேசாம என்னோட கிளம்பி வா” என்று அவள் கையைப் பிடித்து அழைத்தவர் அவள் அழ ஆரம்பிக்கவும், அவளின் முகத்தைத் தன் பால் திருப்பி

“வினுமா, இங்க பாரு. அம்மாவைப் பாருடா” என்று மென்மையாக அழைத்து, “நீயும் நானும் மட்டும் தான்டா போறோம். விஜயை நம்ம கூட வரவேண்டாம்ன்னு சொல்லிடலாம். அவனை ட்ரைன்ல வரச் சொல்லிடுறேன். சரியா?” என்றார் மெதுவாக.

“ட்ரைன் வேணாம், தேவ் இருப்பான்.” என்று அவள் மீண்டும் அரண்ட பார்வையை விலை பேசி வாங்கிக் கொள்ளவும்

“சரி, சரி, ட்ரைன் வேண்டாம். பஸ்ல வரட்டுமா?” என்று கேட்டு அவள் தலையை ஆட்டி சம்மதம் தெரிவித்து, உடனே “ஹான், நான் அண்ணி கூடவே இருக்கேன். அங்க வரல. விஜய்க்கு நான் வேண்டாம் துளசிம்மா” என்றாள் கண்களில் மீண்டும் திரண்டு கண்ணீருடன்.

“அவனுக்கு நீ தான் வேணுமாம். எத்தனையோ வருஷமா தவமிருக்கான்” என மனதிற்குள் தோன்றிய வார்த்தைகள் ஒலி பெரும் முன்னர், மூளை வேறு ஒன்றை முக்கியமான விஷயமாக அறிவுறுத்த,

“அண்ணி கூடவே இருந்தா அவ வேலைக்குப் போகவேண்டாமா? நீயும் தான் எத்தனை நாள் காலேஜ் போகாம இருப்ப? ஏற்கனவே ஒரு மாசம் ஆகிடுச்சு இல்லையா. இனிமேலாவது ஒழுங்கா காலேஜ் போய், பட்டம் வாங்குற வழியைப் பார்க்க வேண்டாமா வினுமா?” என்று அவர் கேள்வி கேட்டப் போதும்,

“எனக்கு அண்ணி கூட இருந்தா தான் அதை மறக்க முடியுது. இல்லைன்னா ஒரே கனவு கனவா வருது” என்று பாவம் போல் கூறியவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்ட துளசி “இனிமேல் துளசிம்மா உன் கூட இருக்கேன். உன் அண்ணி மாதிரியே உன்னைப் பார்த்துக்கிறேன். சரியா?” என்ற அவரது சமாதானமும் அவளை நகர்த்தவில்லை என்பது அவளது தெளியாத முகத்திலிருந்தே தெரிந்தது.

“சரி, உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம். என்னோட ஒரு ஒரு மாசம்... ஒரே மாசம் இருந்து பார்க்கிறியா? உனக்குப் பிடிச்சா அங்க இருக்கலாம். இல்லைனா உன் அண்ணிக்கிட்ட வந்துடலாம். ஹ்ம்ம் என்ன சொல்ற?” என்று கடைசியாக ஒரு பேரத்திற்கு இறங்கினார் துளசி வீரராகவன்.

இந்தப் பேரத்திற்குப் படியாமல் இருக்கமுடியாது என்று வினயாவிற்குப் பட்டதோ என்னவோ சன்னமான ஒரு தலையாட்டலை பதிலாக அவள் அளிக்க, மீண்டும் மருமகளின் மனம் மாறுமுன்னர் அவளை அழைத்துக் கொண்டு வேகமாக மருத்துவமனையைக் காலி செய்தார் மாமியார்.

வெளியே நின்றிருந்த அனைவரிடமும் விடைபெற்று அவர்கள் காரில் ஏறவும், விஜய் காரின் முன் இருக்கையில் அமர்ந்து அவர்களுக்குக் கை ஆட்டினான்.

விஜய் அவர்களுடன் காரில் வருவதில் முதல் அதிர்ச்சியை அடைந்த வினயா, துளசிம்மாவின் முகத்தைப் பத்து முறையேனும் பார்த்து, தான் நினைத்ததைக் கேட்காமலேயே பெரம்பூர் வரும்வரைக் கடத்தினாள். அவரும் அவள் வாயிலிருந்தே வரட்டும் என்று அமைதி காத்தார் என்றால் விஜய் தன் அமைதியான குணத்தை எந்தக் காரணத்தினாலோ மீண்டும் அமலுக்குக் கொண்டுவந்தான்.

ஒரு நிலைக்கு மேல் தன் மனதிலிருக்கும் கேள்வியை கேட்காமல் இருக்க வினயாவின் இயற்கை குணம் கை கொடுக்கவில்லை போலும். அதனால், “துளசிம்மா, விஜி நம்ம கூட வராங்க?” என்றாள் கேள்வியாக.

“ஆமா வினயா, விஜய் நம்ம கூட தான் வரான்” என்று என்னவோ அவளுக்குத் தெரியாததை அறிவிப்பது போல அவர் பதிலளிக்கவும்

“நீங்க... நீங்க... விஜி பஸ்ல தானே...” என்று முடிக்காமல் அவரைக் குற்ற வாளிக் கூண்டில் ஏற்றினாள் வினயா.

“ஒரே ஊருக்குப் போறோம். அதுவும் ஒரே வீட்டுக்கு. ஒரே நேரத்தில. அப்புறம் எதுக்கு பஸ்க்கு தனியா காசு கொடுத்துக்கிட்டு? அதனால் தான் விஜய் நம்ம கூட வரான்.” என்றார் சாதாரணம் போல.

“அப்புறம் எதுக்கு நீங்க... அப்படி... அப்படி சொன்னீங்க?” என்று மீண்டும் குற்றம் சாட்டியவளை

“அந்த பேரம் நீ எல்லா நாளும் என் கூட தங்குறதுக்கு ஒத்துக்கிறதுக்காக வச்சது. நீ தான் ஒரு மாசம் மட்டும் தான் என் கூட இருப்பேன்னு சொல்லிட்ட இல்லையா? அதனால அதெல்லாம் ரத்தாயிடுச்சு” என்று அவர் கூறவும் விஜயின் முகத்தில் மெல்லிய கோடென சிரிப்பு படர்ந்து, வினுவை அம்மாவின் உதவியோடு கொஞ்சம் கொஞ்சமாக சரி செய்துவிடலாம் என்ற நம்பிக்கை வந்தது!

*************************************************

பாகம் 9

பதினோரு மணி அளவில் சென்னையை விட்டுக் கிளம்பிய விஜய் ஆனந்த் குடும்பத்தினர் மதிய உணவுக்கென சேலம் மாநகரில் வண்டியை நிறுத்திய போது விஜயின் தாயும் தாரமும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

சீட்டில் தலை சாய்த்து, கண் மூடியிருந்த தாயை மெல்ல தோளில் தட்டி எழுப்பிய விஜய்க்கு, மாமியாரின் மடி மேல் தலை சாய்த்து, கார் சீட்டில் படுக்கும் விதத்தில் கால்களைக் குறுக்கிக் கொண்டு படுத்திருந்த வினயாவை முகத்தில் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருப்பதே நன்றாக இருந்தது போலும்.

மருமகளைக் கண்களால் வருடிக் கொண்டிருந்த மகனிடம் “அம்மாவை எழுப்பிய நேரம் பொண்டாட்டியை எழுப்புவதற்கு நல்லதாக படவில்லையா சார்?” என்று சிரிப்புடன் வினவினார் துளசி.

“ச்சு அம்மா, முழுச்சுற போறாமா” என்று வாயில் விரல் வைத்து அம்மாவை எச்சரித்த விஜயின் முகத்தில் கண்டிப்பாக எச்சிரிக்கை இருக்கவில்லை! மாறாக அடக்கிய சிரிப்பும், அடுத்து விழப்போகும் ஒரு செல்ல அடிக்கான எதிர்பார்ப்பும் தான் அதில் நிறைந்திருந்தது.

மகனின் பாவனையில் இருந்து அர்த்தத்தை உணர்ந்து கொண்ட துளசி அவனது எதிர்பார்ப்பை இனிதே நிறைவேற்றிவைத்தார்.

கனமான பல பிரச்சனைகள் இருந்த போதும் அதை இலகுவாகவும் நிதானத்துடனும் கையாளும் தைரியத்தை மகனுக்குப் பாலுடன் சேர்த்துப் புகட்டிய துளசியும், அதை ஒழுங்காக மனதில் கிரகித்த விஜயும் சூழ்நிலையை பொறுமையுடனும், அதே சமயம் வினயாவின் மனதை பாதிக்காத விதத்திலும் கையாள முடிவு செய்தமையால் இந்த மாதிரி பேச்சுகள் அதற்கு முன்னோடியாய் இருந்தன.

ஆனால் இப்போது அவளது பயத்தை முன் கூட்டியே உணர்ந்தவன் போல் “உங்களை சாப்பிட எழுப்பிய நேரம் நல்ல நேரமா கெட்ட நேரமான்னு எனக்குத் தெரியாது. ஆனா நான் உங்க மருமகளை எழுப்பினேன்ன்னு வைங்க அது கண்டிப்பா எனக்குக் கெட்ட நேரம் தான். அதனால நீங்களே அவளை எழுப்புங்கமா” என்றுவிட்டு காரை விட்டு இறங்க எத்தனித்தான் விஜய்.

அவனது எண்ணம் புரிந்தாலும், அதை மாற்றும் நேரமும் காலமும் இன்னும் கூடி வரவில்லை என்று எண்ணிய துளசி, மறு பேச்சின்றி வினுவின் துயிலைக் களைத்தார்.

தூக்கமும், பசியும் சேர்ந்த மயக்கத்தில் துளசியோடு உணவகத்தின் உள்ளே சென்ற வினயாவோ அவர்களைப் பின்தொடர்ந்த விஜயைப் பார்க்கவே இல்லை.

உள்ளே சென்று நால்வர் அமரும் மேஜையில் ஒரு புறம் பெண்கள் இருவரும் அமர, அவர்களைப் பார்த்த மாதிரி அமர்ந்தான் விஜய் ஆனந்த். தாய்க்கும் தனக்கும் உணவை ஆர்டர் செய்துவிட்டு வினுவை அவளது விருப்பத்திற்காக நிமிர்ந்து பார்த்தப் போதுதான் அவள் துளசியின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு அவரை நெருங்கி அமர்ந்திருப்பது கண்ணில் பட்டு மனதில் வலியை உண்டு பண்ணியது.

அதை முயன்று மறைத்துக் கொண்டு “வினுமா, உனக்கு என்ன வேணும்? சாதம் சாப்பிடுறியா? இல்ல சப்பாத்தி வேணுமா?” என்று விஜய் வினவவும்

அவன் கெட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் துளசியிடம் திரும்பிய "துளசிமா, எனக்குப் பசிக்கல, நாம இங்க இருந்து போகலாமா?" என்றாள்.

"ஹ்ம்ம்...விஜய்க்குப் பசிக்குதாம். அவன்கிட்ட கேளேன்" என்று துளசி மகனிடம் அந்தக் கேள்வியைத் திருப்பிவிட்டு வேடிக்கைப் பார்த்தார்.

"ம்" என்று முனங்கியவள் "எனக்கு சப்பாத்தி. ஒன்னு" என்றாள் தரையைப் பார்த்துக் கொண்டு.

"ஒன்னு பத்தாது வினுமா, ரெண்டு சாப்பிடு" என்று தன்னிடம் பேசாதவளிடம் விஜய் கெஞ்சிக் கொண்டிருக்க

"ரெண்டு சப்பாத்தி கொண்டு வாப்பா" என்று பேரரை அனுப்பி வைத்தார் துளசி.

அவரைக் கேள்வியோடில்லாமல் குற்றத்தோடு வினயா எதிர்கொள்ளவும்

"நீ என்ன LKG படிக்கிற பாப்பாவா? எல்லாம் உன் புருஷன் கொடுக்கிற செல்லம். வேற என்ன சொல்றது? இனிமேல் நான் சொல்றதை மாதிரி தான் சாப்பிடனும், நடந்துக்கணும் சரியா?" என்று ஒரு அதட்டல் போட்டார்.

வினுவின் முகம் சட்டென வாடி அதில் கோபம் சூழ்ந்ததை விஜய் ஒரு சின்ன வருத்ததுடன் பார்த்துக் கொண்டிருக்க, அவன் பார்வைக்கு விருந்தாக துளசியை விட்டு ஒரு அடி நகர்ந்து தனியாக அமர்ந்து கொண்டாள் வினயா.

ஏதோ பேச விஜய் வாய் திறக்கும் முன்னர் அவனைக் கண்களால் அடக்கிய துளசியும் அமைதி காத்தார். சற்று நேரத்தில் வந்த உணவை யார் முகத்தையும் பாராமல் மெதுவாக என்றாலும் அதை மிச்சம் வைக்காமல் உண்டு முடித்த வினயாவை வீட்டிற்கு அழைத்துச் சென்ற துளசி, பல சமயம் மகனை வருத்தப் படவைத்து, வினயாவைக் கோபப் படவைத்து ஒரு பெரும் விளையாட்டை சாமர்த்தியமாக நடத்த ஆரம்பித்தார்!

அடுத்து வந்த வார இறுதியில் விஜய் மட்டும் குன்னூர் சென்று வர, அதுவரை வினுவைக் கல்லூரி செல்வதற்கு வற்புறுத்தவில்லை துளசி. அதற்காக அவளை வீட்டில் இருக்கவிடவும் இல்லை.

"இன்னைக்கு வெள்ளிக் கிழமை. கோனியம்மன் கோவிலுக்குப் போய்ட்டு வரலாம், வா",
"உமா கொடுத்துவிட்ட சுடிதார் துணியைத் தைக்கக் கொடுத்துட்டு வருவோமா? ஆர்.எஸ் புரத்தில ஒரு நல்ல டைலர் இருக்காங்களாம்",
"எனக்குப் பல் ஒரே வலியா இருக்கு. விஜய்க்கிட்ட போய் பல் சுத்தம் பண்ணிட்டு என்னனு பார்த்துட்டு வரலாம்ன்னு இருக்கேன். எனக்குத் துணையா நீயும் வரியா?" என்று பலவாறாக அவளைக் கூடக் கூட்டிக் கொண்டு கோயம்புத்தூரை வலம் வந்தார் துளசி.

தான் தயங்கி, மயங்கி, சில நேரம் கண்ணீரின் ஊடே கெஞ்சிய போது கூட துளசி மசிவதாக இல்லை எனத் தெரிந்து கொண்ட வினுவும் மூன்றாவது தடவைக்கு மேல் ஒன்றும் சொல்லாமல் அவருடன் கிளம்பும் காரியத்தைப் பார்க்கலனாள்.

விஜய்க்கோ, அங்கு வந்த இரண்டு மாதத்தில் கல்லூரியைத் தவிர வேறு எந்த இடத்திற்கும் வினயா வந்ததே இல்லை என்ற நிலையில், இப்போது அவள் தாயுடன் சேர்ந்து வெளயுலகைப் பார்ப்பது ஒரு புறம் நிம்மதியை அளித்தப் போதும், மறுபக்கம் என்றைக்கு இவள் முறுக்கிக் கொண்டு ஊருக்குப் பெட்டியைக் கட்டுவாளோ என்று கலக்கமாகவும் இருந்தது! இருக்காதா பின்னே தனாவின் (சொல்)அடியை யார் வாங்குவது! தனாவின் வார்த்தை ஒரு புறம் இருந்தாலும் அவனாலேயே வினயாவின் பிரிவைத் தாங்க முடியாது என்ற நிலையும் அவனை சற்றே கலங்கடித்தது!

அங்கே சென்னையிலோ வினுவின் மருத்துவமனை வாசமும், தனா உதிர்த்த சொற்களின் தாக்கமும் என்று மனதை மேலுமேலும் வாட்டிக் கொண்டிருந்த உமாவிற்கு வாழ்க்கையில் பெரும் வெறுமை குடி கொண்டது!

தான் விளையாட்டாய் கூறிய ஒரு வார்த்தை, ஒரு நல்ல பெண்ணின் வாழ்க்கையை கேள்விக் குறியாக்கி, தன் காதலை சுக்கு நூறாய் தகர்த்து, தன் குடும்பத்தின் மீது தான் வைத்திருந்த ஒரு

நூலிழை ஒட்டுதலையும் அறுத்து, என்ன என்ன மாய வருத்தங்களை நிகழ்த்தி விட்டது என்றெண்ணிய போது நெஞ்சம் வெடித்துவிடும் போலிருந்தது!

அதற்குப் பிரயசித்தமாய் ஆயிரம் ஆண்டுகள், ஏன் ஆயிரமாயிரம் ஜென்மங்கள் வினுவைப் பார்த்துக் கொண்டாலும் அந்தப் பாவத்தைக் கழுவ முடியாது என்று தோன்றிய வினாடி, தனசேகரன் கூறிய "தப்பா? அது பாவம்!" என்ற வார்த்தைகளுக்கு முழு அர்த்தம் புரிந்தது!

வினுவும் இல்லாத வீட்டில் நடை பிணமாய் அலைந்து கொண்டிருந்த உமாவை வேளாவேளைக்கு உண்ண வைத்து, அவள் கவனத்தை அவளது தொழிலின் மேல் திருப்பச் செய்து, தனக்கு உண்ணப் பிடிக்கவில்லை என்றாலும் சாப்பிடவென அவளை அதையும் இதையும் செய்யச் சொல்லிக் கொண்டு, காலையில் யோகா வகுப்பிற்கு அழைத்துச் சென்று என அவள் மனம் தனிமையில் உழலாமல் பார்த்துக் கொண்டார் வைரவன்.

அவளது வருத்தப் பட்டியலை அதிகமாக்கும் பொருட்டு துபாய்யிலிருந்து சனிக்கிழமை காலை வந்தது ஒரு ஃபோன் கால்!

ஹாலில் அமர்ந்து அன்றைய தினசரியில் தன் தலையை விட்டிருந்த தனசேகரன் தொலைப்பேசியை எடுத்துப் பேசியதும் "அப்பா, ஃபோன்" என்றுவிட்டு மீண்டும் தன் தலையை தினசரிக்குத் தாரை வார்த்தான்.

அவர் எடுத்து, மறுமுனையில் பேசியவர்களின் பேச்சைக் கேட்டதும் "உமா, உனக்கு ஃபோன் மா" என்று மருமகளைக் கூப்பிட்டார்.

அத்தோடு விட்டுவிடாமல் "ஏன்டா, அப்பா ஃபோன் என்று கூப்பிடிற வாயால உமா ஃபோன்னு சொன்னா நீ என்ன ரெண்டு கிலோ குறைஞ்சு போயிடுவியா?" என்று மகனிடம் சண்டைக்கு நின்றார்.

"இல்ல பத்து பதினஞ்சு கிலோ குறைஞ்சுடுவேன்" என்று தினசரியிலிருந்து கண்ணை எடுக்காமலே பதில் கூறிய மகனைக் கழுத்தை நெரிக்கும் அளவுக்குக் கோபம் வந்தது வைரவனுக்கு! ஆனால் மருமகளின் முகத்திற்காக தன்னை அடக்கிக் கொண்டு உள்ளே சென்ற வைரவன் உமாவின் கண்களில் வழிந்த கண்ணீரை கவனிக்கத் தவறினார்.

கண்ணீர் ஆறாய் ஓட "ம்மா, ம்மா" என்று சற்று நேரம் தடுமாறியவள், "எப்படி இருக்கீங்கம்மா?" என்றாள் ஒருவாராக தன்னைச் சுதாரித்துக் கொண்டு.

"நான் நல்லா இருக்கேன். இந்த நம்பர் எப்படிம்மா கிடைச்சது? அப்பா நல்லா இருக்காங்களா? இன்னமும் என்மேல கோபமாத் தான் இருக்காங்களா?" என்று கேள்விகளை அடுக்கினாள்.

அவள் கடைசியாக கேட்ட கேள்விகள் அந்தப் பக்கம் பெரும் கேவலை உண்டு பண்ணியிருக்க, ஐந்து நிமிடத்திற்கும் மேலாக "என்னாச்சுமா? என்னம்மா? எங்க இருந்து பேசுறீங்க? இந்தியா வந்திருக்கீங்களா?" என்று தனக்குத் தெரிந்த அளவில் அந்த அழுகைக்கான காரணத்தை ஊகிக்க முயன்றவள்

"அப்பாக்கு என்னம்மா? அப்பா நல்லா இருக்காங்க தானே? உடம்பு ஏதும் சரியில்லையா? ஹய்யோ ஏதாவது சொல்லுங்க... அழுதுட்டே இருந்தா எனக்கு ரொம்ப பயமா இருக்கு" என்று பதறினாள்.

தன் தந்தைக்கு உடம்பு சரியில்லை என்று அந்தப் பக்கமிருந்த தன் தாயார் கூறியதில் மனதிலிருந்த கோபத்தையெல்லாம் பாசமெனும் பாசி மறைத்துவிட அவருக்கு ஆறுதல் கூறி, தான் வருவதாக வாக்குக் கொடுத்து ஃபோனை வைத்தாள் உமா.

மனைவி அழ ஆரம்பித்தப் போதும் கண்களை தினசரியிலிருந்து நிமிர்த்தாமல், காதுகளை மட்டும் அவள் பேசும் விஷயத்திற்குக் கொடுத்து தன் வரட்டுக் கௌரவத்தைக் காத்துக் கொண்டிருந்த தனசேகரன், தொலைப்பேசியை அதன் தாங்கியில் வைத்துவிட்டு சோபாவில் சரிந்து அழத் தொடங்கிய உமாவைக் கண்டு அரண்டு போனான்.

தான் பார்த்துப் பழகிய இத்தனை ஆண்டுகளில் உமாவை இந்த அளவு உடைந்து போய் அவன் பார்த்ததே இல்லை எனலாம்... ஹ்ம்ம் இல்லை... இல்லை... ஒரு முறை, இதற்கு முன்னர் ஒரே ஒரு முறை அவள் கதறி துடித்து அவன் கண்டிருக்கிறான். ஆனால் அந்த சமயத்தில் அவளது

வேதனையைப் போக்காமல், ஏன் அவளது அழுகையை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காமல் தான் இருந்ததும் இப்போது நினைவு வந்து அவனை முகம் இறுக வைத்தது.

முகம் இறுக சற்று நேரம் அமர்ந்திருந்தவனின் மனதை அவளது அழுகை பிசைந்ததோ என்னவோ, சிறு தயக்கத்திற்குப் பின்னர் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு "தேவி" என்றான் மெதுவாக.

அவனது அந்த அழைப்பில் கண்ணில் வழிந்து கொண்டிருந்த கண்ணீர் சட்டென நின்று விட, கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தாள் உமா!

எத்தனை நாட்கள், எத்தனை மாதங்கள், எத்தனை ஆண்டுகள் இந்த அழைப்பிற்காக அவள் ஏங்கி இருக்கிறாள்! அவன் மட்டுமே, அவனுக்கு மட்டுமே சொந்தமான தன்னை அவன் மட்டுமே அழைக்கும் அந்தப் பெயரில் இழந்து விட்ட அனைத்தும் திரும்பத் தனக்குக் கிடைத்தது போலிருந்தது உமாவிற்கு!

முதல் முறை அவன் இப்படி அழைத்தப்போதும் நெஞ்சம் காதலின் சுவாசத்தில் பூரித்துப் போனது என்றால், இத்தனை ஆண்டுகள் கழித்து அவனது "தேவி" என்ற அழைப்பு, வெளியே காட்ட முடியாமல் அணை மேல் அணை கட்டி மனதினுள்ளேயே இருந்த காதலை வெடித்துக் கிளம்ப வைத்தது.

காதல் வெளி வந்த வேகத்தில் தனசேகரனை நெருங்கி "தனா" என்ற கூவலோடு அவன் மார்பில் முகம் புதைத்தாள் உமா!

அவள் அழுகைக் குறையும் வரை முதுகை வருடிக் கொண்டிருந்த தனசேகரன் "உங்க அப்பாக்கு உடம்பு சரியில்லையா?" என்றான் மெதுவாக.

"ஆமா, ஸ்ட்ரோக்ன்னு அம்மா... பிழைக்கிறது ரொம்பக் கஷ்டம்... அம்மா ரொம்ப அழறாங்க... எனக்கு அப்பாவைப் பார்க்கணும்" என்று அவள் கூறவும்

"எங்க?" என்றான் தனசேகரன், "துபாய்ல, நான் போகவா தனா? நீங்களும் வாங்க தனா" என்று உமா அப்போதைய நெருக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு கேட்கவும், அவளைத் தன்னிடமிருந்து விலக்கியவன் சோபாவிலிருந்து எழுந்தான்.

"என்கிட்டே இதுக்கெல்லாம் கேட்கணும்ன்னு இல்லை. நீ தாராளமா போயிட்டு வா" என்று கூறியவனின் குரலில் சட்டென விலகல் தெரிந்தது!

அந்த விலகலை உணர்ந்து கொள்ளாமல் "நம்ம ரெண்டு பேரையும் ஒன்னாப் பார்த்தா..." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே

"உன் அப்பாக்கு சரியாகிடுமா? ஆனா அங்க வந்து உன் அண்ணனை நான் பார்த்தால் அவனுக்கு ஸ்ட்ரோக் வராமலே உயிர் போய்டும். பரவாயில்லையா?" என்று பல்லைக் கடித்து வார்த்தைகளைத் துப்பி விட்டு தன் அறைக்குள் புகுந்து கொண்டான்.

அவன் சென்ற திசையையே நிராசையுடன் வெறித்துக் கொண்டிருந்த உமாவை, பத்து நிமிடத்தில் வெளிவந்த வைரவனின் வேக நடையும் "அப்பாக்கு உடம்பு சரியில்லையாமா? சேகர் சொன்னான், அவன் ஆபீஸ்ல இருக்க ட்ராவல் அஜென்சில டிக்கெட் சொல்லி இருக்கானாம். நீ உடனே கிளம்புமா" என்ற பதட்டமான பேச்சும் நிகழ்வுக்கு கொண்டு வந்தன.

கண்களைத் துடைத்துக் கொண்டு, உடம்பு முடியாமல் துபாய் மருத்துவமனை ஒன்றில் இருக்கும் தன் தந்தையை பார்க்கக் கிளம்பினாள் உமா. கிளம்பும் முன்னர் விஜய்க்கு அழைத்து விவரம் தெரிவித்தவள், அங்கிருக்கும் நிலைமையை உடனுக்குடன் கூறுவதாக வாக்களித்து விடை பெற்றாள்!

உமாவின் வருத்தமும், அவளது பயணமும் மனதை சஞ்சலத்தில் ஆழ்த்தி இருக்க, குன்னூர் கிளம்பிய விஜய்க்கு அவனது பயணத்தால் வினயாவின் முகம் சுண்டக்காய் மாதிரி சுருங்கிப் போய் இருப்பதைக் கவனிக்க முடியவில்லை என்றால் அவனது கவனிப்புத் தனக்கு இல்லாமல் போனதில் வினயாவின் சுண்டக்காய் முகம் மேலும் சுருங்கி கடுகானதையும் அவன் மனதில் நிறைக்கவில்லை.

ஆனால் விஜய்க்கு மாறாக, துளசி இவை அனைத்தையும் கவனித்ததோடு நிற்காமல் மனதை நிறைத்தும் கொண்டார்!!

இரண்டு தினங்களில் திரும்ப வந்த விஜய், திங்கள் காலை தன் வழக்கமான ஜாக்கிங், தினசரி, அம்மாவிற்கு சமையலில் உதவி என்று எல்லாவற்றையும் முடித்துவிட்டு வேலைக்குத் தயாராகித் தான் சமீப காலமாக உபயோகிக்கும் அறையிலிருந்து வெளியே வந்த போது, கல்லூரிக்குச் செல்லத் தாயாராகி ஹாலில் அமர்ந்திருந்த வினயாவைக் கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். அவள் அவன் முகத்தை நொடிக்கொரு முறை நிமிர்ந்து பார்த்தது வேறு சிரிப்பை விரிவு படுத்தியது!

அவள் கல்லூரிக்குப் போவதைப் பற்றி ஒன்றுமே கேட்காமல் தாய் செய்து வைத்திருந்த பொங்கலையும் சாம்பாரையும் கருமமே கண்ணாய் அவன் உண்ண, வினயா தான் சற்று தவித்துப் போனாள்.

உணவு முடிந்ததும் "நான் போயிட்டு வரேன்மா. என்கிட்டே ஒரு செட் சாவி இருக்கு. நீங்க எங்கேயும் வெளிய போறதா இருந்தாலும் எனக்காக சீக்கிரம் வரவேண்டாம். நான் பார்த்துக்கிறேன்" என்று தாயிடம் விடைபெற்றவன், "பை வினு" என்று மனைவியிடம் அவன் கிளம்புவதை அறிவுறுத்தினான்.

"நான்... நானும் காலேஜ் போறேன்" என்று அவனிடம் கூறியவள், அவன் "அப்படியா சரி. பார்த்துப் போய்ட்டு வா" என்று முடிக்கவும், தைரியத்தைக் கூட்டி "எப்போதும் போல என்னைக் காலேஜ்ல இறக்கி விடுங்க. ப்ளீஸ் விஜ்...விஜய்" என்று கெஞ்சினாள்.

"ப்ளீஸ்....ப்ளீஸ் என்ன? எனக்குச் சரியா காதுல விழல" என்று அவன் காதைத் தேய்த்துவிடவும்

"ப்ளீஸ் விஜய்... விஜ்...விஜி" என்று திக்கித் திணறி அவனிடம் தன்னை வெளிக்காட்டி முடித்தாள் அவனது மனைவி!

விஜயும், வினுவும் ஒரு விதமான சந்தோஷத்தில் தங்களை ஆழ்த்திக் கொண்டிருக்க, அதைக் கெடுக்கும் எண்ணத்திலோ இல்லை வேறு நல்ல எண்ணத்திலோ துளசி இடைப்புகுந்து "தாரகை அத்தை இருக்காங்க இல்ல விஜய், அவளோட பொண்ணு முழுகாம இருக்களாம். நேத்திக்குப் பேசினபோது உன் அத்தை சொன்னாங்க. பாவம், மசக்கையால ரொம்பக் கஷ்டப்படறா போலிருக்கு. அவ வாய்க்கு ருசியாய் ஏதாவது செஞ்சு கொடுத்துட்டு வர முடியுமா அண்ணின்னு என்னைக் கேட்டா. அதனால இன்னைக்கு அங்க போகலாமான்னு பார்க்கிறேன்" எனப் பேச ஆரம்பிக்க,

அதுவரை அவர் பேசியதில் தங்களுக்கு இந்தவித பதிப்புமில்லாததால் பேசாமல் இருந்தவர்கள் தொடர்ந்து அவர் பேசிய "அவ வீடு கூட வினு காலேஜ் பக்கம் தான். வினுவும் காலேஜ் போறதால நானே அவளைக் கூட்டிட்டுப் போறேன். நீ கிளம்பு" என்று நீளமாக பேசி அவர்களது சந்தொஷதிற்குத் தற்காலிகத் தடையிட்டார் என்றால்

"கொஞ்சம் கொஞ்சமா பழகிகிட்டா தானே தொடர்ந்து பஸ்ல போயிட்டு வரமுடியும். எத்தனை நாள் தான் நீயும் அவளுக்கு டிரைவர் வேலை பார்ப்ப?" என்று வந்த அடுத்தத் தாக்குதலில் இருவரும் ஒரு ஒரு விதத்தில் தடுமாறிப் போயினர்.

**********************************************

பாகம் 10

தனக்கு விஜய் டிரைவர் வேலைப் பார்க்கிறான் என்று மாமியாரின் வாய் மொழியாக கேட்ட வினயாவிற்கு சுரு சுருவென கோபம் தலைக்கேறி விட்டது.

"என் புருஷன் எனக்கு டிரைவர் வேலைப் பார்க்கிறார். உங்களுக்கு என்ன? நான் விஜி கூட தான் போவேன். உங்க கூட வரமுடியாது" என்று துளசியின் முகத்திற்கு நேராக வார்த்தைகளைத் துப்பிவிட்டு, அதற்கென்று துளியும் வருந்தாமல் அவரை நேராகப் பார்த்துக் கொண்டிருந்தாள் வினயா, அடுத்துப் படப் போகும் குத்தை அறியாமல்!

"ஹ்ம்ம் அவன் உன் புருஷன்னு உனக்கு நினைவிருந்தா சரிம்மா" என்று உதட்டைப் பிதுக்கி, துளசி தோளைக் குலுக்கவும் வினயாவின் நேர்பார்வை சற்றே குழம்பி, பின்னர் தாழ்ந்தது.

வினயா பேசியது தாயை வருத்தி இருக்குமோ? இரண்டு மாதங்களுக்கு முன்னர் வினயாவைப் பார்த்துவிட்டு அவன் தாயை அழைத்து விஷயத்தைக் கூறியதும், "அவளுக்குக் கல்யாணம் ஆகிடுச்சா? அப்படி இல்லைனா நான் எப்போ பொண்ணு கேட்டு வரட்டும்?" என்று முதல் வாக்கியத்திலேயே தன்

சம்மதத்தைத் தெரிவித்தத் தாயை இப்படி பேசிவிட்டாளே என்று மனம் வருந்திய போது, தாயார் இதை எப்படி எடுத்துக் கொண்டாரோ என்று அவரின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் விஜய்.

வினயாவோடு பதிலுக்குப் பதில் வார்த்தை விளையாட்டு நடத்திக் கொண்டிருந்த துளசிக்கோ வருத்தத்தின் சாயல் துளியும் இருக்கவில்லை. கண்களில் சந்தோஷக் கீற்று ஒன்று தான் மாறாமல் மின்னிக் கொண்டிருந்தது!

அவரது வார்த்தையிலும், பாவனையிலும் வினயாவிற்கு என்ன விளங்கியதோ சட்டென ஓடிச் சென்று அவரைக் கட்டிக் கொண்டவள் "சாரி துசிமா, சாரி, சாரி" என்று கண்ணீர் உகுக்க ஆரம்பித்தாள்.

"எதுக்கு எடுத்தாலும் அழக் கூடாதுன்னு துசிம்மா சொன்னேன் இல்லையா? நான் சொல்றதைக் கேட்கலைன்னா உன் புருஷன் உனக்கு இன்னைக்கு டிரைவர் வேலைப் பார்க்கமாட்டான்" என்று துளசி சிரிப்புடன் அறிவிக்கவும்,

"அழலை துசிம்மா, ஆனா விஜி கூட போறதுக்காக அழுகையை நிறுத்தல. நான் உங்க கூடவே வரேன்" என்று கண்ணீரை ஒரு கையால் வழித்துவிட்டு அவள் மாமியாரிடம் செல்லம் கொஞ்சியதை ஒரு சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த விஜய் "கடைசில ரெண்டு பேருமா சேர்ந்து ஒரு பல் டாக்டரை ஆட்டோகாரன் ரேஞ்சுக்கு ஆக்கிட்டீங்க. மிக்க மகிழ்ச்சி" என்று தன் சந்தோஷத்தை போலி வருத்தமாய் வெளியடவும் அங்கே ஒரு சிரிப்பலை எழுந்து அடங்கியது.

"துசிம்மா கூட போறேன்" என்று வினயாவும், "விஜய் கூட கிளம்பு" என்று துளசியும் மாறி மாறி பேசிக் கொண்டிருக்க "சரி நீங்க ரெண்டு பெரும் பேசி ஒரு முடிவுக்கு வாங்க, நான் கிளம்புறேன்" என்று விஜய் நகர்ந்ததும் தான் தங்கள் வாக்குவாதத்தை நிறுத்தினர் இரு பெண்களும்.

"நான் காலேஜ் போகலை துசிம்மா" என்று ஒரேடியாக முறுக்கிக் கொண்டு சோபாவில் போய் வினயா படுத்துக் கொள்ளவும், "அடி கேட்குதா உனக்கு? ஒழுங்கு மரியாதையாய் எழுந்து காலேஜ் போ. ஒரு மாசம் காலேஜ் போகாம ஜாலியா இருந்தது பத்தலையாக்கும். ஹ்ம்ம் சீக்கிரம். அவன் வெயிட் பண்றான் பாரு, கிளம்பு, கிளம்பு. சாயங்காலம் நாம ரெண்டு பெரும் சேலை கடைக்குப் போகலாம்" என்று அவளை அரட்டி, உருட்டி, ஆசை காட்டி. கயிறு கட்டி காலேஜ் அனுப்பி வைத்தார்.

கூடுதல் சந்தோசம் இல்லையென்றாலும், கூடுதலாய் வருத்தம் கலக்காமல் இருந்தமையால் அடுத்து வந்த தினங்கள் விஜய் ஆனந்த் குடும்பத்திற்கு சலனமின்றியே கழிந்தன.

இங்கே நடக்காமல் போன வருத்தங்கள் யாவும் துபாய்யில் நடக்க, தந்தையைப் பார்க்கப் போன உமா மிகவும் ஓய்ந்து போனாள்.

கிட்டத்தட்ட ஒரு வாரப் போராட்டத்திற்குப் பின்னர் உயிர் பிழைத்த தந்தையின் வெறுப்புப் பார்வையையும், "ஏன் வந்தாய்?" என்ற கேள்வியையும் பெற்றுக் கொண்டு, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக தமையனும் தந்தையும் அவளைத் துரத்தியதில் தன்மானம் எகிறிக் குதிக்க புகுந்த வீட்டிற்கு விமானம் ஏறினாள் உமாதேவி!

நீண்ட நாட்களுக்குப் பின்னர் தாயை சந்திருந்தாலும் முன்னே இல்லாமல் போயிருந்த பாசப் பிணைப்பு இப்போதும் இல்லாமல் போனதால் தந்தை பேசிய வார்த்தைகளின் வலியில் பாசம் மறைந்து, ரோஷம் பிறந்து அவளைப் புகுந்த நாட்டிற்குப் பறக்க வைத்தது.

விமானத்தில் ஏறி அமர்ந்து இந்தியா நோக்கித் தன் பயணத்தை அவள் துவக்கிய போது அவளது நினைவலைகளின் பயணம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்து ஆரம்பமானது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் NRI கோட்டாவில் இடம் கிடைத்து, இல்லை வாங்கி என்று சொல்லவேண்டுமோ? துபாயில் இருந்து சென்னை கிளம்பி வந்த நாள் இன்னும் பசுமையாக நினைவில் நின்றது உமாவிற்கு. தனக்கு விருப்பமான மகப்பேறு மருத்துவம் படிக்க இடம் கிடைத்ததில் உலகத்தின் உச்ச சந்தோஷத்திலிருந்த உமாவிற்கு வீட்டைப் பிரிந்து வருகிறோம் என்ற வருத்தம் துளியும் இருக்கவில்லையே என்ற வியப்பும் கூடவே அதற்கான காரணமும் மனதில் தோன்றி நிலைத்தன.

பின்னே, வீட்டைப் பிரிந்து செல்லும் போது வருத்தப்படவேண்டும் என்றால் பிரிந்து செல்லும் உறவுகள் மேல் அவளுக்குப் பாசமும், பிணைப்பும் இருக்கவேண்டும் அல்லவா? பணமும், பணத்தால் கிடைக்கும் நண்பர்களின் புகழ் மாலையும், உறவுகளின் மத்தியில் வெளிநாட்டில் இருப்பதால்

கிடைக்கும் வறட்டு மரியாதையும், வெளிநாட்டு மோகமும் உமாவின் தந்தை ஜெகநாதனை மட்டுமில்லாமல் தாய் சுபத்ராவையும் அந்த மாய வலையில் விழச் செய்திருந்தது என்பது ஒரு கசப்பான உண்மை எனும் போது அதை சிறு வயதிலேயே ஜீரணித்தவளால் இப்போதும் அப்படியே எண்ண முடிந்ததோ!.

ஒரு ஆண்டு மூத்தவன் என்பதால் அண்ணனாகித் தொலைத்த தேவேந்திரனுக்கும் தந்தையின் வீண் பகட்டும், பணத்தால் ஏற்பட்டிருந்த திமிரும் தெனாவட்டும் இருந்ததால், அவனிடமும் பாசத்தையோ அன்பையோ எதிர்ப்பார்க்க முடியாமல் போன கொடுமை யை மட்டுமல்லாமல், அதன் பின் அவன் சேர்க்கையை எண்ணி அவன் திருந்தி இருக்கலாமோ என்ற எண்ணத்தில் தான் ஏதோ பேசப் போக அது எங்கேயோ சென்று முடிந்த விதத்தையும் எண்ணி இப்போதும் நெஞ்சம் விம்மி வெடித்து, அவளை வேதனையை சுமக்க வைத்தது.

தான் கல்லூரியில் அடி எடுத்து வைக்கும் வரை உயிருடனிருந்த தந்தை வழி பாட்டி காவேரி, இன்னும் சிறிது காலம் இருந்திருக்கலாமோ என்ற எண்ணமும், அவர் இறந்த போது இந்த பறந்து விரிந்த பிரபஞ்சத்தில் தான் தனித்து விடப்பட்ட துரதர்ஷடத்தையும் நொந்தபடி இருந்தவளுக்கு ஒரேயடியாக துரதிஷ்டம் என்றும் சொல்லமுடியாதே? உனக்கு எத்தனை நல்ல உள்ளங்கள் நண்பர்களாக கிடைத்தனர்? அது உன் நல்ல நேரமில்லையா? என்ற மனசாட்சியின் குட்டில் மனம் சற்றே தெளிந்தது!

பிறந்த வீடு சரியில்லை என்றால் என்ன? புகுந்த வீட்டில் ஒரு பெண்ணிற்கு நிம்மதி இருந்தால் பத்தாதா? அக்கறையும் அன்பும் நிறைந்த மாமனார், தாய் ஸ்தானத்தில் தன்னை வைத்து “அண்ணி” என்ற அழைப்பில் “அம்மா” என்ற உருகலைக் கொண்டு வரும் நாத்தனார், தன் மனதிற்குப் பிடித்தக் கணவன். ஹ்ம்ம் தன் மனதிற்குப் பிடித்தவன் தான்... ஆனால் அவனக்குத் தான் தன்னை மன்னிக்க முடியவில்லை... என்று ஏதேதோ எண்ணங்களின் நடுவில் தன் காதல் மலர்ந்த கதை நெஞ்சில் மீண்டும் மலர்ந்தது உமாவிற்கு!

மீண்டும் தனது ஐந்து ஆண்டு முந்தைய பயணத்தை நினைவு கூர்ந்த உமாவிற்கு என்ன காரணமாகவோ தந்தை தன் கூட சென்னை வந்தது நியாபகம் வந்தது என்றால் தாய் வராதது ஏக்கத்தை உண்டு பண்ணியது. ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் இடம் வாங்கியதைப் பெரும் பெருமையாக எண்ணி, மற்றவரிடம் பீற்றிக் கொண்டிருந்த தாய்க்கு அவரது நெருங்கிய தோழியின் பிறந்தநாள் விழா(!) மகளின் பிரிவையே முக்கியமற்றதாக மாற்றி போனது நிஜம்!

தந்தை வந்ததற்கு முக்கியமான காரணம் தேவும் அவளுடன் கல்லூரி சேர்ந்தது தான் காரணமாக இருக்குமோ? என்று இப்போது எண்ணி, “ஆம், அப்படித் தான்” என்ற முடிவுக்கும் வந்தாள் உமா.

எப்போதுமே தேவ் என்றால் தனி பிரியம் வைத்திருந்த ஜெகநாதனுக்கு அவன் MBBS படிப்பில் ஒரு ஆண்டு பின் தங்கியது கூட பெரிய விஷயமாகப் படவில்லை.

சொல்லப்போனால் ஆண் பிள்ளை என்றால் அப்படி இப்படி தான் இருக்கும்(!), நம்மிடம் இல்லாத பணமா, அவன் சம்பாதித்து தான் நாம் சாப்பிடவேண்டும் என்று இல்லாத போது அவன் எத்தனை ஆண்டு வேண்டுமானாலும் படிக்கட்டுமே! என்ன பெரிய விஷயம்? என்று அவனுக்காக அவர் பேசியது நினைவில் வந்து, இந்த கண் மூடித் தனமான அன்பினால் தான் உமா செய்த காரியத்தை இன்று வரை அவர் மறக்க, மன்னிக்கவில்லையோ? என்றும் தோன்றியது.

இந்த கண்மூடித் தனமான அன்பிற்கு ஒரு நாள் வலிக்க அடிவாங்கப் போகிறார் என்று உமா கறுவிய போது வானுலக தேவதைகள் “சுபஸ்ய சீக்கிரம்” என்று ஆசிர்வதித்தனரோ(!) பொறுத்திருந்து காண்க!

இளங்கலை படிப்பு முடிந்து ஒரு வருடம் துபாய் மருத்துவமனை ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த உமாவிற்கு ராமச்சந்திராவில் இடம் கிடைத்ததும், தானும் அங்கே படிப்பேன் என்று கோணச் சேட்டை அடித்து அங்கே எலும்பு முறிவு பிரிவில் ஒரு இடத்தை தந்தையின் செல்வாக்கால் வாங்கி, அதை நிரப்ப தங்கை, தந்தை சகிதம் சென்னை வந்த தேவ்வை ஒரே வளாகத்தில் இருந்த போதும் உமா காண்பதைத் தவிர்த்து வந்தாள் எனலாம்.

தவிர்த்தாள் என்பதை விட அவளுக்கு தேவ்வைப் பற்றி எண்ணி, எரிச்சல் அடைவதை விட நண்பர்களுடன் இருப்பது பிடித்திருந்தது என்பது தான் சரியாக இருக்கும்.

அவளது பெரிய நண்பர்கள் வட்டத்தில் அவளுக்கு நெருங்கிய நட்பு என்று சொல்லக் கூடிய இடத்தில் இருந்தவர்கள் அவளுடன் இளம் மருத்துவப் படிப்பை முடித்த நிர்மலாவும், அதே கல்லூரியில் பல் மருத்துவம் படித்துக் கொண்டிருந்த விஜயுமே ஆவர்.

நண்பர்கள் நலம் விரும்பிகள் என்ற சொல்லுக்கு ஏற்றபடி இருந்த-இருக்கும் இருவரையும் அவள் நினைக்காத நாளே இல்லை எனும்படி அவளது வாழ்க்கையில் இன்று வரை ஒரு பெரும்பாதிப்பை ஏற்படுத்தி இருந்தனர் இருவரும்.

உமா தனது மேற்படிப்பை ராமச்சந்திராவில் தொடர்ந்து கொண்டிருந்த போது, நிர்மலா அவர்கள் MBBS படித்த அண்ணாமலை பல்கலை கழகத்திலேயே தனது psychiatrist படிப்பைப் படித்துக் கொண்டிருந்தாள்.

சென்னையில் வீட்டை வைத்துக் கொண்டு சிதம்பரத்தில் தன் மேற்படிப்பைப் படித்துக் கொண்டிருந்த நிர்மலாவைக் காண உமா சென்ற போது தான் தனாவைச் சந்தித்ததே!

முதல் நாள் அவர்கள் வீட்டிற்குச் சென்றது அப்படியே படமாக ஓடியது உமாவின் மனமெனும் திரையில்!

அன்போடு உபசரித்த நிர்மலாவின் தாய்க்கு வீட்டை ஒழுங்கு செய்வதில் மதியம் வரை உதவி செய்த தோழிகள் இருவரையும் "பதினஞ்சு நாள் கழிச்சுப் பார்த்திருக்கீங்க, காக்கா கத்தினதில இருந்து தண்ணி குடிச்சது வரைக்கும் பேசிக்க நெறைய விஷயமிருக்கும். போய் பேசிட்டு இருங்கம்மா. சாப்பாடு ரெடி ஆனதும் கூப்பிடுறேன்" என்று கூறி அனுப்பி வைத்தவர் அவர்கள் இருவரும் வளவளதத்தை ஒரு சிரிப்புடன் பார்த்திருந்தார்.

மதிய உணவு முடிந்து, மாலை படத்திற்குப் போகிறோம் என்று அவர்கள் அறிவித்தப் போது "ஹ்ம்ம் படத்துக்கா? நாளைக்குப் போகக் கூடாதா? பக்கத்துக்கு வீட்டில கொலு வச்சிருக்காங்க நிம்மி. அந்த வீட்டுப் பொண்ணு வந்து அழைச்சுட்டுப் போச்சு. நேத்திக்கு எனக்குப் போக முடியாத நாளா போச்சா. அதனால போக முடியல. பாவம் இன்னைக்குக் கோலம் போட வெளிய போனப்ப அந்தப் பவி பொண்ணு "ஏன் ஆன்ட்டி வரலன்னு" பரிதாபமா கேட்டுச்சு. பாவம்... இன்னைக்கும் என்னால போக முடியாது. நீயும் உமாவும் போயிட்டு வாங்களேன்.. எனக்காக" என்று தன் விருப்பதை முன்வைத்த நிர்மலாவின் தாய் கற்பகத்தை நிர்மலா மறுத்துப் பேசும் முன்னர் "சரிம்மா போயிட்டு வரோம்" என்று முடித்தாள் உமா.

முறைத்த தோழியிடம் "ஹே இப்ப என்ன? உங்க தலைவர் ரஜினி படத்தை நாளைக்குப் பார்த்த அவரோட குடியோ, நம்மளோட குடியோ முழுகிப் போய்டாது. அம்மா சொல்றதை தான் கொஞ்சம் கேட்கலாமே? அவங்களால முடியலைன்னு தானே சொல்றாங்க" என்று தோழியை சமாதனத்திற்கு உள்ளாக்கி, கற்பகத்தை சந்தோஷத்திற்கு உள்ளாக்கியவளின் கன்னத்தை வழித்துத் திருஷ்டி கழித்தார் கற்பகம்.

அவருக்கு அழகான ஒரு சிரிப்பைப் பரிசாக கொடுத்தவள் ஏதோ நியாபகம் வந்தவளாக "என்ன ஆன்ட்டி? பொண்ணு வந்து கொலுவுக்கு அழைச்சான்னு சொல்றீங்க? பெரியவங்க யாருமில்லையா?" என்று ஒரு ஆர்வத்தில் வினவினாள்.

"அப்படித் தான் போல. இப்ப தானே வந்திருக்கோம். எனக்கும் சரியாத் தெரியல" என்று உதட்டைப் பிதுக்கியவர் "ஆனா பொண்ணு ரொம்ப துறு துறு. வந்த அஞ்சாவது நிமிஷம் என்னோட ஜாதகம் மட்டுமில்லை என் பாட்டி ஜாதகம் வரைக்கும் துருவி விஷயம் வாங்கிட்டா! நான் தான் பேக்கு மாதிரி அவ சொல்றதையே ஆன்னு பார்த்துட்டு இருந்துட்டு அவளைப் பத்தி ஒண்ணுமே கேட்காம விட்டுட்டேன்" என்று உபரித் தகவல் ஒன்றையும் உமாவிற்கு விட்டுச் சென்றார்.

மாலை பக்கத்துக்கு வீட்டு கொலுவிற்கு தோழிகள் இருவரும் சென்ற போது. கற்பகம் பவித்ரா பற்றி கூறிய ஒரொரு வார்த்தையும் நிஜம் என்பது ஒரு சதவீத ஐயம் கூட இல்லாமல் விளங்கியது இருவருக்கும்!

அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்த போது "வாங்கம்மா" என்று பொதுவான வரவேற்பை வைரவன் முன்வைக்க, அதை ஒரு சிரிப்புடன் பெற்று கொண்டு தோழிகள் வீட்டினுள் சென்ற போது "பாப்பா, வந்திருக்கவங்களை பாரும்மா" என்ற வைரவனின் குரல் அவர்களையும் தாவிச் சென்று சமையல் கட்டை எட்டியது போல ஒரு இளம் நங்கை வெளிப்பட்டாள்.

நெற்றியில் இருந்து வேர்வை முத்துகள் அவளது அழகிய பளிங்கு முகத்திற்கு கீரிடம் போல் இருந்ததோ என்ற எண்ணம் உமாவிற்குத் தோன்றிய வினாடி,"அது எப்படி பொறுப்பும் குறும்பும் சரிசமமாய் இவளது கண்களில் தெரிகறது?" என்ற வியப்பை அவளது மருத்துவ மூளையின் ஓரத்தில் ஆழ்த்தியது.

அந்த வியப்பிலிருந்து அவள் மீளும் முன்னர் "வாங்க வாங்க, நீங்க நிர்மலா அக்கா தானே? கற்பகம் ஆன்ட்டியோட பொண்ணு? கரெக்ட்?" என்று நிர்மலாவிடமும், "நீங்க அவங்க ஃபிரிண்ட் உமா? துபாய்ல இருந்து வந்திருக்கீங்க. ராமச்சந்திரால MS படிக்கிறீங்க கரெக்ட்?" என்று உமாவிடமும் அவள் விசாரித்தப் போது தோழிகள் இருவரும் கற்பகம் கூறிய வார்த்தைகளை ஒருங்கே நினைவு கூர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ம்ம்ம் ஆமா" என்ற உமாவின் பதிலில் "பவி இஸ் ஆல்வேஸ் ரைட் யு ஸீ" என்று இல்லாத காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு கண்ணடித்தாள் அந்த வீட்டின் மகாராணி பவித்ரா வைரவன்.

"எங்களைப் பத்தி எங்களை விட உனக்குத் தான் நிறைய தெரியுது" என அவளை நிர்மலா கிண்டல் செய்ய "உன் பேரைத் தவிர ஒண்ணுமே தெரியாம இருக்க எங்களை உன் அளவுக்கு இல்லைனாலும் கொஞ்சம் அறிவாளி ஆக்கலாம் இல்லையா?" என்று உமா அவள் பாணியிலேயே விஷயம் வாங்க முற்பட்டாள்.

"கண்டிப்பா, இந்த நல்லதைக் கூடவா நான் செய்யமாட்டேன். நான் ரொம்பபபபபபபப நல்லவ உமாக்கா" என்று கண்களை உருட்டியவளின் கவனம் வேகமாக அவர்களிடமிருந்து அடுப்பிலிருந்த குக்கர் மீது சென்றது.

"ஒரே நிமிஷம் வந்துடுறேன். நீங்க கொலு பொம்மை எல்லாம் பாருங்க. நான் சுண்டலை தாளிச்சுக் கொட்டிட்டு நிவேதியத்துக்கு எடுத்துட்டு வரேன் " என்று அவர்களைத் திசை திருப்பி விட்டு சிட்டாக சமையல் கட்டுக்குள் சென்றாள் பவித்ரா.

அவள் போகும் திசையையே ஒரு வினாடிக்கும் மேலாக பார்த்திருந்த உமா, "ஹே நிம்மி, நீ பார்த்துட்டு இரு. நான் இதோ வந்திடுறேன்" என்ற அறிவிப்புடன் பவித்ராவின் உதவிக்குச் சென்றாள்.

செல்ல, அங்கே அடுப்பில் கடாயை ஏற்றி எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்த பவித்ரா இவளைக் கண்டதும் "என்ன இங்க வந்துட்டீங்க? எனக்கு ஹெல்ப் பண்ணவா? இதெல்லாம் பெரிய விஷயமே இல்லை. நானே பார்த்துக்கிறேன்" என்றாள் பெரிய மனுஷி போல.

இத்தனை ஆண்டுகள் ஆனா பின்னரும் சமயலறையில் உப்பிற்கும், சீனிக்கும் வித்தியாசம் தெரியாமல் தான் இருக்க, இந்தச் சின்னப் பெண் சக்கரைப் பொங்கல் வைப்பதையும், சுண்டல் செய்வதையும் பெரிய விஷயம் இல்லை என்கிறாளே என்று உமாவின் வியப்புப் பட்டியல் நீண்டு கொண்டே போனது.

தான் சக்கரைப் பொங்கல் என்றெண்ணிய ஒன்றை அவளிடம் காட்டி "சக்கரைப் பொங்கலா? உனக்கு இதெல்லாம் செய்யத் தெரியுமா? நான் வேணும்னா அதுக்கு நெய்ல முந்திரி வறுத்துப் போடட்டுமா?" என்று கேட்டு அவள் கடகட வென சிரித்த அழகை உள்வாங்கிக் கொண்ட உமா, "ஏன் சிரிக்கிற? அது சக்கரைப் பொங்கல் இல்லையா?" என்று பரிதாபமாக கேட்கவும்

" இது சக்கரைப் பொங்கல் இல்ல. இதுக்குப் பேர் ஒக்காரை. பாசிப் பருப்புல செய்றது. தச்சுக்கு ரொம்பப் பிடிக்கும். அதனால அம்பாள்கிட்ட இன்னைக்கு உனக்கு இது தான் நிவேதனம். உனக்குப் பிடிக்கலைன்னா நீயே உன் பக்தன் மனசை மாத்தி வச்சுடு. என்னால அவனோட போராட முடியலன்னு சொல்லிட்டேன்" என்று விளக்கத்தில் ஆரம்பித்து, தான் கடவுளிடம் முன்வைத்த வேண்டுதலில் வந்து நின்றாள் பவித்ரா.

"எங்க ஆரம்பித்து எங்க வந்துட்டா?" என்று மீண்டும் ஒரு முறை புருவத்தைத் தூக்கிய உமாவிற்கு அன்றைய வியப்பின் பட்டியல் நீண்டு கொண்டே போய் தான் இப்படிப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறக்கவில்லையே என்ற ஏக்கத்தில் அவளைத் தள்ளியது அப்பட்டமான உண்மை

அதன் பின்னர் சுண்டல் தாளிக்க அவள் எடுத்துக் கொண்ட நேரமும், வருவோருக்கு கொடுப்பதற்காக பேப்பர் கப்களில் சுண்டலையும், ஒக்காரையையும் எடுத்து வைத்த நிமிடங்களும் தச்சு என்று பவித்ராவால் செல்லமாய்(!) அழைக்கப் பட்ட தனசேகரனை பற்றியே பேச்சு சுழன்றது.

நேற்று அவன் தனக்கு வாங்கித் தந்த காலணியிலிருந்து தொடங்கி, அண்ணனுக்கும் தந்தைக்கும் நடக்கும் சண்டைகளுக்குள் புகுந்து, அவன் பிறந்தநாளுக்குத் தான் செய்த கல்கண்டு பொங்கல் வரை வளவளத்து முடித்தாள் பவித்ரா.

அதன் நடுவே தனசேகரன்-பவித்ரா இருவரது தாயும், வைரவனின் தர்மபத்தினியுமான விசாலாக்ஷி மூன்று வருடங்களுக்கு முன்னர் சிறுநீரகம் வேலை செய்யாமல் போனதன் விளைவாக அவர்களை விட்டு இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியை கேட்டு உமா வருந்த, பவித்ராவின் கண்களில் கொடேன நீர் கோர்த்து, அதை அவள் கண்களை அகல விரித்துக் கட்டுக்குள் கொண்டு வந்தது இன்னமும் பவித்ரா என்ற இளம் பெண் மேல் உமாவின் பிரியத்தைக் கூட்டியது.

உமா-பவித்ரா பேச்சு பேச்சாய் இருக்க, வேலைகள் மளமள வென நடந்து முடிந்து அம்பாளின் முன்னர் அன்றைய பதார்த்தங்கள் வைக்கப் பட்டதும், பூஜை செய்ய வைரவனை பவித்ரா அழைத்தப் போது "பாப்பா, போய் முகம் கழுவி, வேற டிரஸ் போட்டுட்டு வாடா, அண்ணன் வந்தா முகம் சுளிப்பான்" என்று கூறி, அவளது செல்லச் சிணுங்கலையும் "ஆமா ஆமா, அவன் சும்மா இருந்தாலே முகம் சுருங்கிப் போய் தான் இருக்கும். நான் இப்படி இருந்தா அவ்வளவு தான்... உங்களை மாதிரி ஆகிடும்" என்ற வம்புப் பேச்சையும் பெற்றுக் கொண்டு அவளை உள்ளே அனுப்பிவைத்தவர் அங்கிருந்த மற்றவர்களிடம் "ரெண்டு நிமிஷத்தில வந்துடுவா, உங்களைக் காக்க வைக்கிறதுக்காக என்னை மன்னிக்கணும்" என்றார் பணிவுடன்.

அதற்கு உமா பதில் சொல்லும் முன்னர் "பரவாயில்லை சார். இந்தச் சின்ன வயசில என்ன பொறுப்பா இருக்கு உங்க பொண்ணு? அது வரக் காத்திருக்கலாம்ங்க" என்று ஒரு பெண்மணி கூற, மற்றொருவர் "ஹ்ம்ம், கொலு பொம்மை அடுக்கினதிலேயே என்ன ஒரு நேர்த்தி? இன்னைக்குக் கண்டிப்பா சுத்திப் போடுங்க சார்" என்றார்.

அவர் கூறியதும் தான் உமாவின் கண்களில் கொலு படியில் பவித்ரா செய்திருந்த விந்தைகளுக்குச் சென்றது. ஒரு படியில் சீதா கல்யாண வைபவத்தை பயபக்தியோடு அடுக்கி இருந்தாள் என்றாள் அடுத்ததில் மீராவின் காதலை பொம்மையில் உயிர் பெறச் செய்திருந்தாள்.

முதல் இரண்டு படிகளில் அவளது கடவுள் பக்தி வெளிப்பட, அடுத்து வந்த இரண்டில் வைக்கப்படிருந்த ரயில் மேடையிலும், மருத்துவமனையிலும் அவளது கவனிப்புத் திறன் வெளிப்பட்டது. அடுத்தவைகளில் பொம்மைகளால் இல்லாமல் பூக்களால் விதவிதமான கோலங்கள் இட்டு நிரப்பி இருந்தவளின் பொறுமையின்மை கடைசி படியில் முறையாக அடுக்கப்படாத பொம்மைகளில் தெரிந்து உமாவை அதை சரி செய்யத் தூண்டியது.

அவள் அதை முறையாக எடுத்து வைத்துக் கொண்டிருந்த போது பவித்ரா அழகிய இளம் மஞ்சளில் வெள்ளைப் பூக்கள் இழையோடிய லாங் ஸ்கிர்ட்டும், அரக்கு நிற மேல்சட்டையும் அணிந்து, கீரைக்கட்டுக் கூந்தலை விரித்துவிட்டு நடுவில் ஒரு சிறு கிளிப் போட்டுக் கொண்டு வெளியே வந்தாள்.

அப்போது அவளது தமையனும் வாசல் வழி வீட்டினுள் நுழைகிறான் என்பதை அறிவிப்பது போல "எவ்வளவு நேரம்டா? பாவம் பாப்பாவா எல்லாம் செஞ்சுட்டு இருந்தது. வேர்த்து விறுவிறுத்துப் போச்சுது அவளுக்கு. கொஞ்சம் முன்னாடி வந்து அவளுக்கு ஏதாவது உதவி செய்யக் கூடாது?" என்ற வைரவனின் திட்டுக் காதைப் பிளந்தது.

"உள்ள நுழையும் போதே சண்டையை ஆரம்பிக்காதீங்க வைரவன். அப்படிப் பொண்ணு மேல பாசம் பொங்கி வழிஞ்சா நீங்க போய் சுண்டல் செய்றது தானே? அவளை எதுக்கு செய்ய விடுறீங்க?" என்று பதிலுக்குப் பதில் மல்லுக் கட்டிக் கொண்டிருந்தான் தனசேகரன்.

யாரோ எவரோ என்ன பேசினாரோ என்றிருந்த உமா, "ஹே பத்து, கடைசி படில நான் வைச்சதை ஏன் மத்தின? நான் எதைப் பண்ணினாலும் அதை நூறு குறை சொல்லி மாத்திக்கிட்டே இருக்கனுமா உனக்கு? வர வர உன்னோட அட்டூழியம் தாங்க முடியல" என்று அவன் பொரியத் தொடங்கவும் சங்கடத்தில் நெளிந்து "ஆஹா, அந்தப் பொறுமையின் சிகரம் இவர் தானாக்கும். பாவம் பவியைப் போய் தப்பா நினைசுட்டோமே" என்று மனதிற்குள் மௌனமாக சிரித்தாள்.

************************************************

பாகம் 11

தனாவின் பேச்சில் நெளிந்த உமா, இடுப்பில் கைவைத்து அவனை முறைத்துக் கொண்டிருந்த பவித்ராவின் அருகில் சென்று, அவள் கைப் பிடித்து தன் புறம் இழுத்து "பவி, சாரிடா! கடைசி படி பொம்மையெல்லாம் கொஞ்சம் கலைஞ்ச மாதிரி இருந்ததா? நீ தான் அவசரத்தில கவனிக்காம விட்டுட்ட போலன்னு நினைச்சு நான் பாட்டுக்கு அடுக்கிட்டேன். உங்க அண்ணன் அடுக்கியது என்று தெரியாம... சாரி பவி..." என்றாள் சிறு சங்கடத்துடன்.

"ஹோ, பரவாயில்லை உமாக்கா. அவன் எப்போதுமே அப்படித் தான். ஆனா பாருங்க, எனக்கு அவன்கிட்ட பிடிச்சது எது தெரியுமா? அவன் எல்லாத்துக்கும் என்கிட்டே சண்டை போடறது தான்! தச்சு அண்ட் பத்து சேர்ந்தா ஒரே ரணகளம் தான் போங்க" என்று அவளிடம் முகம் மலரக் கூறிய பவித்ரா, அண்ணனை நோக்கிச் சண்டை இட சென்றாள்.

ஏதோ நினைத்தவள் போல் சட்டென திரும்பி, உமாவை நோக்கி வந்த பவித்ரா "இப்படி சண்டை போடறதால அவனைத் தப்பா நினைக்காதீங்க. பாசக்கார பய புள்ள" என்றாள் கண்களைச் சிமிட்டி.

அவளது பாவனையில் உமா பக்கென சிரித்துவிட்டு, உடனே கையால் வாயை மூடிக்கொண்டாள். இவர்களது இந்த உரையாடல் தனசேகரனின் மைக்ரோஸ்கோப் வைத்துக் கூட கண்டுபிடிக்க சிரமமாய் இருந்த பொறுமையை ஒரேடியாக துணி கொண்டு துடைக்க, "நான் எவ்வளவு அழகா அடுக்கி வச்சிருந்தேன்? அதை ஏன் களைச்ச எருமைமாடு?" என்ற கேள்வியுடன் தங்கையின் தலையில் ஒரு கொட்டு வைத்தான் பவித்ராவின் அண்ணனாகிப் போன பெரிய எருமைமாடு.

"ஹய்யோ உமாக்கா உங்களை எருமைமாடு சொல்றான் பாருங்க, உங்க அப்பாகிட்டயும், அண்ணாகிட்டயும் சொல்லி நாலு அடியாள் அனுப்பி இவனை நல்லா சாத்த சொல்லுங்க. என் சார்பா, ஓவரா பேசுற இந்த வாய் மேலேயே ரெண்டு அடி போட சொல்றீங்களா?. ப்ளீஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்" என்று பவித்ரா கெஞ்சுகிறேன் என்ற பாவனையில் கண்களுக்குள் குறும்பை அடக்கி, வாய்க்குள் சிரிப்பைக் கட்டுப்படுத்தி, அடக்கிய சிரிப்பினால் சிவந்த முகத்தை மற்றவரின் ரசனைக்கு விருந்தாக்கினாள்.

"ஹய்யோ, இப்படி போட்டுக் கொடுத்து விட்டாளே?" என்ற சங்கடத்தில் உமாவும், "ஆஹா, இந்த வேலை செய்தது நம்ம கூட பிறந்த ஜந்து இல்லையா? இவங்களா?" என்ற கண்டுபிடிப்பில் தனசேகரனும் ஒரு நிமிடம் தலை குனிந்து, மறு நிமிடம் வேறு புறம் பார்வையைத் திருப்பி, அதன் பின்னர் நேர்கோட்டில் சந்தித்தனர்.

"சாரி" என்று இருவரும் ஒரே சமயத்தில் சொல்ல, "சரி சரி பரவாயில்லை. பிழைச்சுப் போங்க" என்று கைகளை ஆட்டி, தலையை அசைத்து அவர்களை சமாதானப்படுத்தியது பவித்ராவே தான்!

"அடிங்க ராஸ்கல்" என்று அவளைத் துரத்திக் கொண்டு தனா ஓட, அதை சிரிப்புடன் பார்த்திருந்தாள் உமா.

"ஷ், வீட்டிற்கு விருந்தாளிகள் வந்திருக்கும் போது கூட உங்களால சண்டை போடாம இருக்க முடியாதா? பாப்பா வாடா, வந்து எல்லாருக்கும் பிரசாதம், குங்குமம் எல்லாம் எடுத்துக் கொடு" என்று மகளைப் பெரும் திட்டுகள் இன்றி அழைத்தவர், "அவ தான் சின்னப் பிள்ளை. நீ ஒரு பெரிய கம்பெனியில் வேலையில இருக்கிறவன் மாதிரியா நடந்துக்கிற? கொஞ்சம் கூட பொறுப்பு, கூச்சம் ஒன்னும் இல்லாம" என்று மகனைப் பெரும் திட்டுகளின் நடுவே சண்டைக்கு இழுத்தார் வைரவன்.

"அப்பா, எங்களைச் சொல்லிட்டு நீங்க என்ன சின்னப் பையன், கோலி விளையாட்டுல தோத்துப் போன கணக்கா நிக்கிறீங்க?" என்று கூறிய பவித்ரா, தமயனுடன் ஒரு ஹை-பை கொடுத்துக் கொண்டாள்.

"உங்களுக்கு நடுல வந்தா இது தான் நடக்கும் என்று தெரிஞ்சிருந்தும் வந்தேன் பாரு, என்னைச் சொல்லணும்" என்று சலித்துக் கொண்டாலும் அதில் பெருமிதமே நிறைந்திருந்தது என்பது பவித்ரா, தனசேகரன் இருவருக்கும் மட்டும் புரிந்ததில் ஆச்சிரியம் ஏதுமில்லை என்றாலும் உமாவிற்கும் அவர்களது பாசமும் பிணைப்பும் புரிந்தது தான் அங்கே ஒரு கூடல் நடக்கக் காரணமாய் இருந்தது!

அதன் பின் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற வாக்கியத்திற்கு ஏற்ப பூஜை நடத்தி, உமாவையும், நிர்மலாவையும் ஒரு பாட்டுப் பாடவைத்து, வந்திருந்த அனைவருக்கும் பிரசாதம் கொடுத்தவள், அவர்கள் கிளம்பியபோது கொலுவிற்கு வந்ததற்காகப் பெரியவர்களுக்கு குங்குமம்

வெற்றிலை பாக்கு அடங்கிய பையும், குழந்தைகளுக்கு அவர்கள் உபயோகிக்கும் பென்சில், பேனா, ஸ்கேல் என்றவை அடங்கிய அழகிய வேலைப்பாடமைந்த டப்பாவையும் கொடுத்தாள்.

வந்திருந்தவர்களுள் ஒரு வயதான பெண்மணி "நன்னா இருடிம்மா. எப்போதும் இதே சந்தோஷத்தோடு, மற்றவர்களையும் சந்தோஷப்படுத்திக் கொண்டு இருக்கணும்" என்று மனதார வாழ்த்திவிட்டுச் சென்றார்.

அவர் வாயில் புறம் நகர்ந்ததும், தமையனைப் பார்த்து "எப்படி?" என்று கண்களால் கேள்வி கேட்டு, ஒற்றை புருவத்தை உயர்த்திய பவித்ராவிற்கு விடை இப்போது உமா மற்றும் நிர்மலாவிடமிருந்து "சூப்பர்" என்ற வார்த்தையின் மூலமாக வந்தது.

ஒரு சிறு வெட்கம் தன்னைச் சூழ, ஓடிச் சென்று அண்ணனின் தோள் வளைவுக்குள் நின்று கொண்டு "பாரு தச்சு, என்னைக் கிண்டல் பண்றாங்க" என்று செல்லப் பூனைக் குட்டியாய் அவனிடம் கொஞ்சினாள்.

"அச்சோ பாப்பா, கொஞ்சுது" என்று உமா மேலும் கிண்டல் செய்ய,

"ச்சு என் செல்லக் குட்டிப்பிசாசை யாரும் கிண்டல் பண்ணாதீங்கப்பா" என்ற தனசேகரனின் பார்வை, முகத்தில் மலர்ந்த சிரிப்புடன் காலை வேலை செம்பருத்தி மலராய் இதழ் விரித்து, அதில் நடுவில் இருக்கும் ஒற்றை இதழாய் நாக்கை வெளியே நீட்டி பவியை வம்பு செய்து கொண்டிருந்த உமாவின் மேல் வினாடிக்கும் மேலாக பட்டு மீண்டது.

அப்போது வீட்டிலிருந்து தொலைப்பேசி தான் இருப்பதை நிரூபிக்கும் வண்ணம் குரலெடுத்து கத்தியதில், பவித்ரா அதனிடம் ஓட, எங்கே நடந்து கொண்டிருந்த பார்வை பரிமாறல் செவ்வனே தொடர்ந்தது.

தொலைப்பேசியை எடுத்து காதில் வைத்த பவித்ரா, "ஹே வினு, எப்படி இருக்க? இன்னைக்கு ஏன் கொலுக்கு வரல? அப்புறம் எதுக்குடி ஸ்கூல்-ல மண்டையை மண்டையை ஆட்டி வரேன்னு சொன்னே? சரியான இவ டி நீ..." என்று பொரிய ஆரம்பித்து, நடுவே பள்ளி கதை பேசி, "சரி, சரி ரொம்பக் கெஞ்சாத, நாளைக்கு வா. என்னோட ரெகார்ட் நோட்டை மறக்காம எடுத்துட்டு வா... பாட்டனி நோட்ல அந்த hibiscus படம் எனக்கும் வரைஞ்சுடு ஓகே?" என்று விட்டு பேச்சை முடித்தப் போது உமாவும், நிர்மலாவும் அவளிடம் விடை பெறுவதற்காக காத்திருந்தனர்.

"சாரிக்கா" என்ற சொல்லோடு அவர்களிடம் ஓடிவந்தவளை அணைத்து விடை பெற்ற உமாவை நாளையும் வர வேண்டும் என்ற கட்டளையோடு அனுப்பி வைத்தாள் பவித்ரா. அதன் பின்னர் அந்த வீட்டை விட்டு வெளியேற மனமில்லாமல், அந்த மனநிலைக்காக தன்னை வியந்தபடி நிர்மலாவுடன் அவள் வீடு நோக்கிச் சென்ற உமாவிற்குத் தனசேகரனின் பார்வையே கண்களை நிறைத்துக் கனவானது.

பவித்ரா வீட்டிலோ இரவு உணவிற்கென தனசேகரன் தங்கை செய்த ஒக்காரையையே முழு உணவாக உண்டு, தந்தையிடம் அதற்கு உண்டான திட்டை திறம்பட வாங்கிக் கொண்டான் என்பது அடுத்து நாள் பவித்ராவின் வாய் மொழியாக தெரிந்தது.

அது மட்டுமா தெரிந்தது... "உமாக்கா, உங்ககிட்ட ஒரு விஷயம் பேசணும். நேத்திக்கு தச்சு...ச்சே ச்சே அண்ணா..." என்று கண்ணை உருட்டி, ஏதோ பெரிய விஷயத்தைச் சொல்லப் போவது போல பாவனை செய்தவள், சட்டென "நான் வினு வீட்டுக்குப் போகணும். வந்து சொல்றேன்" என்று சிட்டாக பறந்துவிட்டாள்.

"ஹே ஹே, இதை சொல்லாமலாவது இருந்திருக்கலாம் இல்லையா? சரியான வாலு" என்று செல்லமாய் வைத உமாவுக்கு தனசேகரன் என்ன பேசியிருப்பான் என்றே எண்ணம் போய் கொண்டிருந்தது.

ஒரு கட்டத்தில் "சை இவளை நம்ப முடியாது. தச்சு... ச்சே ச்சே நானும் தச்சு... பிச்சுன்னு சொல்ல ஆரம்பிச்சுட்டேனே? அண்ணன் நேத்திக்கு உட்கார்ந்து சாப்பிட்டார், நின்னு சாப்பிட்டார்ன்னு கதை சொல்லுவா..." என்று

புன்னகைத்துக் கொண்ட உமாவிற்குப் பவித்ரா எப்போது திரும்புவாளோ என்றிருந்தது.

ரெண்டு மணி நேரத்திற்கு மேல் நீடித்த அந்த காத்திருப்பை தாங்க முடியாமல் "நிம்மி, நான் பவி வீட்டுக்குப் போய் அவளுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டா செஞ்சு கொடுக்கட்டுமா? பாவம் ஒரு ஆளா எல்லா வேலையும் செய்றா இல்லையா..அது தான்... ம்ம்.. நீயும் வர்றீயா?" என்றாள் உமா, தோழியின் கண்ணை நேரே பாராமல்.

உமாவின் தடுமாற்றத்தை உணர்ந்த நிர்மலாவோ, தலை சரித்து தோழியை குறுகுறுவென பார்க்கவும் "ஹே என்னடி அப்படி பார்க்கிற?" என்றாள் உமா சிறு கூச்சத்துடன்.

"இல்ல, நீ பவியை மட்டும் தான் பார்க்கப்போறியா... இல்ல அங்க வேற...அ" என்று அவள் இழுக்கவும்

"ஹான்... அப்படியெல்லாம் இல்லை... நான் அவங்க அண்ணனை ஒன்னும் பார்க்கப் போகல... அவளுக்கு உதவிக்குத் தான்..." என்றாள் உமா சட்டென.

"ஹே, நான் அவங்க அப்பாவைப் பார்க்கப் போறியா அப்படின்னு கேட்டா, நீ என்ன அவங்க அண்ணனை இழுக்கிற? என்னடி மேட்டர்? உண்டதும் உறக்கம், கண்டதும் காதல்ன்னு என்னை ரைமிங் டயலாக் பேச வைப்ப போலிருக்கே?" என்றாள் கேலியாக

"ச்சி ச்சி, அதெல்லாம் ஒண்ணுமில்ல. உன்கிட்ட விளக்க முடியாது. நான் போறேன். நீ வரதுன்னா வா" என்றவள் தோழியின் "விளக்க முடியாதா? இல்லை உனக்கே விளங்கலையா?" என்ற ஆராய்தலை காதிலேயே போட்டுக் கொள்ளாமல் பவித்ராவின் வீட்டை அடைந்து, அழைப்பு மணியை அழுத்தினாள்.

கதவை தனசேகரன் திறக்கவே, அவனிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் உமா தடுமாற, அதை உணர்ந்தவன் போல் "உள்ள வாங்க உமா" என்றான் அவன்.

அவள் உள்ளே நுழைந்து கண்களை வீட்டைச் சுத்தி சுழல விடவும், "பவி அவ ஃப்ரிண்ட் வீட்டுக்குப் போயிருக்கா. அப்பா தூங்குறாங்க." என்றான் அவளது கருவிழிகளின் சுழலை கட்டுக்குள் கொண்டு வந்து, அவற்றைத் தன் புறம் திருப்பி அதில் தான் சிக்கிக் கொள்ளும் விருப்பத்துடன்.

அவன் வேலைக்குச் சென்ற இத்தனை ஆண்டுகளில், ஏன் படிக்கும் காலத்தில் கூட காதல் என்ற உணர்வு அவனுக்கு எழுந்ததில்லை. அதற்காக பெண்களிடம் ஆண்களுக்கு இயல்பாக ஏற்படும் ஈர்ப்பு கூட இருந்ததில்லை என்று சொல்ல அவனுக்கும் இஷ்டமுமில்லை. ஒரு சக மனிதனாக தன் வாழ்வில் ஏதோ ஒரு சந்தர்பத்தில் சந்தித்த ஓரிரு பெண்களை ஒரு முறைக்கு மேல் திரும்பிப் பார்த்திருக்கிறான்,கூடவே "என்ன அழகு" என்று வியந்திருக்கிறான் தான். ஆனால் ஒரு பெண்ணைக் கூட "இவள் நமக்கு மனைவியாய் வந்தால் பவியையும், அப்பாவையும் ஒரு தாய் போல் பார்த்துக் கொள்வாள் அல்லவா?" என்ற ரீதியில் யோசித்ததே இல்ல.

இப்போதும் உமாவைப் பார்த்த நிமிடத்தில் இவள் என் தங்கையை அவள் தங்கை போலல்லாமல் மகள் போல் பாவிப்பாள் போலவே என்ற எண்ணம் ஏன் வந்தது? என்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் அப்படி எண்ணுவதற்கு ஏதுவாக பெரிய விஷயங்கள் ஏதும் நடந்திராவிட்டாலும் அவனின் மனம் உமாவின் அருகாமையை வாழ்நாள் முழுதும் வேண்டி, அதற்கு ஈடுகட்ட நிறைய காரணங்களை மாலையாக தொடுக்க ஆரம்பித்தது.

ஒரே இரவில், அவளது ஒரே பார்வையில் தான் இத்தனை தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறோமே என்ற வியப்பும், அவளின் மனதில் என்ன உள்ளதோ என்ற கவலையுமாக சற்று அடக்கியே வாசித்தான் அந்த இளம் கணினி பொறியாளன்.

அவன் தன் நினைவுகளில் உழன்று பேசாமலிருக்க, "ஹோ, அப்போ நான் அப்புறமா வரட்டுமா?" என்று வினவி, "ஹய்யோ போகச் சொல்லிவிடுவானோ" என்று தவித்த மனத்தைக் கட்டுப்படுத்தி, வாயில் நோக்கி நடக்க ஆரம்பித்தாள் உமா.

"ஹ்ம்ம்... பவி வர நேரம் தான். கொஞ்ச நேரம் வெயிட் பண்ணுங்களேன்" என்றவன் அவளது வியந்த முகத்தைப் பார்த்ததும், "உங்களுக்கு வேற வேலையிருந்தா பாருங்க. அவ வந்ததும் அங்க வரச் சொல்றேன்" என்றான் அவசரமாக.

"வேலை ஒண்ணுமில்லை. பவிக்கு சமையலில் உதவி பண்ணலாம்ன்னு வந்தேன்" என்றாள் உமா விளக்கமாக அதே சமயம் வியப்பை மறைத்துக் கொண்டு.

"ஹ்ம்ம் தினமும் சமைக்கிறதுக்கு வள்ளியம்மா பாட்டி வருவாங்க. நேத்திக்கு அவங்களுக்கு உடம்பு சரியில்லாததால தான் பவி எல்லாம் செய்யவேண்டியதா போச்சு. இன்னைக்கு மதியத்துக்கு மேல வந்து கொலு பிரசாதம் செஞ்சு தரதா அவங்க பேரன்கிட்ட சொல்லி அனுப்பி இருக்காங்க. அதனால உங்களுக்கு ஒன்னும் பெருசா வேலை இருக்காது" என்றான் தனசேகரன் நீளமாக.

"ஹோ, அப்போ உனக்கு இங்க வேலை ஒண்ணுமில்லை. நீ போகலாம்ன்னு சொல்றீங்க அப்படித் தானே?" என்று தலை சரித்து உமா வினவிய போது, பறந்த மனதை அணை கொண்டு தடுக்க அரும்பாடுபட்டான் தனசேகரன்.

"நான் அப்படிச் சொல்லலையே!" என்றதோடு நிறுத்திய தனசேகரன் "என்ன சாப்பிடுறீங்க? காரட் ஜூஸ் , நீர் மோர் ரெண்டும் இருக்கு. எது தரட்டும்?" என்றான் உபசரிக்கும் எண்ணத்தில்.

"ஹ்ம்ம் கொஞ்சமா காரட் ஜூஸ்" என்ற உமாவை விநோதமாய் பார்த்துவிட்டு உள்ளே சென்றவன், வெள்ளை நிறத்தில் கருப்பு நிற ஓவியம் வரைந்த கிளாஸ்சில் அவள் கேட்ட காரட் ஜூசை நிரப்பி எடுத்துவந்து அவளிடம் நீட்டினான்.

"தேங்க்ஸ்" என்ற சொல்லோடு அதை வாங்கியவளின் இளம் சிவப்பு வண்ண உதடுகள் அந்த தண்ணீர் குவளையின் மீது படர்ந்த போது, ஒரு மலர் வண்டினுள் இருந்து அமுதம் உறுஞ்சுவது போலிருந்தது தனசேகரனுக்கு.

அவனது பார்வை தன் மேலிருப்பதை உணர்ந்த உமா குவளையை அவன் புறம் நீட்டி, "வேணுமா?" என்றாள்.

"ஹான்" என்று அவன் வியக்க, "இல்ல இல்ல, ஜூஸ் வேணும்ன்னா எடுத்துக்க வேண்டியது தானே? நான் குடிக்கிறதை ஏன் பார்க்கிறீங்கன்னு கேட்டேன்" என்றாள் உமா சிறு சிரிப்புடன்.

"ஐயோ, இந்த கொடுமையையா? வேண்டாம் சாமி. எவனாவது காரட்டைப் போய் ஜூஸ் போட்டுக் குடிப்பானா? கொடுமை கொடுமை" என்று அவன் முகத்தைச் சுளித்துத் தோளைக் குலுக்கவும்

"அப்புறம் ஏன் ஜூஸ் போட்டு வச்சிருக்கீங்க? என்னை மாதிரி வேண்டாத விருந்தாளி யாராவது வந்தா அவங்ககிட்ட கொடுப்பதற்கா?" என்று உமா மடக்கினாள்.

"அப்புறம் நீங்க ஒன்னும் வேண்டாத விருந்தாளியில்ல" என்று ஒரு கிசுகிசுப்பான குரலில் உரைத்துவிட்டு,

"நான் எங்க போட்டேன்? எங்க வீட்டுக் குட்டிப்பிசாசு தான் போட்டு வச்சிருக்கு. யாரோ காரட் சாப்பிட்டா முடி வளரும்ன்னு சொன்னாங்க போலிருக்கு. அதிலிருந்து ஒரு வாரத்திற்கு நாலு கிலோ காரட்டை ஜூஸ் போட்டே காலி செய்றா… " என தனசேகரன் தன் தங்கையின் புராணம் பாடிக் கொண்டிருந்தபோது பவித்ரா வீட்டினுள் நுழைந்தாள்.

வந்தவள் தனா பேசியதற்காக வம்பு வளர்க்காமல் "ஹாய் உமாக்கா, வாங்க வாங்க. ரெண்டு நிமிஷம் முகம் கழுவிட்டு வந்துடுறேன்" என்று தன் அறை நோக்கி நடக்கவும் தனசேகரனுக்குத் தங்கையின் அமைதி வியப்பாக இருக்க, உமாவிற்கு "என்ன ஆகிற்று இவளுக்கு? தனா பேசியதற்குப் பதிலுக்குப் பதில் திருப்பிக் கொடுக்காமல் செல்கிறாளே? முகம் வேறு வாடித் தெரிந்ததே?" என்ற எண்ணங்கள் வேகமாக ஓடி, அவளது கால்களையும் அதே வேகத்தில் இயக்கி பவித்ராவிடம் கூட்டிச் சென்றது.

"பவி என்னாச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்க? எங்கேயும் விழுந்துட்டியா? அடி ஏதும் பட்டு விட்டதா?" என்று வாய் பாடு கேள்விகளை உதிர்த்துக் கொண்டிருக்க, அணிந்திருந்த ஸ்கிர்ட்டை ஒரு மாதிரி பிடித்திருந்த பவித்ராவை பார்வையால் துளாவினாள் உமா.

"ஒண்ணுமில்ல உமாக்கா" என்ற சமாளித்தப் போதும் "ஆஹா, கண்டுப் பிடிச்சுட்டாங்களே" என்ற பள்ளி செல்லும் சிறுமியின் மாட்டிக்கொண்ட பாவனை பவித்ராவிடம் தெரிந்தது.

பவித்ராவின் கையை விளக்கி, வழிந்து கொண்டிருந்த ரத்தத்தின் மூலமாக ஏதோ காயம் என்றறிந்து கொண்ட உமா, உமாவின் கைகளில் ரத்தத்தின் கறை தெரிந்ததும் "என்ன குட்டிமா" என ஓடிவந்த தனசேகரனைக் கை காட்டி நிறுத்திவிட்டு, அவளை அறையினுள் அழைத்துச் சென்று "எங்க விழுந்த?" என்றாள் காயத்தின் மூலத்தை அறியும் பொருட்டு.

“வினு வீட்டில இருந்து வர வழியில.... ஆஆ... வலிக்குது...புதுசா ஒரு ஐஸ்கிரீம் கடை திறந்து இருக்காங்க. தச்சுவோட அங்க போகணும்ன்னு நினைச்சு, அந்தக் கடையில என்னவெல்லாம் இருக்குன்னு வேடிக்கை பார்த்துட்டே வந்தேனா... ஹா வலிக்குது உமாக்கா” என்று தான் விழுந்து வாரியத்தின் வீர தீர சரித்திரத்தை அவள் விவரித்துக் கொண்டே இருக்கும் போது, உமா அவளது காயத்தை சுத்தம் செய்து முடித்திருந்தாள்.

“உமாக்கா, உமாக்கா, அண்ணாகிட்ட சொல்லாதீங்க ப்ளீஸ். நான் விழுந்தேன்னு தெரிஞ்சா இப்போ கொடுக்கிற சைக்கிளையும் பிடுங்கி வச்சுப்பான். என்னோட கிளாஸ் மேட்ஸ் எல்லாரும் வண்டி வச்சிருக்காங்க தெரியுமா? என்கிட்டே மட்டும் தான் இல்ல, லைசென்ஸ் வாங்காம வண்டியேல்லாம் கிடையாதுன்னு வாங்கித் தரமாட்டேன்றாங்க... நீங்களே சொல்லுங்க எல்லாரும் லைசென்ஸ் வச்சுக்கிட்டா வண்டி எடுக்கிறாங்க?” என்று தன் ஆதங்கத்தை வெளியிட்டவள் அண்ணனிடம் சொல்லக் கூடாது என்றும் ஆணையிட்டாள்.

“ஹ்ம்ம்... ரெண்டு நிமிஷம் பொறு. நான் போய் நிம்மி வீட்ல இருந்து டாக்டர் கிட் எடுத்துட்டு வரேன்” என்றவள் பவித்ராவை அவள் அறையிலேயே விட்டுவிட்டு வெளியே விரைந்தாள்.

அவள் மருத்துவ உபகாரணங்களோடு உள்ளே நுழைந்த போது “ஆன்னு வேடிக்கைப் பார்த்துட்டே வந்தியாக்கும்? இனிமேல் சைக்கிள் கூட கிடையாது. சைக்கிள்ல போகும் போதே இந்த லட்சணம், இதுல ஸ்கூட்டி வேற வேணுமாம் இந்த அம்மாவுக்கு!” என்று தங்கையை அர்ச்சித்துக் கொண்டிருந்தான் தனசேகரன்.

தன்னிடம் சொல்லாதே என்று சொல்லிவிட்டு இவளே சொன்னாள் போல என்ற எண்ணத்துடன் உள்ளே நுழைந்த உமாவிற்குப் பவித்ரா தனசேகரனின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்த காட்சி விருந்தானது.

அதன் பின்னர் உமா அவளது காயத்துக்கு மருந்திட்ட நேரம் முழுதும் தனசேகரனின் கைகள் தங்கையின் கூந்தலை வருடிக் கொண்டே இருந்தது.

இருவரும் என்ன தான் சண்டையிட்டாலும் அவர்களுக்கு நடுவில் நிலவிய பாசத்தை ஒரு துளி கூட விடாமல் உணரமுடிந்தது உமாவால்.

மருந்திட்ட நேரமும் சரி, அதன் பின்னர் அவளுக்கு உண்ணக் கொடுத்து, மருந்து மாத்திரை சரியாக எடுத்துக் கொடுத்து, அதை உண்பதற்கு அவள் படுத்திய பாடை அழகாய் சமாளித்து, வலியால் சுருண்டவளை படுக்கையில் படுக்கவைத்து, தாலாட்டாத குறையாக அவளை உறங்க வைத்து வெளியேவந்த உமாவைக் கண்டதும் “இவள் என் தங்கையை அவள் தங்கை போலல்லாமல் மகளாகவே கண்டிப்பாக பாவிப்பாள்” என்ற எண்ணம் அழுத்தமாக தனசேகரனின் மனதில் விழுந்தது!

******************************************************

பாகம் 12

முதன் முதலாய் தன் கணவனை சந்தித்ததையும், அதன் பின்னர் இரு வார இடைவெளியில் இருவரின் காதல் பரிமாறப்பட்டதையும் நினைவு கூர்ந்த உமா, அவளை மணம் புரிந்து கொள்வதாக தனசேகரன் கூறி, அதற்கு அவள் சரியென்றதும் “உன் மேல் எனக்குக் காதல் வந்தது உன் அழகாலும், நடத்தையாலும் தான் என்றாலும், இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கிறது. ஆனால் நான் அதை சொல்வதால் “இவன் என்னடா, நமக்காக நம்மை காதலிக்காமல், குடும்பத்தை முன்னிறுத்தி காதலித்தேன் என்கிறானே”ன்னு நீ எண்ணிவிடக் கூடாது” என்ற அவனது பீடிகையும் நினைவு வந்தது.

அவன் சொல்லவருவதை புரிந்து கொண்டவள் போல “பவியை என் பொண்ணு மாதிரி பார்த்துக்கிறேன் தனா” என்று பட்டென அவனது சங்கடத்தை தீர்த்து வைத்தத் தனது கைகளை அவன் கைகளுக்குள் எடுத்துக் கொண்டு “தேங்க்ஸ் உமா. நீ இதை எப்படி எடுத்துப்பியோன்னு ரொம்ப கவலையா இருந்தது. ஆனா இதை சொல்லாம என்னோட காதலை உன்கிட்ட பகிர்ந்துக்கவும் மனசு வரல” என்று குரல் நடுங்க கூறியவன்,

“அம்மா இறந்தபோது, அவ ரொம்பச் சின்னப் பொண்ணு உமா. அதுவரைக்கும் எங்க ரெண்டுபேருக்கும் எல்லாத்துக்கும் அம்மா வேணும். என்னதான் பெண் குழந்தைகள் அப்பாவோட ஒட்டுதல் என்று சொன்னாலும், எனக்கும் சரி பவிக்கும் சரி எங்க வீட்ல அம்மா தான்”

“கிட்டத்தட்ட ஆறு மாசம் அம்மா இல்லை என்பதையே அவளால தாங்கிக்க முடியல. அந்த வயசில அவளுக்கு அந்த இழப்பு ரொம்பவே பூதாகரமா தெரிஞ்சது போல. பேச்சே குறைஞ்சு போய், அம்மாவோட ரூம்ல, அம்மாவோட சேலையை விரிச்சு அதுல படுத்துக்கிட்டு… சை கொடுமை… என்னைவிட அப்பா ரொம்ப ஆடிப் போய்ட்டாங்க.” என்று அவன் கூறிய போது நடுங்கிய குரல் ஆடிப் போய் இருந்தது.

அவர்கள் அனுபவித்த வலியை அன்றைக்குத் தனதாக்கிக் கொண்ட உமா, தனசேகரனின் கைகளுக்குள் இருந்த தன் கையால் அவனதை அழுத்திக் கொடுத்தாள்.

அந்த தொடுகை ஆயிரம் சமாதானங்கள் கூறியதோ என்னவோ உள்ளிருந்த கையை இன்னமும் இறுக பற்றினான் தனசேகரன். அந்த இறுக்கத்தை இப்போதும் மனம் குளிர அனுபவிப்பள் போல கையை அழுந்த தேய்த்துவிட்டுக் கொண்ட உமாவின் மனதில் அதன் பின்னர் அவன் பேசிய வார்த்தைகள் ஓடி மறைந்து பவித்ரா மேல் அவன் வைத்திருந்த அன்பை பெரிதாக படம் பிடித்துக் காட்டியது.

“அந்த வருஷம் படிப்பும் பாதில நின்னு போய்… she is one year lagging behind…. இந்த வருஷம் காலேஜ் போயிருக்க வேண்டியவ…” என்று அவன் வருத்தப்பட்டதும், “அப்புறம் எப்படி சரி பண்ணினீங்க? நான் கொலுக்கு வந்திருக்கும் போது உங்க அம்மா பத்தி அவளாவே சொன்னாளே? சொல்லிட்டு சீக்கிரமே அவளே அவளை சரி பண்ணிக்கிட்டா” என்று தனக்குத் தெரிந்ததை அவனிடம் பகிர்ந்துகொண்டாள்.

“ஹ்ம்ம்… அம்மா இருந்தபோது பவிகிட்ட நான் சரியா பேசினது கூட கிடையாது. எனக்கு, எனக்கு மட்டுமே கிடைச்சிட்டு இருந்த கவனிப்பை, பாசத்தை பறிச்சுக்கிட்டா அப்படின்னு நானே லூசுத்தனமா கற்பனை பண்ணிக்கிட்டு எப்போ பார்த்தாலும் அவ கூட அடி தடி சண்டை தான். அம்மா எங்களை விட்டுப் போனதுக்கு அப்புறம் எல்லாம் மாறிப் போச்சு. பவியோட நிலையைப் பார்த்து அப்பாவால அழுக மட்டும் தான் முடிஞ்சது. அவளை எப்படி மாத்துறதுன்னு புரியல. நான் தான் அவகிட்ட கொஞ்சம் கொஞ்சமா பேசி, அவளுக்குப் பிடிச்சதை செஞ்சு கொடுத்து, ஒரு ஃபிரிண்ட் மாதிரி அவளோட விருப்பு வெறுப்பு தெரிஞ்சு எல்லாம் செஞ்சு, அம்மா இல்லாத உலகத்தில நாங்களும் இருக்கோம்ன்னு புரிய வைச்சு, ரொம்பக் கஷ்டப் பட்டு வெளிய கொண்டு வந்தேன்” என்று வேதனை நிறைந்த குரலில் அவன் சொல்லிக் கொண்டே போக,

“அவ தான் இப்போ சரியாகிட்டா இல்ல? கவலைப்படாதீங்க தனா. நான் பார்த்துக்கிறேன்” என்று உமா சொல்லி முடித்தப் போது

“தேங்க்ஸ். ஹ்ம்ம் இப்போ நல்லாவே சரியாகிட்டா… என்னையே டிரில் வாங்கிடுவா சில சமயம். எப்பவும் இதே சந்தோஷத்தோட அவ இருக்கணும் உமா. அப்படியிருந்தா ஒரு அண்ணனா என்பதை விட ஒரு அம்மா ஸ்தானத்தில இருந்து ரொம்ப சந்தோஷப்படுவேன்” என்று தனா கூறி முடித்தப் போது, அவனுக்குள் இருக்கும் பாசம் அவளுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. தங்கை மேல் இத்தனை பாசம் வைத்திருப்பவன் பாசத்திற்காக ஏங்கி நிற்கும் தன்னையும் நன்றாகவே பார்த்துக் கொள்வான் என்று அவள் மனம் நிறைந்த போது,

“ஹே, என்னைப் பத்தியே… அதுவும் பவியைப் பத்தியே பேசிட்டு இருக்கேன் பாரு. உன் அப்பா-அம்மா துபாய் இருக்காங்க. உன் அண்ணா SRMC ல படிக்கிறான்னு மட்டும் தான் எனக்குத் தெரியும். அதுவும் நம்ம குட்டிப் பிசாசு உபயம் தான். உன்னைப் பத்தி சொல்லு” என்று அவள் வீடு பற்றி கேட்டுத் தெரிந்துகொண்டான்.

அவளது ஏக்கம் புரிய, அவளைத் தோளோடு சேர்த்தணைத்து “நாங்க இருக்கோம். இனிமேல் எதுக்காகவும் நீ ஏங்க நான் விடமாட்டேன் தேவி” என்று அவன் உணர்ச்சி வேகத்தில் சொல்லிமுடித்தப் போது உமாவின் கண்ணீர் படர்ந்த கண்கள் அவனது தோள் வளைவில் இடம் தேடி, அவனது சட்டையை ஈரமாக்கி இருந்தன.

“தேவி, என்னைப் பாரு. அழக்கூடாது டா ப்ளீஸ்” என்று தனசேகரன் தன்னைக் கொஞ்சி மிஞ்சி, இயல்பிற்குக் கொண்டுவந்தது இன்றும் பசுமையாய் நினைவில் நின்று, அந்த பசுமையே நெஞ்சைக் குத்தியும் கிழித்தது.

எத்தனை அன்பு, என்ன ஒரு புரிதல், அழகான காதல், நிறைவான குடும்பம் என்றிருந்த வாழ்வில் இன்று தேவி என்ற அழைப்பில்லா விட்டாலும் பரவாயில்லை, உமாவிற்குக் கூட பஞ்சமாகிப் போனதே

தனசேகரன் இந்த மூன்று வருடத்தில் நேருக்கு நேராய் உமாவை நோக்கிய தருணங்கள் அவளைக் குத்திக் கிழிக்கவென்று மட்டுமே இருந்தன என்பதோடு அவனும் அவளை வருத்துவதில் இன்பம் காணவில்லை. சொல்லப் போனால் தாய் ஸ்தானத்தில் தங்கையைப் பார்த்துக் கொள்வேன் என்று கூறியவனிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்? இந்த அளவிற்கு, அவளை மணம் புரிந்து கொள்ளும் அளவிற்கேனும் அவன் ஒத்துக் கொண்டு, ஒரே வீட்டில் அவளைப் பார்த்துக் கொண்டு இருப்பதே அதிசயம் தான்!

காதல் மலர்ந்த காலத்தையும், அப்போது தனசேகரன் தன் மேல் பொழிந்த அன்பையும் எண்ணி எண்ணி மகிழ்ந்து, அது சூன்யம் ஆனதில் தன் தவிற்காக மீண்டும் நொந்து, தனசேகரனின் இறுக்கமான அணைப்பிற்காக உமா ஏங்கத் தொடங்கியபோது அவளது விமானம் சென்னை மண்ணை அணைத்து, அவளது ஏக்கத்திற்கு அணையிட்டது.

விமானத்தை விட்டிறங்கி, பரிசோதனைகளுக்கு உள்ளாகி உமா வெளியே வந்தபோது மணி இரவு பத்தை நெருங்கி இருந்தது. டாக்ஸி பிடித்து தனியாக வீட்டிற்குச் செல்லவேண்டுமே என்ற எண்ணத்துடன் வெளியே வந்த உமாவைப் பெரும் ஆச்சிரியத்திற்கு உள்ளாக்கியது தனசேகரனின் வரவு!

உமா ஆச்சிரியத்தில் திளைத்த அதே வேளையில் வினயாவும் விஜய்ஆனந்தை பெரும் வியப்பில் ஆழ்த்தி இருந்தாள்! விஜயின் பெருத்த வியப்பிற்குக் காரணம் வினயா சமையலறையில் நின்று துளசி அம்மாவிடம் சமையல் பயின்று கொண்டிருந்தது தான்!

அடுப்பு பக்கத்தில் நின்று தோசை வார்த்துக் கொண்டிருந்த வினயாவை விட்டுவிட்டு, மிக்சியில் சட்னி அரைத்துக் கொண்டிருந்த துளசியிடம் சென்றவன், அவர் காதருகில் குனிந்து "என்னாச்சும்மா, வினு என்ன பண்றா கிட்சன்ல?" என்றான் மனைவியிடமே பார்வையைப்பதித்து.

"கிட்சன்ல என்னடா செய்வாங்க? சமையல் தான். வரவர உன் பொண்டாட்டியோட சேர்ந்து உனக்கும் மூளை மங்கிப் போச்சு" என்று துளசியும் அவன் காதில் விளையாட்டாய் சொன்னது அவனை வருத்தியது.

"அம்மா ப்ளீஸ். நீங்களும் அப்பா மாதிரியே பேசுறீங்களே!" என்றவன் சட்டென சமையலறையை விட்டு வெளியே சென்றுவிட்டான்.

"விஜய் கண்ணா, நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை கண்ணா" என்று துளசி மகனின் வருத்தமான குரல் பொறுக்கமுடியாமல் சொல்ல, வருத்தத்தைப் போக்கும் உந்துதல் குரலை உயர்த்தி வினயாவைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

"என்ன சொன்னீங்க துசிம்மா? விஜி வந்துட்டாங்களா?" என்றவளிடம் முதல் கேள்வியை விடுத்து "ம்ம்ம் விஜய் கிளினிக்ல இருந்து வந்தாச்சு. அவனைச் சாப்பிட வரச்சொல்லு. போ" என்று மருமகளை அனுப்பி வைத்தார்.

"சரிம்மா" என்று வாயில் புறம் திரும்பியவள் "துசிம்மா, தோசை நல்லா வந்திருக்கா? ஒழுங்கா ஊத்தி இருக்கேனா? பொடியெல்லாம் போட்டு சூப்பர்ரா ஊத்தி இருக்கேன் தெரியுமா?" என்று தன் வேலையை அவரிடம் காண்பித்து உறுதி செய்து கொண்டே வெளியே சென்றாள்.

வெளியே வந்தவளின் கண்களில் சோபாவில் அமர்ந்து உயிர் தொலைத்த தொலைக்காட்சியை வெறித்துக் கொண்டிருந்த விஜய் கண்ணில் பட்டான். அவனருகில் சென்றவள் "விஜி, சாப்பிடலாமா? இன்னைக்கு நானே தோசை வார்த்தேன்" என்றாள் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

அவள் ஒரு பாராட்டுக்குக் காத்திருப்பது புரிய "நீயே பண்ணியா? குட், குட்" என்று சிறு பிள்ளையை ஊக்குவிப்பது போல் அவளைத் தட்டிக் கொடுத்தவன், "ஒரு நிமிஷம் என் பக்கத்தில உட்காரேன்" என்று அவள் கைபிடித்து அருகேஅமர்த்தினான்.

"என்ன திடீர்னு சமையல் எல்லாம் செய்ற? யாராவது எதாவது சொன்னாங்களா?" என்றான் அவள் கண்களுக்குள் விழுந்த முடி கற்றையை ஒதுக்கிவிட்டவாறே.

“ம்ஹூம் இல்லை” என்று அவளது பதிலிலேயே ஏதோ இருப்பது விஜய்க்குப் புரிந்தது.

“இன்னைக்கு சாயங்காலம் எங்க போனீங்கடா?” என்று விசாரணையை வேறு புறத்திலிருந்து துவக்கிய கணவனின் சாதூர்யம் புரியாமல்

“பூர்ணிமா அக்கா வீட்டுக்கு” என்றவளின் குரல் வெளியே வரவே தடுமாறியது.

“நான் அவங்க வீட்டில பிரச்னை ஒன்னும் செய்யல. சமத்தா தான் இருந்தேன்” என்று முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு வினயா பதில் சொல்லவும் தான் தான் வாய் விட்டுப் பேசியது விஜய்க்கு உரைத்தது.

அவனது தவறு உரைத்த வினாடியில் வினுவின் குழந்தை தனமும் “சமத்தா தான் இருந்தேன்” என்ற அவளின் சுணக்கமும் நெஞ்சை மென்மையாக்கியது.

ஆனால் அங்கே என்ன நடந்தது என்றறிந்து கொள்ள மனம் துடித்தது விஜய்க்கு. இதயத்தின் துடிப்பை வினயா கேட்காத வண்ணம் அடக்கியவன் “அங்க யாரு இருந்தாங்க?” என்று மீண்டும் தன் விசாரணையைத் துவக்கினான். அவனுக்கு அங்கே தன் அத்தை தாரகை இருந்திருப்பாரோ, அவர் ஏதும் சொல்லப் போய் வினு அரண்டுவிட்டாளோ என்று பயமாக இருந்தது.

“பூர்ணிமா அக்கா, அவங்க அத்தை... அப்புறம் நாங்க கிளம்பும் போது தாரகை சித்தி வந்தாங்க” என்று அவளது விவரத்தில் “கிழிஞ்சது, வினுவை அங்கே கூட்டிட்டு போன அம்மாவை சொல்லணும்” என்று இப்போது கவனத்துடன் மனதிற்குள் சொல்லிக் கொண்டான் விஜய்.

அதற்குள் துளசியின் குரல் சமையலறையிலிருந்து ஓங்கி ஒலித்து அவர்கள் இருவரையும் உணவு உண்ண அழைத்தது.

“உனக்கு ஒரு வாரத்திற்குத் தோசை தான் விஜய்” என்ற துளசியை விநோதமாய் பார்த்த வினயாவின் மீது பார்வையை வைத்துக்கொண்டே “ஏன்மா” என்று கேள்வி கேட்ட மகனிடம் பதில் சொல்ல ஆரம்பித்தார் துளசி.

“ஒரு வேளைக்குத் தோசை ஊத்துன்னு சொன்னா, அந்த பத்திரத்தில இருந்த மாவு எல்லாத்தையும் தோசையா வார்த்து வச்சிருக்கா. அந்த தோசை எல்லாத்தையும் நீயும் அவளும் தான் சாப்பிட்டு காலி பண்ணனும். என்னால காஞ்சு போன தோசை எல்லாம் சாப்பிட முடியாதுப்பா” என்று துளசி தனது வழக்கமான தோல் குலுக்கலை விருந்தாக்கவும் பரிதாபமாய் முழிப்பது வினயாவின் முறையானது.

“அழகா ரவுண்டா வந்துட்டே இருந்துச்சா... நான் பாட்டுக்கு...” என்று வினயா இழுக்கவும், “ச்சு, என் வினு பேபியை கிண்டல் பண்ணாதீங்கம்மா. பரிதாபமா முழிக்கிறா பாருங்க” என்று வினயாவை தோளோடு சேர்த்தணைத்தான் விஜய் ஆனந்த்.

“ஹுக்கும்” என்று துளசி சந்தோஷமாய் தன் முகத்தைத் தோளில் எடுத்துக் கொண்ட போதும் வினயாவிற்கு மனசாரவில்லை.

“இவ்வளவு தோசையும் என்ன துசிம்மா செய்றது?” என்று இன்னமும் பரிதாப முகம் மாறாமல் மருமகள் வினவவும் மாமியாருக்கு உருகி விட்டது.

“நாளைக்கு பொடி தோசை உப்புமா செஞ்சுக்கலாம் வினும்மா, காலைக்கும் மதியத்துக்கும் விஜய்க்கு அதையே கொடுத்துவிட்டுடலாமா?” என்று அவர் ஒரு வழியைக் கூறவும் அதை கப்பென்று பிடித்துக்கொண்டவள்

“ஹ்ம்ம் சரி” என்று வேகமாக மண்டையை ஆட்டினாள்.

“அடிங்க, உனக்காக நான் சப்போர்ட் பண்ணினா எனக்கே காஞ்சு போன தோசையா?” என்று விஜய் வினயாவின் காதைப் பிடித்துத் திருகவும்

“வலிக்குது விஜி...” என்று அவனிடமிருந்து விடைபெற்றவள் “துசிம்மா தானே ஐடியா கொடுத்தாங்க, நான் சரின்னு மட்டும் தான் சொன்னேன். அவங்களையும் காதைப் பிடித்துத் திருகுங்க” என்று தாயை மகனிடம் மாட்டிவிட்டு வேடிக்கைப் பார்த்தவள் வெள்ளிச் சதங்கையை சிரித்தாள்.

அவளது சிரிப்பைக் கண்ணுக்குள் நிறைத்துக் கொண்ட துளசியின் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்க்கவும் விஜய் பதறிப் போனான். ஆனால் வினயா முன்னிலையில் அதையும் கேட்க முடியாமல் "சரி சரி, எனக்குப் பசிக்குது சாப்பிடலாமாம்மா?" என்று கேட்டு வினயாவை கைப்பற்றி உணவு மேஜையில் அமரவைத்தான்.

உணவின் போது வினயா அன்று கல்லூரியில் நடந்தவை பற்றி சொல்லவும் அதில் கவனம் சென்றது. ஆனால் விஜயின் மனதில் பூர்ணிமா வீட்டில் நடந்தவை பற்றியும், அதன் பின்னர் வினு சமையலறையில் நின்ற மாயத்தைப் பற்றியுமே எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்ததால் அவளது பேச்சை பெரும் முயற்சிக்குப் பின்னர் காதில் வாங்கி மனதில் பதித்து வாயால் பதில் கூறினான்.

விஜயின் கவனம் அதிலிருக்க, துளசியோ மகனின் வருத்தத்தையும், வினயாவின் கள்ளம் கபடமற்ற சிரிப்பையும், இன்று அவளைத் தன் உறவுகள் நடத்திய முறையையுமே எண்ணிக் கொண்டு தற்போதைய கவனத்தைத் தொலைத்தார்.

உணவு முடிந்து வினயா உறங்கச் சென்ற பின்னர் தாயும் மகனும் பால்கனியில் அமர்ந்து அன்று வராத நிலவையும், எப்போதும் இருக்கும் நட்சத்திரங்களையும் பார்த்துக் கொண்டே மௌனமாய் இருந்தனர்.

முன்னோடியாய் நின்று மௌனத்தை களைத்த துளசி "விஜய் கண்ணா, அப்போ நான் ஏதோ நியாபகத்தில் யோசிக்காம பேசிட்டேன், தப்பா எடுத்துக்காதபா" என்று கெஞ்சும் குரலில் தன் மன்னிப்பை வேண்டினார்.

"ஹய்யோ என்னம்மா நீங்க? அப்பா வேற சாயங்காலம் போன் பண்ணி ஒரே திட்டு... அதுல நொந்து போய் வீட்டுக்கு வந்தா நீங்களும் அப்பா மாதிரியே பேசினீங்களா... அது தான் கொஞ்சம் கஷ்டமாகிடுச்சு. வேற ஒண்ணுமில்லமா" என்று விஜயின் சமாதானம் ஒரு கவலையை மட்டுபடுத்தி மற்றொன்றை மேலே எடுத்துவந்தது.

"அப்பா என்ன சொன்னாங்க கண்ணா? ரொம்பத் திட்டிட்டாங்களா?" என்றவர் எழுந்து வந்து மகனின் தலையைக் கோதிக் கொடுத்தார்.

"ஹ்ம்ம்... அப்பா திட்டுறது புதுசா என்ன? வினுவை நான் கல்யாணம் பண்ணிக்கிட்ட நாளிலிருந்து நடக்கிறது தானே?" என்று மகன் தன்னைத் தேற்றுவது போல அவனையே தேற்றிக் கொள்ளவும் துளசியின் தாயுள்ளம் பனித்தது.

"என்னைத் திட்டினா கூட பரவாயில்லைமா, வினுவை ரொம்பத் திட்டுறாங்க. அது தான் ரொம்ப மனசை வருத்துறது. இப்போ நீங்க வேற இங்க வந்துட்டீங்களா, அதுக்கும் வினுவையே குற்றவாளி ஆக்கி என்னை வதைக்கிறாங்க" என்றவனின் மனதில் தந்தை பேசிய வார்த்தைகளே ஓடிக் கொண்டிருந்தன.

"நான் நினைக்கிறேன்... நீங்க இல்லாம அங்க ரொம்பக் கஷ்டப்படுறார் போல. அந்த கோபமெல்லாம் வினு மேல திரும்புது. நான் வினுவைப் பார்த்துக்கிறேன்ம்மா, நீங்க குன்னூர் கிளம்புறீங்களா?" என்ற விஜய் தாய் தன்னைத் தவறாக எண்ணி விடுவாரோ என்ற பயத்தை முகத்தில் தாங்கி, என்னைப் புரிந்துகொள்வீர்கள் தானே என்ற கோரிக்கையையும் கூடவே வைத்து அவரை ஏறிட்டான்.

"நானும் அப்படித் தான் கண்ணா நினைச்சேன். ஆனா வினு மாறிட்டு வர இந்த நேரத்தில அவளைத் தனியா விட்டுட்டுப் போறது சரியில்லைன்னு தோணுது. மேலும் அவ கிட்ட ஒரு மாசம் டைம் கேட்டு, கெஞ்சிக் கூத்தாடி கூட்டிட்டு வந்துட்டு, இப்போ நடுல போனா இன்னொரு தடவை நம்ம மேல நம்பிக்கை வைக்கமாட்டா கண்ணா... அது தான் தயங்குகிறேன்" என்று துளசி மகனின் யோசனையை ஆதாரிக்கவும் தாயின் பாசத்தை எண்ணிப் பெருமையாய் தான் இருந்தது. ஆனால் தந்தையின் திட்டுக்குத் தாய் ஆளாக நேரிடுமே என்ற எண்ணம் அவனது பெருமையை அளித்து வேதனையை நிரப்பியது.

"உங்க அப்பாவை அப்புறம் பார்த்துக்கலாம். அவரு பாடு கத்தட்டும். உங்க அத்தை வேற இன்னைக்கு இன்னும் கொஞ்சம் ஏத்தி விட்டிருப்பா, அதுல மனுஷன் எண்ணைல விழுந்த மீன் துண்டா பொரிஞ்சு தள்ளி இருப்பார். அவரா உணருவார்... அவரு உணர்வதுக்கு முன்னாடி அவருக்குப் பயந்து நாம எதாவது செஞ்சா, ஆஹா, நமக்குப் பயப்படுறாங்க... இன்னும் கொஞ்சம் ஏதாவது செய்யலாம்ன்னு இருக்கிற கோபம் ஊட்டி மலை உச்சி வரைக்கும் ஏறிக்கும். அதனால விட்டுடு" என்று மகனுக்கு அறிவுறுத்தினார் துளசி.

“ஆனாலும் அப்பா பாவம்மா” என்று சிறு புன்னகையுடன் அதை ஒதுக்கியவன் அத்தையை எடுத்துக் கொண்டான்.

“அத்தை என்னம்மா சொன்னாங்க? வினு முகமே சரியில்லையே? சமைக்கத் தெரியலன்னு சொன்னாங்களா? அது தான் வினு இன்னைக்கு கிட்சன்ல நின்னாளா?” என்று தான் ஊகித்தவற்றை வரிசையாய் கேட்டான்.

தாய் பதில் சொல்ல ஆரம்பிக்கும் முன்னர் “நீங்க ஏன்ம்மா அவளை அங்கே கூட்டிட்டு போனீங்க?” என்று தன் முதல் சந்தேகத்தை கடைசியாய் முன் வைத்ததோடு நில்லாமல் முதல் பதிலை அதற்கு எதிர்பார்த்தான்.

“யாரோ, தனசேகரன்கிட்ட வினுவைப் பொத்திப் பொத்தி வச்சு தான் அவ தொட்டதுக்கெல்லாம் பயப்படுறா. அவளை மாத்தணும், நான் மாத்துகிறேன்... சரி பண்றேன் அப்படின்னு வீர வசனம் பேசிட்டு வந்தாங்க... அது நீ இல்லையா விஜய்?” என்று துளசி திவீரமாக வினவவும்

“அட என்னம்மா” என்று சலித்துக் கொள்வது விஜயின் முறையானது.

“சரி சரி, அங்க அவளைக் கூட்டிட்டு போனீங்க சரி. அங்க என்ன நடந்ததுன்னு சொல்லுங்களேன்” என்று அவன் தான் கடைசியாய் கேட்டக் கேள்வியை மறந்துவிட்டுப் பேசவும் துளசிக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் சொல்லப் போகும் விஷயம் சிரிப்பை வரவழைக்காது என்றெண்ணியவர் முகத்தை சரி செய்து கொண்டு

ஒரு வாரம் முந்தியே பூரணியைப் போய்ப் பார்த்திருக்கணும். அந்த வேலை இந்த வேலைன்னு போக முடியாம போச்சா... உங்க அத்தைக்குப் பொறுக்கல... காலையில போன் பண்ணி ஒரே புலம்பல். ஆத்திர அவசரத்திற்கு ஒரு உதவி கூட பண்ணாம நீ என்ன கோயம்புத்தூர்ல வெட்டி முறிக்கிற அப்படி இப்படின்னு... இவங்க வாய்ல இருக்கிறதுக்கு ஒரு நடை போய் அவளைப் பார்த்துட்டு வந்துடலாம்ன்னு கிளம்பினான். வினு தான் அதிசயமா நானும் வரட்டுமான்னு கேட்டா... சரின்னு போனா... அங்க பூரணி மாமியார் இவளை ஒரே விசாரணை...” என்று துளசி ஆரம்பித்தப் போதே

“எதைப் பத்திம்மா?” என்று குறுக்கே புகுந்தான் விஜய்.

“வேற எதைப்பத்தி? உனக்கும் அவளுக்கும் இருக்கிற நெருக்கத்தைப் பத்தித் தான். “என் மகன் கல்யாணம் நடந்த அதே சமயத்தில தான் உங்களுக்கும் கல்யாணம் நடந்தது. என் மருமக உண்டாகிட்டா... நீ எப்போ நல்லா சேதி சொல்லப் போற...” “ஒரு மாசம் வேற உன் அண்ணன் வீட்டில போய் இருந்தியாம்... என்ன சேதி...” அது இதுன்னு புள்ளையை ஒரே கேள்வி... பாவம். நானும் எவ்வளவோ நடுல போய் பார்த்தேன்...” என்று துளசி சொல்லிக் கொண்டே போக

“இதுக்குத் தான்ம்மா, அவளை ஏன் அங்க கூட்டிட்டுப் போனீங்கன்னு கேட்டேன்...கல்யாணமாகி மூணே மாசத்தில கருத்தரிக்கணுமாமா... ஏன் மூணே மாசத்திலே ஏன் குழந்தை பிறக்கலைன்னு கேட்க வேண்டியது தானே? ஏன்மா ஏன்மா, இவங்க எல்லாம் இப்படி இருக்காங்க?” என்று விஜயின் குரலில் நிதானம் குறைவதைக் கண்ட துளசி

“விஜய்... பொறுமை பொறுமை... பேசுறவங்க பேசிட்டே தான் இருப்பாங்க... நமக்கு சரின்னு படறதை மட்டும் எடுத்துக்கனுமே தவிர அவங்க சொல்ற எல்லாத்தையும் மனசில போட்டு குழப்பி, அதுக்கு பதில் சொல்லத் துடிக்கக் கூடாது” என்று மகனின் தோளை அழுத்திக்கொடுத்தவர்

“பூரணி மாமியார் பேசின போதெல்லாம் அழகா சிரிச்சு மழுப்பிட்டா உன் பொண்டாட்டி.. ஆனா கிளம்பப் போகும் போது தாரகை வந்தாளா... அவ கேட்ட கேள்வில தான் கொஞ்சம் தடுமாறி போய்ட்டா” என்ற துளசி

மகன் அதற்காக காத்திருப்பது புரிய “என் பொண்ணு கல்யாணம் பண்ணி வந்த இடத்தில புருஷன், மாமியார், மாமனார், வீடு என்று எல்லாத்தையும் எப்படி பார்த்துக்கிறா தெரியுமா? நீ என்னடானா உன் மாமியாரை வேலைக்காரி மாதிரி சமையல் பண்ணித் தரச் சொல்லி நல்லா உட்கார்ந்து சாப்பிடுறியாமேன்னு சகட்டு மேனிக்கு அவளைக் கேள்வி கேட்க ஆரம்பிச்சவ என்னையும் சேர்த்து சரியான திட்டு” என அங்கே நடந்ததன் சுருக்கத்தை சொல்லியவர் ஒரு சிறு இடைவெளி விட்டு மீண்டும்தொடர்ந்தார்.

"நிலைமை ரொம்ப மோசமாவதற்கு முன்னாடி நான் வினுவை அழைச்சிட்டு வந்துட்டேன். வீட்டுக்கு வந்து நான் பண்றது தப்பா துசிம்மா...ன்னு ஒரே புலம்பல். அவளை சமாதனம் செய்யவே ரொம்ப நேரம் ஆனது. ஹ்ம்ம் இப்பவே வாய் புளிச்சதோ மாங்கா புளிச்சதோன்னு பேசுறவங்க... வினுவைப் பத்தி முழுசா தெரிஞ்சா என்ன சொல்வாங்களோன்னு வேற ஒரு மாதிரி ஆகிடுச்சு கண்ணா"" என முடித்தப் போது விஜய் மௌனத்தைத் தனது மொழியாக்கியிருந்தான்.

*****************************************************

பாகம் 13

அடுத்து வந்த நாட்களில் விஜயின் மனதில் ஆயிரம் ஆயிரம் யோசனைகள் ஓடிக் கொண்டே இருக்க, அதையெல்லாம் கண்டு கொள்ளாத வினயாவும் துளசியும் அவர்கள் உலகத்தில் சந்தோஷமாகவே தென்பட்டனர்.

துளசியின் வருகைக்கு முன்னர் தனக்குள்ளே சுருண்டிருந்த வினயா கொஞ்சம் கொஞ்சமாக கூண்டை விட்டு வெளியே வர ஆரம்பித்திருந்தாள். இன்னமும் தனியே வெளிய செல்ல பயப்படுகிறாள் தான்... ஆனால் முன்னர் போல விஜயோடோ, துளசியோடோ வெளியே செல்வதற்குத் தயங்குவதில்ல. கல்லூரியில் நடக்கும் சம்பவங்களை வாய் விட்டு மற்றவரோடு பகிர்ந்து கொள்கிறாள். தனக்குத் தேவைப்பட்டதை தயக்கமின்றி விஜயிடம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறாள்.

பூரணி வீட்டிற்குச் சென்று வந்ததிலிருந்து சாதாரண மனிதர்கள் போலில்லாமல் தான் வேறுபட்டு இருப்பது அவளுக்கு உரைத்துக் கொண்டே இருந்ததால் தன்னால் முடிந்த முயற்சி எடுத்து, துளசிக்கு சமையலில் உதவி, விஜயுடன் நடை பயிற்சி, துளசி சேர்த்துவிட்ட நடன வகுப்பு, அவளை போகிறேன் என்று கூறிய கிளாஸ் பெயிண்ட்டிங் வகுப்பு என அவளை எப்போதும் ஒரு வேலையில் ஈடுபடுத்திக் கொண்டாள்.

ஹ்ம்ம் ஆனால் இன்னும் அந்தப் பழைய துள்ளல்... துடுக்கு... அழகிய கண் சிமிட்டல் எதுவும் மீண்டு வந்தபாடில்லை... துளசியின் உந்துதலால் மனம் திறந்து சில விஷயங்களை அவள் பேசினாலும் நிறைய வேதனைகளை உள்ளுக்குள் அடக்கி வைக்கிறாள் என்றே விஜய்க்குத் தோன்றியது.

அவளது எண்ணங்களை எப்போது தடையின்றி யாரிடமாவது பகிர்ந்து கொள்கிறாளோ அப்போது தான் அவள் முழுதாய் குணமாவாள் என்ற அவனது எண்ணம் மேல்மேலும் வளர்ந்து கொண்டே போக, அதற்கு உதவி புரியும் எண்ணத்தில் வீரராகவன் காய்ச்சலில் விழுந்தார்.

உடம்பு நன்றாக இருக்கும் போதே துளசியின் துணையையும், வாய்க்கு ருசியான சமையலையும் எதிர்பார்ப்பவர் இப்போது உடல் தளர்ந்த வேளையில் மனைவியின் கவனிப்பை முழுவதுமாக வேண்டினார். அவரே விஜயின் வீட்டு எண்ணிற்கு அழைத்து "அம்மாவை ஒரு வாரம் இங்க வந்துட்டுப் போகச் சொல்லு விஜய்" என்று குரல் கம்ம, குறைந்த கோபத்தோடு கேட்டப் போது விஜய்க்கும் சரி துளசிக்கும் சரி அவரை இந்த நிலையில் சொந்தங்களின் கவனிப்பில் விட்டுவைக்க மனம் வரவில்லை.

வினயாவிடம் ஒரே வாரத்தில் வந்துவிடுவதாக கூறி துளசி கிளம்ப, உடம்பு முடியாமல் இருக்கும் தந்தையைப் பார்க்க எண்ணிய விஜய் வினுவை எண்ணித் தயங்கினான். தயங்கிய மகனைத் தட்டிக் கொடுத்து "அப்பாக்கு சாதாரண காய்ச்சலா தான் இருக்கும் கண்ணா, தூசியால ஒரே ஒரு தும்மல் போட்டிருப்பார். அந்த ஒரு தும்மலை அவரே பெருசுப்படுத்தி காய்ச்சலாக்கிட்டார் போல, நான் பார்த்துக்கிறேன். நீ வினு கூட இரு" என்று துளசியின் அறிவுறுத்தலின் பெயரில் விஜய் ஆனந்த் தங்கி விட முடிவு செய்தான்.

துளசி கிளம்பிச் சென்ற ஒரே நாளில் அவரைத் தேடத் தொடங்கிவிட்டாள் வினயா. என்னதான் அவர் விரட்டிக் கொண்டே இருந்தாலும் அவரின் கண்டிப்பில் தான் அழகாய் பொருந்திக் கொள்வது அவளுக்கே புரிந்ததோ என்னவோ அவளது விழிகளில் எதையோ தொலைத்த உணர்வு தற்காலிகமாக தொலைந்து போய் எதையோ தேடும் உணர்வு குடிகொண்டது.
அவளது உணர்வை அச்சரம் பிசகாமல் உணர்ந்தவன் போல தன் வெளி வேலைகளைக் குறைத்துக் கொண்டு அவளுடன் அதிக நேரம் செலவு செய்ய முடிவு செய்தான் விஜய்ஆனந்த்.

அந்த முடிவின் பலனாக கிளினிக்கை வழக்கமாக வரும் ஒரு consultant -இடம் விட்டுவிட்டு வீட்டிற்குக் கிளம்பிச் செல்லும் வழியில் அவனது கைப்பேசியின் அழைப்பில் வண்டியை ஓரமாக

நிறுத்தினான். உமாவின் கைப்பேசி என்று தெரிந்ததும் அவசரமாக எடுத்துக் காதில் வைத்தவன் "என்ன உமா, இந்த நேரத்தில? அப்பா நல்லா இருக்காங்க தானே? ஊர்ல இருந்து ஏதும் ஃபோன் வந்ததா?" என்றான்.

அவனுக்கு இந்த மாலை நேரத்தில், அதுவும் வேலை பார்க்கும் ஹாஸ்பிடலில் வெளி நோயாளிகளைப் பார்க்கும் நேரத்தில் ஃபோன் செய்கிறாளே என்றிருந்தது. முக்கியமான விஷயமாக இல்லாவிட்டால் தான் கிளினிக்கில் இருக்கும் வேளையில் தன்னை அழைக்க மாட்டாளே என்ற எண்ணமும் அவனை ஏதோ பெரிய விஷயம் என்று எண்ண வைத்தது.

அவனது கேள்வியில் "அப்பா... ஹ்ம்ம் அவர் எப்படி இருக்காரோ தெரியல... அம்மாக்கு ஃபோன் பண்ணனும்.... ஆனா.... ஆனா..." என்று உமா தடுமாறவும்,

"என்னம்மா, என்னாச்சு? தனா எதாவது திட்டிட்டானா?" என்று விஜய் கனிவுடன் வினவினான்

"நீ நியூஸ் பார்த்தியா விஜய்?" என்றவளின் குரலில் இருந்தது சந்தோஷமா துக்கமா என்று தெரியவில்லை.

"இல்லம்மா, பார்க்கலையே!" என்ற போதே விஜய்க்கு ஏதோ விபரீதம் என மனதில் மணி அடிக்க ஆரம்பித்துவிட்டது,

"தேக்கடியில் அஞ்சு டாக்டர்ஸ் போன போட் கவுந்து, மூணு பேரு ஸ்போட்லேயே அவுட்" என்றவளின் குரல் உணர்ச்சிகள் துடைத்து வெறுமையாய் இருந்தது.

"ஹோ, நம்ம கூட படிச்சவங்க யாராவதா? தேவ் துபாய்ல தானே இருக்கான்!" என்று விஜய் வருத்தப்பட்ட அதே நேரத்தில், உமாவின் வெற்று குரலை அறிய முற்பட்டான்.

"சன் நியூஸ்ல உயிரோட இருக்கிறவங்க பேர் பிளாஷ் டிஸ்ப்ளேயில் வரல. தேவேந்திரன் ஜெகநாதன், நவீன் குருபாதம், ஸ்டீபன் ராபர்ட் இந்த மூணு பேரும் வருது. எனக்கு... இதைப் பார்த்தா அவங்க தான் என்பதைத் தவிர வேறு எந்த முடிவுக்கும் வரமுடியலை" என்ற கூறிய போது அவளது குரல் கல் போல் இறுகி இருந்தது என்றால் விஜயின் முகம் பாறையாய் கனத்திருந்தது.

"உமா" என்று இறுகிய பாறையை உடைத்து விஜய் வெளியே வந்தபோது அவன் குரல் கம்மி, தோழியின் அண்ணனுக்காக சிறுது இரங்கல் தெரிவிக்கும் பாவனையில் இருந்தது. அதுவும் சிறிது தான்....

"நாம தேக்கடி போய் பார்த்துட்டு வரலாமா?" என்று கேட்டப்போது அது தோழிக்காக அவளது பாசத்தை மனதில் கொண்டு கேட்கப் பட்ட கேள்வி என்று புரிந்தது. இதுவே தேவ் உமாவின் அண்ணனாக இல்லாமல் போயிருந்தால்... அந்த நிமிடம் கடவுள் கண்டிப்பாக இருக்கிறார் என்பதை எண்ணி மகிழ்ந்திருப்பான். ஆம், மகிழ்ந்திருப்பான்.

"ஹ்ம்ம் தேவையில்லை. எனக்கு என்ன வருத்தம்ன்னா நிலேஷ் பிழைச்சுட்டானாம்" என்ற உமாவை எண்ணி வியக்காமல் இருக்கமுடியவில்லை விஜயால்.

"ஹே என்னடா உமா இது? ஒரு டாக்டர்ரா இருந்துட்டு இப்படிப் பேசக் கூடாது உமா. என்ன இருந்தாலும் ஒரு உயிர்" என்று விஜய் அவனது மனித நேயத்தைப் பறைசாற்ற

"ஒரு உயிரின் மதிப்பு தெரியாது இன்னொரு உயிர் இருந்து ஒரு புண்ணியமுமில்லை. இத்தனை நாள் இவங்க எல்லாரும் உயிரோட இருந்ததே என்னால பொறுக்க முடியல. என்னால மட்டும் முடிஞ்சிருந்தா நடு ரோட்ல நிற்க வைச்சு சுட்டுக் கொண்டிருப்பேன்.... ச்சே ச்சே சுடக் கூடாது, பெரிய கல்லா தலையில எடுத்துப் போட்டு சாகடுச்சு இருக்கணும்... " என்று உமா தன் ஆதங்கத்தைக் கோபமாய் வெளியிடவும்

"அப்போ என்னையும் சுட்டிருக்கணும் உமா" என்று விஜய் கூறிய போது அங்கே சாத்திய அமைதி நிலவியது.

"நான் வினுவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன் என்பதற்காக மட்டும் நான் நல்லவன் என்று இல்லையே... நான் மட்டும் அன்று ஒழுங்காக இருந்திருந்தால்...." என்று விஜய் வருந்த,

"உன் மேல ஒரு தப்புமில்லை" என்று அழுத்திச் சொன்னாள் உமா.

விஜய்க்கும் "இருந்திருந்தால்"களைப் பற்றி பேசும் தருணம் இதுவல்ல என்று தோன்றியதோ, "உமா, என்னவா இருந்தாலும் தேவ் உன் அண்ணன். உங்க அப்பாக்கு உடம்பு சரியில்லாத இந்த நேரத்தில நாம தான் அங்க நின்னு எல்லாம் பார்க்கணும். நான் சென்னை வந்து உன்னைக் கூட்டிட்டு போகட்டுமா?"

"இல்ல, இல்ல, நீ வர வேண்டாம். போலீஸ் ஸ்டேஷன், விசாரணை அது இதுன்னு அலைய வேண்டியிருக்கும். நான் எல்லா வேலையும் முடிச்சிட்டு உன்னை காண்டாக்ட் பண்றேன். நீ வா" என்று விஜய் வேகமாக திட்டம் தீட்ட,

"எனக்கு போலீஸ் ஸ்டேஷன் ஒன்னும் புதுசில்ல. என்னால வரமுடியும். ஆனா எனக்கு வரப் பிடிக்கல" என்று உமாவின் வெறுப்பு வெறியாய் மாறி எதிரே இருக்கும் நபரை பார்வையால் கடித்துக் குதறும் அளவுக்கு இருந்தது.

"உமா, ப்ளீஸ் பொறுமை. தேவோட தங்கையா வேண்டாம், ஒரு சக மனுஷியா வருத்தப்படு உமா. அட்லீஸ்ட் அமைதியா இரு. இந்த நேரத்தில உங்க அம்மா-அப்பாக்கு நீ தான் ஆறுதலா இருக்கணும்" என்றவன் அவள் ஒன்றும் சொல்லாமல் அமைதி காக்கவும்,

"தனா, மாமா எல்லாருக்கும் தெரியுமா? தெரியாதில்லையா? நீ சொல்லவேண்டாம். நானே சொல்லிடுறேன். நீ பேசாம வீட்லேயே இரு. அம்மாக்கு ஃபோன் பண்ணி பக்குவமா விஷயத்தை சொல்லு. அவங்க தாங்க மட்டாங்கன்னா, ஃபரிண்ட்ஸ் யார்கிட்டயாவது ஃபோன் பண்ணி விஷயத்தை சொல்லி, உங்க அம்மாகிட்ட சொல்லச்சொல்லு. இப்போத் தான் உங்க அப்பாக்கு ஸ்ட்ரோக் வேற வந்தது, அவர் கிட்ட பொறுமையா தான் சொல்லணும் சரியா? உன் வேகத்தையும் கோபத்தையும் அங்க காண்பிக்காத, எனக்காக ப்ளீஸ்" என்று நீளமாக, அதே சமயம் அழுத்தமாக, அவள் தான் கூறிய ஒரொரு வார்த்தையின் அர்த்தத்தையும் உள்வாங்கும் பொருட்டு நீளமாய் பேசிமுடித்தான் விஜய் ஆனந்த்.

"அவன் ஆடின ஆட்டத்துக்கு இது தேவை தான். அவனுக்கு சப்போர்ட் பண்ண அப்பாக்கும் இந்த அடி அவசியம் தான்" என்று கொரூரமாய் மொழிந்துவிட்டு உமா கைப்பேசியை வைக்கவும் விஜய் ஆழ்ந்த மூச்சு ஒன்றை எடுத்துவிட்டு அடுத்து செய்ய வேண்டியவற்றை அணிவகுத்தான்.

விஜயிடம் தான் பார்த்த செய்தியை பகிர்ந்து கொண்ட உமாவிற்கு, தன் எண்ணங்கள் மிக கொடூரமாய் பட்ட அதே சமயம் நியமானதாகவும் பட்டது. அந்த எண்ணங்களே கொடூரம் என்றால் மூன்று வருடம் முன்னால் இதே தேவ் மீது தான் கொடுத்த புகாரை என்ன சொல்வது? அவள் கொடுத்த அந்தப் புகார் தான் அவளது பிறந்த வீட்டுடன் இருந்த நூலிழை பந்தத்தையும் அறுத்தது என்றபோதும் உமா அதற்கு சற்றும் கவலைப்படவில்லை!

தன் குடும்பத்தை விட்டுத் தான் பிரிந்த வருத்தத்தை விட, அழகான குருவிக் கூடாய் இருந்த குடும்பம் அறுந்து போனதில் தன் கவலையைத் தொலைத்தவள் இப்போதும் அந்த அருந்த குருவிக் கூட்டை கட்ட முயன்று, அதில் தோற்று கொண்டிருப்பதால் அண்ணன் இறந்ததற்குத் துளியும் வருத்தம் கொள்ளாமல் தன் வேலைகளை கவனிக்கலானாள்.

நண்பன் சொன்னதை ஒரு விதத்திலாவது காப்பாற்றுவோம் என்று எண்ணினாலோ எண்ணவோ வேலைப் பார்க்கும் மருத்துவமனைக்கு அழைத்துத் தான் வராததையும், தன்னைப் பார்க்கவென வந்திருக்கும் சிலரது சிகிச்சையை நாளைக்கும், அதற்கு மறுநாளுக்கும் ஒத்திவைத்துவிட்டு வீட்டு வேலையைப் பார்க்கச் சென்றாள்.

விஜயின் மூலம் விஷயம் கேள்விப்பட்டு வெளியே சென்றிருந்த வைரவன் பதறியடித்து வீட்டிற்கு வந்தார். வந்தவர் மருமகள் சலனமே இல்லாமல் இரவு உணவைத் தயாரிக்கும் வேலையில் ஈடுப்பட்டிருப்பதைக் கண்டவர் "நீ துபாய் கிளம்ப டிக்கெட் ஏற்பாடு பண்ணச் சொல்லுட்டுமா உமா?" என்றார் வருத்தம் நிரம்பிய குரலில்.

"ஹ்ம்ம் இல்ல மாமா, இப்போ தானே போயிட்டு வந்தேன். நான் போகலை" என்று சாதாரணமாய் ஏதோ விடுமுறையை மறுப்பவள் போல் அவள் கூறவும் "என்ன கோபம் என்றாலும், அதை இறந்தவர்கள் மேல் காட்டக்கூடாது உமா. இறந்த உன் அண்ணனுக்காக இல்லை என்றாலும், அப்பா அம்மாக்காக போயிட்டு வாமா" என்று வைரவன் அறிவுறுத்திக் கொண்டிருக்கும் போது தனசேகரன் என்னவென்று வரையறுக்க முடியாத உணர்ச்சியோடு வீட்டிற்கு நுழைந்தான்.

தனசேகரன் வந்ததைக் கவனிக்காத உமா, "அவனோட கூட பிறந்த பாவத்துக்கு நான் அனுபவிச்சதெல்லாம் போதும் மாமா. நானே அவன் செத்து ஒ ழிஞ்சானேன்னு ரொம்ப சந்தோஷப்படுறேன். நீங்க அந்த சந்தோஷத்தைக் கெடுக்காதீங்க" என்றாள் முகம் ஆத்திரத்தில் ஜொலிக்க,

அவள் பேசிய வார்த்தைகள் அவனுக்குள் ஒரு புது வித உணர்ச்சியை கிளப்பிவிட்டது! அண்ணன் மறைவில் கூட சந்தோசம் அடைகிறாள் என்றால் அவளுள் நடக்கும் உணர்வு போராட்டத்தை துல்லியமாய் உணர முடிந்தது தனசெகரனால்.

நேராக மனைவியிடம் வந்தவன் "உமா, நான் தேக்கடி போறேன். நீயும் என்னோட வா" என்றான். நிறைய நாட்களுக்குப் பின்னர் அவன் தானாக வந்து பேசியது மனதை நகர்த்தினாலும் உமாவின் மனது ஏனோ அங்கே போக மறுத்தது. "நான் வரல" என்றாள் சுருக்கமாக.

"சொல்றது கேளு உமா. கிளம்பு. விஜய் கோயம்புத்தூர்ல இருந்து கிளம்பிட்டான். நாமளும் இப்போ கிளம்பினா தான் காலையில அட்லீஸ்ட் போக முடியும்" என்றவன் அவள் துபாய் போக எண்ணுவாளோ என நினைத்து, "ஹ்ம்ம் நீ தேக்கடி வரியா? இல்ல துபாய் போகலாம்ன்னு இருக்கியா?" என்றான் கேள்வியாக.

"நான் எங்கேயும் போகல. இங்க, என்னோட வீட்டில தான் இருப்பேன்" என்றாள் உமா மகா அழுத்தத்துடன்.

"உன் வீடு எங்கேயும் ஓடிப் போய்டாது. இப்போ நீ எங்க இருக்கணுமோ, அங்க இரு. உனக்கு அது தெரியல அப்படின்னா, நான் சொல்றபடி கேளு" என்றான் தனசேகரனும் அவளுக்கு மேல் அழுத்தத்துடன்.

ஒன்றும் சொல்லாமல், சொல்லத் தோன்றாமல் உமா அமர்ந்திருக்கவும், ஒரு வினாடி தயக்கத்திற்குப் பின்னர் அவளருகே வந்த அவளது கணவன் அவளது தலையை வருடி "நீ இருக்க நிலைமை நீ சொல்லாமலே எனக்குப் புரியுது" என்பது போல் அவளைப் பார்த்தான்.

அதன் பின்னர் வார்தையாடாமல் கணவன் சொல்லைக் கடைப்பிடித்தாள் மனைவி. தேக்கடி சென்று அங்கே தண்ணீரில் ஊறிப் போயிருந்த உடலைக் கண்டபோது அவளையும் மீறி கூட பிறந்த பாசம் கண்ணீர் உகுக்க வைத்தது. தாயும், தந்தையும் விஷயம் கேள்விப்பட்டு இந்தியா விரைந்து வந்தபோது, அழுது கரைந்த தாயைத் தேற்றியவள், தந்தை இருந்த புறம் தலைவைத்துக் கூட படுக்கவில்லை. அவர்கள் அழுத போது அவ்வப்போது மனம் இரங்கினாலும் பவித்ராவின் நினைவு மீண்டும் அதை கடினமாக்கியது!

கணவரைப் பார்த்துக்கொள்ளச் சென்ற துளசி அம்மாவை அவசர நிலை என்பதால் குன்னூரிலிருந்து வரவைத்து, வினுவை அவரது கவனிப்பில் விட்டுவிட்டுப் போன விஜய், உமாவின் பெற்றோர் மட்டுமில்லாமல் மற்றவர்களின் உறவுகளும் வந்துவிடவே அங்கிருந்து கிளம்பினான்.

துளசி கூறியது போல, ஒரு தும்மலை காய்ச்சல் அளவுக்குப் பெருசாக்காமல் நிஜமான காய்ச்சலையும், உடல் வலியையுமே வீர ராகவன் வரவழைத்து இருந்ததாலும் விஜய் விரைவாக வீடு திரும்ப வேண்டியிருந்தது.

மதிய நேரத்தில் கோயம்புத்தூர் திரும்பிய விஜய் ஆனந்த், வீட்டிலிருந்த துளசியிடம் விவரம் சொல்லி, அவரை அழைத்துச் சென்று குன்னூர் செல்லும் பேருந்தில் ஏற்றிவிட்டுவிட்டு வினயாவின் கல்லூரிக்குச் சென்றான்.

கல்லூரிக்குத் தன்னை அழைக்க வந்தவனிடம் இறந்தவர்களின் குடும்பத்தைப் பற்றியும், அவர்கள் தேறிவிட்டார்களா என்றும் விசாரணை நடத்திய வினயாவிற்கு உரிய பதில் கூறிய விஜய் ஆனந்திற்கு "யார் இறந்தார்கள் என்று தெரிந்தால் இவள் என்ன செய்வாள்?உமாவைப் போல் சந்தொஷப்படுவாளோ?" என்ற எண்ணம் உதித்து, அது பைத்தியக்காரத்தனம் என்றும் தோன்றியது.

அன்று பணிக்குச் செல்லாததால் சீக்கிரமே உணவை முடித்துக் கொண்டு மேலே வந்தவர்கள் வினுவின் ஆசைப்படி ஹாலில் மாட்டியிருந்த ஊஞ்சலில் அமர்ந்தனர். அவன் மடியில் தலைவைத்து அவள் படுத்துக் கொள்ள, அவளது ஸ்பரிசம் தன்னுள் சூழ்ந்திருந்த வருத்தமெனும் வலையை அறுப்பதை விஜயால் உணரமுடிந்தது.

அவனது வருடலில் வினயா உறங்கிவிட, பவித்ராவின் உருவத்தை உடனே பார்க்கவேண்டும் போல் விஜய்க்குப் பெரும் ஆவல் எழுந்தது!!

*********************************************

பாகம் 14

மடியில் படுத்திருந்த வினயாவின் தூக்கம் கலையாத வண்ணம் மெதுவாக எழுந்த விஜய் ஆனந்த், அவளது தலையை பூவெனத் தாங்கி ஊஞ்சலில் படுக்க வைத்தான். அவள் லேசாக அசையவும், "குட்டிம்மா, ரெண்டு நிமிஷம் வந்துடுறேன். நீ உள்ள போய் படுத்துக்கிறியா?" என்றான் அவளது முகத்தை வருடி.

அவன் கையைத் தட்டிவிட்டவள் "ம்ம்" என்ற சிறு முனங்களுடன் மீண்டும் ஊஞ்சலில் ஒண்டினாள். அவளது பூவிதழ் நெற்றியில், அந்தப் பூவிதழ் பிய்ந்து விடாத வண்ணம் ஒரு முத்தத்தைப் பதித்தவன் அறைக்குச் சென்று தன் பொருட்கள் இருக்கும் அலமாரியைத் திறந்தான்.

வினயா பவித்ராவின் உருவத்தைப் பார்த்தப்பின்னர் துடித்தத் துடிப்பையும், அதற்குப் பின்னர் உமாவைப் பார்த்தாலே ஆச்சு என்று அடம் பிடித்து உமாவிடம் சென்றதையும் பார்த்த விஜய் ஆனந்த், தான் முதல் முதலாய் காதல் கொண்டவளின் புகைப்படத்தை யாரது கண்களிலும் படாத வண்ணம் அலமாரியின் உள்ளறை ஒன்றில் அழகிய வெண் நிற உறையினுள் வைத்து பத்திரப்படுத்தி இருந்தான். மனதினுள் இருந்தவளின் உருவத்தை கண்ணுக்குள் நிறைக்க உறையினுள் பொதிந்திருந்திருந்த புகைப்படத்தை அதற்கு வலிக்காத வண்ணம் வெளியே எடுத்தான்.

ஒரு கையால் கண்ணுக்குள் விழ இருந்த முடிக்கற்றையை ஒரு நளினத்துடன் ஒதுக்கியவளின் கண்களில் நிச்சயம் அமைதி இருக்கவில்லை. அள்ள அள்ள குறையாமல் குறும்பு தான் அந்த அழகிய மல்லிகை மொட்டு கண்களுக்குள் இருந்தது. அதில் புகுந்து கொண்ட வண்டாய் இரு கரு விழிகளும் ஒன்றை ஒன்றை பார்த்திருக்க, முகத்தில் அப்பட்டமான தில்லுமுல்லு தனம் தாண்டவமாட எடுக்கப் பட்ட அந்த படத்தை ஒரு மென்னகையுடன் பார்த்தவன், ஒரு விரலை அவளது கண்கள் இரண்டிற்கும் இடையே இருந்த பகுதி யில் வைத்து,

"அழகான முயல் குட்டி" என்று அவளது கண்களை வருடினான்.

அந்த படத்தைக் கையில் எடுத்துக் கொண்டு வினயா படுத்திருந்த ஊஞ்சலுக்குச் சென்று மீண்டும் அவளை மடியில் அள்ளிப் போட்டுக் கொண்டு படத்தை சட்டைப் பையினுள் போட்டவன் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான்.
ஒரு கையால் கண்ணுக்குள் விழ இருந்த முடிக்கற்றையை ஒரு நளினத்துடன் ஒதுக்கியவளின் கண்களில் நிச்சயம் அமைதி இருக்கவில்லை. அள்ள அள்ள குறையாமல் குறும்பு தான் அந்த அழகிய மல்லிகை மொட்டு கண்களுக்குள் இருந்தது. அதில் புகுந்து கொண்ட வண்டாய் இரு கரு விழிகளும் ஒன்றை ஒன்றை பார்த்திருக்க, முகத்தில் அப்பட்டமான தில்லுமுல்லு தனம் தாண்டவமாட எடுக்கப் பட்ட அந்த படத்தை ஒரு மென்னகையுடன் பார்த்தவன், ஒரு விரலை அவளது கண்கள் இரண்டிற்கும் இடையே இருந்த பகுதி யில் வைத்து,

"அழகான முயல் குட்டி" என்று அவளது கண்களை வருடினான்.

ஒரு கையால் கண்ணுக்குள் விழ இருந்த முடிக்கற்றையை ஒரு நளினத்துடன் ஒதுக்கியவளின் கண்களில் நிச்சயம் அமைதி இருக்கவில்லை. அள்ள அள்ள குறையாமல் குறும்பு தான் அந்த அழகிய மல்லிகை மொட்டு கண்களுக்குள் இருந்தது. அதில் புகுந்து கொண்ட வண்டாய் இரு கரு விழிகளும் ஒன்றை ஒன்றை பார்த்திருக்க, முகத்தில் அப்பட்டமான தில்லுமுல்லு தனம் தாண்டவமாட எடுக்கப் பட்ட அந்த படத்தை ஒரு மென்னகையுடன் பார்த்தவன், ஒரு விரலை அவளது கண்கள் இரண்டிற்கும் இடையே இருந்த பகுதி யில் வைத்து,

"அழகான முயல் குட்டி" என்று அவளது கண்களை வருடினான்.

அந்த படத்தைக் கையில் எடுத்துக் கொண்டு வினயா படுத்திருந்த ஊஞ்சலுக்குச் சென்று மீண்டும் அவளை மடியில் அள்ளிப் போட்டுக் கொண்டு படத்தை சட்டைப் பையினுள் போட்டவன் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான்.

மடியில் படுத்திருந்த மங்கையிடம் உரையாடினானா? அல்லது மெல்லிய கதர் சட்டைப் பையை வாயிலாகக் கொண்டு அவனது மனதைத் தொட்ட நங்கையிடம் நவின்றானா? எதுவாக இருந்தாலும் அவன் மனதில் நீங்கா இடம் பெற்று, அவனைக் காதலெனும் அமுதத்தை அருந்த வைத்த ஒரு பொக்கிஷத்திடம் பேசிக் கொண்டிருந்தான் என்பது மட்டும் நிஜம்!

"கண்ணம்மா, உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும். ஆனா நான் அதை சொல்லும் போது நீ எப்படி எடுத்துப்பே? அழுவியோ? இல்ல உமா மாதிரி வருத்தத்தை மறைச்சு சந்தோஷப்படுவியா? ஹ்ம்ம் இல்ல அவங்க செய்த காரியத்திற்கு இது முன்னாடியே நடந்திருக்கணும்ன்னு கறுவுவியா? தப்பு பண்ணது பண்ணிட்டாங்க, அதனால நான் பாதிக்கப்பட்டது நிஜம், இப்போ அவங்க இறந்ததால அவங்க பண்ண தப்பு சரியாகிடுமான்னு வாதாடுவியா? அவங்க இருந்தா எனக்கென்ன, இல்லைன்னா எனக்கென்னன்னு விட்டேறியா இருப்பியா? ஹ்ம்ம் எனக்குத் தெரியலையே? உன்னை நான் இன்னும் சரியா புரிஞ்சுக்கலை போல!" என்று மெது குரலில் தன் மனதில் இருப்பவளிடம் பேசிக்கொண்டே போனவன், அவனது பேச்சு சத்தத்தில் துயில் லேசாக களைந்து அவனது மடியை விட்டு நழுவிய வினயாவை வேகமாக பற்றி ஒழுங்காக படுக்க வைத்துக் கொண்டு மீண்டும் தொடர்ந்தான்.

"ஹ்ம்ம்... உன்னைப் புரிஞ்சுக்க எனக்கு எங்க அவகாசம் இருந்தது? உன்னை நான் காதலிக்கிறேன் என்பதையே ரொம்ப நாள் கழிச்சு தான் நானே உணர்ந்தேன்... அதை நான் உன்கிட்ட சொல்றதுக்குள்ள என்ன என்னமோ நடந்து, உன் முகத்தையே நிமிர்ந்து பார்க்க முடியாத காரியமெல்லாம் செஞ்சு.... சை... எனக்கே என்னைப் பார்த்தா வெறுப்பா இருக்கும்..." என்றவன் ஒரு சிறு இடைவெளி விட்டு, மடியில் இருந்த வினயாவின் கன்னத்தை மெதுவாக வருடி தன் மேலெழுந்த வெறுப்பை அவள் மேலெழுந்த விருப்பால் சமன் செய்தான்.

"விஷயத்திற்கு வரலாம் கண்ணா, தேவ், நவீன், ஸ்டீவன் எல்லாரும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரி இறந்து போய்ட்டாங்க. ஒரு மருத்துவனா எனக்கு ஒரு உயிர் போறதில் வருத்தம் தான் என்றாலும், அது ஒரு பெர்சென்ட்க்கும் கம்மி. வருத்தப்பட்ட அதே நிமிஷம், என் கண்ணம்மாக்கு கடவுள் நியாயம் செஞ்சுட்டார்ன்னு ரொம்பவே சந்தோஷப்பட்டேன் தெரியுமாடா? நீ பட்ட வேதனைக்கு அவங்களுக்கு இந்த சாவு ரொம்பச் சின்ன தண்டனையோன்னு படுது, நீ துடிச்ச துடிப்பில பாதியாவது அவங்க பட்டிருக்க வேண்டாம்?..." என்று தன் குமுறலை அவளிடம் இறக்கிவைத்தான்.

"நிலேஷ் மட்டும் உயிரோட இருக்கான். முகத்தில் மூன்று சாவைப் பார்த்த பீதி இன்னும் அப்படியே இருக்கு. என்ன தான் அவனும் ஒரு டாக்டர் என்றாலும், உயிர் நண்பர்கள் தன் கண் முன்னே உயிர் நீப்பதைப் பார்ப்பது கொடுமை தானே? அந்தக் கொடுமை கூட அனுபவிக்கவில்லை என்றால் எப்படி? உன் அண்ணி என்னடாவென்றால் அவன் இன்னும் சாகவில்லையே என்று வருத்தப்படுகிறாள்! அவள் வருத்தப்படுவதிலும் நியாயம் இருக்கத் தான் செய்கிறது இல்லையாடா..." என உமாவின் எண்ணப் போக்கை தன் உயிரானவளிடம் பகிர்ந்து கொண்டவன்.

அவள் அதற்கு என்ன சொல்வாள் என்றெண்ணியதும் அதையும் அவளிடமே கேட்டான், "அவன் உயிரோடு இருப்பதற்கு நீ என்னடா கண்ணா சொல்வ? அவன் ஏன் சாகலைன்னு என்னைக் கேள்வி கேட்பியா?"

தொடர்ந்து அவர்கள் மேல் தனக்கிருந்த வெறுப்பை அவளிடம் உணர்த்திவிடும் வேகத்தில் "எனக்கு மட்டும் சக்தியும், அதிகாரமும், துணையும் இருந்திருந்தால் மூன்று வருஷம் அவர்கள் யாருமே உயிரோடு இருந்திருக்க மாட்டாங்க..." என்று அவளிடம் விஷயத்தைப் பகிர்ந்து கொண்டே போனவன்,

"ம்ம்... ஆனா நான் அப்படி செஞ்சிருந்தா இந்த குட்டிப்பட்டுவை நான் எப்படி கல்யாணம் செஞ்சிருப்பேன்? அது முடிஞ்சிருக்காது இல்லையா? சோ எல்லாம் நன்மைக்கே" என்று தன்னுக்குள்ளே பேசிக் கொண்டான்.

குட்டிப்பட்டு என்று மனைவியைக் கொஞ்சியவன், மீண்டும் குனிந்து "என் செல்லப்பட்டுக்குட்டி" என்ற கொஞ்சலோடு, வெள்ளிக் கிண்ணமாய் இருந்த அவளது வெண்பட்டுக் கன்னத்தில் ஒரு முத்தம் பதித்தான். "நீ தூங்கும் போது கொடுத்தா தான் உண்டு... எழுந்தா தான் எப்போ என்னை போங்க சொல்வ, எப்போ ஒழுங்கா பேசுவன்னு எனக்கே தெரிய மாட்டேன்தே... சோ திஸ் இஸ் தி ஒன்லி குட் டைம் போர் மீ" என்றான் ஒரு மெல்லிய முறுவலோடு.

அவன் மேலே பேச ஆரம்பிக்கும் முன்னர் தூக்கம் முழுமையாக களைந்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள் வினயா. அவள் எழ எத்தனித்தப் போதே சுதாரித்த விஜய் ஆனந்த், தனிச்சையாக இடது கையால் சட்டைப்பையை அழுந்த மூடினான்.

தூக்கம் கலைந்ததால் முகத்தைச் சுளித்துக் கொண்டே எழுந்தவள், தரையைத் தொட்டிருந்த கால்கள் இரண்டையும் ஊஞ்சல் மேலே எடுத்து வைத்து சம்மனிட்டு அமர்ந்துகொண்டாள். அவளது அந்த செயலால் தடுமாறிய ஊஞ்சலை சட்டென பிடித்து நிறுத்தி, இருவரும் ஒரு சேர தரையில் விழுவதைத் தவிர்த்த அவளது கணவன் "என்ன கண்ணா, ஏன் எழுந்துட்டே? எழுந்ததும் இல்லாம, நடு ராத்திரில ரெண்டு பேரையும் கீழ விழ வச்சிருப்ப போலையே" என்றான் சிரிப்பும் பரிவுமாக.
"ஹ்ம்ம்... ஆமா நீங்க நொய் நொய்ன்னு பேசிட்டே இருந்தா நான் எப்படித் தூங்குறது? ஒரே disturbance -ஆ இருந்தது. நான் முழிச்சிட்டு இருக்கும் போது பேச வேண்டியது தானே? தூங்கின அப்புறம் ஏன் பேசுறீங்க?" என படபட பட்டாசாய் பொரிந்தது அவனது செல்லப்பட்டுக் குட்டி.

"ஆமா, அப்படியே கேட்டுட்டாலும்" என்று அவள் மூக்கைப் பிடித்து ஆட்டியவனின் கையைப் பட்டென தட்டிவிட்டாள் வினயா.

"என்ன பேசினீங்க? எனக்கு சரியாவே கேட்கல... நல்லத் தூக்கம்" என்று கண்கள் இரண்டையும் தேய்த்து விட்டுக் கொண்டு அவன் பேசியது புரியாமல் அவள் வினவவும், "ரொம்ப நல்லது" என்று அவளைக் கிண்டல் செய்வது போல் தானும் நிம்மதி அடைந்தான்.

"என்ன நல்லது?" என அவள் மீண்டும் துறுவ, "ஒண்ணுமில்லடா" என்று எதையும் சொல்லாமலே மழுப்ப முயன்றான்.

"இல்ல,ஏதோ இருக்கு. என்ன பேசினீங்க?" என்று அவள் தன் பிடியிலேயே நிற்க, அவளை அதிலிருந்து இறக்கும் வண்ணம் "பேசலடா, பாடினேன்" என்றான் வேறு விதத்தில் சமாளித்துவிட எண்ணி.

"ஹை ஹை பொய்" என்று கண் சிமிட்டி, அவன் சொன்னதைப் பொய் என்று கூறியவள் அவனது பார்வையில் "நிஜமாவா?" என்றாள் வெள்ளையாக.

"நூறு பெர்சென்ட்" என அழகாய் ஒரு பொய் நாடகத்தை அரங்கேற்றினான் விஜய் ஆனந்த்.

"திரும்ப பாடுறீங்களா? கலைஞ்ச தூக்கம் திரும்ப வருதா பார்க்கலாம்" என்று கூறி மீண்டும் அவன் மடியில் தலை சாய்த்துப் படுத்துக் கொண்டவளை, படுக்க விடாமல் தடுத்து

"எனக்கும் தூக்கம் வருது. உள்ள போய் படுத்துக்கோ வா" எனக் கூறி அவளை உள்ளறைக்கு அழைத்துச் சென்று படுக்கையில் படுக்க வைத்தான்.

கட்டிலில் முடங்கியவள் அருகே அமர்ந்து அவள் உறங்கும் வரைப் பார்த்திருந்தவன், ஐந்தே நிமிடத்தில் அவள் மீண்டும் அவளுக்குப் பிடித்த உறக்கத்தைத் தழுவ, அவள் உறங்குவதற்காக அணைக்கப் பட்டிருந்த இரவு விளக்கை மீண்டும் போட்டுவிட்டு, மெதுவாக கதவை மூடிக் கொண்டு வெளியேவந்தான்.

அவள் உறங்கியதை உறுதி செய்து கொண்டு வெளியே வந்த விஜய், அவளிடம் கூறியது போல தன்னறைக்குச் சென்று தூங்காமல் பால்கனி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

ஹாலில் இருந்து பால்கனி செல்லும் வாசலில் அமர்ந்தவன் பால்கனியில் கால் நீட்டி, கைகளைப் பின்னாடி ஊன்றி தலையைப் பின்னே சாய்த்துக் கொண்டு உள்ளிருந்து தனது முயல் குட்டி உருண்டைக் கண்களால் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த பவித்ராவின் புகைப்படத்தை வெளியே எடுக்காமல் வலது கையால் மீண்டும் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

"எனக்கு மனசு ரொம்ப நிம்மதியா இருக்குடா. உனக்கு ஒரு நீதி கிடைச்ச ஒரு பெரிய நிம்மதி... இன்னும் அது முழுசா கிடைக்கலை என்றாலும் இந்த மாதிரி உலகத்தில் நடப்பது ரொம்ப அரிதில்லையா?" என்று தன் மனநிம்மதியை மௌனத்தை மொழியாக்கி அவளிடம் மனதால் உரையாடிக் கொண்டிருந்தவன்,

"உன் பேர் போலவே நீ எப்போதும் பவித்ரா தான்டா" என நெஞ்சம் நிறைந்த அன்போடும், பரிவோடும், அவள் வேதனையை உடனே துடைத்து விடும் வேகத்தோடும் சொல்லி முடித்தான்.

பெரிய நல்லது நடந்த நிம்மதியில் அன்று விஜய்க்கு நன்றாகவே உறக்கம் கண்களைச் சுற்றியது!

அவனது நிம்மதியைக் கூட்டுவது போல அடுத்த நாள் கிளாஸ் பெயிண்ட்டிங் வகுப்பு முடிந்து தனக்காக வெளியே வண்டியுடன் காத்திருந்த விஜயுடன் வண்டியில் அமர்ந்தவள், அவன் கேட்கமாலேயே அன்று வகுப்பில் தான் வரைந்த பாட்டேர்ன் பற்றி, அதற்குத் தான் உபயோகித்த வண்ணக் கலவை பற்றி, அந்த வண்ணங்களில் தனக்கு மிகவும் பிடித்த இளம் சிவப்பு நிறம் தான் வரைந்த செர்ரி பழத்திற்கு என்ன அழகாய் பொருந்தியது என்பது பற்றி என வாய் ஓயாமல் பேசிக் கொண்டே வந்தாள்.

ஆர்.எஸ் புரத்திலிருந்த அவளது வகுப்பிலிருந்து தன் பேச்சைத் துவக்கியவள், விஜய் ஆனந்த் அவனது "ம்ம்... அப்படியா?", "குட்-டா வினு", "இது மட்டும் தான் வரஞ்சியா" என்ற வாக்கியங்களையே மாறி மாறிக் கேட்டுக் கொண்டே வந்ததன் விளைவாக, சாய்பாபா காலனியை நெருங்கும் போது "ப்ச், போங்க விஜி, துசிம்மா இருந்திருந்தா என்னை எப்படியெல்லாம் என்கரேஜ் பண்ணுவாங்க தெரியுமா. நீங்க சும்மா அப்படியா அப்படியா கேட்கிறீங்க" என்று பட்டென பேச்சை நிறுத்தி,

அவனை நோக்கித் திரும்பியிருந்த கழுத்தைத் திருப்பிகிறேன் பேர்வழி என்று தன் ஏமாற்றத்தை திரும்பதில் காண்பிக்க, ஏமாற்றம் பலமாக இருந்ததாலோ என்னவோ அவள் திரும்பிய வேகத்தில் விஜயின் ஹீரோ ஹோண்டா பாஷன் ஒரு பெரும் ஆட்டம் கண்டு, விஜய் வண்டியின் மேல் வைத்திருந்த பிடியை சற்றே தளர்த்தியது.

அந்த சிறு தடுமாற்றம் ஒரு பெரிய விபத்தை ஏற்படுத்தும் முன்னர் விஜய் சுதாரிக்க முனைய, அதற்குள் வினயா வண்டியிலிருந்து தவறி விழுந்து, விஜயும் வண்டியுடன் அவள் மேல் சரிந்தான்.

பெரிய வாகனங்கள் ஏதும் வராமல் போனதாலும், வினயா பேசுவதைக் கேட்கவென்று வழக்கத்தை விட குறைந்த வேகத்தில் வந்ததாலும் பெரிய அடி ஏதும் இருக்கவில்லை என்பதை தன் மேல் விழுந்த விஜயை ஒரு கையால் வினயா தள்ளியதில் உணர்ந்து கொண்டான் விஜய் ஆனந்த்.

இருக்கும் நிலையுணர்ந்து விஜய் முதலில் எழுந்து வண்டியையும் நிமிர்த்த, சுளித்த முகத்துடன் கீழே அமர்ந்திருந்தாள் வினயா. "தார் ரோடு பஞ்சு மெத்தை மாதிரி சுகமா இருக்கா? எழுந்திரு முதல" என்று விஜய் ஆனந்த் விழுந்த கடுப்பில் அதட்டவும் சுளித்த முகத்தில் உதட்டையும் சுளித்துக் கொண்டு எழுந்தாள் வினயா. அவனது கோபத்தில் மூக்கு விடைக்க கண்ணீர் எட்டிப் பார்த்தது.

வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு அவளருகே வந்தவன், அவளை வேகமாக ஆராய்ந்தான். கை முட்டியில், கன்னத்தில், உள்ளங்கையில், முட்டிக் காலில் என்று சில பல சிராய்ப்புகள் இருந்தாலும், கன்னத்தில் பட்டக் காயத்தை வருடி வருடி ரத்தம் வருகிறதா என்று பார்த்திருந்த வினயா மேல் சட்டென கோபம் வந்தது.

"வண்டில போகும் போது ஆடாதே ஆடாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். எப்போ பார்த்தாலும் சின்னக் குழந்தை மாதிரி... சை..." எனத் தன் கோபத்தை அவன் வெளியிட்ட போது முன்னர் எட்டிப் பார்த்த கண்ணீர் இப்போது குபுக்கென வெளியே விழுந்தது வினயாவிற்கு

"கொஞ்சமும் சொல்ற பேச்சைக் கேட்கறதே கிடையாது! ஹ்ம்ம் நட, ஹாஸ்பிடல் போய் மருந்து போட்டுட்டு வீட்டுக்குப் போகலாம்" என்றதோடு வண்டியில் ஏறி அதை உயிர் பெறச் செய்தான்.

வினயா ஏதும் பேசாமல் மௌனக் கண்ணீர் வடித்துக் கொண்டு அந்த இடத்திலேயே நிற்க, "வினயா, மேலும் மேலும் என் கோபத்தைக் கிளறாதே! ஒழுங்கா ஏறு" என்றான் அழுத்தத்துடன்.

இத்தனை நாள் அவனது பரிவையும், அளவு மீறிய கனிவையுமே பார்த்திருந்த வினயாவிற்கு இந்தக் கோபம் புதிது! ஆனால் இப்போது கண்ட கோபத்தை மீறவும் தைரியமின்றி மெதுவாக வண்டியை நோக்கிச் சென்றவள் அவனை நிமிர்ந்தும் பாராமல் வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

அருகிலிருந்த மருத்துவமனை ஒன்றிற்குச் சென்றவன், வினயாவை மருத்துவர் பரிசோதித்து மருந்திடும் வரை தனக்குத் தெளிவு ஏற்படும் வண்ணம் மருத்துவ மொழியில் அவரிடம் அவள் உடல் நிலையைப் பற்றி விசாரித்துக் கொண்டான்.

தலையில் ஏதும் அடியில்லை என்று மருத்துவர் கூறிய பின்னர் ரெண்டு மூன்று முறை அவரிடம் ஸ்கேன் ஏதும் செய்ய வேண்டுமா? வேறு ஏதும் உள்காயம் இருக்கிறதா எனக் கேட்டு தனக்குத் திருப்தி ஏற்பட்டப் பின்னரே அங்கிருந்து கிளம்பி, வீடு நோக்கிச் சென்றான்.

வீட்டை அடைந்ததும், அவனை முந்திக் கொண்டு வெளி வாசல் கதவருகே சென்றவள் அவன் கையில் சாவி இருப்பதை உணர்ந்து தயங்கி நின்றாள். விழுந்ததிலிருந்து தன்னிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல் வரும் மனைவியை பார்த்துக் கொண்டே கதவைத் திறந்த விஜயைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றவள், அவன் கையிலிருந்த சாவிக் கொத்தை பறிக்க மறக்கவில்லை.

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, எழாத கோபத்தை விடாது காண்பிக்க முடியாமல் அவளைத் தொடர்ந்தவனின் கண்களில் வேகவேகமாக வினயா தொலைப்பேசியில் யாரையோ அழைப்பது தெரிந்தது.

அந்தப் பக்கம் அவள் எதிர்பார்த்த நபர் வரும் வரை தொலைப்பேசியின் அருகே இருந்த பொம்மையின் கண்களைத் தோண்டிக் கொண்டிருந்தவள், மறுமுனை உயிர் பெற்றதன் அடையாளமாக "துசிம்மா, எப்போ வருவீங்க?" என்றாள்.

சென்னைக்கு அழைத்திருப்பாளோ என்ற எண்ணத்தில் அவள் அமர்ந்திருந்த சோபாவிற்கு எதிர் சோபாவில் அமர்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்த விஜய் ஆனந்தின் அடக்கிய சிரிப்பு விரிந்தது.

"ம்ம்... ஆமா சீக்கிரம் வாங்க. விஜி என்னை ரொம்பத் திட்டுறாங்க. அவங்களோட இருக்க முடியாது" என்று அடுத்த வாக்கியம் சட்டென விழுந்தது.

"ஹான்... நான் ஒன்னும் பண்ணல. எனக்கு அடியெல்லாம் பட்டிருக்கு. கன்னத்தில, கைல எல்லாம் காயம். இப்படி இருக்கும் போது நான் தப்பு பண்ண மாதிரி சொல்றீங்க?" என்று அவள் வேகமாக தன்னை நியாயப்படுத்திய போது தாயார் "அவன் கோபப்படற மாதிரி நீ என்ன செஞ்ச" என்று கேட்டிருப்பார் என ஊகித்தான் விஜய் ஆனந்த்.

"ஹ்ம்ம் டாக்டர்கிட்ட காட்டியாச்சு. நீங்க வரீங்களா இல்லையா? இல்லைன்னா நான் அண்ணி வீட்டிற்கு போறேன்" என்று குரலில் பெரும் பிடிவாதம் இருந்தது.

"மாமாக்கு எப்போ சரியாகும்?" என்று அடுத்தக் கேள்வியில், தாயார் தந்தையைக் காரணம் காட்டி மறுத்தது விஜய்க்கு விளங்கியது.

"அது வரைக்கும் சென்னைல போய் இருக்கேன்" என்று வினயா தொலைப்பேசி அருகிலிருந்த பொம்மையைத் தூக்கி எறிந்து தன் கோபத்தை வெளியிட்டாள். விழுந்த பொம்மையை எடுத்த விஜய் ஆனந்த் அதை உரிய இடத்தில் வைத்துவிட்டு தொலைப்பேசியைக் கையிலிருந்து இழுத்தான்.

"நான் பேசிட்டு இருக்கேன் இல்ல" என்று அவள் கத்த "ஷ்" என்று அவளை அடக்கியதோடு தாயாரோடு பேச ஆரம்பித்தான்.

"பயப்பட ஒண்ணுமில்லைம்மா, வண்டில ஒழுங்கா உட்காராம ஆடிட்டே வந்தா இப்படித் தான் ஆகும். சொல்றதை கேட்டாத் தானே" என்று தாயாரிடம் பேசிக் கொண்டே மனைவியை ஏறிட்டான்.

"ம்ம்..ம்ம்ம்... லேசா சிராய்ப்பு இருக்கு. மருந்து போட்டிருக்காங்க. உங்க மருமக ஒழுங்கா மருந்தை சாப்பிட்டாளே சரியாகிடும்" என்று அவரிடம் பதில் சொன்னவன்

"அப்பா எப்படி இருக்காங்க? காய்ச்சல் குறஞ்சதா? தொண்டை கட்டியிருக்கோ ? காலையில உப்புத் தண்ணி கொப்பளிக்க சொல்லுங்க" என்றவன் துளசி வினயாவைப் பற்றி விசாரிக்கவும்,

"நான் இவளைப் பார்த்துக்கிறேன்"

"....."

"அதெல்லாம் இருப்பா. சென்னைக்கெல்லாம் அனுப்ப மாட்டேன். காலேஜ் போக வேண்டாம்? இவ நினைச்ச நேரத்திற்கு லீவ் எடுத்துட்டு இருந்தா காலேஜ்ல டி.சி கொடுத்து அனுப்பிடுவாங்க" என்று எழுந்து போன மனைவியை கைப்பிடித்து தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டான்.

ஒரு வாரம் முறுக்கிக் கொண்டு அவனிடம் பேசமால் இருந்தவளைப் பார்க்கப் பார்க்க விஜய்க்கு சிரிப்பாகத் தான் இருந்தது.

இவர்களது ஊடலிலும், கூடலிலும் வந்து மாட்டிக் கொள்ள மனமின்றி தன் கணவனுடன் ஊடலும், கூடலும் நடத்திக் கொண்டு துளசி அம்மா சந்தோஷமாக குன்னூரில் தங்கிவிட இரு வாரம் பறந்தோடியது.

சென்னையில் தமையனைப் பறிகொடுத்த உணர்வு கொஞ்சமுமில்லாமல் சலனமின்றி நடமாடிக் கொண்டிருந்த உமாவின் கோபத்தைக் கிளறிவிடவென அந்த வார இறுதியில் நிலேஷ் அவர்கள் வீட்டுப் படியேறினான்.

ஹாலில் அமர்ந்து தினசரியில் மூழ்கியிருந்த தனசேகரன், உமா கதவைத் திறந்த பின்னர் ஒரு வார்த்தை கூட பதில் கூறாமல் இருப்பதைக் கண்டு தலையை நிமிர்த்த உமாவின் மௌனத்திற்கும் அதற்கு மேலாக அதிர்ச்சிக்கும் காரணம் புரிந்தது.

ஜிவு ஜிவென கோபத் தணல் முகத்தில் பறக்க, கையிலிருந்த தினசரியை வீசிவிட்டு உமா அருகில் வந்த தனசேகரன் "என்னைக் கொலைகாரன் ஆக்காதே. மரியாதையா வெளிய போ" என்று ஏறக்குறைய கர்ஜித்தான்.

அவன் கர்ஜனையை தொடர்ந்து "வெளிய போ. எங்களைப் பேச வச்சு உன்னை நீயே அவமனப்படுத்திக்காதே" என்று உமா வார்த்தைகளை மென்று துப்ப, இதையெல்லாம் எதிர்பார்த்தவன் போல நேரே இருவரின் கால்களிலும் நீளமாக விழுந்தான் நிலேஷ்!

இருவரும் பதறி விலகினாலும் முகத்திலிருந்த எரிச்சல் மாறவேயில்லை. "ஹே எழுந்திரு, கீழே விழுந்து தரையை அழுக்காகாதே" என்று உமா தன் எரிச்சலை வெளியிட, கண்ணீர் வழிய எழுந்தவன் "நான் பண்ணத் தப்புக்கு பிராயசித்தம் செய்ய வந்திருக்கேன் உமா. ப்ளீஸ் தயவு செஞ்சு என்னை விரட்டாதே ப்ளீஸ்" என உமாவிடம் பேச ஆரம்பித்தவன் அவள் முகத்தைத் திருப்பிக் கொள்ளவும்,

"உங்களைக் கெஞ்சி கேட்டுக்கிறேன் தனசேகரன். நான் சொல்றதை தயவு செஞ்சு கேளுங்க" என அவள் கணவனிடம் கெஞ்சினான், தான் சொல்ல வந்த அடுத்த வாக்கியத்தைக் கூறினால் கண்டிப்பாக தன்னை உள்ளே விடுவார்கள் என நினைத்து, "பவித்ரா எவ்வளவு வேதனை பட்டிருப்பான்னு இப்போ புரியுது. அந்த வேதனைக்குப் பிராயசித்தமா பவித்ராவை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுங்கன்னு கேட்க வந்திருக்கேன்" என்றான்!

***************************************************

பாகம் 15

“என்னது பவியைக் கல்யாணம் பண்ணிக்கிறியா? அவளுக்கு… ” எனத் தனசேகரன் தன் அதிர்ச்சியிலிருந்து வெளி வந்து நிலேஷ்க்குப் பதில் சொல்ல ஆரம்பிக்கவும், உமா அவனது கையைப் பிடித்து அழுத்தி அவன் மேலே பேசும் முன்னர் தடுத்தாள்.

“என்ன திடீர் ஞானோதயம்? தேக்கடி ஏரிக்கு நடுல ஏதேனும் போதி மரம் சட்டுன்னு முளைச்சு உனக்குப் புத்தி சொன்னதோ?” என்று உமா நக்கலாக வினவவும் நிலேஷின் முகம் கசங்கியது.

“அவங்க மூணு பெரும் மூச்சுக் காத்துக்காக திணறி திணறி….” என்று இப்போதும் அவர்கள் இறந்ததைக் கண் முன் கண்டவன் போல் வார்த்தை வராமல் திணறினான் நிலேஷ்.

“அவங்க இறக்கும் போது எனக்கிருந்த மரண பயம், மூணு மரணங்களைப் பார்த்த பாதிப்பு எல்லாமும் என்னை மாத்திடுச்சு உமா” என்றவன் உமாவின் இகழ்ந்த சிரிப்பைக் காணவும் “நிஜம் உமா. அவங்களோட ஒரொரு கதறலிலும் எனக்குப் பவித்ராவோட முகம் தான் வந்து போனது. இப்போதும் என்னால நிம்மதியா ரெண்டு நிமிஷம் கூட கண் மூட முடியல உமா. பயமா இருக்கு” என அவன் நிலையை அவன் விளக்கிக் கொண்டே போகவும், உமாவின் கைப்பிடியில் இருந்த தனாவின் கைகள் இரும்பென இறுகிப் போயின.

அந்த இறுக்கத்தை உணர்ந்த உமாவிற்கு அவனது கோபத்தின் ஆழம் புரிந்தது. நிலேஷின் மீது வெறுப்பிருந்தாலும், தனசேகரன் அவனை அடிக்கப் போய், பெரிய தகராறு ஏதும் நிகழ்ந்து விடக் கூடாது என பயந்தவள், பிரச்சனையின்றி நிலேஷை எப்படி வெளியேற்றுவது என்று நினைத்துக் கொண்டிருக்கையில் வைரவன் தன் யோகாப் பயிற்சி முடிந்து மாடியேறிக் கொண்டிருந்தது கண்ணில் பட்டு, அவளை நிம்மதியடையச் செய்தது.

“மாமா” என்று அவரைக் கூவி அழைத்தவள், நிலேஷின் கவனம் பின்னாடி வந்த பெரியவரின் மேல் திரும்பிய அதே நேரத்தில் “இவன் நிலேஷ்” என்றாள் அவசரமாக. அவளுக்கு மாமனார் அவனிடம் நன்றாக பேசிவிடக் கூடாதே என்று படபடப்பு. அவளது அறிமுகத்திற்குத் தேவையே இல்லை என்பது போல வைரவனின் முகம் இருண்டு போனது.

நிலேஷ் அவரிடம் பேச ஆரம்பிக்கும் முன்னர் “நான் அவனிடம் பேசி அனுப்புறேன்… நீங்க…” என ஒரு அர்த்தமுள்ள பார்வையை மாமனாரிடம் வீசினாள்.

தான் பேச எத்தனித்த எல்லா சமயங்களிலும் உமாவின் பிடியிலிருந்த தன் கையில் ஒரு அழுத்தம் கொடுக்கப்பட்டு “ப்ளீஸ் பேசாதே” என்ற இறைஞ்சல் அதில் நிறைந்திருந்ததால் பல்லைக் கடித்து, நிலேஷின் வரவையும், அவனது வார்த்தைகளையும் பொறுத்துக் கொண்டிருந்த தனசேகரன், இப்போது தந்தை வந்ததும் அவர் உடல் நிலைக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என சற்றே கலங்கிப் போனான்.

அவன் கலங்கிய வினாடியையும், உமாவின் பார்வையையும் சரியாகப் புரிந்து கொண்ட வைரவன், “நீயும் அவனோட பேச வேண்டாம் உமாம்மா, ரெண்டு பெரும் உள்ள வாங்க. கண்ட நாயோட என்ன பேச்சு?” என்று தன் பங்கிற்கு எரிச்சலை உமிழ்ந்து விட்டு, மகனின் தோளைத் தொட்டு உள்ளே செல்லும் வழியில் திருப்பினார்.

“சார் ப்ளீஸ். நான் பவித்ராவைக் கல்யாணம் பண்ணிக்க விரும்புறேன் ” என்று நிலேஷ் தன் வெட்கத்தை விட்டு அவர் காலிலும் நீள விழ, “ச்சி எழுந்திரு” என ஒரே உதறலில் அவனை உதறிவிட்டு உள்ளே செல்லத் திரும்பியவர் “நீ இப்போ வெளியே போகல, போலீஸ்க்குப் போன் பண்ணி கம்ப்ளைன்ட் பண்ணிடுவேன்” என்றார் குரல் நடுங்க. என்னதான் காலால் அவனை உதறித் தள்ளினாலும், அவன் கூறிய வார்த்தைகளால் அவரது உள்ளம் உதறியது வெளியே தெரிந்தது.

“மாமா, நீங்க உள்ள போங்க. நான் பேசிக்கிறேன் ப்ளீஸ்” என்று மாமனாரிடம் இறைஞ்சியவள் “தனா, ப்ளீஸ்” என வெளிப்படையாகவே தன் கெஞ்சலை க் கணவனிடம் வெளியிட்டாள்.

தந்தையின் உடல் நடுங்குவதையும், அவர் கண்களில் சொல்லண்ணா வலி தென்பட்டதிலும் சுதாரித்த தனசேகரன் தந்தையுடன் உள்ளே நடந்தான்.

அவன் கெஞ்சலை மதிக்காமல் இருவரும் உள்ளே சென்றதில் சோர்ந்து போன நிலேஷ் "என்னால முடியல உமா. இந்த மரண பயம் என்னை ரொம்ப ஆடிப்படைக்குது. கண்ணை மூடினா யாரோ வந்து என்னைக் கொல்ற மாதிரி... தேவ்... ஸ்டீவ் எல்லாரும் செத்த மாதிரி நானும் செத்துடுவேனோன்னு ஒரே பயமா இருக்கு. ப்ளீஸ்" என்று மீண்டும் தன் கதறலை முன் வைத்தான்.

"ச்சே... இப்போ கூட நீ உன் சுயநலத்தை தான் காண்பிக்கிற இல்லையா? உன்னோட நிம்மதியான தூக்கத்திற்கும், வாழ்க்கைக்கும் தீர்வு பவியைக் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு நீ நினைக்கிறியா நிலேஷ்? பவித்ரா மாதிரி ஒரு பொண்ணுக்கு நீயா? அவ மனசுக்கு ரொம்ப நல்லவனா, அவளுக்கு ஏற்ற மாதிரி புனிதமானவனா ஒருத்தன் வந்துட்டான்... அவளைத் தங்கத் தட்டில் வைத்து தாங்குறான் தெரிஞ்சுக்கோ" என்று கத்திக் கொண்டே போனவள், நிறுத்தி ஓர் ஆழ் மூச்செடுத்து அவளை சமன் செய்து கொண்டு, "நீயும் உன் காரணமும்... சை எனக்கு நினைக்கவே அருவெறுப்பா இருக்கு... முதல வெளிய போ" என்றாள் உமா கோபத்தில் குரல் நடுங்க.

உமா கூறிய கடைசி வாக்கியத்தில் பவித்ராவின் வாழ்க்கை பற்றிய ஏதோ ஒன்று விளங்கி இங்கே அவனின் பிராயசித்தம் தேவையில்லை என்பதை உணர்த்த, மேலும் யாரும் எந்த விதத்திலும் இளகப் போவதில்லை எனத் தெரிந்த பின்னர் தொங்கிய தலையுடன் வெளியேறிய நிலேஷை ஒரு வெற்றி புன்னகையுடன் பார்த்திருந்த உமா கதவை அவன் முதுகில் அறைந்து சாற்றிவிட்டு உள்ளே நுழைந்தாள்.

அவனை வெளியேற்றிவிட்டு உள்ளே நுழைந்த உமாவின் கண்களில் வைரவன் சோர்வாக சோபாவில் சாய்ந்திருப்பதும், அவர் அருகே அமர்ந்து கைப்பேசியில் ஏதோ செய்து கொண்டிருந்த தனசேகரனும் பட்டனர்.

அவர்களது வேலையில் தலையிடாமல் மௌனமாக உள்ளே சென்று ஒரு கோப்பையில் கேப்பைக் கஞ்சியும், மற்றொன்றில் சூடாக காப்பியும் கலந்து எடுத்து வந்தவள் மாமனாரின் தோள் தொட்டு அவரை எழுப்பி, கேப்பைக் கஞ்சியை அவரிடம் நீட்டினாள்.

மறு வார்த்தையின்றி அவர் அதை எடுத்துக் கொள்ள, தனசேகரன் தானாகவே உமாவின் கொண்டு வந்த காபி கப்பை எடுத்துக் கொண்டு, கைப்பேசியின் மறுமுனை உயிர் பெற காத்திருந்தான்.

மறுமுனையில் விஜயின் குரல் கேட்கவும் "நான்... நான் தனா பேசுறேன். வினு கிட்ட பேசணும்" என்றான் சிறு தடுமாற்றத்துடன்.

"ஹலோ தனா, எப்படி இருக்கீங்க?" என்று தன் விசாரணையை முதலில் முன் வைத்துவிட்டு "ம்ம்ம் நல்லா இருக்கேன். வினுவை...." என்ற மைத்துனனின் பதிலைப் பெற்ற பின்னர் "ஒரு நிமிஷம் வினுவைக் கூப்பிடுறேன்" என்றவன் "வினும்மா, உன் அண்ணாகிட்ட இருந்து ஃபோன். சீக்கிரம் வா" என்று மனைவியை அழைத்தான்.

கணவனின் கையிலிருந்து ஃபோனைப் பிடுங்கிக் கொண்டவள் "ஹலோ அண்ணா, எப்படி இருக்கீங்க?" என்று தன் முறைக்கு விசாரித்தபோதும் தனசேகரனின் முகம் இருண்டு தான் போனது. அவனது இருண்ட முகத்திற்கு வினயாவின் அழைப்பே காரணம் என்று உணர்ந்த உமாவிற்கு கணவனைப் பார்க்க பரிதாபமாக கூட இருந்தது.

அவன் பவித்ரா மேல் வைத்திருந்த பாசத்திற்கு, இந்த அழைப்பைக் கேட்கும் போது அவன் மனது எவ்வளவு நோகும் என்று தெரிந்ததால், ஒன்றும் சொல்லாமல் கண் மூடிப் படுத்திருந்த வைரவனின் தலையை அழுந்த தேய்த்துவிட்டுக் கொண்டிருந்தாள் மகளான மருமகள்.

"நல்லா இருக்கேன் கண்ணம்மா, நீ எப்படி இருக்கே? செமஸ்டர் அடுத்த வாரத்தில் முடியுது இல்லையா? இங்க வரியா? அப்பாக்கும், எனக்கும் உன்னைப் பார்க்கணும் போலிருக்குடா" என்றான் தழுதழுத்த குரலை வெளியே காட்டாமல்.

"ஹ்ம்ம்.... அது... அது வந்து... நான் துசிம்மா பார்க்க குன்னூர் போறேனே! இப்ப என்ன செய்றது?" என்று தடுமாறி, பின்னர் அவளே ஒரு வழி கண்டவளாக "நீங்க வேணும்னா இங்க வரீங்களா" என்றாள் அவனது அருமை தங்கை.

"ஹோ, குன்னூர் போறியா!" என்றதோடு தனசேகரன் தன் பேச்சை முடிக்க, அவனது ஏமாற்றம் வினயாவை வெகுவாக பாதித்தது போலும்.

“ஹ்ம்ம் கோபமா அண்ணா?” என்ற தங்கையின் உள்ளே போன குரலைக் கேட்ட தனசேகரனுக்கு அவள் வருந்துவது பிடிக்கவில்லை என்பது போல “ச்சே ச்சே, வினு மேல கோபப்பட என்னால எப்படி முடியும்?” என்றான் வேகமாக.

“நான் துசிம்மா கிட்ட சொல்லிட்டு, லீவ்-ல பாதி நாள் சென்னை வரேன். சரியா?” என அவனுக்கு சமாதனம் சொன்னவள், “அப்பாகிட்ட தரீங்களா?” என்றாள் சிறு சங்கோஜத்துடன்.

“இதோ” என்ற தனசேகரன், தந்தையின் மனம் எந்த நிலையில் இருக்கும் என்பதை அறிந்தவன் போல கைப்பேசியின் வாயை கையால் மறைத்துக் கொண்டு “அப்பா, வினு பேசுறா, எமோஷனல் ஆகாம நிதானமா பேசுங்க. அப்புறம் வினுகிட்ட பேசுறோம் என்பதை மறக்காதீங்க” என்றான் “வினு”வில் அழுத்தம் கொடுத்து.

வினு தன்னிடம் தொலைப்பேசியை கொடுக்கச் சொன்ன போதே கண்கள் பளபளக்க எழுந்து அமர்ந்திருந்த வைரவன் “ஹ்ம்ம் சரி கண்ணா” என்ற வார்த்தையோடு அவசரமாக மகனிடமிருந்து கைப்பேசியை வாங்கி, “பாப்பா” என்ற அழைப்பில் குரல் தடுமாறி, உள்ளம் உடைந்து மடை திறந்த வெள்ளமாய் கண்ணீர் சொரிந்தது.

“என்னாச்சுப்பா? அப்பா... அப்பா” என்று வினயா அங்கே பதற, இங்கே தனசேகரன் பதறிப் போனான்.

“அப்பா, ரிலாக்ஸ்” என்று அவரது நெஞ்சை நீவிக் கொடுத்தான் தனசேகரன்.

“அப்பா, ஏன் அழறீங்க? நான் லீவ் ஃபுல்லா அங்கேயே வரேன்” என்று வினயாவும் அந்தப் பக்கம் அழ ஆரம்பிக்க, விஜய் தடுமாறிப் போனான்.

மகள் குரலில் கண்ணீரின் சாயல் முழுமையாக தெரியவும் “பாப்பா, அழாதேடா கண்ணம்மா. அப்பா அழல. நீயும் அழாதேடா” என்று தன் துன்பம் மறந்து அவளைத் தேற்றினார் வைரவன்.

“உன் குரலைக் கேட்கணும் போலிருந்ததுடா பாப்பா, அது தான் அண்ணாவை ஃபோன் போடச் சொன்னேன். நீ குன்னூர் போ கண்ணா, நடுல அப்பா வந்து உன்னைப் பார்க்கிறேன்” என்று மகளுக்கு சமாதனம் சொல்லிவிட்டு அவர் ஃபோனை வைத்தப்போது நடுவில் நின்றிருந்த அவரது கண்ணீர் மீண்டும் கரை புரண்டு ஓடியது.

“என்னப்பா” என்ற தனசேகரனின் குரலிலும் கண்ணீரின் சாயல் தெரிய, ஆதரவாய் மகனின் தோளில் சாய்ந்த அந்த முதியவர் “இந்த கடன்காரன் ஏன்டா இப்ப வந்தான். உள்ளிருக்க வேதனையை மீண்டும் கிளறிவிட்ட மாதிரி ஆகிடுச்சே... பவிக்குட்டி நம்மளை விட்டு மனசால விலகிப் போய், சித்தம் தடுமாறி போனதை திரும்ப நியாபகப்படுத்திட்டுப் போயிட்டானே பாவி... இந்த லட்சணத்தில இவனுக்கு நம்ம பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறதாம்... விஜய்...” என்று அவரது புலம்பல் நீண்டு கொண்டே போக உமா அவரது மாத்திரையை எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள்.

சிறு குழந்தைக்குப் புகட்டுவது போல அவருக்கு மருந்து மாத்திரையைக் கொடுத்த தனசேகரன், அவரைத் தன் மேல் சாய்த்து முதுகை வருடிக் கொடுத்தான்.

“அவன் வந்து கேட்டதால் எதுவும் நடக்கப் போறதில்லைப்பா. ஏற்கனவே கல்யாணமானவளை யாராவது திரும்பக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பாங்களா? அவன் தெரியாம கேட்டுட்டான்பா. அதை மறந்துடுங்க” என்று மீண்டும் சிறு குழந்தைக்கு இருக்கும் நிலையை எடுத்துரைப்பது போல அவன் பேசவும் “ம்ம்”, “ம்ம்” என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்த வைரவன்

“என்னோட குழந்தை நல்லா இருந்தா போதும் சேகரா, இவன் போய் வேறெந்த பிரச்னையும் செய்யமாட்டான் தானே? இப்போ தான் கண்ணா அவ கொஞ்சமா மாறிட்டே வர்றா” என்று மீண்டும் எழுந்த பயத்துடன் அவர் உடல் நடுங்க

“ச்சே ச்சே, கண்டதையும் யோசிக்காதீங்கபா. அப்படி நடக்க விஜய் விட மாட்டான். நானும் விடமாட்டேன்” என்று உறுதியோடு கூறிய மகனின் இறுகிய முகம் அதை நடத்திக் காட்டுவேன் என்ற பிடிவாதத்தை உரைத்தது.

அதன் பின்னர் அவரது ஆழ் மனதின் புலம்பல் ஓங்கி ஒலித்துக் கொண்டே இருந்தமையால் உமாவும் தனாவும் வீட்டிலேயே இருந்து அவரைக் கவனிப்பதில் ஈடுப்பட்டனர்.

அங்கேயோ தந்தையிடம் பேசிவிட்டு அழுது கரைந்த முகத்துடன் இருந்த வினயாவை தோளில் சாய்த்து, மெல்ல மெல்ல அவளது அழுகையை நிறுத்தி, என்ன விஷயம் என்று கேட்ட விஜயிடம் "ஹ்ம்ம், அப்பா அழுதாங்க. அதனால நானும் அழுதேன்" என்று தேம்பியவளைப் பார்த்து சிரிக்கத் தோன்றிய மனதை கஷ்டப்பட்டு அடக்கினான் விஜய் ஆனந்த்.

"ஆமா, நீ துசிம்மாவைப் பார்க்க குன்னூர் போறியா? என்கிட்டே சொல்லவே இல்லை" என்று விஜய் வினவவும்

"ஹ்ம்ம் ஆமா, துசிம்மா தான் அங்க வரச் சொன்னாங்க. எனக்கும் அவங்களைப் பார்க்கணும் போலிருக்கா அதான் போறேன்" என என்னவோ அவனிடம் அவன் வீட்டிற்குப் போவதைச் சொல்லவேண்டிய அவசியம் தனக்கில்லை என்பது போல் அவள் பேசவும் விஜயின் புருவங்கள் உச்சி மேடு வரை உயர்ந்து போனது.

"ஓஹோ, நீயும் உங்க அம்மாவும் முடிவெடுத்தா ஆச்சா? என்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா?" என்று அவன் கேள்வி கேட்க,

"நான் துசிம்மாவைப் பார்க்கப் போறேன். அதுக்கு உங்ககிட்ட எதுக்கு கேட்கணும்?" என்று நானிலும் துசிம்மாவிலும் அழுத்தம் கொடுத்து அவனை எதிர் கேள்வி கேட்டாள் அவன் மனைவி.

"ரொம்பப் பேசுற நீ" என்று அவள் முதுகில் இரண்டு அடி வைத்தவனுக்கு இவள் எப்போது குழந்தையாவாள், எப்போது குமரியாகிறாள் என்பது இன்னமும் விளாங்கா பாடமாகவே இருந்தது.

"சரி, பெரிய மேடத்தைப் பார்க்க சின்ன மேடம் எப்போ போறீங்க?" என விஜய் வினவ,

"சின்ன மேடத்தை நீங்க தான் குன்னூர் கொண்டு போய் விடப் போறீங்க. உங்களுக்குத் தெரியாதா?" என கிளுக்கிச் சிரித்தாள் வினயா.

"அடிங்க" என்றவனின் கைகள் மேலும் இரண்டு செல்ல அடிகளை வைத்தன.

"ஹான்... அப்புறம் நான் மட்டும் எப்படி தனியா போவேன்... எனக்குப் பயமா இருக்காதா?" என்று கண்ணை விரித்து அவன் கைகளைக் கட்டிப் போட்டாள் அவன் காதல் மனைவி.

"சரி, சரி. போய் படி போ. செமஸ்டர் ஒழுங்கா பண்ணினா தான் குன்னூர் போறோம்" என்று அவளை விரட்டியதில், தன் மனதில் எழுந்த தாப உணர்வுகளையும் விரட்ட முயன்றான் விஜய்.

"வெவ்வே" என்று அவனிடம் அழகு காட்டியவள் சட்டென, "அப்பா ஏன் அழுதாங்க விஜி? இப்போ அழாம இருப்பாங்களா? திரும்ப பேசுவோமா?" என்றாள் சிறு கலக்கத்துடன்.

விஜயின் மனதிலும் வைரவனின் கண்ணீர் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி இருக்க, அதன் காரணம் தெரியாமல் வினயாவை அவரிடம் பேச வைப்பது உசிதமில்லை என்றெண்ணியதால் "உன்னை ரெண்டு மாசமா பார்க்கலை இல்லையாடா, அது தான் கலங்கிப் போயிருப்பாங்க. லீவ்ல கொஞ்ச நாள் சென்னை போய் இருந்துட்டு வந்தா சரியாகிடும். நீ அதைப் பத்தி கவலைப்படாம படி" என்று அவளை அனுப்பி வைத்தவனின் மனதில் வினயா இல்லாத வேளையில் உமாவிடம் பேசவேண்டியவை ஓடி மறைந்தன.

சில மணி நேரம் கழித்து வினயா அன்றைய கிளாஸ் பெயிண்ட்டிங் வகுப்பிற்குப் போயேஆவேன் என்று அடம் பிடித்துப் போனதால் தனித்து விடப்பட்ட விஜய், உமாவிற்கு அழைத்து வைரவனின் உடல்நிலை அறிந்தான்.

அவர் மருந்தின் வேகத்தில் உறங்குவதை அறிந்து கொண்டவன், அவரது அரற்றலுக்குக் காரணம் கேட்க, நிலேஷின் வரவும் அவன் வைத்த பிராயச்சித்தக் கோரிக்கையும் அவனிடம் பகிறப்பட்டது.

"ஹோ, காலேஜ்ல வளர்த்துக்கிட்ட லூசுதனத்தை அவன் இன்னும் விடவில்லை போல. யாரு என்ன நிலைமைல இருக்காங்க என்பதைப் பார்க்கிறதே கிடையாது... தன்னோட நிம்மதியும் சந்தோஷமும் தான் முற்று முத லா முக்கியம்" என்று பல்லைக் கடித்தவனுக்கு பவித்ராவைப் பெண் கேட்டு அவன் வந்தது பெரிய உவப்பான செய்தியாகப் படவில்லை. பின்னே அவனது மனைவியை ஒருவன் பெண் கேட்டு வந்தால் எந்த கணவனுக்குத் தான் ஆத்திரம் வராது! அவள் எந்த நிலையில் இருந்தாலும்!

அன்று முழுவதும் ஒரே திட்டமிடலும், அடுத்த என்ன நடக்கும், அதை எப்படி சமாளிக்கலாம் என்ற நினைப்பிலுமே இருந்தவனை வினயாவும் பெரிதாக கலைக்கவில்லை. தன் கிளாஸ் உண்டு, புத்தகம் உண்டு, துளசியிடம் அடிக்கும் அரட்டை உண்டு என்றிருந்தவளை உண்ணும் நேரம் தவிர விஜயும் நெருங்கவில்லை.

அவளது தேர்வுகள் முடியும் வரை எந்த பிரச்னையும் வராததில் விஜயும் தனசேகரனும் நிம்மதியடைய விஜய் வினயாவை அழைத்துக் கொண்டு குன்னூர் செல்லும் நாளும் வந்தது.

வினயா குன்னூர் செல்கிறாள் என்று தெரிந்த போது எல்லாருக்குமே வீர ராகவனை நினைத்துப் பயமாகத் தான் இருந்தது. வினயாவின் பிறந்தவீட்டினர் அதை பற்றி ஏதும் கேட்கவில்லை என்றாலும், விஜய் தாயிடம் பெரும் விவாதம் ஒன்றை நடத்தினான்.

வினயா மேலிருக்கும் வெறுப்பு தன் மேல் கோபமாய் வெளியிடும் தந்தை அவளைக் கண்டால் கடித்துக் குதறி விடுவார் என விஜய் வாதாட,

"உங்க அப்பாக்கிட்ட வினயா பற்றி எல்லாம் சொல்லிட்டேன்" என்று ஒரு பெரிய குண்டை மெதுவாகப் போட்டார் அவனது தாயார்.

"அம்மா" என அவன் அலறிய அலறலில் பக்கத்து அறையில் உறங்கிக் கொண்டிருந்த வினயா, "நான் முழிச்சிட்டு இருக்கும் போது பேசவே பேசாதீங்க. எப்போ பார்த்தாலும் பைத்தியம் மாதிரி தனியா உங்களுக்குள்ளையே பேசிக்கோங்க" என்று உறக்கம் முழித்து சத்தம் போடவும், தாயார் போட்ட குண்டின் பாதிப்பை ஒதுக்கி, வாய் விட்டுச் சிரித்தான் விஜய்.

"உன்னையே பைத்தியம் ஆக்கிட்டா போல உன் பொண்டாட்டி" என்று துளசியும் வார,

"அம்மா, இது டூ மச்" என்று மென்மையாகவே அவரிடம் குறைபட்டான் விஜய்.

அவளைத் தட்டிக் கொடுத்து, தான் தனியாகப் பேசவில்லை, வரும் பயணத்தைப் பற்றி அம்மாவிடம் பேசுகிறேன் என்று கூறி உறங்கச் செய்துவிட்டு மீண்டும் தாயிடம் "அப்பாகிட்ட சொன்னீங்களா? அவர் பாட்டுக்கு ஊர் ஃபுல்லா டாமாரம் அடிக்கப் போறார்மா. தாரகை அத்தைக்குத் தெரிஞ்சா அவ்வளவு தான். சன் நியூஸ் வரைக்கும் போய்டும்" என்று கூறியவனின் குரலில் கலக்கம் இருந்தது.

"வினு தாங்கமாட்டாம்மா" எனக் கூடச் சேர்த்துக் கொண்ட மகனிடம்

"நீ நினைக்கிற மாதிரி இல்ல விஜய். வினு பத்தி தெரிஞ்சதும் ரொம்ப உடைஞ்சு போய்ட்டார். அந்தப் பொண்ணை என்ன வார்த்தையெல்லாம் பேசியிருக்கேன். அவளைப் பைத்தியம் கிறுக்குன்னு பேசினது மட்டுமில்லாம நம்ம பையனையும் இல்லையா ஏசியிருக்கேன்ன்னு ஒரே புலம்பல். விஜய்க்கு அப்பான்னு சொல்லிக்க எனக்கு ரொம்பப் பெருமையா இருக்குன்னு வேற ஒரே சிலாகிப்பு" என்று கணவர் கூறிய வார்த்தைகளை மகனிடம் பகிர்ந்தார் அவனது தாயார்

"ஹய்யோ, இது தானம்மா, அப்பா பெருமையா நினைச்சு எல்லார்க்கிட்டையும் சொன்னா என்னம்மா செய்றது?" என்று அதற்கும் வருந்தினான் மகன்.

"ச்சே, அதை சொல்றதால அவரோட மருமகளுக்குத் தான் பிரச்னை என்ற போது கண்டிப்பா சொல்ல மாட்டார்டா. இருந்தாலும் நானும் ஒரு தடவை சொல்லிவைக்கிறேன்" என்று மகனின் பயத்தை தானும் அடைத்து, அதற்கு ஒரு தீர்வும் கண்டார் துளசி.

சற்று நேரம் அமைதியில் கழிய, "அப்பாகிட்ட நாம முதலையே சொல்லியிருக்கணும் கண்ணா. இத்தனை நாள் ஒரு பிரச்சனையை சுமந்து கொண்டே இருந்திருக்க வேண்டியதில்லை. நான் தான் அவர் உன் கல்யாணத்தை முற்போக்கு சிந்தனையோட எடுத்துப்பாரோ இல்லையோன்னு கொஞ்சம் குழம்பிப் போயிட்டேன். அவர் அதை எதிர்க்கிறேன் பேர்வழி என்று வினயாவைப் பற்றி ஊர் முழுசும் சொல்லிட்டா என்ன செய்றதுன்னு தடுமாறிட்டேன்" என்று முன்னர் கணவரிடம் சொல்லவேண்டாம் என்று தான் சொன்னதற்கான காரணத்தை மீண்டும் கூறினார்.

"ஹ்ம்ம் சரிம்மா" என்று அரை மனதோடு பேசிவிட்டு வைத்த விஜய்க்கு தன் கலக்கத்திற்கு அவசியமே இல்லை என்பது குன்னூர் சென்ற பின்னர் தான் தெரிந்தது.

தேர்வு முடிந்த அன்று, விஜயும் வினயாவும் இரவு பேருந்தில் குன்னூர் செல்வதாக இருக்க, கிளினிக் முடிந்து வீடு திரும்பிய விஜயை, துணியால் சுற்றப்பட்ட இரு பெரிய கண்ணாடி ஓவியங்களோடு வரவேற்றாள் வினயா.

அவற்றை பேருந்தில் எடுத்துச் செல்ல முடியாது என்று விஜய் வாதிட, அவை வந்தால் தான் தானும் வருவேன் என வாதிட்டாள் வினயா. அவன் எவ்வளவு எடுத்துக் கூறியும் அவற்றை இங்கேயே விட்டு வர சம்மதிக்காததோடு, அதைப் பிரித்துக் காண்பிக்கவும் மாட்டேன் எனப் பிடிவாதம் பிடித்தவளை, வேறு வழியின்றி, கண்ணாடி ஓவியங்களின் துணையோடு அழைத்துக் கொண்டு தன் பிறந்த மண்ணுக்குப் பேருந்து ஏறினான் விஜய்.

போகும் வழியாவும் கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டு, தன் குஞ்சுகளை அடை காக்கும் கோழியைப் போல் அவள் அந்த ஓவியங்களை அடை காக்க, ஆச்சிரியமாக அவள் ஏறிட்ட விஜய் ஒன்றும் பேசாமல் பயணித்தான்.

வீடு வந்து சேர்ந்து, வாசலிலேயே காத்திருந்த துளசியையும் வீரரகாவனையும் கண்டதும் வேகமாக ஓடிச் சென்று துளசியைக் கட்டிக் கொண்டவள் "உங்களை நான் ரொம்ப மிஸ் பண்ணினேன் தெரியுமா" எனக் குறைப்பட்டாள்.

மாமியாரிடம் செல்லம் கொஞ்சியவள் மாமனாரிடம் ஒன்றும் பேசவில்லையே என்று தோன்றியது போல "நல்லா இருக்கீங்களா மாமா? காய்ச்சல் சரி ஆகிடுச்சா?" என்று பெரிய மனுஷியாய் விசாரித்தும் கொண்டாள்.

பையனின் கையிலிருந்து துணி சுற்றியிருந்த ஓவியங்களை வாங்கியவாறே "நல்லா இருக்கேன் ராஜாத்தி. நீ பரீட்சை எப்படி பண்ணி இருக்கே?" என்று வீர ராகவன் சார் விசாரித்தப் போது துளசியும், விஜயும் வாய் பிளந்து நின்றிருந்தனர் என்றால், வினயா தான் வரைந்த ஓவியத்தை அவருக்குப் பரிசாக கொடுத்தப் போது அவரது வாய் பிளந்திருக்க, மற்ற இருவரும் வயிறு வலிக்கச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்குச் சிரிப்பு வர வைத்த ஓவியம் கீழ் கண்டவாறு அமைக்கப் பட்டிருந்தது.

வீரராகவனின் முகம் ஓரளவு தத்ரூபமாய் வந்திருக்க, அவரது பெரிய மீசையின் நுனியைப் பிடித்து அதில் தொங்கிக் கொண்டிருந்தது விஜயின் சாயலில் இருந்த குட்டி ஓவியம்!!

*********************************************************

பாகம் 16

பாகம் 16

தாயும் மகனும் மனம் விட்டுச் சிரித்துக் கொண்டிருக்க, வினயாவோ மாமனாரின் வியப்பையும், பேச்சற்ற தன்மையையும் கண்டு மிரண்டு போய் "சாரி மாமா, நான் சும்மா... விளையாட்டுக்கு..." எனத் தடுமாறி தந்தியடித்தாள்.

அவளது மிரண்ட முகத்தைக் கண்ட விஜய், அவளைத் தோளோடு அணைத்து "அப்பாக்குக் கோபமில்லடா. அப்படித் தானே பா" என மனைவிக்கு சமாதானம் சொல்லி, தந்தையிடம் கேள்வி தொடுத்தான்.

மகனின் கேள்வியில் தன் வியப்பை மீட்டவர், "எதுக்கு கோபம்? அதெல்லாமில்ல" என்று தலையை உலுக்கிக் கொண்டு "ரொம்ப அழகா இருக்கு. அது தான் பேச்சே வரல" என்றார் அரண்டு நின்றவளை அரங்கிற்கு மீட்டு வந்தார்.

"நல்லா இருக்கா!" என்ற அவளது சந்தோஷம் அவரையும் சந்தோஷப்படுத்தியது என்பது அவரது மலர்ந்த முகத்தில் அப்பட்டமாய் தெரிந்தது.

"இது நாள் வரைப் பார்க்காத உங்க மாமாக்குப் பெரிய ஓவியம். எங்களுக்கு ஒன்னுமில்லையாக்கும்?" என்று துளசி குதூகலமாய் குறைபட,

"உங்களுக்கும் இருக்கு" என்றவள் மற்றொரு ஓவியத்தைப் பிரித்து தாய் ஸ்தானத்தில் தன்னிடம் உறவாடும் துளசியிடம் நீட்டினாள்.

துளசியின் உருவம் வெகு தத்ரூபமாய் வந்திருக்க, விஜய் சாயலில் இருந்த ஒரு சின்னக் கண்ணன் அவர் கன்னங்களில் அவனது குழலால் கொடு இழுத்துக் கொண்டிருந்த அந்த ஓவியத்தை வாங்கிப் பார்த்த துளசியின் கண்களில் பாசத்தின் சுவடு கண்ணீராய் இடம் பெற்றது.

மாமனாரின் செய்கையில் அரண்டிருந்த வினயா, மாமியாரிடம் அந்த பயம் சிறிதும் கொள்ளாமல் "எப்படி இருக்கு என்னோட பெயிண்ட்டிங்?" எனக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு வினவினாள்.

Property of Bhuvana

"ரொம்ப அழகா இருக்கு" என்ற துளசி, அவள் தூக்கிவிட்ட காலர் வைத்த சுடிதாரின் கழுத்தோர சுருக்கங்களை சரி செய்து அவளை உள்ளே அழைத்துச் சென்றார்.

தாயும் தாரமும் உள்ளே செல்ல, கொண்டு வந்த பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு உள்ளே நுழைய முற்பட்ட விஜயை தோள் தொட்டு நிறுத்திய வீரராகவன் "என்னை மன்னிச்சிடு கண்ணா... நான்... வினயாவை... உன்னை..." என்று கோர்வையாக பேச முடியாமல் அவர் தடுமாற,

"பரவாயில்லைபா, வினு பத்தி முழுசா தெரியாத யாரும் அவளைத் தப்பா தான் நினைப்பாங்க. அதுவும் எங்க கல்யாணம் நடந்தப்ப, அவ இருந்த நிலைக்கு எந்த அப்பா-அம்மா என்றாலும் கொதிக்கத் தான் செய்வாங்க. அவளுக்கு அவளையே அப்போ தெரியலையே? இந்த லட்சணத்தில் நம்ம பையன் அவளோட எப்படி குடும்பம் நடத்துவான்னு எல்லாருக்கும் இருக்க பயம், ஆதங்கம், கோபம் தான் உங்களுக்கும் இருந்திருக்கு. நான் தப்பா நினைக்கல" என்று தந்தைக்குத் தேறுதல் சொன்ன மகனை ஆரத் தழுவிக்கொண்டு தன் பாசத்தை வெளியிட்டார் தந்தை.

அவரது அந்த இறுக்கமான பாசப்பிணைப்பில் விஜயும் ஒரு பெரும் ஆதரவை உணர, அங்கே இரண்டு மாதங்களாய் நடந்து கொண்டிருந்த சொற்போர் இனிதே நிறைவு பெற்று, பாசத்தை உச்சத்திற்குக் கொண்டுசென்றது.

நால்வரும் ஒன்றாக அமர்ந்து இரவு உணவை முடித்தப் போது அங்கே மனங்கள் சந்தோஷத்தில் நிறைந்திருந்தன.

அந்த வீட்டின் இளவரசன் மன்னனாய் மூடி சூடி, தனக்கென ஒரு ராணியை கைப்பிடித்த பின்னர், முதன்முறையாக அந்த அரண்மனைக்குள் காலடி எடுத்து வைத்திருந்தமையாலும், அந்த சிறு அரண்மனையில் ராணியின் அந்தப்புரம் என ஏதும் தனியாக இல்லதமையாலும், இருவரும் ஒரே மாடத்தில் தங்கள் இரவைக் கழிக்கச் சென்றனர்.

Property of Bhuvana

ஏற்கனவே மனைவியின் மேல் கரை புரண்ட காதலில் மூழ்கி, மூச்செடுக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த விஜய் ஆனந்திடம் "டேய் கண்ணா, வினு வரைஞ்ச படத்திற்கு அர்த்தம் புரியுதா உனக்கு? சட்டு புட்டுன்னு எங்களுக்கு ஒரு பேத்தியைப் பெத்துக் கொடுக்கிற வழியைப் பாரு" என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு, மீசையை நீவி விட்டுக் கொண்ட வீரராகவனின் பேச்சு அவனைப் பெரும் மோக வலையில் தள்ளியிருந்தது.

என்னதான் வினுவின் உடல் நிலை முன்னைப் போல் முன்னேற வேண்டும், அவள் தன்னை முழுமையாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற எண்ணங்கள் மோகத் தீயைக் கட்டிப் போட்டாலும், அழகோவியமாய் ஒருத்தியை... அதுவும் தொட்டு தாலி கட்டிய மனைவியை கண் முன் வைத்துக் கொண்டு மோகத் தீயை, கண்ணியம் எனும் தண்ணீர் ஊற்றி அணைக்க விஜயால் முடியவில்லை. அதுவும் அவள் மனதில் ஆசை இருக்கிறது என்பதை மறைமுகமாய் அறிந்த பின்னர் அவனால் சற்றும் தன்னைக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

மேன்மேலும் வளர்ந்து அவனைக் கொல்லாமல் கொன்று கொண்டிருந்த மோகத்தை அப்படியே வினுயின் மேல் காண்பிக்கவும் அவனது மனம் இடம் கொடுக்கவில்லை. அவள் வாய் மொழியாக சம்மதம் பெற்ற பின்னரே அவளை அணைத்து தன்னுள் கனன்று கொண்டிருக்கும் மோகத் தீயை அணைக்க வேண்டுமென முடிவு செய்தவன், தற்போதைய விடுமுறையை தக்கத் தருணமாய் எண்ணினான்.

அன்றைய பயணத்தின் விளைவாக, அறைக்குள் நுழையும் போதே பெரும் தூக்கக் கலக்கத்தில் வந்தவளைப் பார்த்தப் போது பெரும் ஏமாற்றமே மிஞ்சினாலும், அவளைத் தன் முதல் குழந்தையாய் எண்ணி சீரட்டாமலும் அவனால் இருக்க முடியவில்லை.

அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டே சற்று நேரம் நின்றவன், உள்ளுக்குள் எழுந்த உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாமல், அவளது நெற்றியில் தவழ்ந்த முடியை ஒதுக்கி, ஆழமாய் அழுத்தமாய் ஒரு முத்தம் பதித்தான்.

Property of Bhuvana

அவள் நெற்றியில் தொடங்கி, உதடு வரை ஏதோ காந்த சக்தி இருந்ததோ என்னவோ, அவனது உதடுகள் அவளது உதடுகள் வரை ஓர் ஊர்வலம் நடத்தின.

ஆனால் ஊர்வலம் மெது மெதுவாக வேகம் எடுத்து மின்னலின் வேகத்தை அடையத் தொடங்கிய போது கட்டிலின் அருகே நின்று கொண்டிருந்த விஜய் ஆனந்த் கட்டிலை ஆசனமாக்கி அதில் அமர்ந்து கொண்டான் என்றால், வினயா அறிந்தோ அறியாமலோ தன் கைகளை அவனுக்கு மாலையாக்கி இருந்தாள். ஒரு வேலை தன் கைகளால் பூ மாலை போடாமல் இருந்தவள் கைகளையே மாலையக்கலாம் என்றெண்ணினாளோ!

மின்னல் வேகத்தில் ஒரு முத்த மழையில் தன் மனைவியை குளிப்பாட்டிக் கொண்டிருந்தவனுக்கு, வினயாவின் ஸ்பரிசம் மென்மேலும் தடுமாற்றத்தை உண்டு பண்ணியது. அந்த தடுமாற்றத்தின் விளைவாக, அமர்ந்த நிலையில் மனைவியின் மேல் தன் காதலைக் காட்டிக் கொண்டிருந்தவன், அப்படியே அவள் மேல் படர்ந்தான்!

அத்தனை நேரம் தன் கைகள் எனும் மாலையால் அவனைக் கட்டிப் போட்டிருந்தவள், தன் மேல் படர்ந்த நிலையில் கணவன் படுத்திருக்கவும் சட்டென சுய நினைவு பெற்று, அவனைத் தூரத் தள்ளினாள்.

அவள் தள்ளியபோதும், தன் சூழ்ந்திருந்த மோக வெப்பத்திலிருந்து உடலை விஜயால் மீட்க முடியவில்லை. விளக்கிய அவள் கைகளைப் பற்றி இழுத்தப் படி, "விது, என்ன கண்ணம்மா" எனத் தாபத்தோடு அழைத்து, அவளைச் சேர்த்தணைக்க முயன்றான்.

"வேவவவவவவவவணாம்" என்ற அலறலுடன் தன் தூக்கத்திற்கும், அதன் சார்ந்த மயக்கத்திற்கும் விடை கொடுத்த வினயா, கட்டிலை விட்டு கீழிறங்கி ஓரடி பின் நகர்ந்தாள்.

Property of Bhuvana

அவள் கண்களில் சூழ்ந்து கொண்ட கலக்கம், பயம், வேதனை, வலி என்று அனைத்து உணர்ச்சிகளையும் கண்ட விஜய் ஏமாற்றத்தைத் தழுவியது ஒரே நொடி மட்டும் தான். மறு நொடியே அவள் எதை நினைத்துக் கலங்கி இருக்கிறாள் என்று தெரிந்தவன் போல் நெஞ்சம் உருகிப் போனான்.

அவள் கலக்கம் உணர்ந்தவன் போல், கைகளையும், கண்களையும் இறுக மூடித் தன்னை சமன் செய்துக் கொள்ள முயன்றவன் சில வினாடிகளில் ஓரளவு வெற்றியும் கண்டான். அந்த வெற்றியில் மகிழ்ச்சி கொள்ளாமல் வேதனை கொண்டு, அதை அப்படியே முகத்தில் தேக்கி அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்த விஜய், அவள் கட்டிலின் முனையை இறுகப் பற்றிக் கொண்டு "வேண்டாடாடாடாம். எனக்குப் பயமா இருக்கு.... கிட்ட வராதீங்க" என மீண்டும் அவனிடமிருந்து விலகவும், முகத்தில் அறை வாங்கியது போல் துடித்துப் போய் அப்படியே நின்று விட்டான்.

மீண்டும் தன்னை சுதாரித்துக் கொண்டு "வினும்மா, உன்னோட விஜிடா நான். என்னைப் பார்த்துப் பயப்படாதேடா ப்ளீஸ்" என்ற அவன் கெஞ்சல் அவள் காதில் விழுந்தது போலவே இல்லாமல், அந்த பளிங்கு முகத்தில் பயம் குடியேறி, வேர்வை முத்துகளால் முகம் அலங்கரிக்கப் பட்டது. அந்தப் பயத்தின் விளைவாக அவளது கண்களும், கால்களும் சற்றியிருந்த கதவைத் தேடவும், விஜயின் முகத்தில் மீண்டும் ஓர் அறை விழுந்தது!

அறையாமல் அறையப்பட்ட அடிகளின் உதவியால் உடலை ஆட்டிப் படைத்த மோகத் தீயை முற்றிலும் விலகிவிட "என்னைப் பார்த்துப் பயப்பட வேண்டாம் வினு. இனிமேல் இது போல நடக்காது. நான் வெளியே... மாடில போய் படுத்துக்கிறேன்" என்று அவள் முகத்தைப் பாராமல் கூறியவன், அதே கவனமாக வெளியேறியும் சென்றுவிட்டான்.

Property of Bhuvana

அவன் சென்ற திசையையே வெறித்துக் கொண்டிருந்த வினயா, அவன் வெளியேறுவதற்காகவே காத்திருந்தார் போல கதவைப் பட்டென சாற்றிவிட்டுத் தாழிட்டாள். தன் முதுகின் மீது ஓங்கி சாற்றப் பட்ட கதவால் சவுக்கடி வாங்கிய விஜயும் விறுவிறுவென மாடியேறி சென்றுவிட்டான்!

உள்ளிருந்த வின்யாவிற்கு அவன் வெளியேறி அரை மணி நேரம் சென்ற பின்னர் தான் இயல்பு நிலையே திரும்பியது!

இயல்பு நிலைத் திரும்பிய உடனேயே அவனிடம் தான் நடந்து கொண்டது தவறோ என்ற அச்சமும், வருத்தமும் வந்து மனதை ஆட்டிப் படைத்தன.
இத்தனை நாள் ஒரு நல்ல நண்பனாய், திறமிக்க பாதுகவலனாய் திகழ்ந்த கணவன் திடீரென தன்னிடம் உறவு நாடி வருவதென்றால்... அவளுக்குப் பெரும் குழப்பமாக இருந்தது.
கோயம்புத்தூரில் இருக்கும் வரை, ஒரே அறையில் தூங்கிய தினங்களில் கூட அவன் தப்பாய் தன்னிடம் நடந்து கொண்டதில்லையே... என மனம் பழசை அசைப்போட்டது! பழைய நினைவுகள் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தவே அதை அப்படியே ஒதுக்கிவிட்டு, தன்னிடம் அனுமதி பெறாமலே தனக்குள் புகுந்திருக்கும் காதலையும், கணவனையும் ஆராயத் தொடங்கினாள் வினயா!

அவன் முத்தமிட்ட உதடுகளைத் தடவிப் பார்த்து  உடல் சிலிர்த்த வினயாவால் இப்போது அதை வேண்டாம் என்று சொல்லமுடியவில்லை!.
அவனது ஸ்பரிசத்தை தானும் விரும்பி ஏற்றுக் கொண்டது கனவு போல் அவள் மனதில் தோன்றி மறைந்த போது, அவனைத் தான் மனதளவில் மட்டுமல்ல, உடலளவிலும் வெறுக்கவில்லை என்பது தெள்ளத் தெளிவாய் புரிந்தது அந்தக் குழந்தைக்கு!

Property of Bhuvana

மெல்ல மெல்ல தன் விருப்பிற்கான காரணங்களைப் பரிசீலிக்கத் தொடங்கியபோது, கணவனின் உறவு காரப் பெண் பூர்ணிமா வீட்டிற்கு சென்று வந்ததிலிருந்து தான் ஒரு சாதாரண மனைவியாய் தன் கடமைகளைச் செய்யவில்லை என்ற உறுத்தலும், இயல்பிலேயே குழந்தைகள் மேல் கொண்ட பற்றும், தன்னை அறியாமல் கணவன் மேல் தான் வளர்த்து வைத்திருந்த காதலும் அவளைத் தடுமாறி தாம்பத்யத்தை நாட வைத்திருந்தன என்பது இப்போது சற்றே வினயாவிற்குப் புரிவது போல் இருந்தது!

சிறிது தெளிவு ஏற்பட்ட உடனேயே வெளியே சென்ற கணவனை எண்ணி மனம் ஏங்க ஆரம்பிக்க, அவனைக் குன்னூர் பணியில் வெளியே துரத்திய தன் மூடத் தனத்தை எண்ணி உள்ளம் உருகிப் போனாள் அவனது வினு!

நேசம் மேலோங்க, அறைந்த கதவைத் தள்ளிக் கொண்டு மாடியேறிச் சென்ற வினயா, கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் மாடிப்படிச் சுவரை இரு கைகளாலும் இறுகப் பற்றிய படி நின்ற கணவனின் கண்கள், இலக்கின்றி எங்கேயோ வெறித்திருப்பதைக் கண்டதும், ஒரு கேவலுடனும் "விஜி" என்ற கூவலுடனும் அவனை நெருங்கினாள்.

அவளுக்கு முதுகு காட்டி நின்றிருந்த விஜய் ஆனந்த், "விஜி" என்ற மனைவியின் அழைப்பில் திடுக்கிட்டுத் திரும்பிய போது, அவனை மேலும் திடுக்கிட வைக்கும் வண்ணம் அமைந்தது வினயாவின் இறுகிய அணைப்பு.

"வினுமா" என்ற அழைப்புடன் தன்னை இறுக அணைத்த மனைவியை மேலும் தன்னோடு இறுக்கினான் கணவன்.

"சாரி விஜி... சாரி... சாரி.... நான்... நான் முன்னாடி... சாரி விஜி.... சாரி...." என மன்னிப்பை விதவிதமாய் அவள் வேண்டியபோதும், அந்த வார்த்தைகளுக்கு நடுவே பெரும் போராட்டத்துடன் முத்தமழை அங்கே பொழிந்து கொண்டே இருந்தது!

Property of Bhuvana

"வினு, வினு...." என அவளைக் கொஞ்சத் தொடங்கியவன், சற்று நேரத்தில் "விது, விது..." வென அதை மாற்றிப் பாடினான்!

மழையின் வேகம் சற்றே குறைந்து, சற்று இன்பச் சாரல்களாய் முத்தங்கள் மாறு பல மணித் துளிகள் ஆனது!

சாரலில் நனைந்த மனைவியின் தேகம் குளிரிலும் நனைவதை உணர்ந்த விஜய், அவளைத் தன் சூடான மார்போடு சேர்த்தணைத்துக் கொண்டு "கீழே போலாம் கண்ணம்மா, ரொம்ப குளிருதுடா" என்றான் ஒரு விரலால் அழுகையாலும், குளிராலும், முக்கியமாக வெட்கத்தாலும் சிவந்திருந்த அவளது காது மடல்களை வருடியவாறே!

"ம்ம்ம்... போலாம்" என்றவள் ஓரடி கூட கதவை நோக்கிக் கால் எடுத்து வைக்கவில்லை என்பதை இன்னும் சிலமணித் துளிகளை வீணாக்கிய பின்னரே உணர்ந்தனர் இருவரும்.

"இங்கேயே இருந்தா ஜுரம் வந்துடும்டா வினு, கீழ ரூம்க்குப் போகலாம்" என மீண்டும் அவன் கூறியபோது "ம்ம்ம்" என்ற வார்த்தையோடு, கதகதப்பான இடத்தைத் தன் சொந்தமாக்கினாள் அவனது வினு! அந்த கதகதப்பான இடம் கீழிருந்த அவர்கள் அறை என்று நீங்கள் எண்ணினால் நான் என்ன செய்யட்டும்?

தனக்குள் புதைந்து விடுபவள் போல், இறுகக் கட்டியிருந்த மனைவி அவளாக அவனை விட்டு விலகமாட்டாள் என்பதை சந்தோஷத்தோடு உணர்ந்த விஜய்ஆனந்த், அவளது தலையை மெல்ல நிமிர்த்தி "இப்படியே காலையில வரைக்கும் இருந்தா, ரெண்டு பெரும் உறைஞ்சு சிலையாக வேண்டியது தான்.

சொல்றதைக் கேளு வா" என்ற சொல்லோடு, அவளை அணைத்திருந்த கைகளாலேயே லேசாக அவளைத் தூக்கியபடி கீழிறங்கிச் சென்றான்!

திறந்திருந்த கதவைத் தள்ளிக் கொண்டு, மனைவியை உள்ளே அழைத்து (இழுத்துச்) சென்றவன், ஒரு கையால் தன் மேல் கொடியேன துவண்டிருந்த மனைவியைப் பற்றிக் கொண்டு, மற்றொரு கையால் கதவைத் தாழிட முயன்றான்.

Property of Bhuvana

அந்த கால வீட்டின் மரக்கதவு, எஜமானானின் சொற் பேச்சுக் கேட்காமல் இருக்க, மனைவியின் இடையைத் தழுவியிருந்த கையை தற்காலிகமாக விலக்க எண்ணி, அவன் சற்றே தன் பிடியைத் தளர்த்திய போது, கணவனின் தோள் வளைவைத் தன் முகத்திற்கு சிம்மசனமாக்கியிருந்த வினயா, "ம்ம்ம்" என சிணுங்க ஆரம்பித்து விட்டாள்.

"வினு, ரெண்டே செகண்ட்டா, கதவை அடிச்சிட்டு வந்துடுறேன். அப்பாவோ, அம்மாவோ இந்த நேரத்தில் வெளிய வந்தா நல்லா இருக்காது கண்ணம்மா" என அவள் சிவந்த கன்னத்தில் கொடு கிழித்தவாறே அவன் கூற, அவனிடமிருந்து விலகி வேகமாக கட்டிலில் சென்று படுத்துக் கொண்ட வினயா, தலையணைக்குள் தன்னை முகத்தை மறைத்துக் கொண்டாள்!

கதவைத் தாழிட்ட விஜய்க்கு, அவளுக்குக் கோபமோ என்ற கலக்கம் முதலில் தோன்றியது! ஆனால் எந்தவிதமான கலக்கம் என்றாலும் இனி பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை நன்றாகவே முளை விட்டிருந்ததால், மெல்ல அவள் தோள் தொட்டு தன்புறம் திருப்பினான்.

அவன் கலக்கத்திற்கு சிறிது அவசியம் கூட இல்லை என்பது போல், அவன் மனைவி அவன் தொடுகையை விரும்பியே ஏற்றுக் கொண்டாள்!

எந்த விதத்திலும் வேறு பெண்களிடம் தன் மனதையும், உடலையும் தொலைக்காமல் தன் காதலிக்காக கண்ணியம் காத்து, தூய ஆண்மகனாய் விளங்கிய விஜய் ஆனந்த், இன்று தன் மனைவியிடம் தேக்கி வைத்திருந்த காதல் அனைத்தையும் பொழிந்து அவளைத் தன்னவளாக்கிக் கொண்டான்!

அவளும் அந்த மேன்மையான காதலை மட்டுமல்லாது, மென்மையாக பொழிந்த காமத்தையும் மனதார ஏற்றுக் கொண்டாள்!

## பாகம் 17

அடுத்த நாள் அதிகாலையிலேயே விஜய்க்கு விழிப்புத் தட்டிவிட, தன் கழுத்தைக் கட்டிக் கொண்டு குழந்தை போல் உறங்கும் மனைவியைக் கண்ட விஜய் அவளை உச்சி முகர்ந்தான்.

அந்த சிறு அசைவு அவளது தூக்கத்தை லேசாக கலைக்க, "ஷ்" என்ற சொல்லோடு அவனை இன்னமும் நெருங்கிப் படுத்துக் கொண்டாள் வினயா. நேற்றைய இரவின் மிச்சமும், இன்றைய தினத்தின் தொடக்கமுமாய் ஒரு அழுத்தமான முத்தத்தை அவள் கன்னத்தில் அழுத்தமாய் பதித்தான் விஜய்.

தூக்கத்தின் ஊடே "ஹ்ம்ம்...வலிக்குது" என்றவள், லேசாக எம்பி அவன் கன்னத்தைப் பலமாக கடித்தாள். "ச்சி கழுதை" என்று கடிப்பட்ட தன் கன்னத்தைத் தடவிக் கொடுக்காமல், கடிக்கப்படாத மாம்பழம் போல் தளதளவென இருந்த வினயாவின் கன்னத்தை வருடிக் கொடுத்தான் கணவன்.

அவனது செல்ல அழைப்பில் வெகுண்டெழுந்து, அவன் மீது ஏறி அமர்ந்தவள் "நான் கழுதையா? அப்போ கழுதையோட..." மேலும் அவள் என்ன பேசியிருபபாளோ, விஜய்ஆனந்த் அவளது வாயை சட்டென ஒரு கையால் மூடியதோடு நில்லாமல், மறு கையால் அவள் கரம் பற்றி இழுத்து தன் மேல் சாய்த்துக் கொண்டான்.

"விடுங்க, நான் போறேன்" எனத் திமிறி அவனிடமிருந்து விடை பெற்றவளிடம் மேலும் ஏதும் பேசவோ,செய்யவோ இல்லாமல் நல்ல பிள்ளையாக விடுவித்த கணவனை ஒரு முறை விநோதமாய் பார்த்துவிட்டு, அவன் புருவம் உயர்த்தி என்னவென கேட்கவும் ஒன்றும் பேசாமல் குளியலறை நோக்கிச் சென்றாள் வினயா.

சில நிமிடங்களில் அறைக்கதவை அவள் திறக்கவும், "குளிக்கலையா வினுமா?" என்றான் கணவன்.

"ம்ஹூம்ம்ம்... ரொம்ப குளிருதே விஜி. நான் மதியமா குளிக்கவா?" என தலை சரித்து வினவியவளின் குழந்தைத் தனத்தை எண்ணி ஒரு முறை மனதில் அவளை சீராட்டினாலும், சில நொடிகளிலேயே இத்தனை குழந்தையை அவசரப்பட்டு தன்னவளாக்கிக் கொண்டுவிட்டோமோ, இன்னமும் சில காலம் பொறுத்திருந்திருக்க வேண்டுமோ என எண்ணினான் விஜய்.

Property of Bhuvana

"உள்ள ஹீட்டர் இருக்கும்டா குட்டு, இன்னைக்கு மட்டும் சீக்கிரமே குளிச்சிடு" என அவன் அறிவுறுத்திக் கொண்டே போக, வினயாவின் முகம் சிணுங்கியது.

அவளது சிணுங்கலைப் பொருட்படுத்தாமல் "சொல்றதைக் கேளு வினு" என்றான் மீண்டும்.

"சும்மா சும்மா சொல்றதைக் கேளு, சொல்றதைக் கேளுன்னு சொல்லிட்டே இருக்கீங்க. நேத்திலிருந்து நான் அதைத் தான் செய்றேன்" என்று எரிச்சல் பட்டாலும், அவன் சொல்லை மீறி வெளியே செல்லாமல் கொண்டு வந்த பெட்டியிலிருந்து உடையை எடுத்துக் கொண்டு குளியலறை நோக்கிச் சென்றாள் வினயா.

"வெளியே வந்து கூட டிரஸ் மாத்திக்கலாம் வினுமா" என விஜய் விஷமமாய் சிரிக்கவும்

"ஹை ஹை, ஆசை தான். நான் உள்ளேயே மாத்திப்பேன்" என அவனிடம் ஒழுங்கு காட்டிவிட்டு குளியலறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்ட வினயா, குளித்து முடித்து குளியலறைக் கதவைத் திறக்கும் போது கள்ளச் சிரிப்புடன் கணவன் நின்றிருப்பான், அவன் மீது மோதிக் கொள்வோம், அதன் பின்னர் மீண்டும் ஒரு முறை உடை மாற்ற வேண்டிவரும் என்றெண்ணி இருப்பாளா என்ன?

சமையற்கட்டிற்குள் பூனை நடையிட்டு நுழைந்த மருமகளின் முகத்தில் புதிதாய் ஒரு பொலிவு தென்படவும் "என்ன வினு, முகம் ஓரடியா ஜொலிக்குது?" என அவள் கன்னம் வழித்துத் திருஷ்டிக் கழித்தார் மாமியார்.

"ஹான், ஜொலிக்குதா?... அதுவா... அது என்னனா" என்று அவள் அடித்த தந்தியிலும், கன்னங்களில் ஏறிய சிவப்பிலும் சில பல விஷயங்கள் வார்த்தைகளின்றியே துளசிக்குப் புரிந்தது.

"இரு பூஸ்ட் போட்டுத் தரேன்" என தான் முன்னர் கேட்டக் கேள்வியை கேட்காதா கணக்கில் சேர்த்த துளசி, இயல்பு நிலைக்குத் திரும்பினார்.

Preview of Bhuvana

அவரது திடீர் தாவலில் சற்று வியந்த வினயாவால் அவரது முதல் கேள்விக்கு நேரடி பதில் சொல்லமுடியாமல் போனதால், அவளும் அவரது இயல்பு நிலை மாற்றத்தை ஏற்றுக் கொண்டு "டீ தரீங்களா?" என்றாள்.

அவர் டீ போட ஆரம்பித்தப் போது, விஜயும் அங்கே வந்துவிட, மகனின் முகத்தில் தெரிந்த சந்தோஷமும், எப்போதும் அவன் முகத்தில் இழையோடி இருக்கும் இறுக்கம் இன்று தளர்ந்திருந்த விதமும், மருமகளின் முகச் சிவப்பில் தான் ஊகித்த விஷயத்தை உறுதி செய்தது.

"உனக்குக் குடிப்பதற்கு என்ன கண்ணா வேணும்?" என மகனிடம் வினவி, அவன் கூறிய காபியைக் கலந்து அவனிடம் நீட்டியவர், மற்றொரு கப்பை நீட்டி, தந்தையிடம் கொடுத்துவிடும் படி பணித்தார்.

கணவனிடம் நீட்டப்பட்ட குவளையை தான் வாங்கியதும் இல்லாமல் "நானே மாமாகிட்ட கொடுத்துட்டு வரேன்" என்று பறந்து வெளியே சென்றுவிட்டாள் வினயா. அவளுக்கு இன்னும் கொஞ்ச நேரம் அங்கே இருந்தால் மாமியார் கேட்கும் கேள்விகளுக்கு எப்படி பதில் சொல்வது என சற்று வெட்கமாக இருந்தது! மனைவி சென்ற திசையையே பார்த்திருந்த மகனிடம் "காபி ஆறுது விஜய்" என நினைவுப்படுத்தினார் தாயார்.

எத்தனை வயதனாலும் தத்தம் பிள்ளைகள் தங்களுக்குச் சிறு குழந்தைகள் தான் என்றாலும், துளசிக்கு மகனிடம் நேரடி விசாரணை நடத்த ஒரு மாதிரி இருந்தது. தோழனுக்கும் மேலாய் தன்னைக் காக்கும் கடமை கொண்ட மைந்தன் அல்லவா!

சமையலறையிலிருந்த சிறு திண்ணை மேல் அமர்ந்தவன், தாயார் ஒரு தரம் கூர்ந்து பார்த்துவிட்டு ஒன்றும் சொல்லாமல் கையிலிருந்த காபியே கண்ணானான். மகனும் மருமகளும் முதல் முறையாய் புகுந்த வீடு வந்திருப்பதால் காலை உணவிற்குத் தடபுடலாய் மெனு தயாரித்து மனைவியிடம் கொடுத்துவிட்டு, காய்கறி

பறிக்கவென அவர்களது தோட்டத்திற்கு அதிகாலையிலேயே சென்று திரும்பிய கணவனை மனதிற்குள் வியந்தபடி காலை உணவைத் தயாரித்துக் கொண்டிருந்த துளசிக்கு, வீட்டில் இன்று நிரம்பி இருக்கும் நிறைவு என்றும் இருக்கவேண்டும் என்ற பிரார்த்தனை ஓங்கி இருந்தது.

ஒரு நிலைக்கு மேல் பொறுக்காத விஜய் "என்னமா அப்படி ஒரு சிரிப்பு... ஹ்ம்ம் சிரிப்பில்லை... புன்னகை" என்றான் விரிந்த கண்களுடன்.

"ஹ்ம்ம்... என் மருமகளை நினைச்சுக்கிட்டேன் அது தான்" என்றவர், "கூடவே உங்க அப்பாவையும்" என முடித்தார்.

"ஹூம், மகனை நினைக்கிறதே இல்லை போல" என அவன் ஏகமாய் வருத்தப்படவும், "ஆமா, ஓரடியா மாறினவங்களைத் தானே நினைக்கணும்? எப்பவும் ஒரே மாதிரி ஒருத்தர் மேல பைத்தியமா இருக்கற உன்னை எதுக்கு நினைச்சுக்கிட்டு?" என தாயும் அவனுக்குச் சரியாய் பேசினார்.

ஒரு விரல் நீட்டி தாயை மிரட்டிய விஜய், மனம் விட்டுச் சிரித்ததில் அதில் தனக்கு ஒன்றும் கௌரவ குறைச்சலில்லை என்பதை வெளியிட்டான்.

மேலும் மகனை ஏதும் கிண்டல் செய்ய விரும்பாமல் "இன்னைக்கு இருக்க சந்தோஷம் என்றைக்கும் நிலைச்சிருக்கணும் கடவுளை வேண்டிக்கிட்டேன் கண்ணா" என்றார் உணர்ச்சி மிகுந்த குரலில்.

"அம்மா, இது ஒரு தற்காலிகமான சந்தோஷம்ம்மா" என்றவன் தாயாரின் முகம் வாடவும், "இல்லம்மா நான் என்ன நினைக்கிறேன்னா, வினு என்னைக்குத் தன்னை முழுசா பவின்னு அக்செப்ட் பண்ணிக்கிட்டு, அப்புறமும் என்னோட காதலை முழு மனசோட புரிஞ்சு கொள்கிறாளோ அப்போ தான் முழு சந்தோஷம், நிம்மதி எல்லாம். அது வரைக்கும் ஒரு விதமான ஒதுக்கமும், எது எப்போ எப்படி மாறுமோ என்ற பயமும் இருந்துட்டே தான் இருக்கும்ன்னு சொல்ல வரேன்"

என்றவன் தாயின் முகத்தில் ஒப்புதலான பாவனை கூடி வந்தாலும், வாடிய முகம் மலராமல் இருப்பதைக் கண்டு "சீக்கிரம் சரியாகிடும்மா, அவ தன்னைக் கொஞ்சம் கொஞ்சம் உணர ஆரம்பிச்சிட்டான்னு எனக்குத் தோணுது" என்று சமாதானம் சொன்னான்.

"ஹ்ம்ம், சரி கண்ணா" என்று அவன் கூறிய சமாதானத்தை அரை மனதோடு ஒத்துக் கொண்ட துளசி, "ஆனா நீ ஏன்டா ஒரு மாதிரி யோசனையாவே இருக்கே" என மகனின் மனதை மிகத் துல்லியமாகப் படித்தார்.

"அது... இன்னும் கொஞ்சநாள் பொறுத்திருக்கணுமோ தோணுச்சும்மா, கொஞ்சம் அவசரப்பட்ட மாதிரி ஒரு எண்ணம்" என்று தன் மனதில் இருந்ததை வெளிப்படையாகக் கூறினான் விஜய்.

"ஹ்ம்ம் அதெல்லாம் சரி தான். நீயும் எத்தனை நாள் தான் ஏங்கித் தவிப்ப" என்று தன்னால் முடிந்த அளவு மகனை அதட்டி அடக்கினார் துளசி.

"ஹ்ம்ம் இன்னும் கொஞ்ச நாள், அவள் தன்னை பவி என ஒத்துக் கொள்ளும் வரையிலாவது" என விஜய் சொல்ல, அதற்குத் துளசி பதில் கூறும் முன்னர், சமையலறைக்குள் ஆள் நுழையும் அரவம் கேட்டது.

"அத்தை" என அழைத்துக் கொண்டு வினயா தான் வந்து கொண்டிருந்தாள்.

அவளது அழைப்பிலிருந்த வித்தியாசத்தை உணர்ந்த விஜய் லேசாக புருவம் உயர்த்த, "இதென்ன துசிம்மா அரை மணி நேரத்தில் அத்தை ஆகிட்டேன்" என்று மருமகளின் அழைப்பில் வியந்த துளசியும் வினவினார்.

"மாமா தான், என்னை மாமா சொல்ற, துளசியை துசிம்மா சொல்ற, அப்போ நாங்க ரெண்டு பெரும் அண்ணன்-தங்கச்சியா? என்னோட தங்கச்சியை எனக்கு ஒரு பொண்ணு பார்க்கச் சொல்றியா கேட்டாங்க" எனப் பரிதாபமாய் முழித்துக் கொண்டு பதில் கூறவும்

Property of Bhuvana

"ஆமா, பார்க்கிறாங்க. நான் ஒருத்திப் பாடுறப்படுறது பத்தாதுன்னு இன்னொருத்தியையும் கூட்டிட்டு வராங்க" என அலுத்துக் கொண்ட துளசி, "உங்க மாமா கிடக்கிறார். நீ என்னை அம்மா என்றே கூப்பிடு கண்ணம்மா" என மகளாகிப் போன மருமகளுக்குத் தாயாய் அனுமதிக்கொடுத்தார்.

"அப்போ மாமா?" என புதிதாய் அவள் கவலை கொள்ள, "உனக்கு எப்படி பிடிக்கிறதோ அப்படி கூப்பிடு. அவர் சொல்றதுக்கெல்லாம் கவலைப்படவேண்டாம்" என அதற்கு அழுத்தமாய் ஒரு முற்று புள்ளி வைத்தவர், மகனிடம் திரும்பி, "இன்னைக்கு கிளினிக் போறீயா விஜய்?" என அவனது வேலை விவரம் கேட்டார்.

"ஆமாம்மா, இன்னும் ஒரு மணி நேரத்தில கிளம்புறேன்" என்ற பதிலுடன் அவன் அந்த இடத்தை விட்டு நகர, வினயாவும் அவன் கூடவே அறைக்கு வந்தாள்.

மகனுடன் வால் பிடித்துக் கொண்டு செல்லும் மருமகள் மேல் ஒரு மாமியார் படும் கோபத்தை சிறுதளவும் படாமல், தன் சமையல் வேலைகளைக் கவனிக்கச் சென்ற அந்த நல்ல உள்ளத்தின் பிரார்த்தனைக்கேனும் கடவுள் செவி சாய்ப்பார் என நம்புவோமாக.

அவன் தன்னை விட்டுவிட்டு(!) வேலையை கவனிக்கப் போகிறான் என்ற செய்தியில் அவனிடம் சண்டைக்கு நின்று, அவன் சீக்கிரம் வந்துவிடுகிறேன் என்ற சமாதானத்தை ஏற்காமல், அவன் தன்னை உடன் அழைத்துச் செல்கிறேன் என்று கொடுத்த வாக்கிலும் திருப்தி அடையாமல், அன்று மாலை வேலை முடிந்ததும் ஊட்டி அருகில் பசனக்குடி என்ற ஊரிலிருக்கும் அவர்களது இல்லத்திற்கு அழைத்துச் செல்வதாக அவன் வாக்குக் கொடுத்ததும் தான் சமாதானம் ஆனாள் வினயா.

தன் மருத்துவ சேவை முடிந்து அவன் வந்ததும், தாய்-தந்தையின் உபயோகத்திற்கென தான் வாங்கி நிறுத்தியிருந்த மாருதி ஆல்ட்டோவை எடுத்துக் கொண்டு, சில காலங்களுக்கு முன்னர் பசனக்குடி என்ற ஊரில் தந்தை வாங்கிப் போட்ட குடிலுக்கு மனைவியுடன் பயணமானான் விஜய்ஆனந்த்.

அவனிடம் ஆயிரம் கேள்விகள் கேட்டுக் கொண்டு, தான் பார்த்து ரசிக்கும் அனைத்தையும் அவனிடம் காட்டி அவனையும் வலுக்கட்டாயமாய் ரசிக்க வைத்து, இல்லாத சலுகையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்த வினயா, பசனக்குடியில் இருந்த அவர்களது குடிலைக் கண்டதும் மீண்டும் குதூகலித்தாள்.

ஒற்றை அறையாய் இருந்த அந்த வீட்டில், ஒரு பக்கம் அழகாய் அடக்கமாய் ஒரு சிறு கட்டிலும், ஓரமாய் சிறு மேஜை ஒன்றும் இருக்க, மெல்லிய திரைச் சீலையின் அந்தப் பக்கம் சிறு அடுப்பு மேடையும் சில இலகு சமையல் பொருட்களும் இருந்தன. கட்டிலை அடுத்தார் போல சுவரோடு பதித்திருந்த ஒரு அலமாரியில் சில அத்தியாவசிய பொருட்கள் மட்டுமே இருக்க, அந்த சிறு வீடு நகரத்தின் மாசின்றி, நிறைய மின்சார உபகரணங்கள் இன்றி வெகு அழகாய் ஜொலித்தது.

தான் மேற்படிப்பு படிக்கும் காலத்திலும், அதற்குப் பின்னரும் ஓய்வாக இல்லை புதிதாய் ஏதும் பயில விரும்பும் நேரத்தில் இங்கு வந்து தங்கி இருந்ததாக விஜய் கூறியிருந்தமையால், அதைப் பற்றிய பேச்சை விடுத்து வீட்டைச் சுற்றி வந்தாள் வினயா.

இரவு கனிய கனிய விஜயின் முகத்தில் யோசனையின் ரேகை கூடிக் கொண்டே போனதை வினயா கவனிக்கும் பாடில்லை. அவளுக்கு அவன் அழைத்துச் சென்று காட்டிய சிறு அருவியை வாயார வியக்கவே நேரம் சரியாகப் போனது.

இரவு நெருங்கிய போது, துளசி செய்து கொடுத்த உணவை, குடிலின் வெளியே போடப்பட்டிருந்த மூங்கில் நாற்காலிகளில் அமர்ந்து உண்டனர்.

கணவனின் முகத்தில் குடி கொண்டிருந்த யோசனையை அப்போது தான் கவனித்த வினயா "என்ன விஜி, ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?" என வினவியபோது அவளது முகம் லேசாய் வாடி இருந்தது.

"ஒண்ணும்மில்லைடா" எனக் கூறிய விஜயின் பதிலில் ஏதோ இருக்கிறது என்பது அவன் தன் கன்னத்தை வருடாமல் பதில் கூறியதிலே புரிந்துவிட்டது வினயாவிற்கு.

உணவு முடிந்து, சற்று தொலைவு நடந்துவிட்டு வருவதாகக் கூறிய விஜயிடம் தனியாக இருக்க பயமாக இருக்கிறது எனக் கூறி உடன் சென்றவள், அவனது மௌனம் தொடர்ந்து கொண்டே இருக்க, "என்னை... என்கிட்டே..... நேத்து நமக்குள்ள..நடந்ததைப் பற்றி நினைக்கிறீங்களா விஜய்?" என வாய் விட்டுத் தன் சந்தேகத்தைக் கேட்டுவிட்டாள்.

இன்னமும் பொறுமை இருந்திருக்க வேண்டுமோ என எண்ணிய தனது மனதை எப்படி படித்தாள்? என்ற சிறு வியப்புடன் "ஹ்ம்ம் ஆமா" என விஜய் உரைக்கவும், அவளது முகம் தாழ்ந்து போனது.

விஜய் அதை வெட்கமென நினைக்க, அடுத்து வினயா கூறிய வார்த்தைகள் அப்படியில்லை என அவன் தலையில் தட்டி நிரூபித்தது.

"இவளை ஏன் கல்யாணம் பண்ணிகிட்டோம், வேற நல்ல பொண்ணா... தூய்மையானவளா....பார்த்திருக்கலாம்ன்னு நினைக்கிறீங்களா?" என அவள் முடிப்பதற்கு முன்னர் அவளை இழுத்து தன் கைவளைவிற்குள் கொண்டு வந்த விஜய் "ச்சி, லூசு. என்ன வார்த்தை பேசுற? நான் எதையோ நினைச்சா... நீ எதையோ நினைச்சு... அதுக்கு அழுதுக்கிட்டு... என்னமா இது?" என அவள் கண்களைத் துடைத்து விட்டவன், "ஒரு நிமிஷம் கூட எனக்கு வேற பெண் மேல் நாட்டம் இருந்ததில. அது போக, நீ எப்பவும் பவித்ரா தான்டா, மாசு மறுவற்ற பவித்ரா" என்றான் உணர்ச்சி மிகுந்த குரலில்.

"இல்ல விஜி, நான் பவித்ரா இல்ல... அந்தப் பேரை வச்சுக்க எனக்கு எந்தத் தகுதியுமில்ல" என விக்கி விக்கி அழுதவளை நெஞ்சோடு அணைத்து, "எனக்கு நீ பவித்ரா தான். உனக்கும் தான்" எனப் பலமுறை கூறி அவள் மனதிற்குள் உருவேற்ற முயன்றான் விஜய்.

அந்த முயற்சியில் சிறிது முன்னேற்றம் ஏற்பட, வினயாவின் விக்கல்கள் சற்றே குறைந்தன என்றாலும் முழுதாய் நிற்கவில்லை.

முந்தைய இரவிற்கு மாறாய், மனம் நோக அழுதவளை நெஞ்சில் சாய்த்துக் கொண்டு அந்த இரவைக் கழிக்க விஜய் தயாரானான்.

சற்று நேரத்தில், அவனது மெல்லிய வருடலில் வினயாவின் இமைகள் மெல்ல மெல்ல மூடிக் கொள்ள, விஜயின் இமைகள் தான் தூக்கத்தைத் தொலைத்து இறந்த காலத்திற்கு அவனை இழுத்துச் சென்றன.

பவித்ரா - மருந்திற்குக் கூட முகத்தில் மாசு மருவில்லாமல், தந்த மேனியும், தெவிட்டாத சிரிப்பும், கவிதை பாடும் கண்களும், ஓயாத பேச்சும், நிதானம் வேண்டின் நிதானமும், துள்ளல் வேண்டின் துடிப்பும் நிறைந்த நடையும், காற்றில் வர்ண ஜாலங்கள் தீட்டும் கைகளும்... என்ன ஒரு அழகு! போற்றக் கூடிய, பாதுக்காக வேண்டிய அழகு பெட்டகம் அல்லவா அவனது பவித்ரா!

பேருக்கு ஏற்றார் போல் பவித்ரமான எண்ணங்கள் நிறைந்தவள் தான், கனவில் கூட ஒருவருக்கும் கெடுதல் எண்ணாத ஒரு ஜீவனுக்கு அழகாய், பொருத்தமாய் தான் இருந்தது... இல்லை இல்லை இருக்கிறது பெயர்!

முதன்முதலாய் பவித்ராவை கல்லூரி வளாகக் கோவிலில் கண்டதில் தொடங்கி, அவளிடம் முதன் முதல் பேசியதற்குப் பயணித்தான் விஜய்!

மௌனமொழி – பாகம் 18

தனது கடைசி வருட M.D.S இல் அடி எடுத்து வைத்திருந்த விஜய்க்கு, வேலை பளு நெட்டி முறித்த சமயம் அது.

மேற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ராமச்சந்திரா மாணவர் விடுதியில் தனித் தனி அறைகள் ஒதுக்கப்படும் என்றாலும், உமாவின் அண்ணன் தேவின் அறை அருகில் தான் அவனது அறையும் இருந்தது. அவன் தன் படிப்புத் தொடர்பாக பல் செட் மாடல்களை சரியாக செய்துவிட்டு, அதன் பின்னர் குறட்டை விடுவதைக் குறைக்கும் வண்ணம் ஒரு கருவியைத் தானே வடிவமைத்துக் கொண்டிருந்தமையால் அதற்குத் தேவையான வேலைகளையும் செய்துவிட்டு களைத்துப் போய் விடுதி அறைக்குத் திரும்பும் போது, பக்கத்து அறையில் பெரும் பாட்டும் கூத்தும் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்கும்.

முதல் ஆண்டு படிப்பின் போது இந்தப் பாட்டும் பேச்சும் அவனைப் பெரிதும் எரிச்சல் படுத்தினாலும், தனது இளங்கலை படிப்பின் போது தனக்கு அறிமுகமாகி சில காலம் நண்பனாய் இருந்த தேவேந்திரனை விஜயால் ஒதுக்கியும் வைக்க முடியவில்லை. தன் இனிய தோழி உமாவின் அண்ணனாகப் போனவனை, தன் தோழிக்காகவே பொறுத்துப் போனவன், சில நாட்களில் அவனது இயல்பு இப்படி, அதை நமக்காக அவன் ஏன் மாற்றிக் கொள்ள வேண்டும்? அவன் போக்கில் அவன் வாழ்வை எடுத்துக் கொண்டால், தான் தன் எண்ணப்படி வாழ்ந்துவிட்டுப் போகிறோமென முடிவிற்கு வந்த விஜய் ஆனந்த், அவனுக்கு உடன்படாய் இருந்த சில விஷயங்களில் தேவுடன் இணைந்து கொண்டான்.

காலை ஏழரை மணி தொடங்கி, மாலையில் ஐந்து மணி வரை நீடிக்கும் அவனது வேலைக்குப் பிறகு, சற்று நேரம் தேவ் மற்றும் அவன் நண்பர்கள் சிலருடன் பேசிக் கொண்டிருப்பது தப்பாகப் படவில்லை விஜய்க்கு. அப்படி ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கும் போது தான், விஜய் உமாவின் பிறந்த நாளை அவனுக்கு நினைவுபடுத்த, அந்த உத்தம அண்ணனுக்குத் தங்கைக்குப் பிறந்தநாள் என்பதே நினைவு வந்தது.

உமாவின் பிறந்தநாளுக்கு, அவளது ட்ரீட்டாக, லீ ராயல் மெரிடியனில் இரவு உணவிற்கு அவள் அழைத்திருப்பதாக விஜய் கூற, அதுவே அடுத்து நடக்கவிருந்த விபரீதங்களுக்கு மறைமுக வித்தாக அமைந்தது. பேச்சு வாக்கில் எந்த விஷயத்தைக் கூறிவிட்டு, தன் ஆய்வு முடிவுகளைப் பதிவு செய்யவென விஜய் அவன் அறைக்குப் பயணமானான்.

புது வெள்ளியாய் விடிந்த அடுத்த நாள் காலையில், இதுவரை தூரத்திலிருந்து ரசித்திருந்த பவிப் பாப்பாவை வெகு அருகில், அதுவும் சில மணி நேரங்கள் பேசும் வாய்ப்புடன் சந்திப்போம் என்ற நினைப்பே இல்லாமல், தன் தோழிக்கு ஃபோனில் அழைத்து வாழ்த்துக் கூறியவன், அன்று அவள் கோவிலுக்கு வரும் போது சந்திப்பதாகக் கூறி விடைபெற்றான்.

ஒரே வளாகத்தில் இருந்தாலும், இருவரது படிப்பும் அவர்களது கவனத்தின் பெரும் பகுதியை வேண்டி இருந்தமையால் அடிக்கடி சந்திக்க முடியாமல் இருந்த நண்பர்கள் இருவரும் அன்று காலை வைத்தீஸ்வரன் கோவிலில் சந்தித்து ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பேசி ஆராய்ந்ததில் உமாவின் முகத்தில் புதிதாய் குடி கொண்ட மலர்ச்சி விஜயை ஆச்சிரியப்படுத்தி அவளைக் கேள்விகளால் குடைய வைத்தது.

"ஹே என்ன உமா? சந்தூர் சோப்பு போடற மம்மி மாதிரி ஒரே ஜொலிக்கிற? என்ன விஷயம்? மம்மியாக முதலில் ஆன்ட்டியாகனும்ன்னு ஏதாவது ரூட் போட்டிருக்கியா என்ன?" என அவன் அடித்தக் கிண்டலில்

"டேய், என்ன கொழுப்பா? நான் என்ன மம்மி மாதிரியாடா இருக்கேன்" என அவன் காதுகளைப் பிடித்துத் திருகிய உமா, "இன்னைக்கு ஈவேனிங் எல்லாம் தெரியும் வா" என புதிர் போட்டுவிட்டு, "நான் ஆன்ட்டி ஆகிறது இருக்கட்டும், சார் என்ன வந்ததிலிருந்து கோவிலைக் கண்ணாலேயே பிரகாரம் வரீங்க? என்ன விஷயம்?" எனத் தன் பங்கிற்கு அவனைக் குடைந்தாள்.

"இன்னைக்கு ஈவினிங் வா, எல்லாம் தெரியும்" என அவளது குரலிலேயே சொல்லிவிட்டுச் சின்ன சிரிப்புடன் தன் வகுப்பறை நோக்கிச் சென்றவன், சத்தியமாக அன்று மாலையே உமாவிடம் வசமாக மாட்டிக்கொள்வோமென எண்ணவில்லை!

மாலையில் உமா கூறிய ஏழு மணிக்கு லீ ராயல் மெரிடியனில் நின்றிருந்த விஜயின் கண்களில், தன் உயரத்தில் நின்றிருந்த ஒரு இளைஞனின் கையோடு கை சேர்த்துக் கொண்டு, அங்கு பொங்கி வழிந்து கொண்டிருந்த செயற்கை நீர் ஊற்றை அக்கு வேறு, ஆணி வேறாய் கண்காளால் அலசிக் கொண்டிருந்த பவித்ரா தான் பட்டாள்.

அவள் நின்றிருந்த விதத்திலும், அவள் உறவாடிய முறையிலும் விகல்பமாய் ஏதும் தெரியாவிட்டாலும், மனதில் சூழ்ந்த ஏமாற்றத்தை அவனால் தவிர்க்க முடியவில்லை. இதுவரை பேசியிராத ஒரு பெண்ணிடம், அதுவும் துணைக்கு ஒரு

ஆண் நிற்கும் நிலையில் சென்று பேச விஜய்க்கு கொஞ்சம் யோசனையாகவும், அவள் அதை எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று தயக்கமாகவும் இருந்தது.

தயக்கமும், குழப்பமுமாய் நிமிடங்கள் பறக்க, பத்து நிமிடத் தாமதத்திற்குப் பின்னர், ஆட்டோவில் வந்திறங்கிய உமா, வாசலிலேயே நின்றிருந்த விஜயிடம் "ஹே வா விஜய், சாரிடா, கமலா ஆன்ட்டி கூட மாங்காடு கோவில் போயிருந்தேனா, அங்கிருந்து வர கொஞ்சம் லேட் ஆகிடுச்சு" எனக் கூறியவாறே அவன் கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

"நம்ம ஃபிரண்ட்ஸ் எல்லாரும் வந்தாச்சா? இல்ல எப்பவும் போல நீ மட்டும் தான் punctuality பரமசிவமா முதல் ஆளா வந்து சேர்ந்தியா?" என சைக்கிள் காபில் ஒரு ஆட்டோவை செலுத்தி, அவன் வலதில் கொடுக்க வந்த அடிக்கு, இடதில் சிக்னல் போட்டு வலது பக்கம் நெளிந்தாள்.

"வேற யாரும் வரல, நானும் நீயும் தான்" என்று விஜய் முடிக்கும் முன்பே, பிடித்திருந்த அவனது கையை விடுவித்தவள்

"வாங்க தனா, வாடா பவி, எப்படி இருக்கே?" என வினவியவாறே பவித்ராவின் அருகில் சென்றவள் அவர்களை முகம் மலர வரவேற்றாள்.

"பிறந்த நாள் வாழ்த்துக்கள்" என சிறு சிரிப்புடன் தனா கூற,

"many more happy returns அண்ணி" என பவித்ரா வாழ்த்துக் கூறினாள்.

"ஏன் அண்ணி இவ்வளவு நேரம்? அண்ணா ஒரே புலம்பல்... ஏன் உமா இன்னும் வரலை? உடம்பு முடியலையோ? வேலை அதிகமோ? ஒரு ஃபோன் பண்ணி இருக்கலாமே? நான் பண்ணினாலும் எடுக்க மாட்டேன்கிறாளே... அப்படி இப்படின்னு ஒரே புலம்பல்" என தான் செய்ததை எல்லாம் தமையன் செய்ததாக கூற, உமாவிற்கு சந்தோஷமாக இருந்தது என்றால், விஜய்க்கு அவளது அண்ணாவென்ற ஒரு வார்த்தையில் "ஹப்பாடா" வென்றிருந்தது.

"சரியான வாலு, நானா கழுதை அப்படியெல்லாம் சொன்னேன்?" என்று பேசத் தொடங்கிய தனசேகரன், "ஹேய், இதென்ன புதுசா அண்ணா எல்லாம் சொல்ற? நல்லாத் தானே இருக்க பவிச் செல்லம்? காய்ச்சல் ஏதும் திடீர்ன்னு வந்துட்டுதா?" என பயந்தவன் போல் முகத்தை வைத்துக் கொண்டு, பவித்ராவின் கன்னங்களை மாறி மாறித் தொட்டுப் பார்த்தான்.

அவர்களது அந்தச் செல்ல விளையாட்டில் அங்கு ஓர் சிரிப்பலை எழுந்து அடங்க, உமா இருவருக்கும் பரஸ்பர அறிமுகம் செய்து வைத்தாள்.

நிர்மலாவின் அண்டை வீட்டு மனிதர்களுக்கு உமா எப்படி அண்ணி ஆனாள் என விஜய் யோசிக்க ஆரம்பித்து, வினாடிகளில் பவித்ராவின் அண்ணியையும், அண்ணாவையும் ஒன்றாய் சேர்த்து, உமாவின் கன்னச் சிவப்பை தனசேகரனது ரகசிய மொழிகளோடும் முடிச்சிட்டு உமா-தனசேகரன் இருவருக்குள்ளும் நிலவும் காதலை வெகு சீக்கிரத்தில் அறிந்து கொண்டான்!

உமாவின் அழைப்பை பெற்ற வெகு சிலரில், விஜயும் தனசேகரனும் மட்டுமே வந்திருக்க, மற்றவர்களுக்காக காத்திருந்த வேளையில் "அண்ணா, நான் இங்க இருக்க பௌக்கே ஷாப் வரைக்கும் போயிட்டு வரேன்" என்ற அறிவிப்புடன் எழுந்த பவித்ரா, விஜயை ஒரு வினாடிக்கும் மேல் பார்த்துவிட்டு அந்தப் பக்கம் நகர்ந்தாள்.

சில வினாடி தாமதத்திற்குப் பின்னர், விஜயும் "நானும் நம்ம மக்கள் வராங்களான்னு பார்த்துட்டு வரேன் உமா" என்று இருவரிடமும் ஒரு தலைசைப்புடன் விடை பெற்று, அவர்களைத் தனித்து விட்டு வந்தான்.

சற்று தூரத்தில், அங்கிருந்த பூங்கொத்து ஸ்டாலின் அருகே நின்று கொண்டு, உள்ளே சிரித்துக் கொண்டிருந்த பூக்களைத் தன் மோகனப் புன்னகையால் மனமுடையச் செய்து கொண்டிருந்தாள் பவித்ரா.

பல வண்ண ரோஜாக்கள் கொண்ட ஒரு பூங்கொத்தை அவள் ரசித்துக் கொண்டிருக்க, நம்ம தலைவர் முகமே ரோஜாவாய் பூத்திருக்கும் புது மலரான பவித்ராவை ரசித்துக் கொண்டே அவள் பின்னால் சென்று நின்றார்.

அருகே சென்றதோடு இல்லாமல் "பாப்பா" என மெல்லிய குரலில் அழைக்கவும் செய்தான்.

ஒரு திடுக்கிடலுடன் திரும்பிய பவித்ரா "உங்களுக்கு எப்படி எங்க அப்பா கூப்பிடற பேர் தெரியும்? அண்ணி சொன்னாங்களா?" என்றாள் வேகமாக.

"ம்ஹூம், உனக்கு அவங்க அண்ணி என்பதே எனக்கு இன்னைக்குத் தான் தெரியும்" என்று அவள் கேட்டதற்கு மறைமுகமாக பதில் கூறிய விஜயை ஒரு ஆராயும் பார்வையுடன் நோக்கி, "ஹோ, அப்போ எப்படி பேர் தெரியும்? என்னை காலேஜ்ல பார்த்திருக்கீங்களா?" என்றாள்.

"உன் பேர் பவித்ரான்னு இப்போத் தான் தெரியும்" என்றவன் பவித்ராவில் ஒரு அழுத்தம் கொடுத்தான்.

"ஹ்ம்ம், என்னைப் பாப்பான்னு தான் முதல தெரியுமா? அது தான் எப்படின்னு கேட்கிறேன்? அப்பா பேசுறதை ஒட்டுக் கேட்டீங்களா? ஒட்டுக் கேட்கிறவங்க நல்லதைக் கேட்கிறதில்ல தெரியுமா?" என இடுப்பில் கை வைத்து அவள் கண்ணை உருட்டவும்,

"அச்சோ, இந்த லுக் உனக்கு நல்லா இல்லையே பாப்பா" என்றான் விஜய், உதட்டைக்  கன்னக் கதுப்பில் தேக்கி.

"ஐயோ, பாப்பா சொல்லாதீங்க? நான் என்னச் சின்னப் பிள்ளையா?" என அவள் கால்களை வேண்டுமென்றே தரையில் லேசாக உதைத்து பதிலுக்கு சிரிக்கவும், அந்த சிரிப்பிற்கு வால் பிடித்துக் கொண்டு பற்பல சிரிப்பலைகள் எழுந்து அடங்கின.

அதன் பின்னர் இருவரும் "ஃபிரண்ட்ஸ்" என்று கை குலுக்கிக் கொண்டு, வெகு சீக்கிரத்தில் நண்பர்கள் என்ற அங்கீகாரத்தைப் பரஸ்பரம் வழங்கினர்..

தொடர்ந்த இருபது நிமிடத்தில், சிறு வயதில் விஜய் தெரியாமல் வெடித்த தௌசண்ட் வாலா வெடியில் தொடங்கி, அதில் அவனுக்குப் பட்ட காயங்களிலும், திட்டுகளிலும் பயணித்து, விஜயின் பத்தாவது மதிப்பெண்களை தனதுடன் ஒப்பிட்டு, பன்னிரண்டவாதில் கூட தான் அவனை விட கூட மதிப்பெண்கள் வாங்கவில்லை என்பதை வருத்தத்துடன் உணர்ந்து, அவன் எப்படி பல் மருத்துவம் படிக்கவேண்டுமென நினைத்தான்? எப்போது முடித்தான்? எத்தனையோ துறைகள் இருக்கும் போது ஏன் பல் கட்டும் பிரிவை முக்கிய பாடமாக தன் மேற்படிப்பிற்குத் தேர்வு செய்தான்? என அவனைக் கேள்விகளால் திக்கு முக்காட செய்தவள், தனக்குத் தேவையான பதில் வரும் வரை அவன் பேச்சை நிறுத்துவதை அனுமதிக்கவும் இல்லை.

அவர்களின் உரையாடலைக் கலைக்கும் படி, உள்ளே இருக்கும் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் படி தேவ் அவனது நண்பர்களுடன் வந்திறங்கினான்.

பவித்ராவுடன் நின்றிருந்த விஜயை நோக்கி அவர்கள் வரவும், "நீ உமாகிட்ட போ" என அடிக்குரலில் எச்சரித்த விஜய், அவளை விட்டு விலகி அவர்களை நோக்கிப் போனான். இத்தனை நேரம் நன்றாகத் தானே பேசிக் கொண்டிருந்தான், இப்போது ஏன் அடித் தொண்டையிலிருந்து புலி மாதிரி உறுமுகிறான் என்ற யோசனையோடே அண்ணனும்-வருங்கால அண்ணியும் அமர்ந்திருந்த இருக்கைக்குச் சென்றாள் பவித்ரா.

"என்ன வேடிக்கையெல்லாம் ஆச்சா?" என தனசேகரன் வினவ,

"ஹ்ம்ம், திவ்யமா" என்றவளின் கவனம் அங்கே இல்லை என்பது மற்ற இருவருக்குமே புரிந்தது.

அதை வெளிப்படையாக கேட்காமல் "விஜய் எங்க பவி" என்று உமா கேட்க,

"யாரோ நாலு அஞ்சு பேர் பசங்க வந்தாங்க. அவங்களைப் பார்த்ததும் என்னை இங்க போகச் சொல்லிட்டு அவர் அவங்களோட பேசப் போய்ட்டார்" என்று பதிலுரைத்த பவித்ராவிற்கு "யார் அவர்கள்?" என்ற கேள்வி மண்டையைக் குடைந்தது.

"ஹோ" என்ற ஒற்றைச் சொல்லோடு வாயிற்புரம் பார்வையைச் செலுத்திய உமா, மங்கிய விளக்கின் ஒளியில் தென்பட்ட உருவங்களைக் கண்டதும் முகம் சுளித்தாள்.

"இவங்க எங்க இங்க வந்தாங்க?" என்று தன் எரிச்சலை அவள் வெளிப்படையாகவே காட்டிக் கொண்டிருக்கும் போதே, தேவ் அவர்கள் அமர்ந்திருந்த இடம் நோக்கி வந்துகொண்டிருந்தான்.

"ஏய் உமா, ஹாப்பி பர்த்டே" என்று கும்பலாக வாழ்த்தியவர்கள், தேவ்வைத் தொடர்ந்து தத்தம் கைகளையும் உமாவிடம் குலுக்க நீட்டினர்.

அண்ணனின் கரங்களையே ஏற்காத உமா, ஒரு கை குவிப்போடு "தேங்க்ஸ்" எனக் கூறி அதற்கு ஒரு முற்று புள்ளி வைத்தார்.

"தோ பாருடா, கை குலுக்க மாட்டாங்களாமே" என்று ஒருவன் கூவ,

"டாக்டர் தானே நீ?" என்று மற்றொருவன் எடுத்துக் கொடுக்க,

"டோன்ட் பீ சில்லி உமா" என அண்ணனாய்(!) கடிந்து கொண்டான் தேவேந்திரன்.

பதிலேதும் பேசாமல் அவர்களை நேர் பார்வை ஒன்றாலேயே அடக்கிய உமாவை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆட வேண்டும் போலிருந்தது தனசேகரனுக்கு.

தன் நேர் பார்வையைத் தொடர்ந்து, "ஓகே. நாம அப்புறம் பார்க்கலாம்" என நகர்ந்த தங்கையைக் கைப்பிடித்து நிறுத்திய தேவேந்திரன்,

"அப்புறம் பார்க்கலாமா? நாங்க எல்லாரும் உன்னோட பர்த்டே பார்ட்டிக்குத் தான் வந்திருக்கோம்" என்றான் அவளது விருந்தாளிகளிடம் பார்வையைப் பதித்து.

"ஹேய், நான் உங்களைக் கூப்பிடவே இல்லையே" என்றாள் உமாவும் சளைக்காத நேர் பார்வையுடன்.

"உமா" என தேவேந்திரன் அதட்டினான் என்றால் "ப்ளீஸ் உமா" என அவள் கைகளைப் பிடித்து பின்னால் இழுத்து வந்தான் விஜய்ஆனந்த்.

"அவனுக்கு இங்க பார்ட்டின்னு எப்படித் தெரியும்? நீ சொன்னியா?" என பத்திர காளியின் மறு உருவாய் மாறி, அவன் மேல் சாமியாடிக் கொண்டிருந்தவளை ஒரு கெஞ்சல் பார்வை பார்த்து "சாரி உமா, இன்னைக்கு வேற பார்ட்டிக்கு அவங்க வர சொன்ன போது, வேற வழி தெரியாம சொல்லிட்டேன். இவன் இப்படி வந்து நிற்பான்னு நான் எங்க கண்டேன்" என தோழியை சமாதானம் செய்தவன், சாமியை மலையேற்றுமாறு தனசேகரனிடம் கண்களாலேயே வேண்டினான்.

சாமியின் ஆட்டம் எல்லை தாண்டி, அருகில் இருந்த மூன்றாம் மனிதர்களின் பார்வையை அதன் புறம் திருப்பி விடுமோ என்றஞ்சிக் கொண்டிருந்த தனசேகரனும், விஜயின் செய்தியை கப்பென பிடித்துக் கொண்டு "அவங்களும் வரட்டும் உமா" என தன் பங்கு சம்மதம் / சமாதானத்தைப் பறக்க விட்டான்.

சாமியின் காதுகளில் அது விழுந்ததோ இல்லையோ, வீர பத்திரன் போல் உஷ்ணப் பார்வையோடு நின்றிருந்த தேவின் காதுகளிலும் விழுந்து தொலைத்தது.

தன் கோபம் முழுதையும் கண்கள் வழியாக விஜயின் மீது கொட்டியவள், தொடர்ந்து ஒன்றும் பேசாமல் அமர்ந்திருந்த இடத்தில் சென்று தன்னை இருத்திக் கொண்டாள்.

டென்னிஸ் விளையாட்டைப் பார்ப்பது போல், அவர்கள் பேசுவதையே மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த பவித்ராவிற்கு விஜய்க்கும், உமாவிற்கும் உமாவின் அண்ணனைப் பிடிக்கவில்லை என்பதோடு, தனது அண்ணனுக்கும் அவனைப் பற்றி தெரிந்திருக்கிறது என்பது பெரும் வியப்பாய் இருந்தது.

Property of Bhuvana

அவளைப் பொறுத்த வரை, அண்ணன் என்பவன் ஒரு நல்ல தோழன், வழிகாட்டி. மேலும் அண்ணனிடம் தான் போடும் செல்லச் சண்டைகளுக்குக் கூட நிமிடக் கணக்கில் அவகாசம் தான். இங்கே என்னடா வென்றால், எதிரி நாட்டு ஒற்றனை தன் அரசவையில் கண்ட மன்னனைப் போல் சிலிர்த்துக் கொண்டு சண்டைக்கு நிற்கிறார்களே என்றிருந்தது.

தங்கையின் சீற்றத்திற்குப் பதில் சீற்றத்தைத் தானும் காட்டுவேன் எனும்படியாக அமைந்தது தேவேந்திரனின் அடுத்தக் கட்ட பேச்சுக்கள்.

"ச்சி போடி, நீ பார்ட்டி தரலைன்னா எங்களால இங்க சாப்பிடவே முடியாதா? "எங்களையும் இவங்களை மாதிரி பஞ்சப்பரதேசிங்கன்னு நினைச்சியா? உன்னை விட எனக்குத் தான் அப்பா ஜாஸ்தி பணம் அனுப்புறாங்க தெரிஞ்சுக்கோ" என்று கத்தியவன், உமா மேலே எதுவும் பேசும் முன்னர், அவன் கன்னத்தை அழுந்தப் பிடித்தான்.

தனசேகரனும், விஜயும் அவன் கைகளிலிருந்து உமாவை விடுவிக்க மௌனப்போராட்டம் நடத்த, அதையும் மீறிக் கொண்டு "ஆமா, இவன் யாரு புதுசா இருக்கான்? என்ன லவ்வா? தொலைச்சிருவேன் தொலைச்சு" என அடுத்த விஷத்தைக் கக்கினான்.

"பெரிய இவனாடா நீ? தொலைச்சிருவியா? போ உன்னோட பணத் திமிரை முதல தொலைச்சுத் தொலை" என உமாவும் திரும்பக் கத்தினாள்.

"தேவ், திஸ் இஸ் தி லிமிட். அவளை விடுறியா இல்லையா?" என்ற விஜய் அவனது தோளை பற்றி ஒரு புறம் இழுக்க, தனசேகரன் உமாவை அந்தப் பக்கம் விலக்கித் தன்னோடு சேர்த்து நிறுத்திக் கொண்டான்.

"ஆமா மிஸ்டர்.தேவேந்திரன். நானும் உமாவும் விரும்புறோம். உமாவோட படிப்பு முடிஞ்சதும் கல்யாணம். முடிஞ்சா வந்து வாழ்த்திட்டுப் போங்க" என தனசேகரன் தலை நிமிர்த்திக் கூறவும்

Property of Bhuvana

"ஹோ, அப்படிப் போகுதா விஷயம்? கூடப் பிறந்த அண்ணன் முன்னாடியே ஒருத்தன் இப்படி சொல்ற அளவுக்கு நீ நடந்துக்கிற,என்ன நெஞ்சழுத்தம்டி உனக்கு? எல்லாத்துக்கும் சேர்த்து ஒரு பெரிய ஆப்பா வைக்கிறேன் இரு" என்று தேவ் மீண்டும் தன் வெறியை அவர்களிடம் காட்டினான்.

"என்ன அப்பா-அம்மா கிட்ட சொல்லப் போறியா? ரொம்ப நல்லது. சீக்கிரமே சொல்லிடு. எனக்கு ஒரு ஃபோன் கால் மிச்சம்" என அலட்சியமாய் தலையைச் சிலுப்பினாள் உமாதேவி.

தந்தையிடம் கூறி, வேறு விதத்தில் பிரச்னை செய்யலாம் என்றெண்ணிக் கொண்டிருந்த தேவிற்கு உமாவின் பதில் ஆத்திரமூட்டியது "அவ்வளவு திமிர் ஆகிடுச்சா உனக்கு?" என்று தன் கையாலாகத்தனத்தை வார்த்தையால் கொட்டியவன், தனாவின் மறுபக்கம் நின்றிருந்த பவித்ரா மேல் தன் பார்வையைத் தற்செயலாகத் திருப்பினான்.

ஒரு வெற்றி பார்வையை உமாவிடம் செலுத்திவிட்டு, "நீ இவனைக் கல்யாணம் பண்ணிகிறதா முடிவு பண்ணிட்டே இல்லையா? நானும் அவன் தங்கையை கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவு பண்ணிட்டேன். ஹ்ம்ம் தங்கச்சி தானே, இல்ல இன்னொரு ஃபிகரா?" என்றவன் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பவித்ராவைத் தன் பக்கம் இழுத்து, மூர்க்கத் தனமாக அவள் தோள் மேல் தன் கைகளைப் படரவிட்டான்.

அவனது அந்த செயலில் பொங்கி எழுந்த இரு ஆண் சிங்கங்கள் "டேய்" என்று ஒரு சேர கர்ஜித்து, ஏற்கனவே திமிறிக் கொண்டிருந்த பவித்ராவை அவனிடமிருந்து பிரித்து எடுத்தனர்.

"தேவ், இது கொஞ்சம் கூட நல்லா இல்ல. தயவு செஞ்சு வெளிய போ" என அடிக்குரலில் கண்களில் சீற்றம் மின்ன விஜய் எச்சரிக்க,

Property of Bhuvana

"ஆஹா, விஜய்க்குக் கூட கோபம் வருதுடா மச்சான். என்னடா நீயும் அந்த ஃபிகரும் சைடு ட்ராக்கா?" என அம்பலத்தில் வைத்துக் கொச்சை மொழிகளை உபயோகப் படுத்தினான் தேவ்.

"தேவ், ஏன்டா இப்படி பொறுக்கி மாதிரி நடந்துக்கிற? தயவு செஞ்சு போய்டு" என்று விஜய் பொறுமை இழந்து கூறவும்

"இதென்ன உன் வீடா? நீ போ என்ற உடனே போறதுக்கு?" என்று அலட்சியமாகக் கூறிய தன் நண்பன் ஸ்டீவனை கட்டி அணைத்துக் கொண்டான் தேவ்.

ஆனால் அவர்கள் வெளியேறுவதற்கு காத்திராமல், தனசேகரன் அரண்டு போயிருந்த தங்கையை அழைத்துக் கொண்டு வெளியே சென்றுவிட, உமா அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

அவர்களைப் போகவிட்டு, அடுத்து வரும் நண்பர்களிடம் அன்றைய பார்ட்டி ரத்தானதைக் கூறிவிட்டு அடக்கிய சினத்தோடு விடுதி அறைக்கு வந்த விஜய்க்குத் தன்னைப் போல் தேவும் இதை மனதிலேயே வைத்திருப்பான், வைத்திருப்பதோடு நில்லாமல் ஒரு சந்தர்ப்பத்தில் பழியும் தீர்த்துக் கொள்வான் என்ற எண்ணமே இருக்கவில்லை.

## மௌனமொழி – பாகம் 19

உமாவின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள்(!) முடிந்து, சினமேறிய நெஞ்சோடு விடுதியை அடைந்த விஜயை, பவித்ராவின் அரண்ட முகமும், கலங்கிய பார்வையும் மாறி மாறி வந்து வாட்டி வதைத்ததோடு நில்லாமல், படுக்கையில் விழுந்த அவனின் கண்களிலிருந்து தூக்கத்தை சூறையாடிப் போயின.

விடியல் வரை விழித்திருந்த விஜய், முதல் காரியமாக உமாவின் கைப்பேசி எண்களைத் தனதில் அழுத்தியவன், அந்தப் பக்கம் "என்ன?" என்ற ஒற்றைச் சொல் பதிலாய் வரவும், உமாவின் கோபம் இன்னமும் குறையவில்லை என்பதை வருத்தத்துடன் உணர்ந்தான்.

"சாரி உமா" என அவன் தழைந்தே பேசிய போதும் உமாவின் கோபம் அரை மணி நேரத்திற்கு மேலாக நீடித்தது. முடிவில் "என்ன உமா? தெரியாம ஒரு தப்பு, அதுவும் தப்பு என்று தெரியாமல் செஞ்சுட்டேன். அது தான் சாரி சொல்றேனே!" என விஜயின் அலுத்து சலித்தக் கொண்டதும் தான் சற்றே இறங்கி வந்தாள் உமா.

அவள் இறங்கி வந்தது அவள் மௌனத்தில் அவனுக்குப் புரிய, "ஹப்பா, ஜிங் ஜிங்ன்னு நேத்திக்கு ஆட ஆரம்பிச்ச சாமி இன்னைக்கு ஸ்லொவ் மோஷன் டான்ஸ்க்கு வந்துடுச்சு. ஆனாலும் கால் வலிக்கலையா உமா?" என விஜய் சட்டென கிண்டலடிக்கவும்

"அடிங்க, மகனே நீ மட்டும் என் கையில கிடைச்சே உனக்கு சமாதி தான். என்னோட பர்த்டேவை கெடுத்து கவுத்துட்டு பேச்சு வேற பேசுற நீ?" என்று அவனிடம் பாய்ந்த உமாவும் முடிவில் சிரித்தாள்.

அவளது சிரிப்பில் மகிழ்ந்த விஜய் மெல்ல விஷயத்திற்கு வந்து சேர்ந்தான். "பாப்... பவித்ரா எப்படி இருக்கா உமா?" என்றவனுக்கு உடனடி பதிலாக "அவ எப்படி இருந்தா உனக்கென்ன?" என்ற கேள்வி கோபம், குறுகுறுப்பு, ஆர்வம் என்ற முலாம்கள் எல்லாம் பூசி வந்து விழுந்தது.

"நேத்து அவ முகமே சரியில்லையேன்னு கேட்டேன் உமா. ரொம்ப பயந்து போய்ட்டாளோ?" என உள்ளிருந்த அரிப்பு வெளியே கேட்டுவிடாத வண்ணம், நண்பன் கேட்கவும்

"வீட்டுக்குப் போனதும் சரியாகிட்டா" என்றாள் உமா.

"இன்னைக்கு காலேஜ் வருவாளா உமா? உனக்கு ஏதும் தெரியுமா?" என விஜய் விசாரிக்க,

"எதுக்கு?" என்ற ஒரு சொல்லிலேயே தன் வியப்பை வெளிப்படையாக வெளியிட்டாள் உமா.

Property of Bhuvana

"ஹ்ம்ம்" என அமைதி காத்த விஜய், "சரி, நான் காலேஜ் கிளம்புறேன். மதியமா பார்க்கலாம்" என கைப்பேசியை வைக்கப் போனான்.

"ஹே ஹே நில்லு. நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதிலே வரலையே கண்ணா?" என உமா பதற,

"ஹான் நீ மட்டும் சொன்னியாக்கும். போ போ போய் வேலை ஏதாவது இருந்தா பாரு" என எரிச்சலை வெளிப்படையாகவே காண்பித்து விட்டுத் தன் வேலைகளில் மூழ்கிப் போனான் விஜய் ஆனந்த்.

சரியாக ஏழரை மணிக்குத் தன் அறையை விட்டு வெளியே வந்த விஜய், நேரே சென்றது கல்லூரியின் நுழைவு வாயிலுக்கு.

நுழைவு வாயில் அருகிலிருந்த பெஞ்ச் ஒன்றில் அமர்ந்த விஜய், வாயிலின் மேல் பார்வையைப் பதித்த வாறே கையிலிருந்த புத்தகத்தைப் புரட்டினான்.

அவன் தேடிய நபரின் வருகை, எட்டாகியும் நிகழாமல் போகவே, கவலை படிந்த முகத்தோடு எழுந்தவனின் கண்களில் பவித்ரா தன் வெள்ளை நிற ஸ்கூட்டியை லாவகமாக செலுத்தியவாறே வருவது பட்டு, மகிழ்ச்சியை வரவழைத்தது என்றால் அவள் பின்னே, சிறு இடைவெளி விட்டு தனசேகரன் தன் வண்டியில் வந்தது வியப்பை ஏற்படுத்தியது. அந்த வியப்பின் விளைவாக "இவ்வளவு தூரம் தங்கையை போற்றி, பாதுகாத்து வைத்துக் கொள்பவன், உமாவையும் நன்றாகவே வைத்துக் கொள்வான்" என்பது தான்.

பவித்ராவின் வருகையும், உமாவைப் பற்றிய சந்தோஷமும் மனதில் நிம்மதியை நிரப்ப தன் வகுப்பறை நோக்கி விரைந்தான் விஜய். அதன் பின்னர் யாரைப் பற்றியும் நினைக்கவிடாத வண்ணம் வேலைகள் குவிந்தன. மதிய உணவின் போது, பற்களை சீரமைக்கும் வண்ணம் furnace ஒன்றில் முன்னால் அமர்ந்து தன் வேலையை விஜய் கவனித்துக் கொண்டிருந்த போது கைப்பேசி சிணுங்கியது.

கை வேலையை விட்டுவிட்டு வர முடியாத விஜய், அதை கவனத்தில் கொள்ளாமல் இருக்க, மீண்டும் மீண்டும் அவனது கவனத்தைக் கலைத்தது உமாவின் அழைப்பு.

அவசரமாக கைப்பேசியை உயிர்ப்பித்து "உமா, கேஸ் பார்த்துட்டு இருக்கேன்மா" என்று கூறியவன், அதே வேகத்தில் அணைக்கவும் செய்தான்.

வேலை முடிந்ததும் மீண்டும் தோழியை அழைத்து "எங்க இருக்க?" என்றான். "அர்ச்சனாஸ்ல" என்று அவளும் சுருக்கமாக பதில் சொல்லிவிட்டு அங்கே விரைய, உமா தன் உணவின் பிற்பகுதியில் இருந்தாள்.

தனியாக அமர்ந்திருந்தவள், அவனைக் கண்டதும் "ஹே, கொஞ்சம் முன்னாடி வந்திருக்க கூடாது? பவி இப்போ தான் கிளாஸ்க்குப் போறா" என்றாள் இயல்பாக.

"ஹோ, முன்னாடியே ஃபோன் பண்ணி இருக்க வேண்டியது தானே? என்ன பண்ணிட்டு இருந்தே? ச்சே மிஸ் பண்ணிட்டேனே!" என விஜய் தன் படபடப்பை சிறிதும் மறைக்காமல் அவளிடம் காட்ட, அவன் பின்னாலிருந்து "என்ன ஆச்சு விஜய்? எதுக்கு இவ்வளவு டென்ஷனா இருக்கீங்க?" எனக் கேட்டது பவித்ராவே தான்.

நமட்டுச் சிரிப்புடன் பார்த்திருந்த தோழியை அசட்டுச் சிரிப்புடன் எதிர் கொண்ட விஜய் "காலையில இருந்து சாப்பிடல. அது தான்..." என வாய்க்கு வந்ததைக் கூறி பவித்ராவின் கேள்வியை முடித்தான்.

"ஹோ, அப்போ சாப்பாடு வாங்கிட்டு வாங்க. நாங்க வெயிட் பண்றோம்" என்று அவனை உணவு வாங்க அனுப்பிவிட்டு "அண்ணி, இன்னைக்கு நான்..." என்று உமாவிடம் பேசத் தொடங்கிவிட்டாள் பவித்ரா.

உணவு வாங்கவென லைனில் நின்றவன், சட்டென தோழியின் எண்ணிற்கு அழைத்து, முன் தினம் நடந்ததைப் பற்றி கிண்டி கிண்டிப் பேசாமல் விட்டுவிடும் படி அறிவுறுத்திய போது, உமாவின் நமட்டுச் சிரிப்பும், குறுகுறு பார்வையும் அளவுகோலில் அளக்க முடியாத வண்ணம் உயர்ந்து விரிந்தன.

உணவின் போது, விஜய் ஒரு சின்னத் தூண்டுகோலாய் "அவள் ஏன் மருத்துவம் எடுத்தாள்?" என்ற சிறு கேள்வியை பவித்ராவின் புறம் வைக்க, அதுவே அவளைத் திசைத் திருப்ப எதுவாக இருந்தது.

மருத்துவத் துறையின் மேல் தனக்கு இருக்கும் ஆர்வமும், +2 தேர்வுகளில் மிக நல்ல மதிப்பெண்களைப் பெறாததால் அரசு மருத்துவக் கல்லூரிகளில் நுழைய முடியாமல் போனதையும், அதன் பின்னர் உமாவின் பரிந்துரையின் பெயரில் தனசேகரன் இந்தக் கல்லூரியில் அவளைச் சேர்ப்பதற்கு முடிவு செய்ததும், தந்தை நன்கொடையாக நிறையத் தொகை கொடுக்க வேண்டி வருமே என்று தயங்கியபோதும் தளராமல் அவளை இங்கு சேர்த்துப் படிக்கவைப்பதும் என்று அவளுக்குப் பேச ஆயிரம் ஆயிரம் விஷயங்கள் இருந்தன. நடுநடுவே, தன் வரலாறு என்ற பெயரில் அண்ணனின் புகழாரத்தையும் மறக்காமல் பாடினாள் பவித்ரா.

விஜய்க்கு அவள் பேசிய விஷயங்கள் முக்கியமாகப் பட்டதோ இல்லையோ, அவற்றை கூறும் போது அவள் விழிகள் ஆடிய நாட்டியத்தையும், அவள் பிடித்த அத்தனை அபிநயங்களையும் கண்டு அவற்றை மனதில் நிறைப்பது முக்கிய வேலையாகப்பட்டது.

அதன் பின்னர், ஒவ்வொரு நாளும் மெஸ் சாப்பாட்டை புறம் தள்ளிவிட்டு, மதிய உணவு வேளைகளைப் பவித்ராவுடன் கழிக்க ஆரம்பித்தான் விஜய். பவித்ராவின் கைப்பக்குவத்தில் செய்து எடுத்து வரப்படும் உணவை முதலில் ருசிக்காக சுவைத்துக் கொண்டிருந்தவனுக்கு, சில காலங்களில் தனியாக ஒரு டப்பாவில் உணவு வர ஆரம்பித்தது!

"நீங்களே நான் கொண்டு வர லஞ்ச் எல்லாம் சாப்பிட்டு காலி பண்ணிடுறீங்க இல்லையா, அதனால் நான் நாளுக்கு நாள் துரும்பா இளைச்சிட்டே வரேன்னு தச்சு ரொம்ப வருத்தப்பட்டானா? அது தான் உங்களுக்கும் ஒரு பார்சல்" என பெரிய விளக்கத்தோடு தான் அதுவும் கொடுக்கப்பட்டது.

கட்டிக் கொடுத்த சோறும், பூட்டி வைத்தக் காதலுமாய் விஜயின் நாட்கள் சந்தோஷமாகவே கழிய, அதில் ஒரு தடைக்கல்லாய் அமைந்தது தேவின் ஊடுருவல்.

Property of Bhuvana

உமா, விஜய், பவி - இவர்கள் மூவரும் ஒன்றாய் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த ஒரு மாலை வேளையில் அவர்கள் அமர்ந்திருந்த டேபிளுக்கு வருகை புரிந்தான் தேவேந்திரன். அத்தோடு நிற்காமல் "சாரி மிஸ்.பவித்ரா" என்று மன்னிப்பும் வேண்டினான்.

அவனைக் கண்டதும் அரண்டு போயிருந்த பவித்ராவும், கொதித்துப் போயிருந்த நண்பர்கள் இருவரும் இப்போது வியந்து, அதன் பின்னர் சற்று சந்தேகத்துடன் பார்த்தனர்.

"ஹேய் என்ன அப்படிப் பார்க்கிறீங்க? நானே தான் பவித்ராகிட்ட சாரி கேட்டது" என்று நல்லவன் போல் முகத்தை வைத்துக் கொண்டு மூவரிடமும் நட்பு கரம் நீட்டியவனை, அப்போதும் சந்தேகமாகவே பார்த்தாள் உமா.

ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், அன்று தான் நடந்து கொண்டதற்கு மனம் வருந்தி மன்னிப்பு கேட்பதாகவும், அதற்குப் பிரியாசித்தமாய் உமாவின் பிறந்த நாள் அன்று நடக்கவிருந்த விருந்தை தானே மீண்டும் கொடுப்பதாகவும் கூறினான்.

“ஒரு மண்ணும் தேவையில்லை. உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போ." என உமா முகத்தில் அடித்த மாதிரி பதலடி கொடுக்க, விஜய் பதிலேதும் பேசாமல் அமர்ந்திருந்தான். அவனுக்குப் பவித்ராவின் மனநிலையை எண்ணிக் கலக்கமாகவே இருந்தது.

ஆனால் அதற்காக தேவிடம் சண்டைக்கு நிற்கப் போய், அவள் மறந்திருக்கும் ஒன்றை தானே கிளறிவிடக் கூடாது என்றெண்ணியவன், நிலைமை கை மீறினால் பெண்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு நகர்ந்து விட வேண்டும் என்று முடிவு செய்தான். இவனுடன் சண்டைப் போட்டால், இழுக்கு நமக்குத் தான் என்று வரும் போது, எதற்கு வீணாக மல்லுக்கட்ட வேண்டும் என்று விஜய் எண்ண, உமாவோ சண்டைக் கோழி போல் சிலிர்த்துக் கொண்டு சண்டைக்கு ஆயத்தமானாள்.

ஆனால் அவனோ உமாவின் நிராகரிப்புகளை பொருட்படுத்தாமல், மீண்டும் மீண்டும் அவர்களிடம் நட்பு கரம் நீட்டினான். அவன் விஜயை தனியாக அணுகி, தான் செய்தது தவறு என்று வெளிப்படையாக ஒத்துக் கொண்ட போதும், விஜயால் அவனது அன்றைய செயலையும், பேச்சுக்களையும் மறக்க முடியவில்லை.

தேவின் படையெடுப்பு நாளொரு வித மன்னிப்பும், பொழுதொரு வேண்டுதலுமாக தொடர்ந்து கொண்டிருக்க, மூவரது மனமுமே மன்னிப்பு கேட்போரை மன்னிக்காமல் இருப்பதும் ஒரு வகை குற்றம் தான் என்று ஒரு நியாயத்தைக் கற்பித்துக் கொண்டு அவன் நீட்டிய நட்பு கரத்தை லேசாக பற்ற ஆரம்பித்தனர். என்ன தான் அவன் கூறிய மன்னிப்பில் மனம் இலகினாலும், யாருமே அவன் வைக்கிறேன் என்று கூறிய விருந்திற்குப் போவதில் விருப்பம் காட்டவில்லை.

தேவும் தனது வருத்தத்தை வெளிப்படையாகக் காட்ட, மூவருக்கும் லேசாக உருகத் தான் செய்தது.

ஆனால் தனசேகரன், பிடிவாதமாய் மறுக்க பவித்ரா முகம் சுளித்தாள் என்றால், உமா அவன் கூறியதை வேத வாக்காய் எண்ணி அண்ணன் கொடுக்கிறேன் என்று கூறிய விருந்திற்கு தலை அசைக்கவே இல்லை.

இப்படியாக நாட்கள் கழிய, தேவின் முந்தைய நடவடிக்கைகளால் எழுந்த கோபம் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்து, அவர்களது மேற்படிப்பு முடியும் தருவாயில் அவனிடம் சகஜமாக பழகும் நிலைக்கு அழைத்து வந்தது.

எழுத்து தேர்வுகள் முடிந்து, செய்முறை தேர்வுகளுக்காக விஜய், உமா, தேவ் மூவரும் காத்திருந்த சமயம், தங்கையின் ஸ்கூட்டி சர்வீசில் இருந்ததால் அவளைக் கல்லூரியிலிருந்து அழைத்துச் செல்லவென்று தனசேகரன் வந்து சேர்ந்தான்.

வந்தவன் அவன் வருகை அறிந்து, அவனுக்காகக் காத்திருந்த உமாவிடம் பேசிக் கொண்டிருக்க, தேவ் எங்கிருந்தோ அங்கே வந்து சேர்ந்தான். தனாவின் கைகளைப் பிடித்து மன்னிப்பு வேண்டியவன், "எங்க வீட்டு மாப்பிள்ளை ஆகப் போறீங்க,

Property of Bhuvana

வாங்க வந்து எங்களோட ஒரு காபி சாப்பிட்டுப் போங்க" என்று அவன் மறுக்க மறுக்க கேளாமல் மீண்டும் மீண்டும் வற்புறுத்தினான்.

உமாவின் கண்களிலும் லேசான ஏக்கம் தென்படவே, தனசேகரன் அவனது அழைப்பை ஏற்று அன்றைய மாலை காபியை அவன் செலவில் குடிக்க, அப்போது அவர்களது திருமணத்திற்குத் தான் எல்லா விதத்திலும் உதவி செய்வதாகக் கூறியவன், இத்தனை நாட்கள் தன் தங்கையை அலட்சியமாக நடத்தியதற்காக வருந்துவதாகவும், இந்த காரியத்தால் தங்கையின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்த முயல்வதாகவும் கூற, தனசேகரனுக்கும் "ஹ்ம்ம் மாறித் தான் போய் விட்டான்" என்று தோன்றியது.

இயல்பான பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்க, "உங்களுக்கு உமாவை எப்படித் தெரியும்? எப்போதிருந்து காதல்?" என்று அவர்களது முடியாக் காதலின் ஆரம்பம் கேட்டான் தேவ்.

தங்கையாய் பிறந்திருந்தாலும், அண்ணனுக்கு என்றும் நான் தோள் கொடுப்பேன் என்பது போல் உமா-தனா இருவரும் கொலுவில் பேசிக் கொண்டதும், தனா அடுக்கியிருந்த பொம்மைகளை உமா சீராக்கியதும் என்று பவித்ரா அழகான ஒரு படத்தை, அங்கங்கே சில பிட்டுகளை அள்ளித் தெளித்து அவர்களின் பார்வைக்கு விருந்தாக்கினாள்.

"ஹ்ம்ம் நைஸ்" என்று புருவம் உயர்த்திய தேவ், "உங்களுக்கு எப்படி ஏதாவது இருக்கா மிஸ்.பவித்ரா? கண்டதும் காதல்?ம்ம்" என்றான் ஒரு விதமான பார்வையோடு.

சற்றே திடுக்கிட்டவள், சட்டென அண்ணனை ஏறிட்டு "அப்படியெல்லாம் இல்லை தச்சு" என்றால் அழாக் குறையாக.

"ச்சே ச்சே, நான் கேட்கவே இல்லையே டா. மிஸ்டர் தேவேந்திரன் தானே கேட்டார்" என தனசேகரன் லேசாய் புன்னகை பூக்க,

Property of Bhuvana

"இன்னும் என்ன மச்சான் மிஸ்டர் போடறீங்க? தேவ்ன்னு கூப்பிடுங்க" என்றான் தேவ் உரிமையோடு.

"ம்ம் சரி" என தனசேகரன் கூற, மீண்டும் பவித்ராவிடம் அவள் காதலை அவன் குடைய, அவள் அடித்து மறுத்தாள்.

"ஹ்ம்ம், அப்போ பேருக்கு ஏற்ற மாதிரி பவித்ராவாவே இருக்கீங்கன்னு சொல்லுங்க" என தேவ் உள்ளர்த்தம் வைத்து வினவ,

"லவ் பண்ணா பவித்ரம் போயடுமாக்கும்?" என்று அவனிடம் சண்டைக்கு வந்தவளை, "அப்போ எப்போ உங்க பவித்ரம் போகும்? போக வழியே இல்லையோ?" என்று எதிர் கேள்வி கேட்டான் தேவ்.

"ஆமா" என ஆணித் தரமாக கூறியவள், அவனைத் தலை நிமிர்த்தி நேர் பார்வையாய் பார்க்கவும் தயங்கவில்லை.

அதன் பின்னர் பேச்சு திசை மாறி (மாற்றப்பட்டு) தேர்வுகள், அதன் பின்னான திட்டங்கள் என்று வளம் வர, தேவேந்திரன் தாங்கள் மேற்படிப்பை முடிக்கும் நாளில் ஒரு பெரிய விருந்திருக்கு ஏற்பாடு பண்ணி இருப்பதாகவும், அதற்கு கண்டிப்பாக தனசேகரன் வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான்.

தனசேகரனின் முகம் சட்டென கருத்துவிட, அவனின் மறுப்பு வார்த்தையின்றி வெகுத் துல்லியமாக வெளியே தெரிந்தது.

"என் தங்கையையும், அவளது வருங்கால கணவன் மற்றும் குடும்பத்தையும் என் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தலாம்ன்னு நான் கூப்பிட்டா ரொம்பத் தான் பிகு பண்றீங்களே மாப்பிள்ளை" என தேவ் குறைபட, உமாவும் "வாங்க தனா ப்ளீஸ்" என்றாள்.

தனசேகரன் பதிலேதும் பேசாமல் இருக்க, பவித்ரா இடையில் புகுந்து "அண்ணியோட அண்ணனும் ரொம்ப நாளா கூப்பிட்டிட்டு இருக்காங்க இல்ல அண்ணா? போலாம்ண்ணா" என்றாள் கெஞ்சலாக.

property of Bhuvana

அப்போதைக்கு சரி என்று ஒத்துக் கொண்டு தனசேகரனுக்கு பெரிய கெட்டக் காலமாய், தேவின் விருந்தன்று வேலையிடத்தில் ஒரு இக்கட்டான சூழ்நிலை முளைத்து, அவனை வரவிடாமல் செய்தது.

அவன் வராததால் பவித்ராவும் போகவேண்டாம் என தனசேகரன் கூறிவிட, உமா தான் " நான் அவளைப் பார்த்துக்க மாட்டேனா தனா?என் மேல நம்பிக்கையில்லையா? விஜயும் கூட வரான். அதனால கவலை வேண்டாம் தனா. எங்க ரெண்டும் பேரையும் பத்திரமா வீட்டுல சேர்க்காம அவன் ஹாஸ்டல் போக மாட்டான் போதுமா?" என்று அவனைக் கரையாய் கரைத்து, ஒரு வழியாக சம்மதம் வாங்கினாள்.

ஆனால் இந்தப் பேசுக்காக காலம் முழுதும், இல்லை ஏழேழு ஜென்மதிற்குத் தான் வருந்தப் போவது தெரியாமல் உமா, விஜய் இருவரும் பவித்ராவை அழைத்துக் கொண்டு பார்ட்டி நடந்த ஹோட்டலுக்குச் சென்றனர்.

தனசேகரனின் வீட்டிற்குச் சென்று, பவித்ராவை அழைத்துக் கொண்டு உமா லீ ராயல் மெரிடியன் வந்து சேர்ந்த போது, உமாவின் பிறந்த தினம் போலவே விஜய் அவர்களுக்காக அங்கே காத்திருந்தான்.

அடர் சிகப்பு நிற லாங் ஸ்கிர்ட்டும், தூய வெள்ளை நிறத்தில் சிகப்பு நிற பூ வேலைப்பாடு செய்த மேலாடையுமாக வந்திறங்கிய பவித்ராவின் மேலிருந்து விஜயால் கண்ணை எடுக்கவே முடியவில்லை.

நண்பனின் பார்வை நாத்தனாரின் மேல் அழுத்தமாய் விழுவதை உணர்ந்த உமா, லேசாக கனைத்துத் தான் இருப்பதை உணர்த்தினாள். "நிம்மதியா ரெண்டு நிமிஷம் பார்க்க விடமாட்டியே?" என மெல்ல முணுமுணுத்தவனின் முதுகில் ஓங்கி வைத்து "ஹே நீ வர வர ரொம்ப ஓவரா போற, அவ என்னோட பொண்ணு மாதிரி தெரிஞ்சுக்கோ. பொண்ணோட அம்மாகிட்ட பேசற மாதிரி மரியாதையா பேசு" என செல்லமாக மிரட்டிய உமாவிற்கு, தன் குழந்தைக்கு விஜய் போல் ஒரு மணாளன் வருவதில் பரம சந்தோசமே!

பவித்ராவை முன்னே நடக்கவிட்டு, பின்னாடி நடந்து கொண்டிருந்தனர் இருவரும். அப்போது "விஜய், நீ சீரியஸ்சா தானே இருக்கே?" என்றாள் உமா சிறு சந்தேகத்துடன்.

"எதுல?" என விஜயும் புரியாத மாதிரி நடிக்க, "டேய்" என அவள் பல்லைக் கடிப்பது துல்லியமாய் புரிந்தது.

அதற்கு மேல் வம்பு வளர்க்காமல் (வளர்க்கத் தெரியாமல்), கைகளை மேலே உயர்த்திய விஜய் "மனதார! ஊருக்குக் கிளம்பிரதுக்கு முன்னாடி தனாகிட்ட பேசலாம்ன்னு இருக்கேன்" என்றான்.

அவன் தனாவிடம் பேசுகிறேன் எனக் கூறியதும், "பவிக்குத் தெரியுமா? அவ என்ன சொன்னா?" என அவசரமாக வினவிய உமாவிடம் "அவ சின்னப் பொண்ணு உமா.

Property of Bhuvana

சொல்லப் போனா அழகான துரு துரு குழந்தை. அவகிட்ட போய் காதலைத் தினுச்சு... கொஞ்ச நாள் ஆகட்டும் உமா" என்றான் விஜய் மென்மையாக.

"ஓவர் உருகலா இருக்கே" என்று சிரித்த உமாவிற்கும், அவன் பவித்ரா மேல் வைத்திருந்த அக்கறை பிடிக்கத் தான் செய்தது.

அவர்களது அந்த சிரிப்பும், ஆனந்தமும் தொடர்ந்து ஒரு மூன்று மணி நேரத்திற்கு நீடிக்க கடவுள் அனுமதி கொடுத்தார்.
அந்த மூன்று மணி நேரத்தில் மூவாயிரம் முறை பவித்ரவைக் கண்களால் வளம் வந்து முடித்தான் விஜய். உமாவும் அவள் தோழிகளுடன் பவித்ராவை இணைத்துவிட, அங்கே பேச்சிற்குப் பஞ்சமில்லாமல் இருந்தது!

தேவின் நண்பர்களில் ஒருவனான நிலேஷ், விஜயை நெருங்கி "என்ன மாப்பிள்ளை, எப்போ பார்த்தாலும் பொண்ணுங்க பக்கமே கண்ணா இருக்க, எங்களையும் கொஞ்சம் கவனிக்கிறது" என்று வம்பிழுக்க, அதை சாதாரணமான உரையாடலாக எடுத்துக் கொண்ட விஜய், அவர்களுடன் இணைந்து கொண்டான்.

தேவின் பார்ட்டியில் மது இல்லாமலா என்பது போல் அங்கே மதுவின் ஆதிக்கம் மிக அதிகமாய் தான் இருந்தது. ஆனால் முன்றைய பார்ட்டிகளை போல் மித மிஞ்சிய மதுவின் உட்கொள்ளுததால் தடம் மாறி யாரும் பெண்களிடம் வம்பு செய்யவில்லை என்பதே விஜய்க்கு சற்று ஆறுதலைக் கொடுத்து, தேவின் மீது இருந்த கோபத்தை இன்னும் கொஞ்சம் குறைத்தது.

விஜய்க்கு மது அருந்தும் பழக்கம் முற்றிலும் கிடையாது என்று சொல்ல முடியாமல் அவனும் தன் கல்லூரி தினங்களில் மதுவை சுவைத்திருக்கிறான் தான். ஆனால் மிதமான போதையைத் தரும் பீர் அல்லது ரம் என்று உட்கொள்பவன், அதையும் தன் நிதானதிற்குள்ளேயே நிறுத்திக் கொள்வான்.

Property of Bhuvana

ஆனால் இப்போதோ ரெண்டு பெண்களை தன் பொறுப்பில் பார்ட்டிக்கு அழைத்து வந்துவிட்டு, மது அருந்துவதில் ஈடுபட அவனுக்கு விருப்பமில்லை.

தேவும், அவனது நண்பர்களும் பலவிதமாக அவனை வற்புறுத்திய போதும், அவன் நிர்ச்சனமாய் அதை மறுத்துவிட்டான். கல்லூரி முடிந்து அனைவரும் தத்தம் தொழில், மேற்படிப்பு என்று சிறகு முளைத்துப் பறக்கப் போவதால், தங்களுக்குள் இப்போதிருக்கும் "மாமா, மச்சான்" உறவை பிற காலத்திலும் தொடரும் வண்ணம் நண்பர்களிடம் கையெழுத்தும், தொடர்பு விவரங்களும் சேகரித்துக் கொண்டிருந்தனர்.

தன் நண்பர்களிடம் பவித்ராவை "தோழி" என்று அறிமுகம் செய்தவனை விசித்திரமாய், பின்னர் விஷமத்தனமாய் பார்த்தனர் அவனது நண்பர்கள். அவர்களைக் கண்களாலேயே அடக்கிவிட்டு பவித்ராவை அழைத்து வந்தவன், அவள் கேட்ட அவர்களது சரித்திரத்தை மெல்லவே அவளிடம் கூறினான்.

அவன் ஒரு கேள்விக்குப் பதில் கூறினால், அதில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு மறு கேள்வி கேட்டாள் அவள்.  அதற்கு அவன் "எவ்ளோ கேள்வி" எனத் தேவயாணி பாணியில் கண்ணை விரிக்க, "நான் முதல் கேள்வி கேட்கும் போதே ஒழுங்கா எல்லாத்தையும் சொல்லியிருந்தா நான் ஏன் வேற வேற கேள்வி கேட்கிறேன்? நீங்க சரியா பதில் சொல்லாம என்னைச் சொல்றீங்க?" என அவனை மடக்கினாள்.

இப்படியாக அந்த நாளின் பிற்பொழுது கழிய, பார்ட்டி முடிந்து அவர்கள் கிளம்பும் நேரமும் வந்து சேர்ந்தது. தேவ் மற்றும் அவனது நண்பர்கள் லேசான தள்ளாட்டத்துடன் இருக்க, உமா மற்றும் பவித்ராவை வரவேண்டாம் என்று

Property of Bhuvana

நிறுத்திவிட்டு, தான் போய் அவர்களிடம் விடை பெற்று வருவதாகக் கூறிய விஜய்ஆனந்த் அவர்கள் நின்றிருந்த பகுதிக்குச் சென்றான்.

விஜய் அவர்களுடன் பேசிவிட்டுத் திரும்புவதற்காக, உமாவும், பவித்ராவும் மது இருந்த இடத்தில் பார்வையைப் பதித்துக் காத்திருந்த சமயத்தில்,பவித்ரா ரெஸ்ட் ரூம் சென்று வருவதாகக் கூறி அங்கிருந்து நகர,

"நானும் வரேன் பவி" என அண்ணியாய் உமா அக்கறை காட்ட, "நான் என்ன பாப்பாவா? இங்க தானே அண்ணி, நானே போயிட்டு வரேன்" என்று அவள் தோளை அழுத்தி அமர வைத்தாள் பவித்ரா.

அந்த நாளின் கடைசி தடவையாக அவளைக் காணப் போகிறோம் என்று தெரியாமல் உமாவும் அவளை வழி அனுப்பி வைக்க, அதைத் தொடர்ந்து பற்பல அசம்பாவிதங்கள் அரங்கேறி முடித்தன.

பவித்ரா சென்று இரண்டு நிமிடதிற்கெல்லாம் தனாவின் அழைப்பு வந்து விட, "இன்னும் கொஞ்ச நேரத்தில் கிளம்பிடுவோம் தனா, விஜய் வந்ததும் கிளம்ப வேண்டியது தான்" என்றாள் உமா.

"விஜய் எங்க? மணி ஒன்பதாகிடுச்சு உமா!" என தனா பரபரக்க,

"இங்க தான், அண்ணாகிட்ட பேசிட்டு இருக்கான்." என்று உமா தாமதமாகிய குற்றத்தில் திணற,

" ஹ்ம்ம் சரி, சீக்கிரம் கிளம்பி வாங்க. பவியை வீட்டில விடுறீங்களா? இல்ல நான் உன் ஹாஸ்டல் வந்து பிக் அப் பண்ணிக்கட்டுமா?" என்று தனா தன் கேள்வியை வெளியிட, "நாங்க அவளை வீட்டில விட்டுட்டே ஹாஸ்டல் போறோம். நீங்க பதறாதீங்க, நாங்க வந்துடுறோம்" என்றாள் உமா அவசர சமாதானத்துடன்.

Property of Bhuvana

அரை மனதாக கைப்பேசியை வைத்த தனா, பதினைந்து நிமிடத்தில் மீண்டும் அழைக்க அப்போதும் உமா அதே பதிலைக் கூறி, அவனைப் பல்லைக் கடிக்க வைத்தாள்.

தனாவின் கோபம் கூடிய அளவிற்கு உமாவின் பதட்டம் அதிகரிக்க ஆரம்பித்தது. ஏனென்றால் பதினைந்து நிமிடங்களாகியும் பவித்ரா திரும்பி வந்த பாடாயில்லை!! கண்களில் பதட்டத்துடன் அவள் சென்ற திசையை பார்த்துக்

கொண்டிருந்தவள், ஒரு நிலைக்கு மேல் தனாவின் அடுத்த அழைப்பு வந்தால் பதில் சொல்ல முடியாது என்று தோன்றிவிட, பொறுக்காமல் ரெஸ்ட் ரூம் நோக்கி நடந்தாள்.

ஆனால் அவள் அங்கே சென்றதால் பெரிதாய் ஒன்றும் மாற்றம் நிகழ்ந்து விடவில்லை என்பதோடு, "பவி, பவி" எனத் துடித்த நெஞ்சத்தின் பதட்டத்தை நாவில் தேக்கி அவள் அழைக்க, பதிலேதும் வரவில்லை!

பவித்ரா அங்கே இல்லை என்பதை சில மணித் துளிகளிலேயே உணர்ந்த உமா, விஜய் இருந்த இடத்திற்கு, மதுவையும் மதிக்காமல் ஓடினாள்.

அவள் பதறி ஓடிவருவதைக் கண்ட விஜய், என்னவென்று விசாரித்ததோடு நில்லாமல் அவளது பதட்டத்தை தன்னிடம் இடம் மாற்றி கொள்ள முயன்றான்.

"நான் போய் பார்க்கிறேன் உமா, இங்க நிறைய இடத்தில ரெஸ்ட் ரூம் இருக்கு. வேற எதுக்காவது போயிருக்க போறா, நான் பார்க்கிறேன், நீ இங்கேயே இரு" என்று கூறியவன், அவள் தோள் பற்றி அங்கேயே நிறுத்திவிட்டு வேகமாக வெளியே ஓடினான்.

Property of Bhuvana

அவன் வெளியே ஓடவும், தனாவின் அழைப்பு உள்ளே வரவும் நேரம் சரியாக இருந்தது. "ஹலோ" என்ற உமாவின் குரலிலேயே பதட்டத்தை உணர்ந்த தனசேகரன், "என்னாச்சு உமா? கிளம்பிட்டீங்களா? விஜய் எங்க?" என்று அவன் கேள்வியை அடுக்க ஆரம்பிக்க,

"தனா, பவி.... பவி" என இங்கு அவள் திக்க, அங்கே அவன் பயத்தில் திணறிப் போனான். "பவிக்கு என்ன? பவி நல்லாத் தானே இருக்கா? அவ கிட்ட குடுமா." என அவன் தன் பங்கிற்கு அவளை வாட்டினான்,.

"பவியைக் காணோம்" என்ற உமாவிற்கு அதற்கு மேல் அழுகையை அடக்க முடியாமல் பெரிய கேவல் ஒன்று வெளியேறியது.

"என்னது காணோமா?" என்று முதலில் அதிர்ந்த தனசேகரன், "அங்க தான் எங்கேயாவது இருப்பா, நல்லாப் பாரும்மா" என்று அவளுக்குச் சமாதானம் செய்வது போல் தனக்கும் செய்து கொண்டான் .

"நீங்க வர முடியுமா தனா, எனக்கு... எனக்குப் பயமிருக்கு" என நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உமா கூற, "வந்துட்டே இருக்கேன்" என்றவன், அடுத்து வந்த அவளது "சீக்கிரத்தை" காற்றில் பறக்கவிட்டான்.

விஜய் தன் தேடுதல் வேட்டை முடிந்து இன்னமும் வராமல் போகவே, தன்னால் முடிந்த அளவு பார்ட்டி நடந்த ஹாலை சுற்றி வர ஆரம்பித்தாள் உமா. அப்போது அவள் எதிரே தென்பட்ட தேவ் "ஹே உமா, என்னாச்சு?" என்றான் அக்கறையுடன்.

"பவியைக் காணோம் தேவ், நீ பார்த்தியா?" என உமா வினவ, "அவ ரெஸ்ட் ரூம் பக்கம் போனதைப் பார்த்தேன், அதற்கு அப்புறம் பார்க்கலையே" என தேவும் கவலை கொண்டது போல் பேச, உமா மேலும் பதறிப் போனாள்.

Property of Bhuvana

"சரி, சரி, அழாதே, வா தேடிப் பார்க்கலாம்" என்று அவளோடு சேர்ந்து அவனும் தேடினான்.

"ஹய்யோ மாமாக்கும், தனாக்கும் நான் என்ன பதில் சொல்லப் போறேன், என் பொறுப்பில் கூட்டிட்டு வந்த பொண்ணை காணோமே" என அவளது நிதானத்தையும் மீறி, குரல் நடுங்கியது.

அவளது நடுக்கத்தைப் போக்கும் வண்ணம் (இல்லை அதிகரிக்கும் வண்ணம் என்று கூற வேண்டுமோ?) தனசேகரன் வந்து சேர்ந்தான்.

"தனா" என்ற கேவலுடன் அவனிடம் ஓடியவள், "பவியைக் காணோமே தனா" என்றாள் அழுகையின் ஊடே.

"பார்க்கலாம், நீ நகரு" என்று கூறிய தனாவின் குரலில் தெரிந்த வேறுபாடு, அருகில் நின்றிருந்த தேவ் கண்டதும் வந்திருக்கலாம் என உமா எண்ண, "பார்ட்டி எந்த ஹாலில் நடந்தது?" என்று கேட்டவாறே, உமா கை நீட்டிய நீள அறையின் பக்கம் கிட்டத் தட்ட ஓடினான் தனசேகரன்.

"அந்த ஹாலில் எல்லா இடமும் தேடியாச்சு மாப்பிள்ளை. வேற இடத்தில் தேடலாம்" என தேவ் கூறியதைக் காதில் வாங்காமல், அந்த இடத்திற்குச் சென்றவனின் கண்கள் அந்த அறையை முதலில் வளம் வர, அடுத்தபடியாக அவனது கால்களை அதை சுற்றி வந்தன.

அங்கே முழுதாய் ஏறிய போதையுடன் பல பேர் மல்லாந்து  கிடக்க, அவர்களைப்  பெரும் அசூசையுடன் பார்த்துவிட்டு தங்கையைத் தேடுவதில் ஈடுப்பட்டவனுக்கு வெற்றி தான் கிட்டவில்லை.

Property of Bhuvana

மேலும் அரை மணி நேரம், அந்த ஹோட்டலின் மற்ற பகுதிகளை அலசியவன், மற்றொரு பக்கம் உமாவைக் கண்டதும் "உன் அண்ணன் எங்கே?" என்றான் சட்டென.

"இங்க தான் இங்கேயோ இருந்தான். பவித்ராவைத் தேடி வேற எந்தப் பக்கமாவது போயிருப்பான்" என்று உமா கூறினாலும், தனாவிற்கு சுருக்கென்று தானிருந்தது.

தேவைக் கேட்டது போல் விஜயை அவன் விசாரிக்க, "பவியைத் தேடி, ஹோட்டல் மித்தப் பக்கம் போயிருக்கான்" என்று அவள் தன் வார்த்தையை முடிக்கும் போது, "பவி வந்துட்டாளா உமா?" என்ற பதற்ற குரலுடன் விஜய் ஓடி வந்தான்.

தனா அவனது கேள்வியில் மீண்டும் வாடி யோசித்துக் கொண்டிருக்கும் போதே, "எனக்குப் பயமிருக்கே தனா, எங்க போயிருப்பா இந்தப் பொண்ணு" என உமா பினாத்த,

" உங்களோட வந்தவளைப் பத்தி என்கிட்டே கேட்கிறியே? ரொம்ப நல்லா இருக்கு." என்றான் தனா குத்தலாக.

"தனா" என உமா அதிர, விஜய் தலை குனிந்தான்

"நான் வேண்டாம் வேண்டாம்ன்னு எத்தனை தடவை படிச்சு படிச்சு சொன்னேன். நீ தான், நீங்க ரெண்டு பேரும் பார்த்துப்பீங்கன்னு என் வாயை அடைச்சே..." என தன் பயம் அனைத்தையும் கோபமாய் கொட்டியவன், தலையை அழுந்தக் கோதிவிட்டுக் கொண்டான்.

அதற்குப் பதில் சொல்ல முடியாமல் உமாவின் மனமும் வாயும் ஊமையாய் அழுதன.

Property of Bhuvana

"இங்க தான் இங்கேயாவது போயிருப்பா தனா, பதறாம தேடலாம்" என்ற விஜயை அழுத்தமாய் முறைத்தான் தனசேகரன்.

தங்கையைக் காணவில்லை என்ற பதட்டம் நெஞ்சை வேகமாய் தாக்க, அதன் பாரம் தாங்காமல் அருகிலிருந்த சோபாவில் தொப்பென அமர்ந்தவன் அவள் வேறு எங்கே போயிருக்க முடியும் என்று சிந்திக்க ஆரம்பித்தான்.

உமாவுடன் வந்துவிட்டு அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் இங்கேயும் போயிருக்க மாட்டாள் என்று புரிந்தாலும் மேலும் யோசிக்க முடியாமல் தவித்தவனின் தோள் பிடித்து ஆறுதல் கூறிய விஜய், "பவித்ராவோட ஃபிரண்ட்ஸ் வீட்டுக்குக் கால் பண்ணிப் பார்க்கலாமா தனா?" என ஒரு வழி கண்டான்.

மூழ்குபவனுக்கு துரும்பும் துடுப்பு என்பது போல் விஜயின் யோசனையை உடனே செயலாற்றினான் தனசேகரன். அவளது நெருங்கிய தோழி, வினு என்று அழைக்கப்படும் விந்தியாவை அழைத்து அவள் அங்கு வந்திருக்கிறாளா என விசாரித்தான்.

அவன் எண்ணியது போலவே பவித்ரா அங்கு வரவில்லை என்ற பதிலே வந்து சேர்ந்தது. அவளது வகுப்புத் தோழிகள் சிலர் வீட்டிற்கும் அழைத்து, அந்த பதிலையே பெற்றவன், இந்த முயற்சியில் தன் நேரத்தை வீணடிக்க விரும்பாமல், கண்களில் உயிரைத் தேக்கிக் கொண்டு தன் தொலைபேசி உரையாடலையே கவனித்துக் கொண்டிருந்த உமாவை கண்டு ஒரு கணம் மென்மையான மனம், அடுத்த கணமே தங்கையை எண்ணி மறுகித் தவித்தது.

தங்கை தன் சுய விருப்பத்தின் பேரில் அங்கிருந்து வெளியேறி இருக்க மாட்டாள், வேறு ஏதோ விபரீதமாய் நடந்து விட்டது என உணர்ந்த தனசேகரனுக்கு சற்று நேரத்தில் தந்தையின் அழைப்பு வருமே! அவரை எப்படி சமாளிக்கப் போகிறோம்? என்று அச்சமாகவும் இருந்தது.

Property of Bhuvana

அவன் அப்படி தவித்துக் கொண்டிருக்கும் போதே "நான் வெளிய போய் தேடிட்டு வரேன்" என்ற வார்த்தையோடு மின்னல் வேகத்தில் ஹோட்டலை விட்டு வெளியேறிய விஜயின் கண்களில் தேவேந்திரன் காரில் யாரையோ ஏற்றுவது தெரிந்தது.

மனம் எதையோ பறைசாற்ற, வெளியே செல்லத் தொடங்கிய கால்களை நகர்த்தி தேவின் கார் அருகில் சென்றவனிடம் "ஓவர் மப்பு மாப்பிள்ளை. பையன் ஃபிளாட் ஆகிட்டான். அது தான் ஹாஸ்டல்ல கொண்டு போடலாம்ன்னு" என்ற தேவ், முற்று முதல் போதையுடன் இருந்த ஸ்டீவனைக் காட்டினான்.

"ஹோ சரி" என்று சோர்வுடன் திரும்பிய விஜயின் முதுகிற்குப் பின்னால் தேவும், ஸ்டீவனும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தது பாவம் விஜய்க்கு கேட்கவில்லை.

விஜய் வெளியே ஓடிய சில நிமிடங்களிலேயே, தனாவும் வெளியே வந்து தேடத் தொடங்கினான். ஹோட்டல்லை விட்டு வெளியே வந்து நாளா புறமும் ஓடிய போதும் பவித்ராவின் அடையாளங்கள் தென்படவே இல்லை! அங்கு நின்றிருந்த ஆட்கள் சிலரிடமும், ஹோட்டல் பணியாட்கள் சிலரிடமும் பவித்ராவின் அங்க அடையாளங்களைக் கூறி அவன் விசாரித்தப்போதும் பலனில்லாமல் போகவே அயர்ந்து போனான் தனசேகரன்.

அவன் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கையில் வைரவன் ஆட்டோவில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார்.

"சேகரா! பாப்பா கிடைச்சாளா?" என அவரது நடுங்கிய குரலிலேயே அவரது பாசமும், அதனால் விளைந்த படபடப்பும் புரிந்தன.

Property
Bhuvana

"அப்பா? நீங்க ஏன்ப்பா.... இங்க வந்தீங்க.... உமா ஃபோன் பண்ணாளா?" என்று கோர்வையாய் பேச முடியாமல் தடுமாறிப் போனான். தானே இந்த அளவு பதறித் தவித்துக் கொண்டிருக்கும் போது தந்தை இதை எப்படி தாங்குவார்? என வருந்திய தனசேகரன்,

அவரைச் சின்னப் பிள்ளையென எண்ணினானோ என்னவோ "அவளுக்கு ஒன்னும்மில்லைப்பா, கிடைச்சிடுவா. நான் கூட்டிட்டு வரேன்" எனக் கூறியவனை விநோதமாய் பார்த்தார் வைரவன்.

"என்னடா பேசுற? வேலைக்குப் போய் வீட்டைக் காப்பாத்துறோம் என்ற நினைப்பா? நான் அவளுக்கு அப்பா நினைவிருக்கட்டும்" என முதலில் அவனிடம் தன் கோபத்தைக் காட்டியவர், அவனது பாசத்தை சட்டென புரிந்து கொண்டு "சாரி கண்ணா, பாப்பாவை காணாததில் வார்த்தை ஜாஸ்தியா விழுந்திடுச்சு" என்று கூறியவர் மகனோடு சேர்ந்து தேட ஆரம்பித்தார்.

"மன்னிச்சிடுங்க மாமா" என்று வந்த உமாவைத் தேற்றி, அவளை உடன் வைத்துக் கொண்டார் வைரவன்.

பவியைத் தேடி செயின்ட். தாமஸ் மவுண்ட் ஏரியா வரை ஓடிக் களைத்த விஜய்க்கு, நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது. தன் பொறுப்பில், தன் கவனிப்பில் அழைத்து வந்த தன் உயிரைத் தானே தொலைத்து விட்டோமே? அவளுக்கு என்ன ஆனதோ? அவளுக்கு ஏதுமாகி அதை தன்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? அவளுக்கு என்ன ஆகியிருக்கும்? கடவுளே என் செல்லப் பவியை ஒரு குழந்தை போலவே எனக்குத் திருப்பிக் கொடுத்துவிடு, அவளைக் கண்ணுக்குள் வைத்து பார்த்துக் கொள்கிறேன்... இப்போது நடந்தது போல் நடக்காமல் அவளை என் கண்ணுக்குள் சிறை வைத்துக் கொள்கிறேன் என்று ஆயிரமாயிரம் விதமாய் கடவுளிடம் பேசியவாறே தனா மற்றும் வைரவனிடம் வந்து சேர்ந்தான் விஜய்.

Property of Bhuvana

மீண்டும் ஹோட்டலின் சுற்று வட்டாரத்தை அலசியவற்களின் மனதை பெரும் விபீரத கற்பனைகள் ஆட்கொண்டன. அவர்களுடன்  அலைந்து கொண்டிருந்த உமாவைக் கண்ட தனா, "அப்பா நீங்க உமாவை அவ ஹாஸ்டல்ல விட்டுடுங்க. அவளையும் வச்சுக்கிட்டு அலைய முடியாது. நானும் விஜயும் தேடித் பார்க்கிறோம் " என்று கூற, உமா "நானும் உங்களோடவே இருக்கேன், பவிக்கு என்னாச்சுன்னு தெரியாம என்னால நிம்மதியா இருக்க முடியாது" என்று உறுதியாய் மறுத்துவிட,  மூவராய் இருக்க வேண்டிய தேடல் குழு நால்வராகவே தொடர்ந்தது.

"போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுத்துடலாமா அப்பா?" என தனா வினவ, "வேண்டாம் சேகர், பெண் குழந்தை விஷயம். போலீஸ் வரைக்கும் போக வேண்டாம்" எனத் தந்தையாய் கவலை கொண்டார்.

ஆனால் அவரே ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் "கிண்டி போலீஸ் ஸ்டேஷன் போய் ஒரு கம்ப்ளைன்ட் கொடுத்துடலாம் தனா" என்றார்.

அவர் முகத்தில் தெரிந்த வேதனையை கண்ட தனா, "நீங்க தயவு செஞ்சு வீட்டுக்குப் போங்கப்பா, என் மேல நம்பிக்கை வச்சுப் போங்கப்பா" என அவர் கையை அழுத்தி அவரிடம் மன்றாடினான்.

"உன் மேல நம்பிக்கையில்லாம இல்லைடா, என்னால... முடியலையே, மனசு அடிச்சிக்குதே சேகரா" என அவர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தள்ளாட, அவரை பெரும்பாடுபட்டு உமாவையும் அவரையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

உமாவும் வைரவனும் கிளம்பிய பின்னர் தான், நடுவில் காணாமல் போன தேவேந்திரனின் நியாபகம் தனசேகரனுக்கு வந்தது. ஏதோ நினைத்தவனாக, இருண்ட முகத்தில் குற்ற உணர்வு மேலோங்க தன்னுடன் அலைந்து கொண்டிருந்த விஜயிடம் தேவின் எண்ணை வாங்கி, அதற்கு அடித்தவனுக்கு

switched off message -யே வந்து கொண்டு இருந்தது. விஜயும் அவன் ஸ்டீவன் என்றவனைக் கல்லூரி விடுதியில் விடச் சென்றிருப்பதாகக் கூறவே, அந்த டாபிக் அத்துடன் முடிந்தது.

தன் உள் மனம் அறிவுறுத்தியதன் விளைவாக விஜய் தனசேகரனிடம் "ஹோட்டல்ல இன்னொரு டைம் விசாரிக்கலாம் தனா" என்று கூறி அங்கே அவனைக் கூடிச் சென்றவன் கையோடு, தேவின் பெயரில் ஏதேனும் அறைகள் முன் பதிவாகி உள்ளதா என்று விசாரித்தான்! அவன் விசாரித்ததும் தனா அவனை ஒரு அர்த்தப் பார்வை பார்க்க, "அப்படியெல்லாம் ஒன்னுமாகி இருக்காது தனா, எதுக்கும் ஒரு தடவை விசாரிக்கலாம் என்று தான்" என்று கூறிய விஜயின் கற்பனையில் அவன் உடம்பே ஒரு நிமிடம் ஆடிப் போனது என்றால் தனாவின் வெளுத்து வெளிறி போனது.

தங்களது கற்பனை விளைவித்த பதற்றத்தில் தேவின் நண்பர்கள் பெயரில் அரை பதிவாகி இருக்கிறதா என்று கேட்காமல் விட்டனர் இருவரும்.

விஜய் தன் நண்பர்கள் சிலருடன் சென்னையின் வேறு பகுதிகளில் தேடுவதாகக் கூற, தனா தன் நெருங்கிய நண்பனை உடனழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்றான்.

இரவு முழுதும் தேடலும், கவலையுமாக கழிய , அனைவரது மனதும் மிகவும் சோர்ந்து போய் இருந்தது. அந்த வேளையில்  காலை ஐந்து மணி வாக்கில் உமாவின் கைப்பேசியில் விஜயின் அழைப்பு மிளிர்ந்தது.

"உமா, நான் விஜய் பேசுறேன். தனா ஃபோன் பண்ணாங்களா? ஏதும் க்ளூ கிடைச்சதா?" என்ற விஜயின் கேள்வியிலேயே அவனிடம் சரியான பதிலில்லை என்று தெரிந்து விட உமா அழத் தொடங்கினாள்.

Property of Bhuvana

"ஹே உமா ப்ளீஸ், நீயே அழுதா அங்கிள் எப்படி தாங்குவாங்க? தனசேகர் ஃபோன் சுவிட்ச் ஆப் ஆகிருக்கு, அதனால் தான் உனக்குக் கூப்பிட்டேன். அவரோட ஃபிரண்ட் நம்பரைக் குடு" என்றவன் அவள் கூறிய எண்ணைக் குறித்துக் கொண்டிருக்கும் போதே, அவன் கைப்பேசியில் செகண்ட் கால் ஒன்று வந்தது.

உமாவிடம் வேகமாக பேசிவிட்டுத் தன்னுடன் சேர்ந்து பவித்ராவைத் தேடும் நண்பன் ஒருவனிடமிருந்து வந்த அழைப்பை எடுத்தான் விஜய். "விஜய், நீ மெரிடியன்ல போய் இன்னொரு டைம் விசாரிடா, ஏன்னா ஸ்டீவன் அவன் ரூமில் இல்லை. நான் நம்ம காலேஜ் பக்கம் பவித்ராவைப் பத்தி ஏதாவது க்ளூ கிடைக்குமா என்று தேடிட்டு இருக்கும் போது, ஏதோ தோன்ற நேத்திக்கு நைட் பார்ட்டிக்கு வந்த ஹாஸ்டல் பசங்க அறையெல்லாம் போய் பார்த்தேண்டா, நீ சொன்ன மாதிரி ஸ்டீவன் ரூம்ல இல்லை என்றதும் ஒரு சின்ன டவுட்" என்றான் அந்த நண்பன்.

மனதில் பெரும் அபாய மணி அடிக்க, "சரிடா, உடனே போறேன்" என்றவன்

நண்பனிடம் வாங்கிய சிறு செய்தியுடன், தன் முட்டாள் தனத்தால் தொலைந்து போன தன் உயிரைத் தேட, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, தான் பயணித்த ஆட்டோவின் வேகத்தைத் தன் மனதின் வேகத்திற்கேற்ப ஒளியின் வேகத்திற்குச் செலுத்தச் சொன்னான்.

அவன் சென்று சேர்ந்த சமயத்தில், தேவின் நண்பர்களுள் ஒருவனான ஸ்டீவன், தன் காரை எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவனிடம் விரைந்தவன் "ஹே ஸ்டீவன், பவியைப் பார்த்தியாடா, நைட்ல இருந்து காணோமாம். உமா கூட இருப்பாளே... பவித்ரா... MBBS first year" என விஜய் அவனுக்குத் தெரியாத(!) விவரங்களைத் தொகுக்க,

Property of Bhuvana

"ஹப்பா, வந்தியா... வா வா சீக்கிரம் வா" என இரு கரம் கூப்பி அவனை அழைத்துச் சென்ற ஸ்டீவன், அதே ஹோட்டலில் நான்காவது தளத்திற்கு அவனை இழுத்துச் சென்றான்.

அவன் விசாலமாய் திறந்து காண்பித்த அறையின் வாயிலாக, தான் கண்ட காட்சியைக் கண்டதும் உயிர் உறைந்து போனான்.

"ஹய்யோ கடவுளே!" என அவன் கதற, "ஹப்பாடா வந்தியா, இவளை எப்படி வெளியே போடுவதுன்னு நாங்க ரொம்பவே குழம்பிட்டு இருந்தோம். ஓகே விஜய், நாங்க கிளம்புறோம்" என தேவ் சர்வ சாதாரணமாய் சொல்லிக் கொண்டிருக்க, "டேய் நாயே" என அவன் மேல் பாய்ந்து, சாரமாரியாய் அடிக்கத் தொடங்கிய விஜயை பவித்ராவின் ஈன சுவர முனகல்கள் அசைத்து, உயிரைப் பிழிந்தன.

அவன் பார்த்துப் பார்த்து ரசித்த அவளது உடை, அங்கே ஒரு மூலையில் சுருண்டு கிடைக்க, அவற்றைப் பொறுக்கியவன் ஓடிச் சென்று கட்டிலின் மேல் கிடத்தப் பட்டிருந்த பவித்ராவின் மேல் அதை இட்டான். எல்லாமும் நடந்து கொண்டே இருக்க, அரை மயக்கத்திலிருந்த பவித்ரா

"வேணாம், வேணாம், ப்ளீஸ் என்னை விட்டுடு"

"ஹய்யோ, இப்படி பண்ணாதீங்க... ப்ளீஸ்"

"நான் என்ன தப்பு பண்ணினேன்"

"எனக்கு வலிக்குது"

"என்னால முடியல, ப்ளீஸ், வேணாம்"

Property of Bh

"தச்சு, என்னைக் காப்பாத்து தச்சு... வா... வா" என்று ஈன சுவரத்தில் இடைவிடாமல் புலம்பிக் கொண்டே இருந்தாள்!

மௌனமொழி பாகம் 21

மனதாலும், உடலாலும் மரண காயம் பட்டிருந்த பவித்ராவிற்கு அந்த உடைகளை கைகள் நடுங்க அணிவித்த விஜய் ஆனந்த், அவளை அங்கிருந்து எங்கே, எப்படி அழைத்துச் செல்வது என்று யோசிக்க ஆரம்பித்து, முடிவில் மைலாப்பூரில் இருக்கும் நிர்மலாவின் தனி கிளினிக்கிற்கு அழைத்துச் செல்வது தான் நல்லது என்று முடிவு செய்தவன், அவளை உடனே தன் கைப்பேசியில் அழைத்தான்.

நிர்மலாவிடம் உள் விவரம் ஒன்றும் கூறாமல் (கூற தைரியமில்லாமல்) அவள் எங்கே இருக்கிறாள் என்று வினவி, அவள் அங்கே ஒரு அவசர சிகிச்சைக்காக இரவு முழுதும் கிளினிக்கிலேயே இருந்ததாகக் கூற, தான் அங்கே உடனே வருவதாகவும் அவள் அங்கேயே மேலும் சற்று நேரம் இருக்கவேண்டும் என்று கூறியவன், பவித்ராவை அள்ளிக் கொண்டு அங்கே ஓடினான்.

தன் நண்பன் ஒருவனை கார் கொண்டு வரச் சொல்லி, அதில் பவித்ராவை ஏற்றி, ஸ்தம்பித்துப் போயிருந்த நண்பனை வண்டியை எடுக்கச் சொல்லியவனின் நெஞ்சம் அதில் போகும் வழியாவும் ரணமாய் வலித்தது. அவளது அன்றைய நிலை நெஞ்சைக் குத்திக் கிழித்துக் கொன்று போட்டது. அவளை இப்படி பார்த்துக் கொண்டு உயிர் வாழ்வதற்கு உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்ற, அவள் அணு அணுவாய் வேதனை அனுபவிக்க, தான் மட்டும் சட்டென செத்துவிடுவதா என்ற எண்ணம் தோன்றி அவனை அலைக்கழித்தது.

தன் பொறுப்பில் வந்தவள் இந்த நிலைக்கு ஆளாகி இருக்கிறாள் என்றால் அது அவன் செய்த மிகப் பெரிய பாவம் அல்லவா? ஆயிரம் ஜென்மம் எடுத்து அவளுக்கு சேவகம் செய்தாலும் அதைக் கழுவ முடியுமா என்ன? கண்டிப்பாக இல்லை!

Property of Bhuvana

மடியிலிருந்த உயிரின் வேதனை நெஞ்சைக் கிழித்து கண்ணீரை வரவைத்தது. உயிர் வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த போதும், அடுத்து என்ன செய்ய வேண்டும் என மூளை வேகமாய் திட்டமிட்டது.

உமாவின் எண்ணிற்கு அழைத்தவன், பேச முடியாமல் தொண்டையை அடைத்த துக்கத்தை முயன்று விழுங்கி, "உமா, நீ உடனே கிளம்பி நிர்மலாவோட கிளினிக்கிற்கு வா. தனாவையும் வரச் சொல்லு" என்றவன் அவள் "என்ன விஜய், என்னாச்சு என்னாச்சு" என பதறியதை கவனிக்காத பாவனையில் கைப்பேசியை வைத்தான்.

கண்ட வினாடி காதலில் விழுந்திருந்தாலும், சில காலங்களாய் தான் பவித்ராவை அவனுக்குத் தெரியும் என்ற போதில் அவனுக்கே உயிரை அறுப்பது போலிருக்கும் அவளது நிலையை தனசேகரனும் வைரவனும் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறார்கள்? கண்ணின் மணியாய் கண்ணுக்குள் வைத்து, இமையெனும் போர்வை கொண்டு அவளைப் போற்றி பாதுகாத்த தனசேகரனை நினைத்தால் குற்ற உணர்வு நெஞ்சைத் தின்றது.

அவன் வந்து தன்னை அடித்தே கொன்றால் கூட அது தனக்குக் கம்மியான தண்டனை என்று நினைத்த விஜய், நிர்மலாவின் கிளினிக்கை அடைந்திருந்தான்.

அவனது குரலிலிருந்து ஏதோ விபரீதம் என்று உணர்ந்திருந்த நிர்மலா பதட்டத்துடன் வெளியே காத்திருந்தாள். அவர்களது வண்டி வந்து நின்றதும், கார் கதவைத் திறந்து விட்டவள் விஜயின் கைகளிலிருந்த பவித்ராவைக் கண்டதும் "பவி" என அலறினாள்.

"என்னடா, என்னடா இது கோலம்" என்று கேட்டவளின் கண்களில் கண்ணீர் ஆறாய் ஓட, "நிர்மலா கூட்டம் ஏதும் சேர்வதற்கு முன்னால் அவளை முதலில் உள்ளே கூட்டிட்டுப் போகலாம்" என்றவன் வேகமாக உள்ளேயும் சென்றான்.

Property of Bhuvana

"இந்தப் பக்கம் விஜய், என்னோட ரூம்ல படுக்க வை" என்றவள் கண்ணைத் துடைத்துக் கொண்டு நிஜத்தைப் பார்க்கத் தயாரானாள்.

"நான் வெளியே இருக்கேன் நிர்மலா, நீ... நீ அவளைப் பாரு" என்றவனின் குரல் முழுதாய் உடைந்து போனது.

வண்டியில் வரும் போது பவித்ராவின் இடை விடாத புலம்பல்களைக் கேட்டிருந்த நண்பன் வெளியே காத்திருக்க, அவனிடம் "டேய் ராஜ், இதை... இதை யார்கிட்டயும்..." என விஜய் தனது உடைந்த குரலை ஓட்ட வைக்க முயல,

"கண்டிப்பா சொல்லமாட்டேன். என் உயிர் உள்ள வரை" என்று அவன் கையை அழுத்தி உறுதி கூறியவன், "நான் வெளியே இருக்கேன். ஏதாவது ஹெல்ப் வேணும்னா கூப்பிடு" என்றவன் நண்பன் படும் வேதனையையும், அங்கே ஒரு பெண் அனுபவித்த ரணத்தையும் காணச் சகிக்காமல் வெளியேறினான்.

முதலுதவி செய்துவிட்டு வெளியே வந்த நிர்மலா "யாரு விஜய் இந்த மாதிரி ஒரு கொடூரத்தை செஞ்சது? யாருடா? பூ போலிருந்த பொண்ணுடா" என அவன் சட்டையைப் பிடித்து உலுக்க ஆரம்பிக்க,

"தேவ்...." என்று தொடங்கி, "இல்ல நிர்மலா, நான் தான்... நான் தான் எல்லாத்துக்கும் காரணம். என்னால தான் என்னோட பவி இந்த நிலைக்கு ஆளாகிட்டா... ஹய்யோ கடவுளே" என புலம்ப ஆரம்பித்தவன்,

"நிர்மலா... அவளுக்கு.... எப்படி இருக்கிறது" என்று கேட்க முடியாமல் திணறிப் போனான். கண்கூடாய் அவளது நிலையைக் கண்ட பின்னர் என்னவென்று கேட்பது?

Property of Bhuvana

" நிறைய காயம், மேலாக உள்ளங்கையில் multiple fracture. பாவிங்க என்ன செஞ்சாங்களோ, இவங்கெல்லாம் மனுஷங்க தானா? இதுல டாக்டர்ஸ் வேற" என நிர்மலா குமுறிக் கொண்டிருக்கையிலேயே தனசேகரன் அவனது நண்பனுடன் உள்ளே ஓடி வந்தான்.

"என்ன விஜய்? இங்க எதுக்கு வரச் சொன்ன? பவியைப் பார்த்தியா? அவ எங்க" என்று கவலை படிந்த கண்களில் மேலும் மேலும் கலக்கம் கூட அவனை வண்டாய் குடைந்தான் தனசேகரன்.

இப்படி உயிர் உருகக் கேட்பவனிடம் "ஒன்றுமில்லை" என்று சொல்லத்தான் ஆசை. ஆனால் நிஜம் அதுவல்ல எனும் போது சொல்லித் தானே ஆகவேண்டும். நிர்மலா விஜயைப் பார்க்க, விஜய் நேராய் தனசேகரனின் காலில் விழுந்தான்.

"என்னை மன்னிச்சிடுங்க என்று சொல்லக் கூட எனக்குத் தகுதியில்லை தனா, என்னை என்ன வேண்டுமென்றாலும் செஞ்சிட்டு உள்ளே போங்க" என்று அவனது காலைப் பிடித்துக் கதறியவனை விநோதமாய் பார்த்தவன், அவனது கதறலின் காரணத்தை லேசாய் உணர்ந்த வினாடி உடல் விறைத்து சிலிர்த்துப் போனான். காலில் விழுந்திருந்தவனை உதறிவிட்டு, உள்ளே விரைந்தவன் "அம்மு" என்ற ஒற்றைச் சொல்லோடு அப்படியே உறைந்து போனான்.

தங்கை தன் துணையை நாடி, மடி தேடி படுக்கும் போது மட்டும் வெளிப்படும் அந்தச் செல்ல சின்ன அழைப்பை உணராமல், உணரமுடியாமல் படுத்திருந்தால் பவித்ரா.

இதயத்தின் துடிப்பு அப்படியே நின்று விட, கசங்கிய துணியாய் துவண்டு போய் படுத்திருந்த பவித்ராவைக் கண்ட முதல் பார்வையிலேயே என்ன நடந்திருக்கும் என்று தனசேகரனால் யூகிக்க முடிந்தது. ஆனால் யூகிக்க முடிந்ததைத் தான் ஜீரணிக்க முடியவில்லை.

Property of Bhuvana

துவண்ட கால்களை நகற்றி, தங்கையின் அருகில் சென்றவன் அவள் மெல்லிய முனங்கலாய் வெளியிட்ட "தச்சு, வா தச்சு... எனக்குப் பயமாயிருக்கு" என்ற வாக்கியத்தில், உறைந்து போயிருந்த கேவலை வேகமாய் வெளியிட்டான்.

அதன் பின்னர் அவனது ஒவ்வொரு வருடலுக்கும் தங்கையின் உடல் தூக்கிப் போடவே கண்களை இறுக மூடித் திறந்தவனின் கண்ணீர், அவன் கன்னம் வழியாய் வலிந்து அவள் கையைத் தொட்டது. அதற்கும் அவளது உடல் ஒரு தரம் தூக்கிப் போட, உடம்பை அப்படியும் இப்படியுமாய் முறுக்க ஆரம்பித்தாள் பவித்ரா!

இத்தனை நாட்கள் வீட்டுப் பறவையாய் இருந்தவள், மெது மெதுவாய் முளைக்க ஆரம்பித்த சிறகுகளைக் கொண்டு முதல் முறை வெளியேற, மொட்டு விட்ட சிறகுகளைச் சட்டென வெட்டி அவளை முடக்கிப் போட்டுவிட்டனரே என்ற வேதனை எழுந்த வினாடி யார் செய்தது? என்ற கேள்வி உடனே எழும்ப, கண்களில் கனலுடன் வெளியே வந்தான் தனசேகரன்.

அவன் வெளியே வந்த சமயம், தன் சிகிச்சையைத் தொடங்கவென நிர்மலா உள்ளே சென்றாள்.

பவித்ரா இருந்த அறையையே பார்த்துக் கொண்டிருந்த விஜயை நெருங்கியவன் அவன் சட்டையைக் கொத்தாய்ப் பிடித்து, "யாருடா?" என்றான் ஒரு புலியின் உறுமலுடன்.

"தேவ்...அப்புறம்" என்று தொடங்கிய விஜய் முடிப்பதற்குள் தனாவின் பிடி அழுத்தமானது.

Property of Bhuvana

அவனது கடைசி வார்த்தையை எதிர்பார்க்காதவன் போல "அப்புறமா? எத்தனை பேர்டா, கடவுளே... குழந்தை டா அவ... அவளை எப்படிடா. உன்னால தான், உன்னால தான் எல்லாம். சிட்டுக் குருவி மாதிரி சுத்திக்கிட்டு இருந்தவளை அந்தப் பார்ட்டிக்கு கூட்டிட்டுப் போய்... பொறுக்கி ராஸ்கல்" என்றவனின் ஒரொரு வார்த்தைக்கும் ஓர் அரை விழுந்தது.

"நீயும் சேர்ந்து ஏதாவது பண்ணி..." என்று தனா தன் கேள்வியை முடிக்கும் முன்னரே

"ஹய்யோ தனா, நானே அவளை எப்படி கொடூரமா நடத்துவேன்? இல்லை தனா, இல்லை தனா, ஹய்யோ கண்டிப்பா இல்ல" என விஜய் கதறிய போதும் தனசேகரனுக்குக் கோபம் அடங்கவில்லை. உணர்ச்சி வேகம் என்று வரும் போது ஆண் என்ன? பெண் என்ன?

"வேற யார் யார்?" என தனசேகரன் உறுமிக் கொண்டிருக்கும் போது, விஜய் அரக்கர்களின் பட்டியலை சொல்ல ஆரம்பித்தான்.

"எல்லாரும் உன் நண்பர்கள் தானே? அன்னைக்கு பார்ட்டிக்கு வந்த ரோக்ஸ் தானே?" என தனா கத்த, உமா உள்ளே பதட்டத்துடன் உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

"பவி எங்கே விஜய்?" என்ற அவளது கேள்வி முடியும் முன்னரே, "ஹே, நீ எதுக்கு இங்க வந்தே? உன் பொறுக்கி அண்ணன்கிட்ட இந்த இடத்தை சொல்லிக் கொடுக்கலாம் என்று வந்தியா?" என்ற கேள்வியுடன் உமாவின் கழுத்தைப் பிடித்து தன் வெறுப்பைக் கொட்டினான் தனசேகரன்.

"ஹய்யோ என்னாச்சு தனா? தேவ் பவியை ஏதும் பண்ணிட்டானா?" என உமா திகிலுடன் கேட்க,

Property of Bhuvana

"ஏதும் பண்ணிட்டானாவா? பொறுக்கி ராஸ்கல்.அப்படியென்னடி அவனுக்கு அவ மேல கோபம்? நான் உன்னைக் காதலிக்கிறது பிடிக்கலை என்றால் நேரடியா சொல்லிட்டுப் போகவேண்டியது தானே? அதுக்கு எதுக்கு இவ்வளவு கீழ்தரமா, கொடூரமா அவளை நாசம் பண்ணிட்டான்? ஹய்யோ என் அம்மு... என்னால அவளை இப்படி பார்க்க முடியலையே... அப்பா எப்படி தாங்குவாங்க" என கோபத்தில் தொடங்கிய கண்ணீரில் முடித்து, அப்படியே தரையில் அமர்ந்து கதறவும் உமா ஆடிப் போனாள்.

தனசேகரனின் வார்த்தைகளிலிருந்து நிஜத்தை உணர்ந்த உமா பேச்சற்று ஊமையாகிப் போனாள். தன் சகோதரனா? தன் உடன் பிறந்தவனா? சை என்னை ஒரு மிருகத்தனம்? பவியையா? என் பெண்ணையா? ஏன் ஏன் ஏன்? அவனால் எப்படி முடிந்தது? ஒரு சின்னப் பெண்ணை? துள்ளித் திரிந்து கொண்டிருந்தவளை? ஹய்யோ எத்தனை பெரிய பாவம்? இதை எப்படி கழுவித் துடைப்பது? என்று வகை வகையாய் கேள்விகள் துரத்த, "பவி எங்க நிர்மலா? நான் பார்க்கணும்" என்றாள் உமா!

அவளது அந்த வாக்கியத்தில் சிலிர்த்தெழுந்த தனசேகரன், "அடி செருப்பால, ஒழுங்கு மரியாதையா ரெண்டு பெரும் இந்த இடத்தைக் காலி பண்ணுங்க. என் கண் முன்னாடி நின்னா கொலை கிலை பண்ணிடப் போறேன்" என்றான் பட்டென.

அவனது படபடப்பை அதிகரிக்கும் வண்ணம் வைரவன் நிர்மலாவின் கிளினிக் முன்னால் வந்திறங்கினார் . "ஹய்யோ மாமா" என உமா மயங்க, "அப்பா" என்று அதிர்ந்து போனான் தனசேகரன்.

Property of Bhuvana

விஜயக்கோ, தனசேகரன் தன் வேதனையே கோபமாய் வெளியிட்டு விட்டான். ஆனால் இந்தப் பாசமிக்கப் பெரியவர் தன் பெண்ணின் நிலையை எப்படித் தாங்கிக் கொள்வார்? என்ற வேதனையும், இத்தனை பேரை எவ்வளவு வேதனைப் படவைத்து விட்டானே இந்தக் கொலைகாரப் பாவி என்ற அவனது உள்மனக் குமுறலை மதிக்காமல் வைரவன் பதட்டத்துடன் உள்ளே வந்து கொண்டே இருந்தார்.

"என்ன விஷயம் சேகரா? என்கிட்டே எதுவும் சொல்லாம உமா பாட்டுக்கு வந்துட்டா... அவ உனக்குப் பேசினதில இருந்து நிர்மலா கிளினிக்க்கு தான் வந்திருக்கீங்க என்று கணிச்சு இங்க வந்தேன்" என்றவர்,

"யாருக்கு என்ன?" என்று கேட்டார்.
அவரிடம் என்ன சொல்வது? நாலு பேர் சேர்ந்து உங்கள் பெண்ணை நாசம் செய்துவிட்டனர். அவள் இங்கே காயங்களோடு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறாள் என்றா? - இப்படியாக அனைவரும் யோசித்தனரோ என்னவோ வேதனையோடு அமைதியாய் நின்றிருந்தனர்.

ஆனால் அவர்கள் கொடுத்த அந்த சிறு வினாடி தாமதம் கூட கடவுளுக்குப் பொறுக்கவில்லை போல. நிர்மலா பதட்டத்துடன் வெளியே ஓடிவந்தாள். "விஜய், இந்த மருந்தை பக்கத்தில இருக்க மருந்து கடைல வாங்கிட்டு வா. சீக்கிரம்" என்று கூறியவள், வைரவன் இருப்பதைக் கவனிக்காமல் "உமா, பவித்ராவிற்கு உடம்புத் தூக்கித் தூக்கிப் போடுது" என்றாள் கலவரத்துடன்

விஜய் அவள் நீட்டிய மருந்து சீட்டை வாங்கிக் கொண்டு மின்னல் வேகத்தில் விரைய, வைரவன் அனைவரையும் தள்ளிக் கொண்டு அறையினுள் சென்றார். அங்கே கண்ட காட்சியை காணச் சகிக்காமல் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு வெளியே வந்தவர், மகனைத் துணாய் பாவித்து அவன் மேல் ஆறுதலுக்கு சரிந்தவர் "சேகரா" என்ற வார்த்தையில் தன் உயிர் வாதனையை வெளியிட்டார்.

Property of Bhuvana

அங்கே தங்கை உயிருக்குப் போராட, இங்கே தந்தை வேதனையில் தள்ளாட தனசேகரன் யாரைப் பார்ப்பது என்று தடுமாறிப் போனான்.

தடுத்த எல்லாரையும் மீறி (ஒருவேளை அவருக்கு யார் பேசியதும் காதில் விழவில்லையோ?) பவித்ராவின் அருகில் அமர்ந்துகொண்டு, அவளது கையை மெல்ல வருடிக் கொடுத்துக் கொண்டே அமர்ந்திருந்தவர் ஒரு வார்த்தை கூட யாரிடமும் பேசவில்லை. மகளின் முகத்தை வெறித்துக் கொண்டு, "பாப்பா, பாப்பா" என்ற சொல்லோடு அமர்ந்திருந்தவரை கண்ட அனைவருக்குமே துக்கம் தொண்டையை அடைத்தது.

எல்லாரையும் இப்படியாய் அலைக்கழித்த பவித்ராவின் உடல்நிலை மிக மோசமான நிலையை அடுத்த சில மணி நேரங்களில் எட்டியது. அவளது மெல்லிய மேனியில் சூடு ஏறிக் கொண்டே போக, அவளது முனங்கலும் பினாத்தலும் நிற்காமல் தொடர்ந்தன. அதிகச் சூட்டினால் தூக்கிப் போட்ட உடம்பை ஒரு நிலைக்குக் கொண்டு வர, நிர்மலாவும் உமாவும் மூன்று முறைக்கும் மேலாக உயிர் காக்கும் மருந்து ஒன்றை அவளுக்கு ஏற்றிக் கொண்டே இருந்தனர்.

பவித்ரா தங்களை விட்டுப் போய் விடுவாளோ என்ற தவிப்பில் அனைவரும் இருக்க, தனசேகரன் அவளைப் பெரிய மருத்துவமனை ஒன்றிற்கு அழைத்துச் செல்ல முடிவு செய்திருப்பதாகக் கூற, விஜய் வேண்டாம் என்றான்.

"ஏன் இங்கேயே வைத்து அவளது மீதி உயிரையும் பறித்து விடும் எண்ணமா?" என தனசேகரன் வெறுப்பை உமிழ,

"பெரிய ஹாஸ்பிடல் எதற்கும் போனால் கேஸ் பைல் பண்ணிச் சொல்லி, நிறைய formalities கேட்பாங்க தனா. பவித்ரா இப்போ இருக்கிற நிலைமையில் கேஸ் பைல் பண்ணி, போலீஸ் கேட்கிற கேள்வியெல்லாம் அவ எப்படித் தாங்குவா?" என விஜய் பந்தாய் அடைத்த வேதனையை விழுங்கிக் கொண்டு பதில் சொல்லவும்,

Property of Bhuvana

"அவங்க என்ன போலீஸ் கேஸ் பைல் பண்றது? நானே பண்ணத் தான் போறேன். பொறுக்கி நாய்களை அப்படியே விட்டிருவேன் என்று நினைச்சியா?" என தனசேகரன் தன் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுத்து வைக்க, அத்தனை நேரம் ஒரு வார்த்தை கூட பேசாமலிருந்த வைரவன் "சேகர், போலீஸ்க்குப் போய் என் பெண்ணை மேலும் கஷ்டப்படுத்தாதே. அவள் படும் வேதனைகள் போதும்" என்று கூறியவர், கைகளை ஏந்தினார் போல் வைத்து கண்களில்
கண்ணீரைச் சொரிந்தார்.

மௌனமொழி பாகம் 22

"என்னப்பா சொல்றீங்க? இவ்வளவு கொடுமை செஞ்சவங்களை அப்படியே விடறதா?" என தனசேகரன் கொதிக்க,

"என் பெண்ணின் நல்லதற்காக சொல்கிறேன். ஒரு அப்பனாய் என் முடிவை மதிச்சு பேசாம இரு" என்று குரல் உயர்த்திக் கூறியவர், அதற்கு மேல் ஒன்றும் பேச விரும்பாதவர் போல் மகளின் பக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

அப்போதும் மனதாராமல் "அம்மு அனுபவிச்ச சித்ரவதைக்கு அவங்களை கொன்று போடணும். நீங்க என்னடாவென்றால் போலீஸ்க்குக் கூடப் போகக் கூடாது என்று சொல்றீங்களே?" என தன் பங்கிற்குத் தனசேகரன் குரல் உயர்த்த,

"ஏன்டா புரிந்து கொள்ள மாட்டேன்கிறாய்? இந்த சித்ரவதையில் சாகக் கிடந்து ஒரு வேலை அதில் பிழைத்து விட்டால், மற்றொன்றில் அவளைக் கொன்று விடலாம் என்ற எண்ணமா? அப்படி ஒரு நல்ல எண்ணம் உனக்கிருக்கும் பட்சத்தில் நேரே போலீஸ்சில் போய் கம்ப்ளைண்ட் கொடு" என்று தீர்க்கமாய் சொல்லிவிட்டு, அவனது குற்றம் சாட்டும் பார்வையைக் காணச் சகிக்காமல் திரும்பிக் கொண்டார்.

தனசேகரனின் முகம் வலியைக் காட்ட, பவித்ராவின் சிகிச்சை அளித்த பதற்றத்தையும் மீறி உமாவிற்கு வலித்தது. அவனது உயிருக்குயிரான தங்கையும், அவனும் வருத்தப்பட தான் காரணமாகிவிட்டோமே என்ற வருத்தம் மேலோங்க, எப்படியாவது பவித்ராவின் மீதி உயிரை மட்டுமாவது தனசேகரனிடம் மீட்டுக் கொடுத்து விட வேண்டும் என்ற உந்துதலில் பவித்ராவின் நூலிழை உயிருடன் போராட ஆரம்பித்தாள்.

பவித்ராவின் உயிர் நிலைப் போராட்டங்கள், தேவ் மற்றும் அவன் நண்பர்கள் மேல் விஜய் கொண்ட கொலை வெறியை வளர்த்துக் கொண்டே போக, அவளது உடல் நிலை மிக மோசமான நிலையை அடைந்த போது, அடக்கி வைத்த கொலைவெறியை ஒரு அளவிற்கேனும் வெளியே காட்டும் எண்ணத்தில் கல்லூரி விடுதியை அடைந்தான் விஜய்.

புயலென தேவின் அறைக்குள் சென்றவன், உறங்கிக் கொண்டிருந்த தேவை பிடித்து உலுக்கி, அவன் மனதிலிருந்த வேதனையைக் குமுறலாய் வெளியிட்டு, சரமாரியாய் அடிக்கத் தொடங்கினான்.

முதலில் தன் நிலையில் இல்லாமல் தடுமாறிப் போயிருந்த தேவ் சுதாரித்துக் கொண்ட வேளையில், மற்ற இருவரின் நண்பர்களும் அங்கே வந்து சேர்ந்தனர். அடுத்த சில நிமிடங்களில் அங்கே ஒரு பெரும் பரபரப்பு எழுந்து அடங்க, விடுதியின் மேற்பர்வையாளார் நடுவில் புகுந்து விசாரணையைத் தொடங்கினார். அவரது விசாரணைக்கு தேவ், விஜய் தான் அனாவசியமாய் சண்டைக்கு வந்ததாகவும், என்ன விஷயம் என்று தனக்கு ஏதும் தெரியாது என்றும் கூற, விஜயிடம் திரும்பிய விசாரணையில் அவனால் உண்மை நிலையை சொல்ல முடியவில்லை. சொல்லி ஒரு பெண்ணின் அவலத்தைப் படம் பிடித்துக் காட்ட விரும்பவில்லை என்றால் சொல்லாமல் ஒரு மிருகத்தை ஜெயிக்க வைக்கவும் அவன் மனம் இடம் கொடுக்கவில்லை.

Property of Bhuvana

ஒன்றும் சொல்லாமல், சொல்ல முடியாமல் சிற்சில அடிகளோடு திரும்பிய விஜய்ஆனந்தை, பார்க்க உமாவிற்குச் சகிக்கவில்லை என்றபோதில் தனசேகரனுக்கும், வைரவனுக்கும் அவன் காயங்கள் தங்கள் வீட்டுப் பெண்ணின் உயிரை விட முக்கியமானதாகப் படவில்லை. அவர்களது நிலையில் அது நியாயம் தானே?

அன்றைய இரவு கனியும் வரை, பவித்ராவின் சிகிச்சை நிர்மலாவின் இரண்டு அரை கொண்ட சிறிய கிளினிக்கின் பார்வையாளர் அறையிலேயே நடை பெற்றது. அங்கு கூடியிருந்த ஆண்கள் மூவரையும் சற்று வெளியே இருக்கும் படி கூறிய உமாவை பலம் கொண்ட மட்டும் முறைத்தான் தனசேகரன்.

சற்று நேரத்தில் வெளியே வந்த உமா, "மாமா, நீங்க வந்து அவகிட்ட பேசிட்டே இருங்க. நீங்க பேசப் பேச அவளுக்குள்ள ஏதாவது மாற்றம் நிகழலாம்" என்று கூறி அவரை மட்டும் உள்ளே அழைத்துச் சென்றாள்.

இப்படியாக தொடர்ந்த பவித்ராவின் சிகிச்சை வெற்றி என்றும் சொல்லமுடியாமல் தோல்வி என்றும் சொல்ல முடியாமல் அனைவரையும் வாட்டி எடுத்தது. அந்த வாட்டலும் வதக்கலும் மேலும் ரெண்டு நாட்களுக்குத் தொடர, ஊண் உறக்கமின்றி விஜயும் தனசேகரனும் அங்கேயே அடை காத்தனர். மிக வற்புறுத்தலுக்குப் பின்னர் வைரவனை மட்டும் இரு வேளை உணவையும், ஒரு வேளை மாத்திரையையும் புகட்டினாள் உமா.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், அபாயம் என்ற நிலையைத் தாண்டிய பவித்ரா உடனடியாக கண் முழித்துவிடவில்லை. ஆனால் அவள் உடல் நிலை அதன் பின்னர் பின்னடையாமல் இருக்க, போதிய மருந்துகளையும் கண்காணிப்பையும் தன் ஆசிரியர் ஒருவரின் ஆலோசனைப் படி பார்த்துப் பார்த்து செய்திருந்த உமா, தோழியை அவளுக்குத் துணை இருக்கச் சொல்லிவிட்டு விஜயுடன் வெளியே கிளம்பினாள்.

தனசேகரனின் எதிரே அமர்ந்திருந்த விஜயிடம் வந்தவள், "விஜய், நான் ஒரு முக்கியமான வேலைக்காக வெளியே போறேன். என்னோட துணைக்கு வர முடியுமா?" என்று கேட்டு, விஜயை அழைத்துச் சென்றதை ஒரு விநோதப் பார்வை பார்த்த தனசேகரனுக்கு இந்த நேரத்தில் என்ன வேலை? என்ற நினைப்பு இருந்த போதிலும்,

அதில் கவனத்தைச் செலுத்த முடியாமல் டியூப்களும் ஊசிகளும் புடை சூழ, பல போராட்டங்களுக்குப் பின்னர் மீட்ட உயிரைத் தொலைக்கமாலிருக்க போராடிக் கொண்டிருக்கும் தங்கையும், "பாப்பா, பாப்பா" என்று இடை விடாது அவளை எட்ட முயன்று கொண்டிருந்த தந்தையும் தான் முற்று முதலாய் பட்டனர்.
விஜயைத் துணைக்கு அழைத்துக் கொண்டு சென்ற உமா, முதலில் சென்றது காவல் நிலையத்திற்கு!

இது முதல் ஆச்சிரியம் கலந்த அதிர்ச்சி என்றால், "என் அண்ணன் தேவ் மற்றும் அவன் நண்பர்கள் ஸ்டீவன், நிலேஷ் மற்றும் நவீன் என்னிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றனர்" என்று உமா கொடுத்த புகார் விஜயிடம் ஒரு பெரும் அதிர்வை ஏற்படுத்தியது!
அவனிடம் மட்டுமில்லை, அங்கிருந்த காவல் நிலைய அதிகாரியே பெரிதாய் அதிர்ந்து போனார். அவர் கேட்ட கேள்விகளுக்கு (எங்கே? எப்படி? எத்தனை பேர்? உங்களுக்கும் உங்கள் அண்ணனுக்கும் ஏதேனும் பகையா? இவர் உங்கள் நண்பரா இல்லை காதலனா? உங்கள் அண்ணன் உங்கள் காதலுக்குத் தடையை இருப்பதால் தான் அவருக்கு எதிராக புகார் கொடுக்க வந்திருக்கிறீர்களா?) உரிய பதிலை, தாமதமின்றி கோர்வையாய் சொன்ன உமாவை கைப்பிடித்து அழைத்துக் கொண்டு எழுந்தான் விஜய்.
அவனுடன் வெளியேறுவதற்கு முன்னர், தான் கொடுத்தப் புகாரை தவறாமல் விசாரிக்கும் படி கேட்டுக் கொண்ட உமா, வெறித்தப் பார்வையுடன் நண்பனுடன் நடந்தாள்.

Property of Bhuvana

காவல் நிலையத்தை விட்டு சற்று தூரம் வந்ததும் "உமா, நீ பண்ணிட்டு வந்திருக்கிறது சுத்தப் பைத்தியக்காரத்தனம்" என்றான் விஜய்.

"ஹ்ம்ம் ஆமா சுத்தப் பைத்தியக்காரத் தனம் தான். கண் கெட்டப்பின்னர் சூர்ய நமஸ்காரம் செய்றேன். சுத்தப் பைத்தியக்காரத்தனம் தான். நம்ம மாதிரி வேற எந்தக் கண்ணும் கெடாமல் இருக்குமே?" என்று சாலையில் விரைந்த வாகங்களை வெறித்துக் கொண்டு உமா கூற,

"ப்ச்,இந்த போலீஸ்காரரே இத்தனை கேள்வி கேட்கும் போது.... என்ன உமா இது? உன்னால அவங்க கேட்கிற கேள்வியின் வீரியத்தை எல்லாம் தாங்க முடியாது உமா. பச்சையா... ரொம்ப கொச்சையா இருக்கும் உமா" என விஜய் நிஜத்தை எடுத்துரைக்க,

"பவி அனுபவிப்பதை விடவா?" என்ற உமாவின் கேள்வியில் பவித்ராவின் தூக்கிப் போட்ட உடல் கண் முன்னே வந்து போனது.

"என்னால் தான் விஜய், என்னால் தான் அவள் இப்படி ஒரு நிலைமையில் இருக்கிறாள். ஹய்யோ நெஞ்சு கனக்குது விஜய்" என்று அரற்றிய உமாவை, நடு ரோடு என்றும் பாராமல் தோளில் சாய்த்துக் கொண்டு, தலையை வருடிக் கொடுத்த விஜயின் கண்களிலும் குற்ற உணர்வு குறையாமல் காணப்பட்டது.

உமாவின் அரற்றல் சற்றே அடங்கிய பின்னர், "கொஞ்சம் யோசித்து செய்யலாம் உமா. பவித்ராவின் வேதனை, தனாவின் கோபம் இதையெல்லாம் பார்க்க முடியாமல் தான் நீ இந்த முடிவுக்கு வந்திருக்கன்னு புரியுது. ஆனா, நீ... உன் பெயர்... வாழ்க்கை" என விஜய் தயங்க,

"இன்னும் என்ன வாழ்க்கை? என்னால் தனாவைத் தவிர யாரையும் கல்யாணம் பண்ணிக்க முடியாது. இந்த நிகழ்விற்குப் பின்னர் தனாவின் முன்னால் என்னைக் கல்யாணம் பண்ணிக்கோங்க என்று கையேந்தி நின்னா கூட காறித் துப்பி என்னை விரட்ட மாட்டார்? அப்படி கேட்கிறது எத்தனை பெரிய சுயநலம்? இதற்கெல்லாம் அப்புறம் என்ன விஜய் வாழ்க்கை?" என உமா விரக்தியாய் பேச, அவளுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகளைத் தேடிக் களைத்தான் விஜய்.

"உமா, நான் போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுக்க வேண்டாம் என்று சொன்னது தேவ்வையோ வேறு யாரையோ காப்பாற்றுவதற்காக இல்ல மா. அது உனக்குப் புரியும் என்று நினைக்கிறேன். நான் வேண்டாம்ன்னு சொன்னதன் காரணம், அவர்களால் எந்த ஒரு புகாரையும் இல்லை என்று ஆக்க முடியும். உன் அப்பாவையே எடுத்துக்கிட்டால் பணத்தைக் கொடுத்து இதை சமாளிக்க முயற்சி பண்ண மாட்டாரா? இதை வேற வழியில் தான் உமா ஹான்டில் செய்யணும்" என்றவனின் வார்த்தைகளைப் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாய் வருத்தத்தோடும், ஹய்யோ இந்த கம்ப்ளைன்ட் அவர்களுக்குத் தண்டனை பெற்று தராது போலிருக்கே என்ற தவிப்போடும் தலை அசைத்தாள், அவனது தோழி.

"பவியை இதில் கொண்டு வந்து அவள் படும் வேதனையை அதிகரிக்க எனக்கு இஷ்டமே இல்லை. அவளைக் கொண்டு வராமலே இந்த மிருகங்க நாலு பேரு மேலையும் ஏதாவது கம்ப்ளைன்ட் கொடுக்கணும், அதுவும் காலேஜ் மேனேஜ்மென்ட்ல." என்றவனை விசித்திரமாய் பார்த்தவளின் கண்களில் கேள்வி இருந்தது. அதை கவனிக்காமல் விஜய் பேசிக் கொண்டே போனான்.

"தப்பிக்க வழி இல்லாத மாதிரி கொடுக்கணும். அவங்களோட டாக்டர் என்ற பட்டத்தை, அதனால் உண்டாகும் திமிரை, யாரையும் எப்படியும் நடத்தலாம் என்ற அயோக்கியத்தனத்தை... எல்லாத்தையும் ஒண்ணுமில்லாம செய்யணும். ஒருத்தரோட வாழ்க்கையை நித்சலமாய் அழிப்பது என்றால் அவங்களுக்கு என்னன்னு தெரிய வேண்டாம்? வாழ்க்கையில் செஞ்ச மிகப் பெரிய பாவத்திற்கு அவங்க வாழ்க்கையே கேள்விக் குறியாக்கி அவங்களை வாட்டி எடுக்கணும்" என்று

Property of bhuvana

கூறிய போது விஜயின் கண்களில் சீற்றம் தெரிந்தது. மலராமலேயே கருகிப் போன தன் காதலின் மீது வெளிச்சமோ?

இத்தனை சீற்றத்துடன் பேசியவன், "ஹாஸ்டல்ல நடந்த தகராறை கம்ப்ளைன்ட்டா கொடுக்கலாம் என்று பார்க்கிறேன். இரண்டு நாளாய் ஸ்டுடென்ட்ஸ் சில பேரை என்னோட சேர்த்துட்டு இருக்கேன். இன்னைக்கு இல்லை நாளைக்கு எல்லாரும் ஒண்ணா சேர்ந்து போய் கொடுத்தா, மேனேஜ்மென்ட்ல மறுக்க வாய்ப்பே இல்லை" என்று தனது திட்டத்தை எடுத்துக் கூறினான்.
ஆனால் உமாவோ "அந்தத் தகராறை மட்டும் வச்சு ஆக்க்ஷன் எடுப்பாங்க என்று தோணலை விஜய். அது உன் மேலேயே திரும்பவும் வாய்ப்பிருக்கு" எனத் தான் நினைத்ததைக் கூறவும்,

"ஹ்ம்ம் தெரியும் உமா. அவங்களோட சேர்ந்து என்னையும் மேனேஜ்மென்ட் டிக்ளைன் செய்யலாம். நானும் செஞ்ச தப்புக்கு அனுபவிக்க வேண்டாம்" என்றான் அதை அறிந்தவன் போல்.

"நீயும் அவங்களும் ஒண்ணில்லை விஜய். நீ வேண்டுமென்றே செய்யலையேடா" எனக் கூறிய போதும், அது தப்பில்லை என்று சொல்ல அவளால் முடியவில்லை. அவளது முகத்திலிருந்து அதை கண்டு கொண்ட விஜய், ஒன்றும் சொல்லாமல் வெளியே வெறித்தான்.

"தெரிந்து செஞ்சிருந்தாலும், தெரியாமல் செஞ்சிருந்தாலும் தப்பில்லை என்றாகதில்லையா உமா? அதுவும் பவி படற வேதனையைப் பார்த்துட்டு யாருமே அப்படி சொல்ல மாட்டாங்க. சரி, திரும்பத் திரும்ப நாம அதைப் பேசுறதால பவியோட வேதனை குறையப் போறதில்லை. அதனால, இப்ப ஆக வேண்டியதைப் பார்க்கலாம் உமா" என்றவன்,

Property of Bhuvana

"நீ கிளினிக் போ, நான் ஹாஸ்டல் போய் பசங்ககிட்ட பேசிட்டு, இன்னைக்கே கம்ப்ளைன்ட் கொடுத்துட்டு வரேன்" எனக் கூறி, ஒரு ஆட்டோவைக் கை தட்டி அழைத்தான்.

"இல்ல, இல்ல, நானும் உன்னோட வரேன்" என்று கூறி அவனுடன் வந்தாள் உமா. விடுதியில் தனக்குத் தேவையான பொருள் எதையும் எடுக்கத் தன்னுடன் வருகிறாளோ என்றெண்ணிய விஜய் அதை கேட்கவும் செய்த போது விசித்திரமாய் அமைதி காத்தவள், அவளாகவே நண்பனின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

உமாவை பெண்கள் விடுதி அருகில் விட்டுவிட்டு, தன் உடன் வசிப்பவர்கள் சிலருடன் பேசிய விஜய், எதற்கு வீண் வம்பு என பயந்து ஒதுங்கிய பலரை பார்த்துப் பல்லைக் கடித்தாலும், உடன் வந்த சிலரை அழைத்துக் கொண்டு கல்லூரி அலுவலகம் நோக்கிச் சென்ற போது உமா அங்கிருந்து வெளி வந்து கொண்டிருந்தாள்.

என்ன நடந்திருக்கும் என்று அவளது கல் போன்ற முகத்திலிருந்து சரியாகவே படித்தான், அவளது நெடு நாள் நண்பன். ஆனால் படித்த விஷயம் தான் சற்று உவப்பாக இல்ல.

"என்ன செஞ்சிட்டு வந்திருக்கே உமா? management-ல கம்ப்ளைன்ட் கொடுத்திட்டியா? போலீஸ்ல கொடுத்த அதே கம்ப்ளைன்ட்டா? யோசிச்சுத் தான் செய்றியா? உங்க அம்மா-அப்பாவை எப்படி சாமாளிப்பே?" என அவளது மனதைப் படித்தான்.

"இப்படி ஒரு பிள்ளையைப் பெத்து வளர்த்ததுக்கு வருத்தப்பட வேண்டாம்? வருத்தம் மட்டுமில்ல அவனைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினதற்கு வாழ்நாள் முழுக்க அவங்க அனுபவிக்கணும்" என பல்லைக் கடித்துக் கருவிய உமாவிடம், "எனக்கு உன் கோபம் புரியுது. ஆனா... நீயே சொன்ன மாதிரி தனா உன்னை மன்னிக்கிறது என்பது இப்போதைக்கு சாத்தியமான காரியமாய்

Property of Ebhuvana

எனக்குப் படலை. அப்படி இருக்கும் போது அம்மா-அப்பா சப்போர்ட்டையும் இழந்துட்டு.... வேண்டாம் உமா" என நண்பனாய் அவளுக்கு அறிவுறுத்தினான் விஜய் ஆனந்த்.

"நீ எனக்கு சப்போர்ட் பண்ண மாட்டியா விஜய்? பவியோட நிலைக்கு நான் காரணம் என்று நீயும் என்னை ஒதுக்கி வைச்சுடுவியா?" என முகம் கசங்க உமா கேட்டப் போது விஜய் உடைந்து போனான்.

"நீ காரணம் என்றால் அப்புறம் நான்?" என்று சிறு கேள்வியாய் தான் படும் பாட்டை எடுத்துக் கூறிய கையோடு, "நீ என்ன செய்யணுமோ செய், நான் துணையா இருக்கேன்" என்றவன், உமாவின் வெறித்தப் பார்வை அவளது நடையில் தடுமாற்றத்தைக் கொண்டுவர, அவளை வழி நடத்தி மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றான்.

மருத்துவமனையையும் அடைந்ததும் நிர்மலாவை அழைத்துப் பவித்ராவின் உடல்நிலையில் எந்தப் பின்னடைவும் இல்லை என்றும், அவள் மயக்கத்திலிருந்து விழிக்க சில மணி நேரமாகும் என்று விஜய் கேட்டுத் தெரிந்து கொண்டான். என்றால் மனதில் எண்ணிய வேலையை வெற்றிகரமாய் ஆரம்பித்துவிட்டச் சிறிய திருப்தியோடு வந்த உமா, கிழிந்த நாராய்... கிழிக்கப்பட்ட நாராய் உறங்கும் பவித்ராவின் அருகில் போய் சற்று நேரம் கண் மூடி நின்றாள்.
மகளின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டதும், மகனிடம் வீட்டிற்குச் சென்று வருமாறு கூறினார் வைரவன். அவன் மறு விநாடியே மறுக்கவும், அதை எதிர்பார்த்திருந்தவர் போல் தனக்கும், பவித்ராவிற்கும் சில பொருட்கள் வேண்டுமென்று கூறி அதை எடுத்துவருமாறு அவனை ஏவினார். அவர் கூறிய பொருட்களின் அத்தியாவசியம் புரிந்த போதும், சற்று தயக்கத்திற்குப் பின்னர் தங்கையைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்ற தனசேகரனைக் காண அனைவருக்குமே கஷ்டமாய் இருந்தது.

Property of Bhuvana

அவன் சென்ற சில விநாடிகளில் உமாவிடம் அவள் செய்துவிட்டு வந்த வேலையைப் பற்றி துருவித் துருவி கேள்வி கேட்ட வைரவன், முடிவில் அதிர்ந்து போனார்.

"என் பெண்ணின் நிலைக்காக நீ ஏனம்மா உன் குடும்பத்தைப் பகைத்துக் கொள்ள வேண்டும்?" என்று அவர் மயங்கிய போது
"உங்க மகன் என்னை எட்டி உதைத்தாலும், என் மனதளவில் இது தான் மாமா என் குடும்பம். என் தங்கைக்கோ என் பெண்ணிற்கோ இப்படிப்பட்ட கொடுமை நடந்திருந்தால் எந்த அளவு கொதித்துப் போவேனோ அதே மாதிரி தான் மாமா பவியும் எனக்கு" என்று அவர் கண்களை நேராய் பார்த்துப் பதில் கூறிய உமா அவரது நெஞ்சத்தில் உயர்ந்து நின்றாள்.

அவர் ஒன்றும் சொல்லாமல் கண்களில் நீர் வழிய, கை கூப்பி அவளைக் வணங்கிய போது, அத்தனை நேரம் கல்லென கண்ணீரைத் தனக்குள் அடக்கி வைத்திருந்த உமாவும் வெடித்து அழுதாள்.
சற்று நேரத்தில் ஒரு நிலையை அடைந்த உமா, விஜய் வாங்கி வந்த உணவை அவரை வற்புறுத்தி உண்ண வைத்ததோடு நில்லாமல் மற்றொரு அறையில் அவரை சற்று நேரம் உறங்கச் செய்தாள்.

இரண்டு நாட்களாய் பவித்ராவின் வேதனைகளையும் போராட்டங்களையும் சற்று தூரத்திலிருந்தே பார்த்திருந்த விஜய், இப்போது தனித்து விடப்பட்ட பவித்ராவை மெல்ல நெருங்கினான். தோழிகள் இருவரும் வெளியில் நின்று விட, கண் மூடிப் படுத்திருந்த பவித்ராவின் அருகில் சென்றவன், பார்வையால் அவளை முதலில் ஒரு தரம் வருடிக் கொடுத்தான்.
அவள் கைகளில் இருந்த கட்டும், ஆங்காங்கே இருந்த காயங்களும் வரவழைத்த கண்ணீரை முயன்று கட்டுக்குள் கொண்டு வந்தவன், "பவி" என மெல்ல அழைத்தான்.

Property of Bhuvana

அவளது நெற்றியில் தன் உள்ளங்கையை வைத்தவன் "எப்படி இருக்கே கண்ணம்மா?" என்றவனின் பார்வையை அவளை விட்டு இம்மியும் அகலவில்லை. அவளது நெற்றியில் ஒரு கரமும், உள்ளங்கையில் ஒரு கரமும் வைத்த விஜய் அப்படியே மண்டியிட்டு, அவளது காது மடல் அருகில் இதழ் வைத்துப் பேச ஆரம்பித்தான்.

"உன்கிட்ட நான் முதலில் கேட்பது காதலாய் தான் இருக்கவேண்டும் என்று நினைச்சேன் கண்ணா, ஆனா ஒரு பெரிய குற்றம் செய்து விட்டு அதற்கு மன்னிப்பு கேட்டு உன் முன்னாடி நிற்பேன் என்று நான் நினைக்கவே இல்லையே" என்று கூறிய போது நெஞ்சத்தின் வலியை குரல் தேக்கி வைத்திருந்தது.

அவள் அவன் பேசுவதைக் கேட்டு வியப்பது போன்ற கற்பனை அவன் முன்னால் வந்து போனதோ என்னவோ "ம்ம், ஆமா பவி... உன்னை நான் மனதார காதலிக்கிறேன். எந்தவிதமான உந்துதலும் இல்லாமல் நீயாகவே என்னோட காதலைப் புரிந்து கொள்ளணும் என்று நினைச்சுத் தான் உன்கிட்ட சொல்லாம இருந்தேன். என் கண்ணுக்கு நீ ரொம்பச் சின்னப் பெண்ணா இருந்தேடா, இந்தப் பாவிங்க கண்ணுக்கு அப்படித் தெரியல போல... உன்னைப் போய்" என்று தன் காதலில் ஆரம்பித்து அன்றைய நிலையில் கொண்டு வந்து நிறுத்தியவன், அவள் நெற்றியிலிருந்த கையை எடுத்து அவள் முகத்தை வருடிக் கொடுத்தான்.

"பவிம்மா, உன்னை நான் காதலிச்சது உண்மைடா" என்று உணர்ச்சிப் போங்க கூறிய விஜய், தொடர்ந்து தன் மனதை, உறங்கும்(!) அவளிடம் சொல்லிவிடும் பொருட்டுப் பேசிக் கொண்டே போனான்.

"அந்தக் காதல் எந்த நிலையிலும் நிலைச்சிருக்கும். நீ அதை உணர்ந்தாலும் சரி, உணரலை என்றாலும் சரி" எனக் கூறிய போது அவள் கசங்கிய முகத்தில் கேள்வி பிறந்தது போல் கற்பனை தோன்றியது.

Property of Bhuvana

அவளது வேதனையை உடனே நீக்கி விடும் பொருட்டு "நாலு பேர் நாயை விடக் கேவலமாய் நடந்து கிட்டதால நீ எந்த விதத்திலும் தாழ்ந்து போய்டல பவித்ரா சரியா? நீ நல்லபடியா உடம்பைத் தேத்திக்கிட்டு வா. உன்னைக் கண்ணுக்குள் வச்சுப் பார்த்துக்க அப்பா, அண்ணா, உமா என்று நிறைய பேர் இருக்காங்க. அதில் ஒருத்தனாய் நானும் இருக்க விரும்புவேன், விரும்புகிறேன்... நீ என்னை ஏற்று கொண்டால்" என்றான் அவசரமாக.

"ஆமா கண்ணம்மா, நீ தான் ஏத்துக்கணும். பெரிய தப்பு பண்ணிட்டு உன் முன்னால் கூனிக் குறுகி நிற்கிற என்னை நீ தான் ஏத்துக்கணும்" என்று உணர்ச்சி வேகத்தில் கூறிக் கொண்டே போனவன்,

"இப்போவே, இப்படியே உன்னை என்னோட வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய் உன்னை ராணி மாதிரி வச்சுக்கணும் என்று மனசு பரபரக்கத் தான் செய்யுது. அம்மா கிட்ட சொல்லி, உன் அப்பா கிட்ட பேச சொல்லலாம் தான். ஆனா நான் அதை இப்போ செய்தா, ஏதோ பெரிய தியாகம் செஞ்ச மாதிரியும், பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணிற்கு வாழ்வு கொடுத்த மாதிரியும் தான் தெரியும். அப்படிப்பட்ட தியாகமா என்னோட காதல் மாற நான் விரும்பல. மேலும் எனக்கு உன்னை ஒரு பரிதாபப் பொருளாய் கூட்டிட்டுப் போக மனசில்லை கண்ணம்மா" என்று தன் மனதில் உள்ள அனைத்தையும் எங்கேயாவது இறக்கி வைத்துவிடும் வேகத்தில் அவன் பேசிக் கொண்டே போக, பவித்ராவின் உடல் சற்றே அசைந்தது.

ஏறிய குரலை உடனே இறக்கிய விஜய், மீண்டும் அவள் நெற்றியில் கை வைத்துச் சற்று நேரம் கண் மூடி நின்றிருந்தான். மூடிய விழிகளை அவன் மலர்த்திய போது பவித்ராவின் பார்வையை நேராய் சந்திப்போம் என்று அவன் நினைத்திருக்கவே இல்லை.

அலை பாய்ந்த மானின் தவிப்புடனிருந்த பவித்ராவின் விழிகள் விஜயின் விழிகளைக் கண்டதும் ஒரு கணம் மிரண்டு போயின. அவளது மிரண்ட பார்வையைக் கண்டதும் விஜயின் முகம் கனிந்து போனது.

Property of Bhuvana

"என்னடா" என வார்த்தையின்றி கண்ணாலேயே கேட்டவனின் கனிந்த பார்வை, அவள் கருமணிகளைக் கீழே செலுத்தி தன்னைத் தானே ஆராய்ந்து கொள்ளவும், நொடியில் கசங்கி, பின்னர் பெரும் அன்பைப் பொழிந்தது.
பவித்ராவின் மலர்ந்த விழிகள் மீண்டும் சோர்ந்து போய் மூடிக் கொள்ள, விஜய் லேசாய் பதறினாலும் அவளது நாடித் துடிப்பை சோதித்து விட்டு இயல்பிற்கு வந்தான்.

மூடிய விழிகளின் வழியே என்ன கண்டாளோ, நாடி பிடித்து பார்த்த அவன் கையை இறுகப் பற்றிக் கொண்ட பவித்ரா அதை விடவே இல்லை. கையை உருவிக் கொள்ளாமல் அவள் காலடியில் மண்டியிட்டு அமர்ந்திருந்த விஜய், வைரவன் எழும் அரவம் கேட்ட போது தான் மனமின்றி எழுந்து போனான்!!

பவித்ராவை குணமாக விட்டு விட்டு, நாம் உமா கொடுத்த புகாரின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கையை விரிவாக பார்க்கலாம்.

ஒரு பெண் தன் அண்ணன் மீதே புகார் கொடுக்கிறாள் என்றால், அதுவும் பாலியல் ரீதியான புகார் என்ற நிலையில் காவல் நிலையம் உடனே நடவடிக்கை எடுத்ததோ இல்லையோ கல்லூரி நிர்வாகம் உடனே விசாரணைக் கூடத்திற்கு ஏற்பாடு செய்து, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தகவல் சொல்லி அனுப்பியது.

விஜயிடம் நடந்த தகராறுக்குப் பின்னர் தனசேகரனும் வரலாம், வந்து அவர்களைக் கொன்று கூட போடலாம் என்ற அச்சம் தோன்றியதோ என்னவோ தேவ் மற்றும் அவன் நண்பர்கள், விஜயிடம் தகராறு நடந்த அன்றே வெளியூர் கிளம்பிச் சென்றிருந்தனர்.

Property of Bhuvana

வெளியூரில் உல்லாசமாய் ஊர் மெய்து கொண்டிருந்தவர்களுக்கு கல்லூரியிலிருந்து விசாரணைக்கென வந்த அழைப்பு, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கல்லூரி நிர்வாகம் எதற்கு விசாரணை என்று சொல்லாமலே அழைத்திருந்ததால், அவர்களுக்கு விஷயம் வெளியாகிவிட்டதா இல்லை வேறு ஏதும் விசாரணையா என்று புரியவில்லை. ஓரிரு தப்பு செய்திருந்தால் பரவாயில்லை. பாவம், அவர்களும் தான் எதற்கென்று நினைப்பார்கள்?!?!

விசாரணைக்காக கல்லூரி அலுவலகத்தினுள் நுழைந்தவர்களுக்கு உமாவின் புகாரை முன் வைத்து, கல்லூரி நிர்வாகம் கேள்வி கேட்டுக் குடைய ஆரம்பிக்கவும் திணறிப் போயினர். நண்பர்கள் நால்வரும் அந்த மாதிரி புகாரை (அதாவது உமாவிடம் தப்பாக நடந்து கொள்ள முயன்றதாக புகார் வந்திருக்கும்) எதிர் பார்த்திருக்கவே இல்லை.

தேவ்விற்கு கட்டுக் கடங்காமல் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. ஒரு தங்கை அண்ணன் மேல் கொடுக்கும் புகாரா இது? என்ற ஆத்திரத்தை அவன் டேபிள்ளைக் குத்திக் காண்பிக்க, அதுவும் தப்பாய் போனது. அவன் கூறிய "அவளது காதலை நான் ஆதரிக்கவில்லை என்பதால் அபாண்டமாய் பழி சொல்கிறாள்" என்ற வாதம், "ஒரு பெண் என்னவிதமான தடங்கல் என்றாலும் இப்படிப் பட்ட புகாரைக் கொடுக்க மாட்டாள். அதுவும் தன் அண்ணன் மீதே" என்ற பிரதிவாதத்தை கல்லூரி முன் வைத்தது.

இது போன்ற புகார்களை விசாரிக்கும் போது, சம்மந்தப்பட்டவர்களை சஸ்பென்ட் செய்த பின்னரே விசாரணை முடிவு அறிவிக்கப் படும் என்றாலும், இப்போது சம்மந்தப்பட்டவர்கள் அனைவரும் கடைசி வருடப் படிப்பில் இருந்ததாலும், அவர்களது கடைசி தேர்வு முடிவடைந்த பட்சத்திலும் நால்வரையும் அந்தத் தேர்வில் டிக்ளைன் செய்ய முடிவு செய்தது கல்லூரி நிர்வாகம்.

விசாரணை முடிவிற்கு வரும் முன்னரே தேர்வு முடிவுகளை அறிவிக்க வேண்டியிருந்ததால், அடுத்த நாள் வெளியான தேர்வு முடிவுகளில் நால்வரையும் டிக்ளைன் செய்த கல்லூரி நிர்வாகம், அவரவர் வீட்டிற்கு இதை குறித்து தனித் தனி கடிதங்களையும் அனுப்பி வைத்தது.

தேர்வு முடிவை அறிவித்து, அதன் பின்னர் அதற்கான காரணமாய் அவர்கள் வைக்கப்பட்ட குற்றச்சாட்டையும் குறித்து வந்த கடிதத்தைக் கண்ட பெற்றோர் அனைவரும் பதறி அடித்து ஓடி வந்தனர். அதிலும் வந்த அனைவரும் தத்தம் பிள்ளைகள் செய்த தவறை ஆராய விரும்பாமல், உமாவின் பெற்றோர் மேல் அவர்கள் வளர்த்திருக்கும் முறையைக் குறை கூற, ஏற்கனவே பெண் மேல் கண் மண் தெரியாத கோபத்தில் இருந்த ஜெகநாதன் கொதித்துப் போனார். அவரது அருமை புதல்வனும் அவருக்கு ஒத்து ஊத, உமாவைக் கண்டபடி திட்டத் தொடங்கினார்.

துபாயில் இருந்து வந்திறங்கிய உமாவின் பெற்றோர், அவளை ஃபோனில் அழைத்துத் தங்களைப் பார்க்க வருமாறு கூறிய போது, யோசனையின்றி "முடியாது" என்றவளின் மனதில் என்ன இருந்தது என்று யாருக்கும் புரியவில்லை.

அவர்கள் வந்திறங்கிய நாளிலிருந்து கல்லூரி விடுதிக்குச் செல்வதை பிடிவாதமாய் தவிர்த்தவள், நிர்மலாவின் கிளினிக்கிலேயே பவித்ராவுடன் இருந்து கொண்டாள். மகள் அழைப்பை எடுக்காததில் கோபமுற்று, அவளது தோழிகளிடம் (அவர்களுக்குத் தெரிந்த சிலரிடம்) பேசி விவரமறிய முற்பட்ட அவளது குடும்பத்தினருக்கு ஒன்றும் பெரிதாய் தெரிந்து விடவில்லை.

அவர்களை ரொம்பவே அலைய விடாமல், அடுத்த நாளே மற்றொரு விசாரணைக்கு அழைத்திருந்தது கல்லூரி நிர்வாகம். குற்றம் சுமத்தப்பட்டவர்கள் முன்னரே வந்து காத்திருக்க, சுமத்திய உமா சரியான நேரத்திற்கு விஜயுடன் வந்திறங்கினாள். வந்தவள் யாரையும் பார்க்காமல், பார்க்கப் பிடிக்காமல் உள்ளே சென்ற போது அவளது தாயும், தந்தையும் கொதித்துப் போயினர்.

உள்ளே கல்லூரி நிர்வாகம், மீண்டும் அதே புகாரைப் படிக்க, ஆத்திரம் கொண்ட தேவ் "என்ன சார்? ஒரு பொண்ணு வந்து கம்ப்ளைன்ட் கொடுத்துட்டான்னு நீங்க இத்தனை கேள்வி கேட்குறீங்க? அது உண்மையா இருக்குமான்னு யோசிச்சீங்களா? அவ கொடுத்த கம்ப்ளைன்ட் உண்மையா பொய்யா என்று விசாரிக்க மாட்டீங்களா? ஒரு விர்ஜினிட்டி டெஸ்ட் எடுத்துப் பார்த்தா தெரிஞ்சுட போகுது. ஹ்ம்ம் அப்படியும் விர்ஜினிட்டி டெஸ்ட்ல அவ விர்ஜின் இல்ல என்று தெரிஞ்சுட்டா அதுக்கு நாங்க தான் காரணம் என்று எப்படி சொல்லமுடியும்?" என்றான் எகத்தாளமாக.

விஜய், "டேய்" என பல்லைக் கடித்துக் கொண்டு அவன் மேல் பாயத் தயாராக, அதை எதிர்பார்த்தவள் போல் விஜயின் கையை இறுகப் பற்றி அவனைத் தன் பக்கத்தில் நிறுத்தி வைத்திருந்தாள் உமா.

என்னதான் பொறுப்பற்ற தாயார் என்றாலும் கல்யாணமாகாத மகளைப் பற்றி மகனே இந்த வார்த்தை கூறிய போது, உமாவின் தாயாரால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. சுற்றி இருப்பவர்களை மறந்து "ச்சே நீ எல்லாம் ஒரு அண்ணனா? இல்ல முதல மனுஷனாடா நீ? ஒரு கல்யாணமாகாத பொண்ணைப் பார்த்து என்ன வார்த்தை சொல்றே? அதுவும் தங்கச்சியைப் பார்த்து? பொறுக்கி ராஸ்கல்" என்று அவனை அடிக்க கை ஓங்கினார்.

அவர் பேசியதைக் கேட்ட உமா, தாயிடம் மட்டுமேனும் முன்னரே பேசியிருக்க வேண்டுமோ என்று எண்ணி, அதற்கு லேசாய் வருந்தினாலும் அண்ணன் பேசியதற்கு பதிலடி கொடுக்காமல் நிற்கிறோமே என்ற கோபத்தில் அதற்குத் தயாரானாள்.

தந்தை, தாய் அடக்கிக் கொண்டிருப்பதைக் கண்ட உமா, ஒரு அருவெறுப்பான பார்வையை அவரிடம் செலுத்திவிட்டு "மிஸ்டர்.தேவேந்திரன் அவர் மேல் நான் கொடுத்த புகாரை ஒழுங்காக படிக்கவில்லை போல. அவரைச் சொல்லிக் குற்றமில்லை... தொட்டில் பழக்கம்" என்றவள் சிறு இடைவெளி விட்டு

"அவர் படிக்காத பட்சத்தில் மீண்டும் ஒரு முறை சொல்வதில் எனக்கு ஒன்றும் பிரச்சனையில்லை. தேவேந்திரனும் (அதாவது எனது தமையனும்) அவனது நண்பர்கள் ஸ்டீவன், நிலேஷ், நவீன் ஆகிய மூவரும் என்னிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றார்கள்" என்றவள் "முயன்றார்கள்" என்பதில் ஒரு பெரும் அழுத்தம் கொடுத்தாள். மகப்பேறு மற்றும் பெண்கள் நல மருத்துவரான தன்னிடமேவா? என்பது போலிருந்தது உமாவின்பார்வை.

தேவ்வின் கன்றி, கறுத்த முகத்தை ஏறெடுத்தும் பாராமல் "மருத்துவம் என்பது ஒரு புனிதமான தொழில். அதைப் பிடித்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே ஒரு பெண்ணிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றவர்கள், அதை முடித்ததும் அதற்குத் தீங்கு இழைக்கும் பொருட்டு இன்னும் பெரும் கொடூரங்களை நிகழ்த்தலாம் என்ற நிலையில் அதைத் தடுக்க என்னாலான முயற்சியாய் தான் இந்த புகாரைக் கொடுத்தேன்" என்று மிகத் தெளிவாய் கூறியவள், "இதைக் குறித்து நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்பது போல் அவர்களைப் பார்த்திருந்தாள்.

அத்துடன் விடப் பிடிக்காமல், "போர் கலைகள் சிலவற்றை நான் கற்றிருந்த பட்சத்தில் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொண்டேன். நான் முன்னரே சொன்னது போல், நான் அவங்ககிட்ட இருந்து விடுபட நடத்தின போராட்டத்தில் தான் அவர்களுக்கு இந்தக் காயங்கள். மேலும் என்னோட நண்பரான விஜய், இந்த விஷயமறிந்து தட்டிக் கேட்க போன போது தான் விடுதியில் கைகலப்பு வந்திருக்கிறது" என்று அண்ணன் மற்றும் அவன் நண்பர்களின் உடம்பில் இருந்த காயங்களையும், விஜய் அவர்களிடம் போட்ட சண்டையையும் தன் புகாருடன் அழகாய் இணைத்து, மிகக் கோர்வையாய் பேசி முடித்தாள்.

"மிஸ்டர். தேவேந்திரன், நாங்க இந்த புகாரை மட்டும் மையமா வச்சு உங்க மேல ஆக்ஷன் எடுக்கலை. நீங்க இந்த கல்லூரியில் படித்த இத்தனை வருடத்தில் எங்கள் கவனத்திற்கு வந்து சிலவும், வராமல் பலவும் என நிறைய புகார்கள், உங்கள் அனைவரின் மேலும் இருக்கு. எங்கள் கவனத்திற்கு வந்த சிலதிற்காக

Property of Bhuvana

உங்களைக் கூப்பிட்டு warn பண்ணியும் அனுப்பி இருக்கோம் என்பதை மறந்திருக்க மாட்டீங்கன்னு நினைக்கிறேன்" என்ற கல்லூரி போர்டு மெம்பெர் ஒருவர் கூறி நிறுத்திய போது, இதற்கு முன்னால் விசாரணைக்கென வந்து நின்ற தருணங்கள் குற்றவாளிகள் அனைவரின் கண் முன்னரும் வந்து போனதோ என்னவோ அவர்களது தலை தாழ்ந்து போனது.

மேற்படிப்பு படிக்கும் காலத்தில் குறைந்தது ஐந்து முறைக்கும் மேலாக வார்னிங் நோட்டீஸ் பெற்ற அனைவருக்கும் பெற்றோரை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை.

விசாரணை நடந்து கொண்டிருந்த சமயத்தில் காவல் நிலையத்திலிருந்து காவலர்கள் சிலர் வந்து சேர்ந்தனர், உமா கொடுத்த புகாரைக் கையில் எடுத்துக் கொண்டு.

உமா மற்றும் விஜயைத் தவிர அனைவருமே அதிர்ந்து (அதிர்ந்து என்ற வார்த்தை குறைவோ? அரண்டு எனக் கூறவேண்டுமோ?) போய் பார்த்துக் கொண்டிருக்க, கல்லூரி நிர்வாகம் சுதாரித்துக் கொண்டது. தங்கள் மாணவன் மேல் பாலியல் ரீதியான புகார் வைக்கப்பட்ட பட்சத்தில் அது போலீஸ் கேஸ், கோர்ட் விசாரணை என்று நீடிக்குமெனில் அது கல்லூரிக்கு நல்லதல்ல என்றெண்ணிய நிர்வாக இயக்குனர்கள், காவல் நிலைய மேல் அதிகாரிகளை அணுகி, விசாரணையை சில நாட்கள் ஒத்துப் போடுமாறு கூறியிருப்பர் என்பதை யூகத்தால் அறிந்து கொண்டனர் மற்றவர்கள்.

யூகம் சரியே என்று சொல்வது போல், தாங்கள் தக்க நடவடிக்கை (அதிக பட்சமாக, அவர்களை debar செய்வதாக - அதாவது இனிமேல் அவர்களது படிப்பை எங்குமே தொடர முடியாத வண்ணம்) எடுப்பதாகக் கூறிய கல்லூரி நிர்வாகம், காவல் நிலையப் புகாரை திரும்பி வாங்கிக் கொள்ளும் படி வற்புறுத்தியது. உமா மறுப்பை முகத்தில் கொண்டு வரும் முன்னரே அவளை முந்திய விஜய் "நான் உமா கிட்ட பேசுறேன் சார். நாங்க போலீஸ் கம்ப்ளைன்ட்டை வாபஸ் வாங்கிக்கிறோம்" என்றான் தோழியின் கையைப் பிடித்து அழுத்தியவாறே.

Property of Bhuvana

அவனுக்கு உமாவின் நலனும், அவளைப் பாதுகாக்கும் வகையுமே பெரிதாய் பட்டது. தற்போது தன் உயிர் போன்றவளுக்கு நடந்த கொடுமையில் சிறு பகுதி கூட மற்றொரு பெண்ணிற்கு, அதுவும் தன் நெருங்கிய தோழிக்கு வந்து விடக் கூடாது என்பதில் அவன் குறியாய் இருந்தான்.

இப்படியாய் நடந்த விசாரணையின் விளைவால் உமா அவளது குடும்பத்திலிருந்து ஒதுக்கி  வைக்கப்பட்டாள். எவனோ ஒரு வக்கிலாதவனை காதலித்துக் கொண்டு குடும்பத்தை எதிர்த்து நிற்பவள், கண்டிப்பாக அழிந்து போவாள் என்ற சாபத்துடன்!

பவித்ராவை நாசம் செய்த பாவிகள் நால்வருக்கும் உரிய தண்டனை என்றில்லா விட்டாலும், வாழ்க்கை முழுதும் நினைத்து வேதனை படுமளவிற்கு ஒரு சிறு தண்டனையை கொடுத்திருக்கிறோம் என்ற லேசான திருப்தியோடு உமாவும் விஜயும் இருக்க, அந்தத் திருப்தியைக் மேலும் குறைக்க பவித்ரா குணமானாள்!

பவித்ராவின் உடல் மெல்ல மெல்ல தேறி அவள் வீடு வந்து சேர சரியாக இருபது நாட்கள் பிடித்தன. மருத்துவமனையில் இருக்கும் வரை உமாவையும், விஜயையும் வரக் கூடாது என்று தனசேகரன் சொல்லவில்லை என்றாலும் அவர்கள் வருவது தனக்குப் பிடிக்கவில்லை என்பதை மிக வெளிப்படையாக காட்டினான்.

செய்ததைப் பெரும் தப்பு என்பதை விட குற்றம் என்று உணர்ந்திருந்த இருவரும் அவனது பார்வையில் அவமானப் பட்டாலும் அங்கு வந்து பவித்ராவைப் பார்ப்பதை நிறுத்தவில்லை.

இருபது நாட்கள் சென்ற பின்னர் பவித்ராவை வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என நிர்மலா கூறிய போது கூட, பவித்ரா யாரிடமும் தன் நிலையைக் கூறி அழுதாளோ இல்லை பேசினாளோ எனக் கூற முடியாது.

Property of Bhuvana

மயக்கத்திலிருந்து விழித்திருந்தாள். ஊட்டிய உணவை உண்டாள். அதுவும் உமாவோ நிர்மலாவோ வற்புறுத்தி கொடுத்தால் ஐந்து வாய் உணவைப் பிரச்சனையின்றி சாப்பிட்டாள். ஆனால் பார்வை மட்டும் எங்கோ வெறித்த வண்ணம் இருந்தது.

"பவிம்மா, பவித்ரா" என்ற அழைப்பு வந்தால் கசங்கிய பார்வை ஒன்றை பரிசாய் கொடுத்தாள். முன் போல் தந்தையோ, தமையனோ தலையை வருடினாலோ, கையைத் தொட்டாலோ வேகமாக கையை உருவிக் கொண்டாள்.

தானாக யாரிடமும் எதுவும் பேச முயன்றாளில்லை. உன்னால் பேசாமல் இருக்கவே முடியாதா? என்று வியந்தவர்கள் அவளது ஓர் அழைப்பிற்காக ஏங்கும் படி அனைவரையுமே தவிப்பில் ஆழ்த்தினாள்.

எந்த விதமான ஆறுதல் வார்த்தையும், அணுகலும் அவளை இம்மியும் அசைக்கவில்லை. விழித்திருந்த நேரத்தில் வெறித்த பார்வை வெறித்தப் பார்வையாகவே இருந்தது! அவள் மீண்டும் உறங்கும் வரை!

மௌனமொழி - பாகம் 24

உமாவையும் விஜயையும் தூர நிறுத்திவிட்டுப் பவித்ராவை அழைத்துக் கொண்டு தனசேகரன் கிளம்ப முயன்ற போது, "நேரம் கிடைக்கும் போது வீட்டிற்கு வந்துட்டு போ உமா, நீயும் தான் விஜய். உங்களிடம் அவள் கொஞ்சம் இயல்பாய் இருப்பது போல் இருக்கு" என்றார் வைரவன்.

"அப்பா, யாரை கேட்டு நீங்க இதெல்லாம் செய்றீங்க?" என தனசேகரன் எகிற,

"என் வீட்டுக்கு ஒருத்தரைக் கூப்பிட யார்கிட்ட டா கேட்கணும்" என்று பட்டென திருப்பிய வைரவன், அன்றைய சூழ்நிலையையும், மகனின் மனநிலையையும் உணர்ந்தவர் போல் "சேகர், அவங்க ரெண்டு பெரும் பவி மேல ரொம்ப அக்கறை..." என்று தொடங்கிய அவரது வாதம்,

"அக்கறையாம் அக்கறை. அவளோட இந்த நிலைமைக்கு அவங்க தான் காரணம் என்பதை மனசில் வச்சுக்கிட்டுப் பேசுங்க. என் வீடு என்றாலும் சரி உங்க வீடு என்றாலும் சரி என் தங்கையைப் பார்க்க அவங்க யாரும் வரக் கூடாது." என மிக மிக அழுத்தமாய் கூறப்பட்ட தனசேகரனது பிரதிவாதத்தினால் முடிந்தது.

தன் மனதில் இருந்ததைக் கூறிய கையோடு "வா பவி" என தங்கையைக் கைப்பிடித்து அழைத்தான். அதுவரை யாருக்கு வந்த விருந்தோ என்று அமர்ந்திருந்த பவித்ரா "பவி" என்ற அழைப்பைக் கேட்டதும் அதே சமயம் அண்ணன் தன் கையைப் பிடித்ததும், ஒரு மிரண்ட மானின் பார்வையை அவனிடம் வீசிவிட்டு தன் கையை அவனிடமிருந்து விடுவித்துக் கொள்ளப் போராடினாள்.

மற்றவர்கள் மேலிருந்த கோபம், அவளது இந்த செயலில் அர்த்தமில்லாமல் கூட "பவித்ரா" என ஓங்கி அழைத்து அவளை அடக்கியவன், அவளது அழுகையையும் மீறிக் கொண்டு வீட்டிற்குக் கூட்டி வந்து விட்டான். வேறு வழியின்றி வைரவன் மக்களுடன் கிளம்பிச் செல்ல, உமாவும் விஜயும் செய்யவதறியாமல் குற்ற உணர்வில் குன்றி போயினர். தனசேகரன், பவித்ராவை அழைத்துச் சென்றதில் மனம் சோர்ந்து போன நண்பர்கள் இருவருக்கும், அந்த சோர்வை நீடிக்க முடியாமல் பல வேலைகள் காத்திருந்தன.

தேவேந்திரனிடம் நடந்த விசாரணைக்குப் பின்னர் உமாவின் தாயார் மகள் பக்கம் நின்ற போதும், தந்தையால் மகளின் செயலை எதிர்த்து நிற்கத் தான் முடிந்தது.

அண்ணன் கொலையே செய்திருந்தாலும் அவன் பக்கம் தான் உமா நின்றிருக்க வேண்டும், அவன் குடி போதையில் அப்படி நடந்து கொண்டிருப்பான், நண்பர்கள் சிலர் தூண்டி விட்டிருக்கலாம், வேறு யாரோ என்றெண்ணி உமாவிடம் தவறாக நடந்து கொண்டிருக்கலாம், உமா தான் அவன் செய்த ஒரு சிறு தவறை பெரிய தவறாக எண்ணி இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டாள் - இப்படியாக பேசிய ஜெகநாதனை ஒரு புழுவைக் காண்பது போல உறுத்து விழித்த உமாதேவி, ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

இனிமேல் தனக்கும் அந்தக் குடும்பத்திற்கும் (அதாவது தேவ் இருக்கும் இடத்திற்கும்) சம்பந்தமில்லை என்ற முடிவிற்கு உமா வர, அதே முடிவை அவளது குடும்பமும் (தாயார் தவிர்த்து) எடுத்திருந்தனர்). கணவனுக்கும் மகளுக்கும், கூடவே மகனுக்கும் இடையே போராடிப் பார்த்த அந்தப் பெண்மணியாலும் ஏதும் பெரிதாய் சாதிக்க முடியவில்லை.ஒரு வாரப் போராட்டத்திற்குப் பின்னர் (பவித்ரா குணமாக எடுத்துக் கொண்ட பதினைந்து நாட்களில் நடந்தவை இவை எல்லாம்) வயதுப் பெண்ணைத் தாய் நாட்டில் தனியாக விட்டுவிட்டுப் பறந்தது அவளது பிறந்த வீட்டு உறவு.

அவர்கள் கிளம்பும் வரை பல்லைக் கடித்து பொறுத்த உமா, அவர்கள் கிளம்பிய தகவல் தன்னை எட்டிய முதல் வினாடி தனக்குள் அடக்கி வைத்திருந்த அழுகை, பாசம், வெறுப்பு, கோபம், ஆற்றாமை என்று எல்லாவற்றையும் அழுது தீர்த்தாள்.

காதல் கொண்டவன் துணையுமில்லாமல், பிறந்த வீட்டு உறவின் துணையுமில்லாமல் நட்பை மட்டுமே ஆதாரமாய் கொண்டிருந்த உமாவிற்கு உற்ற துணையாய், அரிய நண்பனாய், கள்ளமற்ற பாதுகாவலனாய் திகழ்ந்த விஜய், அவளை அப்போதைக்கு நிர்மலாவின் வீட்டின் மேல் பகுதியில் குடியேற்றி, வேண்டிய பொருட்களை வாங்கிக் கொடுத்து அவ்வப்போது அவளை வந்து பார்த்துக் கொண்டான்.

உமாவிற்கும், நிர்மலாவின் வீட்டின் மாடியில் இருப்பதே பிடித்திருந்தது. பவியை, தனாவை, வைரவனை என்று எல்லாரையும் ஒரு நாளைக்கு ஒரு தடவையேனும் பார்த்துக் கொள்ளலாமே என்ற அவளது எண்ணத்தைப் போலவே, விஜயும் எண்ணினான்.

ஆனால் அவர்கள் ஒன்றை நினைத்துச் செய்தால் அது வேறு வகையில் அல்லவா முடிந்தது? சில காலமாய் படு மோசமாய் இருந்த அவனது நேரத்தை மேலும் மோசமாக்க, குன்னூரிலிருந்து அலைப்பேசி அழைப்பு ஒன்று வந்து சேர்ந்தது. துளசிக்கு உடம்பு சரியில்லை என்றும்,அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார் என்றும் கூறிய அச்செய்தியை கேட்ட விஜய் துவண்டு போனான்.

என்னவென்று தூண்டித் துருவி விசாரித்தப் போது, ஏற்கனவே ஆஸ்த்மா நோயாளியான துளசி, பனி பொழியும் காலை வேளைகளில் அவர்களது தோட்டத்திற்குச் சென்று வேலை செய்ததில் ஆஸ்த்மா தன் வேலையை செவ்வென தொடங்கி, அங்கு தொடர்ந்து பெய்து கொண்டிருந்த பருவ மழையுடன் கூடவே வளர்ந்து பெரிய ஆபத்தாய் வந்து முடிந்திருந்தது.

செய்தியைக் கேட்டுக் கொண்டு சென்னையில் இருக்க அவன் அவனது தாயார் மேல் வைத்திருந்த பாசமும் பிணைப்பும் இடம் கொடுக்கவில்லை. அழைப்பு வந்து ஒரு மணி நேரத்தில், உமாவிடம் செய்தியை சொல்லிவிட்டு, பவியைப் பார்த்துக் கொள்ளுமாறு ஆயிரம் முறை வேண்டி விட்டு ஊருக்குப் பறந்த விஜய், திரும்பி வரும் போது யாருமே இருக்க மாட்டார்கள் என்றெண்ணி இருப்பானா என்ன?

ஊருக்குச் சென்ற விஜய்க்கு காய்ந்த சருகாய் இருந்த தாயைக் கண்ட போது அவளைக் கவனிப்பது பெரும் கடமையாகப் பட்டது. துளசியின் உடல் நிலை மிக மோசமான நிலையை அடைந்த போது, குன்னூர் மருத்துவமனையில் வசதி இல்லாமல் போக, வேகமாய் முடிவெடுத்து வாழ்க்கையை தொலைத்தது போல் துவண்டு போயிருந்த தந்தையை தேற்றிய விஜய், தாயை அவசர சிகிச்சைக்காக ஊட்டிக்கு அழைத்துச் சென்றான்.
பருவ மழையின் வேகத்திற்கு ஏற்ப, துளசிக்கு ஆஸ்த்மா அதிகரித்துக் கொண்டே போனது. ஆஸ்த்மா அதிகரித்த அதே நேரத்தில் பருவ மழையும் அதன் காரணமாய் நிலச்சரிவும் ஏற்பட்டு வெளி உலகத்திற்கும், அந்த மலை பிரதேசத்திற்கும் உள்ள தொடர்பு குறைந்து கொண்டே போனது. ஒரு நிலையில் தரை வழி போக்குவரத்துக் கூட குறைந்து, பத்து நாட்கள் முற்றிலும் நின்றே போனது.

துளசியின் உடல் நிலை ஓரளவு முன்னேற்றத்தை அடைந்த போது அவளை குன்னூரில் கொண்டு வந்துவிட்ட விஜய், சென்னைக்குப் பறக்க ஒரு மாசமானது.
ஆனால் அவன் எண்ணியதெல்லாம் நடக்கவில்லை என்பதற்கு இணங்க, அவன் திரும்பி வந்த போது பவித்ராவின் வீடு பூட்டியிருந்தது. உமா தங்கியிருந்த அறையும் காலி செய்யப் பட்டு, பக்கத்துக்கு வீட்டில் சாவி ஒப்படைக்கப் பட்டிருந்தது. கூடவே ஒரு கடிதமும் "என்னை மன்னித்துவிடு விஜய். நீ இங்கில்லாத ஒரு மாசத்தில் நிறைய விஷயங்கள் நடந்து விட்டன. அதை விவரமாய் கூறும் அனுமதி எனக்கு மறுக்கப் பட்டு விட்டது. எதிர்காலத்தில் முடிந்தால் சந்திக்கலாம்" என்ற நாலு வரி கடிதத்திலிருந்து அதையுமே கணிக்க முடியவில்லை விஜயால்.

அக்கம் பக்கத்தில் விசாரித்தப் போது, இருபது, இருபத்தைந்து நாட்களுக்கு முன்னர் பவித்ராவிற்கு உடம்பு சரியில்லை என உமா அவளுடன் ஆம்புலன்ஸில் சென்றதாக கூறியவர்கள், இரு நாட்களுக்கு முன்னர் உமா அறை சாவியைக் கொடுத்து ஊருக்குச் சென்றிருக்கும் கமலா அம்மாவிடம் ஒப்படைக்கும் படி கூறினாள் என்றும் அத்துடன் இந்த கடிதத்தை அவனிடம் சேர்ப்பிக்க சொன்னாள் என்றும் கூறிய போது விஜய்க்கு நிஜமாகவே தலை சுற்றியது.

விஜயின் தலை சுற்றலுக்கான காரணம் அவனுக்குத் தெரிவதற்கு முன்னால் உங்களுக்குத் தெரிவிக்கப் படுகிறது!

பவித்ராவை வீட்டுக்கு அழைத்து வந்த தனசேகரனால் எந்த வகையிலும் தங்கையை அணுக முடியவில்லை. சோறு போடும் வேலையை விட்டுவிட்டு தங்கையைப் பேணிக் காப்பதிலேயே குறியாய் வீட்டில் அடைந்து கிடந்தவனால் அவளுக்கு ஒரு வேலை உணவைக் கூட ஒழுங்காய் கொடுக்க முடியவில்லை.

வீட்டிற்கு வந்த நாள் முதல், அவளது அறையில் முடங்கி இருந்தவள் வரவேற்பறை பக்கம் தலையைக் கூட நீட்டவில்லை. "பவித்ரா" என யாரும் தப்பித் தவிர கூப்பிட்டு விட்டால் காதை இறுக மூடிக் கொண்டு அறையின் மூலையில் முடங்கியவளை பார்க்கப் பார்க்க வைரவனுக்கு கண்ணீர் தான் ஆறாய் ஓடியது.

அவளது இந்த செயல்களில் துவண்ட போன இரு ஆண்களில் இளையவன் மனதைத் தேற்றிக் கொண்டு அவளை இயல்பு நிலைக்குத் திருப்பும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினான்.

அதன் முதல் படியாய், பவிக்கு மிகவும் பிடித்த பருப்பு சாதத்தை பிசைந்து எடுத்துக்கொண்டு அவள் அறைக் கதவைத் திறந்து உள்ளே சென்றவனை வெறித்துப் பார்த்தவள் உடனே மிரண்டாள்.

வழியத் துடித்தக் கண்ணீரை அடக்கிக் கொண்டு "தச்சு டா, பவிம்மா. உன்னோட தச்சு" என தனசேகரன் அவளை நெருங்க, அவள் மேலும் பின்னடைந்தாள்.

Property of Bhuvana

"கொஞ்சமா சாப்பிடுடா அம்மு, ப்ளீஸ்" என தனசேகரன் அவள் கைப்பிடித்து கட்டாயப்படுத்திய போது "வேண்டாம்" என வீறிட்டவள், அவன் கையிலிருந்த தட்டைத் தட்டிவிட்டதோடு நில்லாமல் முகத்தை மூடிக் கொண்டு "வேணாம், வேணாம்" என கதறத் தொடங்கினாள்.

அம்பு தைத்த மானாய் அவள் கதறிய போது உடம்பு ஆடிப் போயிற்று தனசேகரனுக்கு. அந்த வேளை மட்டுமில்லாமல் தொடர்ந்த இரு வேளைகளும் இதுவே வழக்கமாய் தொடர, அவளது சோர்ந்த விழிகள் தமையனையும், தந்தையையும் நிலை குலையச் செய்தன.

இரவு கனிந்த நேரத்தில், மகளின் வேதனையைக் காணச் சகிக்காத வைரவன் அவள் அருகில் சென்று அமர்ந்து "பாப்பா, உனக்கு என்ன செய்யுது? மனசைத் திறந்து பேசுமா ராஜாத்தி" என அவளது முகத்தை வருடிய போது அவரது கையைப் பட்டென தட்டிவிட்டவள், தமையனிடம் படித்த அதே பாடத்தை தந்தையிடமும் படிக்கத் தொடங்கினாள்.

ஒரு கட்டத்திற்கு மேல் "பவித்ரா, அப்பாவை பாரு. உனக்கு என்ன செய்கிறது?" என வைரவன் குரல் உயர்த்தவும்,

"நான் பவித்ரா இல்ல.... இல்ல நான் பவித்ரா இல்ல....பவித்ரா இல்ல... இல்ல இல்ல" என தன் நிலை குலைந்து வீறிட்டவளை அடக்கிப் படுக்க வைப்பதற்குள் வைரவனுக்கும் தனசேகரனுக்கும் பெரிய வேதனையாய் போனது.

தூக்க மாத்திரை ஒன்றை கொடுத்து அவளை உறங்க வைத்தவர்கள், அவள் அந்த மாத்திரையின் வீரியத்தையும் மீறி "பவித்ரா வேண்டாம்... எனக்கு அந்தப் பேர் வேண்டாம்", "நான்.... நான் அசிங்கம்... பவித்ரம் இல்ல...", "பவித்ரா வேண்டாம்... பவித்ரா-ன்னா பரிசுத்தம் இல்லையா? நான் சுத்தமானவ இல்லை..", "அம்மா, எனக்கு ஏன்ம்மா இந்தப் பேர் வச்சீங்க?", "இந்தப் பேரால தான் அவங்க இப்படி என்னை நாசம் பண்ணிட்டாங்க", "ஹய்யோ... இந்தப் பேர் வேண்டாம்... நான் பவித்ரா இல்லை..." என அவளது மனதில் அடைத்து வைத்திருந்த அனைத்தையும் உளறி தீர்த்தாள் பவித்ரா.

கேட்டிருந்த ஆண்கள் இருவருக்கும் அன்றைய இரவு மட்டுமில்லாமல் தொடர்ந்து பல இரவுகள் இந்த வேதனை தொடர்ந்து கொண்டே இருந்தது. தனது புனிதமான பெயரை குறிப்பிட்டு அழைப்பதால் தான் மகள் துவண்டு போகிறாளோ என்று நினைத்த வைரவன், அவளை "பவிம்மா" என்று அழைப்பதை முற்றிலும் தவிர்த்தார். மகனையும் அவளது பழைய வாழ்வை நினைவு படுத்தும் படியாக அழைக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

"பாப்பா, அம்மு, கண்ணம்மா" என கவனமாக "பவித்ரா" என்ற பெயரை தவிர்த்தவர்களால் என்ன முயன்றும் அவளது அரண்ட தோற்றத்தையும், மிருண்ட பார்வையையும் தவிர்க்க முடியவில்லை. மடி தேடி ஓடி வரும் கன்றாய் இருந்தவள், அடி பட்ட மானாய் பட்ட அடிகளை தானும் மறக்காமல் மற்றவரையும் மறக்கவிடாமல் வதைத்தாள்.

தாயை இழந்த சமயத்தில், தன்னிலை மறந்து இருந்தவளை ஒரு நிலை படுத்திய தனசேகரனால் இந்த சமயத்தில் அவளை நெருங்கக் கூட முடியவில்லை. அவனது நடமாட்டம் அந்த அறைக்குள் வந்த நொடியிலிருந்து சிலிர்த்து விலகியவளை அணுக முடியாமல் தவித்துப் போனான் தனசேகரன்.

இந்த தவிப்புக்கு நடுவே, படியளக்கும் வேலை அவனை அழைக்க வேறு வழியின்றி கிளம்பிச் சென்றான் தனசேகரன். தந்தையையும், தங்கையையும் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டு அவர்களைப் பேணிக் காக்க வழி செய்யும் வேலைக்கு நீண்ட நாட்கள் செல்லாமல் இருக்க முடியாமல் போகவே, வைரவனிடம் எப்போதும் பவித்ரா மேல் கவனத்தை வைத்துக் கொள்ளும் படி கூறியவன் அவர்களது ஒரு நாளைய உணவை சமைத்து வைத்துவிட்டே சென்றான்.

பவித்ராவின் சீரிழந்த நிலையைப் பார்த்து அதை வெளியே கூறி, மேலும் புது பிரச்சனைகள் வரக் கூடுமோ என்ற பயத்தில் சமையல்காரப் பாட்டியை வெளியில் இருந்து நீக்கியிருந்தார் வைரவன். வைரவனும் பவித்ராவை உடனிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதால் தானே அனைத்து வேலைகளையும் முடித்து விட்டு வேலைக்குக் கிளம்பினான் தனசேகரன்.

அவன் அப்படிச் சென்ற முதல் தினம் ஒழுங்காகவே சென்றது. கிளம்பும் போது அடுத்த வீட்டிலிருந்து உமா அவன் கண்ணில் பட்டாள். அவளது கண்ணில் வலியைக் கண்டு மனம் கனத்தப் போதும் தங்கையின் வலியும், கதறலும் அதை மிஞ்சி விட, சிடுசிடுத்த முகத்துடன் கிளம்பிச் சென்று விட்டான் தனசேகரன்.

தனசேகரன் வீட்டில் இருந்தவரை யார் கதவைத் தட்டினாலும், யார் வீட்டிற்கு வந்தாலும் வாசலிலேயே நிற்க வைத்துப் பேசி அனுப்பினான் என்றால் கதவைத் தட்டியது உமா என்ற நிலையில் அதை திறக்கவே இல்லாமல் தன் வெறுப்பைக் காட்டினான்.

அன்றைய தினம் தனசேகரன் கிளம்பிச் சென்ற பின்னர், தவித்த மனதுடனும் ஏக்கம் படர்ந்த முகத்துடனும் கதவைத் தட்டிய உமாவை வைரவனால் வராதே எனத் துரத்த முடியவில்லை. கண்ணைத் துடைத்துக் கொண்டு அவர் வழி விட, ஓட்டமும் நடையுமாய் பவித்ராவை அடைந்த உமாவை "அண்ணி" என்ற கூவலுடன் கட்டிக் கொண்டாள் பவித்ரா. உமாவின் இடுப்பை இறுக கட்டிக் கொண்டு விசும்பிய பவித்ராவைக் காண்கையில் நெஞ்சம் கனத்தது இருவருக்கும்.

குணமாகிவிட்டாள் என்று மருத்துவர்கள் கூறிய நாளிலிருந்து இன்று வரை, வைரவனை "அப்பா"என்றோ தனசேகரனை "அண்ணா" என்றோ பவித்ரா அழைக்கவில்லை. அவள் தான் அவர்கள் அறைக்குள் வந்தாலே அரண்டு போகிறாளே? அவர்களாக போய் பேசினாலும் தனக்குளே முடங்கி கொள்பவளை இருவராலும் அணுக முடியாமல் போன நிலையில், உமாவிடம் அவள் காட்டிய நெருக்கம் வைரவனுக்கு வேதனையையும் அதே சமயம் சற்று நிம்மதியையும் கொடுத்தது. வேதனை பட புதிதாய் வேறு காரணமில்லை என்றாலும் நிம்மதி அடைய உமாவிடம் மட்டுமேனும் பேசுகிறாளே என்ற பெருமூச்சு தான்.

உமா கொடுத்த உணவை மறு பேச்சின்றி உண்ட பவித்ரா, அவளது மடியிலேயே படுத்து உறங்கிப் போனாள். அவள் தலையை வருடிக் கொடுத்தவாறே அமர்ந்திருந்த உமா, அவள் அசந்து உறங்கியதும் எழுந்து வெளியே வந்தாள்.

வந்தவள் வைரவனின் காலடியில் அமர்ந்து பவித்ராவின் உடல் நிலை பற்றி விசாரித்தாள். அவர் "பவித்ரா" என்ற பெயரால் எத்தனை தூரம் பாதிக்கப் பட்டிருக்கிறாள் எனக் கூறியபோது, தேவ் அன்றைய தினம் அவளது பெயரைப் பற்றி பேசியது நினைவில் வந்தது. நினைத்து நினைத்து வருந்த நிறைய கணங்கள் இருந்தபோதிலும் அதில் இதுவும் சேர்ந்து அவளை மேலும் குற்றம் உணர்வில் குன்றச் செய்தது.

"இந்தப் பாவத்தை எப்படி கழுவப் போறேன்னே தெரியல மாமா" என்றவள், "மாமான்னு கூப்பிடலாம் தானே" என்றாள் குரலில் கெஞ்சலுடன். வார்த்தையின்றி அவளது தலையை வருடிக் கொடுத்து மௌனத் தலையசைப்பால் தன் சம்மதத்தை அவர் வெளியிட, அங்கே வலியின் சாயல் மறைய நிறைய நேரம் பிடித்தது.

தனசேகரன் வரும் சமயம் உமா கிளம்பி விட, இதுவே ஒரு வாரம் தொடர்ந்தது. அந்த ஒரு வாரத்தில் முன்னேற்றம் என்றும்  சொல்லமுடியாமல், பின்னடைவு என்றும் சொல்லமுடியாமல் பவித்ராவின் நிலை அப்படியே தான் இருந்தது.

கூடதலாக தாயாரின் படத்தருகே சென்று அமர்ந்து கொள்வதும், அவரது சேலையை விரித்து அதில் படுத்துக் கொள்வதும், "அம்மா, அம்மா" என்ற அனத்தலும் என சிற்சில செயல்களில் பெண் துணையை தான் நாடுவதை தந்தைக்கும், தமையனுக்கும் உணர்த்தினாள் பவித்ரா.
அவள் உணர்த்தியதை உணர்ந்த போதிலும் அதை நிறைவேற்றத் தான் அவர்களால் முடியாமல் போனது.

வார இறுதியில் தனசேகரன் வீட்டிலிருக்கும் சமயம் என்பதால் உமா அவள் வீட்டிலேயே தங்கிவிட, தனசேகரன் வீட்டிற்குத் தேவையான சில பொருட்களை வாங்க வெளியே சென்று விட, அந்த நேரம் பார்த்து வைரவன் பல நாள் சோர்வின் காரணமாய் தன்னையும் அறியாமல் லேசாக கண் அசந்தார்.

தனசேகரன் வெளியே சென்றிருக்க, வைரவன் லேசாக கண்ணசந்திருக்க, உமா வீட்டினுள் இல்லாதிருக்க குளியலறைக்குள் நுழைந்த பவித்ரா சற்று நேரத்தில் "நான் பவித்ரா இல்ல.... இல்ல.... இல்ல...", "எனக்குப் பிடிக்கலை.... வேணாம்", "எனக்கு

Property of Bhuvana

என்னையே பிடிக்கலை....பிடிக்கலை... ஹய்யோ நான் எவ்வளவு அசிங்கமா ஆகிட்டேன்...", "நான் அசுத்தம்.... நான் பவித்ரா இல்ல...", "அம்மா, நான்... நான்... பவித்ரா இல்லம்மா... எனக்குப் பிடிக்கலைம்மா, என்னையே எனக்குப் பிடிக்கலைம்மா" என்ற வீறிடுவது உமாவிற்குக் கேட்டது.

இருவரது வீடும் அருகருகே என்ற போதிலும், தனசேகரன் இருக்கும் சமயம் பவித்ராவைக் காண முடியாமல் போவதால் அவள் இருக்கும் அறை அருகேயே இருப்பது உமாவின் பழக்கம் என்பதன் விளைவாக பவித்ராவின் அலறல் அவளுக்குத் துல்லியமாய் கேட்டது. அவளது அலறலில் ஏதோ பெரிய விபரீதம் என்று தீர்க்கமாய் புரிந்தது உமாவிற்கு. வேகமாக மாடியிலிருந்து இறங்கியவள், பவித்ராவின் வீட்டுக் கதவை வேகமாகத் தட்டினாள். பல நாள் தூக்கமின்மையின் காரணமாகவும், பல நாள் உட்கொண்ட மாத்திரைகளின் விளைவாக வைரவன் எழுந்து கொண்ட சுவடே இருக்கவில்லை.

"பவி" "மாமா" என மாறி மாறி அழைத்துக் கொண்டே, கதவைப் படபடவென தட்டத் தொடங்கினாள் உமா. பதிலேதும் இல்லாமல் போக, உமா பதற்றத்தின் உச்சத்தை அடைந்த போது தனசேகரன் வந்து சேர்ந்திருந்தான்.

"நீ இங்கே என்ன செய்கிறாய்?" என தனசேகரன் உறும,

"பவி அலறுகிறா, கதவைத் திறங்க தனா" என உமா பதறினாள்.

"என்னோட தங்கையைப் பார்த்துக்க எனக்குத் தெரியும். நீ முதல இந்த இடத்தைக் காலி பண்ணு" என அவளைக் கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாக தனா விலக்க, "ஹய்யோ, ப்ளீஸ் தனா, கதவைத் திறங்க... ஹய்யோ திறங்களேன்" என வெட்கத்தை விட்டுக் கெஞ்சினாள்.

தனசேகரன் கதவைத் திறந்துவிட காத்திராமல் வைரவன் சிறு தளர்வுடன் கதவைத் திறந்தார். அவரைத் தள்ளிக் கொண்டு உமா உள்ளே ஓட, "ஹே நில்லு" என அவளைத் துரத்திக் கொண்டு உள்ளே ஓடினான்.

Property of Bhuvana

பவித்ராவின் அறையைத் திறந்து கொண்டு உள்ளே விரைந்த உமாவும், அவளைப் பின்பற்றி உள்ளே வந்த தனசேகரனும் குளியலறை கதவின் வழியாக ரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது!!

மௌன மொழி-பாகம் 25

தனசேகரன் நிலைதடுமாறி விழித்துக் கொண்டிருக்கும் போதே, உமா குளியலறை கதவை வேகமாக தட்டினாள். "பவி, பவி" என அவளது அலறல் சிறு அசைவை கூட அந்தப் பக்கம் ஏற்படுத்துவதாக தெரியவில்லை என்ற நிலையில் தனசேகரன் என்ற சிலைக்கு உயிர் வந்தது.

உமாவை விலக்கிவிட்டு வேகமாக அவன் கதவை இடித்த பொழுது வைரவன் நிலைமையின் தீவிரம் உணர்ந்து உறைந்து போனார். பலசாலியான தனசேகரனின் ஐந்து நிமிட முயற்சியில் குளியலறையின் தாழ்பாள் கழன்று கொண்டது. திறந்த வேகத்தில் உள்ளே நுழைந்தவர்களை மேலும் வேதனைபடுத்தவென, குளியலறை கண்ணாடியை உடைத்து அதனால் தன் முகத்தைத் தானே சிதைத்துக் கொண்டிருந்தான்!!

அந்தக் கோலத்தில் அவளைக் கண்ட தனசேகரன் வீறிட்டு அழ, உமாவின் உடல் விறைத்து சில்லிட்டுப் போனது. வைரவனின் நிலையோ சொல்ல வார்த்தையின்றி இருந்தது. ஆனால் பேச்சு மூச்சின்றி கிடந்தவளை வாரி அள்ளிக் கொண்டு தனசேகரன் விரைய, உமா அவசர சிகிச்சைக்கு அழைத்து ஆம்புலன்ஸ் வர ஏற்பாடு செய்தாள். அவர்கள் வருவதற்குள் தன்னிடமிருந்த மருத்துவ உபகரணங்கள் கொண்டு வேகமாக முதலுதவி செய்தவளின் கைகள் ஒரு மருத்துவராய் மிக நுட்பமாகவே செயல் பட்டது.
அப்பல்லோ மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பவித்ராவை ஆராய்ந்த பழுத்த மருத்துவர்கள் யாவரும் ஒரு நிலையான பதிலைக் கூற நாற்பது மணி நேர அவகாசம் கேட்டனர்.

Property of Bhuvana

நரகமாய் கழிந்த அந்த நாற்பது மணி நேரத்திற்குப் பின்னர் முகம் முழுதும் கட்டுகளுடன் படுத்திருந்த பவித்ராவைக் காண மருத்துவர்களுக்கே சகிக்கவில்லை. அவளது சிதைந்த முகத்தை மீட்பதற்கு ஒரே வழி பிளாஸ்டிக் சர்ஜரி செய்வது தான் எனக் கூறியவர்கள், மும்பையில் உள்ள "cosmetic surgery institute of india" வின் தலைமை மருத்துவரை சென்று பார்க்கும் படி கடிதம் கொடுத்து அனுப்பினர்.

அவர்களே வாகன உதவியும் செய்துவிட்டனர் என்றாலும் அதற்குத் தேவையான பணத்திற்கு தனசேகரன் தானே வழி செய்யவேண்டும்? தாயாரின் தாலி தவிர மற்ற அனைத்தையும் தந்தை விற்று விடும் படி கூறியபோது "பாப்பா கல்யாணத்தின் போது அம்மாவோட நகை எல்லாத்தையும் கொடுத்துடணும். அம்மா தனக்குன்னு வாங்கும் போதே "பவிக்கு நல்லா இருக்கான்னு பாருங்க... பின்னாடி அவளுக்குத் தானே"ன்னு சொல்லிட்டே இருப்பா" என்ற அவரது முந்தைய வாசகங்கள் நினைவு வந்து பவியின் இன்றைய நிலையையும், அவளது எதிர்காலத்தையும் எண்ணி வருத்தம் கொள்ள வைத்தது.

அறுவை சிகிச்சைக்குத் தேவையான பணத்தை நகைகள் மட்டும் பூர்த்தி செய்யாததால், அலுவலகத்தில் இருந்து கடனாக ஒரு தொகையும், நண்பர்களிடமிருந்து மீதத்தையும் (கடனாகத் தான்) பெற்று கொண்டான் தனசேகரன்.

வருத்தப்பட அவகாசமில்லாமல் அறுவை சிகிச்சை பயமுறுத்திக் கொண்டிருக்க பணம் புரட்டும் வேலையில் தனசேகரன் ஈடுபட, உமா பவித்ராவை விட்டு அகன்றாளில்லை. தனசேகரன் தன் மறுப்பை வார்த்தை, செயல், பார்வை என எல்லா விதத்திலும் காட்டிய போதும் பவித்ராவின் மனநிலை கருதி அவளுடனே இருந்தாள். வைரவனும் அவளது துணையை ஆதரிக்கவே தனசேகரனால் பெரிதாய் ஒன்றும் செய்துவிட முடியவில்லை. அவனுக்கு உமாவின் வருகையை எதிர்ப்பதை விட, தங்கையை உயிருடன் மீட்பது பெரும் அவசியமாய் பட்டது.

Property of Bhuvana

தேவையான பணம், தைரியம், தன்னம்பிக்கை, போராடும் மனநிலை என அனைத்தையும் சேகரித்துக் கொண்டு  அங்கே சென்று ஒரு வாரத்தில் அறுவை சிகிச்சைக்கு நாள் குறிக்கப் பட்டது. சிதைந்து போன பவித்ராவின் முகத்தை அவளது உடலின் மற்ற பகுதிகளால் சீராக்கிய மருத்துவர்களால் அவளது மனநிலையை மாற்ற முடியவில்லை.

பவித்ராவின் மீட்கப்பட்ட முகத்திலிருந்த காயங்கள் முழுதாய் ஆறாவிடினும், பொருத்தப்பட்ட சதைகள் அவளது முகவடிவோடு பொருந்தி வர மேலும் பத்து நாட்கள் ஆகின. முழுதும் ஆறாத காயம் என்ற போதிலும், அவள் உடலுக்கு மருத்துவம் தேவைப்பட்ட அதே அளவு மனதிற்கும் தேவைப்பட்டதால், அவளுக்கு முக சீரமைப்பு வைத்தியம் பார்த்த மருத்துவர்களின் வழிகாட்டலின் படி, மும்பையிலேயே ஒரு பெரிய மனநிலை மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர்.

ஒரு வாரத்திற்கும் மேலாக அவர்களது கண்காணிப்பில் இருந்த பவித்ராவின் மனதைப் படித்த மருத்துவர்கள், தனசேகரன் மற்றும் உமாவை அழைத்துப் பேசினர். அவர்களது ஒரு மணி நேரப் பேச்சின் சாராம்சம் இதோ

"பவித்ராவின் மனநிலை மிக மோசமான நிலையில் உள்ளது. அதிலிருந்து அவள் வெளிவர வேண்டுமென்றால் பழைய நினைவுகள் எதுவும் அவளுக்கு வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். முக்கியமாக அவளது பெயரையோ, முந்தைய வாழ்வின் ஆதாரமாய் இருந்த அவளது பழைய முகத்தையோ நியாபகப் படுத்தக் கூடாது. முற்றிலும் புதிய இடம், புதிய அணுகுமுறை என அவளை ஒரு வேறு உலகிற்குக் கூட்டிச் செல்லவில்லையெனில் அவள் எந்த நேரத்திலும் எதையும் செய்து கொள்ளலாம்"
அவர்கள் கூறியதைக் கேட்ட உமாவிற்கு அவளது மருத்துவ அறிவு தலை தூக்க, பவித்ரா அவளது தந்தையிடமும் தமையனிடமும் ஒதுக்கத்தின் காரணத்தை வினவினாள். அவளுக்கு இத்தனை நாட்கள் அவர்களுடன் உயிராய் பழகிய பெண்

Property of Bhuvana

இப்படித் தவிர்க்கிறாளே என வேதனையை இருந்தது. மேலும் அந்த ஒதுக்கத்தை அவள் தன்னிடம் காண்பிக்க வில்லை என்பது பெரிய வியப்பாய் இருந்தது. ஆண்களை வெறுக்கிறாள் என்று எடுத்துக் கொண்டாலும், அவள் கண் விழித்த தினம் விஜயின் கைகளைப் பற்றிக் கொண்டு பவித்ரா உறங்கியது முரண்டியது. இவை அனைத்தையும் மருத்துவர்களிடம் கேள்விகளாய் முன் வைத்தப் போது, மருத்துவர்கள் கூறிய பதில் இதோ

அந்தக் கோர சம்பவம் நடந்த தினம் தவிர, அவளது பழைய வாழ்வின் பல சுவடுகள் அவள் மனதில் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன. ஒரு சிலருக்கு இப்படி நடப்பது தான்... அதாவது ஒரு பெரிய அதிர்ச்சியின் விளைவாக அன்றைய தின நியாபகங்கள் மட்டுமே ரணமாய் நிலைத்திருக்கும் என்றும், அந்த பாதிப்பால் அதற்கு முன்னால் நடந்தவைகள் புறம் தள்ளப்பட்டு விடும் என்றும் கூறினர். அன்றைய தினத்தில் அவளுக்கு நெருக்கமாய் (நல்ல முறையில்) பதிந்திருந்த உமாவும், விஜயும் தன்னைக் காப்பார்கள் என்ற விதை அவளுள் விழுந்திருக்கிறது என அவர்கள் விளக்கிய போது உமாவின் நெஞ்சம் தனசேகரனுக்காகவருந்தியது.

இதற்கு மேல் எனக்கு அதிர்ச்சிகள் தேவையில்லை என்பது போல் ஒரு வெற்று பார்வையுடன் அமர்ந்திருந்த தனசேகரன், "அண்ணா, அப்பா என்ற முறையில் கூட எங்களைப் பார்க்க மாட்டாளா டாக்டர்" என்று கேட்டப் போது வருந்திய உமாவின் நெஞ்சம் ஊமையாய் அழுதது.

"இல்லை, அப்படி சொல்ல முடியாது. அவள் ஒரேடியாய் வெறுப்பது என்றால் உங்களை அணுகவே விட்டிருக்க மாட்டா. பிற ஆண்கள் மீது அவளுக்கு இருக்கும் வெறுப்பு கண்டிப்பாய் உங்கள் மீது இல்லை. இதை எனக்கு எப்படி விளக்குவது என்று தெரியவில்லை தனசேகரன். she will get better soon" எனக் கூறிய மருத்துவருக்கே தனசேகரனின் முகத்தைப் பார்க்க முடியவில்லை.

இதை கேட்டிருந்த இருவருக்குமே "ஏன் இவர்கள் வைரவனை அழைக்க வில்லை என்பது துல்லியமாய் புரிந்தது. தங்களாலேயே தாங்க முடியாத ஒன்றை (அவளது நிலையிலிருந்து அதை கணித்திருந்தாலும் தேர்ந்த மருத்துவர்களின் வாக்கு

Property of Bhuvana

மூலமாய் கேட்டப் போது வலிக்கத் தான் செய்தது) பெற்ற தந்தையிடம் எப்படி கூறுவது? என அவர்கள் நொந்து கொண்டிருக்க நேரமில்லாமல் பவித்ராவின் நிலை பயமுறுத்தியது.

ஆனால் யோசித்துக் கொண்டும், வருத்தப்பட்டுக் கொண்டும் இருக்க அவகாசமில்லை என உணர்ந்த இருவரும் (தனித் தனியாகத் தான் உணர்ந்தனர்) வைரவனிடம் ஒருங்கே சென்றனர்.

ஆனால் உமா மருத்துவர்கள் கூறியதை வைரவனிடம் பக்குமாவாக எடுத்துக் கூறிக் கொண்டிருக்க, தனசேகரன் தங்கையின் அருகே அமர்ந்து அவளது மாற்றப்பட்ட முகத்தை வெறித்தவாறே யோசனையில் ஈடுபட்டான்.

உமா விவரம் கூறியதும், பழைய வாழ்விலிருந்து மீட்பது என்றால் எப்படி? சுற்றி இருக்கும் இவர்கள் பேசவில்லை என்றாலும் அவள் மனதில் ஆழமாய் பதிந்து போயிருக்கும் ரணத்தை எப்படி மறக்கவைப்பது என வைரவன் மயங்க, "நீங்களே இப்படி துவண்டு போனா அவளை எப்படி மாமா மீட்கிறது?" என்ற கேள்வியுடன் தேற்றினாள் விவரம் தெரிவித்தவள்.
தங்கையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த தனசேகரன், "அப்பா, கண்டிப்பா அம்முவை பழைய பவ்...ஹ்ம்ம்... அம்முவா மாத்திடலாம். நீங்க மனசு தளராம இருங்க ப்ளீஸ்" என்று அழுத்திக் கூறியவன், "பத்து நிமிஷத்தில் வரேன்" என்று விட்டு, கைப்பேசியில் எண்களை அழுத்தியவாறே வெளியே சென்றான்.

சொல்லிவிட்டுப் போன பத்து நிமிடங்களில் திரும்பி வந்தவன், "அப்பா, ஒரு வாரம் முன்னாடி, என்னோட ஆபீஸ்ல ஒரு ப்ராஜெக்ட்காக சிங்கப்பூர் போக சொல்லிட்டிருந்தாங்க. ஆனா நான், பவி...ஹ்ம்ம் அம்முவோட நிலைமையினால கண்டிப்பா முடியாதுன்னு சொல்லிட்டேன். இப்போ அங்க போகலாமா அப்பா? எல்லாரும் போய்டலாம். நீங்க சரின்னு சொன்னா விசா, டிக்கெட்ஸ் எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்றேன்பா" என்றவன் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு கீழே உட்கார்ந்தான்.

Property of Bhuvana

"இங்கிருந்து போய்டலாம்பா, அம்முக்கு அது தான் நல்லதுன்னும் போது செஞ்சு தான் பார்க்கலாமே? ப்ளீஸ்" என தனசேகரன் வேண்ட

"போகலாம் சேகர், ஆனா பணம்? உங்க ஆபீஸ்ல உனக்கு மட்டும் தானே ஏற்பாடு செய்வாங்க.... எங்களுக்கெல்லாம் நீ தானே கொடுக்கணும்? இப்பவே லட்சக் கணக்கில் செலவாகிட்டதே! இன்னும் என்றால்..." என அவர் நிதர்சனத்தைப் பேச,

"அதெல்லாம் பார்த்துக்கலாம். சிங்கப்பூர் டிக்கெட்ஸ் எவ்வளவு ஒன்னும் ஜாஸ்தி பணமில்லை. நீங்க சரின்னு சொல்லுங்க நான் ஏற்பாடு பண்றேன்" என்றவனின் தோளில் தட்டி

"டிக்கெட் மட்டுமில்லை கண்ணா, தொடர்ந்து அவளுக்கு வைத்தியம் பார்க்க வேண்டாமா? என்னோட பென்ஷன் பணத்தையெல்லாம் வீட்டுக் கடனை அடைக்கக் கட்டிட்டேனே" என அவர் மீண்டும் மயங்க

"பவி...ஹ்ம்ம் அம்மு கல்யாணத்திற்காக கொஞ்சம் ஷேர்ஸ் வாங்கி வச்சிருந்தேன். அதில் சிலதை விக்கலாம்.... என் மேல நம்பிக்கை வைங்கப்பா...நான் பார்த்துக்கிறேன்" என்ற மகனிடம் அதற்கு மேல் வாதாடாமல் சரியென்றார் வைரவன்.
இந்த முடிவில் உமா தான் நிலை குலைந்து போனாள். இவர்களைப் பாராமல் எப்படி இருப்பது? இவர்கள் போய் விட்டால் தன் வாழ்வே முடிந்து விடாதா? என அவள் மயங்க, அவள் காதில் தேனை பாச்சியது போல் அமைந்தது வைரவனின் அடுத்த வாக்கியம். அது... "இங்க இருந்தே போறோமா? இல்ல சென்னைல இருந்தா? இங்க இருந்துன்னா, நானும் பாப்பாவும் இங்கே இருக்கோம். நீயும் உமாவும் சென்னை போய் தேவையானதை பாக் பண்ணிட்டு, வேற வேலை ஏதாவது இருந்தா முடிச்சிட்டு வந்துடுங்க" என்றார்.

அவர் கூறியது உமாவிற்கு நிம்மதியை அளித்த நிலையில், தனசேகரனுக்கு அப்படி

Property of Bhuvana

இருக்கவில்லை என்பது அவனது அடுத்த வாக்கியத்தில்... இல்லை இல்லை அறிவிப்பில்வெளிப்பட்டது.

"நம்ம மட்டும் தான்... அதாவது நான், நீங்க, அம்மு மட்டும் தான் போறோம்" என்றவனின் சொற்களில் அடி பட்ட பாவனை உமாவின் முகத்தில் குடி வந்தது.

வைரவனுக்கும் உமாவை தங்களுடன் அழைத்துச் செல்லும் எண்ணமில்லை (கல்யாணம் ஆகாத பெண்ணை, தன் பெண்ணிற்குத் தாதி வேலை பார்க்கும் படி கூப்பிட தனக்கு என்ன உரிமை இருக்கிறது? என்பது அவரது எண்ணம்) என்ற போதிலும் தனசேகரன் கூறிய வார்த்தையில் உமாவின் மேல் பரிதாபம் உண்டானது. அதை வெளிக்காட்டும் பொருட்டு "சேகர், நான் முன்னாடியே சொல்லணும் என்று நினைச்சேன். நீ உமாகிட்ட நடந்துக்கிற முறை கொஞ்சம் கூட சரியில்லை. நம்ம பொண்ணுக்காக அவளோட பிறந்த வீட்டையே வேண்டாம் என்று தூக்கி எறிஞ்சிட்டு வந்திருக்கா. இப்படிப்பட்ட மனசு யாருக்கும் வராதுடா" என்று கூற

"அவ பண்ண பாவத்திற்கு அவ பிராயசித்தம் செஞ்சா... உங்களுக்கு வேணும்னா பாவம் கண்ணில நிற்காம பிராயசித்தம் மட்டும் நிற்கலாம். ஆனா எனக்கு பாவம் தான் முதல நினைவு வருது" என்றவனிடம் என்ன சொல்லி வாதாடுவது என வைரவன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே

"தனா சொல்றது கரெக்ட் தான் மாமா. இருந்தாலும் அவர் சொல்ற வார்த்தைக்காக என்னால பவியை விட்டுட்டு இருக்க முடியாது. அதுவும் அவ என்னோட துணையை ரொம்பவே தேடுறா என்றபோது என்னால கண்டிப்பா விட்டுட்டு இருக்க முடியாது. நானும் வரேன். என்கிட்டே கொஞ்சம் பணமிருக்கு" என்றாள் உறுதியாக.

"ஹே..." என தனசேகரன் ஆரம்பிக்கும் முன்னர்.

Property of Bhuvana

"ரொம்ப நன்றிமா" என கண்ணீர் படர்ந்த கண்களுடன் நன்றி கூறிக் கொண்டிருந்த வைரவன், "சேகர், உமாவை நாம கூட கூட்டிட்டுத் தான் போறோம். அதுவும் என்னோட மருமகளா, என் பெண்ணோட அண்ணியா, உன்னோட மனைவியா" என்று அவர் முடித்தப் போது தனசேகரன், உமா இருவருள் யாருக்குப் பெரிய அதிர்ச்சி என்று வரையறுக்கமுடியவில்லை.

அதன் பின் ருத்ரதாண்டவம் ஆடிய தனசேகரனை ஒரு வழியாக சரிகட்டி (தந்தை என்ற அதிகாரத்தை செலுத்தி, தங்கையின் மனநிலையை முன்னிறுத்தி என பற்பல வழிகளை கையாண்டு) "ஆம்" என்றுமில்லாமல் "இல்லை" என்றுமில்லாமல் ஒரு சமநிலைக்குக் கொண்டுவருவதற்குள் வைரவனுக்குப் பெரும் போராட்டமாய் இருந்தது.

"நான் இந்தக் கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்வதற்கு எனக்கு ஒரே ஒரு நிபந்தனை மட்டும் தான். அதுக்கு சரி என்று சொன்னா பார்க்கலாம்" என்றவன், உமா அவனைக் கேள்வியாய் பார்க்கவும்

"அவளது பழைய வாழ்வின் மிச்சம் எதையும் இந்த வாழ்க்கைக்குள் இணைக்கக் கூடாது" என்றான்.

ஒரே வரியில் எத்தனை அர்த்தங்கள்? எத்தனை குத்தல்கள்? என மலைத்துப் போனாள் உமா. அவளது உறவு, நட்பு, முக்கியமாய் காதல் எதையும் இணைக்கக் கூடாது என ஆணித் தரமாய் கூறுபவனிடம் என்ன சொல்லி மறுப்பது? மறுத்தால் தான் ஒத்துக் கொள்வானா? மறுத்து ஒரு புண்ணியமுமில்லை என்ற நிலையில் அதற்கு சம்மதிப்பது தவிர உமாவிற்கு வேறு வழிதெரியவில்லை.
இவர்களை விட்டு தனக்கு வேறு வாழ்வு ஒன்றிருக்கும் என்ற எண்ணம் அவளுக்கு இல்லாத நிலையில் ஒத்துக் கொள்ளத் தான் வேண்டியதாய் இருந்தது.

இத்தனை போராட்டங்களுக்குப் பின்னர், தனசேகரனுடன் சென்னை கிளம்பிச்

Property of Bhuvana

சென்றாள் உமா. (பவி தன் நிலை உணர்ந்து உமாவைத் தேடும் முன்னர் வந்துவிட வேண்டும் என்பதால் விரைவாகவே எல்லாம் நடந்தது). சென்னை சென்று தேவையான பொருட்களை உமா சேகரிக்க, தனசேகரன் தன் வேலை விவரங்களையும் விசா, டிக்கெட் மற்றும் பிற வேலைகளை வேகமாக முடித்தான்.

உயிர் தொலைத்திருந்த தன் கைப்பேசிக்கு உணவிட்டு உயிர்ப்பித்து, விஜய்க்கு அழைத்தால் அவனது கைப்பேசி அங்கே தன் உயிரைப் பெற முடியாத நிலையில் இருந்தது.

அழைத்து அழைத்து சலித்துப் போன உமா, தன் படிப்பு சம்பந்தமாக வெளிநாட்டில் ஒரு கருத்தரங்கிற்கு சென்றிருந்த நிர்மலாவிற்குத் தொடர்பு கொள்ள முயன்ற போது தனசேகரன் வந்து சேர்ந்து அவளைக் கண்ணால் எரித்தான். மறு பேச்சின்றி கைப்பேசியை வைத்துவிட்டு வேறு வேலை பார்க்க ஆரம்பித்தாள் உமா.

நிர்மலாவின் தாயாரும் ஊரில் இல்லாத நிலையில் தான் தங்கியிருந்த அறையைக் காலி செய்தவள், விஜய்க்கு சுருக்கமாக ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு தனசேகரனுடன் கிளம்பினாள்.

அவர்கள் மும்பையை அடைந்த போது, பவித்ராவின் தந்தை வினயாவின் தந்தையை உருமாறி இருந்தார். அதாவது பவித்ராவிற்கு வினயா என்ற புது அடையாளம் கொடுத்து, அதை அவள் மனதில் பதிய வைக்கவும் முயன்று கொண்டிருந்தார். "வினயாவா?" என வியந்த மற்ற இருவருக்கும் பதிலாய் "பவிக்கு... இல்ல வினுக்குட்டிக்கு ட்ரீட்மென்ட் பார்க்கிற டாக்டர்ரோட பொண்ணு பேர் வினயா. நானும் கடந்த கால வினைகள் அனைத்தையும் மறந்துட்டு அவ தெளியட்டும்ன்னு நினைச்சேன். அது தான் வினயான்னு கூப்பிடுறேன்" என்றார். அவரது அந்த விளக்கத்திற்கு மறு பேச்சின்றி, பவித்ராவை வினயா என ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர் மற்ற இருவரும்.

Property of Bhuvana

அவளது பெயர் மாற்றத்தினால் ஏதும் புது குழப்பங்கள் (வெளிநாட்டுப் பயணத்தின் போது செய்யப்படும் பரிசோதனைகளில் ஏதும் சிக்கல்) ஏற்பட்டு விடுமோ எண்ணிய தனசேகரன் மருத்துவர்களின் உதவியை நாடினான்.

மும்பையின் புகழ் பற்ற மனநிலை மருத்துவர்கள் அவனது நிலையைப் புரிந்து கொண்டு, பவித்ராவின் உடல்நிலை (அவளது முகச் சீரமைப்பு பற்றிய விவரமும், அந்த அறுவை சிகிச்சையின் பலனாக அவள் முகத்தில் நிறைய கட்டுகள் இருக்கும் என்பது போன்ற விவரங்களும்) அடங்கிய ஒரு கோப்பை கொடுத்தவர்கள், அவளது மனநிலை பற்றியும் "பவித்ரா" என்ற தன் பெயர் மேல் அவள் கொண்ட வெறுப்பையும் குறிப்பிட்டு ஒரு மருத்துவ அறிக்கையையும் தனசேகரனிடம் கொடுத்து அவர்களை அனுப்பி வைத்தனர்.

தனசேகரனின் கைகளால் கட்டப்பட்ட தாலியுடனும், இருபது வயதை நெருங்கிக் கொண்டிருந்த குழந்தையுடனும் விமானம் ஏறிய உமா அதன் பின்னர் ஒரு அரிய தாயாய் மாறிப் போனாள். தன் அன்பிலும், அரவணைப்பிலும், சிரிப்பிலும், அழுகையிலும், வழிகாட்டலிலும், கண்டிப்பிலும், கனிவிலும் பவித்ராவை மூழ்க வைத்த உமாவிற்குத் தனசேகரனின் புறக்கணிப்பை விட பவித்ராவின் அன்பும், வைரவனின் அரவணைப்பும் பிடித்திருந்தன.

மௌன மொழி - பாகம் 26

வெளியே வெள்ளி நிலா தன் ஆதிக்கத்தை ஆதவனிடம் இடமாற்றி கொண்டிருக்க, உள்ளே தன் கைகளுக்குள் குளிர் நிலவாய் ஜொலித்த பவித்ரா ஹ்ம்ம் இல்லை வினயாவின் ஆதிக்கத்தை தன்னிடம் இடமாற்றி கொள்ள மனமின்றி அவளது ஆதிக்கத்திலேயே வாழ்நாள் முழுதும் இருந்து விட எண்ணிய விஜயின் உதடுகள் அவளது நெற்றியில் பதிந்தன.

அந்த அழுத்தமான முத்தம் கூட அவளை அசைக்காத வண்ணம் அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கவே, பழைய வேதனைகளை ஒதுக்கிவிட்டு, தன் மனதில் முற்று முதல் ராணியாய் திகழும் வினயாவை மட்டும் நிரப்பிக் கொண்டு அவனும் மெல்ல கண்ணயர்ந்தான்.

Property of Bhuvana

மெல்லிய திரையின் வாயிலாக தன் கதிர்களை மெல்லப் படர செய்த ஆதவன், தன்னிடம் அன்றைய நாளின் ஆதிக்கம் வந்துவிட்டதை விஜய்-வினயா ஜோடிக்கு எடுத்துரைத்தான்.

பின் வேளையில் உறங்கிய விஜயின் உறக்கம் அதில் கலைந்ததோ இல்லையோ வினயாவின் சிப்பி இமைகள் அழகாய் விரிந்து உள்ளிருக்கும் முத்தெனும் பார்வையை வெளியே விடுத்தன.

கணவனின் கைகளுக்குள் தான் நிறைந்திருப்பதை உணர்ந்த வினயாவிற்கு எழுந்து கொள்ள மனமே இருக்கவில்லை. கணவன் தன் மேல் காதலாய் இருக்கிறான் என்பதை அவனது செயல்களாலும், பிறரது(துளசி, உமா) வாய்ச் சொற்களாலும் கேட்டிருந்த அந்த பாவைக்கு அவற்றை எப்படி ஏற்று கொள்வது என்று இன்று வரை தயக்கம் இருக்கத் தான் செய்தது.

இப்போதும் தயக்கம் முழுதாய் போய் விடவில்லை என்றாலும் கணவனின் வாயால், தனது மனம் அவனுக்கு எத்தனை முக்கியம் என்று கேட்டறிந்த பிறகு கொஞ்சம் குறைந்திருந்தது.

முந்தைய இரவில் "நீ எப்போதும் பவித்ரா தான்டா. மாசு மருவற்ற பவித்ரா. எனக்கும் உனக்கும்" என அவன் கூறிய வார்த்தைகளே நெஞ்சில் ரீங்காரமிட, பவித்ரா என்ற தன் அடையாளத்தை தேடத் தொடங்கினாள் வினயா.

அவளது தேடுதல் வேட்டை கணவனின் முகத்திலிருந்தே தொடங்க, மூடியிருந்த கண்களில் கூட காதல் நிறைந்திருப்பதாக பட்டது அவளுக்கு.

திருமணம் முடிந்து இவ்வளவு காலத்தில் அவனது முகத்தை வெகு அருகில், அதுவும் அவன் உறங்கும் போது பார்ப்பது இது தான் முதல் முறை. இறுக்கம் தளர்ந்து அவன் உறங்குவதையே பார்த்திருந்தவள், பார்க்காத அவன் பார்வையையே தாங்க முடியாமல் முகத்தில் தொடங்கிய தேடுதலை நிறைவு செய்து கொண்டு, நெஞ்சுக்குள் புகுந்தாள்.

வெகு நேரம் தொடர்ந்த அந்த தேடுதலை முடித்துக் கொண்டு வினயா எழுந்த போது கூட விஜயின் உறக்கம் களைந்திருக்கவில்லை. அவளை இம்மியும் விட்டுக் கொடுக்க முடியாது என்பது போலிருந்த விஜயின் பிடியிலிருந்து தன்னை மெல்ல விடுவித்துக் கொண்ட வினயா குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

Property of Bhuvana

முதல் நாள் கணவன் தன்னைக் குளித்துவிட்டுத் தான் போக வேண்டும் என அறிவுறுத்தியது நினைவு வர, குளியலை முடித்துக் கொண்டு, இளம் பச்சை உடலும், வெண் பட்டு நிற கீழ் பான்ட்டும் கொண்ட சுடிதாரை அணிந்து வெளியே வந்தாள்.

தோள் வரை படர்ந்திருந்த கூந்தலை நடுவில் கிளிப்பிட்டு வாரியவள், நெற்றியில் பொட்டிட்டு முடிக்கும் வரை கூட விஜயின் உறக்கம் கலையவில்லை.

அங்கிருந்த சிறு பூஜை அலமாரியைத் திறந்து ஆராய்ந்தவளுக்கு, பூஜைக்கென வைக்கப் பட்டிருந்த குங்குமத்தைக் கண்ட போது மனதிற்குள் ஒரு சிலிர்ப்பு ஓடி மறைந்தது. கைகள் நடுங்க அதை எடுத்து வகிட்டில் வைத்துக் கொண்ட போது மனதில் ஓடிய சிலிர்ப்பு உடல் முழுதும் ஓடி அவளுக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால் அந்த சிலிர்ப்பின் அர்த்தமும், அது எதனால் வந்தது என்பதையும் வினயாவால் யோசிக்க முடிந்ததே தவிர, ஒரு முடிவிற்கு வர முடியவில்லை.

பலத்த யோசனையின் விளைவால் தலை கனப்பது போல் தெரியவே, கட்டிலின் அருகே போடப்பட்டிருந்த கூடை நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்தவள், விஜயை எழுப்பலாமா? வேண்டாமா? என மீண்டும் யோசிக்கத் தொடங்கினாள்.

அந்த சிறு யோசனைக்கும் விடை தெரியாமல் போக, வினயாவிற்கு எரிச்சலாக வந்தது. வேறு என்ன செய்வது என்றும் தெரியாமல் போகவே மீண்டும் கட்டிலுக்குச் சென்றவள், முன்னர் படுத்திருந்தது போலவே விஜயின் கைகளுக்குள் தன்னை நுழைத்துக் கொண்டு அவனை ஒட்டிப் படுத்துக் கொண்டாள்.

அவனும் அவளது அந்த ஸ்பரிசத்தை விரும்பியவன் போல அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான், "விதும்மா" என்ற விழிப்போடு. அவனது "விது" என்ற அழைப்பு வினயாவிற்குள் மீண்டும் ஒரு யோசனையை தட்டி எழுப்பிவிட்டது. நேற்று இரவு கூட "விது" என்று அழைத்தானே? என ஆரம்பித்த யோசனை, "யார் விது?" என்ற பொறாமையில் கொதித்து, "ம்ம்ம் விஜி அப்படியில்லை" என்ற நொடிச் சமாதானத்தில் வந்து நின்று, "வேறு யாருமில்லை என்றால் அப்போ நீயா? உனக்கு எத்தனை பேர் தான் வைப்பது?" என்ற மனசாட்சியின் கேள்விக்குப் பதில் கிடைக்காமல் போய், "இல்ல நான் தான். ஏதோ செல்லப் பேர்" என்று மீண்டும் ஒரு நிறைவில்லா முடிவிற்கு(!) வந்தாள். அந்த நிறைவில்லா முடிவு அவளைக் குடைந்து கொண்டே இருக்க, ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல் போகவே கண்ணை மூடிக் கொண்டு உறங்க முயற்சி செய்தாள்.

Property of Bhuvana

அவளது முயற்சி வெற்றியடையும் முன்னரே விஜயின் உறக்கம் களைந்து விட்டிருந்தது. பனித் துளியில் நனைந்த செடியாய், விரியத் துடிக்கும் மலரைப் போல் புன்னகையை இதழ்களில் ஏந்தி, தன் அருகில் படுத்திருந்த மனைவியைப் பார்த்ததும் முகம் விசிகசித்தது. கண்கள் மூடியிருந்தாலும் இமைகளின் அடியில் அவிழ்த்துவிட்ட முயற்குட்டிகளாய் ஓடிக் கொண்டிருந்த கண்மணிகளை லேசாய் வருடியவன், அவனது வருடலில் முயற்குட்டிகளின் ஆட்டம் அதிகரிக்கவே கைகளின் வருடலை உதடுகளால் நடத்தினான்.

அவனது உதடுகள் இமைகளின் மேல் பட்டதும், கண்களை வினயா மலர்த்த, விஜயின் உதடுகள் கண்ணின் கருமணிகளுடன் சங்கமித்தன. அந்த சங்கமத்தில் நெகிழத் தொடங்கிய வினயா, சட்டென கணவனைத் தள்ளினாள்.

"என்னடா அதுக்குள்ள குளிச்சாச்சா?" என்றவன், அவள் மேலும் கீழுமாக தலையை ஆட்டவும் "குளிச்சிட்டு திரும்பவும் கட்டில படுக்கலாமா வினும்மா?" என்று வினவியதற்கு இடமும் வலமுமாக அசைந்தது வினயாவின் தலை.

"அப்புறம் ஏன் படுத்திருக்கே?" என அவளது மூக்கு நுனியைப் பிடித்து ஆட்டிய விஜய், "எழுந்துக்கோடா" என்று கூறியதோடு நில்லாமல் அவள் தோள் பற்றி எழுப்பியும் விட்டான்.

"நீங்க தூங்கிட்டே இருந்தீங்க. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல. அது தான்" என்றவள் எழுந்து அமர்ந்து கொண்டாள். முந்தைய தினம் அவள் அழுதது நினைவு வந்து அவளது கன்னத்தை மெல்ல வருடியவன், மீண்டும் கண்களை ஆழ நோக்கினான்.

"என்ன விஜி?" என அவள் திக்க, "ஒன்னும்மில்லடா, நீ நல்ல... நார்மல்லா தானே கண்ணம்மா இருக்கே" என்று தயங்கித் தயங்கி வினவினான்.

"ஹ்ம்ம்" என்ற அவளது உள்ளே சென்று விட்டதை உணர்ந்த விஜய், "விஜய் மேல கோபமா இருக்கீங்களா வினு?" என்றான் மென்மையாக.

"கோபமில்ல" என உடனே வந்தது பதில்.

Property of Bhuvana

"வருத்தமா?" என அவன் மீண்டும் வினவா, இப்போது வார்த்தையின்றி செய்கையில் வந்தது பதில்.

"அப்புறம்?" என அவன் துருவ, "ரெண்டுமே இல்லை. உங்களுக்குத் தான் வருத்தமோன்னு யோசனை" என்று அவள் பேசிய போது தன் பழைய பவித்ரா வந்துவிட்டாளோ என்று கூட விஜய்க்கு ஒரு நிமிடம் தோன்றியது.

ஆனால் அவள் கண்களில் ஒரு அலைப்புருதல் தெரிந்த போதே இன்னமும் வினயா என்ற பாதுகாப்பு வளையத்தை விட்டு அவள் வரவில்லை என்று விஜய்க்குப் புரிந்தது. புரிந்த வினாடி, "எனக்கு முற்று முதலா சந்தோஷம் தான். அதுக்கு என்ன காரணம் தெரியுமா?" என்று கேட்டவன், அவள் தெரியாது என்றுரைத்து விட்டு ஆவலே உருவாய் அவனை நோக்கவும், "குளிச்சிட்டு வந்து சொல்றேன்" எனக் கூறிய கையோடு குளியலறை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

"ஹான்..." என முதலில் திகைத்தவள், "சொல்லிட்டுப் போங்க" என ஒட்டு மொத்த பிடிவாதத்தையும் குரலில் நிரப்பினாள்.
அந்த பிடிவதாம் பிடித்திருந்தாலும் ஒரு சிரிப்புடன் உள்ளே நுழைந்தவன், குளித்து வெளியே வந்த போது வினயாவின் பிடிவாத முகத்தில் பிடிவாதம் மேலும் கூடியிருந்தது. கூடியிருந்த பிடிவாதம் சிறு கோபமாய் உருமாறி இருந்தது.

சிறு குழந்தையின் கோபத்தை ரசிப்பது போல் அவளை ரசித்தவன் அவளை சமாதானபடுத்த நினைக்காமல் தன் வேலைகளை செய்து முடித்தான்.

கிளம்பிய பின்னர், பார்வையாலேயே தன்னைத் தொடர்ந்து கொண்டிருந்த மனைவியை அணுகி "பசிக்கலையா வினு? கிளம்பு, வெளியே போய் சாப்பிட்டுட்டு வரலாம்" என அழைத்தான்.

"நீங்க இன்னும் என் கேள்விக்குப் பதில் சொல்லல" என அவனை நேராக நோக்கி வினவிய மனைவியை, "சொல்றேன், சொல்றேன். என்ன அவசரம்? நீ முதல கிளம்பு" என்று கிளப்பி வெளியே அழைத்துச் சென்றான்.

முகத்தை முழ நீளத்திற்கு நீட்டி வைத்திருந்த வினயா, கார் சென்ற பாதையை கவனிக்கவில்லை. அங்கிருந்த ஒரு மலைக்கோவில் முன்னர் வண்டியை நிறுத்தியவன், "வினு, இறங்கி வா" என்றான்.

அவளைக் கை பிடியாய் அழைத்துச் சென்றவன், அங்கு தெய்வமாய் குடி கொண்டிருந்த அம்மனை வணங்கிவிட்டு கோவிலைச் சுற்றி கூட்டிச் சென்றான். கோவிலின் சுற்று பிரகாரத்தில் ஒரு இடத்தில் தன் நடையை நிறுத்தியவன், மனைவியோடு அங்கே அமர்ந்தான்.

"வினும்மா, நான் ஏன் தெரியுமா உன்னை இங்க கூட்டிட்டு வந்தேன்?" என்று வினவி, அவள் பதில் சொல்லாமல் இருக்கவும்,

"எனக்கு இந்த இடம் ரொம்பப் பிடிக்கும். ஜன சந்தடி இல்லாம, என்னோட குழப்பங்களுக்கு விடை கண்டுபிடிக்க நான் வர ஒரே இடம் இது " எனக் கூறியவன்,

"ஆனா நான் இப்போ வந்தது குழப்பத்தோடவோ இல்ல மன சங்கடத்தோடவோ இல்ல. என்னோட முதற் காதலை வெற்றி பெற வச்சதுக்கு நன்றி சொல்றதுக்காக. அதுவும் சாதாரணமான நன்றி இல்லை, சாட்சியோட வந்திருக்கேன். சாட்சி யாரு தெரியுமா? எனக்குள்ள காதலை கொண்டு வந்த என்னோட மனைவி தான்" என்றவன், அவள் அவன் பக்கம் பார்வையைத் திருப்பவும்

"இப்பவும் எனக்கு வருத்தம்ன்னு நீ நினைக்கிறியா? நான் உன்னை மனசார காதலிக்கிறேன் கண்ணம்மா" என ஆத்மார்த்தமான குரலில் உரைக்கவும், வினயாவின் முகம் அவன் தோளில் சாய்ந்து கொண்டது.

"எப்படி விஜி? உங்களுக்கு அருவெறுப்பா இல்லையா?" என கலங்கிய குரலில் அவள் கேட்க,

"நான் உன்னோட குழந்தைத்தனத்தையும், மனசையும் தான் நேசிக்கிறேன் வினு, காலத்தோடு மாறும் இந்த உடம்பை இல்லை" என அழுத்திக் கூறியவன்,

Property of Bhuvana

"போதும்டா, இதை பத்தி நாம இனிமேல் பேசவேண்டாம். பேசறது என்ன நினைக்கக் கூட வேண்டாம். இதோட விட்டுடலாம்" என விஜய் முடிக்க, வினயா திணறலோடு ஆரம்பித்தாள்.
"இல்லை விஜய், நான்... நான்... பவித்..." என அவள் வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்க,

"வினும்மா, ப்ளீஸ். நான் சொல்றதைக் கேளு. எதையும் மனசுக்குள்ள திணிக்க முயற்சி பண்ணாதே. நீயா இயல்பா உன்னைப் பவித்ரான்னு உணரும் வரைக்கும் உனக்குள்ள எதையும் திணிக்காதே கண்ணா, ப்ளீஸ்" என்று அவள் கன்னத்தை வருடியவனின் மனதில், அவள்  எந்த விதமான தூண்டுதலோ அன்றி குன்றலோ இல்லாமல் பவித்ரா என்று தன்னைத் தானே உணரவேண்டும் என்ற எண்ணமே இருந்தது.

அப்போதும் வினயாவின் கண்கள் கலக்கத்தையே காட்டிக் கொண்டிருக்க, "இன்னும் என்னடா?" என்றான் விஜய்.
"எனக்கு... எனக்கு... நான் பவித்ரான்னு enakup புரியுது விஜய். ஆனா... ஆனா... அந்தப் பேர்... எனக்கு ஏற்றதில்லையோ... நாலு பேர்" என்றவளுக்கு அதற்கு மேல் வார்த்தை வெளி வராமல் கண்ணீர் முட்டியது.

"ஷ், இப்போ தானே சொன்னேன்" என விஜய் அவள் கண்களைத் துடைக்க,

"எந்த விதமான உறுத்தலுமில்லாம நீயே உன்னை பவித்ரான்னு அடையாளம் காணும் காலம் வரும். அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இருக்கலாம். தேவையில்லாம மனசைப் போட்டு வருத்திக்காதே" என்றவன், "எழுந்திரு போகலாம்" என அவள் கை பற்றி எழுப்பி அழைத்துச் சென்றான்.

அதன் பின்னர் ஊட்டியின் முக்கிய இடங்களை சுற்றி பார்த்தவர்கள் மாலையில் குடிலுக்கு திரும்பிய போது இருவருமே கடந்த காலத்தை மறந்திருந்தனர். (விஜய் மறக்கச் செய்திருந்தான் என்று கூற வேண்டுமோ?). அலை பாய்ந்த மனதோடு உலா வந்த மனைவியை, ஊட்டியின் அழகாலும், மலர்ந்து மணம் வீசிய மலர்களாலும், அவற்றை மையமாக வைத்து படம் வரையலாம் என்ற தூண்டுதலாலும் திசை திருப்பியவன் அதில்

Property of Bhuvana

வெற்றியும் கண்டான். மொத்தத்தில் அவளை அன்றைய தினத்திற்கு மட்டும் திசை திருப்பினான். அன்றைய வாழ்வின் அழகுகளை எடுத்துரைத்து பழங்கால நினைவுகளை மறக்கடித்தான்!

நேற்றைய இரவில், தான் விலகி நின்றது மனைவியின் மனதைப் பாதித்திருக்கிறது என்றுணர்ந்த விஜய், இனிமேல் அந்தப் பாதிப்பு, ஏன் எந்தவிதமான பாதிப்பும் அவளுக்கு நிகழக் கூடாது என்பதில் உறுதியாய் நின்று அவளோடு உறவாடினான்.

மேலும் இரண்டு நாட்கள் புது மனத் தம்பதியராய் விடுமுறையைக் கழித்துவிட்டு, ஊர் திரும்பியவர்களைக் கண்ட துளசிக்கு நெஞ்சம் நிறைந்தது. "இனி வாழ்வு இனிக்கும்" என்ற நம்பிக்கை வந்தது.

கணவனிடம் கணவனுக்கான உரிமையை அளித்தப் போதிலும், வினயா அவனிடம் எடுத்துக் கொள்ளும் சலுகைகளை இம்மியும் குறைக்கவில்லை. மேலும் கூட்டிக் கொண்டாள் என்று கூடச் சொல்லலாம்.

அதற்கு ஒரு சிறு உதாரணம் - அவளது விடுமுறையின் முதல் ஐந்து நாட்களுக்குத்(வார இறுதி சேர்த்து) தானும் விடுமுறை எடுத்திருந்த விஜய், குன்னூர் திரும்பிய மறுநாள் கோயம்புத்தூர் கிளம்புவதாக இருந்தது.

அவன் கிளம்ப ஆயத்தமான போதே முகத்தை சுருக்கிய வினயா, அவனைப் போகவேண்டாம் என்றாள் முதல் வார்த்தையாக. தன்னால் இதற்கு மேல் விடுமுறை எடுக்க முடியாது என்றும், அவள் வரும் வார இறுதியில் வரும் அவன் அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்வதாகவும் கூறியவனை முறைத்துவிட்டு மாமனார், மாமியாரிடம் புகார் பட்டியல் வாசிக்க,

அவர்களோ, "எங்களோட ஒரு வாரம் இருக்க மாட்டியா வினயா? உன் புருஷன் இருந்தா தான் இருப்பியோ?" என்று அவளிடம் பந்தைத் திருப்பவும், வேறு வழியின்றி விஜயைப் போகவிட்டாள்.

ஆனால் திங்கள் கிளம்பிச் சென்ற விஜயை புதன் அன்றே மீண்டும் வர வைத்தது வினயாவின் பிடிவாதம். வந்தவன் அவளைக் கையோடு ஊருக்கு அழைத்தும் சென்று

Property of Bhuvana

விட்டான். வீரராகாவனுக்கு இதில் வருத்தமே என்ற போதிலும் துளசிக்கு சந்தோஷமாய் இருந்தது. மருமகள் உரிமையாய் தன் மகனிடம் நடந்து கொள்கிறாளே என்ற சந்தோஷம் தான் அது. மகள் தன் கணவனுடன் மகிழ்ச்சியோடு வாழ்வதை கண்டு உள்ளம் பூரிக்கும் ஒரு தாயின் சந்தோஷம்!!

வினயாவின் அடமும், விஜயின் செல்லமும், துளசியின் பிரார்த்தனையும் தடையின்றி வளர்ந்து கொண்டே இருந்த வேளையில் விஜய்-வினு இருவரது ஊடலும் கூடலும் தங்கு தடையின்றி வளர்ந்து இன்பம் சேர்த்தது.

அந்த இன்பம் வினயா கருவுற்றிருக்கிறாள் என்ற செய்தியில் உச்சத்தை எய்தியது!

மௌன மொழி-பாகம் 27

தங்களது தேனிலவு முடிந்து சரியாக ஒன்றரை மாதத்தில், ஒரு இனிய காலை வேளையில் விஜய் எழுந்து ஜாக்கிங் சென்றிருக்க, வினயா இனிய துயிலில் ஆழ்ந்திருந்தாள்(!)

தனது காலை வேலை ஓட்டம் முடிந்து விஜய் வீட்டினுள் நுழைந்த போது, "விஜி, விஜி" என்ற வினயாவின் பயந்த அழைப்பு கேட்டது.

"என்னம்மா" என்ற பதிலுடன் மனைவியிடம் விரைந்த விஜய், அவளது கலங்கிய முகத்தில் ஒன்றும் புரியாமல் அவளை நெருங்கினான்.

தலையைப் பிடித்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்திருந்த வினயாவின் முன் மண்டியிட்டு அமர்ந்த விஜய், தாழ்ந்திருந்த அவளது தலையை நிமிர்த்த எண்ணாமல் கீழிருந்து அவளது கண்களை நோக்க, வினயா அவனது பாவனையில் சட்டென சிரித்து, கண்களை சிமிட்டினாள்.

"என்ன விளையாட்டு வினு இது?" என விஜய் கடிந்து கொள்ளத் தொடங்கும் போதே, "விளையாட்டு இல்ல... எனக்கு நிஜமாவே தலை சுத்துது" என முகத்தைப் பரிதாபமாய் வைத்துக் கொண்டு தன் நிலையை விளக்கி முடித்தாள் மனைவி.

"தலை சுத்துதா? ஏன்டா?" என கணவன் அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு வருடிக் கொடுக்க, "ஏன்னு தெரிஞ்சா உங்களை ஏன் கூப்பிடுறேன்? நானே பார்த்துக்க மாட்டேனாக்கும்?" என முகத்தை சுளித்தவளை "ஹோ, அப்படியா?" என கதை கேட்டு வெறுப்பேற்றினான் விஜய்!

பதில் ஒன்றும் கூற முடியாமல் வினயா கணவனை அடிக்க, "தலை சுத்தல் போய்டுச்சு போல?" என்றான் விஜய் சிரிப்புடன்.

"இல்ல விஜி, நிஜம்" என வினயா கண்ணை விரித்து உறுதி கூறுவதற்கு முன்பாகவே விஜய்க்கு அவள் சோர்ந்திருப்பது புரிந்து விட்டது. "சரி, நீ படுத்துக்கோ. நான் கொஞ்சம் ஹோர்லிக்ஸ் கலந்து எடுத்துட்டு வரேன். சரியா சாப்பிடாதது கூட தலை சுத்தலாம்" எனக் கூறி, "நேத்து நல்லா தான் சாப்பிட்டேன். நேத்திக்கும் இப்படி தான் இருந்தது, ஆனா ரொம்ப இல்லை..." என மனைவி யோசிக்க ஆரம்பித்தாள்.

அவளைக் கட்டிலில் சாய்வாக படுக்க வைத்துவிட்டு, கீழே சென்ற விஜய்க்கும் அவள் கூறியது யோசனையைத் தூண்டிவிட்டிருந்தது. யோசனையின் ஊடே ஹோர்லிக்ஸ் கலந்து எடுத்து வந்தவன், அவளைப் பருக வைத்தான். அவன் கொடுத்த ஹோர்லிக்ஸ் இரண்டு மடக்கு உள்ளே செல்வதற்கு முன்னால், வினயா அவனைத் தள்ளிக் கொண்டு குளியலறைக்குள் ஓடி பெரும் குமட்டலோடு வாந்தி செய்தாள்.

சட்டென பதறி, அவளைத் தொடர்ந்த விஜய் அவளைத் தாங்கிக்கொண்டான். அவள் தலையைத் தாங்கிக் கொண்டு, அவளைத் தன் மேல் சாய்த்திருந்தவன் அவளது குமட்டல் சற்று ஓயவும், தண்ணீர் தெளித்து அவள் முகம் துடைத்தான்.

கைத் தாங்கலாக படுக்கைக்கு அழைத்து வந்தவன் பேசத் தொடங்கும் முன்னர், "நேத்திக்கு சாயங்காலம் நான் ஒரே ஒரு பாஸந்தி தான் சாப்பிட்டேன். நிறைய எல்லாம் சாப்பிடல. நீங்க வேணும்னா போய் பாருங்க" என முன்னெச்சரிக்கை நோட்டீஸ் விட்டவளைப் பார்த்து, விஜய்க்கு சிரிப்பு பொத்துக் கொண்டுவந்தது.

"உங்களைத் திட்டிட்டு இந்த வீட்டில இருக்க முடியுமா மேடம்?" என கேள்வியாலேயே அவளுக்குப் பதில் கூறியவன், "திட்டலைடா, ஆனா திடீர்ன்னு ஏன் இப்படி வருது?" என மனைவியிடம் கேட்பது போல் தன்னிடம் கேட்டுக் கொண்டவன், மருத்துவ மூளை சட்டென தலை காட்ட "உனக்கு எப்போ பிரியட்ஸ் வந்துச்சு" என்றான் வேகமாக.

Property of Bhuvana

"ஹான்... அது... அது வந்து... இந்த மாசம் வரல" என வினயா தன் கண்டுபிடிப்பை முன்வைக்க, விஜயின் முகம் சந்தோஷத்தில் திளைத்துப் போனது.

அதன் பின்னர் இருவரும் கண்ணோடு கண் நோக்கி, தங்கள் வாரிசின் வரவை மகிழ்வோடு ஏற்றனர். மனைவியை அவளுக்கு வலிக்காத வண்ணம் இறுக அணைத்திருந்த விஜய், "தேங்க்ஸ் விது" என மெல்ல அவள் காதில் கிசுகிசுத்தான். இத்தனை நாட்களில் தங்களுக்குள் நிகழும் அந்தரங்கமான தருணங்களில், அதுவும் தன்னை முழுதும் தொலைத்த நிலையில் தான் விஜயின் வாயிலிருந்து "விது" என்ற அழைப்பு வரும். அப்போது வினயாவும் தன்னை மறந்திருப்பாள் என்பதால், கருத்திலேயே பதியாதது கேள்வியாய் பிறக்கவில்லை!

இப்போது கேள்வி கேட்பதற்கு தகுந்தாற்போல், விஜயின் அழைப்பு மனதில் பதிந்து விடவே "விதுவா? என்னை ஏன் விது-ன்னு கூப்பிடுறீங்க?" என தன் கேள்வியைத் தடையின்றி வெளியிட்டாள் வினயா.

"நீ தான் கண்டுப்பிடிக்கணும்? எல்லாம் ஒரு ஆள் சொல்லிக் கொடுத்துட்டே இருப்பாங்களா?" என்றவன் மெல்ல சிரித்தான்.

அதில் அவளது தன்மானம் தூண்டி விடப் பட்டிருக்கும் என்பது புரிந்ததால், மனைவி சிலிர்த்துக் கொண்டு "நானே கண்டுப்பிடிக்கிறேன். நீங்க ஒன்னும் சொல்லத் தேவையில்லை" என பதில் கூறியது பிடித்தே இருந்தது.
முறுக்கிக் கொண்டவளை மீண்டும் அணைத்து, "நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் கண்ணம்மா" என தன் மகிழ்ச்சியை அன்பு போங்க வெளியிட்டவன், தனக்குத் தெரிந்த அளவில், மனைவியின் நாடிப் பிடித்துப் பார்த்து தன் சந்தோஷத்தை உறுதிப் படுத்திக்கொண்டான்.

அந்த உறுதியில் மனம் திளைத்தாலும், பெண் மருத்துவரின் வாக்குமூலமாக அதை மீண்டும் நிச்சயப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தில், "இன்னைக்கு ஈவினிங் லேடி டாக்டர்கிட்ட காட்டி உறுதி படுத்திக்கலாம்" என்று கூறினான்.

Property of Bhuvana

"அண்ணிக்கிட்டேயே போகலாமா?" என வினயா தயங்கவும்,

"இந்த டைம்ல சென்னை வரைக்கும் போகவேண்டாம் வினும்மா" என விஜய் தன் யோசனையைக் கூறினான்.

அதற்குப் பதிலாய் முகத்தில் மறுப்பைக் காட்டி, "ஹ்ம்ம்" என வினயா இழுத்தத்திலேயே அவளுக்குத் தனியாக மகப்பேறு மருத்துவரிடம் செல்வதில் இஷ்டமில்லை என்பதை உணர்ந்தான் விஜய்.

மனைவியின் சங்கடத்தை உணர்ந்த பின்னர் அதை விஜய் தீர்க்காமல் இருந்தால் உலகம் அழிந்து விடாது? உடனே அதற்கொரு தீர்வாய், "உமாவை நாம இங்கே வரச் சொல்லலாம் என்னம்மா? உமாவால வர முடியாதுன்னா துளசிம்மா வரட்டுமா?" எனக் கேட்டு அவள் சந்தோஷமாக தலை ஆட்டியதும், "சரிடா, காலேஜ் நேரமாகுதில்ல? கிளம்பு சீக்கிரம்" என்றான்.

"காலேஜா? எனக்குப் பாப்பா பிறக்கப் போகுது. நீங்க என்னடான்னா என்னை காலேஜ் போக சொல்றீங்க? அதெல்லாம் முடியாது. நீங்கெல்லாம் என்ன டாக்டர்? இந்த டைம்ல வேகமா நடக்கக் கூடக் கூடாது தெரியுமா? உங்களுக்கு இதெல்லாம் சொல்லித் தரலையா? ஹய்யோ ஹய்யோ உங்களை நம்பி நிறைய பேஷன்ட் வேற வாரங்களே அவங்களைச் சொல்லணும்" என மூச்சு விடாமல் அலுத்துக் கொண்ட வினயாவை இடுப்பில் கை வைத்து முறைத்தான் விஜய்.

"காலேஜ் போகமா டிமிக்கி கொடுக்கிறதுக்கு என்னெல்லாம் பேசுற நீ? உனக்கு ரொம்ப வாய் ஜாஸ்தி ஆகிடுச்சு வினு" என கடிந்து கொள்ள முயன்ற போதும், குரலில் கடுமை ஏறிவிடவில்லை. மாறாக ஒற்றை நூலாய் வரவேண்டிய சிரிப்பு ரெட்டை நாடி பிடித்து முழுதாய் விரவி இருந்தது.

அவளும் அவனது பாவனையில் கிளுக்கிச் சிரிக்கவே, அங்கே பரிபூரண சந்தோசம் நிரம்பி வழிந்தது. கல்லூரிக்கு விடுப்புச் சொல்லிவிட்டு மனைவியை கவனித்துக் கொள்ளும் தலையாய பணியை மேற்கொள்ள ஆயத்தமானான் விஜய்.

வினயா சற்று தெளிந்ததும், கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்கு ஆகாரம் கொடுத்தவன், சந்தோஷத்தையும் மீறி அவள் சோர்வது கண்டதும் அவளை உறங்கச் சொல்லிவிட்டு வெளியே வந்தான்.

Property of Bhuvana

தங்கள் அறையை விட்டு வெளியேறும் போதே, குன்னூர் வீட்டு எண்ணை அழுத்திக் கொண்டே வந்து, தாய்க்கு விஷயத்தைப் பகிர்ந்தான். விஷயத்தைக் கேட்ட துளசிக்கு சில நிமிடங்கள் சந்தோஷத்தில் பேச்சு நின்று போனது. "என்னம்மா, ஒண்ணுமே சொல்ல மாட்டேன்றீங்க?" என விஜய் துள்ளிய குரலில் செல்லம் கொஞ்சவும்

"ரொம்ப சந்தோஷம் கண்ணா. நான் உடனே கிளம்பி வரேன்" என்றவர், "அப்பா தோட்டத்திற்குப் போயிருக்காங்க. வந்ததும் சொல்லிட்டுக் கிளம்புறேன். நீ வினுவைப் பத்திரமா பார்த்துக்கோ. ரொம்ப நடக்க விடாதே! அவ வேற தரையைத் தரைன்னு மதிச்சு நடக்கமாட்டா" என துளசி தாயாய் கவலைப்பட.

"உங்க மருமக நடந்துட்டாலும்" என சந்தோஷமாய் சலித்துக் கொண்ட விஜய், "உள்ளதே செல்லம் ஜாஸ்தி. இப்போ இதை சாக்கா வச்சுக்கிட்டு எத்தனை நாள் காலேஜ்க்கு லீவ் போடப் போறாளோ?" என அவன் கவலையை சிரிப்புடன் வெளியிட்டான் மகன்.

"ஆமா, ஆமா செல்லம் ஜாஸ்தி தான். ஊரார் கொடுக்கிற செல்லத்தை நீ அப்படியே கண்டிச்சுக் குறைக்கிற மாதிரி பேசுற?" என துளசி மகனை வார, அங்கே ஒரு சிரிப்பலை எழுந்து அடங்கியது.

மகனை கிண்டல் செய்தாலும், "வினு ஒரு வாரம் காலேஜ் போகவேண்டாம் கண்ணா. டாக்டர்கிட்ட காட்டிட்டு அப்புறமா பார்த்துக்கலாம்" என்றார் துளசி.

"அவ படிச்சிட்டு இருக்கும் போது..." என்று இழுத்தவன், "அச்சானியமா எதையாவது சொல்லாதே விஜய்" என்றார் துளசி வேகமாக.

"ம்ஹூம்ம் இல்லைம்மா" என மகனும் வேகமாக பதில் கூறினான். அவள் படித்துக் கொண்டிருக்கும் போது குழந்தை என்ற நிலையை அவளிடம் சுமத்த, அவன் தயங்கியது உண்மை தான். சொல்லப்போனால் வினுவை நெருங்குவதில் அவன் காட்டிய தயக்கத்திற்கு இதுவும் ஒரு காரணம். ஆனால் அது அவளுக்குள் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணும் என்று உளவியல் ரீதியாக படித்தும், கேட்டும் தெரிந்து கொண்ட பின்னர், அந்த மாற்றத்தை மென்மேலும் தள்ளி வைக்க விஜய்க்கு விருப்பம் இருக்கவில்லை.

Property of Bhuvana

"சரிம்மா, நீங்க கிளம்பி வாங்க. நீங்க வந்ததும் தான், நான் அங்க இங்க நகர முடியும்" என அவரது வருகையை துரிதப் படுத்தியவன், தற்போதைய பேச்சு வார்த்தையையும் உமாவிடம் பேச வேண்டும் எனக் கூறி துரிதப்படுத்தினான்.

தாயிடம் பேசிவிட்டு, உமாவிற்கு அழைத்தப்போது சந்தோஷத்தில் மலரும் அவளது முகத்தைப் பார்க்க முடியவில்லையே என்ற எண்ணத்துடனே அவள் தொலைப்பேசியை எடுக்கக் காத்திருந்தான்.

அவனை அதிகம் காக்கவைக்காமல் நான்காவது மணியில் தொலைப்பேசியை எடுத்தவன் தனசேகரன். விஜயின் குரலைக் கேட்டதும் "சொல்லு விஜய், எப்படி இருக்கே? வினு எப்படி இருக்கா?" என்ற அவனது குரலில் கோபமும் இறுக்கமும் வெகுவாக குறைந்திருப்பது வெளிப்படையாக தெரிந்தது.

"உங்க தங்கை நல்லா இருக்கா. நான் ரொம்ப நல்லா இருக்கேன்! உங்களையும் ரொம்ப ரொம்ப நல்லா வச்சுக்கிற மாதிரி ஒரு நியூஸ் சொல்லத் தான் கால் பண்ணினேன்" என்ற விஜயின் உற்சாகக் குரல், தனசேகரனை மேலும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது என்பது அவனது அடுத்த பேச்சு வார்த்தையில் தெரிந்தது.

"என்ன நியூஸ்? வினு இன்னைக்கு ஏதும் சமை...." என்று தொடங்கியவன், "ஹே விஜய், என்னை மாமா வாக்கிட்டியா என்ன?" என்றான் பெரும் கூவலுடன்.

"ஹப்பா, என்ன வேகம்? சந்தோஷத்தில துள்ளிக் குதிச்சு தரை ஏதும் ஆகிடுச்சா பாருங்க! ஒரு வேளை கீழ் floor-க்கு வந்துடீங்களான்னும் செக் பண்ணிக்கோங்க" என்றான் விஜய் சிரிப்புடன்.

"ஹே தேவி, தேவிம்மா, சீக்கிரம் வாடி" என்ற தனசேகரனின் அழைப்பில் விஜய் உறைந்து போனான், சந்தோஷமாக! தன் கையையே ஒரு முறை கிள்ளிப் பார்த்துக் கொண்டவன், "நிஜம் தான்" என்றான் வாய் விட்டு.

"நிஜம் தான். நிஜம் தான். உன்னைக் கிள்ளிக்கிறதோட நிறுத்திக்கோ . என் தங்கச்சியை கிள்ளினியோ உனக்கு அடி தான். கோயம்புத்தூர் தேடி வந்து அடிப்பேன் ராஸ்கல்" என தனசேகரன் வம்பு செய்ய,

Property of Bhuvana

"அண்ணனுக்கும் தங்கச்சிக்கும் எப்போ பார்த்தாலும் வன்முறை தான். அஹிம்சை முறையே தெரியாது!" என விஜய் சரிக்குச் சரி பேச,

"தெரியலைனா என்ன? ஃபிரண்ட்ஸ் ரெண்டு பேரும் சொல்லித் தரது. சொல்லிக் கொடுத்தா குறைஞ்சா போய்டுவீங்க?" என்றுரைத்த தனசேகரனின் கையிலிருந்து தொலைப்பேசி பறிக்கப் படுவதை விஜய் உணர்ந்தான்.

"ஆமா, வாட்டி வதைக்க ரெண்டு இளிச்சவாய்ங்க கிடைச்சாலும் கிடைச்சோம். உங்க ரெண்டு பேரோட அராஜகம் தாங்க முடியலை" என கணவனிடம் உரிமையாய் அலுத்துக் கொண்ட(!!!!) உமா, விஜயிடம் பேசத் துவங்கினாள்.

"என்ன விஜய்?இன்னைக்கு என்ன பண்ணி வச்சிருக்கா உன் அருமை பொண்டாட்டி" என்று ஒரு செல்லப் புகாரை எதிர்நோக்கியிருந்த அவளது பேச்சு,
"ஹ்ம்ம் அம்மாவாகி வச்சிருக்கா? என்ன செய்யலாம்? ரெண்டு அடி வைக்கவா?" என விஜய் சாதாரண குரலில் சொன்ன சேதியில்மீண்டும் சந்தோஷ அலைகளை எட்டியது.

"ஹே" என உமாவின் சந்தோஷக் கூவலைத் தொடர்ந்து, "மெதுவா மெதுவா, கண்மணி உருண்டு ஃபோன் வழியா கோயம்புத்தூர் போய்டப்போகுது" என தனசேகரன் சந்தோஷமாய் வம்பு செய்தது விஜய்க்குக் கேட்டது.
"அப்படி போனா நீங்க பின்னாடியே போய் பிடிச்சிட்டு வாங்களேன்! இங்க என்ன வெட்டி முறிக்கிறீங்க?" என்ற உமாவின் குரலில் உரிமை ஊஞ்சலாடி, உறவு கொண்டாடியது.

"ரொம்ப சந்தோஷம் விஜய். டாக்டர்கிட்ட காட்டியாச்சா? யூரின் டெஸ்ட் கொடுத்தாச்சா?" என உமாவின் கேள்விக்கு உரிய பதிலைக் கூறிவிட்டு, சோதனை முடிவுகள் வந்ததும் அவளை அழைப்பதாகக் கூறினான் விஜய்.

சந்தோஷ சம்பாஷனைகளுடன் அழைப்பைத் துண்டிக்கப் போன உமாவை நிறுத்திய விஜய் ஆனந்த், "என்ன உமா சென்னைல இடியுடன் கூடிய மழையாமே? உனக்கு ஏதும் விஷயம் தெரியுமா?" என்று அடக்கிய சிரிப்புடன் வினவினான்.

Property of Bhuvana

"ஆமா, ஆமா, போன மாசம் குன்னூர்ல குடி கொண்டிருந்த காற்று அழுத்த தாழ்வு மண்டலம் சென்னை பக்கம் திரும்பியிருக்கு" என்றாள் உமாவும் சளைக்காமல்.

"தனாக்கு ஆபீஸ் நேரமாச்சு விஜய். நான் போய் சமையலைப் பார்க்கிறேன். அப்புறமா கூப்பிடுறேன் சரியா? வினு எழுந்ததும் நீயும் கூப்பிடு" எனக் கூறி தன் மகிழ்ச்சியை அவனிடம் பகிர்ந்து கொள்வதை சற்று நேரம் ஒத்தி வைத்த அவனது தோழி, "நான் மாமா வந்ததும் அவர்கிட்ட விஷயம் சொல்லி ஃபோன் பண்ணச் சொல்றேன்" எனத் தன் கடமையையும் சரியாகவே நிறைவேற்றுவதாகக் கூறி விடை பெற்றாள்.

## மௌனமொழி பாகம் 28

இனிப்பான செய்தி கேட்ட வேளையில் இனிப்பான பதார்த்தம் ஒன்றை காலை உணவோடு செய்யலாம் என்று எண்ணிய உமா, ரவா கேசரி செய்ய முடிவு செய்து சமையலறைக்குள் சென்றாள்.

மனம் முழுதும் சந்தோசம் ததும்ப சமையலறைக்குள் சென்ற உமாவை, சில நிமிடத் தாமதத்திற்குப் பின்னர் ஓசையின்றி பின் தொடர்ந்த தனசேகரன், அவளைப் பின்னாலிருந்து இறுக்கி அணைத்துக்கொண்டான்.

ரவையை வறுப்பதற்காக அடுப்பில் வாணலியை வைத்து, அதில் நெய்யை ஊற்றிக் கொண்டிருந்த உமாவோ அவனது திடீர் தாக்குதலில் நிலை தடுமாறி, கையில் வைத்திருந்த நெய்யை டப்பாவோடு கொட்டிக் கவிழ்த்தாள்.

"ஹய்யோ என்ன தனா" என நெய் கொட்டியதற்கு அவள் வருந்திக் கொண்டிருக்க, தனசேகரனோ அவளது கழுத்து வளைவில் முத்தமெனும் அமுதத்தைக் கொட்டிக் கொண்டிருந்தான்.

கொட்டிய நெய்யைத் துடைத்தெடுக்க வேண்டிய அவசரமும் அவசியமும் உந்த "எப்போ பாரு ரெண்டு வேலை வைக்கிறதே உங்களுக்குப் பொழைப்பா போச்சு. இப்போ பாருங்க, கொட்டின நெய் எல்லாத்தையும் நான் துடைச்சு எடுக்கணும்" என உமா சலித்துக் கொள்ள,

தனசேகரனும், "நானும் கொட்டினதை எல்லாம் திரும்ப எடுக்கணும். நீயே தரியா? இல்ல நானே எடுத்துக்கவா?" என்றான் கர்ம சிரத்தையாக

"எதைத் தருவது?" என உமா யோசித்துக் கொண்டிருக்கும் போதே, மீண்டும் அவளது கழுத்துக்குத் தன் முகத்தை இடமாற்றிய அவளது ஆருயிர் கணவன், "புரியலையா தேவி? உனக்கு நான் கொட்டிக் கொடுத்த முத்தம் எல்லாத்தையும் திரும்ப எடுத்துக்கணும் இல்லையா? அது தான் நீயே தரியா? இல்லை நான் எடுத்துக்கணுமான்னு கேட்டேன்" என்று ஒரு பெரும் விளக்கத்தை அவளிடம் வைத்தான்.

"விளையாடாதீங்க தனா, மாமா வேற யோகா முடிஞ்சு வந்திருவாங்க. அப்புறம் நான் சமைக்கணும். உங்களுக்கு சாப்பாடு கட்டணும். ஹாஸ்பிடல் கிளம்பணும். எல்லாத்துக்கும் மேலா இதை வேற சுத்தம் பண்ணனும். இல்லைன்னா பிசுபிசுன்னு ஒட்டிக்கும்" என இடைவெளி விடாமல் பேசியவளிடம்

"கொஞ்சம் மூச்சு விட்டுக்கிட்டு பேசுடீ" எனக் கூறியவன் அவள் மூக்கு நுனியை நீவிவிட்டான், மெல்லிய வருடலாக.

"சார், செம குஷில இருக்கீங்க போல" என்றாள் உமாவும் அவனது இலகுத் தன்மையை உணர்ந்து.

"பின்னே, என் தங்கச்சியோட தாய்மையை விட வேறென்ன விஷயம் எனக்கு மிகப்பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கும்ன்னு நினைச்சே?" என்றவன் அதே சந்தோஷம் உமாவின் முகத்திலும் குடிக்கொண்டிருக்கவும், அவளைத் தன் நெஞ்சோடு அணைத்து, "அந்த விஷயத்தைவிட பெருசா வேற விஷயம் இல்லைன்னு தான் சொன்னேனே ஒழிய, அதற்கு ஈடா வேற சந்தோஷம் இருக்க முடியாதுன்னு சொல்லல தேவிம்மா" என்றான் பேச்சில் பொடி வைத்து.

வைத்தப் பொடி வீணாகிப் போனது என்பதை உணர்த்துவது போல் "என்ன சொல்லவரீங்க தனா? எதுவானாலும் நேரடியா சொல்லுங்க. வர வர நீங்க சொல்ற பல விஷயம் எனக்கு புரியவே மாட்டேன்து" என்றாள் உமா, கண்களை விரித்து.

"ஒரு வாரமா ஒரு மார்க்கமா தான் திரியுற நீ" என்ற தனசேகரன், அவளது கன்னங்களில் கன்னம் வைத்து இழைந்தான்.

"ஒரு வாரமாவா? நாலு நாளா தானே நாம..." எனத் தொடங்கிய உமா மேலே தொடர முடியாமல் கன்னம் சிவக்க, அந்த சிவப்பை ரசித்தத்தோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் அதை அள்ளிப் பருகவும் செய்தான் அந்தக் காரியக் கணவன்!!

"ஷ், சொல்லுங்க தனா? என்ன சொல்ல வந்தீங்க?" என உமா சிணுங்க, "சொல்றேன், சொல்றேன். சொல்லிக் கொடுக்கத் தானே இருக்கேன்" என்று அதிலும் பொடி வைத்தவன், "என் தங்கையோட தாய்மைக்கு ஈடான விஷயம்ன்னா அது என்னோட தந்தைம்மை" என்றான் குறும்புச் சிரிப்புடன்.

அவன் கூறிய கூற்று உமவிற்குப் புரிய சரியாக பத்து நொடிகள் பிடித்தன. புரிந்த நொடி, சிவந்த கன்னங்கள் மேலும் ஜொலிக்க, அந்த ஜொலிப்பு வெளியே தெரியும் முன்னால், அதை கணவனின் மார்பிற்கு இடமாற்றிவிட்டாள் உமாதேவி.

"ஏதாவது வாய்ப்பிருக்கா உமா" என அவள் முகம் நிமிர்த்தி தனசேகரன் வினவ,

"மூணு வருஷம் சாமியார் மாதிரி இருந்துட்டு நாலு நாள்ல தந்தை ஆகுற ஆளைப் பாரு" என்று அழகு காட்டியவள், வாயில் மணி அடிக்கும் சத்தம் கேட்கவே "மாமா வந்துட்டாங்க" என்ற அறிவிப்புடன் சமையலறையை விட்டு ஓடினாள்

முகத்தின் நிறைவை கன்னச் சிவப்பு பறைசாற்ற, கதவைத் திறந்த மருமகளைக் கண்ட வைரவனுக்கு அவளை அப்படிப் பார்க்கவே பூரிப்பாய் இருந்தது என்றால், அவர் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாய், மருமகள் அவளது மகள் போன்ற தன் மகளைப் பற்றின சந்தோஷச் செய்தியைக் கூறிய போது, நெஞ்சம் சந்தோஷத்தில் ஒரு முறை நின்று, பின்னர் துடித்தது.

தன் சந்தோஷத்தைக் கண்ணீராய் வெளியிட்டவர், பூஜையறையில் போய் விழுந்தார். மூன்று வருடங்களுக்கு முன்னர் தன்னையே உணரமாலிருந்த தன் குழந்தை, இப்போது தன்னுள் ஒரு குழந்தையைத் தாங்கி நிற்கிறாள் என்றால் அது இறைவனின் செயல் அன்றி வேறென்ன? இறைவன் நடத்தி வைத்த இந்த அற்புதத்திற்கு அவனிடம் நன்றி கூறியவர், இந்த சந்தோஷம் தொடர்ந்து நிலைக்க வேண்டும் என்றும், தனது பெண் தன் ஆருயிர் பாப்பாவாய் தன்னிடம் வரவும் தன் பிரார்த்தனையை முன்வைத்தார்.

பிரார்தனைக்களுக்கு முடிவென்பது ஏது? ஒன்று போனால் மற்றொன்று!

Property of Bhuvana

தந்தையும் தாராமும் செய்த சந்தோஷப் பரிமாற்றத்தை கண்களில் சிரிப்புடன் பார்த்திருந்த தனசேகரன், தந்தை பூஜையறையை அடைந்ததும் "நான் குளிக்கப் போறேன் தேவி" என்ற அறிவிப்புடன் அவர்களது அறைக்குள் புகுந்து கொண்டான்.

ஒரு காலத்தில் வேலைக்குக் கிளம்பிச் செல்லும் போது கூட தன்னிடம் விடை பெறாத தன் கணவனா இது? என்றிருந்தது உமாவிற்கு.

ஒரு வாரம் முன்னர் தான் கொடுத்த ஷாக் ட்ரீட்மென்ட் எந்த அளவு அவனை மாற்றி இருக்கிறது என்றெண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை அவளால். அதுவும் அவனைக் கலங்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யாத ஒன்று அவனை பெரிதும் பாதித்து விட்டது என்பதை உணர்ந்த போது, ஒரே சமயத்தில் கவலையாகவும் பெருமிதமாகவும் இருந்தது.

பெருமிதம் தான்!! ஒரு பெண்ணிற்குக் கணவன் தன் மேல் உயிரை வைத்திருக்கிறான், தன்னைப் பிரிந்து அவனால் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது என்பதை அவன் வாயாலேயே கேட்பது பெருமிதம் தானே! அதுவும் தனசேகரனைப் போல் பெரும் வெறுப்பு மற்றும் ஒதுக்கத்தை மழையாய் பொழிந்த ஒருவனிடமிருந்து "ப்ளீஸ் தேவிம்மா, என்னை விட்டுப் போகாதே" என்ற வார்த்தைகளைக் கேட்பது ஜென்ம சாபல்யம் அல்லவா?

அதை அவன் கூறிய நொடிகளுக்கு உமாவுடன் சேர்த்து நாமும் பின்னோக்கிப் பயணமாவோம்!

வினயாவின் வாழ்க்கை சீராகிவிட்டது, விஜய் அவளைப் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை வந்த பின்னர் உமா ஒரு முடிவிற்கு வந்தாள். முன்னரும் விஜயின் காதலின் மீது உமாவிற்குத் துளியும் சந்தேகம் இருந்ததில்லை என்றாலும் வினயாவின் மனம் பற்றிய கவலை அவளை அரித்துக் கொண்டே இருந்தது.

அவளது தற்போதைய நிலைக்குத் தானும் ஒரு காரணம் என்ற வருத்தத்தை விட, மகளாய் போற்றி மற்றும் பொத்தி வளர்த்த தன் பிரியமானவளின் வாழ்க்கை நன்றாக அமைய வேண்டுமே என்ற வருத்தம் தான் பெரிதாய்இருந்தது.

Property of Bhuvana

அந்த வருத்தம் விஜய்-வினு இருவரின் இணக்கத்தால் காணாமல் போயிருக்க, இனி தன் வாழ்க்கையைப் பற்றிய முடிவை எடுக்க வேண்டும் என்று நினைத்த உமா, அதை செயல்படுத்த எண்ணியது அவர்களது திருமணத்தினத்தன்று!!

இரு மனங்கள் இணைய வேண்டிய திருமணத்தில் காயப்பட்ட இரு துருவங்கள் கட்டாயத்தால் இணைந்திருக்கவே, இணைப்பை இறுக்க முடியாமல் தவித்த ஒரு துருவம், மனதாலும் உடலாலும் தன் இணையாய் இருக்கும் மறு துருவத்தை அதன் போக்கிலேயே விட்டுவிட்டு பிரிய முடிவுசெய்தது!

முடிவெடுப்பதே கடினமாக இருந்த போது அதை செயல்படுத்துவது பெரும் துன்பமாக இருந்தது. அதுவும், தனசேகரனைப் பிரிவது என்பது உயிரை உலைக்குள் போட்டுவிட்டு ஆவியாய் மட்டும் வெளியேறுவது போல் கடினமாக தான் இருந்தது!

மாமனார், நாத்தனார், நண்பன் என்று தன் நலவிரும்பிகளிடம் சொல்லிக் கொண்டு செல்லலாம் என்ற எண்ணம் எழுந்த அதே நொடி, அவர்களிடம் சொல்லிக் கொண்டு வெளியே செல்வது என்பது நடக்காத காரியம் என்ற எண்ணமும் தடுப்பாய் எழுந்து, அவளது பிரிவெனும் முடிவைத் தடைகளைத் தாண்டி நிறைவேற்ற வைத்தது!

நெஞ்சம் முழுக்க வெறுப்பை அடைத்து வைத்திருக்கும் கணவனுடன் வாழ்ந்து, தன்னுடன் சேர்த்து அவனையும் வதைப்பது என்பது பெரும் கொடுமையாய் தோன்றிய உமாவிற்கு, அவனது அன்பிற்குத் தனக்கு இல்லாமேலே போய்விட்டதே என்று ஏக்கமாகவும் இருந்தது!

கண்ணோடு கண் நோக்கி, வார்த்தையின்றி மௌனப் பரிபாஷை நடத்திய நாளில் தொடங்கி, முந்தைய தினம் அவள் உணவு உண்ண அழைத்தப்போது காது கேட்காதவன் போல் சென்ற கணவனின் நடவடிக்கைகளை நெஞ்சில் ஒட்டியவாறே தன் பயணத்தை எதிர் நோக்க ஆரம்பித்தாள்.

இவையாவும் நடந்த வேளை - காலை பதினோரு மணி. வைரவன் பக்கத்தில் இருக்கும் ஆசிரமத்திற்கும், தனசேகரன் அலுவலகத்திற்கும் சென்றிருக்கும் வேளை என்பதால் மருத்துவமனை சென்றிருந்த உமா, அந்த வேளையில் வீடு திரும்பியிருந்தாள்.

Property of Bhuvana

அவர்களது திருமணத்தின் போது புகைப்படங்கள் என்று ஏதும் எடுக்காததால், நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தனசேகரன், பவித்ரா இருவருடனும் எடுத்துக் கொண்ட புகைப்படம் ஒன்றை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்ட உமா, நிதானமாய் கணவனுக்கு ஒரு கடிதம் வடித்தாள்.

"அன்புள்ள" என்று எழுத ஆரம்பித்தவள், "அன்புள்ள" என்ற வார்த்தையை முதலில் அடித்தாள். பின்னர் ஏதோ தோன்ற அடித்த அந்த வார்த்தையின் மீதே மீண்டும் "அன்புள்ள" என்று எழுதினாள்.

அன்புள்ள தனா என்று சொல்லலாமா? எனக்குத் தெரியல! உங்களுக்கு என் மேல அன்பு இருக்கோ இல்லையோ எனக்கு உங்க மேல அன்பிருக்கு. அதனால அப்படியே இருக்கட்டும்.

எனக்கு உங்களைப் பார்த்த முதல் பார்வையை விட, என்கிட்டே நீங்க பேசின முதல் வார்த்தைகளை விட, நீங்க என்னிடம் நடந்து கொண்ட முறையை விட எது தெரியுமா மனசில் நிறைஞ்சிருக்கு?

பவி உங்களைப் பத்தி சொன்ன வார்த்தைகள். ரொம்ப பசுமையா, ரொம்ப அழுத்தமா என் மனசில பதிஞ்சு போயிருக்கு. அந்த வார்த்தைகள் தான் நான் உங்க மேல வைத்தக் காதலுக்கும் அடித்தளம். என்ன வார்த்தை தெரியுமா?

நாம காதலிச்ச நாட்களில் பல தடவை சொல்லியிருக்கேன். உங்களுக்கு நியாபகம் இருக்கோ இல்லையோ? இப்போ திரும்ப சொல்றேன்.

"ரொம்ப பாசக்கார பயப்புள்ள" என்ற வார்த்தைகள் தான்!

ஆமா, உங்க தங்கை மேல் நீங்க வைச்ச பாசம் தான் என்னை ஈர்த்தது. அந்த பாசத்தை அடிப்படையா வச்சுத் தான் என் காதலை நான் வளர்த்தேன். உங்ககிட்டையும் சொன்னேன்.
உடன் பிறந்த தங்கையை இவ்வளவு தூரம் நல்லாப் பார்த்துக்கும் ஒருத்தர், குடும்பம் என்று ஒன்றிருந்தும் அனாதையா இருக்கும் என்னையும் நல்லாப் பார்த்துப்பார் என்ற எண்ணம் தான் என் காதல் வளரக் காரணம்!

Property of Bhuvana

ஆனா, ஒரு கட்டத்தில அந்த பாசமே என் மேல வெறுப்பை வளர்க்க வைச்சப்போது என்னால தாங்க முடியல தனா!

இதை நான் சொல்றதால, பவி மேல நீங்க வச்சிருக்கும் அன்பைப் பார்த்து நான் பொறாமைப்படுறேன்னு நினைக்கிறீங்களா? கண்டிப்பா இல்லை. இது பொறமை இல்லை தனா, ஏக்கம். எனக்கு இப்படி ஒரு அண்ணன் இல்லையே என்ற ஏக்கம்! உயிராய் இருந்த என்னோட வாழ்க்கைத் துணை என்னை நெருப்பாய் வெறுக்கிறாரே என்ற ஆற்றாமை!

பவி வாழ்க்கையில நடந்த கொடூரத்திற்கு நானும் ஒரு வகையில் காரணம் தான். நான் ஒத்துக்கிறேன். ஆனா, நான் அதை தெரிஞ்சோ, வேணும்னோ செய்யல தனா. சத்தியம். இதை வெறும் வார்த்தையைத் தவிர, வேற நிறைய வழியில் நான் சொல்லியிருக்கேன். தேவேந்திரன் (எனக்கு அவனை அண்ணன்னு கூட சொல்ல விருப்பமில்லை) மேல நான் கொடுத்த புகாரில் தொடங்கி, என் குடும்பம், நண்பர்கள், படிப்பு வட்டம் என்று எல்லாத்தையும் விட்டுட்டு வந்தது வரை, உங்களுக்குப் புரிய வச்சிடணும் என்ற எண்ணத்தில் தான் தனா செஞ்சேன்.

இதில் எதுவுமே உங்களை இம்மியும் இளக்கலைன்னு போது மனசு வலிக்குது தனா!

இனிமேலும் இந்த வலியைப் பல்லைக் கடிச்சுப் பொறுத்துக்க என்னால முடியும்ன்னு தோணல. நான் போறேன் தனா, உங்களை விட்டு போயிடுறேன். நீங்களாவது சந்தோஷமா இருங்க.

என் முகத்தைத் தினம் தினம் பார்த்து, உள்ளுக்குள்ள புகைந்து கொண்டிருக்க காதலை வெளியிட முடியாம, அந்த இயலாமை எல்லாத்தையும் வெறுப்பா வெளியிடும் கொடுமை உங்களுக்கு இனிமேல் வேண்டாம். நான் போயிடுறேன்!

எதுக்கு இத்தனை நாள் கூடவே இருந்து உயிரை வாங்கினா? முன்னாடியே போய் தொலைஞ்சிருக்கலாம் இல்ல?ன்னு நீங்க நினைக்கலாம். போயிருக்கலாம் தான். ஆனா, இந்த மூன்று வருஷத்தில உங்க அன்பைவிட, பவி தான் எனக்குப் பெருசா தெரிஞ்சா. அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையும் வரை நான் எங்கேயும் போகக் கூடாதுன்னு

ஒரு வைராக்கியதோட தான் இந்த வீட்டில இருந்தேன். இப்போ அவ சந்தோஷமா இருக்கா, விஜய் அவளைத் தங்கத் தட்டில் வச்சுத் தாங்குறான். அது போதும் எனக்கு.

அந்த சந்தோஷத்தோடு நான் இந்த வீட்டை விட்டுப் போறேன். திரும்ப வர மாட்டேன்.

நாம காதலிச்ச நாட்களில் நீங்க நிறைய தடவை கேட்டுநான் மறுத்த ஒன்றை, பிற்காலத்தில் நான் கொடுக்க ஏங்கி நீங்க வெறுத்த ஒன்றை, உங்க விருப்பம், அனுமதி ரெண்டுமில்லாமலே இப்போ தரேன்"

என்று கடிதத்தை முடித்தவள், கடிதமெங்கும் முத்த அச்சுக்கள் பதித்தாள்.

பொங்கிப் பெருகிய கண்ணீரை உள்ளுக்கு இழுக்க முயன்ற படி கடிதத்தை முடித்த உமா, நெஞ்சை அழுத்திக் கொண்டு சற்று நேரம் அப்படியே அயர்ந்து போனாள். அவள் சுதாரித்து எழ அரை மணி நேரத்திற்கும் மேல் பிடித்தது. அதுவும் யாரோ மாடிப்படி ஏறும் சத்தம் கேட்டு, ஒரு வேளை வைரவன் வந்துவிட்டாரோ என்ற கலக்கமும் பயமும் தான் அவளை எழ வைத்தது.

அடித்துப் பிடித்து எழுந்தவள், கையில் கிடைத்த துணிகளை பெட்டியில் அள்ளிப் போட்டுக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள். வந்தவள், தனசேகரன் உபயோகப்படுத்தும் அலுவல் அறையாய் இருக்க வேண்டிய அவனது படுக்கை அறைக்குள் சென்று, எழுதிய கடிதத்தை மேஜை மேலிருந்த பவித்ராவின் படுதின் கீழே வைத்துவிட்டு வேகமாக வெளியே நடந்தாள்.

தனசேகரன், வேலை முடிந்து வந்ததும் தன் கைகடிகாரம், identity card போன்றவற்றை அந்த இடத்தில் தான் வைப்பான் என்று தெரிந்திருந்ததால் அங்கே கடிதத்தை வைத்த உமாவிற்கு, அவன் கடிதத்தைப் பார்க்க வேண்டும் என்றும், அதே நேரம் பார்க்க வேண்டாமே என்றும் இரு வகையான எண்ணங்கள் தோன்றியது.

எண்ணங்களுடன் நடத்தும் போராட்டம் முடிவின்றி போய்க் கொண்டே இருக்கும் போல் தோன்றவே, விருட்டென அந்த வீட்டை விட்டு வெளியேறினாள் உமா!

வீட்டை விட்டு வெளியே வந்த உமா, ஏற்கனவே முடிவு செய்தது போல் சென்ட்ரல் ரயில் நிலையம் வந்து சேர்ந்து, பெங்களூர் செல்லும் அடுத்த ரயிலிற்கு பயணச் சீட்டு வாங்கிய கையோடு, காத்திருப்போர் இருக்கையில் அமர்ந்து கண்ணை மூடித் தன்னை நிதானப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

தான் வேலை செய்யும் மருத்துவமனையின் தலைமை மருத்துவரிடம் தன் நிலையை இலைமறை காயாக எடுத்துக் கூறி இருந்தவளுக்கு, பெங்களூரில் இருக்கும் தன் நண்பரின் மருத்துவமனை ஒன்றில் வேலை காலியாக இருப்பதாக அவர் கூறிய செய்தி கசப்பான அமுதமாக இருந்தது. அந்த வேலைக்குச் செல்வதாக ஒப்புக்கொண்டிருந்தமையால் வயிற்றுப்பாட்டிற்கு ஒரு தடங்களும் இல்லை என்றெண்ணிய உமா, சற்று நேரத்திலேயே, வயிறை கவனிக்க வழி கண்டாகிவிட்டது... மனதை கவனிக்க என்ன செய்வது? என்ற யோசனையில் ஆழ்ந்தாள்.

மனதைப் பற்றிய யோசனை தோன்றிய வினாடி, அது சிறகின்றி அலை பாயவும் தொடங்கி அவளை வதைத்து. அலைபாயும் தன் மனதை அடக்கும் சக்தி இந்த உலகத்திலேயே ஒருவனுக்குத் தான் இருக்கிறது என்ற நினைப்பே அவளை மீண்டும் கண்ணீர் கடலில் மூழ்க வைத்தது.

துன்பங்களால் மூச்சு முட்டுவது போலிருக்கவே, இப்படிப்பட்ட நேரங்களில் கை கொடுக்கும் அவனது முதல் பரிசான கத்திரிப்பூ நிற சேலையை தேடினாள் உமா!

ஆனால் அவளது துன்பத்தைக் கூட்டுவது போல், அந்த சேலை அவள் கையில் படாமல் ஆட்டம் காட்டியது. கண்களில் மிதக்கும் கண்ணீர் சேலையை மறைக்கிறதோ என்ற நினைவில், அதைத் தட்டிவிட்டுக் கொண்டு மீண்டும் துலாவியவளின் கைகளில் அப்போதும் சேலை சிக்கவில்லை.

அவளது அவசர மற்றும் நிதான தேடல்களுக்குப் பதிலாய் அது கிடைக்காமல் போகவே, அதை எடுக்காமலேயே வந்துவிட்டோம் என்று உமாவிற்குப் புரிந்தது. தனசேகரனை நினைத்துக் கொண்டிருந்ததில் அவனது இந்தப் பரிசை மறந்து போனோம் என்றும் உரைத்தது.

Property of Bhuvana

புரிந்ததை ஒத்துக்கொள்ளத் தான் அவளால் முடியவில்லை! தனசேகரனின் அன்பு முத்தத்தைத் தாங்கிய அந்த சேலையை அவள் ஒரு பொக்கிஷமாகவே பாதுகாத்து வந்தாள் எனலாம். அவனது வெறுப்பை சம்பாதிப்பதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி அந்த சேலையை வருடாமல் அவள் ஒரு நாள் கூட இருந்ததில்லை. அப்படிப்பட்ட புடவையை விட்டுவிட்டு செல்வதா? கணவனும் இல்லை என்றான பின்னர் அவனது பரிசையுமா விட்டுச் செல்வது? என்ற எண்ணங்கள் மனத்தைக் கசக்கிப் பிழிய, மணியைப் பார்த்துவிட்டு வீட்டிற்கு விரைந்தாள்.

வைரவன் வீட்டில் இருந்தாலும், வேலைக்குத் தேவையான ஒரு முக்கியப் பொருளை மறந்து வைத்துவிட்டுப் போய்விட்டேன்... அதை எடுக்க வந்தேன் என்று சொல்லி சமாளித்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து, ஆட்டோ பிடித்து மந்தவெளி விரைந்தாள் உமா.

எண்ணியபடி, பெட்டியை காவலாளியிடம் கொடுத்துவிட்டு வேகமாக மாடியேறி, கதவைத் தட்டியவளின் பொறுமையை சோதிக்கும் வகையில் ஐந்து நிமிடத்திற்கும் மேலாக கதவு திறக்கப்படவில்லை.

அந்த ஐந்து நிமிடக் காத்திருப்பில் வைரவன் வீட்டில் இல்லை என்பதை உணர்ந்த உமா, தான் கிளம்பும் போது எதிர் வீட்டில் கொடுத்துவிட்டுப் போன வாங்கி, கதவைத் திறந்தாள். திறந்தவள் தான் உபயோகப்படுத்திய அறைக்குள் மின்னலென நுழைந்து, தன் துணிகள் இருக்கும் அலமாரியில் அந்த சேலையைத் தேடினாள்.

அவளுக்கு இருந்த பதட்டத்தில், வீட்டுக் கதவு திறக்கப் பட்டதையோ, தனசேகரன் வந்ததையோ கவனிக்கவில்லை என்பது அவளது நல்ல நேரம் அன்றி வேறென்ன? அன்றைய தினம் அலுவலகம் சென்ற தனசேகரனின் மனதில் காலையில் வெகுவாய் சோர்ந்து போயிருந்த உமாவின் முகமே நிலைத்து நின்றது.

அவள் அறிந்து செய்யாத தப்பை (அவள் அறிந்து அந்தத் தப்பை செய்திருக்க முடியாது என்று அவனுக்கும் புரியத் தான் செய்தது. ஆனால் தங்கையின் நிலையும், அவளுக்கு இழைக்கப்பட்ட அநியாயமும் அவனை ஒத்துக்கொள்ள முடியாமல் தடுத்தன) ஒரே பிடியாய் வைத்துக் கொண்டு அவளை மிகவும் வாட்டி விட்டோமோ என்ற எண்ணம்

மூன்று வருடங்களாய் இருக்கிறது தான் என்றாலும், மூன்றாவது கல்யாண தினமான அன்றைய நாளில் பெரிதாய் தெரிந்தது.

ஆனால் இப்போது போய் அவளிடம் பழைய மாதிரி குழையவும் மனம் இடம் தரவில்லை. அதற்கு காரணம் ஆண் என்ற கர்வமில்லை. "என் தங்கை வாழ்க்கை சரியாகிவிட்டது. அதனால் நான் உன்னை ஏற்றுக் கொள்கிறேன்" என்று பிச்சை போடுவது போல் அவளுக்கு வாழ்க்கை கொடுப்பதில் அவனுக்குத் துளியும் இஷ்டமிருக்கவில்லை.

இப்படியாக தன் எண்ணங்களில் உழன்று கொண்டிருந்தவனின் உள் மனம், ஏதோ பெரிய விபரீதம் நடக்கப் போவது போல் அலாரம் செய்தது. உள் மனம் சொல்வதை ஒதுக்கவும் முடியாமல், வேலையில் முழு மனதுடன் ஈடுபடவும் முடியாமல் தத்தளித்த தனசேகரன், ஒரு கட்டத்தில் "முக்கியமான சி.டி ஒன்றை வீட்டில் வைத்து விட்டு வந்துவிட்டேன். அதை எடுத்து வருகிறேன்" என்ற சொல்லோடு வீடு வந்து சேர்ந்தான்.

திறந்திருந்த வீட்டிற்குள் யோசனையுடன் நுழைந்தவன், தந்தையின் அறையை எட்டிப் பார்த்தான். அங்கே அவரைக் காணாமல் போகவே ஒரு வேலை பாத்ரூம் சென்றிருக்கிறாரோ என்ற எண்ணத்தில் கதவைச் சாற்றிவிட்டு தன் அறைக்குள் நுழைந்தான்.

தந்தை அப்போதைக்கு கண்ணில் படாமல் இருந்தது ஒரு வகையில் நிம்மதியையே கொடுத்தது என்று தான் சொல்லவேண்டும், அவர் கேட்கும்  கேள்விகளை இப்போதிருக்கும் மனநிலையில் தாங்கமுடியாது என்றே தோன்றியது, தனசேகருக்கு.

தன் அறைக்குள் நுழைந்தவனின் கால்கள் வழக்கம் போல் அவனது மேஜைக்கு அவனை அழைத்துச் சென்றன. அனிச்சை செயலாய் தங்கையின் புகைப்படத்தின் மீது பார்வையை ஒட்டியவனின் கண்களிலிருந்து உமாவின் கடிதம் தப்பியிருந்தால் தான் அதிசயம்!

"தனா" என்ற தலைப்போடு இருந்த அந்தக் கடிதத்தைக் கை நடுங்க பிரித்த தனசேகரன், அதை படித்து முடிக்கும் போது, "நோ, தேவி நோ" என்று வீடு அதிர அலறினான். அவளது உதட்டு அச்சுக்கள் விரவி இருந்த அந்தக் கடிதத்திற்கு முத்த மழை பொழிந்த தனசேகரன், அவளது அச்சுகளை மிஞ்ச முயன்று தோற்றான்!

நெஞ்சைப் பிடித்துக் கொண்டு

"தேவிம்மா, என்னை மன்னிச்சிடுடா, என்னை விட்டுப் போகாதே தேவிம்மா",

"ஹய்யோ இப்போ என்ன செய்வேன்?"

"சாரி தேவி, சாரி தேவி, சாரி தேவி",

"என்னை விட்டுப் போகாதே தேவிம்மா",

"நீ இல்லாம என்னால இருக்க முடியாது",

"உன் மேல நான் வச்சிருக்க காதல் மாறவே இல்லைம்மா, என்னைவிட்டுப் போகாதே" என்ற கதறலோடு செய்வதறியாமல் இருக்கையின் மீது விழுந்தவனுக்கு "தனா" என்ற அழைப்பு உயிரை மீட்டுக் கொடுத்தது.

அதிர்ந்து நிமிர்ந்தவன், அங்கே அதே அதிர்ச்சி இம்மியும் குறையாமல் நின்றிருந்த உமாவைக் கண்டதும், தாயை நாடி ஓடும் கன்றைப் போல் அவளிடம் விரைந்தான்.

விரைந்தவனின் இறுகிய அணைப்பில் உமாவின் மூச்சுக் காற்று அவனை விட்டு வெளியே செல்ல முடியாமல் சிக்கித் தவித்தது, சந்தோஷமாக!

மௌனமொழி பாகம் 29

தனசேகரனின் இறுகிய அணைப்பில் நின்றிருந்த உமாதேவி, இது வரை மனதை அழுத்திய பாரம் அனைத்தையும் வெளியேற்றும் பொருட்டு வெடித்து அழுதாள்.

இது நாள் வரை அவளது எந்த உணர்வும் தன்னை அசைத்துவிடாமல் பார்த்துக் கொண்ட தனசேகரன், இப்போது அசைந்தது மட்டுமில்லாமல் குற்ற உணர்வில் குன்றி போய் தவித்தான்.

"தேவிம்மா, என்னை மன்னிச்சிடுடா" என ஆரம்பித்தவன்,

"உன் கோபம் தீர என்னை நாலு அடி வேணும்னாலும் அடிச்சிக்கோ, தயவு செஞ்சு அழாதே கண்ணம்மா" என்ற உருகலில் முடித்தான்.

Property
Bhuvana

அழுகையின் ஊடே கணவனின் உருகல் மனதை எட்ட, "அடிக்க மாட்டேன்கிற தைரியத்தில பேசுறீங்களா?" என உமா புறங்கையால் முகத்தைத் துடைத்தவாறே, கேவலின் ஊடே வினவினாள்.

"பவித்ராவோட அண்ணனா இருந்துகிட்டு அடிக்குப் பயந்தா ஆகுமா? எத்தனை அடி வைக்கணும் என்றாலும் அடிச்சிக்கோ, நாலுன்னு கணக்கெல்லாம் இல்லை" என்று கூறியவன், தழுவியிருந்த கைகளை கீழிறக்கியவாறே மண்டியிட்டான்.

அவளது கால்களைக் கட்டிக் கொண்டு "தண்டனைக்குக் காத்திருக்கிறேன் ராஜகுமாரி" என அவன் கூறிய போது "ஹய்யோ, என்ன தனா இது? எழுந்திருங்க, ப்ளீஸ்" என மனைவி பதறிப் போனாள்.

"என்னை மன்னிச்சுட்டேன், இனிமேல் என்னை விட்டுப் போகமாட்டேன்னு சொல்லு. அப்புறம் எழுந்துக்கிறேன்" என்றவனின் குரல் கரகரத்துப் போயிருந்தாலும், பிடிவாதத்தைக் காட்டியது.

"இதுக்கு மேல நீங்க என் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளினா கூட போகமாட்டேன். சத்தியம் தனா" என உமாவும் அவன் பிடிவாதத்திற்கு ஈடு கொடுத்து அழுத்தமாய் மொழிய,

அதற்கு எதிரொலியாக, மண்டியிட்ட நிலையிலிருந்து எழுந்து கொண்ட தனசேகரன், தன் ஆழ்ந்த குரலில் ஆத்மார்த்தமும், அன்யோனியமும் தொனிக்க "தேங்க்ஸ் தேவி" என்றான்.

அதற்கு மேல் எந்த வார்த்தை பரிமாறலும் இல்லாமல் ஒருவரை ஒருவர் அணைத்தபடி பல மணித் துளிகள் கழிந்தன. அந்த இனிய மௌனத்தை முதலில் கலைத்த தனசேகரன், "நீ என்னை விட்டுப் போய்டுவேன் என்ற நொடியில் என்னமா பயந்து போயிட்டேன் தெரியுமா? உயிரை உருவி எடுத்த மாதிரி ஆகிடுச்சு" என்றான் உடலும், குரலும் ஒருங்கே நடுங்க.

அவனது முதுகை மெல்ல வருடிக் கொடுத்த உமா, "எனக்கும் உங்களை விட்டுப் போறது உயிரை விட்டுப் போற மாதிரி தான் இருந்தது. ஆனா..." என்று இழுத்தவள், அப்போதும் தொண்டையை அடைத்த துக்கத்தை மறைத்துக் கொண்டு "நீங்க என் முகத்தையே பார்க்காம என்னை ஒதுக்கி வைக்கிறதை கூடவே இருந்து பார்க்க முடியல தனா" என்றாள்.

"அப்படி இருக்கிறது எனக்கும் கஷ்டமா தான் இருந்தது தேவிம்மா, நீ அழுது வீங்கிய கண்ணோடு நிற்கும் போது உன்னை இழுத்து அணைத்து சோர்ந்த அந்தக் கண்ணில முத்தம் கொடுக்கணும் போல கையும், வாயும் பரபரக்கும்" என்றவன், வாயால் சொல்லியதை செய்தும் முடித்தான்.

தொடர்ந்து, "உடனே பவியோட முகம் மனசில் வந்து நெஞ்சைப் பிசைந்து விடும்" என்று தன் இயலாமையையும் எடுத்துக் கூறினான்.

"புரியுது தனா" என்று உமா கூறியதில், "நீங்க என்னை ஒதுக்கி வைச்சதுக்கு காரணம் எனக்குத் தெரியும் தனா, நீங்க திரும்ப விளக்க வேண்டாம்" என்ற அர்த்தம் பொதிந்திருந்தது.

"கடவுளுக்குத் தான் தேவிம்மா நன்றி சொல்லணும். எனக்கு மனசில ஏதோ உறுத்தப் போய் தான் வீட்டுக்கு வந்தேன். வந்ததால தான் நீ போகறதுக்கு முன்னாடி இந்த லெட்டரை பார்க்க முடிஞ்சது, என் மனசை சத்தம் போட்டு சொல்ல முடிஞ்சது, உன்னையும் என்னோட இருக்க வைக்க முடிஞ்சது" என தனசேகரன் சொல்லிக் கொண்டே போக,

லேசாக அதிர்ந்து வியந்த உமா, தன் விவரம் கூறாமல் "என்ன உறுத்தல்?" என்றாள் உமா. தனசேகரனோ, அதை அவள் கேட்டிருக்கவே வேண்டாம் போல, தன் அப்போதைய மனநிலையையும், பவியின் வாழ்க்கை சரியானதால் உன்னோடு நான் நன்றாக வாழ்கிறேன் என்று தான் சொல்லக் கூசியதையும் எடுத்துக் கூறினான்.

அவனது கடைசி வாக்கியத்தில் முகம் பெருமிதத்தில் ஜொலிக்க, அதை வார்த்தையால் வெளிப்படுத்தும் வழி தெரியாமல் கணவனை ஆரத் தழுவிக் கொண்டாள் உமாதேவி.

மீண்டும் சில மணித் துணிகள் மௌனத்தைப் போர்வையாய் கொள்ள, இப்போது மௌனத்தைக் களைத்தது உமா. "நன்றியை கடவுளுக்கு மட்டுமில்ல, இன்னொரு பொருளுக்கும் சொல்லணும் தனா" என்ற உமா, அவள் காலையிலேயே கிளம்பிவிட்டதையும், அவனது பரிசை மறந்து சென்றதால் அதை எடுக்கத் திரும்ப வந்ததையும் கூறியபோது அதிர்ந்து நோக்குவது தனசேகரனின் முறையானது.

அவன் உடம்பு நடுங்குவதைக் கண்ட உமா, "என்ன தனா இது? அது தான் வந்துட்டேனே" என்றாள் ஆதரவாக.

"எனக்கு மனசில் உறுத்தல் ஏற்படாம இருந்திருந்தா? நான் சரியான நேரத்திற்கு வராம போயிருந்தா? நீயும் அதே நேரத்திற்கு வீட்டில இருக்காம போயிருந்தா? முக்கியமா அந்த சேலையை நீ எடுத்துட்டுப் போயிருந்தா? நம் நிலைமை என்ன ஆகியிருக்கும்?" எனக் கூறி, அப்போதும் உடல் சிலிர்த்தான் அந்த அன்புக் கணவன்.

"அது தான் நடக்கலையே, அப்புறம் என்ன?" என அவனைத் தேற்றிய உமாவைப் போல் ஒரு மனைவி கிடைக்க, அந்த ஆண் மகன் ஏழேழு ஜென்மங்கள் புண்ணியமா செய்திருக்க வேண்டாமா?

அதன் பின்னர், அன்பு பரிமாறல்களும், செல்லக் கொஞ்சல்களும் தொடர்ந்து கொண்டிருக்க, காதல் உணர்வு மட்டுப்பட்டு கடமை உணர்வு தலை தூக்க, "சாப்பிட்டீங்களா தனா?" என வினவினாள் உமா.

"இல்லம்மா, லஞ்ச் டைம்ல தான் கிளம்பி வந்தேன்" என்றவனிடம் "லஞ்ச் பாக்ஸ் எங்க? எடுத்துட்டு வந்தீங்களா?" என்று அடுத்த கடமை கேள்வியை முன் வைத்தாள் உமா.

"ஹ்ம்ம் இல்லையே, நானே அவசரத்தில வந்தேன். லஞ்ச் பாக்ஸ் ஆபீஸ்ல இருக்கு" என்ற பதிலுக்குக் கடமை காணாமல் போய், காதல் குடி வந்ததோடு இல்லாமல், கலக்கமும் வந்தது. அது "திரும்ப ஆபீஸ் போகனுமா?" என்ற கேள்வியில் வெளிப்பட்டு, "இங்கேயே இருங்களேன்" என்ற அர்த்தத்தைத் தொக்கி நின்றது.

Property of Bhuvana

"இன்னைக்கு லீவ் சொல்லிடுறேன் சரியா? நீ முகத்தைச் சின்னதாக்காதே" என்றவன் அதை செயலிலும் காட்டிய பின்னர் தான் கலக்கம் போய் காதல் மற்றும் நிலைத்தது உமாவிற்கு!

தனசேகரன் அலுவலகத்திற்கு அழைத்து விடுப்புச் சொல்ல, உமா கீழே சென்று பெட்டியை எடுத்து வந்தாள். மதிய உணவை வீட்டிலும், மாலைப் பொழுதை கோவில், ஷாப்பிங், வெளியே உணவு என்றும் கழிக்க எண்ணியவர்கள் வைரவனின் வரவிற்காக காத்திருந்தனர்.

அவர்களை அதிக நேரம் காக்கவைக்காமல் வைரவன் சற்று நேரத்திலேயே வந்துசேர்ந்தார். வந்தவர், வாசல் தாண்டி வீட்டினுள் கால் எடுத்து வைக்கும் போதே, மகன் மற்றும் மருமகளின் இணைந்த இரு கரங்களும், கனிந்த இரு ஜோடி கண்களும், மலர்ந்த இரு உதடுகளும், ஆயிரம் சந்தோஷக் கதைப் பேசிய முகங்களும் ஒரு சின்ன வார்த்தை பரிமாறல் கூட இல்லாமல் அவர்களது அன்றைய சந்தோஷ நிலையை எடுத்துக் காட்டின.

வியந்த விழிகளுடன் உள்ளே நுழைந்தவரின் பாதங்களில் இருவரும் ஒருங்கே பணிந்து எழ, ஆனந்தத்தில் கண்கள் ஈரமாக, இருவரது தலை மீதும் கரம் வைத்து "நல்லா இருங்க" என்ற இரு வார்த்தைகளை உதிர்த்தவர், அப்படியே இருவரையும் எழுப்பி, இரு கரங்களாலும் தழுவிக் கொண்டார்.

"ரொம்ப சந்தோஷம் உமா" என மருமகளிடம் பகிர்ந்த அந்தத் தந்தை, அவளது நெற்றியில் தன் பாசத்தின் அடையாளமாய் ஒரு முத்தத்தையும் வைத்தார். உமாவும் கண்கலங்கி நின்றிருக்க, "உன் வாழ்க்கையை எங்களுக்காக பாழ் பண்ணிட்டேனோன்னு குமுறிக் கிட்டே இருந்தேன்மா" என சொற்களால் தன் மனக்குமுறலை வெளிக் கொணர்ந்ததோடு நில்லாமல், அந்தக் குமுறல் முடிந்து போனதின் அறிகுறியாய் அவளது கூந்தலையும் வருடிக் கொடுத்தார்.

இந்த அன்புப் பரிமாற்றத்தை கண்களில் மின்னலோடு பார்த்திருந்த தனசேகரன், "உங்க மருமக இன்னைக்கு நல்லா இருக்கான்னா அதுக்கு நானும், அதாவது உங்க மகனும் ஒரு காரணம். தெரியுமா மிஸ்டர்.வைரவன்" என்றான், சூழ்நிலையை இலகுவாக்கும் எண்ணத்துடன்.

Property of Bhuvania

"என் மருமக நேத்தி வரைக்கும் கஷ்டப்பட்டுட்டு இருந்தான்னா அதுக்கும் நீ தான் காரணம்! என் மகனே" என்ற வைரவனின் பதிலில், உமா பக்கென்று சிரித்துவிட, "என்னப்பா" என செல்லமாய் சலித்துக் கொண்டான் அவரது தவப்புதல்வன்.

இவை அனைத்தும் நான்கு தினங்கள் முன்னர் நடந்து முடிந்திருக்க, அவற்றை எண்ணிப் பார்த்த உமா, அடுத்த ஒரு மணி நேரத்தில் நண்பனை அழைத்து, தன் காதலுடன் தான் இணைந்ததை பகிர்ந்த போது, உமாவின் குரலில் உற்சாகம் கரை புரண்டோடியது .

அவளது உற்சாகம் விஜயிடம் சந்தோஷ அலைகளை ஏற்படுத்த, "எனக்கிருக்க சந்தோஷத்திற்கு சென்னைக்கு ஓடி வந்து உனக்கு வாழ்த்து சொல்லி, உன் முகம் ஜொலிக்கிறதை பார்க்கணும் போலிருக்கு. ஆனா வினு என்னை அங்க இங்க நகரவே விடமாட்டேன்கிறா. அம்மா வந்ததும் அவங்ககிட்ட விட்டுவிட்டு உடனே வரேன் உமா" என்றான் உமாவின் உயிர் தோழன்.

"இந்த டைம்ல அவளை விட்டுட்டு நீ சென்னை வரவேண்டாம். நாங்க எல்லாரும் இந்த வாரக்கடைசில வரோம்" என்று முடித்தவள், தன் நாத்தனாரைப் பூ போல் தாங்கும் படி நண்பனைப் பணித்து "உத்தரவு உமாதேவி" என்ற விடையைப் பெற்றபின்னரே அலைப்பேசியை வைத்தாள்.

தோழியின் சொற்படி, மனைவியைக் காணவென அவர்களது படுக்கையறைக்குள் நுழைந்த விஜயை, விழித்தெழுந்த வினயா தான் வரவேற்றாள்.

"நல்லத் தூக்கமா?"என வினவியவாறே மனைவியை நெருங்கியவன், அவள் ஏதோ பலத்த யோசனையில் இருக்கவே, "என்னடா" என்றான் அவளது கூந்தலை வருடியவாறே.

"ஹ்ம்ம், எனக்கு ஒரு சந்தேகம்" என்றவள் முகத்தை தீவிரப் பாவனைக்கு மாற்றி, "நான் தூங்கும் போதெல்லாம் பாப்பாவும் தூங்குமா விஜி? நான் தூங்கிட்டே இருந்தா பாப்பாக்கு நல்லதா? கெட்டதா??" என்று தன் முதல் சந்தேகத்தை எடுத்து வைத்தாள்.

அவள் கேட்டதற்குப் பதில் அரைகுறையாய் தெரிந்திருந்தாலும் அவள் கேட்ட பாவனையில் அவனுக்கு சிரிப்பு தான் வந்தது. ஆனால் அவளது தீவிர முகம், தன்னிடம் ஒரு பதிலை அவள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள் என்று தோன்றவைக்கவே, என்ன பதில் சொல்வது என்று சற்று நேரம் யோசித்தான். என்ன தான் பல் மருத்துவத்தின் முதல்

ஆண்டுகளில் பொது மருத்துவம் படித்திருந்தாலும், மகப்பேறு குறித்த நுணுக்கமான கேள்விகளுக்கு அவனுக்கு விடைத் தெரியவில்லை தான்.

அவளது முகத்தில் கலக்கம் படர்வதைக் காணப் பொறுக்காமல், "நீ தூங்குறியா இல்லையான்னு பாப்பாக்கு எப்படித் தெரியும்? தெரியாதில்ல? சோ, நீ தூங்குற டைம்ல பாப்பாக்குத் தூக்கம் வந்தா தூங்கும், இல்லைனா தூங்காது" என்றான் பழுத்த மருத்துவனைப் போல்.

அவள் வேறு ஒன்றைப் பிடித்துக் கொண்டு ஆயிரம் கேள்விகள் கேட்கும் முன்னர், அவளைக் கட்டிலை விட்டுக் கிளப்பி, குளிக்கச் சொல்லி, உணவு உட்கொள்ளச் செய்தான்.

என்ன தான் செய்த போதும், வினயாவின் குழந்தை சம்பந்தமான கேள்விகளுக்குத் தடையே ஏற்படவில்லை. "பாப்பாக்குக் கால் வந்திருக்குமா?", "எப்போ உதைக்கும்?", "பாப்பா எப்படி சாப்பிடும்?", "இட்லி சாப்பிட்டா பாப்பாக்கு ஒத்துக்குமா", "ஒருவேளை பாப்பா தூங்கிட்டு இருந்து, நான் நடந்தா அதுக்குத் தூக்கம் கலைஞ்சிடுமா?" எனப் பற்பல கேள்விகளால் அவனைக் குடைந்து எடுத்துவிட்டாள்.

அவளுக்குப் பதில் சொல்லி மல்லுக்கட்ட முடியாத விஜய், துளசி வந்த வினாடி அவர் கையைக் காலாகப் பிடித்துக் கொண்டு, "என்னால முடியலம்மா" என்றான் படு பாவமாக.

"என்னடா?" என துளசி பதற, "மூச்சுக்கு முன்னூறு கேள்வி கேட்கிறா உங்க மருமக, நம்மளால முடியல சாமி" என்று கையுயர்த்திக் கும்பிட்டவனை, "அவ கேட்கிறதுக்குப் பதில் சொல்றதை விட உனக்கென முக்கியமான வேலை?" என அதட்டினார் அவனது தந்தை வீரராகவன்.

"நீங்க பதில் சொல்லிப் பாருங்க, அப்போ தெரியும்" என்றவன் தொடர்ந்து பேச முடியாமல், வினயா அங்கே வந்து சேர்ந்ததோடு மட்டுமில்லாமல் துளசியிடமும், வீரரகாவனிடமும் அன்புப் பரிமாறலைத் தொடங்கியிருந்தாள்.

அன்றைய தினம் மகப்பேறு மருத்துவரிடம் சென்று, "குழந்தை" என்று உறுதி படுத்திக் கொண்ட பின்னர், அந்த வீட்டில் சந்தோஷத்திற்கு ஒரு சதவீதக் குறைச்சல் கூட இல்லாமல் இருந்தது. சந்தோஷம் வளர்ந்த அளவு வினுவின் சந்தேகங்களும் வளர்ந்து கொண்டே போயின என்பது மிக முக்கியமான விஷயம்.

அவள் கேட்கும் ஒரொரு கேள்விக்கும் பொறுமையாய் பதில் கூறிய துளசியைப் பார்க்க, விஜய்க்கு ஒரு புறம் பெருமையாகவும், மறு பக்கம் பாவமாகவும் இருந்தது! பின்னே, நாலு அடி நடந்தால், பாப்பா திரும்பியிருக்குமா? தூக்கம் கலைஞ்சிருக்குமா? என்று கேட்டவள், ஒரு வாய் உணவைக் கூட குழந்தையின் நலனைப் பற்றி விசாரித்துக் கொள்ளாமல் உண்ணவில்லை என்றபோது துளசி பாவம் தானே!!

சிரித்த முகம் மாறாமல் பதில் சொன்ன துளசியை, அவரது கணவனே "உங்க அம்மா இவ்வளவு பொறுமைசாலின்னு எனக்குத் தெரியாம போச்சேடா விஜய்!" என வியந்து சீராட்டிக் கொண்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

மருமகளுக்கு மனைவியின் செல்லமே பெரிதாய் இருக்கிறது, நம் செல்லம் எடுபட மாட்டேன் என்கிறது என்பதை இரண்டே நாட்களில் உணர்ந்த வீரராகவன், அதையே மற்றவரிடமும் சொல்லிவிட்டு, வினுவைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும் படி மனைவி மற்றும் மகனைப் பணித்துவிட்டு குன்னூர் கிளம்பிச் சென்றார். குழந்தை பிறக்கும் வரை, துளசி வினயாவுடனே இருக்கட்டும் என்றவர், வாரம் ஒரு முறை அல்லது இரு முறை தான் வந்து போவதாகக் கூறிய பின்னரே கிளம்பினார்.

வீரராகவன் கிளம்புவதாக இருந்த தினம், தனசேகரன், தன் தந்தை தாரம் சகிதம் கோயம்புத்தூர் வரவே, இவ்வளவு காலமாய் இருந்த மன இறுக்கம் தளர்ந்து போனதில் சம்பந்தியும் சம்பந்தியும் உறவாடிக் கழித்ததோடு நில்லாமல், தங்களின் சந்தோஷங்களைத் தடையின்றியும் பரிமாறிக் கொண்டனர்.

தாயாகப் போகும் தங்கைக்கு, மரகத நகை செட் ஒன்றை அவளது அன்பு அண்ணியின் பரிசு எனக்கூறி தனசேகரன் கொடுக்க, தன் அழகு அண்ணிக்கு, ரத்தினத்தில் வடிவமைக்கப் பட்ட கழுத்தாரம், காதணி, வளையல் போன்றவற்றை, தங்கள் இருவரின் பரிசு எனக் கூறி கணவனுடன் கொடுத்தாள் விஜயின் மனைவி.

இரு ஜோடிகளுக்கும் இருக்கும் பாசப்பிணைப்பை இரு பெரியவர்களும் வியந்து கொண்டிருக்க, "அண்ணி, இந்த நகை செட்.. விஜி தான் வாங்கிட்டு வந்தாங்க. எனக்கும் இதே மாதிரி இன்னொரு செட் இருக்கு. நானும் நீங்களும் ஒரே மாதிரி போட்டுக்கலாம்" என்று வினயா சந்தோஷமாகக் கூறிய போது, உமாவும் சந்தோஷமாக வியந்து, "உங்க அண்ணனும்" என ஆரம்பித்து அவளது கணவனும் ஒரே மாதிரியில் இரு நகை செட்கள் வாங்கியதைக் கூறினாள்.

ஒருவாராக வினயாவை சீராட்டிவிட்டு, அவளது பிறந்து வீட்டினர் சென்னை கிளம்பிச் செல்ல, துளசியின் நேர் பராமரிப்பின் கீழ் வந்தாள் வினயா.

ஒரு வாரக்காலம் கல்லூரி செல்லாமல் வீட்டிலிருந்த வினயாவை, அந்த வாரத்தின் கடைசி தினங்களிளிருந்தே "வினும்மா, இன்னும் இரண்டு நாளில் காலேஜ் போகணும்", "இன்னும் ஒரு நாளில் காலேஜ்" எனக் கூறி தயார்படுத்திக் கொண்டே இருந்தான் அவளது அன்பு கணவன்.

அவன் அப்படி சொல்லும் போதெல்லாம், முகத்தைச் சுருக்கி அவனுக்கு அழகு காட்டியவள், திங்களன்று காலை கணவன் எழுவதற்கு முன்பாகவே கடமை(!) மனைவியாய் எழுந்து கொண்டு, குளித்து கல்லூரிக்குத் தயாரானதோடு நில்லாமல், கணவனையும் எழுப்பி "விஜி, இன்னும் காலேஜ் போக ஜீரோ நாள் தான் இருக்கு. சீக்கிரம் கிளம்புங்க" என்றாள் உதட்டிற்குள் புதைத்த சிரிப்புடன்..

அவளது ஸ்பரிசத்தில் விழித்துக் கொண்ட விஜயோ அவளது வார்த்தையில், லேசாக குழம்பி அதன் பின்னர் சிரித்தான். சிரித்ததோடு நிறுத்திக் கொள்ளாமல், மனைவியின் கை பற்றி தன் மேல் மாலையாய் போட்டுக் கொண்டு, "போகணுமாடா" என்றான் தாபத்தோடு.

"ம்ம்ம்" என இழுத்தவளும் அவன் கன்னம், காது என தாபத்துடன் வலம் வந்தாள்.

விஜயின் கரங்கள் மெல்ல மெல்ல முன்னேறி அவளது மனம் மற்றும் உடலை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, அங்கே ஒரு களவு நாடகம் அரங்கேறி ஒத்திகை பார்த்தாகியது.

பார்த்த ஒத்திகையை அரங்கேற்றும் தருவாயில், வினயாவிற்குக் கடமை உணர்ச்சி சடாரென தலை தூக்கியது தான் தவறாகிப் போனது. ஏனென்றால் இப்போது தலை தூக்கியது மனைவியின் கடமை உணர்ச்சி அன்றி மாணவியின் கடமை உணர்ச்சி!!

"ஹய்யோ விடுங்க விஜி, நான் காலேஜ் போகணும். இரண்டு நாள், ஒரு நாள்ன்னு கவுன்ட்டவுன்  நடத்திட்டு இருந்தீங்க. இப்போ, நானே காலேஜ் போறதுக்கு ரெடி ஆகியிருக்கேன். நீங்க என்னடான்னா அதை பெருசா விளம்பரப் படுத்தாம, இன்னும் மூணு நாளுக்கு கவுன்ட்டவுனே நடத்திட்டு இருப்பீங்க போல?" என்றாள் அவனை விட்டு விலகி நின்றுகொண்டு.

"அநியாயத்திற்குப் பேசுற நீ" என்ற விஜய், அவளை அடிக்கவென கை ஓங்க, அவனிடம் பழிப்புக் காட்டிவிட்டு, ஓட்டமும் நடையுமாக வெளியே சென்ற வினயாவை "ஓடாதே, மெதுவா நட வினு" என்ற விஜயின் குரல் பின்தொடர்ந்தது.

அன்றைய பொழுதைப் போலவே, பற்பல விஷயங்களில் கடைசி வரை விஜயிடம் சண்டைக்கு நின்ற வினயா, முடிவில் அவனது சொற்படி நடந்து கொண்டாள். உணவு, உடை, நடைபயிற்சி, மாதந்திர பரிசோதனை என்று அவன் வடிவமைத்த அட்டவணை படி நடக்கமுடியாது என்று வம்பு செய்பவள், கடைசி நேரத்தில் அவளாகவே விஜய் கூறியதை செய்தாள்.

"தினம் இரண்டு முட்டை சாப்பிடணும்" என அவன் கூறினால், "இரண்டா? நான் என்ன ஜிம்க்கா போறேன்? அதெல்லாம் முடியாது" என்று அவனிடம் சண்டை பிடித்தவள், துளசியிடம் வந்து மதிய உணவிற்கு முட்டையை வைக்கும் படி காதுக்குள் கிசிகிசுத்தாள்.

"சாப்பிட்டு சாப்பிட்டு வீட்டுக்குள்ளேயே இருக்கக் கூடாது, கொஞ்சமாவது நட. வீட்டிலேயும் ஒரு வேலையும் பார்க்க மாட்டேங்கிற, பேசாம வேலைக்காரியை நிறுத்தப் போறேன்" என அவன் கடிந்து கொண்டால், "காலேஜ் போயிட்டு வரதே எவ்வளவு பெரிய வேலை தெரியுமா? ஒரு அடி கூட நடக்க மாட்டேன்" என்று சட்டமாக சோபாவில் சம்மணமிட்டு அமர்ந்துகொண்டவள், அவன் கிளினிக் சென்றிருந்த நேரத்தில் பக்கத்தில் இருக்கும் கோவிலுக்குத் துளசியையும் அழைத்துச் சென்று காலார நடந்தாள்.

Property of Bhuvana

"இந்த நேரத்தில மெல்லிய சங்கீதம் கேட்டா உனக்கும் சரி, உள்ள இருக்கும் குழந்தைக்கும் சரி ரொம்ப நல்லது" என விஜய் அறிவுரை கூறினால், "துசிம்மா, நீங்க விஜய் பிறக்கிறதுக்கு முன்னாடி என்ன பாட்டு கேட்டீங்க? அதையே நானும் கேட்கிறேன். ஏன்-ன்னா என் பிள்ளையும் விஜய் மாதிரி பொறுறுறுறுமைசாசாசாலியாய் வரணுமில்ல" எனக் கண்ணை உருட்டிக் கேலி செய்தாள்.

அத்தோடு நிறுத்துக் கொள்ளாமல், தொலைப்பேசியில் ஏதாவது குத்து பாட்டு வந்தால், கணவனை அழைத்து "இந்த பாட்டு கேட்டா பாப்பாக்கு நல்லதில்ல இல்லையா விஜி? வாங்க வாங்க, சீக்கிரம் வந்து பாப்பாவோட காதை மூடிக்கோங்க" என அவனிடம் வம்பு செய்தாள். வம்பின் பரிசாக விஜய் அவளது காதை முறுக்கவும், முறுக்கிய அவனது கரங்களைத் தன் வயிற்றுப் பகுதிக்குக் கொண்டு சென்று தன்னோடு அணைத்துக்கொண்டவள் , அவனுடன் இணைந்து வெள்ளிச் சதங்கையாய் சிரித்தாள்.

கணவன்-மனைவி இருவரது சம்பாஷனைகளையும் மூன்றாம் மனுஷியாய் நின்று கவனித்துக் கொண்டிருந்த துளசி, மருமகளின் இந்தக் குணத்தை முதல் இரண்டு மாதங்களிலேயே தொண்ணூறு சதவீதம் உறுதி செய்து கொண்டார். ஆனால் அவரது அந்த ஒரு சதவீதக் குறைவிற்குக் காரணம், பெயிண்ட்டிங் வகுப்பிற்கு விஜய் போகவேண்டாம் என்று கூறியதையும் மீறி வினயா சென்றது தான்.

வீடு வர சற்று தாமதமாகிவிடுமே என் விஜய் வருந்தியதை மதிக்காமல், "நான் பெயிண்ட்டிங் கிளாஸ் போவேன்" என்ற வாக்கியத்தை, infinite loop-இல் execute ஆகும் code-ஐ போல் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தவளின் வாயை அடைப்பதற்காகவே, "போயிட்டு வா தாயே" என்ற வாக்கியத்தை உதிர்த்தான் விஜய்.

இவ்வளவு அடம் பிடித்து அந்த வகுப்பிற்கு ஏன் செல்கிறாள் என்பது துளசிக்குப் பெரும் புதிராகவே இருக்க, அவளிடமே கேட்டவருக்கு, "எனக்குப் பிடிச்சிருக்கு துசிம்மா" என்றதோடு காரணம் முடிந்ததைப் போல் வினயா அவரை ஏறிடவே, அவரும் அத்துடன் அவளை மனதால் தொடர முயல்வதை விடுத்தார்.

ஆனால் பிடித்தமை என்பதை விட, அவளது மன உளைச்சலைக் குறைப்பதோடு மட்டுமில்லாமல், சொற்களாலோ, செயலாலோ வெளிப்படுத்த முடியாத பல உணர்ச்சிகளை அவளது வரைப்படங்கள் வெளிக் கொண்டு வருகின்றன எனக் கணித்தான் விஜய்ஆனந்த்.

Property of Bhuvana

அவனை அப்படி எண்ண வைத்த வரைபடங்கள் இதோ,

- வைரவனின் உயரம் மற்றும் ஜாடையில் இருந்த இளவயது பிம்பத்தைக் கைப்பற்றி இழுத்து வரும் ஒரு சிறு பெண் குழந்தை.
- நான்கு பேர் அடங்கிய ஒரு குடும்பம்.அந்தக் குடும்பத்தின் சிறியவர்களின்(பெண் மற்றும் ஆண்) அருகே முழுதாய் உருவம் பெறாமல், காற்றிலேயே வண்ணம் தீட்டப்பட்டது போல் ஆணும், பெண்ணுமாய் இரு உருவங்கள்.
- தனசேகரனின் முகச் சாயலைக் கொண்ட ஆண்மகன். அவனது இடக்கைவளைவின் வழியே தலையை விட்டு, முயற்குட்டிக் கண்களை சுழற்றிய ஒரு நங்கை. அவனது வலக் கைவளைவில் அமைதியை முகத்தில் பூசியவாறே நின்றிருந்த மற்றொரு நங்கை.
- ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி வளாகம்.
- கல்லூரியில் அமைந்திருக்கும் வைத்தீஸ்வரன் கோவில். கோவிலில் அமைக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே வரையப்பட்ட தெய்வ சன்னிதானங்கள். கை கூப்பிய நிலையில் ஒரு பெரியவரும், அவரது கையைப் பிடித்தப்படி ஒரு பெண்ணும்.
- பவித்ராவின் முதல் வருட மருத்துவப்படிப்பின் போது அவள் பயின்ற வகுப்பறை.
- அவர்களது கல்லூரி கான்டீன்.
- பவித்ராவின் கையிலிருந்து உணவு டப்பாவை வாங்கும் விஜயின் பிம்பம்.
- உமா, தேவ், விஜய், பவித்ரா ஆகியோரின் பிம்பங்கள் ஒன்றாய் அமர்ந்திருப்பது போன்ற படம்.
- ஒரு பெரிய கட்டிடத்தின் முன்னர் நிறுத்தப்பட்ட ஒரு ஆட்டோ. அந்தக் கட்டிடத்தின் கதவருகே நின்ற ஒரு பெண். சில அடி தொலைவில் இன்னொமொரு பெண். இருவரையும் பார்த்தவாறே, சட்டைப்பையிலிருந்து பணம் எடுக்கும் நிலையில் ஒரு ஆண்.

Property of Bhuvana

மௌனமொழி பாகம் 30

வினயா தன் இரவு உறக்கத்தில் ஆழ்ந்திருந்த வேளையில், அவளது கணவன் அவர் கைவண்ணத்தில் தீட்டப்பட்ட ஓவியங்களை ஒவ்வொன்றாக பார்த்துப் பரிசீலித்துக் கொண்டிருந்தான். கடைசியாக, லீ மெரிடியன் வாசலில் உமா-அவன்-மற்றும் அவனது மனைவி இருவரும் மூன்று ஆண்டுகள் முன்னர் நின்ற தோற்றத்தை வரி வடிவ படுத்தியிருந்த வினயாவின் மனதைப் படிக்க முயன்றான் விஜய்.

தனக்கு நடந்த கொடூரமான சம்பவத்தை மீண்டும் எண்ணிப் பார்க்க முயல்கிறாளோ? அப்படி பார்ப்பதால் அவளது உடல் நிலைக்கோ, மனத்திற்கோ பாதிப்பு ஏற்பட்டு விடுமோ? என்று கலக்கமாக இருக்கவே, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மனைவியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். அவன் அஞ்சியதைப் போல் அவளது தளர்ந்த முகத்தில் சஞ்சலம் ஏதும் தெரியவில்லை என்றபோதிலும், மிக அதிகமான கவனத்துடன் படங்களை வரைவதால் கண்கள் லேசாக சோர்ந்தது போல் அவற்றை சுற்றி கருவளையம் படர்ந்திருந்தது.

கண்களைப் போலவே மனமும் சோர்ந்து போயிருக்குமோ? அதை தன்னிடம் பகிர்ந்துகொள்ளாமல் உள்ளுக்குள்ளேயே புகைகிறாளோ என்றெண்ணிய விஜய், மெல்ல மனைவியை நெருங்கினான்.

அவன் வினயாவை அடையும் முன்னரே, வினயா லேசாக தன் உடம்பை முறுக்கிக் கொண்டு, "வேண்டாம், வேண்டாம்", "என்னை விட்டுடுங்க" என முனங்க ஆரம்பித்திருந்தாள்.

இது நாள் வரை, அவளது மனதின் அடித்தளத்தில் இருந்த கசப்பான எண்ணங்கள், அவை தொடர்பான சில சம்பவங்கள் நடக்கும் போது மட்டுமே வெளி வந்து கொண்டிருந்தன என்பதை விஜய் அங்கு அறிந்திருந்தான். தனக்கு நடந்த கொடூரத்தை நினைவு படுத்தும் வகையில் ஏதாவது சம்பவம் நடந்தால் ஒழிய, வினயா தன்னை மறந்து கத்தி கூச்சல் போட்டதில்லை.

ஆனால் இப்போதோ, அவளே அந்த எண்ணங்களைத் தட்டி எழுப்ப முயன்று, தன்னைத் தானே வதைத்துக் கொள்கிறாள் போலவே என்ற கசப்பான எண்ணத்துடன் விஜய் அவளை நெருங்கி, "வினும்மா, ஒண்ணுமில்லடா. பேசாம தூங்கு" என்று கூறிய கையோடு, அவளைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டு தட்டிக் கொடுத்தான்.

"விஜி" என ஈன சுரத்தில் அழைத்தவளும் அவனிடம் ஒண்டினாள். "விஜி, என்னை விட்டுப் போகாதீங்க. அவங்க என்னை... என்னை அசிங்கமா பேசுறாங்க... ப்ளீஸ் இழுக்க வேண்டாம் சொல்லுங்க... வேணாம்... விஜி....ப்ளீஸ் வாங்க... தச்சு...." என சற்று நேரம் புலம்பியவள், அவனது "வினும்மா, நான் இருக்கேன். இனிமேல் உனக்குப் பிடிக்காத எதுவுமே நடக்காத மாதிரி நான் பார்த்துப்பேன். என்னை நம்பி தூங்கும்மா" என அழுத்தம் கலந்த குரலில் உறுதி கூறவும், அது ஒன்றே போதும் போல் அமைதி கொண்டவள், மீண்டும் உறங்கிப் போனாள்.

வினயாவிற்கு கணவனின் அந்த ஒரு வார்த்தையே போதுமானதாக இருந்தது என்ற போதிலும், விஜய் தான் அவளது நிலை குறித்துக் கவலை கொண்டான். கவலை கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் அதற்குத் தீர்வு காண எண்ணியவன் தன் மருத்துவப் புத்தகங்கள் இருக்கும் அறைக்குச் சென்றான்.

வினயாவின் தற்போதைய மனநிலை பற்றிய தன் சந்தேகங்கள் தீர்க்கும் பொருட்டு, மனநோய் சம்பந்தமாக அவன் சேகரித்து வைத்திருந்த (வினயாவின் நிலை அறிந்ததும் அவளை சீராக்கும் எண்ணத்தில் வாங்கி வைத்தவை) புத்தகங்களைப் புரட்டியவனின் மனதில் கவலை மறந்து, நிம்மதி படர ஆரம்பித்தது.

வினயாவைப் போல் கொடூரமான சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்ற வைத்தியம் – "அவர்களாகவே அவர்களை அறிய முற்படுவது தான்" எனக் கிட்டதிட்ட எல்லா நூல்களும் கூறியதில் விளைந்தது தான் அந்த நிம்மதி! அந்த முயற்சியில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை தொல்வியுற்றவர்களின் எண்ணிக்கையைவிட மிக அதிகமாகவே இருந்தது என்பது கூடுதல் சந்தோஷத்தை அளித்தது.

அந்த நிம்மதியை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு, வலை தளத்தில் இருந்த பற்பல ஆய்வுகளை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்தவன் முடிவில், அவளாக வெளிக்கொணர முயல்வது நல்ல முயற்சி தான் என்ற போதிலும் அவள் மீது ஒரு கண் வைத்துக் கொள்ள வேண்டும் என முடிவு செய்தான். தன்னாலான வகையில் அவளுக்கு உதவியும் புரியவேண்டும் என உறுதி பூண்டபின்னரே உறங்கச் சென்றான்.

Property of Bhuvana

அடுத்த வந்த நாட்களில், பவித்ரா என்ற தனது அடையாளத்தை வினயா இயல்பாய் எடுத்துக் கொள்ளும் வகையில் சில சந்தர்ப்பங்களைத் தானாகவே ஏற்படுத்தினான் விஜய்ஆனந்த்.

முதல் முயற்சியாக அவள் கண்ணில் படும் நிலையில் பவித்ராவின் புகைப்படங்களை வைத்தான்.
டிரெஸ்ஸிங் டேபிள் மேலிருந்த அந்தப் புகைப்படத்தை பார்த்த வினயா, முன்னர் போல் அலறாமல், நிதானமாக அந்தப் படத்தை வருடிக் கொடுக்கும் வரை விஜயின் நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது.

ஆசுவாசப் பெருமூச்சை வெளியேற்றியவன், வினயா தன்னிடம் ஏதோ கேள்வி கேட்கும் எண்ணத்துடன் திரும்பவே, வேகமாக அறையை விட்டு வெளியேறினான்.

அதன் பின்னரும் "விஜி, அந்த ஃபோட்டோ" என வினயா ஆரம்பித்தப்போதெல்லாம், உப்பு சப்பிலாத பல விஷயங்களுக்குத் தாவி, "தன்னை பவித்ராவாக உருமாற்ற கணவன் ஏதோ செய்கிறான்" என்ற எண்ணம் அவளுக்கு வராமல் பார்த்துக்கொண்டான்.

ஏற்கனவே அவள் தன்னை அறியும் முயற்சியில் இறங்கியிருப்பதால், அந்த முயற்சியை நல்லவிதத்தில் தூண்டிவிடும் கோலாக மட்டுமே தான் இருக்க வேண்டும் என நினைத்தவன், தன் எண்ணங்களை அவள் மீது திணிக்கக் கூடாது என்றும் நினைத்தான்

அடுத்த முயற்சியாக, அவளது முதலாம் ஆண்டு மருத்துவப்புத்தகங்களை அவளது தற்போதைய புத்தக அலமாரியின் ஊடே அடுக்கிவைதான். அவற்றின் முதல் பக்கத்தில் "பவித்ரா வைரவன்" என்ற பெயர் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்த வினயாவின் கண்கள் லேசாக இடுங்கி, பின்னர் அந்தப் புத்தகத்தைப் புரட்ட ஆரம்பித்தன.

புத்தகத்தின் பக்கங்களை மெதுவாகப் புரட்டியவளின் கண்களில் "பாப்பா", "பத்து", "பவி", "பவித்ரா" என்ற செல்லச் சுருக்கங்கள் பரவலாக விரவிக் கிடந்ததையும் அவளது மான்விழிகள் பார்த்திருக்கும் என்ற விஜயின் நம்பிக்கைக்கு ஏற்றாற்போல் வினயாவின் கண்களும் விரிந்து கொண்டே போயின.

Property of Bhuvana

வினயா என்ற உருவிற்கு அவள் மாறிய காலத்திற்கு முன்னர், அவள் வைத்த கொலுவில் அடுக்கப்படிருந்த பொம்மைகள் சிலவற்றை சென்னையிலிருந்து வரவைத்து, பூஜையறையில் அடுக்கிவைத்தான்.முன்னர் தன் கைவண்ணத்தினால் அந்த பொம்மைகளை அழகு படுத்தியிருந்த வினயா, இப்போது அவற்றின் மேல் போர்த்தியிருந்த ஆடைகளை யோசனையோடு பார்த்ததோடு நிறுத்திக் கொள்ளாமல், சற்று அழுக்காக இருந்த அந்த குட்டி ஆடைகளை சுத்தம் செய்து, மீண்டும் அணிவித்து விட்டாள்.

பவித்ரா என்ற அடையாளத்தை அவளுக்கு நியாபகப்படுத்தும் முயற்சியில் இருப்பதினால் மற்ற எதையுமே விஜய் நிறுத்திவிடவில்லை.
அதாவது அவளை
"தினம் இரண்டு முட்டை உட்கொள்ளச் சொல்வது",
"கீரை உண்ண வைப்பது",
"தேவையில்லாமல் குப்பையைப் போட்டு அவளை வீடு சுத்தம் செய்யவைப்பது",
"வேண்டுமென்றே மாடியில் எதையாவது மாடியில் வைத்துவிட்டு வந்து, அவளை அதை எடுத்துவாடா செல்லம் என ஏவுவது",
"எந்த பாடலை அவள் கேட்டுக் கொண்டிருந்தாலும், அந்தப் பக்கம் தான் செல்ல நேர்ந்தால் வேண்டுமென்றே அவளது காதுகளை மூடிக் கொண்டு குழந்தையிடம் கொஞ்சுவது",
"அவளுக்குப் பிடித்தமான பாசந்தியை துளசியின் சொற்படி அவள் தொடாமல் இருக்க, துளசிக்குத் தெரியாமல் அதை அவளுக்கு ஊட்டுவது",
"அவளுக்குப் பிடித்த பொருட்களை அவளுக்குத் தெரியாமல் வாங்கி வருவதோடு நில்லாமல், அவளை சற்று நேரம் அலையவிட்டு அதன் பின்னர் அவளிடம் கொடுப்பது" என தன் அன்பைப் பல விதத்தில் வெளிப்படுத்திக் கொண்டே இருந்தான் விஜய் ஆனந்த்.

தற்போதிருக்கும் வினயாவின் மேல் அன்பும், முன்பிருந்த பவித்ராவின் மேல் ஏக்கமுமாய் விஜய் தன் காய்களை நகர்த்த, வினயா அதில் தன்னையும் அறியாமல் கலந்து கொண்டாள். ஏற்கனவே அவளது மனநிலையில் ஏற்பட்டிருந்த மாற்றங்களும் மெல்ல மெல்ல வளரத் தொடங்கின.

Property of Bhuvana

அந்த வளர்ச்சியின் விளைவாக, வினயாவின் கர்ப்பக்காலத்தின் ஐந்தாம் மாதத் தொடக்கத்தில் முகம் வெளிற வீட்டிற்கு வந்த மருமகளைக் கண்டு துளசி சற்றே துணுக்குற்றார். "என்னம்மா" என பாசமாக வினவிய மாமியாருக்குப் பதில் சொல்ல முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு அமர்ந்திருந்த வினயா சட்டென, "ஒன்னும்மில்ல துசிம்மா, எனக்கு விஜியைப் பார்க்கணும், நான் கிளினிக் போய் பார்த்துட்டு வரேன்" என்ற அறிவிப்போடு மீண்டும் தன் வரைபடங்களை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்ப எத்தனித்தாள்.

"ஷ் நில்லு ராஜாத்தி. விஜய் இன்னும் ரெண்டு மணி நேரத்தில வீட்டுக்கு வந்துடுவான். வந்ததும் பேசிக்கலாம். இப்போ பேஷன்ட் நிறைய பேர் வந்திருப்பாங்க வினும்மா. சொல்றதை கேள்" என துளசி அதட்டவும், முகத்தைத் திருப்பிக் கொண்டு விடுவிடுவென மாடியேறி சென்றவள் கதவை அடைத்துக்கொண்டு வெளியே வரவே மாட்டேன் என அழிச்சாட்டியம் செய்தவளை மேலும் கெஞ்சாமல் கீழே வந்து தன் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார் துளசி.

அரை மணி நேரத்தில் கீழிறங்கி வந்த வினயா, சமையலறையில் சப்பாத்தி இட்டுக் கொண்டிருந்த துளசியின் பின்னால் போய் நின்று கொண்டு, அவரது புடவை முந்தானையை இழுத்தவாறே "துசிம்மா" என மெல்ல அழைத்தாள்.

"ஹ்ம்ம் என்ன மேடம்?" என துளசி சிரிப்புடன் வினவ, "விஜி வரலையா?" என்றாள் மீண்டும் மெதுவாக.

அவள் எங்கு வருகிறாள் என்று புரிந்தவர் போல் "சீக்கிரம் வரச் சொல்லி நான் ஃபோன் ஏதும் பண்ணலையே! நீ பண்ணியா?" என அவர் பதில் கேள்வி கேட்டதும், தான் கோபமாகச் சென்றதும் பதறிப் போய் விஜய்க்கு அழைத்து விவரம் கூறியிருப்பார் என்ற வினயாவின் எண்ணத்தில் மண் விழுந்தது.

"ஹோ" என தன் ஏமாற்றத்தை வெளிப்படையாக வெளிப்படுத்தியவள், "உங்களை ரொம்பப் படுத்துறேனா துசிம்மா?" என்றாள் உடைந்து விழுவது போலிருந்த குரலுடன்.

"என்னோட செல்லப் பொண்ணு என்னைப் படுத்தாம யாரைப் படுத்துவா?" என்ற துளசி, செய்து கொண்டிருந்த வேலையைப் போட்டுவிட்டு மருமகளை அணைத்துக் கொண்டார்.

Property of Bhuvana

வினயா லேசாக விசும்ப ஆரம்பிக்க, அவள் முதுகை வருடிக் கொடுத்தவாறே உணவு மேஜைக்கு அழைத்துச் சென்றவர், அவளை ஒரு நாற்காலியில் அமர்த்தினார். அமர்ந்த நிலையிலிருந்த வினயா, நின்று கொண்டிருந்த துளசியின் இடுப்பைக் கட்டிக் கொண்டு "துசிம்மா, உங்களை நான் ரொம்பப் படுத்துறேன் தானே? சும்மா படுத்தலைன்னு பொய் சொல்லாதீங்க? ஏன்டா இவளை மருமகளா கூட்டிட்டு வந்தோம்ன்னு நினைக்கிறீங்க தானே?" என்றாள்.

"ச்சி கழுதை, உனக்கு ஒன்னு தெரியுமா? பத்து மாசத்திற்கு முன்னாடி விஜய் உன்னை சென்னை-ல பார்த்த மறு நிமிஷம் எனக்குத் தான் ஃபோன் பண்ணினான். அவன் உன்னைப் பார்த்தேன்ன்னு சொன்னதும் நான் என்ன கேட்டேன் தெரியுமா? ப...வினுவை உனக்கு நிச்சயம் பண்ண நான் எப்போ வரட்டும்-ன்னு கேட்டேன்" என்றார் அவளது கலக்கத்தைப் போக்கிவிடும் பொருட்டு.

"நிஜமாவா?" என்றவள், "அப்போ என்னைப் பத்தி உங்களுக்கு எதுவும் தெரியாதே?"

"எது தெரியாதுன்னு நீ நினைக்கிற?" என அவள் வாயைப் பிடுங்கினார் அவளது மாமியார்.

"அது... அது... எல்லாம் தான்" என மருமகளும் பூசி மொழுகினாள்.

"உன்னைப் பத்தின எல்லாமே எனக்குத் தெரியும். பத்து மாசத்திற்கு முன்னாடியில்லை. மூணு வருஷத்திற்கு முன்னாடியே" என்றார் துளசி அழுத்தம் திருத்தமாக.
என்ன விஷயம் என கேட்கத் தோன்றாமல் "யார் சொன்னா?" எனக் கேட்டாள்.

"யார் சொல்லுவா?" என அதற்கு எதிர் கேள்வி பிறந்து, "விஜயா?" என்ற கேள்வியாய் அமைந்த பதிலை வினயாவை சொல்லவைத்தது.

"ம்ம் அவனே தான்" என்றவர், அவளது "என்ன சொன்னார்?" என்ற கேள்வியில், "நான் ப... வினு என்ற பெண்ணை உயிருக்கு உயிரா விரும்புறேன். எத்தனை வருஷம் ஆனாலும் அவளைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்-ன்னு சொன்னான்" எனக் கூறி அவளை சமாதானப்படுத்த முயன்றார்.

"எனக்கு எல்லாம் சொல்லுங்க துசிம்மா" என அவளது பிடிவாதத்தை, "இன்னைக்கு வேண்டாம், இன்னொரு நாள் நானே எல்லாம் சொல்றேன். சரியா? எனக்காக, உன்னோட விஜிக்காக, விஜியோட வினுக்காக, வினுவோட பாப்பாக்காக இப்போதைக்கு இதை விட்டுடலாமா?" என்றவர், அவள் அரைகுறையாய் தலையாட்டவே அந்த விவாதத்திற்கு முற்று புள்ளி வைத்து, வேறு விஷயங்களுக்குத் தாவினார்.

மருமகளைத் திசைதிருப்பி விட்டவரால் அந்த நாள் நினைவுகளிலிருந்து வெளியே வர முடியவில்லை. பவித்ராவின் குடும்பத்தைக் காணாத நிலையில், ஓய்ந்து போய் உடம்பு முடியாமல் இருந்த தன்னிடம் வந்த மகனையே சுற்றி வந்தது மனம்.

நைந்த மனதுடன் தாயை நாடி வந்து, அவரிடம் பாவமன்னிப்பு கேட்ட மகனின் அன்றைய கலங்கிய முகத்தை இப்போது கூட துளசியால் மறக்கமுடியவில்லை. அவனது நைந்த மனதிற்குக் காரணம் தேடி மனம் பின்னோக்கிச் சென்று, மகனின் வேதனைகளையும், மருமகளின் வரவையும் அசை போட்டது.

பவித்ராவிற்கு நடந்த கொடுமைக்குப் பின்னர், விஜயை சென்னையில் தங்கவிடாமல் துளசிக்கு உடம்பு முடியாமல் போய்விடவே, அதை கவனிக்க வந்த விஜய், திரும்பிச் சென்ற போது பவித்ரா மறைந்திருந்தாள். உமாவையும் அழைத்துக் கொண்டு.

உமாவின் சுருக்கமான கடிதத்திலிருந்து அதையுமே கணிக்க முடியாது போக, அக்கம் பக்கம் அவர்களைப் பற்றி விசாரித்தவனுக்கு "சிறிது காலம் முன்னர் ஆம்புலன்ஸில் பவித்ராவை அழைத்துச் சென்றனர்" என்ற பதிலைத் தவிர வேறெந்த விஷயமும் கிடைக்கவில்லை.

அந்த பதிலில், பவித்ராவின் உடல் நிலைக்கு மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை மட்டும் உணர்ந்த விஜய் மேலும் வருந்தி, துன்புற்று போனான்.

பத்து நாட்களுக்கும் மேலாக சென்னையில் அவர்கள் போகக் கூடிய இடத்திற்கெல்லாம் அலைந்தவனுக்கு சின்னதாய் கூட ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

Property of Bhuvaneshwari

எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியுற, மனதை அழுத்திய பாரத்தைத் தாங்க முடியாமல் அன்னையிடம் சென்றவன், அவரது உடல் நிலை சற்றே முன்னேறியிருந்த காலக்கட்டத்தில் நடந்த அனைத்து விஷயங்களையும் கூறி, அவரிடம் மன்னிப்பு கேட்டான்.

அவன் கூறிய விஷயத்தில், நெஞ்சம் உறைந்து போன துளசி சிலையாகிப் போனார். கூடவே அந்தப் பெண்ணைத் தான் விரும்புவதாக மகன் கூறியதும் நினைவு வர, மணக்கப் போகும் பெண்ணின் பாதுகாப்பு கணவனாகப் போகும் ஒருவனுக்கு இல்லாமல் எப்படி போகலாம் என்ற கேள்வி பெரிய அளவில் விஸ்வரூபம் எடுத்து, மகனைக் குரலெடுத்து ஏசவைத்தது. மேலும் நண்பர்களைப் பகுத்தறியும் அறிவில்லாமல் இவன் என்ன மருத்துவம் படிக்கிறான்? என்ற அவரது கேள்வியும் அவனைச் சாட்டையால் அடித்தது.

அவர் கூறிய எதையுமே மறுக்காமல், மறுத்துப் பேசக் கூடத் தோன்றாமல், "தப்பு தான்" என்ற வார்த்தையையே திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான் விஜய் ஆனந்த்.

ஒரு நிலைக்கு மேல் மகனைத் திட்டுவதை நிறுத்திவிட்டு அந்தப் பெண்ணிற்காக மறுகத் தொடங்கினார். "ஹய்யோ, இப்போ தான் பிரஸ்ட் இயர் படிக்கிறான்னு சொல்றா... ஒரு சின்னப் பொன்னைப் போய்" என மறுகித் தவித்தார். அதில் தன் மகனின் தப்பும் இருக்கிறது என்று தெரிந்த போது மறுகல் மேலும் கூடியது.

இருவரது தவிப்பும் நாளாக நாளாக கூடிக் கொண்டே சென்றதே தவிர சற்றும் குறையவில்லை. இப்படியாக நாட்கள் கழிய, அடிக்கடி சென்னை சென்று அவர்களைத் தேடிவிட்டு களைத்துப் போய் திரும்பும் மகன், மேலும் மேலும் உள்ளே செல்வது போல் தோன்றியது துளசிக்கு.

அதை உணர்ந்தவர் போல், அவனது சேவை மனப்பான்மையை தூண்டிவிட்டு, மக்களின் நலம் பேணும் பணியில் அவனது கவனத்தைச் செலுத்த வைத்தார். விஜய்க்கும், மக்களின் பிணி போக்கும் மருத்துவம் மருந்தாய் அமைந்ததோடு மட்டுமில்லாமல், தான் ஒருவருக்கு நல்லது செய்யும் நிலையில் தன் பவித்ராவிற்கும் யாராவது ஒருவர் நல்ல மருத்துவமும் கவனிப்பும் கொடுப்பார் என்ற எண்ணமும் அவனைச் சற்றே நிமிரச் செய்தது.

Property of Bhuvana

என்ன தான் சேவையும், வேலையுமாய் விஜய் இருந்த போதும், பவித்ராவைத் தேடும் முயற்சியில் அவன் சளைக்கவே இல்லை. பவித்ராவின் நண்பர்கள், அவளுடன் உடன் பயின்றவர்கள், உமாவின் தோழிகள், அக்கம் பக்கத்தோர் என்று சின்ன காண்டக்ட்டை விடாமல் கண்டு பிடித்து, அவர்களிடம் நாசூக்க விசாரித்தான்.

தனசேகரனின் அலுவலகம் சென்று அவனைப் பற்றி விசாரித்தப் போது, வெளியாட்களை நம்பி தகவல் ஏதும் சொல்ல முடியாது என்று அவர்கள் கூறி விட, வேறு வழியில் முயன்றான்.

பவித்ராவை அழைத்துச் செல்ல என்ன ஹாஸ்பிடல் ஆம்புலன்ஸ் வந்தது என்று விசாரித்து, அப்பல்லோ மருத்துவமனை சென்றவனால் தனது பல் மருத்துவ சான்றிதழை கட்டியபின்னர் கூட தகவல் வாங்க முடியவில்லை. தலைமை மருத்துவரிடம் தனியாக பேசி, தன் நிலையை விலக்கியவன், கடைசியாக "பவித்ராவை நான் மணந்து கொள்ள விரும்புறேன். அதுக்காக தான் தேடுகிறேன்" என்ற வாக்குமூலத்தைக் கொடுத்து, அவளுக்கு என்ன நடந்தது என்பதைக் கேட்டறிந்தான்.

கேட்ட செய்தி பெரும் இடியை இறக்க, அதே இடியைத் தாங்கிக் கொண்டு மும்பை சென்றால், அங்கே அந்த மருத்துவமனைக்குள் கால் எடுத்து வைப்பதற்கே பெரிய பாடாக இருந்தது. ஐந்து மாதத் தொடர் படையெடுப்பின் விளைவாக, பவித்ராவின் குடும்பம் சிங்கப்பூர் சென்றுள்ளது என்ற தகவல் கிடைத்தது.

அவர்களது விலாசமில்லாமல், அந்த தகவலை மட்டும் வைத்துக் கொண்டு, சிங்கப்பூர் வீதிகளிலா அலைய முடியும்? ஆனால் விஜய், அதையும் முயன்று பார்ப்பது என்ற முடிவுடன் சிங்கப்பூர் பயணப்பட, பயன் தான் ஏதுமில்லாமல் போனது. அவனது சிங்கப்பூர் பயணங்கள் மூன்றானபோதும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நான்காவது சிங்கப்பூர் பயணத்திற்காக விஜய் சென்னை வந்திருந்தபோது, மயிலாப்பூரில் இருக்கும் சாய்பாபா கோவிலுக்குச் சென்றுவிட்டு சிங்கப்பூர் பயணப்படுவது என முடிவு செய்தான்.

சாய்பாபாவின் சந்நிதி முன்னர் கைகூப்பி நின்றிருந்த விஜயை "விஜய்" என்ற குரலும், பின்னாலிருந்து தோளில் வைக்கப்பட்ட குரலும் தட்டி எழுப்பின.

திடுக்கிட்டு திரும்பிய விஜயின் எதிரே ஒரு பெண் நின்றிருக்க, அவளது கண்களைச் சந்தித்தவன் உறைந்து போனான். "இந்தக் கண்கள்... இந்தக் கண்கள்... என் பவி...." என அவனது சிந்தனை ஓடிக் கொண்டிருக்கும் போதே, "வினு, வினு" என்ற அழைப்போடு அங்கே உமா வந்து சேர்ந்தாள்.

"உமா" என விஜய் அதிர, "விஜய்" என ஸ்தம்பித்துப் போனாள் உமா.

"அண்ணி, இவங்க விஜய் தானே?" எனக் கேட்ட அந்தப் பெண், உமாவின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"வெளி மண்டபத்தில் உட்கார்ந்து பேசலாம்" என அழைத்துச் சென்றார் உடன் வந்த வைரவன்.

அதன் பின்னர் இரண்டு வருடங்களாக நடந்த அனைத்தையும் உமா விவரிக்க, அவளது மடியில் படுத்திருந்த வினயாவின் இரண்டு வருடத் துன்பங்களை இரண்டே மணி நேரத்தில் விஜய் அனுபவித்து முடித்திருந்தான்.

உமாவின் பேச்சு முடிந்து கண்ணீர் பெருகிய அந்த வினாடி, "சார், எனக்கு உங்க பொன்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பீங்களா?" என்ற கேள்வியை அவரிடம் முன்வைத்தான் விஜய் ஆனந்த்.

கேட்டிருந்த இருவரும் அதிர்ந்து நோக்க, தான் பவித்ராவை விரும்பிய காலத்தையும் நேரத்தையும் வைரவனுக்கு வேதனையுடன் எடுத்துக் கூறியவன், பவித்ராவின் வாழ்வு பாழான நிலையிலேயே தான் அவளை ஏற்று கொள்ள விரும்பியதையும், அது தியாகமாய் முத்திரை குத்தப்பட்டு விடுமோ என்ற எண்ணத்தில் கேட்காமல் விட்டதையும் எடுத்துக் கூறினான்.

உமா, "வினு... வினு ஆண்கள் என்றாலே பயப்படுவா விஜய். அவளை எப்படி?" என மறுக, அப்போது தான் வைரவனுக்கு, அவளாகவே விஜயை அழைத்தது மனதை நெருடியது.

தன் நெருடலை மருமகளிடம் கூறியவர், "இல்லம்மா, எல்லார்கிட்டயும் நடந்திக்கிற மாதிரி இல்லை... விஜயைப் பார்த்தது பயந்து ஒதுங்கலையே! உன்னையும் விஜயையும் அவ மனசு நல்லவங்களா நினைக்கிறது. அதுவே நல்லது தானே!" என்றார் யோசனையுடன்.

ஆனால் விஜயிடம் நேரடியாக சம்மதம் என்று கூறாமல், "அவ அண்ணனை கேட்கணும்பா. கேட்டுட்டு சொல்றேன்" என்றார். "சரி" என ஆமோதித்தவன், மேலும் அதைப் பற்றி பேசாமல் பொதுவாகப் பேச்சைத் திருப்பினான்.

ஆனால் பவித்ராவின் அண்ணனோ, விஜய் பெண் கேட்டான் என்பதிலேயே ருத்ர தாண்டவம் ஆட, வைரவனின் நொந்த இதயம் சில நிமிட நேரங்கள் நின்று மாரடைப்பை கொண்டு வந்தது.

ஒரு வாரப் போராட்டத்திற்குப் பின்னர் பிழைத்த வைரவன், மிரண்டு போய் நின்றிருந்த வினயாவை அழைத்து, "உனக்கு விஜயைப் பிடிக்குமா பாப்பா?" என்றார் மெதுவாக. "இல்லை" எனக் கூறினால் தந்தை மீண்டும் படுத்துவிடுவாரோ என அஞ்சியவளாக "ம்ம் பிடிக்கும்" என்றாள் சின்னக் குரலில்.

"கொஞ்ச நாள் அவர்கூட போய் இருக்கியா? உமா அண்ணி மாதிரியே உன்னைப் பார்த்துப்பார்" என்றவர், அவள் அரைகுறையாக "சரி" எனவும், அவரைக் காண வந்திருந்த விஜயின் கைகளில் தன் மனைவி விசாலாக்ஷியின் தாலிக் கொடியைக் கொடுத்து வினயாவின் கழுத்தில் போடச் சொன்னார்.

எல்லாருமே அதிர்ந்து போக, தனசேகரன் இல்லாத நேரத்தில் தேவையா என விஜய் யோசிக்க, வைரவனின் மன்றாடல் உயர்ந்தது. கடைசியில் பெரியவரின் வார்த்தை ஓங்கிவிட, தாயின் தாலிக் கொடியை மகளின் கழுத்தில் அணிவித்து, தன் மனைவியாக்கிக் கொண்டான் விஜய் ஆனந்த்.

இதை அறிந்த இரு உள்ளங்கள் கொதித்துப் போயின. ஒருவர் சந்தேகமில்லாமல் தனசேகரன். மற்றொருவர் விஜயின் தந்தை வீரராகவன்.

தங்கையின் மகள் பூரணியை மகனுக்குப் பெண் பேசி வைத்திருந்த தந்தை, சொல்லாமல் கொள்ளாமல் மகன் செய்து கொண்ட திருமணத்தில் கொதிதத்தை விட, தன் நிலை மறந்திருக்கும் ஒரு பெண்ணை மணந்து கொண்டு வந்து நிற்கிறானே என்ற ஆத்திரம் தான் பெரிதாய் இருந்தது. உறவுகளும் அதை ஊதிப் பெருசாக்க, மகனை வைது தீர்த்தார் மனிதர்.

ஒருவழியாக எல்லாம் நல்ல படியாக முடிந்ததே என்ற பெருமூச்சுடன் துளசி, அந்த நாள் நினைவுகளிலிருந்து வெளியே வர, நாமும் அவரைத் தொடர்ந்து நிஜத்திற்கு வரலாம்.

துளசி நிஜத்திற்கு வந்த நேரம், விஜயும் வீட்டிற்கு வந்திருக்க, மூவருமாக இரவு உணவை உண்டுமுடித்தனர். உணவின் போது ஒரு வார்த்தை கூட பேசாமல், உணவை வினயா அளைந்து கொண்டே இருக்க, அதை கவனித்த மகனிடம் கண் காட்டி எதுவும் பேசாமல் இருக்கும் படி கூறிய துளசி, இருவரும் உறங்கச் சென்றபோது இரு சப்பாத்திகளை தட்டில் வைத்துக் கொடுத்து, அவளுக்குப் புகட்டும்படி கூறினார்.

சோபாவில் உதட்டைக் கடித்தவாறே அமர்ந்திருந்த மனைவியை இழுத்து, தன் மடியில் அமர்த்திக் கொண்ட விஜய், "வினுக்கு என்ன கோபம்? யார் மேல கோபம்? யார் மேல கோபம்ன்னாலும் சாப்பிடாம இருக்கக் கூடாது வினு"

"கோபமில்ல" என்றவள், "உங்ககிட்ட ஒன்னு காண்பிக்கணும்" என்றாள் மெதுவாக.

"எதுனாலும் சாப்பிட்டுட்டு" என்றவன், அவளை உண்ண வைத்துப் பின்னரே மடியிலிருந்து எழ விட்டான்.

அவன் விட்ட நிமிடத்தில் வேகமாக எழுந்து கொண்டவள், தான் அன்று வரைந்த படங்களை எடுத்து வந்து அவன் முன்னே விரித்தாள்.

முதல் படத்தில் ஒரு பிரம்மாண்டமான கட்டிடத்தின் உள் பகுதி சற்று மங்கலாக வரையப் பட்டிருக்க, அதிலிருந்து லிப்ட் மட்டும் தெளிவாக வரையப்பட்டிருந்தது. அந்த லிப்ட்டின் வெளியே ஒரு பெண் (பவித்ரா) நின்றிருக்க, உள்ளிருந்த ஒரு ஆண் அவள் கைப்பற்றி உள்ளே இழுத்துக் கொண்டிருந்தான்.

அடுத்த படத்தில் கட்டிலின் மேல் ஒரு பெண்ணின், சுற்றி நான்கு ஆண்களும் நிற்க, பெண்ணின் முகம் பயத்தில் வெளிறி இருந்தது.

இவை இரண்டையும் பார்த்த விஜய் அதிர்ந்து போய் வினயாவைப் பார்த்தப் போது, அவளது முகமும் அதே வெளிறலை காட்டியது.

"வினும்மா, இதெல்லாம் குப்பைடா! இதெல்லாத்தையும் தூக்கித் தூரப் போட்டுடு" என்றான் விஜய் அவளைத் தன் பக்கம் இழுத்தவாறே.

"குப்பை தானே?" என்ற வினயாவின் குரல் மன்றாடியது.

"கண்டிப்பா, எரிக்கப் படவேண்டிய குப்பை" என்றான் விஜய் உடனடியாக.

"அப்போ எரிச்சடலாம்" என்றவள், அந்தப் படங்களை பால்கனிக்கு எடுத்துச் சென்று தீ வைத்தாள். அவை எரிவதை கண்களில் ஜொலிப்புடன் பார்த்திருந்தவள், கணவனின் தோள்களில் முகம் புதைத்துக் கொண்டு, சற்று நேரம் அமைதியாய் இருந்தாள்.

கணவனும் மனைவியின் மௌனம் புரிந்தவன் போல் அவளை லேசாக அணைத்து, உச்சியில் இதழ் பதித்தான்!

மௌனமொழி பாகம் 31

விஜய்-வினயா தம்பதியின் அன்புக் குழந்தை, தன் உருவாக்கத்தை தொடக்கி ஆறு மாதங்கள் முடிந்து ஏழாம் மாதத்தில் அடி எடுத்து வைக்க, அந்த நிகழ்ச்சியைக் கொண்டாட குடும்பத்தினர் அனைவரும் விரும்பினர்.

தங்கள் ஒரே மகனான விஜயின் திருமணம் பிறர் அறியாமல் நடந்த விதத்தில் லேசாய் வருத்தம் கொண்டிருந்த அவனது பெற்றோருக்கு, அவனது வாரிசை வரவை வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதே போல், மகன் மற்றும் மகள் இருவரின் திருமணங்களும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நடந்தேறியதை எண்ணி கவலை கொண்டிருந்த வைரவனும், சுற்றமும் நட்பும் புடை சூழ மகளின் வளைகாப்பை நடத்த முடிவு செய்தார்.

குன்னூர் வீட்டில் வைத்துக் கொள்ளலாம் என வீரராகவன் கூற, இது நாள் வரை கடனிலிருந்த தங்களது நெற்குன்றம் வீடு மீட்கப்பட்டதால் அதிலேயே வைத்துக் கொள்ளலாமா என அபிப்ராயம் கேட்டார் வைரவன்.

இருவரது அபிப்ராயமும் ஒருங்கே வந்து சேர, இரு பெரியவர்களும் மற்றவருக்காக விட்டுக் கொடுத்ததை மற்றவர்கள் ஒரு புன்னகையுடன் பார்த்திருந்தனர்.

இருவரும் ஒரு முடிவிற்கு வருவது போல் தெரியாததால், விழாவின் நாயகியே உள்ளே புகுந்து "இங்க, கோயம்புத்தூரிலேயே வளைகாப்பை வச்சுக்கலாம்" என்றாள் அறிவிப்பாய் இல்லாமல் கட்டளை போல!

"ஷ், பெரியவங்க பேசும்போது என்ன வினு இது?" என உமா அன்னையாய் (அண்ணியாய்) அடக்க,

"நானும் பெரியவ தான். எனக்குப் பாப்பா பிறக்கப் போகுது நியாபகம் இருக்கட்டும்" என கண் சிமிட்டி விளையாடிய குழந்தையை, அவளது மாமனார் தப்பாக எடுத்துக் கொள்வாரோ என உமா வீரராகவனின் முகம் பார்க்க, அவரோ "அதானே? தினம் புருஷனை ஊட்டிவிடச் சொல்லி சாப்பிடிற பெரிய மனுஷி சொல்றதை எல்லாரும் கேளுங்கப்பா" என்றார் கிண்டலாக.

அவரது கிண்டலில் அனைவரும் மனம் இறுக்கம் தளர்ந்து சிரிக்க, "ஆமா, ஆமா, அறுபதாம் கல்யாணத்திற்கு வேற ஒரு பொண்ணு தேடும் ராகவை விட நான் சின்னப் பொண்ணு தானப்பா" என்றாள் வினயாவும் சரிக்குச் சரியாக.

உமா, பிறர் அறியாமல் வினயாவின் கைகளைப் பிடித்து இழுப்பதைக் கண்ட விஜய் "உமா, வீணா ரெண்டு பேருக்கும் நடுல மூக்கை நுழைக்காதே! இப்போ ரெண்டு பேரும் தான் எல்லா தில்லுமுல்லு தனத்திற்கும் கூட்டாளிங்க. என்னையும் அம்மாவையும் ஏய்க்கிறதே வேலை" என்றான் விஜய் சிரிப்புடன். அவன் இப்படி சொல்ல ஒன்றா இரண்டா காரணங்கள்! உதரணத்திற்கு, சாலையோர கடைகளில் விற்பதை வாங்கி உண்பதில் வினயாவிற்கு அதிக விருப்பம் என்றாலும், அவளது உடல்நிலையைக் கருதி விஜயும் துளசியும் அதற்குப் பலத்த தடை போட்டிருந்தனர்! தடையிட்ட இருவரையும் ஏய்த்துவிட்டு வினயாவும் அவளது மாமனாரும் அங்கே சென்று சாப்பிடுவதோடு நில்லாமல், தந்தி பாஷையில் அவற்றை பற்றி புகழும் பாடினர்!

"ஏமாறவங்க இருக்கவரைக்கும் ஏமாத்துறவங்க இருக்கத் தான் செய்வாங்க, இல்ல ராகவ்!" என்ற வினயாவிற்கு ஹை-பை கொடுத்து, பின்னர் பெருங்குரலெடுத்து சிரித்தார் வீரராகவன்.

Property of Bhuvana

"அச்சோ, இப்படி சிரிக்காதீங்க, பாப்பா பயந்து போய்டும்ன்னு எத்தனை தடவை சொல்றது" என்று அவரை மீண்டும் வம்பிழுத்து சிரித்தாள் வினயா.

வினயாவின் விருப்பப்படி அல்லது கட்டளைப்படி, வளைகாப்பை கோயம்புத்தூரில் நடத்துவது என முடிவு செய்தனர் அவளது நலம் விரும்பிகள். வளைகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கையில், அண்ணனின் அருகே அமர்ந்து அவன் தோளில் சாய்ந்துகொண்டாள் வினயா.

"என்ன குட்டிம்மா" என தனா பாசத்தைக் குழைத்து வினவியதும், அவனது இடது கையைத் தன் வலது கையில் எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு விரல் இடுக்காக வலம் வந்தாள் வினயா. சில நிமிட அமைதிக்குப் பின்னர் "நீ எப்போவும் போலவே இருண்ணா...." என ஆரம்பித்து, அவன் வியந்து நோக்கவும், "முன்னே எப்படி இருப்பியோ அப்படி! எப்போ பார்த்தாலும் சண்டை போட்டுக்கிட்டு. நான்... நான்...என்னோட தச்சுவை ரொம்ப மிஸ் பண்றேன்" என்றாள் அவனது கண்களை சிறு தடுமாற்றத்துடன் நோக்கி!

சில ஆண்டுகளாக மறைந்து போயிருந்த "தச்சு" என்ற அழைப்பு மீண்ட சந்தோஷத்தில், தனசேகரன் தத்தளிக்க, விழாவிற்கு யார் யாரை அழைக்க வேண்டும் என்று பட்டியலிட்டுக் கொண்டிருந்த நண்பர்கள் இருவரும் வியப்பின் உச்சிக்கே சென்றனர்!

தன் சந்தோஷத்தை வினயாவை தோளோடு அணைத்து, நெற்றியில் முத்தமிட்டு தனசேகரன் வெளிப்படுத்த, உமாவும் விஜயும் பார்வையாலேயே அவர்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தனசேகரனின் முகம் நெகிழ்ச்சியிலிருந்து வெளிவராமல் இருப்பதைக் கண்ட வினயா, "என்ன தச்சு இது? இப்போ எதுக்கு இந்த லுக் கொடுக்கிற? என்னோட உக்காரையை சாப்பிட்ட அப்புறம் கொடுக்கிற லுக்கை இப்போவே கொடுக்கக் கூடாது சரியா? அது சரி, உனக்கு உக்காரை எப்படி இருக்கும்ன்னு நியாபகம் இருக்கா?" என அண்ணனிடம் கேள்வி கேட்டு, அவனது பதிலை எதிர்பாராதவள் போல் உமாவின் புறம் திரும்பி "அண்ணி, உட்காறதுக்கும் நிக்கிறதுக்கும் வித்தியாசம் தெரிஞ்சுடுச்சா?" என்றாள் கருவிழிகளை முயற்குட்டிகளாய் உருட்டி.

"ஹேஹ என்ன கிண்டலா, என் பொண்டாட்டி சமையலைப் பத்தி என்ன நினைச்ச?" என தனசேகரன் தங்கையின் காதுகளை செல்லமாய் முறுக்க, ஒற்றை விரல் நீட்டி "நல்லா வேணும்" என மிரட்டினாள் உமா.

ஆனால், உமாவின் கணவனோ "அவளுக்குச் சக்கரை பொங்கலே செய்யத் தெரியாதப்பா என்ன கேள்வி இது ராஸ்கல்" என கண்களைச் சிமிட்டினான்.

செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு ஓடி வந்த உமா, "அது தானே பார்த்தேன்! தங்கச்சி இருக்கும் போது பொண்டாடிக்கு சப்போர்ட் தூள் பறக்குதேன்னு" என்றாள், தனசேகரனை பலமாக ஒரு அடி வைத்தவாறே!

அவளுக்கு உதவி செய்யும் பொருட்டு வந்த "அழாதேடா செல்லம்! நான் இருக்கேன்!" என்ற குரல் விஜயினது தான்!

அதற்குப் பதில் குரலாய் "ஹய்யோ என் புருஷனைக் கூட நம்பலாம் சாமி, ஒரு சமயம் இல்லை இன்னொரு சமயம் என்னை சப்போர்ட் பண்ணுவார். உன்னை நம்பவே முடியாதுடாப்பா! அதுவும் உன் பொண்டாட்டி விஷயத்தில்... ஹய்யோ வேண்டாம் சாமி!" என பெரும் பயத்துடன் அவளது நண்பனை வாரினாள் உமா.

"நல்லதுக்கே காலமில்லைடா சாமி" எனக் கூறி வாராத கண்ணீரை, விஜய் துடைக்க, "அச்சோ என் விஜி பாவம்" என கணவனின் அருகில் வந்து, அவனது கண்ணீரை தானும் துடைத்தாள் அவனது மனைவி!

"ஆமா விஜி பாவம் தான்!" என வேண்டுமென்றே "விஜி" என்ற பெயரில் உமா அழுத்தம் கொடுத்து உரைக்க, அதை வினயா கண்டுகொண்டது போலவே தெரியவில்லை. முன்னரெல்லாம் யாரேனும் அவனை "விஜி" என்று மறந்து போய் அழைத்தால் கூட பொங்கி எழுந்தவள், இப்போது அமைதியாய் இருப்பதைக் கண்ட உமா, புதிராய் பார்த்தாள்.

அண்ணியின் பார்வையைப் புரிந்து கொண்டவள் போல் "நாங்க புது பேர் கண்டு பிடிச்சிட்டோமில்ல! "விஜி" யெல்லாம் ஓல்ட் பேஷன்" என்றாள் துசியைத் தட்டிவிடும் பாவனையில்!!

"ஹ்ம்ம் நடத்துங்க, நடத்துங்க" என தனசேகரன் சிரிக்க, "நீங்களும் நடத்துறது தானே! எங்களைப் பார்த்து என்ன பொறாமை வேண்டிக் கிடக்கு?" என அண்ணனுக்குப் பதில் கொடுத்த வினயா, "இல்லையா ஆனந்த்?" என்றாள் கணவனின் கேசத்துடன் விளையாடிக் கொண்டே! அவளது "ஆனந்த்" என்ற அழைப்பில் தனாவும் உமாவும் வியந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, வினயாவின் கணவனோ மனைவியின் அழைப்பில் உருகி "ஆமாடா கண்ணும்மா" என ஆமோதித்தான்!

விளையாட்டும், வம்புப் பேச்சும், கவனிப்புமாய் நாட்கள் கனிய வினயாவின் வளைகாப்பும் வந்து சேர்ந்தது!! துளசியும் வீரராகவனும் ஊரை வளைத்துப் பத்திரிக்கை வைத்திருக்க, இந்தப் பக்கம் வைரவனும் அவருக்குத் தெரிந்தவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

அவரவர் குடும்பத்தில் முற்று முதலாய் நடக்கும் நல்ல காரியம் என்பதால், அழைத்திருந்தவர்களில் தொண்ணூறு சதவீதம் பேர் வளைகாப்பிற்கு வந்திருந்தனர். விழாவும் விடுமுறை நாளில் வைக்கப் பட்டிருந்ததால் வருவோரின் எண்ணிக்கை அதிகரித்தது!!

உமா மற்றும் விஜயின் தோழி நிர்மலா, அவளது தாயார் கமலா, சென்னை வீட்டின் அருகே வசித்த அக்கம் பக்கத்தோர், தனசேகரனுடன் வேலை பார்ப்போர், உமாவின் மருத்துவமனையில் வேலை செய்யும் சிலபேர், வினயாவின் பள்ளித் தோழிகள், முக்கியமாக விந்தியா என பலர் சென்னையிலிருந்து வந்திருந்தனர்.

வீரராகவனின் தங்கை தாரகை, அவரது மகள் பூரணி, பூரணியின் மகள் நித்யா என அவரது ரத்த சொந்தத்தில் தொடங்கி குன்னூரிலிருந்த நண்டு சிண்டு முதற்கொண்டு விழாவிற்கு வந்து சேர்ந்திருந்தனர்.

கொடுத்த பத்திரிக்கைகளின் எண்ணிக்கையைக் கண்ட விஜய், முன்னெச்சரிக்கையாக கல்யாண மண்டபம் ஒன்றை புக் செய்திருந்ததால் இடத்திற்குப் பிரச்சனையில்லாமல் போனது!

Property of Bhuvana

சுற்றுமும், நட்பும் இனிதே வாழ்த்த வினயாவின் சீமந்தம் இனிதே நடைபெற்றது. நிறைந்த மனதுடனும், கண்களில் நீருடனும் துளசி முதல் வளையலாய், தன் தாய் வீட்டுச் சீராய் தனக்குக் கொடுக்கப்பட்ட தங்கவளையை அணிவித்து விழாவை இனிதே தொடங்கிவைத்தார்.

வைரவன், தனசேகரன், வீரராகவன் என வரிசையாக தங்கள் ஆசியை வினயாவிற்கு வழங்கினர். கண்களில் ஆனந்த கண்ணீர் ஆறாய் ஓட, வினயாவின் தலைமீது கை வைத்து ஆசி கூறிய வைரவன், அந்த மகிழ்வை மகளுக்கு அளித்த மருமகனை இறுக அணைத்துக் கொண்டார்!

அந்தப் பாசப்பரிமாற்றத்தை கலைக்க மனமின்றி சில நிமிடங்கள் அழகிய அமைதியில் கழிய, அப்பாவைப் பின்பற்றிய தனசேகரனும் விஜயின் கைகளைப் பிடித்துக் கொண்டு "தேங்க்ஸ் விஜய்" என நெகிழ்ந்தான்!
"தனா, ப்ளீஸ்!" என விஜய் அதை மறுக்க, மேலும் சில நிமிடங்கள் அமைதியில் கழிந்தது!

தங்களது பரிசாக, வினயாவின் கைகளில் நவரத்ன வளையலை அணிவித்த கையோடும், குழந்தையாய் வளர்த்த தன் பெண்ணின் உச்சியில் முத்தமிட்டாள் உமா.

வந்திருந்த அனைவரும் வளையிட்டு முடித்துவிட, விஜயை அழைத்து மனைவிக்கு வளை போடச் சொன்னனர். கண்களில் காதலுடன் மனைவியை நெருங்கிய விஜய், அவளது கண்ணோடு கண் நோக்கி, காதல் என்ற பாடத்தை மௌனம் என்ற மொழியால் பேசியவாறே வளையலை அணிவித்துவிட்டான். கணவன் பேசிய மௌனமொழியை சரியாகக் கிரஹித்த வினயாவும், அவனிலேயே லயித்திருந்தாள்.

பூ தூவி, சந்தானம் பூசி, வளையிட்டு முடித்த விஜய் "வினுக்கு என்ன கிபிட் வேணும் சொல்லு? உடனே தரேன்" என்றான் காதலுடன். இன்னமும் பரிசு வாங்கவில்லையா என வியக்கவேண்டாம். அவன் இப்படிக் கேட்டதற்கான காரணம் கீழ்வருமாறு...
வளைகாப்பு நடப்பதற்குப் பல நாட்கள் முன்னரிலிருந்தே "உனக்கு என்ன கிபிட் வேணும் வினு கண்ணா? உனக்குப் பிடிச்சதை வாங்கித் தரேண்டா" என விஜய் உருகிக் கொண்டிருக்க, "நான் வளைகாப்பு அன்னைக்குத் தான் கேட்பேன்! அப்போ கண்டிப்பா தரனும் சரியா? முடியாதுன்னு சொன்னா அடிப்பேன்!" என அவனிடம் கோரிக்கை வைத்தவள், மீண்டும் திரும்பி "எல்லார் முன்னாடியும் அடி வாங்கக் கூடாதுன்னா நான் சொல்றதை தரனும்? ஓகே?" என ஒரு மிரட்டலை உரிமையாக முன்வைத்தாள்!!

Property of Bhuvana

மனைவியின் இந்த துள்ளலின் மனம் லயித்தாலும், அவள் முழுதாய் மீளவில்லையோ என்ற எண்ணம் விஜய்க்கு இருந்து கொண்டே இருந்தது. அதற்குக் காரணம் - அவனது "விது" என்ற அழைப்பிற்கு வினயா விளக்கம் கேட்டுக் கொண்டே இருந்தது தான்! பவித்ரா என்ற தன் அடையாளத்தை முழுதாய் அவள் உணர்ந்திருந்தால், "விது" என்ற அழைப்பின் காரணத்தை அவளே கண்டுபிடித்திருப்பாள் என விஜய் எண்ணியதால், மனைவியின் முழு மாற்றத்திற்குக் காத்திருந்தான்! அவள் கேட்கப் போகும் பரிசிற்காகவும் தான்!

வினயா, விஜயிடம் கேட்ட பரிசு இதோ!

"என் பக்கத்தில வாங்க" எனக் கணவனை கைநீட்டி அழைத்தவள், அவனது வான்நீளத்தில் மெல்லிய வெள்ளைக் கோடுகள் போட்ட சட்டையை இழுத்து, அவனது காதை தன் வாயருகே கொண்டு வந்தாள்.

" எனக்கு "விது" கிற பேருக்கு அர்த்தம் சொல்லுங்க" என்றாள் அழுத்தமாக!

"ஹே குட்டி, இது கல்லாட்டம்" என விஜய் சண்டையிட,

"நான் என்ன கேட்டாலும் தரேன்னு சொல்லியிருக்கீங்க, நியாபகம் இருக்கட்டும். நான் எல்லார்கிட்டயும் எனக்கு நீங்க ஒரு கிபிட் கூட கொடுக்கலைன்னு சொல்வேன்" என்றாள் வினயா பதிலுக்கு.

விஜய்க்கு அவள் அப்படிக் கேட்டதில் சிறு வருத்தம் தான் என்றாலும், அன்றைய நாளில் அவளை சோர்வுற செய்ய வேண்டாம் என்ற எண்ணத்துடன் பதில் கூறினான்.

"உன் பேர்... அதாவது "பவித்ரா"ல வர நடு வார்த்தை தான்டா விது" என அவள் கன்னத்தைத் தட்டிக் கூறியவன்,

"இந்த கிபிட் உனக்கு வேணும்-னா போதும். எனக்காக வேற ஏதாவது கேளு" என்றவன், யோசிப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்த மனைவியின் கழுத்தில், "V" மற்றும் "A" என்ற எழுத்துக்கள் ஒன்றன் மேல் ஒன்றாக இருப்பது போல் வடிவமைக்கப்பட்ட டாலருடன் கூடிய செயினை அணிவித்தான்!

"சூப்பர்ரா இருக்கு ஆனந்த்" எனக் குதூகளித்தவள், "நான் இன்னொன்னு கேட்கவா?" என்றாள் ஏக்கத்துடன்.

"ஹ்ம்ம் கேளு" என அவன் ஊக்க, "நான் திரும்ப காலேஜ் சேர்ந்து M.B.B.S படிக்கட்டுமா?" என்றாள் ஆர்வமின்ன. விஜய் மட்டுமில்லாமல் எல்லாருமே இன்பமாய் அதிர, அங்கே மீண்டும் சந்தோசம் குடிகொண்டது!

இந்த சந்தோஷத்தை மேலும் கூட்டுவது போல், வினயாவின் வளை அடுக்குதல் முடிந்ததும் உமாவை அமர வைத்து வளையல் அடுக்கினர் பெரியவர்கள். "என்ன அண்ணி, எப்போ குட் நியூஸ் சொல்லப் போறீங்க?" என வினயா கேட்க, "சீக்கிரமே! இப்போ... இப்போ.. நாற்பது நாள்" என்றாள் நாணத்துடன்!

அதைக் கேட்டிருந்த அனைவருமே நெஞ்சம் கொள்ளாமல் மகிழ, தனசேகரனோ "தேவிம்மா" என உருகாமல் உருகினான்!

உமாவின் சேய் வந்த சமயம், அவளது தாயும் வந்தார்! ஆம், உமாவிற்குத் தெரியாமல் அவளது தாயாரை தங்களுடன் தங்கிக் கொள்ளுமாறு அழைத்திருந்த தனசேகரன், தங்கையின் வளைகாப்பை முதற்படியாய் கொள்ளும்படி கேட்டுக் கொண்டான்!

சில காலமாய் குழுமியிருந்த துக்கங்கள் வடிந்து, அந்தக் குடும்பத்தில் சந்தோஷம் மட்டுமே நிலைத்திருந்தது!!

அந்த சந்தோஷம், வினயாவின் பின் மாதங்கள் வரை குறைவே இல்லாமல் தொடர்ந்து மணம் பரப்பியது. அந்த இனிய மணத்தை நுகர ஆசைப்பட்ட, விஜயின் புதல்வன் தன் தாயின் வயிற்றில் துள்ளி விளையாடி, தன்னை வெளிஉலகிற்கு அறிமுகம் செய்யும் படி பறைசற்றினான்.

உமாவும் கர்ப்பமாக இருப்பதால், வினயாவின் பேறுகாலத்தை கோயம்புத்தூரிலேயே வைத்துக் கொள்ளலாம் என விஜய் கூறிவிட, PSG மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாள் வினயா!!

Property of Bhuvana

பிரசவ வேதனையில் துவண்டிருந்த வினயாவின் கைகள் விஜயின் கரங்களை நொடிப் பொழுது கூட விடவில்லை! அவளது பிரசவ அறைக்குள் தன்னையும் அனுமதிக்க வேண்டும் என வேண்டி, அனுமதி பெற்றிருந்த விஜயும் அவளுடன் உள்ளே சென்று வேதனையுடன் காத்திருந்தான்! அவளுக்குத் தைரியம் சொல்லியபடியே தான்!

அங்கிருந்த பெண் மருத்துவர் "வினயா, புஷ் பண்ணும்மா" எனச் சொல்லிக் கொண்டே இருக்க, அவளோ சிறு முயற்சி கூட பண்ணாமல் இருந்தாள். பெரும் வலியில் துவண்ட நிலையில் கூட! பத்து முறைக்கும் மேல் அதை சொல்லிய அந்த மருத்துவர், "வினயா தானே உன் பேர்? சொல்றதைக் கேள்" என்றார் சிறு அழுத்தத்துடன்!

தலையை இடமும் வலமுமாக அசைத்த வினயா, "என் பெயர் பவித்ரா விஜய்ஆனந்த்" என்றாள் பிரசவ வலியையும் மீறிய பெரும் நிமிர்வுடன்!

அதை கேட்டிருந்த அவளது கணவனுக்கு வேறென்ன சந்தோஷம் இருக்க முடியும்! தன் நிறைவை அவன் ஒரு முத்தத்தால் வெளிப்படுத்த, அதே நொடி அவர்களது புதல்வனும் உலகிற்கு வந்தான்! உலகைப் பார்த்த மகிழ்வுடன் அவன் குரல் கொடுக்க, மௌனம் என்ற மொழி அவர்கள் வாழ்வின் தற்காலிகமாய் மௌனித்தது!!

***மௌனம் மௌனித்தது****

